சேதன் பகத்

# ஃபைவ் பாய்ண்ட் சம்ஒன்

ஐஐடியில் என்னவெல்லாம்
செய்யக்கூடாது



# ஃபைவ் பாய்ண்ட் சம்ஒன்
# ஐஐடியில் என்னவெல்லாம் செய்யக்கூடாது

சேதன் பகத் நான்கு நாவல்கள் எழுதியுள்ளார் - ஃபைவ் பாயிண்ட் ஸம் ஒன் ***(2004),*** ஒன் நைட் தி கால் சென்டர் ***(2005),*** தி ***3*** மிஸ்டேக்ஸ் ஆஃப் மை லைஃப் ***(2008),*** மற்றும் ***2*** ஸ்டேட்ஸ்***:*** தி ஸ்டோரி ஆஃப் மை மேரேஜ் ***(2009).***

இவரின் நாவல்கள் பதிப்பகத்தை விட்டு வெளியானதிலிருந்தே விற்பனையில் உயர்ந்திருக்கின்றன. பாலிவுட் படங்களின் கருவாக விளங்கியுள்ளன. நியூயார்க் டைம்ஸ் இவரை “இந்தியச் சரித்திரத்தில் அதிகமாக விற்கப்பட்ட ஆங்கில எழுத்தாளர்” என்று வாழ்த்தியுள்ளது. டைம் பத்திரிகை, அவரை : “உலகில் பாதிப்பை ஏற்படுத்தப் புரட்டிப் போடக் கூடிய நூறு மனிதர்களில் இவரும் ஒருவர்” என்கிறது. ஃபாஸ்ட் கம்பெனி, யுஎஸ்ஏ, இவரை “வர்த்தக உலகில் படைக்கும் திறனாளிகள் நூறு பேரில் ஒருவர்” என்று தேர்ந்தெடுத்துள்ளது.

சேதன் பிரதான ஆங்கில மற்றும் ஹிந்தி செய்தித்தாள்களில் இன்றைய இளைஞர்களின் பிரச்சனைகளைப் பற்றியும், தேசிய வளர்ச்சியைப் பற்றியும் அடிக்கடி எழுதுவார். அவர் ஊக்கமளிக்கும் சொற்பொழிவாளரும் கூட.

சேதன் தன் பன்னாட்டு முதலீடு வங்கித் தொழிலை 2009-ல் ராஜினாமா செய்தார். முழு நேர எழுத்தாளராக மாறி, நாட்டில் மாற்றங்கள் கொண்டு வர போராடுகிறார்.

இவர் பெண்டாட்டி அனுஷா, (ஐஐஎம் - ஏவில் இவர் கூட படித்தவர்) மற்றும் இரட்டை மகன்கள் ஷாம், ஈஷானுடன் மும்பையில் வசிக்கிறார்.

சேதனைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள, www.chetanbhagat.com சென்று பாருங்கள். அல்லது email: info@chetanbhagat.com செய்யுங்கள்.

*Downloaded from Ebookz.in*

## வெளி வந்த மற்ற புத்தகங்களுக்கான பாராட்டு

பெரும்பாலான எழுத்தாளர்கள் தங்கள் மனதில் தோன்றுவதைச் சொல்வதில் வல்லவர்கள். சிலர் தங்கள் தரப்புக் கருத்தை எடுத்துக் கூறுவதில் சிறந்து விளங்குவர். சேதன் பகத்தின் புத்தகங்கள் இவை இரண்டையும் தவிர, கூடுதலாகவும் செய்யக் கூடியவை.

- ஏ.ஆர். ரஹ்மான், டைம் பத்திரிகையில் சேதனை உலகில் பாதிப்பை ஏற்படுத்திப் புரட்டிப் போடக் கூடிய நூறு மனிதர்களில் ஒருவர் என்று தேர்ந்தெடுத்த பொழுது கூறியது.

இந்தியாவில் எழுச்சி பெறும் சுய தொழில் செய்பவர்களின் குரல்.

-ஃபாஸ்ட் கம்பெனி பத்திரிகை, ‘வர்த்தக உலகில் படைக்கும் திறனாளிகள் நூறு பேரில் ஒருவர்’ என்று கூறியது.

இந்தியாவின் பேபர்-பேக் ராஜா.

-தி கார்டியன்

இந்தியச் சரித்திரத்தில் அதிகமாக விற்கப்பட்ட ஆங்கில எழுத்தாளர்.

-தி நியூயார்க் டைம்ஸ்

இந்தியப் பதிப்பகத்தின் ராக்-ஸ்டார்.

- தி டைம்ஸ் ஆஃப் இந்தியா

பகத் இளைய தலைமுறையினரின் நாடித் துடிப்பை உணர்ந்து ஒரு தனித்துவத்தை அடைந்துள்ளார்.

-இண்டர்நேஷனல் ஹெரால்ட் டிரிபியூன்

*Downloaded from [Ebookz.in](Ebookz.in)*

Text copyright © 2016 by Chetan Bhagat

All rights reserved. No part of this book may be reproduced, or stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording, or otherwise, without express written permission of the publisher.

Published by Amazon Publishing, Seattle

www.apub.com

Amazon, the Amazon logo, and Amazon Publishing are trademarks of Amazon.com, Inc., or its affiliates.

eISBN: 9781503945944

என்னுடைய அம்மாவுக்கும்

நான் படித்த என் கல்லூரி ஐஐடிக்கும்

*Downloaded from [Ebookz.in]*

# பொருளடக்கம்


ஆசிரியரின் நன்றி உரை

முகவுரை

வெற்று ஆரம்பங்கள்

டெர்மினேடர் (அழிப்பவன்)

உலோகத்தின் மீது வெறுங்கால்

கோடு வரையும் பாடம்

குறிப்பெடு, போரிடாதே

ஐந்து புள்ளி ஏதோ ஒன்று

அலோக் பேசுகிறான்

ஒரு வருடத்திற்குப் பிறகு

எலிப் பாடம்

ஒத்துழை-ஆக்கிரமிக்க

பரிசு

நேஹா பேசுகிறாள்

இன்னொரு வருடத்திற்குப் பிறகு

வோட்கா

ஆபரேஷன் பெண்டுலம்

என் வாழ்நாளின் நீண்ட நாள்-I

என் வாழ்நாளின் நீண்ட நாள்-II

என் வாழ்நாளின் நீண்ட நாள்-III

என் வாழ்நாளின் நீண்ட நாள்-IV

என் வாழ்நாளின் நீண்ட நாள்-V

என் வாழ்நாளின் நீண்டநாள்- VI

ரயன் பேசுகிறான்

முந்திரி பர்ஃபி

நாங்கள் தேறுவோமா?

கடிதங்களின் தினம்

அப்பாவுடன் சந்திப்பு

ஐந்து புள்ளிக்காரன்

*Downloaded from Ebookz.in*

# ஆசிரியரின் நன்றி உரை

சரி, இதை என்னுடைய புத்தகம் என்று சொல்வது முற்றிலும் உண்மையானதல்ல, இது என் கனவு என்று வேண்டுமானால் சொல்லலாம். இந்த உலகில் மிகச் சிறந்தவர்கள் இருக்கிறார்கள்; அவர்களால் தான் அந்தக் கனவு நனவாயிற்று. அது இப்போது உங்கள் கையிலுள்ள புத்தகமாக உருவெடுத்துள்ளது. அவர்கள் எல்லோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுள் குறிப்பாக சிலர்:

ஷைனி ஆண்டனி - என் ஆசான், குரு, நண்பர்; கதை சொல்வதன் அடிப்படையை எனக்குக் கற்றுக் கொடுத்தவர்; எழுதி முடிக்கும் வரை என்னுடன் இருந்தவர். இந்த எழுத்துப் பணியில் அவர் எனக்கு உற்சாக மூட்டாமலும் என்னைத் தொந்தரவு செய்யாமலும் இருந்திருந்தால் நான் எப்போதே இதைப் பாதியிலேயே நிறுத்தியிருப்பேன்.

வியப்புக்குரிய என் நண்பர்கள் - ஜேம்ஸ் டர்னர், கௌரவ் மாலிக், ஜெஸ்ஸிகா ரோஸன்மெர்க், ரிது மாலிக், ட்ரேலி ஆஸ்க், ஏஞ்ஜெலா வாங், ரிம்ஜிம் சட்டோ பாத்யா- இவர்கள் என் கையெழுத்துப் பிரதியைப் படித்து நேர்மையான விமரிசனங்களை முன்வைத்தனர். இதை எழுதும்போது என் கூடவே இருந்தனர் என்னையும், சில நேரங்களில் கட்டுமீறிப் போகும் என் உணர்ச்சிகளையும் இவர்கள் மிகச் சிறப்பாகக் கையாண்டார்.

அனுஷா பகத்-என் மனைவி. ஒரு காலத்தில் என் வகுப்புத் தோழி. கையெழுத்துப் பிரதியை முதலில் படிக்கும் வாசகி. இந்தப் புத்தகத்தில் சில பகுதிகளைப் படித்து அவள் அதிர்ச்சியடைந்தாலும் இந்தப் புத்தகத்தை மேம்படுத்தும் கடினமான பணியோடு தன் கணவன் கலக்கமடையாமல் பார்த்துக் கொள்ளும் போதும் அமைதியாக நிதானமாக இருந்தாள்.

என் அம்மா ரேகா பகத், என் சகோதரன் கேதன்-இருவருக்கும் என் மீது காரணமில்லாத தகர்க்க முடியாத நம்பிக்கை உண்டு. சில சமயங்களில் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றுமளவுக்கு இருக்கும் அவர்கள் நம்பிக்கை குடும்பத்தினர் என்பதற்கும் மேலாக எங்கள் உறவு முறை உள்ளது; தவிர எல்லா எழுத்தாளரையும் போல் அவர்களுடை காரணமற்ற ஆழ்ந்த ஆதரவு எனக்குத் தேவை.

என்னுடைய ஐஐடி நண்பர்கள் ஆஷிஷ் (கோலு), ஜோரி, வி.கே, மானு, ஷங்கி, பம்பு, மஹைர், விபி, ராஹீல், மேத்தா, பாகோ, அஸிம், ராஜீவ்ஜி, ராஹீல், லவ்மீட், புனீத், சப்பார்-தவிர மற்ற எல்லோருக்கும், இது ஒரு கற்பனைக் கதை. ஆனால் அதற்கும் உண்மையான துண்டுதல்கள் தேவை. அவர்கள் எல்லோரையும் நான் ரொம்ப நேசிக்கிறேன். அவர்களைப் பற்றி உண்மையாகவே ஒரு புத்தகம் எழுதலாம். நில்லுங்கள், நான் எழுதியுள்ளேனா?

ஹாஸ்காஸ்கிலுள்ள என் நண்பர்கள், என்னுடன் பணி புரிபவர்கள், என் யோகா ஆசிரியர்கள் தவிர என்னைச் சுற்றியுள்ள எல்லோரும் என்னை விரும்புகிறார்கள், வாழ்க்கையை இனிமையானதாக ஆக்குகிறார்கள்

ரூபா பதிப்பகத்திலுள்ள ஆசிரியருக்கும் அவர் குழுவினருக்கும் என் நன்றிகள். தொழில் ரீதியாகவும் நட்புடனும் என்னுடன் கூடவே இருந்தார்கள்.

இறுதியாக, ஒரு புத்தகத்தை ஒருவர் எழுதும்போதுதான் MS வோர்டின் உண்மையான ஆற்றல் புரிகிறது- இலக்கணத்திலிருந்து- எல்லாவற்றையும் மாற்றுதல் என்பது வரையில் இந்த மென்பொருள் இல்லாவிட்டால் இதை எழுதி இருக்க முடியாது. திரு.பில்கேட்ஹுக்கும் மைக்ரோ சாஃப்டு கார்ப்பரேஷனுக்கும் என் நன்றிகள்!

*Downloaded from Ebookz.in*

# முகவுரை

நான் ஆம்புலன்ஸினுள் சென்றதே இல்லை. லேசாக அரண்டு விட்டேன். ஒரு மருத்துவமனையை சட்டென்று மூட்டைக் கட்டிக் கொண்டு கிளம்பச் சொன்னது போன்ற தோற்றம். சாதனங்கள், கதீடர்கள், டிரிப்புகள், மற்றும் பெட்டி நிறைய மருந்துகள்; இதைச் சுற்றி இரண்டு படுக்கைகள்; எனக்கும், ரயனுக்கும் நிற்கக் கூட இடம் இல்லை; அலோக்கை கிடத்தியிருந்தார்கள். பதின்மூன்று இடத்தில் எலும்பு முறிவு இருந்தால் அவனுக்குப் படுக்கை அவசியம் தானே. முதலில் ஷீட்டுகள் வெள்ளையாகத் தான் இருந்திருக்க வேண்டும்; ஆனால் இப்பொழுது சரிவர சொல்ல முடியாது; ஏன் என்றால் ஒவ்வொரு அங்குலமும் அலோக்கின் ரத்தக் கறை. அலோக் யாரென்று அடையாளம் தெரியாமல் கிடந்தான், அவன் கண் முழிகள் மேல் நோக்கி நின்றன, அவன் நாக்கு வாயின் வெளியே தொங்கிக் கொண்டிருந்தது; ஒரு கிழவனின் பல் செட்டு இல்லாத வாயைப் போல் இருந்தது. முன்வரிசையில் நான்கு பற்கள் தொலைந்துவிட்டன என்று மருத்துவர் பிறகு எங்களிடம் கூறினார்.

அவன் கை, கால் அசைவற்று இருந்தன; அவனுடைய அப்பாவின் வலது பக்கம் போலவே, அவன் வலது முட்டி வளைந்திருந்ததைப் பார்த்தால் அலோக்குக்கு எலும்பே இல்லையோ, என்றுபட்டது. அசைவற்று இருந்தான், என் பணத்தை வைத்தே பந்தயம் கட்ட வேண்டுமென்றால், அவன் இறந்துவிட்டான் என்றே பணம் கட்டுவேன்.

“அலோக் பிழைத்தால், எங்களின் மடத்தனமான நாட்களைப் பற்றி அவசியம் ஒரு புத்தகமாக எழுதுவேன். நிச்சயம் எழுதுவேன்'', என்று உறுதி மொழிந்தேன். ஐம்பது மணி நேரம் துங்காமல் மண்டையில் ஏதோ ஒன்று ஆட்டிப்படைத்தால் இது போன்ற அபத்தமான உறுதிமொழிகள் எடுத்துக்கொள்வது சகஜம்....

*Downloaded from Ebookz.in*

# <u>1</u>

## வெற்று ஆரம்பங்கள்

இந்தப் புத்தகத்தை ஆரம்பிக்கும் முன்னர், முதலில் இந்தப் புத்தகம் எதைப்பற்றி இல்லை என்று சொல்லவேண்டும். காலேஜில் எப்படி வாழ்க்கையைக் கழிக்க வேண்டும் என்பதற்கான வழிகாட்டி இல்லை. மாறாக, நீங்கள் ஒழுங்காக யோசிக்காவிட்டால் உங்கள் காலேஜ் வாழ்க்கை எப்படிச் சீரழியும் என்பதற்கான எடுத்துக்காட்டாக இருக்கலாம். இது தான் என்று நான் நினைக்கிறேன், நீங்கள் உங்கள் இஷ்டம் போல் ஒப்புக் கொள்ளலாம், அல்லது ஒதுக்கிவிடலாம். ரயனும், அலோக்கும், அவர்கள் ஸைக்கோக்கள் தான், இதைப் படித்தபின் என்னைக் கொல்ல முயற்சிக்கலாம், ஆனால் அதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை. அவர்கள் பார்வையில் சொல்ல வேண்டும் என்றால் அவர்களே புத்தகம் எழுதியிருக்க வேண்டும். அலோக்குக்குச் சுட்டு போட்டாலும் எழுத வராது; மேலும் ரயன், என்ன செய்ய பிரியப்பட்டாலும் செய்வான், ஆனால் அவன் சோம்பேறி; அவனால் தன் பின்பக்கத்தை ஒரு இருக்கையில் அமர்த்தி டைப் அடிக்க முடியாது. அதனால் விட்டுத் தள்ளுங்கள் பசங்களா-இது என் கதை, நான் தான் எழுதுகிறேன், எனக்கு வேண்டியவாறு கதையைச் சொல்வேன்.

மேலும் ஒரு தகவல், இந்தப் புத்தகம் எதைப்பற்றி இல்லையென்று. இந்தப் புத்தகத்தைப் படித்துவிட்டு ஐஐடியில் சேர முடியாது. எனக்குத் தெரிந்து உலகில் உள்ள பாதி மரங்கள் வெட்டப் பட்டதன் காரணமே, ஐஐடி நுழைவு தேர்வுக்குக் கைடு புத்தகங்கள் தயாரிக்கத் தான். பெரும்பாலானவை வெறும் குப்பை; ஆனால் இந்தப் புத்தகத்தை விட அவை உங்களுக்குப் பயன்படலாம்.

ரயன், அலோக் மற்றும் நான்-நாங்கள் உலகிலேயே கடைசி நபர்கள் ஐஐடியைப் பற்றிப் பேச. நாங்கள் கூறக்கூடிய ஒரே ஒரு அறிவுரை, ஒரு அறையில் உங்களைப் பூட்டிக் கொண்டு, இரண்டு வருடங்களுக்குப் புத்தகங்களுடன் வசித்தால், முக்கியமாகச் சாவியைத் தூக்கி எறிந்து விடவேண்டும். ஒருவேளை ஐஐடி கிடைக்கலாம். உங்கள் பள்ளி வாழ்க்கை என்னுடையதைப் போல் கொடுமையாக அமைந்திருந்தால், ஒரு புத்தக மலையின் பின் ஒளிந்து கொள்வது அவ்வளவு பிரச்சனையாக இருக்காது. என் கடைசி இரண்டு வருடங்கள், பள்ளி நரகமாக மாறியது. நீங்கள் கூடைப்பந்து வீரரா? அல்லது ஆறு வயதிலிருந்து மின்சார கிடார் வாசிப்பவரா? இல்லையென்றால் நீங்களும் என் கட்சி தான். ஆனால் அதைப் பற்றியெல்லாம் கிளர வேண்டாம்.

நான் நிறைய “மறுப்புகள்” பற்றி சொல்லிவிட்டேன். இனி ஆரம்பிக்க வேண்டியது தான்.

எங்கேயாவது தொடங்க வேண்டும்; நான் ஐஐடி சேர்ந்த தினம், ரயன் மற்றும் அலோக்கை முதலில் சந்தித்த தினம்; அங்கிருந்து ஆரம்பிக்கலாம். குமாவோன் விடுதியில்,இரண்டாவது மாடியில் பக்கத்து பக்கத்து அறை எங்களுக்கு. சம்பிரதாயப்படி, ஸீனியர்கள் பால்கனியில் நள்ளிரவில் எங்களை ரவுண்டு கட்டினர், ‘ராகிங்’ செய்வதற்காக. நான் என் கண்களைக் கசக்கி தூக்கத்தை கலைத்துக் கொண்டேன். நாங்கள் மூவரும் நேராக நின்றோம். மூன்று ஸீனியர்கள் எங்கள் எதிரில் நின்றனர். அனுராக் என்ற ஸீனியர் சுவரில் சாய்ந்து கொண்டு நின்றான். என் கலக்கமான பார்வைக்கு அடுத்த ஸீனியர் டிவியில் பார்த்த புராண காலத்து கடோத்கஜன் போலிருந்தான்- ஆறடி, ஒரு நூறு கிலோ, கருப்பு, நிறைய முடியுடன் இருந்தான். அவனின் எடுப்பான பல்லை, பத்து வருடம் முன்னரே பல் மருத்துவரிடம் போய் காட்டியிருக்க வேண்டும். அவன் பயத்தை உருவாக்கினாலும், கொஞ்சமாகத் தான் பேசினான். தலைவனுக்கு பின் திரை போல் நின்று கொண்டிருந்தான், பகு, லுங்கி கட்டிய பற்குச்சி போலிருந்தான்; அதே நாற்றம் பிடித்தவன் போல என்று நினைத்துக் கொண்டேன்.

“என்ன புது மக்களா? தெனாவட்டா தூங்கறீங்களா? ராஸ்கல், யார் உங்களை அறிமுகப்படுத்தவது?” என்று கத்தினான்.

“என் பெயர் ஹரி குமார் ஸார், மெக்கானிகல் இன்ஜினீயரிங் மாணவன், அகில இந்திய ராங்க் 326.” நெருக்கடியில் நான் உண்மையை மட்டுமே பேசுபவன்.

“என் பெயர் அலோக் குப்தா ஸார், மெக்கானிக்கல் இன்ஜினியரிங், ராங்க் 453”, என்றான் அலோக். நான் அவனை முதல் முறையாகப் பார்த்தேன். என் உயரம் தான், 5 அடி, 5 அங்குலம்-சுருங்கச் சொன்னால் குட்டை-கனத்த சோடா புட்டி. ரெட்டை நாடி தேகம்; நன்கு இஸ்திரி செய்த வெள்ளை குர்தா-பைஜாமா அணிந்திருந்தான். “ரயன் ஓபராய், மெக்கானிகல் இன்ஜினீயரிங், ராங்க் 91, ஸார்.” அவன் நல்ல கனத்த குரலில் சொன்னான். எல்லோர் கண்களும் அவன் மீது சென்றன.

ரயன் ஓபராய், அவன் பெயரை மனதில் சொல்லிக் கொண்டேன். இவனைப் போன்றவனை ஐஐடியில் அதிகம் சந்திக்க முடியாது; நல்ல உயரம், ஆறடிக்கும் மேலே, ஒல்லியான தேகம், அட்டகாசமான முகவெட்டு; நல்ல அழகன். ஒரு தொளதொள சாம்பல் டி-ஷர்ட், நீல வண்ண ஜீஏபி என்ற ஆங்கில எழுத்து பொறுத்தியிருந்தது. பளபள கருப்பு ஷார்ட்ஸ, முட்டி வரை அணிந்திருந்தான். உறவினர்கள் அயல்நாட்டில் இருக்க வேண்டும், என்று எண்ணினேன். இல்லையென்றால் இந்த ‘ஜீஏபி’ டி-ஷர்ட்டை தூங்குவதற்கு யாரும் அணியமாட்டார்கள்.

“ஏய் தே★★★ பசங்களா”, பகு அலறினான். “உங்கள் துணிகளை கழட்டுங்கள்.”

“அட பகு, முதலில் கொஞ்சம் பேச்சு கொடுப்போம்”, என்றான் அனுராக். அவன் சுவரில் சாய்ந்து ஒரு சிகரெட்டைக் கடித்துக் கொண்டிருந்தான்.

“பேசவேண்டாம்!” என்று பகு ஒரு குச்சிக்கையைத் தூக்கினான். “பேசாதே, கழட்டு சீக்கிரம்.”

மற்றொரு ராட்சஸப் பிறவி எங்களைப் பார்த்து இளித்தது. அடிக்கடி வெற்று தொப்பையை தட்டிக் கொண்டது. வேறு வழியே இல்லை. நாங்கள் அடிபணிந்தோம். அனைத்து உடைகளையும் களைந்தோம். பகுவின் முகத்தில் தெரிந்த குதூகுலம் எங்களை நடுங்க வைத்தது. அவன் எங்களின் அருகில் வந்து, ஒவ்வொருவரையும் ஏற இறங்கப்பார்த்தான்; எங்களைக் கண்ணால் அளந்தபடி இளித்தான்.

வெற்றுடம்பில் நின்ற பொழுது எங்களின் வித்தியாசங்கள் பட்டவர்த்தனமாகத் தெரிந்தன. நானும், அலோக்கும் சங்கடமாக கால் பெருவிரலால் தரையில் கோலமிட்டோம். எங்களின் கோணலான, பலூன் போன்ற உடல்வாகைப் பற்றி அக்கறையில்லாதது போல் நடித்தோம். ரயனின் உடம்பு குறையின்றி இருந்தது. சரியான ஆண்மகன்; தசைகள் சரியான இடங்களில் திரண்டிருந்தன. உயிரியல் புத்தகங்களில் வரையப்பட்டிருந்த மனித உடல்கூறுகளைப் போல், அளவெடுத்து செய்யப்பட்ட உடல்வாகு. அவன் உடலை ஒரு செதுக்கப்பட்ட சிலை என்று கூறலாம். அலோக்கும், நானும் நிச்சயமாக கலை வடிவோடு சேராதவர்கள்.

பகு என்னையும், அலோக்கையும் முன்னால் ரெண்டடி எடுத்து நிற்கச் சொன்னான். ஸீனியர்கள் எங்களை உற்று நோக்கிவிட்டு சிரிக்கத் தொடங்கினர்.

“இவர்களைப் பாரேன், அம்மாக்கள் இவர்கள் வெடிக்கும் வரை ஊட்டினார்கள் போலிருக்கு, சிறிய பேரக்ஸ் குழந்தைகள்”, என்று பகு கொக்கரித்தான்.

ராட்சஸனும் சிரிப்பில் சேர்ந்து கொண்டான். அனுராக் புகை மண்டலத்தின் பின் சிரித்தபடி இன்னொரு சிகரெட்டை அணைத்தான் சிறந்த புகைமண்டலத்தைத் தனக்கே அமைத்துக் கொண்ட பெருமையில் சிரித்தான்.

“ஸார், தயவு செய்து எங்களை விட்டு விடுங்கள், ஸார்” அலோக் பகுவிடம் கெஞ்சினான். பகு எங்களை நோக்கி நடந்தான்.

“என்னது? விட்டு விடுவதா? இன்னமும் இந்தப் பேரழகன்களை ஒன்றுமே செய்யவில்லையே. அட! நான்கு கால்களில் நிற்பது போல் குளியுங்கள்; முதலில் இந்த இரண்டு குண்டர்களும் தவழ வேண்டும்.”

நான் அலோக்கின் முகத்தைப் பார்த்தேன். அந்த சோடாபுட்டிக்குப் பின்னால் அவன் கண்கள் தென்படவே இல்லை; ஆனால் அவன் முகம் அஷ்ட கோணலாக மாறியதில் அவன் என்னைப் போல அழுதே விடுவான் என்ற தோன்றியது.

“சும்மா, சொன்னதைச் செய்”, என்று அரக்கன் மிரட்டினான். அவனும் பகுவும் அண்டி வாழ்ந்தார்கள் என்று புரிந்தது; பகுவுக்கு அவனின் முரட்டு வலிமை தேவை, அந்த அரக்கனுக்கு பகுவின் வழிகாட்டல் தேவை.

அலோக்கும் நானும் தவழும் வடிவில் குனிந்தோம். இன்னும் நிறைய பேர் சிரித்தார்கள்; எங்கள் தலைக்கு மேலிருந்தும் சத்தம் கேட்டது. அரக்கன் எங்கள் இருவரையும் தவழும் போட்டியில் பங்கேற்க வைக்கலாம் என்ற ஆலோசனை சொன்னான். அவனுடைய முதல் சொந்த யோசனை போல் தோன்றியது. ஆனால் பகு அதை ஒதுக்கிவிட்டான்.

“போட்டி - கீட்டியெல்லாம் வேண்டாம். எனக்கு அதைவிட சிறந்த திட்டம் இருக்கு. இங்கே காத்திரு.

நான் என் அறைக்குச் சென்று எடுத்து வர வேண்டும். ஏய், அம்மண மாடுகளே, மேலே நிமிர்ந்து பார்க்காதீர்கள்.

பகு அந்த நீளப் பாதையில் ஓடினான்; நாங்கள் அவஸ்தையான இருபது வினாடிகளைத் தரையைப் பார்த்தபடி கழித்தோம். நான் ஓரக்கண்ணால் பார்த்தேன். அலோக்கின் தலையருகே ஒரு சிறிய தண்ணீர்க் குட்டையே அமைந்திருந்தது. அவன் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் தான்! அதற்குள் அந்த அரக்கன் ரயனை தசைகளை முறுக்கச் சொன்னான். வீரன் போல் நிற்கச் சொன்னான். அவனைப் புகைப்படம் பிடித்தால் நன்றாகத் தெரிவான் என்று நினைத்தேன். ஆனால் தலையை நிமிர்ந்து பார்க்கத் துணிவில்லை.

பகு அவசரமாக நடந்து வருவது காதில் விழுந்தது. “இங்கே பாரேன். என்ன கொண்டு வந்தேன் தெரியுமா?” என்று கையைத் தூக்கி காண்பித்தான்.

“பகு, என்ன எழவுக்குடா இதைப் போய்.?” அனுராக் கேட்கும் பொழுதே நாங்களும் தலையை நிமிர்த்திப் பார்த்தோம்.

அவனின் இரு கையிலும் பகு ஒரு காலி கோக் பாட்டிலைப் பிடித்துக் கொண்டிருந்தான். “சும்மா கண்டபடி யோசித்துப் பாரேன்.” என்று சொல்லி பாட்டில் இரண்டையும் சேர்த்து அடித்து சைகை செய்தான்.

அவன் முகம் கடுகடுவென்ற மாறியது; கைகளை வளைத்துப் பிடித்தபடியே, ரயன் சட்டென்று பேசினான்,” ஸார் என்ன செய்யப் போறீங்க?”

“என்ன, புரியலையா? நீ யாருடா என்னைக் கேட்க?” என்று பகு கோவத்தில் துடிதுடித்தான்.

“ஸார், நிறுத்துங்கள்", என்றான் ரயன் உரத்த குரலில்.

“ஒழிந்து போ”, பகு அவனை ஒதுக்கினான்; வருடக் கணக்காக அவன் செலுத்திக் கொண்டிருந்த அதிகாரத்தை எவனோ ஒருவன் தைரியமாக எதிர்க்கிறானே என்ற நம்பிக்கையின்மை பகுவின் கண்களில் தெரிந்தது; அவை அகன்று விரிந்தன.

பகு பாட்டில்களை அதன் இடங்களில் வைத்தவுடன், ரயன் போஸ் கொடுத்த இடத்திலிருந்து குதித்து எழுந்தான். அவன் புரிந்து கொள்வதற்கு முன்னமே அந்த இரண்டு பாட்டில்களையும் பற்றி பகுவின் கால்களில் ‘நங்கென்று’ ஏறி மிதித்தான். பகு கையை விட்டவுடன் ஜேம்ஸ் பாண்டு ஸ்டைலில் ரயன் பாட்டில்களைப் பற்றினான்.

அவன் மிதித்த மிதி பகுவிற்கு வலித்திருக்க வேண்டும் பகு எட்டு குரலில் கத்தியது ஊருக்கே கேட்டிருக்கும்.

“இந்தத் தே★★★ பையனைப் பிடியுங்கள்,” என்று பகு வலியில் கதறினான்.

அரக்கனின் மூளை நடந்த நிகழ்வைக் கண்டு மூழ்கியது; ஆனால் அவன் காதுகள் பகுவின் ஆணையைக் கேட்டன. அவன் சுதாரித்துக் கொண்டு வருவதற்குள் ரயன் அந்த கோக் பாட்டில்களை கைப்பிடிச் சுவரில் அடித்து உடைத்தான். அதன் அடிப்பாகம் உடைந்து பாட்டில்கள் கூரிய ஆயுதங்கள் போலிருந்தன. அதைக் காற்றில் ஆட்டினான்.

“வாங்கடா தே★★★ பசங்களா”, ரயன் கத்தினான். அவன் முகம் தர்பூசணிப் பழத்தைப் போல் சிவந்தது. பகுவும், அரக்கனும் இரண்டடி பின்னால் நகர்ந்தனர். அனுராக் பின்னணியில் நின்று ஊதிக் கொண்டிருந்தவன் சட்டென்று விழித்துக் கொண்டான். “ஹே! கூல்! என்ன நடந்தது? உன் பேர் என்ன- ரயன், விட்டுவிடு. இது சும்மா ஜாலிக்குத் தான்.”

“எனக்கு ஜாலியாக இல்லை”, என்று மிரட்டினான் ரயன்.

“இங்கிருந்து ஓடி விடுங்கள்.”

அலோக்கும் நானும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம். ரயன் என்ன செய்கிறான் என்று உணர்ந்து தான் செய்கிறானா என்று திகைத்தேன். அவன் நிச்சயமாக எங்கள் பின்னம் பாகங்களை கோக் பாட்டிலிருந்து காப்பாத்தியிருக்கிறான். ஆனால் உடைந்த கோக் பாட்டில்களினால் வரும் அபாயம் அதிகமே?

“இங்க கேளுப்பா”, அனுராக் ஆரம்பித்தான். ரயன் அவனை வெட்டிப் பேசினான்.

“இங்கிருந்து கண் காணாமல் ஓடி விடு”, ரயன் கத்தின கத்தலில் பகு பறந்தே விடுவான் போலிருந்தது. அந்த பாதிப்பில் அவன் பின்னால் மெதுவாகக் காலைச் சேர்த்து நடந்தான். பிறகு ஒரே பாய்ச்சலில் அங்கிருந்து பறந்தே சென்று விட்டான். அரக்கன் அவனைத் தொடர்ந்தான். அனுராக் சற்று நேரம் வாயைப் பிளந்து ஆச்சரியத்தில் ரயனையே பார்த்துக் கொண்டு நின்றான். பிறகு எங்களைப் பார்த்தான்.

“அவனைக் கட்டுபடுத்திக் கொள்ளச் சொல்லுங்கள். ஒரு நாள் உங்களையும் அழித்துவிடுவான்”, என்றான் அனுராக்.

அலோக்கும் நானும் எழுந்து எங்கள் உடைகளை அணிந்து கொண்டோம்.

“நன்றி ரயன், நான் பயந்தே போய்விட்டேன்”, அலோக் சொன்னான். அவன் தன் சோடா புட்டியைக் கழட்டி கண்ணீரையும், சளியையும் துடைத்துக் கொண்டான். கடைசியாகத் தன் ஹீரோவை ஏறிட்டுப் பார்த்தான்.

ஆண்கள் அழக்கூடாது என்று சொல்வதற்கு ஒரு காரணம் இருக்கு, அவர்கள் பார்க்க படு அசிங்கமாகி விடுகிறார்கள். அலோக்கின் சோடா புட்டியே பரிதாபமாக இருந்தது. அவன் குழந்தை போல் அழுதான்; அழுது-வடிந்த ஈரக் கண்களைப் பார்த்தால் நாம் சோகத்தில் தற்கொலையே செய்து கொள்ளலாம்.

“ஆமாம், நன்றி, ரயன் நீ பெரிய அபாயத்தைச் சந்தித்திருப்பாய். அந்த பகு மோசமானவன். ஏதாவது செஞ்சிருப்பாங்களா?” பயப்படாதவன் போல் நடித்தேன்.

“யாருக்குத் தெரியும்? ஒரு வேளை ஒண்ணும் செஞ்சிருக்கமாட்டாங்க”, ரயன் தோள்பட்டையைச் சுழற்றினான். “ஆனால் பசங்க கூட்டமா கூடிட்டா என்ன மனநிலையென்று சொல்ல முடியாது நம்மால்; நான் நிறைய போர்டிங் பள்ளியில் படிச்சிருக்கேன்.”

ரயனின் ஹீரோயிஸம் எங்கள் மூவரையும் ஃபெவிகால் போல் ஒட்ட வைத்தது. அதைத் தவிர நாங்கள் விடுதியில் தங்கும் பக்கத்து அறைக்காரர்கள், ஒரே இஞ்ஜினீயரிங் பிரிவு வேற. முதல் சந்திப்பிலேயே படுத்து எழும் ஆண்/பெண்ணுடன் உறவு வைத்துக் கொள்ளக்கூடாது என்பார்கள். நாங்கள் சேர்ந்து படுக்கவில்லைதான்; இருந்தாலும் முதல் சந்திப்பே வெற்றுடம்புடன் இருந்ததால் நாங்கள் நட்பு பாராட்டாமல் இருந்திருக்க வேண்டுமோ என்னவோ; ஆனால் எங்களின் திரிவேணி உறவு தற்செயலாக ஏற்பட்டது.

“மெ-ஷி-ன்” என்று ஆங்கிலத்தில் கரும்பலகையில் பெரிதாக எழுதப்பட்டிருந்தது.

பெரிய திரையரங்கம் போலிருந்த வகுப்பறைக்குள் நாங்கள் நுழையும் பொழுதே மலைபோல் குவிந்திருந்த கையேடுகள் எங்களுக்குக் கொடுக்கப்பட்டன. ஆசிரியர் கரும்பலகை அருகில் பருத்த வண்டு போல் உட்கார்ந்திருந்தார். நாங்கள் எல்லோரும் இருக்கைத் தேடி அமர்ந்து சலசலப்பு அடங்கும் வரை காத்திருந்தார்.

அவருக்கு நாற்பது வயது இருக்கும். சாம்பல் நிற முடி. மூன்று டேபிள் ஸ்பூன் எண்ணைத் தடவிப் படிய வாரியதில் பளபளத்தது. உள்ளே செருகாத வெளிர் நீல ஷர்ட்; முன் பாக்கெட்டில் மூன்று பேனாக்கள் செருகியிருந்தார். அதோடு ‘சாக்குகளும்’, (Chalk) துப்பாக்கி குண்டுகள் போல் தென்பட்டன.

“எல்லோரையும் வரவேற்கிறேன். நான் பேராசிரியர் ட்யூபே, மெக்கானிக்கல் இன்ஜினீயரிங் டிபார்ட்மெண்ட். இது காலேஜில் முதல் நாள். ஏதாவது சிறப்பாக உணர்கிறீர்களா?” என்று சுருதி மாறாமல் ஒரே குரலில் கேட்டார்.

மொத்த வகுப்பும் அமைதியாக இருந்தது. நாங்கள் எங்கள் கையேடுகளை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தோம். எல்லோரும் மந்தையில் உள்ள ஆடுகள் போல் முழித்தோம்.

இந்தப் பாடத்தின் பெயர் மேனு ஃபாக்சரிங் ப்ராஸஸ் (Manufacturing Process). சுருங்கச் சொன்னால் மேன்ப்ரோ. சொல்வதற்கும் எளிது. கையேடுகள் பாடத் திட்டத்தை விவரித்தன. அடிப்படை மேனுபாக்சரிங் வெல்டிங், மெஷினிங், காஸ்டிங், பெண்டிங் மற்றும் ஷேபிங், இதைத் தவிர எப்படி மதிப்பெண்கள் வழங்கப்படும் என்ற கிரேடுகளும் விவரிக்கப்பட்டிருந்தன.

Major - 40% முக்கியபாடங்கள்

Minor- 20% இதரப்பாடங்கள்

செய்முறை - 20%

ஒப்படைப்பு (6-8), பொதுஅறிவு வினா (3-4) - 20%

பேரா ட்யூபே அவரின் வணக்கத்திற்குக் கிடைத்த சுமாரான மரியாதையினால் வரவழைத்துக் கொண்ட உற்சாகத்துடன், “கையேடுகளைப் பிறகு பாருங்கள். கவலையே படாதீர்கள். இது போன்று நிறைய கிடைக்கும். ஒவ்வொரு பாடத்திற்கும் இவை கிடைக்கும். இவற்றை தற்சமயம் தள்ளி வையுங்கள்”, என்று சொல்லி கரும்பலகையை நோக்கி நடந்தார்.

தன் பாக்கெட்டிலிருந்து ஒரு சாக் துண்டை எடுத்தார். ஏதோ தீவிரவாதி குண்டை எடுக்கும் வேகத்துடனும் லாவகத்துடனும் எடுத்து "மெஷின்" என்ற வார்ததைக்கு அடியில் சுமார் ஆறு முறை கோடு கிழித்தார். எங்கள் பக்கம் திரும்பினார்.

"மெஷின் தான் ஒரு மெக்கானிக்கல் இன்ஜினியரின் ஜீவாதாரம். நீங்கள் செய்யும் அனைத்து செயல்களும் இதனுடன் தொடர்பு கொண்டது. யாராவது மெஷின் என்றால் என்ன என்று சொல்ல முடியுமா?"

கொல்லென்று ஒரு அமைதி நிலவியது. முதல் பாடம்: அமைதியின் வெவ்வேறு நிலை.

"யாராவது?" பேராசிரியர் மறுமுறை கேட்டார். வரிசைகளுக்கு நடுவே நடந்தார். பாதை அருகே உட்கார்ந்திருந்த மாணவர்கள் பம்மினார்கள். வேட்டையாடப்படுபவர்கள் போல் அஞ்சினார்கள். கண்களைச் சந்திக்க மறுத்தனர். நான் என் புது நண்பர்கள் எப்படி இருப்பார்கள் என்று ஆராய்ந்தேன். நாங்கள் ஒரு எழுபது பேர் வகுப்பறையில் இருந்திருப்போம். அந்த வருடம் அந்த 'பாட்சில்' நாங்கள் மொத்தம் முன்னூறு பேர். என் முன்னே அமர்ந்திருந்த பையன் பேராசிரியரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் தலை மேலும், கீழும் ஆடியது. வாய் லேசாகப் பிளந்திருந்தது; பயந்த சுபாவம், பகு அவனை நொறுக்குத் தீனியைப் போல் மென்றுவிடுவான்.

"நீ", பேராசிரியர் ட்யூபே, என்னைத் தான் முதல் பலியாகத் தேர்ந்தெடுத்தார்.

அது தான் முதன் முறை, அந்த நிலை என்னைத் தாக்கியது. நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. என் மொத்த உடம்பும் இறுகியது. ரத்த நாளங்கள் வெடித்தன. வேர்வை வாளி, வாளியாக ஊற்றியது.

"நீ தான், உன்னிடம் தான் பேசுகிறேன்", என்று பேராசிரியர் விளக்கம் அளித்தார்.

"ஹரி, ஹரி." யாரோ என் உள்ளே அழைத்தது போலிருந்தது ஆனால் என் பதிலளிக்கும் மெஷினைத் தான் அவர்கள் அடைய முடிந்தது. நானும் பதில் சொல்ல முயற்சித்திருக்கலாம். இல்லை, "தெரியாது", என்ற குறைந்தபட்ச பதிலாவது சொல்லியிருக்கலாம். ஆனால் என் நாக்கு சொல்லாமல் கொள்ளாமல் விடை பெற்றுக் கொண்டது.

"விந்தை", என்று கூறிவிட்டு பேரா.ட்யூபே சந்தேகமாக அடுத்த மாணவனிடம் நகர்ந்தார்.

"கட்டம் போட்ட சட்டை, நீ என்ன நினைக்கிறே?"

கட்டம் போட்ட சட்டை இதுவரை குறிப்பு எழுதுவதான பாசாங்கை நிறுத்திவிட்டு, "ஸார், மெஷின் ஸார்...வந்து ஸார்...ஒரு சாதனம்...பெரிய பாகங்கள் ஸார்... பெரிய கியர்கள்... மற்றும்..."

"என்னது?" பேரா. ட்யூபே வெறுப்பை எச்சில் போல் கட்டான் சட்டை மீது உமிழ்ந்தார். "எப்படி தரம் வருடா வருடம் குறைந்து கொண்டே வருகிறது. நம் அனுமதி விதிகள் அவ்வளவு மிரட்டலாக இல்லை." தன் எண்ணை தடவிய மண்டையை அலுப்பில் அசைத்தார். அதில் தான் மொத்த கிரகத்தின் தகவல்களையும், மெஷின், உட்பட பதுக்கி வைத்திருந்தார்.

"அட, போங்கப்பா; இரண்டு வருடம் முதுகுடைய இங்கு வருவதற்காகப் படித்ததற்கு, இந்தப் பேச்செல்லாம் கேட்கணும். நூத்தில் ஒருவர் தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அது பத்தாதா?" ரயன் கிசுகிசுத்தான்.

"உஷ்ஷ்", என்று பேராசிரியர் ட்யூபே எங்கள் மூவரணியைப் பார்த்து எச்சரித்தார். "மெஷினின் விளக்கம் எளிமையானது. மனித உழைப்பை மிச்சப்படுத்துவது, அல்லது குறைப்பது தான். எவையெல்லாம் குறைக்கிறதோ, அவையெல்லாம் மெஷின் தான். உங்களைச் சுற்றியுள்ள உலகைப் பாருங்கள். எல்லாமே மெஷின்."

என் மனதில் மறுமுறை சொல்லிப் பார்த்துக் கொண்டேன், மனித உழைப்பை குறைப்பது; ஆமாம் எளிதாகத் தான் பட்டது.

"அதனால் ராட்சஸ ஸ்டீல் மில்கள் தொடங்கி, தொடப்பக்கட்டை வரை, மனிதன் நிறைய கண்டுபிடித்திருக்கிறான் தன் உழைப்பைக் குறைக்க, எளிதாக்க'', என்று பேராசிரியர் தொடர்ந்தார். அவருடைய சின்ன விளக்கம் வகுப்பறையையே மாயமாய் கட்டுண்டு கிடக்க வைத்தது.

"விமானம்?" முதல் வரிசை மாணவன் கேட்டான்

"மெஷின்", என்றார் பேராசிரியர்.

"ஸ்டேப்ளர்?" இன்னொரு குரல்.

“மெஷின்.”

ரொம்ப திகைப்பாக இருந்தது. ஸ்பூன், கார், மிக்ஸி, கத்தி, நாற்காலி-மாணவர்கள் உதாரணங்களை அடுக்கிக்கொண்டே போனார்கள் அனைத்துக்கும் பேரா ட்யூபேயின் ஒரே பதில்-மெஷின்.

“உங்களைச் சுற்றியிருக்கும் உலகை நேசியுங்கள்", பேரா ட்யூபே முதன் முறையாகப் புன்னகைத்தார், “நீங்கள் மெஷினின் எசமானர்கள் ஆகிவிடுவீர்கள்.”

மொத்த வகுப்பறையும் பரவசப்பட்டது; பேரா ட்யூபேயின் கடுவன் முகம் இளகி புன்னகைத்தற்காக.

“ஸார், ஜிம்மில் உள்ள மெஷின், ஒரு பென்ச் ப்ரெஸ், என்ன?” ரயன் அந்த பரவசத்தின் ஊடே பாய்ந்தான்.

“அதைப் பற்றி என்ன?” பேரா ட்யூபேயின் புன்னகை வடிந்தது.

“அது மனித உழைப்பைக் குறைக்காது. மேலும் அதிகரிக்கும்.” வகுப்பறையில் மௌனம் படர்ந்தது.

“நான் என்ன சொல்ல வந்தேன்.” பேரா ட்யூபே வாதங்களைத் தேடினார்.

அட்டா! ரயன் சொல்வது சரிதானே!

“அதனால் நீங்கள் ரொம்ப எளிமைப்படுத்திவிட்டீர்களோ?” ரயன் எடுத்துக் கொடுப்பது போன்ற பாவனையில் கேட்டான்.

“நீ என்ன செய்ய முற்படுகிறாய்?” பேராவின் உதடுகள் இறுகியது. எங்கள் அருகே வந்தார், “நான் தப்பாகக் கூறி விட்டேன் என்கிறாயா?”

“இல்லை ஸார், நான் சும்மா.”

“எச்சரிக்கை தம்பி. இது என் வகுப்பு, ஜாக்கிரதையாக நடந்து கொள்”, என்று மட்டுமே சொல்லிவிட்டு, பேரா ட்யூபே வகுப்பின் முன்னே நடந்தார்.

“சரி, வேடிக்கைப் போதும். இப்பொழுது மேன்ப்ரோவில் கவனம் செலுத்தலாம்;” என்று கரும்பலகையில் எழுதிய ‘மெஷின்’ என்ற வார்த்தையை அழித்தார்; அதன் அடியில் ஆறுமுறை கோடிட்டதையும் சேர்த்துத்தான். “என் பாடம் ரொம்ப முக்கியம் வாய்ந்தது. எல்லா பேராசிரியர்களும் தங்கள் பாடத்தைப் பற்றி அப்படித் தான் குறிப்பிடுவார்கள். ஆனால் மேன்ப்ரோ என் உயிர்மூச்சு. அதனால் என் வகுப்பைக் கட் அடிக்காதீர்கள். வீட்டுப் பாடங்களை கவனமாகச் செய்யுங்கள்; எப்பொழுதும் தயார்நிலையில் இருங்கள் அறிவிப்பில்லாத குவிஸ் எப்பொழுது வேண்டுமானாலும் வானத்திலிருந்து குதிக்கலாம்.”

அடுத்து “காஸ்டிங்” என்பதை விளக்கினார். உலோகத்தின் மீது செலுத்தப்படும் மிகப்பழமையான முறைகளில் ஒன்று. ஒரு மணி நேரம் நீண்டது-இரும்பு உருக்குவது, அதைப் பணியாளர்கள் எப்படி வடிவங்களில் ஊற்றுவார்கள் என்ற விளக்கி முடித்தார்.

“இன்றைய பாடம் முடிந்தது. உங்களின் வருகை நல்வரவாக இருக்க வாழ்த்துக்கள். உங்களின் தலைமைப் பேராசிரியர் செரியன் சொல்வதை நினைவு படுத்துகிறேன், இங்கு பாடத்திட்டம் வேண்டுமென்றே தான் கடுமையாக்கப்பட்டிருக்கின்றது. நீங்கள் கால்களில் சக்கரம் கட்டிக்கொண்டு சுழல வேண்டும். இங்குள்ள ‘கிரேடிங்’ முறையை மதித்து நடக்க வேண்டும். நீங்கள் மோசமான கிரேடுகளைப் பெற்றால், நான் உறுதியாகச் சொல்வேன். வேலை இல்லை, படிப்பு இல்லை, எதிர்காலம் இல்லை. நீங்கள் நன்றாகப் படித்தால் இந்த உலகமே உங்களின் நத்தையில் முத்தெடுக்கும் இடமாக மாறும். அதனால் படியுங்கள்.”

அதைச் சொல்லிவிட்டு டஸ்டரை மேசைமீது ஓங்கித் தட்டிவிட்டு, சாக் புகையின் ஊடே வெளியேறினார். எங்களுக்கு லேசான நடுக்கம் எட்டிப் பார்த்தது.

*Downloaded from [Ebookz.in](Ebookz.in)*

# 2

## டெர்மினேடர் (அழிப்பவன்)

கேளிக்கையில் நேரம் போவதே தெரியாது என்பர். ஆனால் முதல் ஸெமிஸ்டரில் மட்டுமே எங்களுக்கு ஆறு பாடங்கள், நான்கில் பிராக்டிகல் வேறு உண்டு; நேரம் ஊர்ந்து சென்று கோமாவில் விழுந்தது. கேளிக்கையின் பிரதானம் அதன் மறுப்பில் தெரிந்தது. ஒவ்வொரு நாளும் எட்டிலிருந்து-ஐந்து ஒரு எட்டு மாடி கட்டிடத்தில் அடைத்து வைத்தனர். அந்த “இன்ஸிடி-கட்டிடத்தில்”, எப்பொழுதும் பாடங்கள், விளக்கங்கள், ஆய்வு கூடங்கள் நிரம்பி வழிந்தன. அடுத்து வந்த மாலை சில மணி நேரங்கள் நூலகத்திலோ அல்லது எங்கள் விடுதி அறைகளிலோ வீட்டுப் பாடங்களை முடிக்க, ரிபோர்ட்டுகளை எழுத செலவிடப்படும். இன்னும் இதில் தேர்வுகளைச் சேர்க்கவில்லை! ஒவ்வொரு பாடத்திலும் இரண்டு சிறிய தேர்வு, ஒரு பெரிய தேர்வு மற்றும் மூன்று அறிவிப்பில்லா குவிஸ்ஸுகள்; ஏழு தேர்வுகள், ஆறு பாடங்கள் என்றால் ஒரு ஸெமிஸ்டருக்கு நாற்பத்தி-இரண்டு தேர்வுகள், கணக்குப்படி, முதல் மாதம் பேராசிரியர்கள் குவிஸ்களை நடத்தவில்லை. இது ‘ராகிங்-காலம்’ அதனால் சௌகரியமாக இருக்கும் வரை குவிஸ்ஸுலிருந்து விடுதலை; ஆனால் ராகிங்-காலம் முடிந்தது; அதனால் எப்பொழுது வேண்டுமானாலும் குவிஸ் எங்களைத் தாக்கலாம். ஒவ்வொரு வகுப்பிலும் பேராசிரியரின் சூசகத்தைப் புரிந்து அடுத்த வகுப்பில் குவிஸ் இருக்குமா, இருக்காதா என்று அறிய வேண்டும்.

இதன் நடுவே நான் ரயனையும், அலோக்கையும் புரிந்து கொண்டு நட்பானேன். ரயனின் அப்பா கைப்பொருள்கள் வியாபாரம் செய்பவர். ஐரோப்பிய சந்தைகளுக்கு இவரின் குயவர்கள் பானை செய்தனர். ரயனின் அப்பா, அம்மா, இருவருமே அந்த வியாபாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். அவர்கள் அடிக்கடி பயணம் மேற்கொள்ள வேண்டியிருந்ததால் ரயன் விடுதியில் தங்கிப் பள்ளிப் படிப்பைத் தொடர்ந்தான். மலைப் பிரதேசமான முஸுரியில் ஒரு பணக்காரப் பள்ளியின் மாணவன்.

அலோக்கின் குடும்பம் சுமாரான பணப்புழக்கத்தில் ஓடியது. அதாவது மரியாதையாகச் சொல்வதென்றால் பணமில்லை, ஏழைக்குடும்பம். அவன் அம்மா மட்டுமே சம்பாதித்தாள். நான் கடைசியாகக் கேள்விப்பட்ட வரை பள்ளியாசிரியர்கள் ஜாக்பாட் அடிப்பதில்லை. அதோடு அவரின் பாதி வருமானம் அவன் அப்பாவின் மருத்துவ செலவுக்கே ஒதுக்கப்பட்டது. அதே சமயம், அலோக் வருத்தத்துடன் குறிப்பிட்டது போல “கலியாணத்திறகு நிற்கும்” அக்கா. இது குடும்பத்தை பெரும் கவலைக்கு ஆளாக்கியது. அலோக்கின் அழகைப் பார்த்தால் அவன் அக்காவும் பிரமாத ரகம் என்று சொல்ல முடியாது.

எனக்கு குமாவோன் பழகிவிட்டது. அதிலிருந்த சில மாணவர்களும் தான். எல்லோரையும் குறிப்பிட முடியாது. ஆனால் ஒரு மூலையில் சுக்வீந்தர், அவனை ‘சந்தோஷ ஸர்த்’ என்றே அழைப்போம். மனித வாடை அருகே வந்தாலே அவன் முகம் சந்தோஷப் புன்னகையை கொப்பளிக்கும். அவனருகே ‘படிப்ஸ்’ வெங்கட். ஜன்னல்களைக் கருப்பு காகிதத்தினால் ஒட்டி மறைத்த அறையினுள்ளேயே பூட்டிக் கொண்டு தனியாக சஞ்சரித்தான். ‘சொறி’ ராஜேஷ்-அவன் கைகள் எப்பொழுதும் அவன் உடலின் ஏதாவது பாகத்தைச் சொறிந்து கொண்டேயிருக்கும். சில சமயம் ஆட்சேபிக்கக்கூடிய இடங்களில் கூட; அடுத்த பக்கம் ஸீனியர்கள் அறைகள்-பகு, அனுராக் போன்ற பிற விலங்குகள்.

ரயனும், அலோக்கும், நானும் பல மாலைகள் சேர்ந்து படிப்போம். ஸெமிஸ்டரின் முதல் மாதம் ஓடியே விட்டது. நாங்கள் என் அறையில் க்வாண்டோ-இயற்பியல் பாடத்தை அவசரமாகக் குதறிக் கொண்டிருந்தோம்; கெடு முடியும் நேரம்!

“அடச்சே!” ரயன் நாற்காலியில் இருந்து எழுந்து சோம்பல் முறித்தான். அவனின் அட்டகாசமான முதுகு குனிந்த நிமிர்ந்தது.

“என்ன கண்ட்ராவியான வாரம்; வகுப்பு, வீட்டுப் பாடம் மேலும் வகுப்பு, மேலும் வீட்டுப்பாடம் இதைத் தவிர கூடுதல் வசீகரமாக குவிஸ் வேற; இது பேர் வாழ்க்கையா?”

அலோக் டெஸ்கில் அமர்ந்திருந்தான். இயற்பியல் பாடத்தில் மூழ்கியிருந்தான். அவன் தலை ஒரு பக்கமாக ஒருக்களித்து ஷீட்டோடு ஷீட்டாக ஈஷியிருந்தான். இரண்டங்குலம் இடைவெளியிருந்தால் அதிகம். இப்படி எழுதுவது அவன் பழக்கம்; தலையைக் கவிழ்த்து பேனாவை இறுகப் பிடித்தபடி; வெள்ளை

தாள்கள் அவன் கண்ணாடியில் பிம்பமாகத் தெரிந்தன.

“என்ன?” அலோக் முட்டாள்தனமாகப் பார்த்தான்.

“இதன் பேர் வாழ்க்கையானு கேட்டேன்?” ரயன் கேட்டான். இம்முறை பார்வை என்னை நோக்கி இருந்தது.

நான் படுக்கையில் கால் மேல் கால் போட்டு அமர்ந்து ஏதோ வரைய முற்பட்டேன். எனக்கும் ஒரு இடைவேளை தேவைப்பட்டது. அதனால் என் பேனாவைக் கீழே வைத்தேன்.

“என்ன வேணுமானாலும் சொல்லிக்கோ”, ஒரு டைட்டானிக் கொட்டாவியைக் கட்டுப்படுத்திக் கொண்டே, “அதனால் இது மாறாது”, என்றேன்.

“இது சிறை. நிஜமாகத் தான். சனியன் பிடித்த சிறை”, காரை உதிரும் சுவரைக் குத்தினான்.

“ஒரு வேளை நீ நாட்டின் சிறந்த காலேஜான ஐஐடியில் இருக்கே என்பதை மறந்துவிட்டாயா?” என்றான் அலோக் சொடுக்கெடுத்துக் கொண்டே.

“அதனால்? மாணவர்களைச் சிறையில் அடைப்பதா?” ரயன் இடுப்பில் கை வைத்தபடி குடைந்தான்.

“இல்லை. ஆனால் ஒரு தரத்தை எதிர்பார்க்கலாமே”, என்று மேலே கையை உயர்த்தி தரத்தின் உயரத்தை சைகை செய்தான் அலோக்.

“இதுவா, உயர்ந்த தரம்? மூளையற்ற தேனீக்களைப் போல் நள்ளிரவு வரை வேலை செய்வதா? நேற்று மேன்ப்ரோ, முந்தைய தினம் ஆப்மெக்’ இன்று-க்வாண்டோ முடியவே முடியாதா?” ரயன் குறைபட்டுக் கொண்டான்.

“டேய், எனக்கு விடுதலை வேணுன்டா. படத்துக்குப் போகலாமா?”

“இந்த வீட்டுப்பாடத்தை என்ன செய்வது?” அலோக் முழித்தான்.

“பிரியா திரையரங்கில் டெர்மினேடர் படம் ஓடுகிறது” என்று ரயன் ஆசை காட்டினான்.

“எப்போ தூங்குவோம்?” அலோக் கேட்டான்.

“நீ சரியான “டப்பா- மன்னன்”, என்று ரயன் அன்பாகச் சொன்னான்.

“நான் வரேன்”, என்றேன். வரையும் பலகையை நகர்த்தினேன், “வா அலோக் பிறகு பார்த்துக்கலாம்.”

“ரொம்ப லேட்டாயுடுமடா”, அலோக் அரை-மனதாக எச்சரித்தான்.

நான் எழுந்து அவன் பேனாவை எடுத்து அவன் ஜியாமெட்ரி டப்பாவில் போட்டேன். ஆமாம், ஜியாமெட்ரி டப்பாவேதான். ஒரு பனிரெண்டு வயதுப் பையனைப் போல் அலோக்கிடம் ஜியாமெட்ரி டப்பா உண்டு.

“சரி வா போகலாம்”, என்ற சொல்லும் பொழுதே அவன் டப்பாவில் இரண்டு தூரிகைகளைப் பார்த்தேன். “இது எதுக்கடா, உன் டப்பாவில்?”

“ஒண்ணுமில்லை”, என்று முணுமுணுத்தான் அலோக். நான் அந்தத் தூரிகைகளை எடுத்து காற்றில் கற்பனையாக ஓவியம் தீட்டினேன். “பின்னே, எதுக்கு இது? உன் சர்க்யூட் வரை படத்துக்கு வண்ணம் தீட்டுவியா?” என் ஜோக்குக்கு நானே சிரித்தபடி, தூரிகைகளைக் காற்றில் ஆட்டினேன்.

“மேன்ப்ரோ வகுப்பில் உன் ஆன்மாவை வரைந்து காட்டடுவியா இல்லை பேரா ட்யூபேவின் சிடுசிடு முகத்தை வரைவியா?”

“இல்லை. இது என் அப்பாவினுடையது. அவர் ஓவியர்; ஆனால் இப்பொழுது பக்கவாதத்தில் தவிக்கிறார்.”

இது போன்ற சங்கடமான சமயங்களில் விஸிலடித்தால் ஒரு டைனோஸார் வந்து நம்மை விழுங்கக் கூடாதா? அவை ஏன் உலகிலிருந்து அழிந்தன? செய்வதறியாமல் என் விரல்கள் காற்றில் உறைந்தன.

ரயன் என் முகத்தைப் பார்த்து சிரமப்பட்டு பல்லைக் கடித்துக் கொண்டான். அலோக்கைப் பார்த்து பரிதாபப்பட்டு ‘உச்சு’ கொட்டவும் முயன்று, என் முகபாவத்தைப் பார்த்து சிரிப்பையும் கட்டுப்படுத்தி ஒரு விதமாக சமாளித்தான். “நிஜமாகவா அலோக்? அடப்பாவமே! ரொம்ப வருத்தமாயிருக்குடா.” என்று அலோக்கின் தோளைச்சுற்றி கையைப் போட்டு சமாதானம் செய்தான். நான் செய்யாத தவறுக்கு அவனுக்கு நல்ல பேர்!

“பரவாயில்லை. நிறைய நாட்களாச்சு. இப்போ பழகியாசசு”, அலோக் கடைசியில் படம் போக

எழுந்தான். நான் அப்படியே மறைந்து போய்விடக் கூடாதா என்று ஆசைப்பட்டேன்.

நாங்கள் வெளியே நடந்த பொழுது ரயனும், அலோக்கும் இணைந்து நடந்தனர். நான் ஒரு ஆறடி பின் தங்கி தொடர்ந்தேன்.

“நான் எப்பவுமே விடுதிகளில் தங்கி பள்ளியில் படித்ததால் எனக்குப் புரியவில்லை. ஆனால் உனக்கு ரொம்ப கஷ்டமாக இருந்திருக்கும்; எப்படி சமாளிச்சே?” ரயன் தொடர்ந்து கேட்டான்.

“எப்படியோ சமாளிச்சேன். அம்மா உயிரியல் ஆசிரியை; அது மட்டுமே வருமானம்; அக்கா காலேஜ் படிக்கிறா.”

நான் பலமாகத் தலையாட்டினேன். நானும் அவன் கஷ்டங்களைப் புரிந்து கொண்டவன் என்று நிலைநாட்டினேன்.

“நான் ஐஐடிக்கு எப்படி தேர்வானேன்னு நினைக்கிறே? இரண்டு வருடங்களாக, நான் தான் அவரைப் பார்த்துக் கொண்டேன்”, என்றான் அலோக்.

“அப்படியா?” நானும் பேச்சில் கலந்த கொள்ள முயற்சித்தேன்.

“ஆமாம். தினமும் பள்ளியிலிருந்து வீடு திரும்பியவுடன், அவர் தேவைகளை கவனித்து விட்டு என் புத்தகங்களைப் படிப்பேன்.”

ரயனிடம் ஸ்கூட்டர் இருந்தது. அதனால் பிரியா திரையரங்கம் செல்ல எளிதாக இருந்தது. மூன்று பேர் ஒட்டிக் கொண்டு ‘ட்ரிபிள்ஸ்’ ஸாண்ட்விச் செல்வது சட்டப்படி குற்றம். ஆனால் டாணாக்காரர்கள் நிறுத்தினால் அதிகப்படியாக இருபது ரூபாய் கேட்பார்கள். பிடிபடுவது என்பது பத்தில் ஒரு சதவிகிதம் தான். எல்லாவற்றையும் கூட்டி கழித்துப் பார்த்தால், பிடிபட்டாலும் இது தான் மலிவு என்றான் ரயன்.

எங்களின் அமைதியான காம்பஸை ஒப்பிட்டால் பிரியா திரையங்கம், இரவில் வேறு உலகம் என்றே சொல்லலாம். குடும்பமாக, ஜோடியாக, இளைஞர் குழுவாக நிறைய பேர் வரிசையில் நின்றனர். இந்த ஸீஸனின் ஹிட் படம் அது. நாங்கள் முதல் வரிசை டிக்கெட்டுகள் வாங்கினோம். அலோக் செலவழிக்க விரும்பவில்லை. எனக்குத் தனிப்பட்ட முறையில் தோன்றிய விஷயம், அவன் தள்ளி உட்கார்ந்தால் கண் தெரியாதோ என்பதே! படம் ஒரு அறிவியல் கற்பனை. ரயனின் ரசனை தெரிந்ததே! எப்பொழுதும் இந்தப் படங்களைத் தான் தேர்ந்தெடுப்பான். நான் இவற்றை அறவே வெறுத்தேன், ஆனால் என்னை யார் கேட்டார்கள்? இது காலத்தைக் கடந்து பயணம் செல்லும் கதை; மனித ரோபோக்கள், லேசர் துப்பாக்கிகள், பெரிய சாகசம், எல்லாமே ஹாஸ்யத்திற்கு இடமில்லாமல் தீவிரமாக இருந்தது. பத்தே நிமிடங்களில் அந்த தசைகள் திமிரும் ஹீரோவின் சாகசங்கள் அசட்டுத்தனமாகத் தோன்றின. நக்கலடிக்கக் கூடப் பிடிக்காமல் கொட்டாவி விட்ட படி உட்கார்ந்திருந்தேன்.

“வாவ்!” ரயன் ஆச்சரியத்தில் முகத்தைப் பிடித்துக் கொண்டான். திரையில் வில்லன் தன் பின்னால் தொங்கும் பையிலிருந்து ஒரு சக்தி வாய்ந்த “டார்பிடோ” என்ற குண்டை வீசினான்.

“இந்தக் குப்பைப் படத்தில் அப்படி என்ன ரசிக்கறே?” என்று கிசுகிசுத்தேன், அவன் சந்தோஷத்தை உடைக்கும் நோக்கில்; “டேய் அவங்க உபயோகிக்கிற சாதனங்கள்...”

“ஆனால் அதெல்லாம் பொம்மை தானே. இது கற்பனை.”

“ஆமாம்; ஒரு நாள் இவை நிஜமாகலாம்.”

காலப் பயணம்? நாம் ஒரு நாள் கால, நேரம் கடந்து பயணிப்போமா? ரயன் பரபரப்பினால் அபத்தமாகப் பேசுவான்.

“உஷ்ஷ் ஏற்கனவே அவன் பேசற ஆங்கில உச்சரிப்பு புரியலே” அலோக் திட்டினான்.

அன்று நள்ளிரவு குமாவோனுக்கு வந்த பொழுது விடுதியே பத்தி எரிந்து கொண்டிருந்தது. தீப்பிடித்து அல்ல, வெங்கட்டிலிருந்து சுக்வீந்தர் வரை அனைவரும் நோட்டுப் புத்தகமும் கையுமாக ஓடிக்கொண்டிருந்தனர்.

“அறிவிப்பில்லா குவிஸ். ஆப்மெக்கில் வைக்கப்போகிறார்கள் என்று வதந்தி”, சந்தோஷ் சர்த் விளக்கம் அளித்துவிட்டு அவசரமாக நோட்டுப் புத்தகத்தைப் புரட்டினான்; முதன் முறையாக எங்களைப் பார்த்து மின்சார குதூகலம் கொள்ளவில்லை.

ஆப்மெக் என்றால் அப்ளைடு மெகானிக்ஸ். நீலகிரி விடுதியில் தங்கியிருந்த ஒரு மாணவன் பேராசிரியரின் அலுவலகத்திற்கு மாலை சென்றிருக்கிறான். ஒரு வீட்டுப் பாடத்தை தாமதமாகக் கொடுத்திருக்கான். பேராசிரியர் இடது புருவத்தை உயர்த்தி ஆட்டி வில்லத்தனமான அறிவுரை வழங்கியிருக்கிறார்: “கொடுக்கும் குறிப்புகளை அடிக்கடி படி.” அது ஒன்று போதும் எல்லோர் தலையிலும்

அலாரம் மணி அடித்தது போல் செய்தி காட்டுத்தீயாகப் பரவியது.

“ஐயோ, இப்போ ஆப்மெக் வேறு படிக்க வேண்டும் மணிக்கணக்காகுமே”, என்றான் அலோக் சோகமாக.

“நாம் இன்னும் க்வாண்ட முடிக்கவில்லை”, என்று நினைவூட்டினேன். எல்லோரும் என் அறையில் குழுமினோம் படிப்பதற்காக. அலோக் இரண்டு மணிக்கு சொன்னான், “இந்தப் படம் போகும் திட்டம் பெரிய மடத்தனம். நான் ஏற்கனவே சொன்னேன்.”

“எனக்கு எப்படித் தெரியும்? எதுக்கு இவ்வளவு டென்ஷன்?” ரயனுக்குக் கோபம் வந்தது.

“அநாவசியம் இல்லை? இங்கே தொடர்பு கிரேடுகள் தருவார்கள். அதனால் நாம் படிக்காமல் மற்றவர்கள் படித்து விட்டால் நம் கதி அதோகதிதான்”, அலோக் கடைசி வார்த்தையை அழுத்தமாகச் சொன்னான்.

அப்பொழுது ஒரு எலி என் கட்டிலடியிலிருந்து எட்டிப் பார்த்தது.

“நீ பாத்தியா?” ரயன் ஆர்வமாகக் கேட்டான். பேச்சை மாற்றுவதில் குறியாக இருந்தான். தன் செருப்பைக் கழட்டிக் கையில் எடுத்துக் கொண்டான். கவனம் செலுத்தி அந்த எலியை அடிக்க முற்பட்டான். ஆனால் அந்த எலி தன் சாவைப் பற்றி சொந்தத் திட்டத்தை வைத்திருந்தது. அதனால் அது சாமர்த்தியமாகத் திரும்பவும் படுக்கைக்கடியில் குதித்து மறைந்தது.

“ஆமாம், என் அறையில் எலிகள் உள்ளன. சின்ன சனியன்கள்”, என்று செல்லமாகச் சொன்னேன்.

“அவற்றைக் கொன்று விடட்டுமா?” என்று ரயன் கேட்டான்.

“அவ்வளவு எளிதல்ல. அவை வேகமும், சாமர்த்தியமும் கொண்டவை”, என்றேன்.

“சவாலா?” ரயன் கேட்டான்.

“விலை மாதர் இல்லத்தில் பிறந்தவர்களே, உங்களிடம் கெஞ்சிக் கேட்கிறேன், நாம் படிக்கலாமா?” அலோக் கைகூப்பிக் கேட்டுக் கொண்டான். இவன் கொஞ்சம் நாடகத்தன்மை வாய்ந்தவன்.

ரயன் நாற்காலியில் சாய்ந்து தன் செருப்பை மீண்டும் அணிந்து கொண்டான். ஆப்மெக் புத்தகத்தைத் திறந்து வாயால் பெருமூச்சு விட்டான்.

“ஆமாம் ஸார், நாம் மனப்பாடம் செய்து மனதில் திணித்துக் கொள்வோம். பிறகெப்படி நாம் நாடு போற்றும் இன்ஜினீயர்களாக மாறுவது?” என்று பரிகசித்தான்.

“வாயை மூடு”, என்றான் அலோக். அவன் முகம் ஏற்கனவே புத்தகத்தில் மூழ்கிவிட்டது.

ரயன் அதற்குப் பிறகு பேசவில்லை. அடிக்கடி கட்டிலுக்கடியில் குனிந்து பார்த்துக் கொண்டேயிருந்தான். அவன் ஒரு எலியையாவது பிடித்து விட வேண்டும் என்று துடித்தான். ஆனால் அவை மறைவாகவே இருந்தன. ஒரு மணி நேரத்தில் க்வாண்டோ பாடத்தை முடித்துவிட்டோம்; பிறகு ஐந்து மணி வரை ஆப்மெக் குறிப்புகளைப் படித்தோம். அதற்குள் ரயன் உரக்கக் குறட்டை விட்டான். நான் விழித்திருக்கப் போராடினேன். அலோக்கின் கண்களிலிருந்து நீர் வழிந்தது. இன்னும் மூன்றில் ஒரு பகுதியைப் படிக்கவில்லை. ஆனால் கொஞ்சமாவது தூங்க வேண்டுமே. மேலும் குவிஸ் வெறும் வதந்தி தான்; நிச்சயமாக நடக்குமா என்று தெரியாது.

ஆனால் வதந்திகள், அதுவும் வீரியமானவை கண்டிப்பாக உண்மையாகும். ஆப் மெக் வகுப்பு, முப்பது நிமிடங்கள் போயிருக்கும் பேரா ஸென் கதவைப் பூட்டினார். கருப்பு பெட்டியை எடுத்தார். “கேளிக்கை நேரம், சட்டென்று ஒரு குவிஸ்; பல பதில்களிலிருந்து சரியானதைத் தேர்ந்தெடுக்க வேண்டும்”, என்றார்.

பேரா ஸென் கேள்வி-பதில் கொண்ட கையேடுகளை முதல் வரிசையில் அமர்ந்திருந்தவர்களிடம் கொடுத்தார். அது பின்னாடி நீர்வீழ்ச்சி போல் பெருகி ஓடி அனைவரையும் வந்தடைந்தது. வகுப்பில் உள்ள அனைவரும் அந்த வதந்தியைக் கேள்விப்பட்டவர்கள். ஸைபீரியா நாட்டில் விழும் பனி போன்ற ஆச்சரியமற்றத்தன்மையை தான் அந்த குவிஸ்ஸில் உணர்ந்தோம். நான் கேள்விகளைப் படித்துப் பார்த்தேன். அண்மையில் நடத்திய பாடல்களிலிருந்து கேள்விகள் கேட்டிருந்தார். அதனால் நாங்கள் அவற்றைப் படிக்கவில்லை.

“முட்டாள்தனம்! ஐந்தாவது கேள்விக்கு மேல் எந்தப் பாடத்தையும் படிக்கவில்லை.” என்று இரகசியமாக அலோக்கிடம் சொன்னேன்.

“நாம் செத்தோம். அமைதியாக சாகலாம்!” என்று தன் தலையை ‘படிக்கும்’ நிலையில் தொங்கவிட்டான். அவன் இடது கன்னத்தை விடைத்தாளின் மீது பொருத்தினான்.

நாங்கள் குமாவோன் திரும்பிய பிறகு குவிஸைப் பற்றிப் பேசவே இல்லை. மற்றவர்கள் பரபரப்பாகப் பேசிக் கொண்டார்கள். கேள்விகள் பாடப்பகுதிக்கு வெளியே இருந்து கேட்கப்பட்டன என்று குறைபட்டுக் கொண்டார்.

நாங்கள் படித்து முடிக்கவே இல்லை. அதனால் எங்களுக்கு ஒரு வித்தியாசமும் தெரியவில்லை. நாங்கள் முடிவுகளுக்காக வெகு நாள் காத்திருக்க வேண்டியதில்லை. இரண்டே நாட்களில் பேரா ஸென் விடைத் தாள்களைத் திரும்பக் கொடுத்தார்.

“ஐந்தா? இருபதுக்கு ஐந்தா?” என்றேன் அலோக்கிடம். என் பக்கத்தில் தான் அமர்ந்திருந்தான்.

“நான் ஏழு? சே!ஏழு!” என்றான் அலோக்

“நான் மூன்று. இது எப்படி இருக்கு? ஒண்ணு, ரெண்டு, மூணு”, என்ற ரயன் விரல்களில் எண்ணினான்.

பேரா ஸென் வழக்கம் போல் கரும்பலகையில் எழுதினார்.

அவரேஜ் *: 11/20* பரவாயில்லை

அதிகம் *: 17/20*

கம்மி *: 3/20*

ஒரு சில நிமிடங்கள் அதை அப்படியே விட்டு விட்டார். திரும்ப “கான்டிலீவர்” என்ற பாடத்தை நடத்தத் தொடங்கினார்.

“நான் தான் மிகவும் கம்மி. பார்த்தாயா?” ரயன் இரகசியக் குரலில் கிசுகிசுத்தான். காண்டிலீவர் அவனைப் பாதித்ததாகத் தெரியவில்லை. அவன் என்ன நினைக்கிறான் என்று கண்டறிய முடியவில்லை. அவனால் இந்த முடிவை ஜீரணிக்க முடியவில்லை என்பது புரிந்தது. அவன் அமைதியாக, உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் இருந்தாலும் அவன் கவலை புரிந்தது. அவன் திரும்பத் திரும்ப அந்த விடைத் தாளையே பார்த்துக் கொண்டிருந்தான். அதனால் அவன் மதிப்பெண்கள் மாறவில்லை.

அலோக் வேறு உலகில் சஞ்சரித்தான். ராகிங் அன்று எப்படி முகம் கோணி அழுகை வந்ததோ, அது போலிருந்தது அவன் முகம். அந்த கோக் பாட்டிலைப் பார்த்த அதே கலவரத்தில் விடைத்தாளையும் பார்த்தான். சோகம் கலந்த பார்வை. இது போன்ற சமயங்களில் அலோக்கின் கையாலாகத்தனம் வெளிப்பட்டது. அவனைக் கொஞ்சம் தட்டினாலும் அழுது விடுவான். இப்போதைக்கு அந்த மதிப்பெண்கள் பெரும் வெறுப்பை உமிழ்ந்தன.

நான் என் விடைத்தாளைப் பார்த்தேன். அவர் அந்த மதிப்பெண்களைப் பெரிதாக, அக்கறையின்றி, வெறுப்புடன் கிறுக்கியிருந்தார். நான் ஒன்றும் ஐன்ஸ்டைன் இல்லை. ஆனால் இது போன்ற மதிப்பெண்களை நான் என் பள்ளிக் காலத்தில் வாங்கியதே இல்லை. என் மதிப்பெண் இருபதுக்கு-ஐந்து! அதாவது இருபத்தி-ஐந்து சதவிகிதம்; இதைவிட மூன்று மடங்கு மதிப்பெண்களுக்குக் குறைவாக நான் பள்ளியில் மதிப்பெண்கள் பெற்றதே இல்லை. ஐயோ! ஐஐடியின் முதல் குவிஸ்ஸே வலித்தது.

ஆனால் ரயனின் மதிப்பெண்களைப் பாருங்கள். நேற்றைய இரவு படித்ததற்கு ஏதாவது மதிப்பு இருக்கா என்ன? அவனைக் காட்டிலும் இரண்டு கூடுதலாகப் பெற்றேன். அதாவது அறுபத்தி ஆறு சதவிகிதம் அதிகம். அது என்னை மகிழ்வித்தது. இந்தக் கொடுமையிலும் நன்மை அளித்த கடவுளுக்கு நன்றி!

எங்கள் மூவரில் அதிகம் வாங்கியது அலோக் தான். ஆனால் அவன் அதனால் சமாதானமாகவில்லை. தன் மதிப்பெண்ணைப் பார்த்தான். கரும் பலகையில் எழுதியிருந்ததைப் பார்த்தான். ஒவ்வொரு முறை தன் தப்பான விடைகளைப் பார்க்கும் பொழுதும் அவன் முகம் அஷ்ட கோணலானது.

எங்கள் விடைத்தாள்கள் எங்களின் கேவலமான வெளிப்பாட்டுக்கு அத்தாட்சி; அதைப் பையில் திணித்து விட்டு குமாவோனுக்கு நடையை கட்டினோம். மெஸ்ஸில் இரவுச் சாப்பாட்டுக்குச் சந்தித்தோம். ருசியில்லை, வழக்கமான உணவு தான். அலோக் தன் சப்பை மூக்கைச் சுளித்தான். உற்சாகமே இல்லாமல் வெண்டைக்காய் மஸாலா என்று மெஸ் பணியாளர்களால் செல்லமாக அழைக்கப்பட்ட பச்சை வஸ்துவை எடுத்துத் தட்டில் போட்டுக் கொண்டான். இரண்டு ரொட்டிகளைப் பொத்தென்று போட்டான். பல கொழகொழப்பான விஷயங்களான பருப்பு, பச்சடி, புலாவ் போன்றவற்றை ஒதுக்கினான். நானும், ரயனும் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டோம். பெரிய வித்தியாசமில்லாமல் எல்லாம் ஒரே ருசியற்ற உணவுதான். குறைந்த பட்சம் எங்கள் தட்டில் பல வண்ணங்கள் தென்பட்டன. கடைசியாக அலோக் குவிஸ்ஸைப் பற்றிப் பேசத் தொடங்கினான்.

“இப்போ வாயமூடி சும்மா இருப்பீங்களே?”

ரயனும் நானும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம்.

“என்ன சொல்லணும்?” என்றேன்.

“இது எவ்வளவு அபத்தம்”, என்றான் அலோக்.

“சாப்பாடா?” அலோக் என்ன சொல்ல வருகிறான் என்று முற்றும் உணர்ந்து வெறுப்பேத்தினேன்.

“அடச்சே! இந்தப் பாழாப் போன சாப்பாடா?” என்றான் அலோக், “ஆப்மெக் குவிஸ்பற்றிச் சொன்னேன்.” அவனின் வழக்கமான சோகம் மாறி கோபம் கொப்பளித்தது. எனக்கு அந்த உணர்ச்சி சோகத்தைவிட சிறந்தது என்று தோன்றியது. இதைக் கையாள்வதும் எளிது.

“குவிஸ்ஸைப் பற்றி என்னடா? அது தான் ஊத்திக்கிச்சே? பேச என்ன இருக்கு?” என்றான் ரயன் சுருக்கமாக.

“அப்படியா? நாம் மோசம் போய்விட்டோம்; சந்தேகமே இல்லை”, என்றான் அலோக்.

அலோக் ஒரு வார்த்தையை எடுத்துக் கொண்டால் அதையே பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பான். அதனால் அந்த வார்த்தையின் அர்த்தமே தொலைந்து விடும். அவன் பேச்சில் நிறைய நாசம், மோசம் பொங்கி வழிந்தது.

“சரி விட்டுடேன். எங்களை விட நீ நிறைய வாங்கிவிட்டாய். சந்தோஷம் தானே?”

“சந்தோஷமா? ஆமாம்; மிக்க சந்தோஷம். அவரேஜ் பதினொன்று, யாரோ பதினேழு வாங்கியிருக்கான். நான் ஒரு நாசமாப் போன ஏழு. ஆமாம் நான் ரொம்ப சந்தோஷப்படறேன். ஆமாம் நாசமாப்போன டெர்மினேடர், கழுதை போடா", என்று அலோக் கேலி பேசினான்.

நான் தான் ஏற்கனவே சொன்னேனே, அலோக் அந்த வார்த்தையையே பாழ் பண்ணினான். அவன் நிறுத்தினால் தேவலை என்று சொல்ல வந்தேன். ஆனால் இப்பொழுது வார்த்தை ஜாலத்தைப் பற்றிப் பேசுவதை அவன் விரும்ப மாட்டான் என்றே தோன்றியது.

“என்ன? என்ன சொன்னே?” ரயன் ஸ்பூனைத் தட்டில் எறிந்தான்.

“டெர்மினேடர்னா சொன்னே?”

“ஆமாம். மடத்தனமான திட்டம். உன் மடத்தனமான நாசமாப் போன திட்டம்”, என்றான் அலோக் அழுத்தமாக.

ரயன் உறைந்தான். அவன் அலோக்கை வெறித்தான். ஏதோ அயல் மொழியில் பேசுவது போல் விழித்தான். என்னைப் பார்த்தான்.

“அவன் என்ன சொன்னான்னு கேட்டியா? ஹரி, கேட்டியா? நம்பவே முடியவில்லை.”

என் காது ஜவ்வு கேட்கும் சக்தியை இழந்துவிட்டதா என்ன? நன்றாகவே கேட்டேன். நான் அவன் சாபமிட்டதைத் தவிர வேறு எதுவும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

“ஹரி, நான் தான் குவிஸ்ஸைப் பாழாக்கி விட்டேனா?” என்று ரயன் மெதுவாகக் கேட்டான்.

ரயனையும் அலோக்கையும் மாறி மாறிப் பார்த்தேன். “ரயன் நீ மூணு வாங்கினே. இதுக்கு மேலேயும் நீ மோசம் போனேன்னு நான் என் வாயாலே சொல்லணுமா, என்ன?” நான் அவனைத் திரும்பக் கேள்விக் கேட்டேன். நான் எதற்கு பஞ்சாயத்துப் பண்ண வேண்டும் என்றே புரியவில்லை.

“இல்லை. நான் உங்களைப் படத்துக்கு இழுத்துக் கொண்டு போனதால் உங்களின் மதிப்பெண்களை நாசம் செய்துவிட்டேன் என்கிறான் அலோக். நீயும் அப்படி நினைக்கிறாயா, அல்லது?”

“நான் அப்படிச் சொல்லவில்லை..” அலோக் குறுக்கிட்டான். ரயன் கையமர்த்திப் பேசாதே என்றான்.

இப்பொழுது ரயனின் கேள்வி புரிந்தது. ஆனால் என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. யாராவது ஒருத்தரைத் தான் ஆதரிக்க முடியும். ஆனால் எப்படி?

“இல்லை ஹரி, சொல்லு. உன் சிறந்த நண்பன் இப்படியா குற்றம் சாட்டுவான்?” என்றான் ரயன்.

“அது முக்கியம் இல்லை. நீ ஒண்ணும் கட்டாயப்படுத்தி இழுத்துக் கொண்டு போகவில்லை, அந்தக் குப்பை படத்திற்கு” என்றேன். அறிவியல் கற்பனை படங்களை இனி பார்க்கக்கூடாது என்று எனக்கு நானே கூறிக்கொண்டேன்.

ரயனுக்கு இந்த பதில் திருப்தி அளித்தது. அவனின் நிமிர்ந்த தலையும், உயர்ந்த கையும் தளர்ந்தது. “அது தான் சரி.”

“ஆனால் அலோக் சொல்வதும் சரி தான். கேளிக்கைக்கு அளவு கோல் வேண்டும். ரொம்பவும் விளையாடக் கூடாது. அப்படியானால் திரும்ப வந்து நம்மையே தாக்கும்-இந்த குவிஸ் ஒரு எடுத்துக்காட்டு."

“நன்றி ஸார்”, என்றான் அலோக். “நானும் அதையே தான் சொல்ல வந்தேன்.”

கூல்; இந்த சங்கடத்திலிருந்து எப்படியோ என்னை விடுவித்துக் கொண்டுவிட்டேன். சில சமயம் ஒவ்வொருவரின் விவாதத்தை திரும்பவும் மேற்கோள் காட்டினாலே நாம் நல்லவனாகி விடுகிறோம்.

*Downloaded from Ebookz.in*

# 3

## உலோகத்தின் மீது வெறுங்கால்

குவிஸ் விபத்து எங்களின் உத்வேகத்தை அதிகரித்தது. நாங்கள் என் அறையில் இருந்தோம். ரயனுக்கு அவசரமாக உணவு அல்லது படங்கள் அல்லது அறிவியல் கற்பனையைப் பற்றிப் பேசும் ஆர்வம் தோன்றினாலும் கட்டுபடுத்திக் கொண்டான். அதனால் படிக்கும் நேரத்தில் படித்தோம். எங்கள் மதிப்பெண்கள் வகுப்பு ஆவரேஜைத் தொட்டது. ஆனால் கொஞ்ச காலத்திலேயே அலுப்பு தட்டத்தொடங்கியது. ஒரு இடைவேளை தேவைப்பட்டது. அடிக்கடி படிக்கும் நேரத்தில் ரயன் பூனைத்துக்கம் போட்டான். அல்லது சுவர்களை வெறித்தான். புத்தகத்தைத் திறக்கும் சமயம் சபித்துக் கொண்டேயிருந்தான்.

ஒரு நாள் தான் எழுதிய வீட்டுப் பாடத்தை ஸ்டேபிள் செய்து விட்டு "சரி, இன்றைய அபத்தம் முடிந்தது. நீங்கள் இன்னும் மனப்பாடம் பண்ணப் போறீங்களா?"

"எப்பவுமே ஏன் இதை அபத்தம்னு சொல்றே?" அலோக் குழப்பமாகக் கேட்டான்.

"யோசித்துச் சொல்லேன்," என்றான் ரயன். தன் பாடத்தை, உபயோகப்படுத்திய டிஷ்யூ காகிதத்தைப் போல் மேசை மீது அக்கறையின்றி வீசினான்.

"ஆனால், ஏன்?" என்றான் அலோக். "நீ நிறைய கஷ்டப்பட்டு உழைத்து தானே ஐஐடிக்குள் வந்தே?"

"ஆமாம்; ஆனால், உண்மையில் இந்த இடம் என்னை ஏமாற்றி விட்டது. இது அறிவியலின் உச்சகட்டம் என்று அவர்கள் விளம்பரப்படுத்திக் கொள்ளும் அளவுக்கு ஒன்றும் இல்லை. அப்படித்தானே."

நானும் என் புத்தகத்தை மூடிவிட்டு அந்தப் பேச்சில் கலந்து கொண்டேன். "ஐஐடி பட்டம் வாங்கச் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்று தான் பாஸ் - மனப்பாடம்! நீ, பாடம் பண்ணினால் தேர்வு பெற்று வேலையில் சேர்வாய். என்ன ஏமாற்றத்தைப் பற்றி பேசுகிறாய்?"

"அதுதான் பிரச்சனை. இந்த திட்டம் ஒரு அபத்தம் என்றால், உன்னைப் போன்றவர்களின் மடத்தனம் அதைவிட பெரிது."

நான் ரயனை வெறுக்கிறேன். அவன் தன்னைப் பற்றியே நினைத்து பேசும் பொழுது எங்களை முட்டாளாகக் கருதுவான்.

"தொடர்ந்து மனப்பாடம் செய்வது, தேர்வு, வீட்டுப்பாடம், புது திட்டங்களை சோதிக்க ஏது சமயம்? நாள் முழுவதும் உட்கார்ந்து ஹரியைப் போல் குண்டாவது தான் வேலை."

ரயனுக்கு மனப்பாடம் செய்ய பிடிக்கவில்லையென்றால் நாங்கள் எல்லோரும் குண்டு, முட்டாள். உலகுக்கே கடவுள் கொடுத்த பரிசு அவன் என்ற நினைப்பு. இதில் கொடுமை என்ன என்றால் அது ஓரளவு உண்மையும் கூட.

"என்னிடம் புது திட்டங்கள் இல்லை. நான் அவ்வளவு குண்டும் இல்லை. சரிதானே?" நான் அலோக்கைப் பார்த்தேன். உடனேயே சமாதானமாக இருந்தது - அவ்வளவு குண்டு இல்லை நான்!

"டேய் குண்டா, கண்ணாடியில் பார். ஏதாவது செய்யணும் நீ."

"இது பரம்பரையாக வந்தது. டிவியில் கூட இதைப் பற்றிக் குறும் படம் பார்த்தேன்," என்று ஒரு பலஹீனமான வாதத்தை முன் வைத்தேன்.

"பரம்பரையாவது மண்ணாவது, ஒரு பத்து கிலோ குறைக்க வைக்க முடியும், செய்யட்டுமா?" கைவிரலைச் சொடுக்கினான்.

ரயன் என்ன சொல்ல வருகிறான் என்று புரியவில்லை. நிச்சயம் எனக்கு இதமானதாக இருக்காது என்று மட்டும் புரிந்தது. இன்ஸ்டி பஸ்ஸின் பின்னால் ஓடுவது, ஐம்பது முறை மாடி ஏறுவது, போன்றவற்றைத் தவிர்த்து விட்டால், குண்டும் சுகம் தான். "ரயன், என்னை விடு. உனக்கு டப்பா அடிக்க

வேண்டாமென்றால் கேண்டீன் சென்று பராத்தா சாப்பிடலாமா?"

"தல, இதுதான் உன் பிரச்சனை - எப்பொழுதும் சாப்பாடு, உடற்பயிற்சியே இல்லே. நான் முடிவு பண்ணிவிட்டேன். ஹரி நிச்சயமா உடற்பயிற்சி செய்ய வேண்டும்." ரயன் குதித்தெழுந்தான். "நாளை காலை ஆரம்பிக்கலாம்."

ரயன் எப்பொழுதும் பிறருக்காக முடிவெடுத்தான். அவனின் அழகான தோற்றமா அல்லது செல்லமான அகம்பாவமா, தெரியவில்லை. - ஆனால் யாரையும் எதிர்பார்க்காமல் அவன் வேண்டியதை, அவன் போக்கிலேயே சாதித்துக் கொள்வான்.

"பொறு ரயன், என்ன இது..." என்று ஆரம்பித்தேன்.

"நீயும் தான் வரணும் அலோக். விருப்பமா?"

"போடா பொழப்பத்தவனே!" என்று முணுமுணுத்துவிட்டு அலோக் தன் புத்தகத்தை நாடியது, அணில் தான் ஒளித்து வைத்திருக்கும் கடலைகளைத் தேடுவது போலிருந்தது.

நான் பத்து கிலோ இழப்பதைப் பற்றி யோசித்தேன். என் வாழ்நாள் முழுவதும் என்னை குண்டன் என்று தான் கூப்பிட்டிருக்கிறார்கள். அதனால் குண்டாக இருப்பது என் அடையாளமாகவே மாறிவிட்டது. எனக்கு அது பிடிக்கவில்லை தான். ரயனுக்கு தான் என்ன செய்கிறோம் என்று நன்றாகத் தெரியும். அவனோ செதுக்கிய சிலையாக நின்றான். என்ன இப்போ? முயன்று தான் பார்ப்போமே.

"நான் என்ன செய்ய வேண்டும்?" என்று தோற்றுப்போன பாவனையில் கேட்டேன்.

"அதிகாலை காம்பஸைச் சுற்றி ஓட வேண்டும். ஒரு நான்கு கிலோமீட்டர்..."

"நெனச்சு கூட பார்க்க முடியாது. என்னால் நான்கு கிலோ மீட்டர் நடக்கவே முடியாது முதலில்..." என்று மறுத்தேன்.

"அட சோப்ளாங்கி! முயன்று பார். பிறகு சிறப்பாக உணர்வாய்," என்றான் ரயன்.

உடனேயே செயல்பட்டான் ரயன். மறுநாள் காலை சரியாக ஐந்து மணிக்கு என் கதவை எட்டி உதைத்தான். நான் ரயனை வெறுக்கிறேன். நான் கதவைத் திறந்தேன். நான் டி-ஷர்ட், ஷார்ட்ஸ அணியும் வரை காத்திருந்தான்.

"நான்கு கிலோமீட்டரா?" தூக்கம், துக்கம் இரண்டும் கலந்து நான் தீனமாகக் கேட்டேன்.

"முயற்சி செய்," ரயன் உற்சாகமாகக் கூறினான்.

நான் குமாவோனைவிட்டு வெளியே வந்த பொழுது இன்னமும் இருட்டாகவே இருந்தது. அது எனக்கு சின்ன சந்தோஷத்தைக் கொடுத்தது. ஒரு எண்பது கிலோ உருண்டை உருளுவதை யாரும் பார்க்க மாட்டார்கள். நாலு கிலோ மீட்டர் என்றால் காம்பஸின் அடுத்த பக்கத்திற்குப் போக வேண்டும். விடுதிகள் விளையாட்டு மைதானம், இன்ஸ்டி கட்டிடம், ஆசிரியர்கள் வீடுகள்; ஏமாற்றி, பாதையைச் சுருக்கித் திரும்பலாம்; ஆனாலும் ரயன் சொன்னதை முயன்று தான் பார்ப்போமே என்ற ஒரு சின்ன எண்ணம். அதனால் நான் ஒன்றும் ரயனை வெறுப்பதை நிறுத்தவில்லை.

என் மொத்த உடலும் குறைப்பட்டது. இவ்வளவு தசைகள் உள்ளதா என்ன? ஒரு பத்து நிமிடத்துக்குள்ளேயே எவரெஸ்ட் சிகரத்தை ஏறும் போராட்டம் ஏற்பட்டது. சுவாசிக்க முடியாமல் பதினைந்து நிமிடங்களில் போராடத் தொடங்கினேன். இதயமே நின்று விடுமோ? மூச்சிறைத்தது; திரும்பவும் ஆசுவாசப்படுத்திக் கொண்டு இன்ஸ்டி கட்டிடத்தைத் தாண்டி ஆசிரியர்கள் குடியிருப்பை அடைந்தேன்.

காலை விடிந்தது. புல்வெளிகள் சீராக வெட்டப்பட்டிருந்தன. பங்களாக்கள் அழகாக போஸ் கொடுத்தன. அவற்றில், எங்களை வகுப்பில் கொடுமைப்படுத்துபவர்கள் வசித்தார்கள். பேராசிரியர் ட்யூபேயின் வீட்டைத் தாண்டினேன். இவரை வகுப்பிலிருந்து பிரித்து, வீட்டில் வாழும், டிவி பார்க்கும், மூத்திரமிடும், மேசையில் சாப்பிடும் சாதாரண மனிதராகக் கற்பனை செய்து பார்க்கவே கடினமாக இருந்தது. இதற்குள் என் முகம் வேர்த்து ஈரமாகிவிட்டது. வியர்த்து விறுவிறுத்து சுவாசிக்க முடியாமல் சிவப்பு, ஊதா என்று நிறம் மாறி என் முகம் கொடுமையாக இருந்தது.

பெருஞ்சத்தத்துடன் புஸ் புஸ் என்று மூச்சு இறைத்தது. நிற்க முடியாமல் என் முட்டி மடங்கியது. ஏதோ என்னை இடித்து தள்ளியது. அதனால் தடுமாறி முன்பக்கமாக மயக்க நிலையில் விழப் பார்த்தேன். என் கைகளை விரித்து, எப்படியோ கீழே விழுவதிலிருந்து தடுத்துக் கொண்டேன். அப்படியே திகைத்துப் போய் தெருவில் அமர்ந்தேன். அந்த திகைப்பிலிருந்தும் மூச்சிறைப்பிலிருந்தும் மீண்டு திரும்பிப் பார்த்தேன்.

ஒரு சிகப்பு மாருதி வண்டி தான் குற்றவாளி! நான் மூச்சிறைப்புடேனேயே, கண்களைச் சுருக்கி கார்

கண்ணாடிக்குள் டிரைவர் யார் என்று பார்த்தேன். (நானே செத்துக் கொண்டிருக்கும் பொழுது , என்னை கொல்ல நினைப்பது யார் ?) யோசித்துக் கொண்டே சாதாரணமாக மூச்சுவிட முயற்சித்தேன்.

“ரொம்ப ஸாரி!” ஒரு பெண் குரல்; சின்னவள், என் வயதிருக்கும், தொளதொள டி-ஷர்ட் மற்றும் முட்டியளவு ஷார்ட்ஸ அணிந்திருந்தாள். வீட்டில் வழக்கமாக அணியும் உடைகள் போலிருந்தது. என்னை நோக்கி அச்சுபிச்சு போல் ஓடி வந்தாள். அவள் செருப்பணியாமல் வெறுங்காலுடன் ஓடி வந்ததைப் பார்த்தேன். “மன்னித்துவிடு. உனக்கு ஒண்ணும் இல்லையே?” தன் பறக்கும் முடியைக் காதுக்குப் பின் ஒதுக்கியபடி கரிசனமாகக் கேட்டாள்.

நான் சரியாக இல்லை. அது அவளின் தப்புதான். ஆனால் ஒரு இளம்பெண் பையனைப் பார்த்து உனக்கு ஒண்ணுமில்லையே என்று கேட்டால், அவன் சரியாக இல்லை என்று சொல்லவே முடியாது.

“சரியாகத் தான் இருக்கிறேன்,” என்று என் உள்ளங்கையை மூடித் திறந்தேன்.

“உன்னை எங்காவது இறக்கி விடட்டுமா?” என்று பயத்துடன் கேட்டாள். கை நீட்டி என்னைத் தூக்க முற்பட்டாள்.

என் அருகே வந்துவுடன் கூர்ந்து நோக்கினேன். ஒரு வேளை நான் வெகு காலம் கழித்து ஒரு பெண்ணைப் பார்க்கிறேனோ? எனக்கு என்னவோ அவள் மிக அழகாகத் தெரிந்தாள். ‘நான். இப்பொழுது தான் படுக்கையை - விட்டு. எழுந்தேன்’ என்று அவளின் தோற்றம் என்னை அசர வைத்தது. பெண்கள் மட்டுமே இரவு ஆடையில் கூட அள்ளுவார்கள். உதாரணத்திற்கு அலோக்-தன் கிழிந்த பனியன் மற்றும் பைஜாமாவில் இறக்கும் தருவாயில் இருக்கும் நோயாளி போல் இருப்பான்.

“நான் காலை ஜாக்கிங் வந்தேன்,” என்று கூறிவிட்டு அவள் கையைப் பற்றிக் கொண்டு அவள் உணராத வகையில் எவ்வளவு மெதுவாக எழுந்து கொள்ள முடியுமோ அவ்வளவு முயன்றேன். யாருக்குத் தான் ஒரு அழகான பெண்ணின் கையை விடுவதற்கு மனம் வரும்? ஆனால் எழுந்த பிறகு கையை விடத்தான் வேண்டியிருந்தது.

“ஹே, நான் நேஹா. திரும்பவும் சொல்றேன். ரொம்ப ஸாரி.” நான் சற்றுமுன் பிடித்துக் கொண்டிருந்த அதே கையைக் கொண்டு அவள் திரும்பவும் முடிக்கற்றையை ஒதுக்கிக் கொண்டாள்.

“ஹை, நான் ஹரி; இன்னமும் உயிரோடுதான் இருக்கேன். அதனால் பரவாயில்லை,” என்று இளித்தேன்.

“அது வந்து, நான் வண்டியோட்டப் பழகுகிறேன்’ என்று ‘ட’ என்று ஒட்டியிருந்ததைக்காட்டினாள். இது பரவாயில்லை. வண்டி ஒட்டக் கத்துக் கொள்ளும்பொழுது ஒரு சிலர் மீது இடிப்பது சகஜம் தான். அதுவும் இவ்வளவு அழகான பெண்ணென்றால் எல்லாமே ஒப்புக் கொள்ளலாம்.

உண்மையைச் சொல்லப்போனால் எனக்கு ஒன்றும் அடிபடவில்லை. அவள் ஒரு மணிநேரத்துக்கு இரண்டு கிலோமீட்டர் வேகத்தில் தான் ஓட்டினாள். என் தசைகள் அதிகம் என்பதால் மற்றவர்களை விட அடி தாங்கக்கூடிய உடம்பு தான். இருந்தாலும் இந்தத் தருணத்தை என் வசதிக்கு உபயோகித்துக் கொள்ளப் பார்த்தேன்.

“உன்னை எங்கேயாவது இறக்கி விடட்டுமா? எனக்கு ரொம்ப கஷ்டமாயிருக்கு,” என்று கையைப் பிசைந்தாள்.

“குமாவேனில் இறங்கிக் கொள்ளலாமா என்று சபலமாக இருக்கிறது,” என்றேன்.

“நிச்சயமா, தயவு செய்து ஏறிக் கொள்,” என்று சொல்லி களுக்கென்று சிரித்தாள்,” அதாவது நான் ஓட்டுவதில் நம்பிக்கை இருந்தால்,”

காரில் ஏறிக் கொண்டோம். டிரைவர் ஸீட்டில் ஜாக்கிரதை உணர்வுடன் அமர்ந்தாள். விண்கலம் ஓட்டுபவள் போல் ஆயத்தமானாள். அவளின் செருப்பில்லாத வெறுங்காலை ஆக்ஸிலேட்டரில் வைத்தாள். நான் இன்ஜினியர் என்பதாலா என்று தெரியவில்லை. அது எனக்கு கிளுகிளுப்பைத் தந்தது. பெண்ணின் வெறும் பாதம் உலோகத்தின் மேல் இருந்தது ஸெக்ஸியாகத் தோன்றியது. அவள் விரல் நகங்களில் கருஞ்சிவப்பு சாயம் பூசியிருந்தாள். ஓரிரண்டு விரல்களில் மெட்டி போல வெள்ளியில் அணிந்திருந்தாள். பெண்களுக்கு மட்டுமே புரிந்த விஷயம். இதை ஏன் அணிகிறார்கள் என்று. அவள் கால்களையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் அவள் பேசத் தொடங்கினாள்.

“குமாவோன் விடுதியா? நீ மாணவனா?”

“ஆமாம். முதல் வருடம், மெக்கானிக்கல் இன்ஜினியரிங்.”

"கூல்! எப்படி போய்க்கொண்டிருக்கு. உன் காலேஜ், மற்றும் எல்லாம்? ஜாலியா?”

“அதிகமா ஒண்ணும் இல்லை. எப்பவும் ஓடிக் கொண்டே இருக்கேன் ஏதாவது ஒரு விஷயத்துக்காக.”

“நிறைய படிக்க இருக்கா? என்ன சொல்வீர்கள்? - ஆ டப்பா அடிக்கிறது!”

“ஆமாம், நிறைய இருக்கு. சில நாசமாப் போன பேராசிரியர்கள் ஒரு கொடூரமான மகிழ்ச்சியைப் பெறுகிறார்கள்; மாணவர்களைப் பைத்தியக்காரர்கள் ஆக்குவதில் அலாதி மகிழ்ச்சி..."

“என் அப்பா கூட பேரா தான்,” என்றாள் நேஹா.

“அப்படியா?” என்று ஸீட்டிலிருந்து குதித்தே விட்டேன். நல்ல வேளை, மொத்தமாக பேராசிரியர்களின் போக்கைப் பற்றி நான் முழுவதுமாக விவரிக்கவில்லை. இவள் பேரா. ட்யூபேயின் மகளாக இருக்கக் கூடாதே என்று எண்ணினேன்.

“ஆமாம். நான் ஆசிரியர்கள் குடியிருப்பில் வசிக்கிறேன்,” என்றாள். கார் குடியிருப்பை நெருங்கியது. அதைத் தாண்டி இன்ஸ்டி கட்டிடத்துக்கு வந்தோம்.

“அதுதான் என் அப்பாவின் அலுவலகம்,” என்றாள். ஒரு டஜன் அறைகளைக் கை காட்டினாள்.

“அப்படியா?” என்று மறுபடியும் சொல்லிக் கொண்டே ஏதாவது தப்பு செய்து விட்டேனா என்று சீர் தூக்கிப் பார்த்தேன். ஏதாவது பிரச்சனையில் மாட்டிக் கொண்டு விடுவேனோ? “உன் அப்பாவின் பெயரென்ன?” என்று யதார்த்தமாகக் கேட்பது போல் கேட்டேன்.

“பேரா செரியன். அவரை உனக்குத் தெரியாமல் இருக்கலாம் உன்னுடைய மூன்றாவது வருடத்தில் தான் அவர் நடத்துவார்.”

நான் இல்லையென்று தலையசைத்தேன். நான் பெயர் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் பேரா செரியனைப் பார்த்ததில்லை. எங்கள் முதல் வகுப்பு நினைவு வந்தது. “மெக்கானிக்கல் பிரிவின் தலைமைப் பேராசிரியரா?” என்று ‘மடியாக’ அவள் கால்களைப் பார்க்காமல் வேறு எங்கோ வெறித்தேன்.

என் கவலையை உணர்ந்து அவள் என் கையைத் தட்டிக் கொடுத்துவிட்டு மூன்றாவது கியரைப் போட்டாள். “ஆமாம். அவர்தான். ஆனால் கவலைப்படாதே. அவர்தான் பேரா; நான் இல்லை. அதனால் நிம்மதியாக இரு,” அவள் கொல்லென்று சிரித்தாள். நான் அவள் பாதத்தைப் பார்த்து அசந்து விட்டேன் என்று கண்டு கொண்டாளோ?

நாங்கள் சற்று நேரம் பேசிக் கொண்டேயிருந்தோம். இன்ஸ்டி விடுதி சாலைக்கு வந்து விட்டோம். அவள் தன் காலேஜைப் பற்றிச் சொன்னாள். அவள் ஃபேஷன் டிசைனிங் படிப்பதாகச் சொன்னாள். இதே காம்பஸில் பத்து வருடங்களுக்கு மேல் தங்கியிருப்பதாகவும், அனைத்து பேராசிரியர்களையும் தெரியும் என்றும் சொன்னாள்.

குமாவோன் அருகில் வந்தவுடன் மறுபடியும் மன்னிப்பு கேட்டாள். வேறு ஏதாவது உதவ முடியுமா என்றாள்.

“இல்லை. எல்லாம் நன்றாகத் தான் இருக்கு நிஜமாகவே” என்று அவளுக்கு உறுதி அளித்தேன்.

“சரி ஹரி, நிச்சயமாகதானே? நீ திரும்ப ஓடப்போகும் பொழுது உன்னைப் பார்க்க முடியுமா?”

“அப்படிதான் நினைக்கிறேன்,” ரயனின் அடுத்தகட்ட உடற்பயிற்சி என்னை பயமுறுத்தியது.

“மகிழ்ச்சி; எப்பொழுதாவது உன்னை காம்பஸ் வெளியே உள்ள மான் பூங்காவிற்குக் கூட்டிச் செல்கிறேன். அங்கு நிறைய பேர் ஜாகிங் செய்வார்கள். அங்கே ருசியான, ஸ்நாக்ஸும், டீயும் கிடைக்கும், நான் உனக்கு ட்ரீட் வைக்கிறேன்,” என்றாள்.

என் பிரிவின் தலைமை பொறுப்பில் இருப்பவரின் மகளைச் சந்திப்பது அச்சமாக இருந்தது. ஆனால், அவள் காட்டிய நட்பு, ஏன் அவளே கூட மீற முடியாத ஆளுமையில் இருந்ததால் என்னால் மறுக்க முடியவில்லை.

“இது நல்லா இருக்கே” என்று காரிலிருந்து குதித்து இறங்கினேன். “இலவசமான உணவு எப்பவுமே வரவேற்கப்படும். அடிக்கடி என்னை இடித்து கீழே தள்ளேன்.”

“அவள் புன்னகைத்தாள். கையாட்டிவிட்டு அந்தச் சிறிய சிகப்பு காரில் என் கண் பார்வையிலிருந்து மறைந்தாள். அவளின் உருவம் என் மனதில் பிம்பமாக ஓடிக்கொண்டிருந்தது. நான் குமாவோன் புல் தரைக்கு வந்தேன். ரயன் அங்கே உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தான். நான் காரிலிருந்து இறங்குவதைப் பார்த்து, முழு விளக்கம் வேண்டும் என்றான். அவர்கள் பரபரப்பைக் காட்டினாலும், என்னிடம் அவள் எப்படியிருந்தாள் என்று அனைத்தையும் தெரிந்து கொண்டுவிட்டு, அவளிடமிருந்து விலகியே இரு, அவள் பேராவின் மகள் என்று எச்சரித்தனர்.

ஆனால், அவர்கள் அவளிடம் பேசியதும் இல்லை. அவளைப் பார்த்ததும் இல்லை. நான் அவளை மீண்டும் சந்திக்க மாட்டேனோ என்று ஏங்கிக் கொண்டிருந்தேன். அடுத்த முறை சந்திக்க நேர்ந்தால் திரும்பவும் கண்ணுக்கு விருந்தான அந்த வெறும் பாதங்களைக் கண்குளிர ஸைட்டடிக்க வேண்டும்!

*Downloaded from Ebookz.in*

# 4

## கோடு வரையும் பாடம்

முதல் ஸெமிஸ்டரின் மத்தியில் திடுமென்று ரயனின் ஸ்கூட்டர் வந்து சேர்ந்தது. அவனின் பெற்றோர் ஐரோப்பாவில் எல்லோரும் செய்வது போல் கிறிஸ்துமஸ் பரிசாக டாலர்களில் காசோலை அனுப்பியிருந்தனர். ரயன் கிறுத்துவன் இல்லை; கிறிஸ்துமஸ் பற்றிப் பெரிய அபிப்பிராயமும் இல்லை. காசோலை மகிழ்வித்தது. அதை காசாக்கினான்; அடடா ஸ்கூட்டர் வந்ததே- ஒரு அழகிய நீல வண்ண பளபளப்பான கைனெடிக் ஹோண்டா.

ரயன் அதை குமாவோனுக்குக் கொண்டு வந்தவுடன் மாணவர் கூட்டம் அதைச் சுற்றி நின்று வணங்கியது. ஆனால், நானும், அலோக்கும் தான் அதன் மீது அமர கொடுத்து வைத்திருந்தோம். அது இரண்டு பேருக்காக வடிவமைக்கப்பட்ட வண்டி. ஆனால் ரயன் எங்கள் இருவரையும் ஏற்றிச் சென்றான்; நாங்கள் கேண்டீன், வகுப்பு, படம், 'டெர்மினேடர்' போன்ற அரிதான படம் என்று ரயனின் கைனெட்டிக்கில் பவனி வந்தோம். மொத்த உலகே எங்களைப் பார்த்து பொறாமையில் வெந்தது. ஸ்கூட்டர் பாவம், பாரம்தாங்காமல் தவித்தது.

அதற்குள் வகுப்புகள் மேலும் மோசமாயின. பேராசிரியர்கள் அழுத்தத்தை அதிகரித்தனர். பாடங்களைத் திணித்தனர். மாணவர்களை மேலும் கடினமாக உழைக்க வைத்தனர். அதனால், ஆவரேஜ் அதிகரித்தது. அதைத் தொடுவதே குதிரைக் கொம்பானது. நாங்கள் இன்னமும் கூட்டாகச் சேர்ந்து தான் படித்தோம். இருந்தாலும் கவனம் சிதறாமல் படிப்பது கடினமாக இருந்தது. சில பாடங்களில் ஆவரேஜைத் தொட்டுவிட்டோம். ஆனால், இயற்பியலில் சொதப்பிவிட்டோம்.

ஓரிரவு அலோக்கின் வீட்டிலிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. அவன் அப்பாவுக்கு வலிப்பு வந்துவிட்டதாம். அவரை உடனே மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவேண்டிய கட்டாயம். அலோக்கின் அம்மா தனியாகச் சென்றதே இல்லை. உடனே ஸீன்போட்டு கத்தி ஊரைக் கூட்டி, அவளையே மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டிய அளவுக்கு அவதியுற்றாள்.

ஒரு பெரும் புரளி கிளம்பியிருந்தது. - இயற்பியல் குவிஸ் நடக்குமென்று. ஆனால் அலோக்குக்கு வேறு வழியில்லை ரயன் தன் ஸ்கூட்டரைக் கொடுத்தான். அலோக்குக்கு சுட்டு போட்டாலும் வண்டி ஓட்ட முடியாது. அதனால் ரயனும் செல்ல வேண்டியிருந்தது. நான் தனியாக இருக்க விரும்பவில்லை. நானும் சென்றேன்.

அதுதான் முதன்முறையாக அலோக்கின் வீட்டிற்குச் செல்கிறேன். அவன் ஏழையென்று தான் உங்களிடம் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். ஆனால், உலக வங்கி விளம்பரப்படுத்தும் அளவுக்கு பரம ஏழை என்று தெரியாது. என்ன அடிப்படைத் தேவையோ அந்தப் பொருட்கள் மட்டுமே அந்த வீட்டில் இருந்தன. விளக்கு இருந்தது. ஆனால் அவற்றை மறைக்க லாம்ப்ஷேட் எனப்படும் பொருள் இல்லை. வரவேற்பறை இருந்தது. ஆனால் சோபா இல்லை டிவி இருந்தது. ஆனால் வண்ணத்திரை இல்லை. வரவேற்பறையில் தான். அலோக்கின் அப்பா, டிவியில் தெரியும் ஓரிரு சானல்களைப் பார்த்தபடி படுத்திருப்பார். நாங்கள் அங்கு சென்ற சமயம் கிட்டத்தட்ட மயக்க நிலையில் கிடந்தார். அலோக்கின் அம்மா காத்திருந்தாள். புடவை தலைப்பின் நுனியால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"அலோக், மகனே, நீ இல்லாத சமயம் இங்கே என்னவெல்லாம் நடந்தது பார்த்தாயா?" அவள் சொன்ன சோகமான அழுகுரலின் பரிதாபம் ஹிட்லரையே அழ வைக்கும். அலோக்கின் இந்தக் குறை கூறும் குணம் எங்கிருந்து வந்தது என்று எனக்கு நன்றாகப் புரிந்துவிட்டது. நான் ஒரு ஆட்டோ பிடித்தேன். ரயனும் அலோக்கும் அவன் அப்பாவைத் தூக்கி உள்ளே ஏற்றினார்கள். மருத்துவமனைக்குச்சென்று அவரைச்சேர்த்தோம். அந்தக் கூட்டமான இலவச அரசாங்க மருத்துவமனையில் வேலை செய்த துரதிர்ஷ்ட மருத்துவர் அலோக்கின் அப்பாவைச் சோதித்தார். நாங்கள் அதிகாலை மூன்று மணிக்கு சோர்வாக, அந்த மருத்துவ மணத்தினால் வாந்தியெடுக்கும் நிலையில் குமாவோன் வந்து சேர்ந்தோம்.

அடுத்த நாள் என்ன நடத்திருக்கும் என்று நீங்களே கணித்திருக்கலாம். இயற்பியல் குவிஸ்; அதுதான் நடந்தது. நாங்கள் படுமோசமாகச் செய்தோம். இருபதுக்கு இரண்டு என்று கேவலமான மதிப்பெண்கள்

பெற்றோம். அலோக் பேராசிரியரிடம் மறுமுறை எழுதலாமா என்று மன்றாடிப் பார்த்தான். அவர் அவனை முறைத்ததைப் பார்த்தால் அவன் என்னவோ அவநின் இரண்டு கிட்னிகளையும் தானமாகக் கேட்டது போலிருந்தது.

இயற்பியல் குவிஸ் அலோக்கை உலுக்கிவிட்டது. தற்சமயம் ரயனின் கவனச் சிதறல்களைப் பொருட்படுத்தாமல் சும்மாயிருந்தான் அலோக்.

“பசங்களா, இந்த ஐஐடியே எனக்குப் பிடிக்கவில்லை. ஒன்றும் சரியில்லை,” என்றான் ரயன்.

“ஆரம்பிச்சுட்டாண்டா,” என்று என் கண்களை உருட்டினேன். என் அறையில் இருந்தோம்.

அலோக் ரயனைக் கண்டுகொள்ள மாட்டான் என்று நினைத்தேன். ஆனால், இம்முறை ஒற்றை வார்த்தையில் “ஏன்?” என்றான்.

“ஐஐடியிலிருந்து வெளிவந்த தலைசிறந்த விஞ்ஞானிகள் மற்றும் அறிஞர்களைப் பற்றிக் கூறு?”

“நீ என்ன சொல்ல வர்றே? எவ்வளவோ வியாபாரத்தில் சிறந்து விளங்கும் சி.இ.ஓ.க்கள் இல்லையா? சுய தொழில் செய்பவர்கள் இல்லையா?” நான் கேட்ட கேள்வியே தவறு என்று புரிந்தது. ஏன் என்றால் ரயன் இன்னும் முடிக்கவில்லை.

“இந்தியாவின் தலை சிறந்த காலேஜ்; நம் ஜனத்தொகையின் கோடிகளுக்கு இதுவே டெக்னாலஜியின் முன்னோடி. ஆனால், ஐஐடி ஏதாவது கண்டுபிடித்திருக்கிறதா? அல்லது டெக்னாலஜியில் ஏதாவது சாதித்திருக்கிறதா?

“இன்ஜீனியர்களை உருவாக்குகிறது போதாதா?” என்று அலோக் கோபித்தான். புத்தகத்தைப் பட்டென்று மூடினான்.

அலோக் எங்கள் மீது கண் வைக்கவில்லை என்றால் நாங்கள் அன்று படித்த மாதிரி தான். ஸஸி கடையில் பராத்தா சாப்பிடுவோம். மெஸ்ஸை ஒதுக்குவோம் என்றேன். அனைவரும் ஒப்புக் கொண்டனர்.

ரயன் யோசனையில் ஆழ்ந்தான். “முப்பது வருடங்களுக்கு மேல் ஐஐடி இருக்கு, ஆனால் சில புத்திசாலிகளைப் பன்னாட்டு நிறுவனங்களில் வேலை செய்வதற்குப் பயிற்சி தருகிறது. ஆனால் அமெரிக்காவில் உள்ள எம்ஐடியை ஒப்பிட்டுப் பாருங்கள்.”

“இது அமெரிக்கா இல்லை,” என்றேன். ஸஸி கடையின் பணியாளிடம் மூன்று பராத்தாக்களுக்கு ஆர்டர் கொடுத்தேன்.

“எம்ஐடியில் கோடிக்கணக்கான டாலர்கள் இருக்கு; அவர்கள் கவலையில்லாமல் செலவழிக்கிறார்கள்.”

“யாருக்கு அக்கறை? நான் பட்டம் வாங்கி நல்ல வேலையில் அமர வேண்டும்,” என்றான் அலோக்.

ஸஸி கடை இடிந்து விழும் நிலையில் இருந்தது. ஐஐடி வாசலில் தெருவில் சட்டத்துக்குப் புறம்பாக அமைக்கப்பட்டது. கூடாரமிட்டு, முக்காலிகள் போட்டு நடத்தினார். அதில் கிடைக்கும் சில வஸ்துக்கள் - பராத்தா, எலுமிச்சை ஜூஸ் மற்றும் சிகரெட்டு. இரண்டே ரூபாய்க்கு வெண்ணை பராத்தா நல்ல பேரம் தான். மாணவர்களுக்குத் தோதான விலை. மெஸ்ஸின் மட்டமான உணவைப் பற்றி ஸஸிக்கு தெரியும். அதனால், பல மாணவர்களுக்கு சாப்பாடு அளித்தே நல்ல வியாபாரம் நடத்தினார். எங்களின் மூன்று பராத்தா வந்தது. அதன் மீது ஒரு கை வெண்ணை. அது சூட்டில் உருகும் பொழுது நாவில் எச்சில் ஊறும் வாசம்.

“எப்பொழுதும் பணத்தைப் பற்றிய விஷயம் இல்லை,” என்றான் ரயன். சிகரெட் சாம்பலைத் தட்டியபடி, “ஐஐடியில் விண்வெளி ஆராய்ச்சி செய்ய முடியாதா என்ன? சரி, அதைவிடு; ஏன் மலிவான சில ஆராய்ச்சிகளைச் செய்யலாமே? பணம் என்பது வெறும் சாக்கு. அதில் உபயோகம் இருந்தால் தொழிற்சங்கங்கள் ஆராய்ச்சியில் பண முதலீடு செய்வார்கள். ஐஐடி முயலவில்லை என்பதே குற்றச்சாட்டு.

“பிறகு என்ன தான் பிரச்சனை,” என்றேன் கடுப்பாக. ரயன் வாயை மூடினால் தேவலை என்று கருதினேன். சாப்பாடு வந்துவிட்டது. படிக்க வேண்டாமென்றால் பரவாயில்லை. ஆனால், இப்படிச் சொற்பொழிவாற்றாமல் இருந்தாலே தேவலை. ஜீரணத்தைப் பாதிக்கும்.

“என்னடா? மொத்தமுமே பிரச்சனை என்கிறேன்,” என்று ரயன் அரசியல்வாதி போல் அனைத்தையும் நிந்தித்தான். வேறு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லையா? சகட்டுமேனிக்கு அனைவரையும் திட்டு.

ரயன் நிறுத்தவதாக இல்லை. “மாணவர்களைப் போட்டுத் தாக்குகிறார்கள், இந்த ஒப்பீடு மதிப்பெண்களை வைத்து, நம் வாழ்வின் ரகளையான வருஷங்களை நோகடிக்கிறார்கள். சுயமாகச் சிந்திக்க இடம் கொடுப்பதில்லை. கற்பனைக்கு எங்கே நேரம்? இது சரியல்ல.”

“இதில் என்ன சரி, தவறு? எனக்கு வேலை கிடைக்க உதவுகிறது. அது தேவலை எனக்கு,” என்று அலோக் தோள் குலுக்கினான். பராத்தா சாப்பிடுவதிலிருந்து கவனத்தை சற்றே விலக்கியிருந்தான்.

“எதுகை, மோனையாகப் பேசுகிறாயே?” என்றேன்.

“உன் போக்கே தவறு. அதுதான் பிரச்சனையே. சரி விடு; உனக்கு இதெல்லாம் புரியாது,” என்றான் ரயன்.

நானும் அலோக்கும் அசட்டுத்தனமாக சிரித்தோம். ரயனுக்குக் கோபம் தலைக்கு ஏறியது. ஆனாலும், ரயனை எப்படியாவது நிறுத்தி வைக்க வேண்டும். அல்லது பேச்சை மாற்ற வேண்டும் என்பதே குறிக்கோள். அந்த சோம்பேறி கழுதை எப்படியாவது எல்லாவற்றையும் பாழ்பண்ணிவிடுவான்.

“போங்கடா, போக்கத்தவாகளா,” என்று கையாட்டிவிட்டு தட்டில் இருந்த பாரத்தாவை ஒரு கை பார்த்தான்.

“அதெல்லாம் சரி. சனி, ஞாயிறு என்ன திட்டம்?” என்றேன்.

“ஒன்றும் இல்லை ஏன்?” என்று அலோக் நிமிர்ந்தான்.

“நம்மிடம் தான் இப்பொழுது ஸ்கூட்டர் இருக்கே.”

ரயன் மௌனமாய் இருந்தான்.

“ஹே! பெண்பிள்ளை மாதிரி மூஞ்சியைத் தூக்கி வைத்தக் கொள்ளாதே,” என்று அவன் விலாவில் இடித்தேன்.

ரயன் சிரித்தான்.

“நாம் கன்னாட் பிளேஸுக்குப் போகலாமே?”

“ஏன்?” என்று அலோக் மறுபடியும் கேட்டான்.

“அங்கே மலிவு விலை ‘டாபா’ ஹோட்டல் இருக்கு அங்கு சிறந்த வெண்ணை சிக்கன் கிடைக்கும். பிறகு ஒரு ஹிந்தி படம் பார்க்கலாம். பிறகு பெண்களை நோட்டம் விடலாம்.” ரயனின் கண்களிலேயே காமம் தெரிந்தது.

“எனக்கு சரி,” என்றேன். பெண்கள் என்றவுடன் நேஹா தான் நினைவுக்கு வந்தாள். அவளைச் சந்திக்கும் வாய்ப்பு அமையவில்லை. ஜாகிங் போக வேண்டுமோ?

“அலோக் நீயும் வா. இல்லை நாள் பூரா டப்பா அடிப்பாயா?’

“உம்... ஆட் மெக் வினாத்தாள் இருக்கு... விட்டுத்தள்ளு... சரி நானும் வரேன்.” என்று அலோக் கவிழ்ந்து விட்டான்.

நாங்கள் அந்த வாரக் கடைசியில் கன்னாட் பிளேஸ் சென்றோம். பொழுது சிறப்பாகக் கழிந்தது. படம்-அனைத்து ஹிந்தி படங்கள் போல் தான் இருந்தது. பையன் பெண்ணைச் சந்திக்கிறான். அவன் ஏழை ஆனால் நல்லவன். அப்பா பணக்கார வில்லன். ஆனால், அந்தக் கதாநாயகி புதியவள். கூட்டத்தை மகிழ்விப்பதில் குறியாய் இருந்தாள். மழையில் நனைந்தாள், குட்டை பாவாடையணிந்து டென்னிஸ் விளையாடினாள், டிஸ்கோவுக்கு சம்கி வைத்து தைத்த இரவு உடைகளை அணிந்து சென்றாள். அவளுடைய பொழுதுபோக்கு அனைத்துமே குறைந்த ஆடைகள், அல்லது மெலிதான உடைகள் அணிவதாகவே அமைந்ததால் பார்வையாளர்கள் உள்ளங்களைக் கவர்ந்தாள். பெண்ணின் அப்பா பையனைக் கொல்ல முற்பட்டார். அவன் அவருடைய கவர்ச்சியான பெண்ணை உஷார் செய்யப் பார்த்தான். ஆனால், கதாநாயகனின் காதலும், காமமும் வென்றது. கதாநாயகனுக்கு வீட்டுப் பாடங்கள் முடிக்க வேண்டிய கட்டாயம் இல்லை. கொடூரமான பேராக்கள் அவன் கழுத்தை அமுக்கி வேலை வாங்கவில்லை. இந்த ஹிந்திப் படங்கள் அனைத்தும் குப்பைதான்; எனக்குத் தெரியும். ஆனால், நிஜ வாழ்வின் அவலங்களை அவை மறக்கடிப்பது போல் வேறு எதுவும் செய்ய முடியாது.

படத்துக்குப் பிறகு மதிய உணவு சாப்பிட்டோம். ரயன் கூறியது போல் டாபா ஹோட்டல் சிறப்பாக இருந்தது. அவன் இதுபோன்ற விஷயங்களில் தவறே செய்வதில்லை. அவன் வழக்கம்போல் எல்லோருக்கும் சேர்த்து ஆர்டர் செய்தான். அவன் நிறைய உணவு வஞ்சனையில்லாமல் சொல்வான்- எலும்பில்லாத வெண்ணை சிக்கன், பருப்பு, பராதா, பச்சடி பணத்தால் கெட்டுக் குட்டிச்சுவரான ரயன் விலை உயர்ந்த கோக்கையும் விட்டு வைக்கவில்லை. எந்த மாணவனும் ஹோட்டலில் கோக் சொல்ல மாட்டான். சாப்பாடு உசத்தியாக இருந்தது. அங்கிருந்த கூலர் அடித்த குளிர் காற்றில் இடமும் மனமும் ஜில்லென்றிருந்தது.

பஞ்சத்தில் அடிப்பட்ட குழந்தையைப் போல் தன் ரொட்டியைக் கிழித்துக் கொண்டே அலோக்

அரட்டை அடித்தான். "ரொம்ப பிரமாதம்டா, சிக்கன் ஸுப்பர்."

"டேய் குண்டா, நீ சொல்லு? இன்னிக்கு நல்லா போச்சா?" என்றான் ரயன்.

"ம்ம்ம்," என்றான் அலோக். வாய் முழுவதும் உணவு திணித்திருந்தது ஆமாம் என்று தான் சொல்ல வந்தான்.

"பிறகு, ஏன் உன் வாழ்வை இந்தப் புத்தகங்களோடு மாரடித்து அழித்து கொள்கிறாய்?"

"அட, திரும்பவும் வாதம் வேண்டாம்டா," என்றேன் கவலையாக. இவ்வளவு நேரம் ரசித்துக் கொண்டிருந்த தினம் இந்தக் கோமாளிகள் சண்டையிடுவதைப் பார்த்தால் கடுப்படிக்கும்.

"நாங்கள் வாதிக்கவில்லை," என்றான் ரயன். அவன் குரல் வாதிடவில்லை என்று என்னுடன் வாதிடுவது போல் பட்டது. ஆழ மூச்சிழுததான். "சரி, இதுதான் நான் யோசித்தது".

ஐயோ! எங்களை விட்டு விடேன்.

"டேய்! இது நம் வாழ்வின் வசந்த காலம். நிஜமாகத்தான்; அலோக் மாதிரி ஒருவனுக்கு இது வசந்தகாலம்."

"ஏன்? என்னைத் தனித்து குறிப்பிடுகிறாய்?" அலோக் திகைப்பில் பாத்திரத்தில் இருந்த மிளகாயைக் கடித்தபடி கேட்டான்.

"உன் கண்களில் உள்ள ஜீரண அமிலத்தைக் கொண்டு வருவதால்," என்று பரிகசித்தேன். அவன் அதன் காரத்தில் தும்ம தொடங்கினான்.

"இதற்கு முன்னர் உன் வாழ்வை நினைத்துப்பார்," என்றான் ரயன். "நீ உன் தந்தையை நேசிக்கிறாய் தான். ஆனால் கடந்த இரண்டு வருடங்களாக அவரைப் பார்த்துக் கொள்வதிலும் படிப்பிலும் தான் பொழுதைக் கழித்தாய். காலேஜ் முடிந்தவுடன் திரும்பவும் அவர்களுடன் தங்க நேரிடும், சரிதானே?"

"டில்லியில் வேலை எடுத்துக் கொள்வேன்," என்று அலோக் தலையாட்டினான். இப்பொழுது கொஞ்சம் தீவிரமானான். ஆனால், மனம் வெண்ணை சிக்கனின் ருசியிலேயே தஞ்சம் அடைந்தது.

"அதைத்தான் சொல்கிறேன். திரும்பவும் அதே பொறுப்புகள் வந்து சேரும். நீ சம்பாதிப்பாய் தான்; ஒரு வேலைக்காரனைக்கூட அமர்த்துவாய். இருந்தும் இதுபோல ஜாலியாக இருக்க முடியுமா?"

"நான் என் பெற்றோரை நேசிக்கிறேன். இது வெறும் பொறுப்பு அல்ல," அலோக் சாப்பிடுவதை நிறுத்தினான்.

இது அவனை சாப்பிடுவதை நிறுத்தும் அளவுக்கு பாதித்திருக்க வேண்டும். சாதாரணமாக அந்த குண்டன் சாப்பாட்டை எதற்காகவும் விட்டுக் கொடுக்க மாட்டான்.

"நிச்சயமாக நீ அவங்களை நேசக்கிறே," ரயன் கையாட்டிப் பேசினான். "எனக்கும் அது புரியுது. நான் என் பெற்றோர்களை நேசிக்காவிட்டாலும் புரியுது."

"என்ன?" என்றேன். அவர்கள் வாதத்தில் பங்கேற்க வேண்டாம் என்று எண்ணியிருந்தேன்.

"நான் என் பெற்றோர்களை நேசிக்கவில்லை. இது ஒரு பெரிய விஷயமா?"

அலோக் என்னைப் பார்த்து புருவத்தை உயர்த்தினான். அலோக்கின் அப்பா வெறும் மரக்கட்டையாகக் கிடந்தார். பார்வை மட்டுமே மிச்சம் இருந்தது. அவரையே அலோக் நேசித்தால், இந்த பணத்திமிர் பிடித்தவன் தன் பெற்றோர்களை நேசிப்பதில் என்ன பிரச்சனை? அவர்கள் மிகவும் நல்லவர்கள்; எல்லாம் வழங்குகிறார்கள் - நீல ஸ்கூட்டர், காப் (GAP) எனும் ஆடைகள், ஹோட்டலில் கோக் குடிக்க பணம். அவர்கள் வாழ்நாள் முழுவதும் முதுகொடிய வேலை செய்கிறார்கள். இரண்டு குயவர்களை வைத்து பூந்தொட்டிகளை விற்க ஆரம்பித்தனர். பிறகு இந்தியா முழுவதும் சென்று பெயரெடுத்தனர். இரண்டு வருடங்களுக்கு முன் அயல் நாட்டுக்குச் சென்றனர். அங்கு பெரிதாகச் சம்பாதிக்காவிட்டாலும், பையனைச் சந்தோஷமாக வைக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளில் பணம் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இவன் சீர்கெட்டு, அகம்பாவம் பிடித்து, பார்க்க நன்றாக இருக்கிறான் என்று பெருமை பட்டுக்கொண்டு அவர்களை நேசிக்கவில்லை என்று வேறு கூறுகிறான்!

"நாசமாப் போடா!" என்று சாபமிட்டேன்.

"நீ நாசமாப்போ! நான் சொல்வதை காதில் வாங்குவதே இல்லை," என்றான் ரயன்.

ஆமாம், இப்படி வேறு ஒரு அவதூறு; அவன் சொல்வதற்கெல்லாம் தலையாட்டி பொம்மையாக இருக்கும் பொழுதே!

“ஏன்?” அலோக் திரும்பவும் சாப்பிட ஆரம்பித்தான்.

“ஏன் என்று எனக்குத் தெரியாது. நான் ஆறு வயதிலிருந்தே போர்டிங் பள்ளியில் படிக்கிறேன். முதலில் எல்லா குழந்தைகளைப் போல் நானும் அவர்களைப் பிரிந்த துக்கத்தில் அழுதேன். ஆனால், நன்றாகப் படித்தேன். விளையாட்டிலும் நல்ல பெயர். எப்படி ஜாலியாக இருப்பது என்று உணர்ந்தேன். சிறப்பாக வாழ்க்கையை ஓட்டி நல்ல நண்பர்களையும் அமைத்துக் கொண்டேன். அதனால் எங்கேயோ ஒரு மூலையில் கூட நான் அவர்களை விட்டுப் பிரிந்து கஷ்டப்படவில்லை. அவர்களை விட்டு விலகி வளர்ந்தேன். விடுமுறை நாட்களில் சந்திப்போம். கடிதம், பணம் மற்றும் எல்லாம் அனுப்புவார்கள் ஆனால்...”

“ஆனால்?”

“ஆனால் நான் அவர்களை மிஸ் செய்வதில்லை.”

“அது தப்பு என்று தோணலியா?” அலோக் பல்லைக் குத்திக் கொண்டே கேட்டான்.

“இல்லவே இல்லை. எனக்கு என் நண்பர்கள் தான் எல்லாம். அவர்கள் தான் என் குடும்பம். அம்மா, அப்பா நல்லவர்கள் தான். ஆனால் என் நண்பர்களை நேசிக்கும் அளவு அவர்களை நேசிப்பதில்லை. என்ன சொல்றேன்னா, நான் அவர்களை நேசிக்கவே இல்லை. நண்பர்கள் மீது மட்டுமே அன்பு செலுத்துகிறேன்.”

“அப்போ நீ என்னை விரும்பறியா ரயன், அப்படியா? ஐ லவ் யூ,” அலோக் கீச்சுக் குரலில் உரக்கச் சொன்னான்; அவன் பூர்த்தியாக சாப்பிட்டுவிட்ட திளைப்பில் லேசாக உணர்ந்தான். அதனால், உண்ட களிப்பில் சந்தோஷமாக உறவாடினான்.

“போடா குண்டா! லவ்யூவாம் லவ்யூ!” ரயன் கத்தவே சில பேர் எங்கள் பக்கம் திரும்பினர்.

ரயன் திரும்பவும் அதே பழைய விஷயத்துக்கு வந்தான்.

“நான் என்ன சொல்ல வந்தேன் என்றால், இது நம் வாழ்வின் பொற்காலம். அதனால் டப்பா அடித்து சாகலாம், அல்லது போடா என்று படிப்பை மிரட்டி ஒதுக்கலாம்.”

“எப்படி ஒதுக்குவது?” என்று வினவினேன்.

“அதாவது மொத்தமாக டப்பா அடிப்பதை நிறுத்து என்று சொல்ல வில்லை. ஆனால், நமக்கு நாமே ஒரு எல்லைக்கோட்டை வரைந்து கொள்வோம். ஒரு நாளில் இரண்டு மூன்று மணிநேரம் படிப்பது, பின் விளையாடுவது. நீங்கள் இருவரும் ஸ்குவாஷ் விளையாடியிருக்கிறீர்களா? அல்லது கலை நிகழ்ச்சியில் பங்கேற்றிருக்கிறீர்களா - விவாதம், சொல்விளையாட்டு? எப்படியாவது ஒரு படமும் பார்ப்போம். இன்ஸ்டியில் செய்ய எவ்வளவோ விஷயம் இருக்கு.”

“ஆமாம். ஆனால் மிகச் சிலர் தான் அவற்றில் ஈடுபடுவாரகள். அவர்களின் மதிப்பெண்கள், ஜீபிஏ (GPA) மிகவும் மோசம்,” என்றான் அலோக்.

“நான் டப்பா அடிப்பதை நிறுத்து என்றா சொன்னேன்? கோடு கிழித்து வேலை செய். ஒருநாள் முழுவதும் வகுப்பறையில் கழிக்கிறோம். பிறகு மூன்று மணிநேரம் டப்பா அடிப்போம். அதன் பிறகு, இருக்கும் பொழுது நம்முடையது. ஒரு ஸெமஸ்டருக்கு செயல்படுத்திப் பார்ப்போம். இது நியாயம் தானே? படிப்பை அவர்கள் கையிலிருந்து, நாம் நம் கையில் எடுத்துக் கொள்கிறோம்.”

அலோக்கும் நானும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம். ரயன் சொல்வதிலும் ஒரு செய்தி உள்ளது. காலேஜில் ஸ்குவாஷ் விளையாடவில்லை என்றால் வாழ்விலேயே விளையாட மாட்டேனோ என்னவோ? சொல் விளையாட்டான ஸ்கிராபிளில் பங்கேற்கவில்லையென்றால் வேலையில் சேர்ந்த பிறகு எங்கே நேரம் இருக்கும்?

“நான் முயற்சிக்கிறேன்,” ரயன் சொல்வதை ஆமோதிப்பதற்காகவே சொன்னேன். இல்லையென்றால் நிறுத்தாமல் பேசுவான். “மூன்று மணி நேரம் போதாது,” என்றான் அலோக் சந்தேகமாக.

“சரி, நம் ஸூப்பர் டப்பா ராஜாவுக்காக மூன்றரை மணி நேரம் ஒதுக்குவோம். ஓகேவா?” என்றான் ரயன்.

அலோக் ஒத்து கொண்டான். ஆனால், அவன் தீனக்குரல் அவன் உள்ளே சென்ற சிக்கன் பேசியதோ என்று அஞ்ச வைத்தது.

ரயனின் சந்தோஷம் உச்சக்கட்டத்தை எட்டியது. அவன் குமாவோனுக்கு எங்களை ஓட்டிச் சென்ற வேகம் வழியில் நின்ற போலீஸின் தலையைச் சுற்ற வைத்தது. யாரும் எங்களை நிறுத்தவில்லை. நாங்களும் நிற்காமல் சென்றோம். நான் என் காலால் வண்டியின் எண்ணை மறைத்துக் கொண்டேன். பார்த்தாலும் போலீஸார் எண்ணை எழுதிக் கொள்ளக்கூடாதே என்ற முன் ஜாக்கிரதை. இது நாங்கள் கோடு வரையும் திட்டத்தை ஒப்புக் கொண்டதற்கான கொண்டாட்ட தினம்.

ஒருநாள் காம்பஸ் புத்தகக்கடையில் நேஹாவை எதேச்சையாக சந்தித்தேன். அன்று அவள் என்னை வண்டியிடித்து கொல்ல முற்பட்ட பிறகு அவளைச் சந்திக்கவேயில்லை. யார் மீதும் தவறில்லை தான். அந்த ஜாக்கிங் திட்டமே மிகவும் கண்டறாவியான ஒன்று. நேஹாவை பார்க்கும் ஆவல் கூட என்னை அதிகாலை விழிக்க வைக்க முடியவில்லை. ஒரு முறை சிரமப்பட்டு முயற்சித்தேன். தாமதமாகிவிட்டதால் அவள் காரைப் பார்க்க முடியவில்லை. அதற்கு பின், என் உத்வேகம் நொடிந்தது. ரயனும் என்னை எழுப்பும் முயற்சியைக் கைவிட்டான். அவனுக்கு அதைத் தவிர வேறு வழியில்லை. இல்லையேல் கோடு - வரைந்த-பாட-திட்டத்திலிருந்து விலகிவிடுவதாக மிரட்டி வைத்திருந்தேன். என்ன சொல்ல வருகிறேன் என்றால், இதனால் நேஹாவைப் பார்த்து எனக்கு ஒரு இதமான திகைப்பு.

“ஹை!” என்று என் கையை உயர்த்தி அவள் கவனத்தை ஈர்த்தேன்.

அவள் என்னைப் பார்த்தாள், முகபாவத்தில் ஒரு மாற்றமும் இல்லை. என்னைக் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. அவள் வாங்கிய நோட்டு புத்தகங்களின் பக்கங்களை புரட்டினாள். இது நகரம். நான் ஒரு பொது இடத்தில் இருக்கிறேன். ஒரு பெண்ணிடம் ‘ஹை’ சொன்னேன். முகம் முழுவதும் சந்தோஷப் புன்னகை. அவள் என்னைப் பார்த்து “உனக்கு என்னைத் தெரியுமா? நாம் அறிமுகமானவர்களா” என்பது போல் பார்க்கிறாள்.

கடைக்காரர் என்னைப் பார்த்தார்; சில வாடிக்கையாளர்கள் பார்வையும் என் மீது படிந்தது. நான் ஒரு புழுவைப் போல் உணர்ந்தேன். இன்னொரு முறை முயற்சித்தேன். ஒரு சில வாரங்களுக்கு முன் பரிதாபத்தை என் மீது பொழிந்தவள், சிநேகமாக இருந்தவள்; ஒரு வேளை அடையாளம் தெரியவில்லையோ?

“நேஹா, நான்தான்! காலையில் நடந்த கார் விபத்து நினைவு இருக்கா?” என்று கேட்டேன்.

“மன்னித்துவிடுங்கள், நீங்கள் யார்?” என்று முறைத்து விட்டு வெளியேறினாள்.

இம்முறை கடைக்காரர் என்னைக் காமக்கொடுரன் போலப் பார்த்தார். அந்தப் பெண் வண்டியை என் மேல் இடித்து, வேலை மெனக்கெட்டு விடுதியில் இறக்கி விட்டாள். சே! ஓவென்று கத்த வேண்டும் போலிருந்தது. மாறாக பென்ஸிலும், பேப்பரும் வாங்கினேன். சரிப்பா; நான் வசீகரமானவன் இல்லைதான்; அதுவே போதுமான காரணம், பொது இடங்களில் அடையாளம் கண்டு கொள்ளாமல் இருக்க; ஏன் என்றால் அசிங்கமான பேர்களுடன் நட்பு பாராட்டினால் மற்றவர்கள் அசிங்கம் என்று ஒதுக்குவார்கள். பள்ளியிலும் நான் ஒரு தோத்தாங்குளிதான். இது ஒன்றும் புது விஷயம் இல்லை; ஆச்சரியமும் இல்லை. என்ன ஒன்றே ஒன்று; நேஹா இது போன்ற பெண் இல்லை என்று நினைத்திருந்தேன்.

அந்தக்கடையிலில் இருந்து எவ்வளவு சீக்கிரம் வெளியேற முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் வெளியேறினேன். அவமானத்திலிருந்து ஓடி ஒளிய பார்த்தேன். எனக்கே என்னைப் பார்த்தால் மட்டமாகத் தோன்றியது. அவள் ஒரு சின்ன “ஹை"யாவது சொல்லலாம். நான் குண்டுதான். நானே ஒரு பெண்ணாக இருந்தால் நான் என்னுடன் பேச மாட்டேனோ என்னவோ? ஒரு குறுகலான பாதையில் நடந்து கொண்டிருந்தேன். அது அந்த புத்தக்கடையையும் விடுதியையும் இணைக்கும் பாதை. யாரோ என் தோளைத் தட்டினார்கள். திரும்பிப் பார்த்தால் யார் என்று கண்டுபிடிக்க முடிகிறதா?

“ஹை!” என்றாள் நேஹா.

கண் காணாமல் போ என்று சொல்ல வேண்டும் என்று தோன்றியது. அவளைத் திரும்பப் பார்த்தேன். ஐயோ! கொல்லும் அழகு! அவள் வலது கன்னத்தில் ஒரு அழகான குழி. சிரிக்கும் பொழுதெல்லாம் தோன்றி மறையும். இப்போ ஓடிப்போ என்று அந்தக் குழியைப் பார்த்து சொல்லுங்கள் பார்க்கலாம்!

“ஹை நேஹா! அது தானே உங்கள் பெயர்?” இம்முறை மெதுவாக, ஜாக்கிரதையாகச் சொன்னேன்.

“ஆமாம் ஹே ரொம்ப ரொம்ப ரொம்ப ஸாரி. அங்கே உனக்குச் சரியான பதில் சொல்ல முடியவில்லை. அதற்கு காரணம் இருக்கு.” என்று விளக்கினாள்.

எப்பப்பார் இந்தப் பெண்களே இப்படித்தான். ஒரு வார்த்தையை பலமுறை சொல்லிவிட்டால் இது ரொம்ப தெளிவான விஷயமாகிவிடும் என்று நினைக்கிறார்கள்; அந்த மூன்று ‘ரொம்ப’ சேர்ந்தால் அது மன்னிப்பை பயனுள்ளதாக்கி விட்டதான பிரமை.

“என்ன காரணம்?” என்றேன்.

“அது வந்து, என்னன்னா... சரி, அதை விட்டுவிடு.”

“மாட்டேன். என்னன்னு சொல்லு?” என்று உறுதியாகச் சொன்னேன்.

“அந்தக் கடைக்காரருக்கு என்னையும் என் அப்பாவையும் சுமார் பத்து வருடங்களாகப் பழக்கம் அவரும் அப்பாவும் அடிக்கடி பேசிக் கொள்வார்கள்.”

“சரி, அதனால்?”

“என் அப்பா நான் பசங்களுடன் பேசக்கூடாது என்பதில் மிகவும் கட்டுப்பாடாக இருப்பார். மீறி ஒரு பையனுடன் பேசி விட்டால் பைத்தியமாகிவிடுவார். நான் ஒரு மாணவனுடன் நட்பாக இருக்கேன் என்று கேள்விப்பட்டாலும் வேறு வினையே வேண்டாம்.”

“அப்படியா? வெறும் வணக்கம் சொன்னாலேவா?”

“அவர் அப்படித்தான். அதுவும் காம்பஸ் புரளியை எல்லோரும் ஊதி, ஊதி பெரிதாக்கிவிடுவார்கள். தயவு செய்து புரிந்து கொள், ஸாரி.”

அவள் சொல்வது கேனத்தனமாக இருந்தது. ஆனாலும் லேசாகப் புரிந்த மாதிரி இருந்தது. சில பெண்களின் அப்பாக்கள் ரொம்ப தொட்டாச்சுருங்கிகள்; அதுவும் காம்பஸில் ஆயிரம் பையன்கள், அவர்களின் ‘ஜொள்ளு’; ஆமாம் கவலைக்குரிய விஷயமாகத் தான் பட்டது.

“அப்போ, உன்னைச் சந்திக்கவே முடியாது தானே?”

“சந்திக்கலாம். காமபஸுக்குள் முடியாது.”

“நாம் இங்கே தானே தங்கியிருக்கிறோம்!”

“ஆமாம். ஆனால் இதைத் தாண்டியும் வெளியே ஒரு உலகம் இருக்கு. ஹவுஸ் காஸ் சந்தைக்குப் போகலாம். உனக்கு ஐஸ்கிரீம் பிடிக்குமா?”

அழகான பெண்களுக்கு இல்லை என்று பதில் சொல்வது கடினம். ஐஸ்கிரீமுக்கும் தான். ஆனால் இரண்டும் சேர்ந்து கிடைத்தால் மறுப்பது முடியாத காரியம். நான் சரி என்றேன். அவள் காம்பஸ் கேட்டை விட்டு வெளியே நடந்து இரண்டு தெரு கேட்டை விட்டு வெளியே நடந்து இரண்டு தெரு தள்ளியுள்ள ஐஸ்கிரீம் பார்லருக்கு வழி காட்டினாள்.

அவளும் அங்கு வந்து சேர்வதாகவும், என்னை முதலில் வேகமாக நடக்கும்படியும் பணித்தாள். அவள் ஆடி அசைந்து என் பின்னால் நடந்தாள்.

இப்படித் தனியாக நடப்பது விந்தையாக இருந்தது. அவள் வரவில்லையென்றால் பார்லரில் தனித்து விடப் படுவேன் என்று தோன்றியது. ஐஸ்கிரீமாவது சாப்பிட்டு வைப்போம்.

உணவு, பெண்கள் அளவு மேன்மையானது தானே!

ஆனால் நேஹா வந்து விட்டாள். அந்த காட்பரீஸ் ஐஸ்கிரீம் பார்லரில் அவள் வேறு மனுஷியாக மாறிவிட்டாள்.

“மிஸ்டர் ஜாகர், அன்றைக்குப் பிறகு நீங்கள் அதிகம் கண்ணில் படவில்லையே. நான் பயமுறுத்தி விட்டேனா? அவள் இளித்தாள். பெண்கள் அடிக்கடி அப்படிச் செய்வார்கள். பாதி பேசி விட்டு, பாதி கூட நகைச்சுவையாக இருக்காது; தனக்குத்தானே சிரித்துக் கொள்வார்கள்.”

“இல்லை காலையில் எழுந்து கொள்வது மிகவும் கஷ்டமாக இருக்கு.”

“உன்னைப் பார்க்க விரும்பினேன்,” என்று ஒத்துக் கொண்டாள்.

“ஆமாம். புத்தகக்கடையில் உன் விருப்பம் தெளிவாகத் தெரிந்தது.”

“நான்தான் ஸாரி கேட்டுவிட்டேனே ஸாரி,” என்று சொல்லி என் கையைப் பிடித்தாள், அன்று பிடித்தது போல், எனக்கு அந்த தொடுதல் பிடித்திருந்தது. எந்தப் பையனுக்குத் தான் பிடிக்காது? ஒரு அழகானப் பெண் ஸாரி கேட்டுக் கொண்டே கையைப் பிடித்தால்; ஐஸ்கிரீமை விட ஜிலீரென்றிந்த்து.

டெல்லியில் இரண்டுவிதமான அழகுப் பெண்கள் இருக்கிறார்கள். நவீனப் பெண்கள், முடியைக் கத்தரித்துக்கொண்டு, ஜீன்ஸோ, ஸ்கர்ட்டோ அணிந்து கொண்டு, காதில் சிறிய காதணிகள் அணிந்திருப்பார்கள். சம்பிரதாயமான பெண்கள் ஸல்வார் -கமீஜ் அணிந்திருப்பார்கள். வண்ண வண்ண பொருட்டுகள், பெரிய காதணிகள்; நேஹா இரண்டாவது வகைப் பெண். அவள் வெளிர் நீல சிக்கன் ஸல்வார் -கமீஜை அணிந்திருந்தாள். அதற்குப் பொருத்தமான காதணிகள் வேறு. ஆனால் பழமைவாதியான, குண்டுப் பெண்கள் வேறு வழியில்லாமல் அணியும் இந்திய உடையல்ல அது; நேஹா நேர்த்தியாக இருந்தாள். என்னைவிட ரொம்ப அழகு. வேறு உலகில் இருப்பவள் போலிருந்தாள். நீளமான, பழுப்பு நிறக் கூந்தல் பின்னாமல், கட்டாமல் லூஸாக விட்டிருந்தாள். ஒரு கற்றை நெற்றியில் புரண்டு கொண்டே இருந்தது. அவள் முகம் வட்டமாக இருந்தது. அவள் குண்டாக இல்லை. அழகான வடிவம். என் ஸ்டிராபெரி

ஐஸ்கிரீம் உருகிக் கொண்டிருந்தது. நான் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"நண்பர்கள்?"

"ஆமாம்னு தான் நினைக்கிறேன். நீ என்னை அங்கு கண்டு கொள்ளாமல் இருந்த பொழுது நான் இப்படி இருப்பதால் தான் என்று நினைத்துக் கொண்டேன்.

"எப்படி இருக்கே?"

"சரி விடு, போகட்டும்", என்றேன்.

எங்களின் விபரீத படிப்புத் திட்டத்தைப் பற்றி அவளிடம் பகிர்ந்து கொண்டேன்.

"மூன்று மணி நேரம் தானா? ரொம்பத் தான் தைரியம். உங்கள் பேராசிரியர்களின் பாடத்தின் மீதான தீவிரத்தைக் குறைத்து இடை போட்டு விட்டீர்கள்", என்று சொல்லி கப்பில் ஒட்டிக் கொண்டிருந்ததைச் சுரண்டி நக்கினாள்.

நான் தோளை குலுக்கினேன். "சரி; உன்னைப் பற்றிச் சொல்வேன். வண்டி ஓட்டக் கற்றுக் கொண்டு விட்டாயா?"

"ஆமாம். லைஸென்ஸ் கூட வாங்கி விட்டேன்", என்று கூவினாள். பையைத் திறந்து காண்பிக்க முயன்றான். அவள் பையைத் திறந்ததும் ஒரு கோடி சாமான் வெளியே வந்தது; உதட்டுச் சாயம், வெடிக்காமல் இருக்க உதட்டு களிம்பு, கிரீம்கள், பொட்டுகள், காதணிகள், பேனாக்கள், கண்ணாடிகள், ஈர டிஷ்யூக்கள் மற்றும் நிறைய வஸ்துக்கள்-அவை இல்லாமல் எளிதாக வாழலாம். கடைசியில் அதைக் கண்டெடுத்தாள்.

"செம்ம. நேஹா ஸமீர் செரியன், பெண், 18 வயது", என்று அவள் பெயரைச் சத்தமாகப் படித்தேன்.

"ஹே! நிறுத்து. பெண்களின் வயதையெல்லாம் நீ பார்க்கக் கூடாது."

"அது அறுபது-வயது பெண்களுக்குத் தான் பொருந்தம். நீ இளைஞி." அவளின் லைஸென்ஸை திருப்பிக் கொடுத்தேன்.

"இருந்தாலும் மரியாதை தெரிந்த ஆண்மகன்களை எனக்கு மிகவும் பிடிக்கும்", என்று சொல்லி அவளின் கோடி வஸ்துக்களைத் திரும்பவும் பையில் வைத்தாள்.

அதற்கு ஏதும் விசேஷ பொருள் உண்டா என்று தெரியவில்லை. அதாவது, அவளுக்கு எப்படிப்பட்ட ஆண்களைப் பிடிக்கும் என்று உணர்த்துகிறளா? இல்லை என்னைப் பிடிக்குமா? யாருக்குத் தெரியும்? மேன்ப்ரோ குவிஸில் கூட அதிக மதிப்பெண்கள் வாங்கி முதலிடத்தைப் பிடித்துவிடலாம்; பெண்களின் மனதைப் புரிந்து கொள்வதில் நிறைய சிரமங்கள் உள்ளன.

"ஸமீர், இது ஒரு ஆணின் பெயரா?"

"அது என் அண்ணனின் பெயர். இந்த லைஸெனஸ் வாங்கும் பொழுது அதையும் சேர்த்துக் கொண்டேன்."

"ஓ, அப்படியா? உன் அண்ணன் என்ன செய்கிறான்?"

"ஒன்றும் இல்லை. இறந்து விட்டான்", என்று தோள் குலுக்கினாள். இதை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவளின் ஆண்பிள்ளைத் தனமான பெயரை கேலி செய்யலாம் என்று தான் நினைத்தேன். ஆனால் இது விபரீதத்தில் கொண்டு விட்டு விட்டது. 'ஓ!' என்று மையமாக சொன்னேன்.

"பரவாயில்லை. அவன் இறந்து ஒரு வருடம் ஆகிறது. எங்களுக்குள் இரண்டு வித்தியாசம் தான். அதனால் நாங்கள் மிகவும் நெருக்கமாக இருந்தோம்."

நான் தலையை ஆட்டினேன். அவளின் அழகு முகத்தைச் சோகம் கவ்வியது. ஏதாவது கோமாளித்தனமாகச் செய்து பேச்சை மாற்றலாமா? என்று ஆதங்கப்பட்டேன்.

"எப்படி இறந்தான்?" என்று கேட்டேன். அது தான் மரியாதையான கேள்வியாகப் பட்டது.

"ஒரு கொடுமையான விபத்து. அவன் ரயில் பாதையைக் கடக்கும்போது ரயில் மோதி இறந்து விட்டான்."

இதைச் சாக்கிட்டு அவள் கையைப் பிடிக்கலாமா? அவள் சில நிமிடங்களுக்கு முன் என் கையைத் தொட்டாளே. நான் அவ்வளவு மேம்போக்கான ஆசாமிதான். அவள் சோகத்தில் ஆழ்ந்திருக்கிறாள்; நான் என்னடா வென்றால் என்ன சாக்கை வைத்து அவளைத் தொட்டுப் பார்க்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தேன். நான் மெதுவாக அவளின் கைப்பக்கம் என் கையை நகர்த்தினேன். அதற்குள் என்னை

வியப்பில் ஆழ்த்தி பேசத் தொடங்கினாள். “வாழ்க்கை அதன் போக்கில் ஓடிக் கொண்டிருக்கு. என் ஒரே சகோதரன், அதனால் மனதிற்குக் கஷ்டம். ஆனாலும் வாழ்க்கை நகர்ந்து கொண்டே தானிருக்கு", என்ற என்னிடம் சொல்வதைப் போல் தனக்குத் தானே உரக்கச் சொல்லிக் கொண்டாள்.

நான் என் கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டேன். இது நல்ல தருணமல்ல என்று நினைத்தேன்.

“ஐஸ்கிரீம்? வா இரண்டாவது சுற்று அடிக்கலாம்”, என்று பளிச்சென்ற பேச்சை மாற்றி கவுண்டருக்குச் சென்றாள். எனக்காக காத்திருக்கவில்லை. இரண்டு பெரிய ‘சண்டே’ ஐஸ்கிரீம்களை கையில் ஏந்தியபடி சிரித்துக் கொண்டே வந்தாள்.

“அவன் ரயில் விபத்தில் இறந்தானா? டெல்லியிலா?”

“ஆமாம். அப்படி நடக்க முடியாது என்கிறாயா?” என்று மிரட்டலாகக் கேட்டாள்.

“இல்ல இல்லை”

“சரி விடு. உங்கள் விடுதியைப் பற்றிய ஜாலியான கதைகளைச் சொல்லு.”

ரயனின் ஸ்கூட்டரைப் பற்றிச் சொன்னேன். அதில் அதிவேகமாகப் பறப்பதைப் பற்றிப் குறிப்பிட்டேன். பெரிய ஆர்வமான விஷயமாக இல்லாவிட்டாலும் அது பேச்சை மாற்ற உதவியது. பொழுது சாயும் வரை பல விஷயங்களைப் பற்றிப் பேசினோம். திடீரென்று நேஹாவின் உள்ளே மணியடிக்கத் தொடங்கியது.

“நான் கிளம்ப வேண்டும்”, என்று குதித்தெழுந்தாள்.” திரும்பவும் நடக்கலாமா?”

“சரி. தனித் தனியாகத் தானே?” எனக்குப் புரிய ஆரம்பித்திருந்தது.

“ஆமாம். ஸாரி.” பெண்கள் ஒரு குழந்தை குரலில் திடீரென்று கெஞ்சலாகவும், கொஞ்சலாகவும் பேசுவார்கள். நானும் கிளம்புவதற்காக எழுந்தேன்.

“பிறகு, ஹரி?”

“பிறகு, என்ன?”

“என்னை வெளியே கூப்பிட மாட்டாயா?”

நான் வியந்தேன். மிரட்சியடைந்தேன். அதாவது, எனக்கு கூப்பிட ஆசை தான்; ஆனால் அவள் கண்டிப்பாக அழைப்பை மறுப்பாள் என்று பயந்ததால் ராத்திரி பூராவும் தூக்கம் கெட்டு இதைப் பற்றி வருத்தப்படுவானேன் என்ற விட்டு விட்டேன். எனக்கு ஐஸ்கிரீமே திருப்தி அளித்து விட்டது. ஆனால் இந்தக் கேள்வி அதைவிட அட்டகாசமானது. இப்பொழுது எனக்கு வேறு வழியும் இல்லை.

“ஹஹ்? நிச்சயமா. நேஹா, உனக்கு என்னுடன் வெளியே வர விருப்பமா?”

எனக்கு பாதுகாப்பை அளித்துவிட்டாள், இந்தக் கேள்வியை கேட்பதற்கு; இருந்தும் முதல் முறை ஒரு பெண்ணை வெளியே ‘டேட்’ போன்ற சமாசாரத்துக்கு அழைப்பது மிகவும் கடினம்.

“வைவாவில்” கேள்வி கேட்டு படுத்தும் கொடுமையைப் போன்றது.

“நிச்சயம் வருவேன். இதே கடையில் அடுத்த ஞாயிறு இதே நேரம் சந்திக்கலாம்.”

நான் சரியென்றேன்.

“அடுத்த முறை இவ்வளவு வெட்கப்படாதே ஐஐடி பையா; தைரியமாய் கேளு.”

நான் புன்னகைத்தேன்.

“எதற்காக காத்திருக்கிறாய்? கிளம்பு.”

மரியாதையாக, அவளுக்கு ஐந்த நிமிடம் முன்னர் நான் அவளைப் பற்றிய சுகமான எண்ணங்களை அசை போட்டபடியே விடுதிக்கு ஊர்ந்தேன்.

*Downloaded from Ebookz.in*

# 5

## குறிப்பெடு, போரிடாதே

அமெரிக்கா, ஈராக்குடன் போரிட்டது. ஆனால் அதற்கு முதல் பலி எங்களின் மேஜர் பாடங்களும் ஸெம்ஸ்டர் முடிவில் நடந்த தேர்வுகளும் தான். எங்கள் காம்பஸிலிருந்து பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் ஒரு கொடுங்கோலன் பக்கத்திலிருந்து சிறு துண்டு போன்ற நாட்டைத் தன் நாட்டுடன் இணைத்தான். அதை ஆண்டவன் மற்றொரு கொடுங்கோலன். இதில் ஒரே ஒரு சிறிய விஷயம். இரண்டு நாடுகளிலுமே எண்ணை வளம் கட்டுக்கடங்காமல் பொங்கி வழிந்தது. இதனால் மொத்த உலகமே அவர்களின் அக்கிரமததை வேடிக்கைப் பார்த்தது. உலகின் வல்லரசு அந்த கொடுங்கோலனை விலகிக் கொள்ளச் சொல்லி ஆனண பிறப்பித்தது. பெரிய கொடுங்கோலன் மறுத்தான். சீக்கிரமே அவன் மீது தாக்குதல் நடக்கும் என்று புரிந்துவிட்டது.

இதனால் ஐஐடியில் உள்ள நாங்கள் மூவர் எப்படி பாதிக்கப்படுவோம் என்று நீங்கள் நினைக்கலாம். இது ரயனின் அசட்டு அறிவியல்-கற்பனைப் படமாக இருந்தால், நாங்கள் மூவரும் ஏதோ ஒரு சதியில் ஈடுபட்டு, ஐஐடி ஆய்வுக் கூடத்தைப் பயன்படுத்தி அமெரிக்க உளவுத் துறையான ஸிஐஏ(CIA)க்கு உயர்தர ஆயுதங்களைத் தயாரித்துக் கொடுத்திருப்போம். ஆனால் இது அப்படிப்பட்ட படம் இல்லை. நாங்கள் மூவரும் அதிர்ஷ்ட வசமாக மேன்ப்ரோ 'வெல்டிங்' பாடத்தை சரியான கெடு நேரத்திற்குள் முடித்துவிட்டாலே சந்தோஷப்படுவோம். நாங்கள் எங்கிருந்து உயர்தர போர் ஆயுதங்களைத் தயாரிப்பது?

இல்லை, கல்ஃப் போர் எங்களின் நேரிடையான ஈடுபாட்டை எதிர்பார்த்துக் காத்திருக்கவில்லை. ஆனால் அது ஒரு பெரும் அதிர்வை ஏற்படுத்தி எங்களின் முதல் ஸெமஸ்டர் மேஜர்களை கபளீகரம் செய்தது. எங்களின் ஆண்மையையும் போட்டி மனப்பான்மையையும் துண்டுவதாக அமைந்த்து.

அதற்கு முன் எங்களின் கோடு-வரையும் திட்டத்தின் சிறப்பு தினங்கள் எப்படிச் சுருங்கின என்பதைப் பற்றிச் சொல்ல வேண்டும். திட்டப்படி சரியாக மூன்று மணி நேரம் தினமும் படித்தோம். முக்கால்வாசி நேரம் இரவில் வெகு நேரம் படிப்போம். அதனால் மாலைகள், எங்களுக்கு கேளிக்கை நேரமாக அமைந்தன.

"இது தான் உலகில் கண்டுபிடிக்கப்பட்டதிலேயே சிறந்த விளையாட்டு", என்று ரயன் புகழ்ந்தபடியே ஸ்குவாஷ் கோர்ட்டுக்குக் கூட்டிச் சென்றான். நானும், அலோக்கும் அதற்கு சிறிது அருகில் கூட வந்தவர்கள் இல்லை என்று பட்டவர்தனமாகத் தெரிந்தது.

"இந்த விளையாட்டு உங்கள் மனதை லேசாக்கி, கொழுப்பை எரிக்கும்." ரயன், பள்ளியில் ஸ்குவாஷ் காப்டனாக இருந்திருக்கிறான். பயிற்சிக்காக கொஞ்சம் பந்தை அடித்தான்.

நீங்கள் சாம்பியனாக இல்லாவிட்டால் இந்த விளையாட்டின் சிரமம் புரியும். அந்த ரப்பர் பந்து குதிப்பதைப் பார்த்தால் ஏதோ தவளை குதிப்பதை போல் வேகமாக இருந்தது. நாங்கள் அங்கும் இங்கும் அல்லாடி "ராக்கெட்" (Racket) எனும் மட்டையால் அதை அடிக்க வேண்டும். ரயன் பல வருடங்கள் விளையாடியிருக்கிறான். எனக்கும், அலோக்குக்கும் பழக்கமே இல்லை. படு மோசமாக விளையாடினோம். ஐந்து முறை விளையாடியும் மட்டையால் பந்தை அடிக்கவே முடியவில்லை. ஏன், தொடக்கூட முடியவில்லை. அலோக் நின்ற இடத்திலிருந்து நகரக் கூட இல்லை. சிறிது நேரத்தில் நானும் கைவிட்டேன். ரயன் விளையாட முற்பட்டான். நாங்கள் கோர்ட்டின் கூடுதல் தூண்கள் போல் நின்று கொண்டிருந்தோம்.

"என்னடா? கொஞ்சமாவது முயன்று பாருங்கள்", என்று ரயன் கத்தினான்.

"என்னால் முடியாது" என்ற அலோக் கோர்ட்டிலேயே உட்கார்ந்து விட்டான். அவன் சரியான தோத்தாங்குளி. நானும் தான் ஸ்குவாஷ் விளையாட முடியாமல் தவித்தேன். ஆனால் நான் கோர்ட்டின் நடுவில் எல்லாம் உட்கார மாட்டேன்.

"நாளை முயற்சிக்கலாம்", ரயன் வழக்கம் போல் பாஸிடிவாகச் சொன்னான்.

ஒரு பத்து நாட்கள் தொடர்ந்து எங்களையும் கோர்ட்டுக்கு இழுத்துச் சென்றான். நானும், அலோக்கும் கொஞ்சம் கூட கற்றுக் கொள்ளவில்லை. பந்து எங்கே சென்றது என்றே எங்களால் யூகிக்க முடியவில்லை;

பிறகு தானே அதைத் தொடர்ந்து அடிப்பது!

“ரயன், டேய், எங்களால் முடியலே”, என்று சோகமாகச் சொன்னான் அலோக். மூச்சிறைத்தது. “இதை நிஜமாகவே விளையாட வேண்டுமானால் வேற ஆளைப் பிடி.”

“ஏன்? நீங்கள் தேர்ச்சி பெற்றுக் கொண்டு வருகிறீர்கள்”, என்றான் ரயன்.

ஆமாம், முப்பது வருடங்களில் தேர்ச்சி பெற்று விடுவோம் என்று நினைத்தேன், சோகமாக

“உங்களுக்கு இது பிடிக்கவில்லையா?”

ரயன் என்ன தான் நினைக்கிறான்? ரசிப்பு? பிடிக்கும்? நான் அந்தப் பந்தை ஒரு 50 துண்டுகளாகக் கிழித்தெறியும் அபாயத்தில் இருந்தேன்.

“அப்படியில்லை,” என்று மெதுவாக இழுத்தேன். ரயன் ஏற்கனவே தீர்மானித்து விட்டான். அதனால் அவனுடன் வாதாடுவது பயனற்றது.

“சரி, பரவாயில்லை, நாம் இதை விட்டுவிடலாம். என்னால் ஸ்குவாஷ் விளையாடாமல் இருக்க முடியும்,” என்றான் ரயன்.

“அப்படியில்லை...”, என்றான் அலோக்.

ரயன் “என் நண்பர்கள் - என்ன- செய்கிறார்களோ - அதையே செய்வேன்,” என்ற போக்கில் இருந்தான். அவனுக்குப் பிடித்த விளையாட்டை அவன் கைவிட வேண்டியிருந்ததே என்று எனக்கு வருத்தமாக இருந்தது.

“நீ மற்றவர்கள் கூட விளையாடலாமே”, என்று ஆலோசனை வழங்கினேன்.

“மற்றவர்கள் என் நண்பர்கள் இல்லை,” என்று ரயன் அழுத்தமாகக் கூறினான். அது தான் கடைசி வார்த்தையாகியது. நானும், அலோக்கும் தோள் குலுக்கி மைதானத்தை விட்டு வெளியேறினோம். ஸ்குவாஷுக்குப் பிறகு கொஞ்சம் எளிதான அதிகம் ஓட வேண்டாம் என்ற ‘செஸ்’ விளையாட்டு வந்தது.

நானும் அலோக்கும் இது முடிந்த காரியம் என்று நினைத்தோம். ஸ்குவாஷ் போல் அல்லாமல் எங்களால் அந்த செஸ் காய்களைத் தொட்டு நகர்த்தவாவது முடிந்தது. ஆனால் ரயன் தான் ஜெயித்தான் அவனைப் போல் தீவிரமாக அந்த பிளாஸ்டிக் காய்களை வெட்டுவதில் எனக்கு உடன்பாடே இல்லை.

செஸ்ஸைத் தவிர ரயனின் ஸ்கூட்டரில் ஊரைச் சுற்றினோம். வேகமான காற்று எங்கள் முடிகளின் ஊடே சென்று சந்தோஷத்தை வரவழைத்தது. புதிதாக வந்த ஒரு படத்தையும் விடவில்லை. டெல்லியில் உல்லாசப் பயணிகள் சுற்றுலாவில் பார்க்கும் ஒரு இடத்தையும் விட்டு வைக்கவில்லை. எல்லாவற்றையும் செய்தோம்; அனைத்தையும் சுற்றிப் பார்த்தோம்.

பெரும்பாலும்அந்த மூன்று மணி நேரத்துக்குள் கொடுத்த பாடங்களை முடித்து விட்டோம். சில சமயம் சில பாடங்கள் நேரம் பிடித்தன. திரும்பப் படிக்க நேரமே கிடைக்கவில்லை. இது அலோக்கைக் கவலைப் பட வைத்தது. ஸெமஸ்டர் முடியும் நேரம் வந்தது. பரீட்சை நெருங்கியது. அவன் பாட நேரத்தை அதிகரிக்க வேண்டும் என்றான். நாங்களும் அதிகரித்திருப்போம். ஆனால் கல்ஃப்போர் தொடங்கியது.

போர் அடிக்கடி தான் நடக்கிறது. இந்தியாவே தேவைக்கு மேல் போரிட்டிருக்கிறது. ஆனால் கல்ஃப் போர் வித்தியாசமாக இருந்தது. ஏன் என்றால் அதை டிவியில் ஒளிபரப்பினார்கள். அமெரிக்காவின் செய்திச் சேனல்களான ஸிஎன்என்(NN) இந்தியாவில் புதிதாக இடம் பிடித்திருந்தன. இராக்கின் பாலைவனங்களை டிவி மூலம் நம் அறைகளுக்குள் கொண்டு சேர்த்தன.

“இது ஸிஎன்என் உங்களுக்காக நேரிடையாக பாக்தாத் தெருக்களிலிருந்து சேகரித்த செய்தி. வானில் முதல் தாக்குதலின் வெளிச்சம் தெரிகிறது”, என்று நன்கு உடையணிந்த நாகரீக மனிதர் பேசினார்.

அலோக், ரயன் மற்றும் நான் எங்கள் செஸ் விளையாட்டிலிருந்து நிமிர்ந்து பார்த்தோம். மெய் சிலிர்க்க வைத்த அனுபவம். இதுவரை டிவியில் கண்டிராத விஷயம். உங்களுக்குச் சரியாகப் புரிய வேண்டுமானால் கேபிள் சானல் மற்றும் தனியார் சேனல்கள் இந்தியாவுக்கு வருவதற்கு முன் நடந்த போர். அது வரை இரண்டே இரண்டு தூசு படிந்த அரசாங்கச் சானல்கள் தான். பெண்கள், தொலைந்து விட்ட இசைக் கருவிகளை மீட்டுவர்; உற்சாகமற்ற ஆண்கள், முட்டாள்களுக்கும், தூக்கமின்றி தவிப்பவர்களுக்கும் செய்திகள் வாசிப்பவர்கள். கலர் டிவி வந்தே இரண்டு வருடங்கள் தான் ஆகியிருந்தது. நிறைய நிகழ்ச்சிகள் கருப்பு-வெள்ளை தான். ஒரே வாரத்தில் பளபளவென்று, உற்சாகமான நேரிடை ஒளிபரப்பு-ஸிஎன்என்.

“இது நிஜமா? இப்படி நடக்குதா என்ன?” என்று அலோக் பிரமிப்பாகக் கேட்டான்.

“ஆமாடா, குண்டா, இது விளையாடுக்கா பின்ன?” ரயன் பரிகசித்தான். இரண்டு அமெரிக்க விமான

ஓட்டிகள் கையில் (ஹை-5) அடித்துக் கொண்டார்கள். ஒரு நிஜ நகரத்தை பல மணி நேரமாகத் தாக்கி அழித்துவிட்டு சந்தோஷப் பட்டார்கள். ஒரு நிருபர் அவர்களின் ‘அழிக்கும்’ முறையைப் பற்றிக் கேள்வி கேட்டார். அந்த போர் வீரர்கள் ஒரு கோடஷனை குண்டு வைத்து தகர்த்ததைப் பற்றியும், பாக்தாத் நகருக்கே மின்சாரம் வழங்கும் மின் நிலயங்களை அழித்ததைப் பற்றியும் பெருமை பேசிக் கொண்டனர்.

“செம்மடா, அமெரிக்கர்கள் தான் இந்தப் போரில் ஜெயிப்பார்கள்”, என்றான் அலோக்.

“ஈராக்கிகளைக் குறைவாக எடை போடாதே, அவர்கள் பத்து வருடங்களாகப் போரிட்டதால் நல்ல பயிற்சி எடுத்துள்ளனர். அமெரிக்கர்கள் பறந்தபடி குண்டு வீசுகின்றனர்”, என்றான் ரயன்.

“ஆமாம் ஆனால் அமெரிக்கா வல்லரசு. சதாமிடம் ஒரு வியூகமும் இல்லை.”

“அவனுக்கு இருக்கு. தரைப் போர் ஆரம்பிக்கும் வரை காத்திரு”, என்று ரயன் வக்காலத்து வாங்கினான்.

ஒரு ஆளைக் கொல்லும் சக்தி வாய்ந்த மண் குழி போல் இந்தப் போர் எங்களைப் புதை குழியில் தள்ளியது. அலோக்கும், ரயனும் வழக்கம் போல், இதில்-யார். வெல்வார்கள் விவாதத்தில் இறங்கினர். ஒரு பன்னிரெண்டு வயதில் இது போன்ற விவாதத்தை நாம் அனைவருமே செய்வோம் தான். (சூப்பர்மானா, பாட்மானா?) போன்ற விவாதங்கள். ஆனால் இன்றும் இவர்கள் தொடர்ந்தார்கள் நிறுத்தும் வழி தான் தெரியவில்லை. எனக்கும் தான் போரைப் பார்க்கப் பிடித்திருந்தது. ஆனால் நான் எந்த பக்கத்தைச் சார்ந்தும் பேசமாட்டேன்.

அப்பொழுது ஈராக் தெரியாத நாடு. நாங்கள் எல்லோரும் தெரிந்த நாடான அமெரிக்காவுக்காக உற்சாகக் குரல் விடுத்தோம். ஐஐடி அமெரிக்கா மீது அக்கறை கொண்டது. எங்களின் அயல் நாட்டு நிதி உதவி அமெரிக்காவின் பணக்கார நிறுவனங்களிலிருந்து தான் வந்தது. எங்களின் ஐஐடி மாணவர்கள் மாணவ ஊக்கத் தொகை பெற்று அங்கே சென்று படித்தனர். வேலைக்குச் சென்றனர். ஒரு பெரிய மூளை ஏற்றுமதி ஐஐடியில் நடந்தது. அதனால் எந்த ஆச்சரியத்துக்கும் வழி கொடுக்காமல் எங்கள் இதயம் அமெரிக்காவுக்காக ரத்தம் கசிந்தது.

அதே சமயம் போரைப் பற்றிய ஒளிபரப்பு மிகவும் மோசமான நிலையைக் காட்டியது. அமெரிக்கர்கள் நிறுத்தாமல் தொடர்ந்து பாக்தாத் மீது குண்டு வீசினர். ஸதாம் எங்கோ பாதாளத்தில் ஒளிந்து கொண்டான். ஒரு வேளை எண்ணைக் கிணறோ? பல சமயம் அமெரிக்கர்கள் ஊர் மக்களையும் அழித்தனர். மக்கள் பெருந்தொகையில் இறந்தனர். அது தவறான விஷயம் தான். ஐஐடிக்கு உதவுவதெல்லாம் போகட்டும் குழந்தைகளைக் கொல்வதை எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? ஆனால் சதாம் அது போன்ற தோத்தாங்குளி ஜெனரலாக இருந்தான்; கேள்விப்பட்ட வரையில் அவன் சிடுசிடு என்று இருந்தால், தன் மக்களைத் தானே சுட்டுக் கொல்வானாம். கல்ஃப் போரில் யார் பக்கமும் பேச முடியவில்லை. எங்களுக்கு சம்பந்தமும் இல்லாத விஷயம். சீக்கிரமே இவர்களும் அதைப் புரிந்து கொள்வார்கள்.

“டேய், இன்னும் எட்டு நாள் தான் இருக்கு, மேஜர் பரீட்சைக்கு,” என்று கடைசியாக ஒரு நாள் அலோக் சொன்னான். “டிவியை அணைத்து விடுங்கள்.”

“ஆனாலும் மூன்று மணி நேரம் தான் படிக்க வேண்டும்,” என்று ரயன் புருவத்தை உயர்த்திச் சொன்னான்.

“போயா’ நீயும் உன் மூன்று மணி நேரமும்! அது போதாது”, என்றேன் என் பங்குக்கு.

“ஈராக் தான் வெல்லும்”, என்றான் ரயன்.

“விடுடா; அமெரிக்கா அவர்களை விளாசிவிட்டார்கள்”, என்றான் அலோக். “அதனால் உன்னை வேண்டிக் கேட்டு கொள்கிறேன் ரயன். நாமும் தோற்பதற்கு முன் படிக்கத் தொடங்கலாம்.

“இன்னும் தரைப் போர் முடியவில்லை, பொறு” என்றான் ரயன் ரொம்பத் தெரிந்தவன் போல்.

அதிர்ஷ்டவசமாகப் போர் எங்கள் மேஜர் ஆரம்பிக்க ஐந்து நாட்கள் இருந்த பொழுதே முடிந்தது. அமெரிக்கா பெரும் வெற்றியை அடைந்தது. ஈராக்கள் தரைப் போர் நடப்பதற்கு முன்னரே நொறுக்கப்பட்டனர். சதாம் குவைத் நாட்டைத் தனியாக விட்டுவிட்டான். அமெரிக்கர்கள் அனைத்து எண்ணைக் கிணறுகளும் தங்களுடையது என்று மகிழ்ச்சியில் திளைத்தனர். ரயன் ஓரிரு நாட்களுக்குச் சாப்பிடவில்லை.

“இது நியாயமே இல்லை. நிஜப் போர்கள் தரையில் தான் நடக்கின்றன". என்று ஓலமிட்டான். நாங்கள் எங்கள் அறையில் படிக்க முற்பட்டோம்.

“வாயைமூடு ரயன். அமெரிக்கர்கள் வேண்டியதைச் சாதித்துவிட்டனர். இனி நாம் படிக்கலாமா?”

என்றேன். “நியாயமே போச்சுடா. அமெரிக்கா, பள்ளியில் வம்புக்கிழுக்கும் மாணவன் போல் நடந்து கொண்டது.”

“ஆப்மெக்’ ஆப்மெக்”, என்று மந்திரம் போல் முணுமுணுத்தான் அலோக்.

ஸ்குவாஷ், செஸ், போர் - எல்லாம் எங்கள் படிக்கும் நேரத்தை விழுங்கிவிட்டது. பரீட்சைக்கு ஐந்தே நாட்கள் முன்னர், நாங்கள் எங்கள் மூன்று மணி நேர விதியைத் தளர்த்தினோம்; அந்தக் கட்டாயத்துக்குத் தள்ளப் பட்டோம்; மலை மலையாகக் குவிந்த பாடங்களைப் படிக்கவே முடியாது போல் மலைப்பாக இருந்தது. முப்பது மணி நேரம் ஒரு நாள் படித்தால் கூட முடிக்க முடியாது. ரயனை அடக்குவது முக்கியமாகப் பட்டது. ஒவ்வொரு நாளும் காலை மூன்று மணி வரைப் படித்தோம். எங்களின் முதல் மேஜர் பரீட்சை அன்று இந்தியா போரில் பங்கேற்றால் சௌகரியம் என்று வேண்டிக் கொண்டோம்.

மேஜர் பரீட்சைக்கு ஒருநாள் முன்னர் செய்முறைப் பாடமான பிராக்டிகல்ஸ் தேர்வு. ரயனுக்கு மிகவும் பிடித்த ஒன்றே ஒன்று இது தான். வெகு சீக்கிரமாகவே இயற்பியல் ஆய்வுக்கூடத்துக்கு எங்களையும் இழுத்துக் கொண்டு ஆஜரானாள். நாங்கள் ஒரே குழுவில் இருந்தோம். மின்சாரம் சம்பந்தப்பட்ட பரிசோதனை. செய்துவிட்டு ‘வைவா-வோஸி’ எனப்படும் கேள்வி-பதிலுக்குத் தயாராக வேண்டும்.

எனக்குப் பிராக்டிகல் தேர்வே பிடிக்காது. அதுவும் கேள்வி-பதில் என்றால் அரண்டு விடுவேன். இந்த என் பீதியைப் பற்றி உங்களிடம் சொன்னேனா என்று தெரியவில்லை; யாராவது என் கண்ணைப் பார்த்து கேள்வி கேட்டால் போதும். என் உடம்பு உறைந்துவிடும், வியர்வைத்துளிகள் என் நெற்றியிலிருந்து தொடை வரை வழியும். என் குரல் மறைந்துவிடும். நான் வைவாவை வெறுக்கிறேன். அந்த மின் தொடர்பை பரிசோதிக்க ரயன் பரபரத்த பொழுது அவனையும் வெறுத்தேன்.

“டேய் பாருங்கடா”, என்றான் ரயன் அந்த மின் பாகங்களைக் கையில் ஏந்தியபடி.

அலோக் நோட்டுப் புத்தகத்திலிருந்து தலையை நிமிர்த்தினான்.

அடுத்த பத்து நிமிடங்களுக்கு ரயன், ரெலிஸ்டர், கபாஸிடர், சுவிட்சு, கேபிள் என்று ஏதோ இணைத்துக் கொண்டே போனான். எங்கள் பரிசோதனைக்கும் அவன் செய்ததற்கும் துளிக் கூட சம்மந்தம் இல்லை. அலோக் தீவிரமாகக் கவலைப்பட்டான்.

“ரயன் தயவு செய்து ரெஸிஸ்டர்-வோல்டேஜ் ஸெட்அப்பின் தொடர்பைப் பொருத்து. நாம் பரிசோதனையைத் தொடங்கலாமா?” என்றான் அலோக்.

“பொறுடா குண்டா, நமக்கு இரண்டு மணி நேர அவகாசம் இருக்கு. இங்கே ஏதாவது சிறிய ஸ்பீக்கர் கிடைக்குமா?” ரயன் தன் பெட்டியில் குடைந்தான்.

“எதற்கு ஸ்பீக்கர்?” என்று நான் கேட்கும் பொழுதே ரயன் அதைக் கண்டுபிடித்துத் தொடர்பைக் கொடுத்தான்.

“இதற்குத் தான்”, என்று ஸ்விட்சைப் போட்டான். ஒரு சில வயர்களையும், இணைப்பையும் சரி செய்தான். உடனே அதிலிருந்து ஹிந்தி பாடல் ஒளிபரப்பானது.

**“**கர் ஆயா மேரா பரதேஸி..**”**

“என்னடா இது?” என்று அலோக் குதித்ததைப் பார்த்தால் ஆய்வுக் கூடத்தில் பேய் புகுந்த கிலி தெரிந்தது.

“இது ரேடியோடா, முட்டாளே!” என்ற ரயனின் கண்கள் ஆர்வத்தில் பளபளத்தன. “நம்மிடம் எல்லா பொருட்களும் உண்டு ஒரு ரேடியோ செய்ய என்று எனக்குத் தெரியும்.”

“ரயன்”, எவ்வளவு ₹ உறுதியான குரலில் பேச முடியுமோ முயற்சித்தேன்.

“என்ன?”

“இங்கே மேஜர் தேர்வு நடக்குது’, என்றேன்.

இது தான் ரயன். அறிவார்த்தமான விஷயங்களைச் செய்யும் கெட்டிக்காரன், ஆனால் தவறான நேரத்தில் குறிப்பாகத் தவறான இடத்தில் மட்டுமே கெட்டிக்காரத்தனத்தை வெளிப்படுத்துவாள்.

அலோக்கும் கலவரப்பட்டான். “தலைவா, வைவா இருபது நிமிடத்தில்.”

ரயன் அந்த தொடர்பை பிய்த்துவிட்டு எங்களைக் கேவலமான ஜந்துவைப் போல் பார்த்தான். ஏதோ

‘மோஸார்ட்டே’ எங்களுக்காக கச்சேரி செய்யும் பொழுது நாங்கள் செவிடர்களாக மாறி அந்த இசையில் லயிக்காத ஜடங்கள் போலிருந்தது. அவன் பார்வை ஒரு வழியாகக் கொடுத்த நேரத்திற்குள் செய்து முடித்தோம். பேரா கோயல் உ₹ள்ளே நுழைந்தார்.

“ஹம்ம்ம்.”, என்று பேரா வயர்களை இழுத்துப் பார்த்தார்.

ரயன் தான் அதை இணைந்திருந்தான். இதில் அவன் வல்லவன் நாங்கள் அவனை நம்பினோம்.

“சரி, ரயன், நான் 100-ஓம் கொண்ட ரெஸிஸ்டரை 500-ஓமாக மாற்றினால் என்ன ஆகும்?”

“ஸார், அதிகமான வோல்டேஜில் மின்சாரம் பாயும்; ஆனால் அதிக வெப்பமும் வெளியேறும்.

“ம்ம்ம்.” என்ற பேரா கோயல் தன் தாடையைச் சொரிந்தார். அப்படியென்றால் ரயன் சொன்ன பதில் சரி.

“அலோக், இந்த ரெஸிஸ்டரில் உள்ள கோடுகளை வைத்து ஓம் ரெஸிஸ்டன்ஸ் எப்படிக் கண்டுபிடிப்பே?”

“ஸார், சிகப்பு வயர் 100-ஓம், நீலம்-10 ஓம்; அதனால் இது 110-ஓம்.

எங்கள் குழு நன்கு பதில் சொன்னது. ஆனால் பேரா கோயல் விடுவதாக இல்லை. என் அவசர வேண்டுதல்களையும் மீறி அவர் என் பக்கம் திரும்பினார்.

“ஹரி, 110-ஓம் ரெஸிஸ்டர் மீது இன்னொரு ரெஸிஸ்டரைப் பொருத்தினால் மின்சாரம் பாய்வதில் என்ன நிகழும்?”

இது ஒரு மார்க்கமான கேள்வி. எப்படி ரெஸிஸ்டரை இணைக்கிறோமோ அதைப் பொருத்து மின்சாரம் பாயும். அது தொடராக இருக்கலாம்; பாரலல்லாக இருக்கலாம். தொடர் என்றால் மின்சாரம் பாய்ச்சல் குறையும். பாரலல் ஆனால் அதிகரிக்கும். இது தான் பதில், அப்படித்தான் நினைக்கிறேன் சரியா?

இந்த பதிலை என் மனதில் சொல்லிப் பார்த்துக் கொண்டேன். ஆனால் பேரா கோயல் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். என்னை மட்டுமே பார்த்துக் கேள்வியைக் கேட்டார். இதில் ஒரு அதிசயமும் இல்லை. என் பெயரை அழுத்தமாகச் சொல்லி என்னைத் தானே கேள்வி கேட்டார்.

“ஸார்.” நான் நடுங்கினேன். என் கை விரல்கள் நடுக்கம் கண்டன. என் நிலை என்னைத் தாக்கத் தொடங்கியது.

“மின்சாரம் எப்படிப் பாயும்?”

“ஸார்...நான்... ஸார்”, என்றேன். அப்படியே முழுதுமாய் பக்க வாதத்தில் விழுந்தது போல் உறைந்தேன். எனக்கு பதில் நன்றாகத் தெரியும். ஆனால் அது தவறாக இருந்தால்? பேச முயன்றேன். என் எண்ணங்கள் வார்த்தைகளாக மாற மறுத்தன.

“ஸார், மின்சாரம் பாய்ச்சல் வந்து” ராயன் குறுக்கிட்டான். அந்த சூழ்நிலையைச் சரி கட்ட நினைத்தான்.

பேரா கோயல் ஆள்காட்டி விரலை உயர்த்தினார்.

“அமைதி, உன் குழுவில் ஒருவனைக் கேட்கிறேன். உன்னை அல்ல.” நான் தலையை அசைத்து கவிழ்த்தேன். ஒரு பிரயோசனமும் இல்லை என்று கைவிட்டு விட்டேன்.

“ம்ம்ம்” இம்முறை பேரா கோயல் தன் முகத்தின் எந்தப் பகுதியையும் சொரியவில்லை. “இந்த இன்ஸ்டிட்யூட்டின் தரம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. நீங்கள் எல்லாம் காமர்ஸ் மாணவர்களா?”

ஐஐடி மாணவனைப் போய் காமர்ஸ் மாணவன் என்று அழைப்பது பெருத்த அவமானம். ஒரு விலைமாது தன் வாடிக்கையான ஒரு “அலி” என்று அழைப்பதற்கு நிகர். இந்த இன்ஸ்டிட்யூட் ஒரு அறிவியல் கோயில். இதற்குள் நுழைய தரம் தாழ்ந்த காமர்ஸ் மாணவர்களுக்கு அருகதை இல்லை.

பேரா கோயல் C+ என்று எங்கள் குழுத் தாளில் கிறுக்கிவிட்டு எங்கள் மீது எறிந்தார். ரயன் தான் அதைப் பிடித்தான் என்று நினைக்கிறேன்.

இயற்பியல் பிராக்டிகல் பற்றி பேச நேரமில்லை. மேஜர் அடுத்த நாள் தொடங்கியது. நான் நேஹாவைச் சந்திக்கும் தினத்தைக் கூட ஒத்தி வைத்தேன். பரீட்சைக்குப் பிறகுதான் என்று. பேராசிரியர்களின் பெயர், தொலைபேசி எண் இருந்த டைரக்டரியிலிருந்து அவள் எண்ணைத் தேடிக் கண்டுபிடித்து ஒரு முறை அழைத்தேன். சொல்லாமல் கொள்ளாமல் வீட்டிற்கு அழைக்காதே என்று பயந்தே

போய்விட்டாள். எப்படி அவளுக்கு முன் அறிவிப்பு கொடுப்பது? பரீட்சை முடிந்தபின் சந்திப்பதாக பேச்சு.

மேஜர் பரீட்சையின் பொழுது குமாவோனில் அனைவரும் படித்தனர். அதிகாலைவரை எல்லா அறையிலும் விளக்கெறியும்; ஒருவருக்கொருவர் அபூர்வமாகத் தான் பேசிக் கொள்வார்கள் - அதுவும் வாழ்வா, சாவா போன்ற பெரிய பிரச்சனைகளைப் பற்றி மட்டும் தான் - இரவு பூராவும் மெஸ்லில் டீ குடித்த வண்ணம் இருப்பார்கள். ரயன், அலோக் மற்றும் நான் எங்களின் ஆறு பாடங்களையும் மறு முறையும் படிக்க மிகவும் அவதிப்பட்டோம். பரீட்சை தொடர்ந்து மூன்று நாட்கள் சேர்ந்தார் போல் நடைப்பெற்றது. சிலவற்றில் நன்றாகச் செய்தேன்; சிலவற்றில் படுமோசமாகச் செய்தேன். அலோக் எப்பொழுது முகம் சுளித்தபடி இருந்தான். ரயன் “கவலையில்லை” யென்ற பாவத்தை மிகவும் கஷ்டப்பட்டுக் கடை பிடித்தான். ஒரு ஜோக் கூட காற்றில் உதிரவில்லை; மேஜர் உயிர் மூச்சையே வெளியே எடுத்தது. மேன்ப்ரோ, ஆப்மெக், இயற்பியல், கணக்கு, வேதியல், மற்றும் கணினி, ஒன்றொன்றாய் எல்லாவற்றையும் முடித்தோம். மேஜர் முடிந்தவுடன் மோசமான பகுதியைக் கடந்துவிட்ட நிம்மதி பிறந்தது. இனி இரண்டு வாரங்களில் முடிவுகள் அறிவிக்கப்படும்.

அந்தப் பரீட்சைக்கும், முடிவுக்கும் நடுவில் கிடைத்த விடுமுறை அதீத மகிழ்வைத் தந்தது. இரண்டாவது ஸெமஸ்டர் தொடங்கியது. முதல் ஸெமஸ்டர் முடிவு தெரியாமல் புது பாடங்களில் யாரும் அக்கறை கொள்ளவில்லை. பேராசிரியர்கள் பரீட்சைகளைத் திருத்துவதில் மும்முரமாக இருந்தார்கள். புதுப் பாடங்களை எளிதாகக் கொடுத்தார்கள். எங்களுக்கு நிறைய நேரம் கிடைத்தது. ரயன் எங்களை செஸ்ஸிலிருந்து மீட்டு குறுக்கெழுத்து விளையாடக் கற்றுக் கொடுத்தான். வார்த்தைகள், அடைமொழிகள் என்று விளையாடினோம்.

ஒரு கோடைகால மாலை நேஹாவை மீண்டும் சந்தித்தேன். இரண்டாவது ஸெமஸ்டர் தொடக்கம்; நான் பேச நினைத்து அவள் அந்தத் தொலைபேசியைத் துண்டித்து சில நாட்கள் கழித்து அதே ஐஸ்கிரீம் கடையில் சந்தித்தோம்.

“கடவுளே! நீ என்ன பைத்தியமா, எங்கள் வீட்டை அழைக்க?” என்று தான் பேச்சை ஆரம்பித்தாள்.

எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. நான் பெரிய மேதாவி போல் அவள் எண்ணை பேராக்கள் டைரக்டரியில் கண்டு பிடித்துவிட்டேன் என்று மிதந்த கொண்டிருந்தேன்; இவள் என்னடாவென்றால் இப்படிக் கோபிக்கிறாளே?!

“வேறு எப்படி உன்னுடன் பேசுவது?”

“என் பெற்றோர்கள் பையன்களுடன் தொலைபேசியில் பேசுவது பற்றி மிகவும் கட்டுப்படுத்தியுள்ளனர்.” அவளிடம் சொல்ல முடியுமா’ “உன் பெற்றோர்கள் ஸைக்கோக்கள்”, என்று அதனால் சம்பந்தமே இல்லாமல் “ஸ்ட்ராபெரி?” என்றேன்.

அவள் அன்று அடக்கமான வெள்ளை ஸல்வார்-கமீஜ் அணிந்திருந்தாள். என் கையைப் பிடித்துக் கொண்டே அந்தக் கோன் ஐஸ்கிரீமை வாங்கிக் கொண்டாள். ஐயோ! சொல்லத் தான் வேண்டும் அவள் அவ்வளவு அழகு.

“எப்படி உன்னுடன் தொடர்பு கொள்வது?”

“11 ம் தேதி கூப்பிடு.”

அந்த உருகும் ஐஸ்கிரீமை நக்க ஒரு பிங்க் நாக்கு வெளியே வந்தது. லாகவமாக நக்கினாள்; என் கவனத்தைச் சிதறடித்தாள்.

“ஹஹ்?”

“எந்த மாதமானாலும் பதினோராம் தேதி கூப்பிடு.”

இங்கே பாருங்கள்; நேஹா ரொம்ப அழகுதான்; இல்லை என்ற மறுக்க முடியாது; ஆனால் பல சமயம் லூஸுபோல் நடந்து கொள்வாள்.

“என்ன? ஏன் 11?”

“அன்று தான் என் வீட்டில் யாரும் இருக்க மாட்டார்கள். என் அண்ணன் இறந்தது மே 11. அதனால் ஒவ்வொரு மாதமும் 11ஆம் தேதி ரயில் பாதை அருகே இருக்கும் கோவிலுக்கு என் பெற்றோர்கள் செல்வார்கள். மொத்த நாளும் அங்கு தான் இருப்பார்கள்.”

அப்படியா? நீ போக மாட்டாயா?”

“முன்பு போவேன். ஆனால் ஸமீரைப் பற்றிய நினைவு ரொம்பப் படுத்தும். பிறகு வெகு நாட்கள் அந்தச் சோகத்திலேயே இருப்பேன். அதனால் டாக்டர் என்னைப் போக வேண்டாம் என்று சொல்லிவிட்டார்.”

ஒரு தகவல் போல் சொல்லிவிட்டு சிரித்தாள்; என்னவோ எந்த ஐஸ்கிரீம் சாப்பிடலாம் என்று முடிவெடுப்பது போல் இருந்தது அந்தப் பேச்சு. விநோதமாக இருந்தாலும் அவள் அழுவதைவிட, இது தேவலை; பொது இடத்தில் அழுபவர்களைக் கண்டாலே என்னால் சகிக்க முடியாது.

“11ஆம் தேதி மட்டும் தானா?”

“இப்போதைக்கு அது மட்டும் தான் பாதுகாப்பான தேதி” என்று சிரித்தாள். “ஏன்? அடிக்கடி பேச ஆசையா?

அதற்குப் பதில் சொல்லவில்லை. இது போல் மாதத்தில் ஒரு நாள் தான் பேச முடியும்; பல் டாக்டரைப் போல் மாதமொருமுறை என்பது வேடிக்கையாக இருந்தது. ஆனால் பெண்கள் இப்படித் தான் ஏதாவது ஏடாகூடமாகச் செய்வார்கள் என்று புரிந்த கொண்டேன்.

என் கையைத் தொட்டபடி பேச்சை மாற்றினாள், “எப்படி மேஜர் எழுதினே?”

இது போல் அவள் என் கையைத் தொட்டால், அது எனக்கு மிகவும் பிடித்தது. அந்த அளவுக்குக் காய்ந்து கிடந்தேன்; ஏங்கிக் கிடந்தேன் என்றும் சொல்லலாம். அவள் தொட்ட இடத்தில் வெடித்த சிறிய பூகம்பங்களினால் என் தோல் சிலிர்த்தது. அதனால் அவள் கேட்ட கேள்வியையே மறந்துவிட்டேன்.

“ஆ! மேஜர். பெரிதாக ஒன்றும் இல்லை. முடிவுகள் ஒரு வாரத்தில் அறிவிக்கப்படும்.”

“நன்றாக எழுதினாயா?”

“அப்படிச் சொல்ல முடியாது.”

“உன் மதிப்பெண்களை அதிகரிக்கும்படி அப்பாவிடம் நான் வேணும்னா பேசட்டுமா?” என்று கேட்டாள்.

“₹உன்னால் பண்ண முடியுமா?” அந்த பிங்க் கலர் என்னைப் படுத்தியது.

“நான் கிண்டலடிக்கிறேன்.”

அது தானே பார்த்தேன். என்னை ஏமாற்றி விட்டது போன்ற சந்தோஷத்தில் கெக்கே பெக்கே என்று சிரித்தாள். நான் என்னவோ அவள் என் மதிப்பெண்ணை மாற்றக் கூடிய சக்தி படைத்தவள் என்று நம்பினார் போல! பெண்கள் தங்களின் நகைச்சுவையைத் தாங்களே ரசிப்பார்கள்; நேஹா சிரிப்பது, நேஹா கவலைப்படுவதைக் காட்டிலும் சிறந்தது.

நான் சட்டென்று முன்னால் சாய்ந்தேன்; என் முகத்தை அவள் அருகில் கொண்டு சென்றேன். உடனே மூச்சை உள்ளே இழுத்து, சிரிப்பைச் சட்டென்று நிறுத்தி, அந்த பிங்க் நாக்கை உள்ளுக்குள் மடக்கி, கண்களை அகல விரித்து, என்னையே பார்த்தாள். நான் என் பின் பாக்கெட்டிலிருந்த பர்ஸை எடுத்தேன். மறுபடியும் ஒன்றுமே இல்லாதது போல் அமர்ந்தேன்.

“என்னாச்சு?” என்றேன் சோம்பேறித்தனமாக.

“நான் நினைத்தேன். ஒன்றும் இல்லை, விடு”, என்று கண்களை மூடித் திறந்தாள்.

ஹா! ஏமாந்தாயா!

*Downloaded from [Ebookz.in](Ebookz.in)*

# 6

## ஐந்து புள்ளி ஏதோ ஒன்று

“வெளி வந்தாச்சு”, என்றான் அலோக், இந்தியா உலகக் கோப்பையை வென்றது போன்ற பரபரப்போடு ரயனின் தோள்களைத் தட்டினான். ஒரு வேளை பெண்கள் நிர்வாணமாக வெளியே புல்தரையில் உருளுகிறார்களோ?” “மேஜர் முடிவுகள் வந்துவிட்டது.”

“எனக்குத் தூங்க வேண்டும்”, என்று ரயன் கம்பளிக்குள் புதைந்தான். அலோக் அதை உருவிவிட்டான்.

இன்ஸ்டி வெளியில் மாணவர் கூட்டம் அலை மோதியது. முதல் மதிப்பெண்களைப் பார்ப்பதற்காக ஆர்வமானார்கள். கிரேட் பாயிண்ட் அவரேஜ் (ஜீபிஏ) ஆங்கிலத்தில் (GAP) இது 10 புள்ளிகள் கொண்ட அளவு கோல். முதலில் வந்தவன் 10 புள்ளிக்கு நெருக்கமாக இருப்பான். ஆவரேஜ் என்பது 6.50 நெருங்கும். நாங்கள் கடைநிலையில் இருந்தோம். கால்குலேட்டரில் மதிப்பெண்களைக் கூட்டயபடி ஆவரேஜ் பார்த்தான் அலோக்.

“ஹரி 5.46... ரயன் 5.01, நான்... நான் 5.88” என்றான் அலோக்

“நாம் எல்லோருமே ஐந்து-புள்ளிகள் தான்”, என்றேன். அது பெரிய ஆழமான செய்தியைப் போல கண்டுப்பிடித்துச் சொன்னேன்.

“வாழ்த்துக்கள் அலோக்; நம் மூவரில் நீ தான் அதிகம்”, என்றான் ரயன்.

நாங்கள் என்ன பெரும்-மூளை உள்ளவர்கள் குழுவா? எங்களில் முதலாக வருவதில் என்ன சாதனை? இவை பரிதாபமான கிரேடுகள்; வகுப்பில் 300 மாணவர்களில் நாங்கள் 200 வதில் இருந்தோம். அலோக் திரும்பவும் கூட்டிப் பார்த்தான்; ஏதாவது அற்புதம் நடந்துவிடாதா என்ற நப்பாசை; அற்புதங்கள் ஐஐடியில் நிகழ்வது இல்லை. இது போன்ற மட்டமான கிரேடுகள் தான் மிஞ்சும்.

“அடச்சே! என்ன கொடுமைடா இது; நான் வெறும் 5.86 இது ஆவரேஜுக்கும் கீழே இருக்கு.”

“நமக்கு தான் தெரியுமே?” என்றான் ரயன். “என்னவாகவோ இருக்கட்டும். நாம் சிக்கன் சாப்பிட்டுக் கொண்டாலாம் வா.”

“கொண்டாட்டமா?” அலோக் வார்த்தையைக் கடித்துத் துப்பினாள்; “அமெரிக்க உதவித் தொகையை மடத்தனமான இழந்து விட்டு நிற்கிறேன். வேலையும் கிடைக்காது; இதில் கொண்டாட்டம் ஒரு கேடா?”

“நீ இன்னும் வளரணும், குண்டா; உனக்கு என்ன வேண்டும்.? சோகத்தில் இன்னமும் டப்பா அடிக்கப் போகிறாயா?” என்று அமைதியாகக் கேட்டான் ரயன்.

“போடா ஒத்த”, என்றான் அலோக்.

முதன் முறை “ஒத்த” என்ற கெட்ட வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறான். அவனிடமிருந்து வந்ததால் அந்த வார்த்தையே விந்தையாக இருந்தது. அவன் இன்னமும் சின்னப் பையன் தானே!

ரயனின் அமைதி பேராவின் சிரிப்பைக் காட்டிலும் வேகமாக மறைந்தது. “டேய், என்ன சொன்ன?” என்னைப் பார்த்தான். “குண்டன் என்னடா சொன்னான்?

என்னை எதற்கு இழுக்கிறான் இதில்? அலோக் என்ன சொன்னான் என்று தெளிவாக ரயனின் காதில் விழுந்தது. பக்கத்தில் கெக்கே பெக்கே என்ற இளித்த மற்ற மாணவர்கள் காதிலும் விழுந்தது.

“நாம் விடுதிக்குச் சென்று இந்தக் கச்சேரியை வைத்துக் கொள்வோம்”, என்று கெஞ்சினேன். அவர்கள் ஒருவரை ஒருவர் கொலை செய்து கொண்டாலும் பரவாயில்லை. ஆனால் பொது இடத்தில் அல்லாமல் தனிமையில் சண்டையிட்டு கொள்ளட்டும் என்று விரும்பினேன். அவர்கள் நகருவதாகவும் இல்லை; இந்தப் பிரச்சனையை விடுவதாகவும் இல்லை. என்னை ஒதுக்கிவிட்டு அங்கேயே கைகலப்பு நடந்து விடுமோ என்ற பயந்தேன். எனக்குத் தெரிந்து விட்டது - இது ரயன் - அலோக்கின் வழக்கமான

சண்டை இல்லை. அவர்களின் அடிப்படை குணாதிசயங்களின் வித்தியாசங்கள் வெளிப்பட்டன.

“நாம் கிளம்பலாம்”, என்றேன் திரும்பவும் அவர்கள் கால்களைக் கஷ்டப்பட்டு நகர்த்தி ஸ்கூட்டரிடம் வந்து சேர்ந்தனர். ரயன் எவ்வளவு வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டமுடியுமோ, அப்படி ஓட்டினான். ரோட்டின் ஒவ்வொரு மேடு பள்ளத்தின் மீதும் வேண்டுமெனறே ஏற்றினான். அவனுடைய பிடிவாதமும், மூஞ்சி தூக்கலும் அவனுக்கே உரித்தானது.

இன்ஸ்டி நிகழ்வுக்குப் பின் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. இரவு உணவுக்குப் பின் ரயன் அறையில் அமர்நதிருந்தோம். என் மதிப்பெண்கள் பற்றி லேசாகக் கவலைப் பட்டேன். ஐந்து புள்ளி என்பது மிகவும் குறைவு, மற்றும் கேவலம் தான்; அனைத்து பேராக்களும் நான் நடுத்தரத்திற்கும் குறைவான மாணவன் என்று உணர்ந்து - தரும் மதிப்பெண்களை; மேலும் குறைந்து விடுவார்கள். போன வருடம் சில ஐந்து புள்ளி காரர்கள் வேலை கிடைக்க பட்ட அவதி நினைவுக்கு வந்தது. இந்த கேவலத்துக்குள் எப்படி மாட்டிக் கொண்டேன்? எனக்கு என்ன சாமர்த்தியம் இல்லையா? சாப்பாட்டு மேசையில் மாணவர்கள் ஆழந்த துக்கத்தில் இருந்தார்கள்; அல்லது பெரும் பரபரப்பில் சுற்றிக் கொண்டிருந்தனர். ‘படிப்ஸ்’ வெங்கட், அறையை விட்டு வெளியே வராதவன்; சாப்பாட்டு நேரங்களிலும் அமைதியாய் இருப்பவன். இன்று அவன் முகம் கொள்ளா புன்னகை. அவன் ஒன்பது புள்ளி ஐந்து. அவன் அலோக்கின் அருகில் அமர்ந்து ஆறு பாடங்களில், நான்கில் முதல் மாணவன் என்ற கதையைச் சொல்லிக் கொண்டிருந்தான். அலோக் அவனிடம் மட்டுமே பேசினான். எங்களை ஒதுக்கினான். மற்றவர்களும் இருந்தனர். எங்கள் பகுதியில் இருந்த சந்தோஷ் சர்த் கூட மரியாதையான ஏழு புள்ளி மூன்று வாங்கியிருந்தான். குமாவோன்னில் நாங்கள் மூவர் தான் குறைவு என்று நினைக்கிறேன். என் எதிர்காலத்தைப் பற்றி இன்னமும் கூட சிந்தித்திருப்பேன். அதாவது எதிர்காலம் என்று ஒன்று இல்லையே என்று வருந்தியிருப்பேன். ஆனால் ரயனும், அலோக்கும் மூஞ்சியைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தது என் கண்ணை உறுத்தியது.

நாங்கள் ரயனின் அறைக்கு வரிசையாகச் சென்றோம். ஒரு அரை மணி நேரம் பேசாமலே இருந்தோம். ஒருவரும் புத்தகத்தையும் திறக்கவில்லை, பார்த்துக் கொள்ளவும் இல்லை, பேச்சுக் கொடுக்கவும் இல்லை. இப்படியே அமைதியாகவே இருந்து விடுவோமா, என்ன? அது கூட பெரிய தப்பாக இருக்காது. நாங்கள் சேர்ந்தே வகுப்புக்குச் செல்லலாம்; சேர்ந்தே படிக்கலாம், சேர்ந்தே சாப்பிடலாம், ஆனால் எலியைப் போல் சத்தமே இல்லாமல் இருப்போம். மதிப்பெண்கள் கூட அதிகரிக்கலாம். மக்கள் பேச வேண்டும் என்று கட்டாயம் ஏதும் இல்லையே.

ஆனால் என் கலர் கனவு உடனே உடைந்து கலைந்தது.

“நீ மன்னிப்பு கேட்க மாட்டாயா?” என்றான் ரயன் கோபமாக.

“மன்னிப்பா? நானா? நீ தான் கேட்க வேண்டும், ரயன்.” என்றான் அலோக்.

“நீ தானே என்னை ‘ஒத்த’ என்று எல்லோர் முன்னாலும் இன்ஸ்டியில் சொன்னே?” என்றான் ரயன். “நான் மன்னிப்பு கேட்கணுமா? ஹரி உன்னால் நம்ப முடிகிறதா? நான் மன்னிப்பு கேட்கணுமாம்.”

இதில் எனக்கு சம்மந்தமே இல்லை. அதனால் நான் ரயன் சொல்வதை கண்டு கொள்ளவில்லை. அந்த இரண்டு கிறுக்கன்களுமே மோதிக் கொள்ளட்டும்.

“உனக்கு ஒரு எழவும் புரியலையடா”, என்று அலோக் அங்கலாயித்துக் கொண்டான்.

ரயன் மௌனமாய் இருந்தான். “என்ன புரியவில்லை?” என்றேன். இந்த அபத்தத்தில் எதை நான் புரிந்து கொள்ளவில்லை.

“இங்கே பார், புரிஞ்சுக்கோ. இன்று என் ஜிபிஏ 5.88; 200 மாணவர்களுக்கு மேலே என்னை விட நன்றாகப் படித்துள்ளனர். என் பனிரெண்டு ஆண்டு பள்ளிக்காலத்தில் நான் இரண்டாவது ராங்க் கூட எடுத்தது இல்லை.” உலகின் பல பகுதிகளில் இது ஒரு தவறான வாக்கியமாக இருக்கலாம். பள்ளியில் நான் பெரிய படிப்பாளி என்று அறிவிப்பதில் ஒரு பெருமையும் இல்லை. ஆனால் அலோக் இப்படித்தான்.

“அதனால் என்ன? உன் இன்ஸ்டி கிரேடு மோசம். யாருக்கு அக்கறை நீ எவ்வளவு டப்பா அடித்தாய்னு? நான் ஏன் மன்னிப்புக் கேட்க வேண்டும்?” என்றான் ரயன்.

“ஏன்னா... இது உன் தவறு தான்”, என்று கத்திக் கொண்டே அலோக் எழுந்தான்.

இது என்ன கொடுமை? ரயன் ஐந்து புள்ளி தான் எடுத்திருந்தான். அதற்குள் அலோக்கிடம் வேறு, பேச்சு கேட்டுக் கொள்ள வேண்டும்.

“என் தவறா?” ரயன் சொல்லிவிட்டுப் பெரிதாகச் சிரித்தான். “ஹரி, இதைக் கேளேன். குண்டன்

மட்டமான கிரேடு வாங்கினால் அது ரயனின் தவறு. என் தவறு. உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா, அலோக்?”

“ஏதாவது சொல்லேன்”, என்று அலோக் என்னைக் கெஞ்சினான்.

“என்ன சொல்வது?” என்று இருவரையும் பார்த்தேன்.

“பரவாயில்லை; ஹரிக்கு சொல்லத் தைரியம் இல்லை. நான் சொல்றேன். நீயும் உன் திட்டமும் ரயன்; கம்மியாகப் படி, கோடு கிழி’ வசந்த காலத்தை ரசி; இது மோசமான கல்வி முறை, குப்பை மேலும் குப்பை, எப்பொழுதும்.”

ரயனும் நாற்காலியில் இருந்து எழுந்தான்; ஒரு வேளை நின்று கொண்டு விவாதிப்பதில் விஷயம் இருக்கோ? தீவிரமும், தகவலும் கூடும்.

“நீ வருத்தமாக இருக்கே, சரி; அதற்காக இப்படிக் கொந்தளிக்காதே இது வெறும் கிரேடு தானே?

“நான் கொந்தளிக்கவில்லை”, அலோக் மறுபடியும் அமர்ந்தான். “இவை எனக்கு வெறும் கிரேடுகள் கிடையாது. உன் பெற்றோர்களை போல் என் பெற்றோர்கள் டாலர்களில் சம்பாதிக்கவில்லை. நான் இந்த இன்ஸ்டிட்யூட்டுக்கு வந்ததற்கு ஒரு அர்த்தம் இருக்கு. நன்றாகப் படித்து, நல்ல வேலை கிடைத்து என் பெற்றோர்களை கவனித்துக் கொள்ள வேண்டும். நீ அதை முழுவதும் கெடுத்து விட்டாய்.”

அலோக்கின் வருத்தம் குறையவே இல்லை.

“சும்மா அலட்டாதடா”, என்றான் ரயன்.

“எனக்கு என்ன வேண்டுமோ செய்வேன். பிரச்சனையே இதுதான் உன்னிடம் யாரும் எதுவும் சொல்ல முடியாது. நீ ஏதாவது சொன்னால் உடனே ஹரி ஜால்ரா அடிப்பான். நாம் எல்லோரும் அதையே செய்வோம். உன்னைக் கெடுத்துக் குட்டிச் சுவர் ஆக்கி விட்டார்கள். நீ அடம் பிடிக்கும் குழந்தை. என்ன நினைக்கிறயோ அதைச் செய்தே தீருவேன், என்ற அடம். நண்பர்கள் மீது அக்கறை இல்லை.”

“என்ன? என்ன சொன்னே இப்போ? நான் என் நண்பர்களைக் கண்டு கொள்ள மாட்டேனா?” என்றான் ரயன். அவன் குரல் கோபத்தில் ஓங்கி ஒலித்தாலும் அவன் விரல்கள் நடுங்கத் தொடங்கின.

“இல்லை, நீ எதன் மீதும் அக்கறை கொள்வதில்லை – படிப்பு, இன்ஸ்டி, பெற்றோர்கள், நண்பர்கள்; உன் கேளிக்கை மட்டும் தான் உனக்கு முக்கியம்.”

“நீ எல்லை மீறுகிறாய்,” என்று ரயன் எச்சரித்தான்.

“ஒரு மாற்றத்திற்காக நான் எல்லைக் கோட்டை வரைகிறேன். இனி உன்னோடு தொங்கிக் கொண்டிருக்க மாட்டேன் - நிச்சயமாக?”

அலோக் அதிகமாக உணர்ச்சிவசப் படுகிறான். ‘என்ன சொல்கிறாய்?’ என்று கேட்டேன்.

“விட்டு விடு போன்ற அறிவுரை எல்லாம் எடுபடாதுடா. முதல் ஸெமஸ்டர் முழுவதும் உங்கள் சொல் பேச்சு கேட்டு அவதிப் பட்டாச்சுடா” என்றான்.

“என்ன பண்ணப் போறே?”

“நான் தான் சொன்னேனே - ரயனுடன் தொங்க மாட்டேன். இனி வெங்கட்டுடன் இருக்கப் போறேன். அவனுடன் படிக்க அனுமதி தந்துவிட்டான். அவன் 9.5 வாங்கியிருக்கான், தெரியுமா?”

எனக்கு வெறுப்பாக வந்தது. யாரும் வெங்கட்டுடன் பேச மாட்டார்கள். வாய்ப்பு கொடுத்தால் அவனே அவனுடன் பேசமாட்டான். அவன் நல்ல ‘ஜிபிஏ’ வாங்கியுள்ளான். ஆனால் அவன் மனிதனே அல்ல. வெங்கட் நான்கு மணிக்கு எழுந்து கொள்வான். வகுப்பு தொடங்க நான்கு மணி நேரம் முன் டப்பா அடிக்க ஆரம்பித்துவிட்டான். மாலை நூலகத்தில் மூன்று மணி நேரம் படிப்பான். இரவு சாப்பாட்டுக்குப் பின் படுக்கையில் படுத்து ஒன்றிரண்டு மணி நேரம் படிப்பான் தூங்கும் வரையில் படிப்பான். யாருக்கு அவனுடன் இருக்கப் பிடிக்கும்?

“உனக்கு கிறுக்க பிடிச்சுடுத்துடா”, என்றான் ரயன், “நீ கிறுக்கன்.”

“என் கிரேடு தான் எனக்கு முக்கியம். என் எதிர்காலம் முக்கியம், அது கிறுக்குத்தனமா?”

நான் அலோக் அருகே சென்று அவன் தோள் மேல் கையைப் போட்டேன். இது போன்ற பைத்தியக்கார சமயத்தில் சற்று ஆறுதல். “சரி அலோக், நாம் இன்னும் நிறைய நேரம் படிக்கலாம்”

“சரி, சரின்னு சமாதானம் பண்ணாதடா” என் கையைத் தட்டி விட்டான். குரல் உடைந்தது. “போதுமடா சாமி”, அவன் முகம் அவன் அம்மாவின் முகம் போல் கோணலாக மாறியது.

இந்த மரபணு ஒற்றுமை என்னை பிரமிப்பூட்டியது; எப்படி அழுவது என்ற மரபணு இருக்கா? இல்லை வளரும் பொழுது கற்றுக்கொண்டானா? இல்லை, மொத்த குடும்பமே உட்கார்ந்து ஓவென்று அழுமா? அம்மா, அக்கா, இவன் என்று அப்பாவைச் சுற்றி உட்கார்ந்து அழுவார்களோ? அவரும் ஒரு கண்ணில் இருந்து நீர் கொண்டு வர முடியும்.

“எனக்கு பொறுப்புகள் இருக்கு என்று புரிந்த கொண்டீர்களா? நான் நன்றாய் படித்து குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். என் அம்மாவின் பாதி சம்பளம் என் அப்பாவின் மருந்துச் செலவுக்கே போய்விடும். ஐந்து வருடங்களாக ஒரு புது புடவை கூட வாங்கிக் கொள்ளவில்லை.” அழுகையும், துக்கமும் தொண்டையை அடைத்தது. மூக்கைச் சிந்தி அழும் அளவுக்குப் போய்விட்டான்.

ரயன் அலோக்கையே வெறித்துப் பார்த்தான். இது எல்லாம் மர்மமாகவும், விசித்திரமாகவும் அவனுக்குப்பட்டது. “ஒத்த” என்று சொன்னதை கூட ஏற்றுக் கொள்ளலாம் போல் தோன்றியது; இந்த அழுகையை எப்படிச் சமாளிப்பது? ‘ஒரு புடவை கூட இல்லை ஐந்து வருடமாகப்’ போன்ற விஷயங்கள் எல்லாம் ஜீரணிக்கவே முடியவில்லை. எப்படி விவாதிப்பது? எவ்வளவு புடவைகள் வாங்குவது சரி, ஒரு வருடத்துக்கு? எனக்கே தெரியாது; ரயனுக்கு சுத்தமாகத் தெரியாது.

“என் அக்காவைக் கலியாணம் பண்ணிக் கொடுக்கணும்,” என்றான் அலோக். “அதற்கும் என்னைத் தான் நம்பியிருக்கிறார்கள். உங்களுக்குப் புரியாதுடா, ரயனுக்கு செஸ் விளையாடனும், டிவி பார்க்கணும் பொற்காலத்தை ரசிக்கணும். எனக்கு கேளிக்கைகளே பிடிக்காது.”

“நான் மன்னிப்பு கேட்டால் நீ சரியாகிவிடுவியா? நீ பேசுவதில் அர்த்தமே இல்லை. இந்தப் பெற்றோர்கள் கதை எனக்கு அது புரியாது.” ரயன் மென்மையாகி இளகிவிட்டான் என்று புரிந்தது. ஆனால் அலோக் கோபத்தின் டாப் கியருக்குப் போய் விட்டான். “உனக்குப் புரியாது தான் எப்படிப்புரியும்? நீ தான் அவர்களோடு இல்லையே.”

“இருந்தேன்; அவர்கள் இப்பவும் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்காக உட்கார்ந்து ஒப்பாரி வைப்பதில்லை.”

“நீ அவர்களை நேசிக்கவில்லை.”

“ஆமாம் நேசிக்கவில்லை. ஆனால் நான் குழந்தை மாதிரி அழ மாட்டேன்.”

“வாயை மூடு!” அலோக் கத்திக் கொண்டே தொடர்ந்து அழுதான்.

“நீ குழந்தைடா. பெண்மை நிறைந்த-குண்டு பாப்பா. மன்னித்துவிடு பாப்பா. இப்போ உன் மூக்கைத் துடைத்துக் கொள்”, என்று சொல்லி ரயன் சிரித்தான். வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை என்றால் அவன் சிரிப்பான். பேச்சின் நடுவே இருக்கும் இடைவெளிகளை நிரப்பவும் சிரிப்பான்.

“வாயை மூடுடா... டேய்...”, என்றான் அலோக்.

“எனக்கு என் அம்மா. வேணும்”, ரயன் அலோக்கின் தொண்டை அடைக்கும் பேச்சைப் போல் பேசிக் காட்டினான்.

“வாயை மூடுடா, கைவிடப்பட்ட அநாதைக் கழுதை!” அமைதி நிலவியது. சில சமயம் மூளை குழம்பி ஏதோ உளறி விடுகிறோம். பிறகு அள்ள முடியாது. ரயனின் சிரிப்பு, காலே அரைக் கால் வினாடியில் மறைந்தது. நான் நிமிர்ந்து அமர்ந்தேன். சரியாகக் காதில் விழுந்ததா என்று குழப்பமாக இருந்தது. அலோக்கும் முகபாவம் மாறியதைப் பார்த்து அப்படியே உரைத்தான். ஒரு இருபது நொடிக்கு யாரும் மூச்சுக் கூட விடவில்லை. மயான அமைதி.

“அநாதை. ஹரி, அவன் என்னை அநாதை என்கிறான்”, என்றான் ரயன்.

நான் மௌனமானேன். அலோக்கும் பேசவில்லை.

“வெளியே போ. வெங்கட்டோ வேறு எந்த கொம்பனோ, அவனிடமே போய்விடு. தொலைந்து போ”, என்றான் ரயன்.

“நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம். ஹரி?” அலோக் அழாமல் கேட்டான்.

“என்ன?” என்றேன்.

“என்னோடு வரியா?”

“எங்கே?”

“என்னோடு இருக்கியா, இல்லை ரயனோடு இருக்கியா?”

இது நியாயமே இல்லை. எனக்கும் இதுக்கும் சம்மந்தமே இல்லை. இருந்தும் எந்த நண்பனுடன் இருப்பது என்று முடிவு செய்ய வேண்டும்.

“போடா; தோத்தாங்குளியோடு சேர்ந்து கொள் ஹரி. அவன் கையைப் பிடித்துக் கொள்.” என்றான்.

“நான் எங்கும் செல்லப்போவதில்லை,” என்றான். “ஹரி. சரி நீ ரயளைத் தேர்ந்தெடுத்துவிட்டாய்,” என்று அலோக் தோல்வியடைந்த குரலில் கூறினான்.

“நான் யரையும் தேர்ந்தெடுக்கவில்லை. நீதான் எங்களை விட்டு விலகிப் போகிறாய். உன் விருப்பப்படி எது வேண்டுமானாலும் செய்.” என்று வெறுப்புடன் கூறினேன்.

அமைதி நிலவியது. அலோக் எழுந்து கிளம்பி விட்டான். ரயன் பட்டென்று கதவை மூடினான். இது முற்றிலும் தன் வெறுப்பபைக் காட்டன் உபயோகித்த விதம். இதற்கு முன்பு இதுபோல் கதவை மூடவில்லை.

“நீயும் அவன் என்ன செய்தான் என்று பார்த்தாய் அல்லவா? அவனுடன் சேர்ந்து வருவாய் என எதிர்பார்த்தான்,” என்றான் ரயன்.

“போகட்டும்,” என்றேன் நான்.

அதன் பிறகு நான் நேஹாவைப் பார்த்தேன். எனக்கு ஐஸ் கீரிம் மீது மிகவும் விருப்பம் என்றாலும் அன்று நான் மிகவும் சோர்வுடன் இருந்தேன். நேஹா தேவலை போல் இருந்தாலும் நான் அவளுடன் ஒன்றும் பேசவில்லை. உண்மையில் எனக்கு யாருடனும் பேசவே விருப்பமில்லை.

“என்ன ஆச்சு உனக்கு?”

“ஏதாவது நடந்ததா, யாராவது ஏதாவது சொன்னார்களா?” என்று கேட்டாள். நான் நினைத்தால் என்னால் அழுத்தமாகப் பேசமால் இருக்கவும் முடியும்.

“உன் முகத்திலேயே எழுதியிருக்கு. சொல்லப்போறியா, இல்லையா?” பெண்களிடம் இது தான் பிரச்சனை. நம்மில் பாதி அளவு தான் இருப்பார்கள், ஆனால் நமக்கு அவர்களைப் பிடிக்கும் என்று தெரிந்துவிட்டால், நம்மை அதிகாரம் செய்வார்கள். அவள் தன்னை யாரென்று நினைத்துக் கொண்டடிருக்கிறாள்.?

“ஒன்றும் இல்லை.”

அவள் தன் கையை என் கை மீது வைத்தாள். மிகவும் தன்மானம் உள்ள முட்டாள் நான்; உடனே உருகிவிட்டேன்; ஐஸ்கிரீமை விட வேகமாக உருகினேன். என்னுள் ஓடிக் கொண்டிருந்த மோசமான ‘மூடு’ பூச்சிகள் மீது பேகான் (Baygon) அடித்தது போல் அவை விலகின.

“நேஹா, இந்த அலோக்கும், ரயனும் தான் பிரச்சனை அவர்கள் என் உயிர் நண்பர்கள். பெரிய சண்டை; இப்போ நாங்கள் பிரிந்துவிட்டோம்.”

“என்ன சண்டை?”

“கிரேடுகளைப் பற்றித் தான். அலோக் ரயனைக் குற்றம் சாட்டினான்; எங்கள் மோசமான கிரேடுகளுக்கு ரயனைக் காரணம் காட்டினான்.

“அப்படியா? எவ்வளவு மோசம்?”

எங்கள் ஐந்து புள்ளி கிரேடைப் பற்றி அவளிடம் சொன்னேன்.

“ஐந்து புள்ளியா? இன்ஸிடி தரத்துக்கு மிகக் குறைவு!” என்றாள்.

இதுதான் பிரச்சனையே; ஐஐடியின் ஜிபிஏ பற்றி எல்லோருக்கும் ஒரு அபிப்பிராயம் இருக்கு; அது ஃபாஷன் பற்றி படிக்கும் மாணவியாக இருந்தாலும்.

“எனக்குத் தெரியும்”, என்றேன். “அது என் கவலை இல்லை. அந்த இடம் தான்; அதை நான் வெறுக்கிறேன்.

நேஹா சிரித்தாள். ஏற்கனவே சொன்னேனே. திடீரென்று லூஸாக மாறிவிடுவாள். “இதுல சிரிக்க என்ன இருக்கு?” என்றேன் எரிச்சலாக.

“ஒண்ணும் இல்லை. அதில் சேரவே மக்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைத்துப் பார்த்தேன்.”

“தெரியும்; ஆனால் அது மோசமான இடம். நிறைய டன் கணக்கில் படிக்க இருக்கு; என் கிரேடுகள் குப்பையாகிவிட்டன; இப்போ எனக்கு நண்பர்களும் இல்லை.”

“அலோக்குக்கு டப்பா அடிக்க விருப்பம். அவன் டப்பா ராஜாவோடு சேர்ந்துவிட்டான்.” “நான் மொத்த கதையையும் விலாவாரியாகச் சொன்னபின் அவள் கதைச் சுருக்கத்தைச் சொன்னாள். “அது சரி, நீ ரயனுடன் எப்படிச் சேர்ந்தாய்?”

“நான் தேர்ந்தெடுக்கவில்லை. அலோக் தான் எங்களை விட்டுப் பிரிந்தான்”, என்று நினைவுப்படுத்தினேன்.

“நீ என்ன செய்யப் போறே?”

நான் தெரியாது என்று தோள் குலுக்கினேன்

“என் அப்பா மாணவராக இருக்கும் பொழுது 10 புள்ளி எடுத்தார்.”

“அவர் மாணவரா?” செரியனை மாணவராகவோ, இளைஞராகவோ கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை.”

“ஆமாம்; வகுப்பிலேயே முதல் மாணவன். நான் ஒரு ஐந்து புள்ளியோடு நேரத்தைக் கழிப்பதை விரும்ப மாட்டார்”, என்றாள் சந்தோஷமாக.

“இப்போ நீயும் என்னோடு பேசுவதை நிறுத்தப் போகிறாயா?” என்றேன்.

“இல்லை சும்மா ஜோக்கடித்தேன்"₹ என்று சொல்லிச் சிரித்தாள். எப்பவுமே ஏன் இப்படி செய்கிறாள்? அவள் சொல்லும் ஜோக்குகள் அவளை மட்டுமே சிரிக்க வைக்கின்றன.

என்னவோ செய்.”

“இங்கே வா”, என்று தன் அருகில் இருந்த இருக்கைக் தட்டிக் காட்டினாள்.

“ஏன்?”

“சும்மா வாயேன்.”

பயிற்சி கொடுத்த செல்லப் பிராணிபோல் எதிரில் இருந்த இருக்கையிலிருந்து எழுந்து அவள் அருகில் அமர்ந்தேன் பெண்களிடம் இந்த வசியக்கலை இருந்தது.

மேரியாக மாறி மற்றவர்களை ஆட்டுக்குட்டிகள் போல் பின் தொடர வைக்கும் மாயசக்தி. அவள் என் கையைப் பிடித்தாள், என் முகத்தை அவள் பக்கம் திருப்பினாள். “எனக்கு இந்த ஐந்து புள்ளிக்காரனை பிடிக்கும்”, என்று சொல்லி என் கன்னத்தில் முத்தமிட்டாள்?”

ஐயோ, ₹உருகியே போய்விட்டேன். “நானும் உன்னைத் திரும்ப முத்தமிடலாமா?”

“இல்லை. நான் தான் ஜிபிஏ வாங்கவில்லையே”, என்று சுட்டிக் காட்டினாள்.

ஜிபிஏ இல்லாதவர்களை நான் பெரிதும் நேசித்தேன். அதுவும் ஐஐடியில் இல்லாதவர்கள் என்றால் அலாதி பிரியம். எனக்குத் திரும்பப் போகவே இஷ்டம் இல்லை. இந்த ஐஸ்கிரீம் கடையில் வேலை பார்க்க முடியுமா? வகுப்புகள், பாடங்கள், கிரேடுகள், அலோக்-ரயன் வாதங்களைப் பற்றிக் கவலைப்படாமல் நாளெல்லாம் கோன்களில் ஐஸ்கிரீம் நிரப்பிக் கொண்டிருக்கலாமே.

“நாம் ஒரு படம் பார்ப்போம், அடுத்த சனிக்கிழமை?” என்று கேட்டாள்.

“நிச்சயம்’, என்று கடையில் வேலை பார்க்கும் கனவிலிருந்து மீண்டேன்.

“சரி, ஸுப்பர், இப்போ போகணும். இதே கடையிலிருந்து இரண்டு மணிக்குக் கூட்டிப் போகிறேன். மாட்டினி’, என்று சொன்னாள். நான் ஐந்து நிமிடம் காத்திருந்தேன். ஐந்து ஸ்பெஷல் ஐஸ்கிரீம்களின் பெயர்களைப் படித்தேன். ஐந்து முத்தங்களைப் பற்றி நினைத்துப் பார்த்தேன். நான் அதிக புள்ளி ஜிபிஏ வாங்கியிருந்தால் அவ்வளவு ஐஸ்கிரீம் முத்தங்கள் கிடைத்திருக்குமே! அடடா!

*Downloaded from [Ebookz.in](Ebookz.in)*

# 7

## அலோக் பேசுகிறான்

குண்டா, அழுமூஞ்சி, டப்பா ராஜா, துரோகி, பொட்டை இப்படித் தான் என்னைப் பற்றி நினைத்திருப்பீர்கள். இந்தப் பையன் என்ன வளர மாட்டேன் என்று அடம் பிடிக்கிறானா என்று கூட உங்களுக்குத் தோன்றும். வற்றாத மேதை, பெற்றோர்களிடம் வருடா வருடம் ஒரு சிறந்த மதிப்பெண் அட்டையைக் காட்ட விரும்புபவன். என்னை எப்படி வேண்டுமானாலும் புரிந்து கொள்ளுங்கள்; மதிப்பெண்களுக்காக அழுபவன்; குழுவை விட்டு வெளியேறுபவன், அம்மாவின் முந்தானையிலிருந்து வெளியே வராதவன், தொப்புள் கொடி டெல்லியில் உள்ள ரோஹினி காலனியிலிருந்து ஐஐடி டெல்லி வரை பிணைந்திருக்கிறது, என் அம்மாவுடைய தொடர்பை வலுப்படுத்துகிறது.

ஆனாலும், என்னைப் பற்றி, என் வழியில் சொல்ல விடுங்கள்; ஆம்; நான் அலோக் குப்தா, பராக்கிரமமான ஹரி எனக்கும் ஒரு சின்ன இடம் ஒதுக்கியிருக்கிறான், என் புலம்பல்களைக் கொட்ட; அதைச் செய்வதற்கு முன் ஒரு கதை சொல்லி விடுகிறேன்.

முன்னொரு காலத்தில் மத்திய தரத்திற்கும் கீழ் நிலையில் ஒரு பையன் டெல்லியின் புறநகரில் வாழ்ந்து வந்தான். இந்தப் பையனை தோத்தாங்குளி என்று அழைப்போம். நமக்கு எளிதாக இருக்கும்- அவனின் அம்மாவும், அப்பாவும் பள்ளி ஆசிரியர்கள். அம்மா-உயிரியல்; அப்பா-வரைதல்; தோத்தாங்குளி ஒரு எளிமையான வீட்டில் வாழ்ந்தான். அதில் நோட்டுப்புத்தகங்கள், கேன்வாஸ் (படம் வரைவதற்கு) என்று இறைந்து கிடந்தன. அவன் தன் ஷுக்களுக்கு லேஸ் கட்டத் தெரிந்து கொள்வதற்கு முன் படம் வரையக் கற்றுக் கொண்டான். தோத்தாங்குளி படிப்பில் கெட்டிக்காரன், (இரண்டு ஆசிரியர்கள் அவன் வீட்டிலேயே இருந்தனர்!) ஆனால் அவனுக்கு மிகவும் பிடித்த விஷயம் படம் வரைவது தான்; அனைத்து டிராயிங் போட்டியிலும் பங்கேற்றான். முக்கால்வாசியில் பரிசுகளும் பெற்றான். பரிசுகள்-குவிந்த வண்ணம் இருந்தன. வண்ணக் கலவை, காலிகிராஃபி பேனாக்கள், பேப்பர், பெயிண்ட் வாங்கும் கூப்பன்கள்-தோத்தாங்குளி கலையில் நன்கு விளங்கினான் என்று எல்லோருக்கும் புரிந்தது. பெரியவனாகி கலைஞனாக வேண்டும்; நிறைய வரைய வேண்டும் என்று கனவு கண்டான். இது ஒரு அபத்தமானகனவு. இந்தியாவில் ஓரிரண்டு சித்திரக் கலைஞர்களுக்குத் தான் இடம்; அதுவும் தொண்ணுறுகளைத் தொட்டவர்களுக்குத் தான் (இறந்துவிட்டால் கூடுதல் சிறப்பு); ஆனால் தோத்தாங்குளிக்கு இதில் அக்கறை இல்லை. யாரும் தன்னைத் தடுக்க முடியாது; சாதித்து விடலாம் என்று நினைத்தான். இதுபோன்ற சமயத்தில் தான் விதி வாழ்க்கையில் விளையாடும். எல்லாவற்றையும் யோசித்துத் திட்டமிட்டு விட்டோம் என்று நினைக்கையில் விதி வேறு வழியில் வந்து ஆக்கிரமிக்கும். தோத்தாங்குளியின் அப்பாவுக்கு பெரிதும் போற்றப்பட்ட ‘ம்யூரல்’ எனப்படும் சுவற்றில் வரையும் வேலை கிடைத்தது. அதற்கு நல்ல கூலியும் பேசப்பட்டது. கல்வித் துறை கட்டிடத்தின் வரவேற்பறையின் உள் கூரையில் வரைய வேண்டும். இது கடினமான வேலை. கூரையில் வரைவது முதுகொடியும் வேலை. மூங்கில் குச்சிகளால் சாரம் அமைத்து அதன் மீது கலைஞர் படுத்துக் கொண்டு வரைய வேண்டும். நல்லமுறையில் வரைந்தால் மக்களை அண்ணாந்து பார்க்க வைக்கலாம்!

ஆனால் தோத்தாங்குளியின் அப்பாவை ஒரு முறைதான் உலகம் திரும்பிப் பார்த்தது - அது அவர் மூங்கில் சாரத்திலிருந்து 10 மீட்டர் கீழே விழுந்த பொழுது தான். பார்த்துக் கொண்டிருந்த கூட்டம் அவசரமாக நகர்ந்தது. எங்கே அவர்கள் மீது பட்டு அவர் விழாமல் தடுக்கப்பட்டுவிட்டால் என்ற அச்சம்!

வலது புறம் பக்க வாதம் ஏற்பட்டது என்று மருத்துவர்கள் கூறினர். தோத்தாங்குளியின் பாதி அப்பா மறைந்துவிட்டார் என்று சொல்ல வேண்டும். முக்கியமாக அவரின் மொத்த ஊதியமும் போய்விட்டது. வலது கையால் படம் வரையும் திறன் போய்விட்டது. அதனால் தோத்தாங்குளியின் கனவும் அழிக்கப்பட்டது.

படுக்கையில் கிடத்தப்பட்ட அப்பா, பத்து வருடங்களாக அதிலிருந்து நகரவேயில்லை. அவரின் ஒரே நல்ல கண் வருத்தத்தில் அடிக்கடி கண்ணீர் சிந்தியது. இனி வரையவே முடியாது என்ற சோகமே அவரை மேலும் நோயாளியாக்கியது.

பெயிண்ட் பாட்டில்கள் இருந்த இடத்தை தற்பொழுது மருந்து பாட்டில்கள் நிரப்பின. ஒரு நர்ஸு ஏற்பாடு பண்ணக் கூடப் பணம் இல்லாமல் தோத்தாங்குளியை அந்த வேலையைச் செய்யும் படி பணித்தனர்.

அப்பொழுது அவன் ஏழாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அடுத்து வந்த பள்ளி வருடங்களில், பள்ளி முடிந்ததும் அவன் அவர் பக்கத்திலேயே நேரத்தைச் செலவழித்தான்.

கொஞ்ச காலம் அவன் வரைவதில் கழித்தான். ஆனால் சீக்கிரமே தன் குடும்பத்தின் தேவையை உணர்ந்தான். அவர்களுக்கு இயற்கை காட்சிகளை விட பணம் அதிகம் தேவைப்பட்டது. இந்தியாவிலேயே ஐஐடி தான் ஒரே கல்லூரி எதிர்காலத்தில் உத்திரவாதம் அளித்தது. அதனால் இன்ஜினியர் ஆனால் ஏழ்மையிலிருந்து மீளலாம் என்று தீர்மானித்தான்.

தோத்தாங்குளியின் அம்மா இரவெல்லாம் அழுவார். ஆனால் சோகத்தினால் வாழ்க்கையைக் கைவிட முடியவில்லை. வருடாவருடம் ஜீரண உறுப்புகளைப் பற்றியும், சுரப்பிகளைப் பற்றியும், பிறப்பைப் பற்றியும் பாடம் நடத்திக் கொண்டே இருக்க வேண்டிய கட்டாயம்.

“ஒரு நாள் இவர்களை இந்தக் கஷ்டங்களிலிருந்து விடுவிப்பேன்”, என்று தோத்தோங்குளி சபதம் உரைத்தான். அவன் தன் அப்பாவை இரவில் புரட்டிப் படுக்க வைத்துவிட்டு ‘புல்லி’, காந்த சக்தி, “கால்குலஸ்” என்று ஐஐடி நுழைவுத் தேர்வுக்காகப் படித்தான். இரண்டு வருடங்களுக்கு அவன் வீட்டை விட்டுப் பள்ளிக்குத் தவிர வேறு எங்கும் வெளியே செல்லவில்லை. படிப்பதிலேயே குறியாய் இருந்ததால் 15 கிலோ எடை கூடியிருந்தான். படுக்கையிலேயே படுத்திருந்ததால் அவன் அப்பாவுக்கு தோலில் வந்த புண்களைத் துடைத்துக் கொண்டே அவன் கணக்குகளை மனதில் போட்டான்.

ஒருநாள் அவன் உழைப்புக்கான பலன் கிடைத்தது. அவன் ஐஐடியில் சேர்ந்தே விட்டான். அவனின் அமாவும், பாதி-அப்பாவும் மகிழ்ந்தனர். இன்றும் நான்கு வருடங்கள் கட்டுப்பாடாக இருந்தால் அனைவரையும் விடுதலை செய்து விடுவான். அப்பொழுது தான் அவன் ரயனையும், ஹரியையும் சந்தித்தான். அவர்களுடன் சேர்ந்து இருப்பதால் மதிப்பெண்களை இழந்தான். இன்ஸ்டிட்யூட்டிலேயே குறைவான மதிப்பெண்! ரயன் அந்த நிமிடத்துக்காக, அந்த தருணத்துக்காக வாழ்பவன்; அவனைப் போல் இருக்க யாருக்குத் தான் விருப்பம் இருக்காது? பணக்காரப் பெற்றோர்கள், நல்ல அழகான தோற்றம், ஐஐடியில் சேர கெட்டிக்காரத் தனம், விளையாட்டில் நல்ல தேர்ச்சி, அவனுடன் கழிக்கும் குதூகலத்தருணத்தினால் நிறைய நண்பர்களை வசீகரிக்கும் திறன். ரயன் ஒரு தொற்று நோயைப் போல் எல்லோரையும் பற்றிக் கொள்வான். ஹரி இந்தத் தொற்றுக்கான உதாரணம். ரயனுக்கு எது வேண்டுமானலும் ஹரி கொடுத்து விடுவான். ரயனுக்குப் படிக்க வேண்டாமென்றால் ஹரி புத்தகங்களை மூடிவிடுவான். ரயன் ஜிபிஏக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லையென்றால், ஹரியும் அதைப்பற்றிக் கவலைப்பட மாட்டான். ரயன் புல்லாங்குழல் ஊதிக் கிறங்கடிக்கும் பைட்-பைப்பர் போல்.

ஒரு முறை எங்கள் வீட்டிற்கு வந்த பொழுது எனக்கு நன்கு நினைவில் இருக்கிறது. என் அப்பாவைத் தூக்கிக் கொண்டு ஆட்டோவுக்குள் ஓடினான். பிறகு விடாமல் பிடித்துக் கொண்டு மருத்துவமனை வந்தபின் சிப்பந்திகளுடன் சண்டையிட்டான். நல்ல கட்டில் வாங்கிக் கொடுத்தான். எங்களுடன் காலை மூன்று மணி வரை தங்கினான். ஆம் ரயன் நல்லவன்; அவனால் தன்னை நன்றாக நடத்திக் கொள்ள முடியும். யார் தான் புதிதாகச் சேர்ந்தவர்களுக்காக கோக் பாட்டில்களையெல்லாம் உடைக்கத் துணிவார்கள்? யார் தன்னுடைய புது ஸ்கூட்டரை பற்றி யோசிக்காமல் இரண்டு புளிமூட்டைப் பசங்களை ஏற்றிச் செல்வார்கள்?

ஆனால் இதையும் மீறி ரயனிடம் சில விஷயங்கள் உள்ளன. வாராவாரம் ரயனின் பெற்றோர்கள் அவனுக்குக் கடிதம் அனுப்புகிறார்கள்; தெரியுமா? ஒன்றுக்குக் கூட அவன் பதில் அனுப்புவதில்லை என்று தான் தெரியுமா? அவன் அபத்தமாக ‘நான் அவர்களை நேசிப்பதில்லை என்று கூறுவான். ஆனால் உண்மையில் அவன் ஒவ்வொரு கடிதத்தையும் பத்திரமாக, பொக்கிஷமாக வைத்திருக்கிறான். அவன் இரவில் தனியாய் இருக்கும் நேரங்களில் அவற்றைப் படித்துப் பார்க்கிறான். அவன் ஏன் அவற்றுக்குப் பதில் அனுப்புவதில்லை? ஏன் திரும்பப் படிக்கிறான்? ரயனுக்கு ஏதோ பிரச்சனை என்று எனக்குத் தெரியும். ஆனால் ஹரி தான் கண்மூடித்தனமான நடந்து கொள்கிறான்.

ரயனைக் கூட புரிந்து கொள்ள முயற்சிக்கலாம்; ஆனால் இந்த ஹரியைப் புரியவே இல்லை. அவனும் என்னைப் போன்றவன் தான் - சாதாரணமாக, வசீகரம் இல்லாமல், குண்டாக, போர் அடிக்கும் பையன். ஆனால், அவனுக்கு தான் ‘வேறு மாதிரி’யாக வேண்டும் என்று ஆசை - கூல், கெட்டிக்காரத்தனம் மற்றும் சாமர்த்தியம் - அதாவது ரயன் மாதிரி மாற ஆசை. ஆனால், ஆழ் மனதில் அப்படி மாற முடியாது என்று நன்றாகத் தெரியும். வைவாவில் பிணம் போல் வாயடைத்துப் போன சாதிக்காத, நம்பிக்கையற்ற பையன் தான் அவன்; அப்படித்தான் ஆகப்போகிறான். இவ்வளவு நாள் பிரபலமாக இல்லாதவன் புகழைத் தேடி போக முடியாது. அது மட்டும் அவனுக்குப் புரிந்தால், அவனால் சீராகச் சிந்திக்க முடியும். அவன் ஒப்புக்கொள்ளமாட்டான். அதனால் அவன் “ஆபரேஷன் பெண்டுலம்” எனும் யோசனைக்குத் துணை போனான்.

முதலில் அவர்களிடமிருந்து பிரிந்து வந்த பொழுது எனக்கு நான் செய்தது சரியா என்று சந்தேகமாக இருந்தது. ஆனால் ‘ஆபரேஷன் பெண்டுலம்’ பற்றி கேள்விப்பட்ட பின் திரும்பப் போகக் கூடாது என்று

தெளிவாக இருந்தேன். அதுதான் வாழ்க்கை, நாம் தீர்மானித்துவிட்டோம் என்று நினைக்கையில் அது நம்மை குழப்பத்தில் ஆழ்த்தும்.

*Downloaded from Ebookz.in*

# 8

## ஒரு வருடத்திற்குப் பிறகு

அலோக் எங்களை விட்டுப் பிரிந்து 365 நாட்கள் ஓடிவிட்டன என்று எனக்குத் தெரியும். ஏன் என்றால் அன்று மூன்றாவது ஸெமஸ்டரின் முடிவுகள் வெளிவந்தன. அவை பெரிதும் உற்சாகம் அளிக்கவில்லை. மற்றொரு ஐந்து புள்ளி சொச்சம். மற்றொரு முத்திரையை ஐஐடி மாணவர்களின் மீது பச்சை குத்தியது. நானும் ரயனும் இன்ஸ்டிக்குச் சென்று முடிவுகளைக் கண்டறிந்தோம். ஆனால் எங்களை அங்கே செல்லத் தூண்டியது, முடிவுகள் அல்ல; இன்ஸ்டி கூரையில் வம்படிப்பது தான்.

இந்தக் கூரையை முதலில் எப்பொழுது கண்டுபிடித்தோம் என்று நினைவில்லை. நாங்கள் கஞ்சா அடிக்கத் தொடங்கிய சமயத்தில் தான் இருக்கணும். வோட்கா குடிக்கும் பொழுது தான் கஞ்சா அடித்தோம். பிங்க் ஃபிளாயிடு கேட்க ஆரம்பித்திருந்தோம், ஃபிளாயிடு, வோட்கா, கஞ்சா, இன்ஸ்டி கூரை; வாழ்க்கைக்கு எது தேவையோ அவை அனைத்தையும் செய்தோம். ஐஐடி வாழ்க்கையைத் 'தேவலாம்' என்று ஆக்கிய விஷயங்களைச் செய்தோம். அதுவும் நாங்கள் ஐந்து புள்ளி சொச்சம் ஆனபின்.

இன்ஸ்டி கட்டிடம் பிரம்மாண்டமானது. ஒன்பது மாடிகள் கொண்டது; பின்னாடி யாருக்கும் தெரியாமல் இருந்த படிக்கட்டுகள் வழியே ஏறி ஒன்பதாவது மாடிக்கு வந்தபின் இந்த மொட்டை மாடியான கூரையை அடைய வேண்டும். அந்த மொட்டை மாடிக்கு ஒரு பழைய பூட்டு இருந்தது. ஆனால், தாழ்ப்பாள் அரதப் பழசு; ரயனுக்கும் அவன் ஸ்க்ரூ ட்ரைவருக்கும் மூன்று நிமிடம் கூடத் தேவைப்படவில்லை. அந்தத் துரு ஏறின தாழ்பாள் திறந்தது. நாங்கள் சந்தோஷ மேகங்களில் பறந்தோம். அதுதான் காம்பஸின் உச்சப்புள்ளி. அங்கு ஒன்றும் இல்லை. வெறும் கான்கிரீட் தரை. அதற்கு குட்டி மதில் சுவர் கூடக் கிடையாது. காலியாகத்தான் இருக்கும். இன்ஸ்டியின் பெல் டவரை விட தள்ளியிருந்தது. கணினிகளுக்காக சில டிஷ் ஆன்டெனாக்கள் பொருத்தப்பட்டிருந்தன. இருட்டிய பின் நட்சத்திரங்கள் மட்டுமே கண்ணுக்குப். புலப்பட்டன. ஏறி நின்று கொண்டு பார்த்தால், கீழே காம்பஸ் தெருக்கள் தெரியும்; அங்கே தெரு விளக்குகள் இருக்கும். ஒரு கிலோ மீட்டர் தள்ளி குமாவோன் மற்றும் பல விடுதிகள் தெரியும்.

ரயன் வோட்காவை எடுத்து வெளியில் வைத்தான். கஞ்சா மற்றும் வாக்மேன் என்று எல்லாவற்றையும் எடுத்து வெளியே வைத்தான். வாரத்தில் இரண்டு நாட்கள் நாங்கள் வழக்கமாய்ச் செய்வதுதான்.

கான்கிரீட்டில் படுத்துக்கொண்டு இருட்டை வேடிக்கைப் பார்ப்போம். வெயில் சூடு குறைந்தும். அந்தக் கூரையில் வெப்பம் தெரியும். ரயன் காதில் போட்டுக் கொள்ளும் இயர் ஃபோன்களை என்னுடன் பகிர்ந்து கொள்வான். எனக்கு ஒரு கஞ்சா நிரம்பிய சிகரெட்டைக் கொடுத்தான். வோட்கா பாட்டிலை நடுவில் வைத்துக் கொண்டு படுத்திருந்தோம்.

குடி, இழு, குடி, ரீவைண்டு, நிறுத்து, ப்ளே... அந்தப் பாட்டின் வரிகள் எங்களைத் தழுவியது. நாங்கள் மேலே பறந்தோம்; வானம் கீழே இறங்கியது.

"மற்றவர்கள் ஜிபிஏ பற்றிக் கத்துவது கேட்கிறதா?" என்று ஒரு புகை வளையத்தை விட்டபடியே கேட்டான்.

புகை அழகானது என்று எனக்குத் தோன்றியது; கனமில்லாமல், வடிவமில்லாமல், சக்தியே இல்லாதது போன்ற மாயை எழுப்பியது யார் புகையை இழுக்கிறார்களோ அவர்களின் ஆளுமைக்கு உட்பட்டது போல் தோன்றினாலும் அது உள்ளிருந்து வந்து நமக்கு மேலே எங்கோ பறக்கிறது. கஞ்சா என்னுள்ளில் இருந்து பேசுகிறதா, என்ன? இவ்வளவு தத்துவ மழையைப் பொழிகிறேனே?

"ஆம், அவர்களைப் பார்த்தேன். அவர்கள் நம்மை எப்படிப் பார்ப்பார்கள்" என்றேன்.

"எப்படி?"

"நாம் ஏன் இங்கு வந்தோம்? இந்த ஜிபிஏ இழவுக்கு நாம் ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்? நாம் அவர்களின் பார்வையின் தன்மையைத் தடுக்கிறோமோ?"

“அவர்களை ஒழிச்சுக் கட்டுடா”, புத்தி கூர்மையான வார்த்தைகள்.

ரயனுக்கு எல்லாமே தெரியும்!

“அது நிஜம் தான்!” என்றேன். “நாம் இங்கு சேர்ந்து அவர்களுக்கு ஒரு பிரயோசனமும் இல்லை”

“அப்படிச் சொல்லாதே! நாம் தான் சாதிக்காதவர்கள்!”

“அதனால்?”

“அதனால் நாம் ஆவரேஜைக் கீழே கொண்டு வருவோம். அதனால், அவர்களின் மதிப்பெண்கள் சிறப்பானவை போல் தோன்றும். அதனால் அவர்கள் வாழ்வில் மகிழ்வைக் கொண்டு வருவோம்.”

“சொல்வது சரிதான்,” என்று ஒப்புக் கொண்டேன்.

“மாணவர்களைப் பற்றி எனக்குப் பிரச்சனை இல்லை; பேராக்கள் தான்”

“டிஸைன் வகுப்பைப் பற்றித்தானே பேசுகிறாய்?”

“ஆமாம்; பேரா பாடியா. நீ அப்பொழுது அங்கிருந்தே தானே. எப்படி தொங்கு பாலம் கட்டலாம் என்று நான் ஒரு வடிவம் வரைந்தேன். அவர் பரபரப்படைந்தார்; ஒரு ஸ்கேல் படம் வரைந்து கொடுக்கச் சொன்னார் எனக்குச் - சிறப்பு இன்டர்ன் ப்ராஜெக்ட் தருவதாகக் கூறினார். என் பெயர் கேட்டார்; என் ஜிபிஏ தெரியவந்தது. உடனே அந்த பிராஜெக்ட், படம் எல்லாமே வேண்டாம் என்று சொல்லிவிட்டார். அந்தச் சாக்கடைப் புழுவை நம்ப முடியுமா இனி?” என்றான் ரயன்.

இருவரும் கஞ்சாவை இழுத்து முடித்தோம். ரயன் எழுந்து இன்னொரு சிகரெட்டைச் சுற்றத்தொடங்கினான். புகையிலையையும், கஞ்சாவையும் அழுத்தி இறுக்கினான். அது பேரா பாடியாவின் உள் உறுப்புகள் என்று கற்பனை செய்து கொண்டான்.

“அவரை ஒழிச்சுடுடா”, அவன் சொன்ன புத்தி கூர்மையான அதே வார்த்தைகளை ரயனுக்கே திருப்பிக் கொடுத்தேன். எங்கள் கிளாசுகளை நிரப்பினான். மிகவும் இருட்டி விட்டது.

“ஆமாடா; அத்தனை பேராக்களுக்கும் ஆப்பு வெக்கணும்!” என்றான் ரயன்.

“ஆமாம்’; ஆனால் பேரா வீரா பரவாயில்லை.” எங்களின் ஃப்ளூயிட் மெக்கானிக்ஸின் பேராசிரியர் அவர்.

“ஆமாம்; அவரை விட்டுவிடலாம்; ஆனால் நான் கேள்விப்பட்டவரையில் இன்னும் மோசமானதெல்லாம் வர இருக்கு’. ரயன் தன் இரண்டாவது சிகரெட்டைப் பற்ற வைத்தான்.

“யாரது?” இன்னொன்றைப் பிடிப்பதா வேண்டாமா என்று யோசித்தேன். ரயனின் சகிப்புத் தன்மை என்னுடையதை விட அதிகம். அவன் கஞ்சாவைச் சாப்பிட்டால் கூட நிலைத்து நிற்பான்; எனக்கு போதை ஏறத் தொடங்கியது. நான் இறகை போல் லேசாக உணர்ந்தேன். உலகின் மேல் பறப்பது போலிருந்தது. எல்லாருக்கும் ஆப்பு தான்டா பேராக்கள், மாணவர்கள் மற்றும் வடிவமைக்கும் பாடங்கள்.

“பேரா செரியன்.”

“நேஹாவின் அப்பாவா?” என்று மெதுவாக தெளிவு நிலைக்கு வந்தேன்.

“ஆமாம்; அவர் எல்லாக் கொடுமையிலும் பெரிய கொடுமை என்கிறார்கள். அவர் பிரிவின் தலைவர். அவர் கட்டுப்பாட்டு அரக்கன். மற்ற பேராக்களையும் மாணவர்களையும் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதில் மகிழ்ச்சி கொள்பவர்.

நேஹாவின் தந்தை தன் பெண்ணைத் தன் ஆளுமையில். வைத்திருக்கிறார் என்பது தெரியும். “உனக்கு யாரு சொன்னார்கள்?”

“தெரிந்த விஷயம். யாரை வேண்டுமானாலும் கேட்டுப் பார்- அதுவும் ஸீனியர்களை. அனுராக் தான் சொன்னான்?”

“அவர் எப்பொழுது நமக்கு நடத்துவார்?”

“அடுத்த வருடம். அவர் மூன்றாவது வருடப் பாடங்களை நடத்துவார்” என்றான் ரயன்.

“அடுத்த வருடம் மிகவும் தொலைவில் இருக்கு. எனக்கு மற்றொரு கஞ்சா தேவை.”

இன்னும் இரண்டு வருடங்களுக்கு மேல் இருக்கா என்ன இந்த இடத்தைவிட்டுத் தப்பிச் செல்ல? இன்னும் மோசமானவர்கள் வர இருக்கிறார்கள். எனக்கு இன்னொரு கஞ்சா கண்டிப்பாகத் தேவை.

“இந்தா” என்று ரயன் சுமாராகச் சுருட்டிய சிகரெட்டைக் கொடுத்தான். அவன் ஒரு நல்ல நண்பன்; சிகரெட் சுருட்டித் தருகிறானே.

“சரி, எனக்கு மதிப்பெண்கள், பேராக்கள் பற்றிப் பேசப் பிடிக்கவில்லை. வேறு பேசேன்,” என்றேன்.

ராயன் மௌனமானான்; அவன் பேச எதையோ தேடுகிறான் என்று நினைத்தேன்.

“உன் கர்ள் ஃபிரெண்டு எப்படியிருக்கா?” மூளையை ஒரு இருபது நொடி கசக்கிவிட்டுக் கேட்டான்.

இப்படித்தான் அவன் நேஹாவை அழைப்பான். அவள் பெயர் சொல்லமாட்டான். அவள் என் கர்ள்ஃபிரெண்டாக இருப்பதால் நேஹாவை பெயர்கூறி அழைக்கமாட்டான்.

“நேஹா நல்ல இருக்கா. அடுத்தவாரம் படம் பார்க்கப்போறோம்.”

“ஓ! நீங்கள் தீவிரம் அடைந்துவிட்டீர்களா?”

“எதைப் பற்றி?”

“தெரியலே; நீ அவளை காதலிக்கிறாயா?”

“எனக்கும் தெரியலே,” என்றேன்.

இப்படித்தான் ஆண்கள் உறவுகளைப் பற்றிப் பேசிக் கொள்வார்கள் யாருக்கும் எதுவும் தெரியாது - கேள்வி கேட்பவர், பதில் சொல்பவர்.

“ஏதாவது சொன்னாளா?”

“உனக்குத் தான் தெரியுமே. எப்பப் பார் மூடி; ஒரு சமயம் ஒரே ஈஷிண்டு கொஞ்சலாக இருப்பாள்; என் கையை பிடிப்பாள்; படம் பார்க்கும் பொழுது மிகவும் நெருக்கமாக இருப்பது போல் தோன்றும். ஆனால், நான் ஏதாவது செய்ய முயன்றால் உடனே நிறுத்திவிட்டு எனக்கு சொற்பொழிவு கொடுப்பாள் - தான் எவ்வளவு நல்ல பெண்; நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி.”

“நீ அப்படி என்ன தான் செய்தே? நீ கொஞ்சம் கெட்ட பையன் தான்,” என்று ரயன் சிரித்தான். அடச் சே! நம்மைப் பற்றி நன்கு தெரிந்தவர்கள் என்றால் இப்படித்தான். நாம் பேசுவதற்கு முன்பே இப்படித்தான் என்று முடிவு கட்டி விடுவார்கள்.

“நான் ஒண்ணுமே செய்யலே. இங்க பார்; நான் இன்னும் முத்தமிடக் கூட இல்லை. ஒரு இருபது முறை சந்தித்திருப்போம். எனக்கு முத்தமிடும் ஆசை வந்தால் அவள் என் முழங்கையைக் தள்ளிவிடுவாள்.”

“நல்ல பெண் போலத் தெரிகிறாள். நீ அதிர்ஷ்டசாலி.”

“டேய்! சாவடிக்காதடா! யாருக்கு வேணும் நல்ல பெண்!” அது நிஜம்தான் - நல்லவர்கள் போர்! அவர்கள் கஞ்சா தரமாட்டார்கள்; முத்தமும் தரமாட்டார்கள்.

“அவளோடு பேசு. அவளிடம் சொல்லு - கொஞ்சம் கெட்டப் பெண்ணாய் இருப்பதில் தப்பேயில்லை; அவளுக்குமே அப்படி மாற ஆசையிருக்கும்,” என்றான் ரயன்.

“உனக்கென்ன பைத்தியமா? மறை கழண்டுடுச்சா? அவள் பெண்; பெண்கள் கெட்ட பெண்ணாக ஆசைப்படவே மாட்டார்கள்.”

“அவங்களும் அப்படித்தான். என்ன, நம்மைவிடக் கொஞ்சம் கம்மியாக ஆசைப்படுவார்கள்.”

எனக்கு நேஹாவை என்னவெல்லாம் செய்ய ஆசையோ, அவளுக்கும் அதே விருப்பம் இருக்கும் என்று கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை. “நம்ப முடியவில்லை. உனக்கு கர்ள்ஃபிரெண்டு இருந்திருக்காளா?” என்றேன்.

“சரி நம்பாதே; பெண்களைப் பற்றிய பேச்சு போதும். இன்னொரு ரௌண்டு அடித்து விட்டுப் பாட்டை மாற்றிப் போடலாம்,” என்றான் ரயன்.

ரயன் தன்னைப்பற்றி அதிகம் பேசிக் கொள்வதில்லை. சில சமயம் அவனுக்கு ஓரினச் சேர்க்கையில் விருப்பமோ என்று கூடத் தோன்றும். ஆனால் அவன் “கே” என்று ஆங்கிலத்தில் சொல்வது போல் அல்ல. அதாவது எனக்குத் தெரிந்திருக்குமே. நான் அவனுடனே தான் வாழ்கிறேன். நான் அவ்வளவு அசிங்கமாக இருந்தாலொழிய எனக்குத் தெரிந்திருக்கும். ஆனால் அவன் “கே” இல்லை. திரைப்படங்களில் வரும் கதாநாயகிகளை ரசிக்கிறானே! அழகிய பெண்களைக் கண்டால் சாலையில் செல்லும் போது சீட்டியடிப்பான். முக்கால் வாசி நேரம் பெண்களைப் பற்றி யோசிக்கும் விருப்பம் இல்லை.

“இன்னொரு பிங்க் ஃபிளாயிடு பாடல் டேப்பை மாற்றினான். பாட்டிலில் இருந்த வோட்காவின்

அளவு குறைந்து கொண்டேயிருந்தது. தன் பழுப்பு காகிதப் பையில் கடைசி கஞ்சா பொட்டலத்தைத் தேடினான் ரயன். ஒரு பாதி நிலா வானில் தெரிந்தது. வெளிச்சம் வந்தது. நட்சத்திரங்கள் பெருமையாக மினுமினுத்தன. அதிகம் ஜிபிஏ கொண்ட மாணவர்களைப் போல் கண்சிமிட்டின.

ஃபிளாயிடு பற்றித் தெரியுமா? பாடல் மிகவும் நன்றாக இருக்கும். முக்கியமாக தண்ணி அடித்தால் அலாதியாக இருக்கும். என்னவோ சரக்குக்குத் துணை போவதற்காகவே பாடல் இயற்றினாற் போல். சமோஸா - சட்னி, இட்லி -சாம்பார், ரஜ்மா - சோறு, வோட்கா - ஃபிளாயிடு - இந்த 'காம்போக்களை' அடித்துக் கொள்ள ஆள் இல்லை.

இன்று என்னை எது நினைவுக்கு கொண்டு வருகிறது தெரியுமா?" என்றான் ரயன்.

"எது?"

"நம் முதல் ஸெம் முடிவுகள். ஞாபகம் இருக்கா?"

"இருக்கே; முதல் ஐந்து புள்ளி!"

"பிறகு?"

"என்ன?"

"குண்டன் நம்மை விட்டுப் பிரிந்தான்."

ராயன் இன்னமும் அவனை 'குண்டன்' என்று தான் அழைத்தான். அது அவமானப்படுத்துவது போல் தோன்றினாலும் அவன் அதைச் செல்லமாகவும், பாசமாகவும் தான் உபயோகித்தான். இந்தக் கடந்த ஒரு வருடம் முழுவதும் ரயன் அலோக்குடன் பேசவில்லை; என்னையும் பேச விடவில்லை. "அவனிடம் செல்லாதே; நம்மை விட்டுச் சென்றவன்," என்றான். நான் அவன் சொல் பேச்சுக் கேட்காவிட்டால் ரயனுக்குப் பிடிக்காது; அடம் பிடிப்பான் என்று தெரியும்.

"இன்று எப்படி அலோக்கைப் பற்றி நினைத்தாய்?" என்று கேட்டேன். எவ்வளவு வோட்கா பாக்கியிருக்கு என்று எட்டிப் பார்த்தேன். நிச்சயம் ரயன் எக்கச்சக்கமாக குடித்திருக்க வேண்டும், இப்படியெல்லாம் பேச.

"இன்றைக்குத் தான் பெயரைச் சொன்னேன். ஆனால் அடிக்கடி நினைத்துக் கொள்வேன்."

ரயன் இப்படி சிந்திக்கும் மனநிலைக்கு வந்துவிட்டான். கஞ்சாவும், வோட்காவும் எக்கச்சக்கமாக போதை ஏற்றிவிட்டன.

"அவன விடுடா!" என்றேன். பாடலில் எனக்குப்பிடித்த வரிகள் வர ஆரம்பித்தன.

"அவன் இப்பொழுது என்ன பண்ணிக் கொண்டிருப்பான்?" என்றான் ரயன்.

"யாரு?" என்றேன். "அலோக்கா?"

ரயன் ஆமாம் என்றான்.

"வெங்கட்டுடன் டப்பா அடித்துக் கொண்டிருப்பான். இப்பொழுது அவன் ஆறு புள்ளிக்காரன், தெரியுமா?" என்றேன்.

"உனக்குப் புரியுதா, ஹரி? அவன் செய்தது சரிதான்."

"ஆமாம், சரி".

"டேய் நான் நிஜமாத்தான் சொல்றேன். நீயும் போயிருக்கணும். நான் உனக்கு ஏற்ற நண்பன் இல்லை."

அட என்ன நடக்குது இங்கே? நான் அடித்த கஞ்சா போதையெல்லாம் ரயனை சமாதானம் செய்வதில் வீணாகி விடுமா? எனக்கு இரண்டு வழி இருக்கு: ஒன்று அவனை வாயை மூடிக்கொண்டு பாட்டை ரசிக்கச் சொல்வது; இரண்டு அவன் என்னச் செய்யச் சொல்கிறானோ அதைச் செய்வது.

"என்ன பிரச்சனை ரயன்? உடம்பு சுகமில்லையா?"

"இல்லை. உடம்புக்கு ஒன்றும் இல்லை. நீயும் போயிருக்க வேண்டும். எல்லோரும் என்னைவிட்டுப் போய்விடுவார்கள். அவர்கள் எல்லோரும் சரியாகத்தானே யோசித்திருக்க வேண்டும்?"

"என்ன?"

"ஆமாம். போய்விடுவார்கள். அப்பா, அம்மா அலோக் எல்லோரும் தான்."

“நீ குண்டன் செய்தது சரி தான் என்று தானே நினைக்கிறாய்? நான் அவன் மீது அக்கறை கொள்ளவில்லை என்றா நினைக்கிறாய்?”

என்னிடம் ஆதரவோ, உறுதியோ கேட்டாலே எனக்குப் பிடிக்காது. ஆனால் வேறு வழியே இல்லாமல் அவர்கள் போக்கில் போக வேண்டியுள்ளது.

“இல்லை ரயன். அலோக் மீது தான் தவறு. அவன் என்றாவது புரிந்து கொள்வான். கண்களை மூடிக் கொண்டு கவலையின்றி மிதக்கலாம் வா,” என்று அறிவுரை வழங்கினேன். நான்என் கண்களை மூடிக் கொண்டேன். கஞ்சாவும், வோட்காவுமாக சேர்ந்து என்னுள் இருந்த காவல்காரனை எழுப்பி விட்டது. எனக்கு என்ன வேண்டுமோ, அதை மட்டுமே பார்க்க விரும்பினேன். நேஹா என் பக்கத்தில் அமர்ந்து என்னைப் பார்த்து புன்னகைத்து என்னைக் கட்டிப்பிடித்தாள். அவளின் முடி, முக்கியமாக அந்த ஒற்றைக் கற்றை, மென்மையாக அவள் நெற்றியில் புரண்ட அந்த முடி காற்றில் என் முகம் தழுவிச் சென்றது. அவளின் வட்டமான முகம் நிலவை ஒத்து இருந்தது. இல்லை நான் வெறும் நிலவைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறேனா? போதை எக்கச்சக்கமாக ஏறிவிட்டது. கஞ்சா பட்டையை கிளப்புகிறது. நான் என் வசம் இல்லை. எனக்கு இது பிடிச்சிருக்கு. ரயன் தடுத்து நிறுத்தும் வரை நான் மிதந்து கொண்டிருந்தேன்.

“இந்த இன்ஸ்டி கூரையின் சிறப்பு தெரியுமா?” என்று ரயன் கேட்டான். அவன் அசத்தலான உயரத்துடன் என்னைக் குனிந்து பார்த்தான்.

“யாருக்குமே தெரியாது, நாம் இங்கே இருக்கிறோம் என்று?”

“இல்லை. எப்பொழுதுமே நம்மிடம் ஒரு வாய்ப்பு இருக்கு.”

“என்ன வாய்ப்பு?”

“இந்தக் கூரையிலிருந்து குதித்து எல்லாவற்றையும் முடித்து விடலாம்.”

“வாயை மூடு ரயன்,” நான் எழுந்து உட்காருவதற்கே சிரமப்பட்டேன்.

“நான் உண்மையாகத்தான் சொல்கிறேன். அவர்கள் என்னை என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால், இந்த வாய்ப்பைத் தேர்ந்தெடுப்பது என் கையில்.”

“நீ ரொம்ப குடிச்சிருக்கே ரயன். எனக்குக் கீழே போகணும்” என்று எழுந்தேன். போதை தெளிந்துவிட்டது. நான் புத்திசாலித்தனமாக வேலை செய்ய வேண்டுமே என்று வேண்டிக் கொண்டேன்.

நான்காவது ஸெம்மில் நாங்கள் ஃப்ளூயிடு மெக்கானிக்கல் வகுப்பை விடாமல் கவனித்தோம். அதற்குக் காரணம் பேரா வீரா. மேலும் அது மதிய வகுப்பு. அதற்குள் நாங்கள் ஒரு வழியாகத் தூங்கி எழுந்து விடுவோம். பேரா வீரா முழுமையாக வித்தியாசமானவர். அவர் மற்ற பேராக்களை விட குறைந்தது இருபது வருஷமாவது இளையவர். அதிகம் போனால் முப்பதுக்குள் தான் இருக்கும். ஜீன்ஸ், டி-ஷர்ட் அணிவார். அவரின் அமெரிக்கப் பல்கலைக்கழக முத்திரை பதித்த டி-ஷர்ட்டுகள் அவருக்கு உயர்ந்த பெயர் பெற்ற பல்கலைக்கழகங்களிலிருந்து ஐந்து பட்டங்கள் இருந்தன - எம்ஐடி, கார்னெல், பிரின்ஸ்டன் போன்றவை. எல்லாவற்றிலிருந்து டி-ஷர்ட்டும் வைத்திருந்தார். அவர் கையில் பாட்டு கேட்கும் சாதனம் வைத்திருந்தார். வகுப்பு முடிந்ததும் காதில் மாட்டிக் கொள்வார். மாணவர்கள் கூறிய தகவல் - பேரா வீரா வெகு அண்மையில் தான் இன்ஸ்டியில் சேர்ந்துள்ளார். அவர் இவ்வளவு விரைவில் முழு நேர பாடம் எடுக்க முடியாது. அவர் உதவி செய்யும் பேராவுக்கு இதய நோய் இருப்பதால் பேரா வீரா எங்களுக்கு வகுப்பு எடுத்தார்.

“ஹே! வணக்கம்,” என்று வீரா வகுப்புக்குள் நுழைந்தார். முதல் வரிசையில் உள்ளவர்களுக்கு சூயிங்கம் வழங்கினார். முதல் வரிசை மாணவர்கள், டப்பா மன்னர்கள்; ஒன்பது புள்ளிக்காரர்கள். இதைப் பார்த்து மிரண்டனர். வேண்டாம் என்று மறுத்தனர். அவர் பாதிப்பே இல்லாமல் ஒன்றை எடுத்து வாயில் மென்றபடி கரும்பலகையை நோக்கி நகர்ந்தார்.

“டர்ப்யூலண்ட ஃப்ளோஸ்” என்று கொட்டை எழுத்துக்களில் பலகையில் எழுதினார்.

“முதல் ஐந்து வகுப்புகளில் நாம் எளிதான லாமினர் ஃப்ளோக்களைப் பற்றி படித்தோம். இதன் வடிவமும், சுழற்சியும் என்ன என்று கண்டுபிடிக்க ஃபார்முலாக்களும், கணக்குகளும் உண்டு. இதற்கான கணக்கு தெரியுமா?

பதில்களை எதிர்பார்த்தார். அவர் மற்ற பேராக்களைப் போல் முதல் வரிசையை மட்டும் பார்க்கவில்லை. அவர் கடைசி வரிசை வரை தேடினார். “நான் படிக்கிற மாணவர்களையே அனைத்து கேள்விகளையும் கேட்கப் போவதில்லை. பின் வரிசையில் அக்கறையே இல்லாத பாவத்தில் அமர்ந்திருக்கும் கூல் மச்சிகளைக் கேட்கப் போகிறேன்.”

நானும் ரயனும் எப்பொழுதும் பின் வரிசையாளர்கள்; கண்ணில் படாமல் பாதுகாப்பாக உட்கார வேண்டிய ஐந்து புள்ளிக்காரர்கள், ஒதுக்கப்பட்டவர்கள். ஆனால், பேரா வீராவுக்கு இதைப் பற்றியெல்லாம் அக்கறை இல்லை.

“ரயன், நீ சொல்லு, லாமினார் ஃப்ளோவின் முதல் கொள்கையின் கணக்கு என்ன?”

“ஸார், நானா?” ரயனுக்கு ஆச்சரியம் பிடிபடவில்லை; பேராவுக்கு அவன் பெயர் கூடத் தெரிந்திருந்ததே!

“ஆமாம் ரயன், நீயே தான். உனக்குப் பதில் தெரியும் என்று எனக்குத் தெரியும்.”

“நேவியர் - ஸ்டோக்ஸ் கணக்கு.”

“சரி! அதை வகுப்பில் இருப்பவர்களுக்காகப் பலகையில் எழுது.”

ரயன் கரும்பலகையருகே ஓடினான். முதல் வரிசையில் அமர்ந்திருந்த ஒன்பது புள்ளிக்காரர்கள் விஷமமாகப் பார்த்தார்கள். ஐந்து புள்ளிக்காரன் கரும்பலகையில் கணக்கைப் போடுவதா? ஆனால், கணக்கைச் சரியாகப் போட்டான்; தனக்கு தெரிந்தாலொழிய ரயன் கரும்பலகை அருகே செல்லமாட்டான்.

“நன்று! ரயன், நன்றி! அந்த லூப்ரிகண்ட் வேலை செய்வதை பற்றி ஸ்கூட்டரை வைத்துப் பரிசோதனை செய்து, போன டர்ம் எழுதிக் கொடுத்தது நீதானா?”

“ஆமாம் ஸார்”

“உன் ஸ்கூட்டரைப் பயன்படுத்தி பரிசோதித்தாயா?”

“ஆமாம் ஸார்; துல்லியமாக என்று சொல்ல முடியாது.”

“எனக்கு அது பிடித்திருந்தது,” என்றார் பேரா வீரா; அவர் ஒன்பது புள்ளிக்காரர்களைப் பார்த்தார். அவர்கள் பரபரப்பாக எழுதத் தொடங்கினர். பயிற்சி பெற்ற கிளிகளைப் போல் சொன்னதைத் திரும்பச் சொல்வார்கள். “எனக்கு மிகவும் பிடித்திருந்தது” என்று மறுபடியம் சென்னார்.

ரயன் தன் இருக்கைக்குத் திரும்பி வந்து உட்கார்ந்தான். அவனுக்கு மிகவும் பிடித்த வகுப்பு ஃப்ளூயிடு மெக்கானிக்ஸ். மிகவும் பிடித்த பேராசிரியர் வீரா. அந்த வகுப்பை மிஸ் பண்ணாமல் வருவான். பேரா வீராவுக்காக என்ன வேண்டுமானாலும் செய்வான். மற்றவர்கள் வித்தியாசமான கதை - வடிவமைப்புச் சொல்லிக் கொடுத்த பேரா; வீட்டுப் பாட வெறியர் தெர்மோ டைனமிக்ஸ் பேரா - இப்படி இவர்களுக்கெல்லாம் வித்தியாசமான கதை. ரயன் அவர்கள் ஈரல்களை லேத் இயந்திரத்தில் வெட்டித் துண்டு போடுவான்; வாய்ப்பு கிடைக்கவில்லை.

ப்ரியா திரை அரங்கில் நேஹாவை ஃப்ளூமெக் வகுப்பு நடந்து ஒரு வாரம் கழித்து சந்தித்தேன். என் கர்ள்ஃபிரெண்டை சந்தித்தேன் என்று சொல்லியிருப்பேன். ஆனால், பிரச்சனை என்னவென்றால் எனக்கு இன்னும் சரியாகத் தெரியவில்லை. அவள் என் கர்ள்ஃபிரெண்டு தானா என்று. ஒரு வருடத்துக்கு மேல் ஆகிவிட்டது. ஆனால் அவள் தன் மூடுக்கு ஏற்ப ஒவ்வொரு விதமாய் கூப்பிடுவாள். முதலில் நண்பன் என்றாள்; பிறகு நல்ல நண்பன் என்றாள். பிறகு சிறந்த நண்பன் என்றாள், அதற்கும் பிறகு ரொம்ப - ரொம்ப நல்ல மற்றும் சிறந்த நண்பன். இப்படி வார்த்தைகளின் அபத்தம் அதிகரித்துக் கொண்டே போகும். அவளுக்கு பாய்ஃபிரெண்டு என்ற வார்த்தையைச் சொல்வது பெரிய விஷயம். அவளின் அப்பா அவள் வாழ்க்கையில் பாய்ஃபிரெண்டே வைத்துக் கொள்ளக் கூடாது என்று சத்தியம் வாங்கியிருந்தார். அதைக் காப்பாற்ற விரும்பினாள். ஆனால், என்னுடன் திரைப்படம் பார்ப்பதை அது தடுக்கவில்லை. என் கையைப் பிடித்துக் கொண்டு இரண்டு வாரத்திற்கு ஒரு முறை ஒரு வருடமாகப் படம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

“இம்முறையும் தாமதமா?” என்று கேட்டாள். நான் ஒரு இரண்டு நிமிடம் தாமதமாக வந்திருந்தால் அதிகம்.

ஃப்ளூமெக் வகுப்பு இருந்தது. பேரா வீரா வகுப்பு நேரத்துக்கு மேலே எடுத்துக் கொண்டார். நாங்கள் அதைக் கூட யோசிக்காமல் அமர்ந்திருந்தோம்.

“பேரா வீரா என்பவர் இளைஞர் தானே?”

“ஆமாம், உனக்கு அவரைத் தெரியுமா?”

“தெரியாது; அப்பா அவரைப் பற்றிச் சொன்னார். என் அப்பாவுக்கு அவரைக் கண்டாலே வெறுப்பு.”

“உன் அப்பா ஒரு பெரிய...”

அவள் தன் புருவத்தை உயர்த்தினாள்.

“உள்ளே போகலாம்; விளம்பரங்கள், டிரெய்லர்கள் என்று ஒன்று விடாமல் பார்க்க வேண்டும்.

படத்தின்பெயர் “டோட்டல் ரீகால்” மற்றொரு அறிவியல்-கறபனை அபத்தம். டெல்லியில் உள்ள ஆங்கிலத் திரைப்பட அரங்குகளின் பிரச்சனையே இதுதான். ஒன்று சண்டைக் காட்சிகள் கொண்டவை; அல்லது பெரியவர்கள் மட்டுமே பார்க்கக்கூடியவை. எனக்கு இரண்டாமவற்றைப் பார்க்கக் கூச்சம் ஒன்றும் இல்லை, ஆனால் நம் கர்ள்ஃபிரெண்டைக் கூட்டிப் போக முடியாதே! நேஹாவைப் போன்ற பாரம்பரிய மிக்க நல்ல இந்தியப் பெண்களை நிச்சயம் அழைத்துச் செல்ல முடியாது. அதனால், அறிவியல் - கற்பனை அல்லது ஹிந்தி படங்கள் தான் பாக்கியிருக்கின்றன; பையனுடன் வெளியே வரும் சுயமரியாதை கொண்ட எந்தப் பெண்ணும் ஹிந்தி படத்துக்கு வர சம்மதிக்கமாட்டாள். அதனால் திரும்பவும் ஆர்னால்டு தன் தசைகளை மடக்கி விரித்து, கிரகங்களை அழிக்கும் படத்தைப் பார்த்துத் தொலைக்க வேண்டிய கட்டாயத்தில் மாட்டிக் கொண்டேன்.

“உனக்கு அறிவியல், கற்பனைப் படங்கள் பிடிக்குமா?” என்றபடி இருக்கையில் அமர்ந்தாள்.

‘பிடிக்கும்’ என்றேன். எனக்கு வேறு என்ன வழி இருந்தது?

“ஓ! சரியான ஐஐடி இன்ஜினியர் தான்”

ஆமாம். சரியான ஐஐடி இன்ஜினியர்கள் வடிவமைப்பு வகுப்பைக் கட்டடித்து விட்டு படம் பார்க்க மாட்டார்கள் பெண்ணே.

இதைவிட மோசமாக முடியாது என்று நான் நினைத்துக் கொண்டிருக்கும் பொழுதே, இன்னும் மோசமானது.

நானும் நேஹாவும் பால்கனியில் அமர்ந்தோம். (35 ரூ டிக்கெட், மொத்தமாகக் கொள்ளையடித்தனர்) டிரெயிலர் ஆரம்பிக்கக் காத்திருந்தோம். ஆனால், புதிய அரசாங்க விதிப்படி முதலில் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய குறும்படம் ஒளிபரப்ப வேண்டும்.

சரி! இந்தியாவில் ஜனத்தொகை அதிகம். மக்கள் பாதுகாப்பு சாதனம் பயன்படுத்த வேண்டும் தான். அப்படிச் செய்தால் புதியவர்கள் ஜனிக்கமாட்டார்கள். எளிய விஷயம் தானே? அப்படி என்று நீங்கள் நினைப்பீர்கள். ஆனால் யாரும் பாதுகாப்பான உடலுறவைப் பற்றி யோசிப்பதே இல்லை போல் தெரிகிறது. அதனால், அரசாங்கம் குழந்தைகளே வேண்டாம் என்று வைக்கும் வழிமுறையை விளக்கிக் கூறியது.

குறும்படம் தொடங்கியது; அரசாங்க மருத்துவமனையில் உள்ள ஒரு மருத்துவர் பெரும் ஞானியைப் போல் சிரித்தபடி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அவர்தான் குடும்பக் கட்டுப்பாட்டில் நம் நண்பன். அவரைப் பார்த்தால் இறப்பின் தூதுவன் போல் தோன்றியது. அவர் சொல்லும் அறிவுரை ஆண்களுக்கான வாஸக்டமி என்பது.

மில்லில் வேலை செய்யும் ஊழியர் ஒரு சின்ன வீட்டில் எளிமையான மனைவியுடன் அமைதியாக வாழ்கிறார். (அவர் எப்பொழுதும் சமைத்துக் கொண்டேயிருக்கிறார்) இரண்டு குழந்தைகள். அவர் தூங்கும் பொழுது ஓரிரவு தனக்கு ஆறு குழந்தைகள் என்பது போல் பயங்கர கனவு காண்கிறார். (அப்படியென்றால் மனைவியுடன் பல முறை அவர் உடலுறவில் ஈடுபட்டிருக்க வேண்டும்) ஆனால், தேவை அதிகரிக்கிறது - நிறைய உணவு, கல்வி, பொம்மைகள் என்று அப்பாவை நச்சரிக்கிறார்கள். ஆனால், அப்பா மில் வேலையில் அயர்ச்சி அடைகிறார் (உடலுறவு கொண்டதினாலும் தான்) அதனால் அப்படியே ஒடிந்து விடுகிறார். அப்பொழுது தான் நம் நண்பன், குடும்பக் கட்டுப்பாட்டு மருத்துவர், அல்லது இறப்பின் தூதுவன் வருகிறார்.

மருத்துவர் தன் நடமாடும் சாதனங்களுடன் வருகிறார். அவரிடம் ஒரு படத்தொகுப்பு இருக்கு. அதில் ஆணின் பிறப்புறுப்பு காட்டப்படுகிறது. முதல் வரிசையில் அமர்ந்தவர்கள் சீட்டியடித்து உற்சாகித்தனர். (திரையரங்குகள் வகுப்பறைகளுக்கு நேர் எதிர். முதல் வரிசையில் தான் எல்லா கலாட்டாவும் நடக்கும்.)

நான் என் கர்ள்ஃபிரெண்டுடன் படம் பார்க்கும் பொழுதுதான் இவை அனைத்தும் நடக்கின்றன. நான் செக்ஸைப் பற்றி அவளுடன் பேசியதே இல்லை. (பாதுகாப்பான செக்ஸைப் பற்றி சிந்திக்கக் கூட இல்லை) ஆனால், அந்த இறப்பின் தூதுவன், எங்கு வெட்டி என்ன செய்வார்கள் என்று ஆணின் உறுப்பைக் காட்டித் தெளிவாக விளக்கம் அளித்தான். பால்கனியில் அமர்ந்திருந்த மற்ற எல்லா ஆண்களைப் போல் எனக்கும் தர்ம சங்கடமாக இருந்தது. நேஹா என்னைப் பார்த்தாள்; நான் என் ஸீட்டில் நெளிந்து கொண்டிருந்தேன்.

“என்ன ஆச்சு?”

“இது எல்லாம் ரொம்ப அதிகம் என்று தோன்றவில்லையா? இப்படிப்பட்ட விஷயத்தை எதற்குக் காட்டுகிறார்கள்?

“என்ன? இது ஒரு கல்வி போதனை போன்றது.”

“ஆமாம். நான் படம் பார்க்க வரும் பொழுது எனக்கு இது தான் மிகவும் தேவை.”

“என்ன ஹரி இது! எனக்கு என்னவோ இது பெரிய காமெடி போலிருக்கு.”

திரைப்படத்தில் தெரிந்த மனைவி மருத்துவர் சொன்னவற்றை மிகவும் கவனமாகக் கேட்டார். எந்தப் பின விளைவும் இல்லாத செக்ஸைப் பற்றிக் கேட்டு புன்முறுவவிட்டார். எனக்கு என்னவோ அந்த மனைவிக்கும், மருத்துவருக்கும் நடுவில் ஏதோ கசமுசா என்று தோன்றியது. என் கற்பனையாகக் கூட இருக்கலாம்.

ஒரு வழியாக எல்லோரின் நிம்மதிப் பெருமூச்சுடன் குறும்படம் முடிந்தது. ஒரு அரைமணி நேரம் ஓடியிருக்கும்; மில் பணியாளர் தூக்கத்திலிருந்து எழுந்து தன் குடும்பத்தைக் கட்டுப்படுத்துவது எப்படி என்று உணர்ந்து தன் தந்தையாகும் தகுதியை வேண்டாம் என்று எழுதிக் கொடுத்து விடுகிறார். மகிழ்ச்சியுடன் முடிவு; மனைவியும் குழந்தைகளும் களிப்பில் கார்ட்டூனாக மாறிவிடுகின்றனர். அந்தத் தலைகீழ் முக்கோணம், குடும்பக் கட்டுப்பாட்டு இலாகாவினுடையது, தெரிகிறது. ‘அளவான குடும்பம் அன்பான குடும்பம்’ என்று ஒரு கடைசி அறிவுரையை நம்முன் எறிகின்றனர். பிறகு துப்பாக்கி - சுட்டுக்கொண்டே இருப்பதில் நிறைவு காணும் ஆர்னால்டு தோன்றுகிறார்.

படம் தொடங்கியதும் நேஹா என் கையைப் பிடித்துக் கொள்கிறாள். அவள் இப்படிச் செய்வதை ஒரு சௌகரியமாகக் கருதுகிறாள். இதைத் தவிர வேறு எதுவும் நான் எதிர்பார்க்க முடியாது. ரயனுடன் நான் பேசிய கடைசி உரையாடல் என் நினைவுக்கு வந்தது. நேஹாவுக்கும் கையைப் பிடித்துக் கொள்வதைத் தாண்டி ஏதாவது குறும்பாகச் செய்ய இரகசிய ஆசை இருக்குமா? அவளைக் கேட்டு விடலாமா? அப்படியொரு தைரியமான விஷயத்தைச் செய்யட்டுமா?

படம் முடிந்ததும் நாங்கள் நிரூலாஸுக்குச் சென்றோம் சாப்பிடுவதற்காக. “பேரா வீரா எப்படி? கொஞ்சம் சொல்லேன்.” நாங்கள் வாங்கிய பிட்ஸாவை சரியான அளவில் பங்கீடு செய்தாள். பெண்களுக்கு மேசையில் உணவைச் சீராக அடுக்கப் பிடிக்கும்.

“அவர் வித்தியாசமானவர்,” என்றேன். அவர் ஐந்து புள்ளிக்காரர்களையும், ஒன்பது புள்ளிக்காரர்களையும். வித்தியாசம் பாராட்டுவது இல்லை. அவருக்கு சுயமாகச் சிந்திப்பது பிடிக்கும். அவர் கொடுக்கும் வீட்டுப்பாடங்கள் கூட சிந்திக்க வைப்பவை.”

“எப்படி?”

அவர் எங்களுக்கு ஒரு டர்ம் பேப்பரைக் கொடுத்தார். ஃப்ளூயிட் மெக்கானிக்ஸைப் பற்றிய ஒரு விஷயத்தை இன்ஜினீயரிங் பிரச்சனையோடு இணைக்கச் சொன்னார். பெரும்பான்மை பேராக்கள் சொல்வது:

“சாப்டர் 10ல் உள்ள கணக்குகள் அனைத்தையும் போடுங்கள்” என்பதாக இருக்கும். ஆனால் பேரா வீரா மாணவர்களின் கருத்துக்களை வரவேற்கிறார்.”

“அவர் கூல் போல் தெரிகிறது. பார்ப்பதற்கு எப்படி? நல்ல அழகனா?”

“ஆமாம் என்று நினைக்கிறேன்.”

“அப்போ நான் அவரைச் சந்திக்க வேண்டும். என் அப்பாவை விட்டு அவரை வீட்டுக்கு அழைக்கச் சொல்கிறேன்,” என்று பலமாக சிரித்தாள்.

என்னுள் ஒரு பொறாமை அலை உதித்தது. தற்பொழுது பேரா வீரா அவ்வளவு நல்லவர் போல் தோன்றவில்லை.

“நீ எக்கேடாவது கெட்டுப்போ!”

“ஹே! என்ன பொறாமையா?”

“இல்லையே நான் எதற்குப் பொறாமைப்பட வேண்டும்? நான் ஒன்றும் உன் பாய்ஃபிரெண்டு இல்லையே?”

நேஹா உரக்கச் சிரித்தாள்; அவளுக்கு மட்டுமே நகைச்சுவையாகத் தோன்றும் விஷயங்களுக்கு.முட்டாள் பெண்! அவளின் அந்த க்யூட்டான முடிக் கற்றையை வெட்டி விட்டால் என்ன என்று தோன்றியது.

“நான் சும்மா உன்னை கேலி செய்கிறேன். நான் அப்படியெல்லாம் சொன்னால் என் அப்பா என்னைக் கொன்றே விடுவார். அவருக்கு வீராவைப் பிடிக்காது. ஆனால், நீ உசுப்பேற்றுவதைப்

பார்க்கநல்லாத் தான் இருக்கு.”

“நான் ஒன்றும்…”

அவள் என் கையைப் பிடித்தாள். ஆனால், சிரிப்பை நிறுத்தவில்லை. எப்பவுமே ஏதோ ஒன்று பெண்களுக்கு மட்டும் பிரத்யேகமாக நகைச் சுவையுடன் செயல்படுவது எப்படி? இருந்தும் அவள் ஏன் அழகாகத் தெரிகிறாள்? நான் ஏன் அவளை முத்தமிடக்கூடாது?

அவள் சிரிப்பதை நிறுத்திவிட்டு சாதாரணமானாள். “ஸாரி, ஹரி. கோபப்படாதே, நீ என் மிகவும் செல்லமான, சிறிய சிறப்பான நண்பன்.”

இது என்ன புதுக் கவிதை? இந்த வாரத்துக்கான பட்டப்பெயரா? அவள் குனிந்து என் கன்னத்தை முத்தமிட்டாள். இப்பொழுது என் முறை என்று நினைத்தேன். எனக்குப் பெரிதும் அக்கறை இல்லை என்று அவளை நம்ப வைத்து பிறகு அவள் வாய் என் கன்னத்தின் அருகில் இருக்கும் பொழுது பச்சக்கென்று வாயில் முத்தத்தைப் பதித்துவிட வேண்டும் என ரயன் சொல்லியிருக்கிறான். நல்ல இந்தியப் பெண்களை முத்தமிட இதுதான் ஒரே வழி.

“நீ என்ன பண்றே?” நேஹா பின்னால் நகர்ந்தாள். நான் ஒன்றும் அறியாதவன் போலிருந்தேன்.

“என்ன உதட்டில் முத்தமிடப் பார்த்தாயா?”

“இல்லையே”

“ஹரி, உனக்கே தெரியும், நான் அப்படிப்பட்டவள் இல்லை என்று.”

பிறகு நீ எப்படிப்பட்டவள்? அந்தரங்க ஜோக்குகள் உனக்கு மட்டுமே சிரிப்பை வரவழைப்பவை? அல்லது உன் ஹிட்லர் அப்பாவா? எது உனக்குப் பிடிக்கும்?

“ஏன் என்றால் இது தவறு. இது எல்லாவற்றையும் கெடுத்துவிடும். இது தப்பாகத் தோன்றுகிறது. நீ ஒரு பெண் இல்லை. அதனால் உனக்கு இது புரியாது.”

ஆமாம், நான் சொல்ல ஆசைப்பட்டது. நீ ஆண் இல்லை. அதனால் உனக்குப் புரியாது. நாங்கள் பிட்ஸாவைத் தின்று விட்டு வீட்டிற்கு செல்ல வேண்டியது தானா? நான் ஒன்றும் பேசவில்லை. என் வாய்ப்பை இழந்துவிட்டேன். அதோடு சேர்ந்து என் விருப்பத்தையும் இழந்துவிட்டேன். அவளின் முகம் வேறு வாடிவிட்டது. அவள் வருத்தப்பட்டால் எனக்குப் பிடிக்காது. நாங்கள் எப்பொழுதுமே அடுத்த சந்திப்பை உணவின் இறுதியில் தான் தீர்மானிப்போம். அதனால் அடுத்த சந்திப்புத் தேதி குறிக்காமல் திரும்புவதில் இஷ்டம் இல்லை. “இந்தப் பிட்ஸா நன்றாக இருக்கு.”

“அடுத்த வியாழக்கிழமை சந்திக்கலாமா?”

“நிச்சயம்.”

“ஒரு தோழியின் பிறந்த நாளுக்கு பரிசு வாங்க வேண்டியிருக்கு. என்னுடன் கன்னாட் பிளேசுக்கு வருவாயா?”

நான் ஒப்புக் கொண்டேன். எனக்கு பிரியா அரங்கமும் அதைச் சுற்றி உள்ள விலை உயர்ந்த ஹோட்டல்களும் பயத்தைத் தந்தன.

“கூல்! நான் என் காரில் உன்னை ஐஸ்கிரீம் கடையிலிருந்து ஏற்றிக் கொள்கிறேன்,”என்றாள்.

திரும்பி நிமிர்ந்தே பார்க்காமல் தட்டில் இருந்த பிட்ஸா துண்டு தும்பட்டையை நக்கி சுத்தம் செய்தேன்.

“வெங்கட எனக்குக் கொஞ்சம் பொறுப்புகள் இருக்கு”என்றான் அலோக்.

“ஆனால், அது என் பிரச்சனை இல்லை தானே? இந்த மாதத்தில் இது மூன்றாவது முறை. இதுபோன்ற விஷயங்களை நான் கேட்கப் போவதில்லை,” என்று வெங்கட் குறுக்கிட்டான்.

அது குளிரான பிப்ரவரி இரவு. வெங்கட் அறையின் உள்ளிருந்து தான் சத்தம் கேட்டது. நானும், ரயனும் எங்கள் விடுதியிலிருந்த அறைக்கு நடந்து கொண்டிருந்தோம். கேண்டீனுக்குச் சென்று விட்டு, திரும்பிக் கொண்டிருந்தோம்.

“ஏன் இவ்வளவு சத்தமாகப் பேசுகிறார்கள்?” என்றான் ரயன்.

“எனக்குத் தெரியவில்லை. வழக்கமாக டப்பா வெங்கட் அறை அமைதியாகத் தான் இருக்கும்.”

ரயன் வெங்கட்டின் கதவில் தன் காதை பொருத்திக் கொண்டான்.

“ஏய், என்னடா பண்ணறே?” என்றேன்.

“உஷ்ஷ்… அவர்களுக்குள் ஏதோ விவாதம்.”

“உனக்கென்ன? நாம் போகலாம்,” என்றேன்.

“உஷ்ஷ்… இங்கே வா,” என்றான் ரயன்.

எனக்கும் எதற்கு விவாதம் என்று அறிந்து கொள்ள ஆவல். பெரியதாக இருக்குமோ? எதைப்பற்றி? நானும் என் காதை கதவில் வைத்தேன். ஒவ்வொரு வார்த்தையும் தெளிவாகக் கேட்டது.

“அலோக் இது மிகவும் அதிகம். என் ஜிபிஏ கிடைக்க நான் பத்து மணிநேரம் படிக்க வேண்டும். குறைந்தபட்சம் என் குழுவில் இருப்பவர்களைக் கூட நான் நம்பமுடியாதா?” என்றான் வெங்கட்.

“என் அப்பா மயங்கி விழுந்துவிட்டார். அவருக்கு ‘ஸ்ட்ரோக்’ வந்திருக்குமோ என்று பயமாக இருக்கு! இரண்டு முறை வீட்டிலிருந்து கூப்பிட்டு விட்டார்கள்…”என்றான் அலோக்.

“கேளு; உன் அம்மா எப்பொழுதும் உன் அப்பாவின் உடம்பைப் பற்றி அதிகப்படுத்தித்தான் கூறுவார். அவர் தேறிவிடுவார். நீ அங்கே போவதால் என்ன பயன்?”

“நான் தான் என் வீட்டில் ஒரே ஆண்பிள்ளை வெங்கட். எனக்குப் போகணும். இந்த முறை நீ பார்த்துக்கக்கூடாதா?” என்றான் அலோக்.

“முடியாது. அடுத்த வகுப்புக்கு அவர்கள் கொடுத்த குறிப்புகளை நான் படிக்க வேண்டும். உனக்கு இதெல்லாம் புரிவதே இல்லை. எப்படிப் புரியும் நீ தான் ஐந்து புள்ளி சொச்சமாச்சே,” என்றான் வெங்கட்.

“என்ன புரியணும்?” என்றான் அலோக்.

“நான் என் முதல் ராங்கைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். இரண்டாவது ராங்க் வாங்கியவன் என்னைவிட 0.03 புள்ளிகள் தான் பின்னாடியில் இருக்கான். நான் இந்த முழு பாடத்தை முடிப்பதா, குறிப்புகளைப் படிப்பதா?” வெங்கட் உரக்கக் கத்தினான்.

“டப்பா வெங்கட்”, ரயன் என் காதில் கிசுகிசுத்தான். நான் அவனைப் பேசாமல் இருக்கும்படி சைகை காட்டினேன்.

“வெங்கட் நீ எப்பொழுதும் படிக்கிறே. ஒரு முறை” அலோக் சொன்னான்.

“நான் ஒன்பது புள்ளிக்காரன், உனக்குப் புரியதா? என் இடத்தைக் தக்கவைத்துக் கொள்ள வேண்டும்!” இப்பொழுது வெங்கட் அலோக்கிடம் அல்லாமல் தனக்குத்தானே பேசிக் கொள்வது போலிருந்தது.

“நான் உன் நண்பன் இல்லையா? என் அப்பாவைப் பார்த்துக் கொள்ள வேண்டியது என் கடமை,” இம்முறை அலோக் போராடாமல் கெஞ்சினான். “போதும்!” என்றான் வெங்கட், “இந்த வீட்டுப்பாடம் எனக்கு 10% எடுத்துக் கொடுக்கும். அதனால் நீ போக முடியாது.”

“தயவு செய்து வெங்கட்,” அலோக்கின் குரல் அவனின் அம்மா குரல் போல் ஒலிக்கத் தொடங்கியது. அவன் விரைவில் அழுவான் போலிருந்தது.

“இது அதிகம். நான் உள்ளே போகிறேன்,” என்றான் ரயன். அவன் கதவை உதைத்துத் திறந்தான். நான் அவனைத் தடுத்து நிறுத்த முற்படுவதற்குள் நொடிப்பொழுதில் ரயன் உள்ளே சென்றுவிட்டான்.

அலோக் வெங்கட் அருகில் நின்று கொண்டிருந்தான். வெங்கட் நாற்காலியில் அமர்ந்திருந்தான். எங்களைப் பார்த்து திகைத்துப் போனார்கள்.

“என்ன இது,” என்றான் வெங்கட். “ரயன் நீ இங்கே என்ன பண்றே?”

சரியான கேள்விதான். ஒரு ஐந்து புள்ளிக்காரனுக்கு ஒன்பது புள்ளிக்காரன் அறையில் என்னவேலை? வெங்கட் ரயனைப் பார்த்த பார்வை - ஏதோ பாரைத் தேடி, குடிக்கும் அவசரத்தில் வழிதவறி கோவிலுக்குள் ரயன் நுழைந்துவிட்டான் போல் இருந்தது.

“என்ன பிரச்சனை?” ரயன் மொத்தமாக வெங்கட்டை ஒதுக்கினான். நான் அமைதியாக நின்றேன். வெங்கட் அறையைக் கண்ணால் அளந்தேன். ஒரு கட்டில், சில பல துணிகள் தவிர புத்தகங்கள், புத்தகங்கள் மேலும் புத்தகங்கள்.

“ரயன் இது உனக்கு சம்பந்தம் இல்லாதது,”என்றான் அலோக். அலோக் ரயனைப் பார்த்து அதிர்ந்துவிட்டான் என்று எனக்குப் புரிந்தது. இருந்தும் ஆழ் மனதில் அவன் ரயனை தன் பாதுகாவலனாக தான் எண்ணினான்.

பரிதாபமாக, ‘நான் - எப்பொழுது வேண்டுமானாலும் - அழுது-விடுவேன்,” என்ற முகபாவம் சட்டென்று மறைந்தது.

“நான், என்ன பிரச்சனைன்னு கேட்டேன்?” என்றான் ரயன்.

“நான் சொல்றேன் என்ன பிரச்சனை என்று,”என்றான் வெங்கட்,

“நாளை எங்களுக்கு “தெர்மோ” வீட்டுப்பாட கெடு. அலோக்கும் நானும் ஒரே குழுவில் இருக்கோம். இதற்கு பத்து சதவிகிதம் கிடைக்கும். ஆனாலும் அவன் வீட்டிற்கு போக வேண்டுமாம்…”

“நான் என்ன சுற்றுலா செல்கிறேனா? என் அப்பாவுக்கு உடம்பு சுகமில்லை,” என்றான் அலோக்.

“நான் வேணுமானாலும் போகட்டுமா?” என்றான் ரயன்.

எனக்குக் குழப்பமாக இருந்தது. ஒரு வருடம் பேசாமலே இருந்தான். பிறகு இந்த திடீர் உதவி.

அலோக்கோடு சேர்ந்து கொள்ளப் பார்க்கிறானா? அல்லது வெங்கட் எவ்வளவு மோசம் என்று நிரூபிக்கிறானா?

“ஹஹ்? நீயா? எங்க வீட்டுக்கா?” என்றான் அலோக்.

“ஆமாம். உன் வீடு எங்கே என்று எனக்குத் தெரியும். உன் அப்பாவை நான் ஏற்கனவே மருத்துவமனைக்குக் கூட்டிப்போயிருக்கேன். என்னிடம் ஸ்கூட்டர் இருக்கு. நான் விரைவில் சென்று விடுவேன். நீ போக வேண்டுமானால் நான் அந்த வீட்டுப் பாடத்தை முடிக்கிறேன். ஆனால், என்னால் இந்த உன் நண்பனான டப்பா பொட்டையோடு வேலை செய்ய முடியாது,” என்று ரயன் ‘நண்பன்’என்ற வார்த்தையை அழுத்திச் சொன்னான்.

ரொம்ப அதிகமாகப்பட்டது. ரயன் அலோக்குக்காக, அன்னை தெரஸா போல் நடந்து கொண்டான். அன்று அலோக் இவனை கேவலப்படுத்தி வெளியேறினான். இன்று ரயன் ‘அனைத்தையும் – சரி செய்யும்’ தேவதை போல் நடந்து கொள்கிறான். நான் வெங்கட்டைப் பார்த்தேன். இன்ஸ்டியில் உள்ள அகம்பாவமான பேராக்களின் இளைய வாரிசு போல் இருந்தான். குமாவோனில் உள்ள அனைவருக்கும் சமைத்துவிடும் அளவுக்கான எண்ணயைத் தலையில் தடவியிருந்தான். அவன் நெற்றியில் விபூதி பட்டை. நிறைய கடவுளிடம் பிரார்த்தனை செய்வான் போலிருந்தான். இருப்பினும் அந்த நிமிடம் ரயன் தான் தேவன் போல் தெரிந்தான்.

“நிஜமாவா?” என்றான் அலோக்.

“சரி, நான் கிளம்பறேன்”, என்று ரயன் எழுந்தான். அலோக் தலையாட்டினான். ரயன் அறையைவிட்டு வெளியேறினான்.

நாங்கள் ஒரு நிமிடம் அமைதியாக இருந்தோம். ரயன் ஒரு பிரச்சனையைத் தீர்த்துவிட்டான். ஒரு நோயாளியின் உயிரும் காப்பாற்றப் படும், ஒரு ஒன்பது புள்ளி டப்பாக்காரன் எதிர்காலமும் பாழாகாது.

“சரி தீர்மானம் ஆகிவிட்டது. நீ இந்த வீட்டுப் பாடத்தைச் செய்,” என்றேன். எழுந்து வெளியே வந்தேன்.

“பொறு”, என்றான் அலோக்.

“என்ன?” என்றேன்.

அலோக் எங்களுடன் அந்த அறையைவிட்டு வெளியே வந்தான். ஒரு நிமிடம் கூட வீணாக்காமல் வெங்கட் தெர்மேடைனமிக்ஸ் புத்தகத்தை எடுத்துப் படித்தான். அலோக்கைப் பார்த்த பார்வை, ‘சீக்கிரம் திரும்பி வா’ என்பது போலிருந்தது.

“நன்றி”, என்றான் அலோக்.

“ரயனுக்கு நன்றி சொல்”, என்றேன்.

“சொல்கிறேன். அவன் என் மீது இன்னும் கோபமாக இருக்கானா?”

“இல்லை. பின் ஏன் உன் வீட்டுக்குச் சென்றான்?”

“உனக்குத் தான் ரயனைப் பற்றித் தெரியுமே. எனக்கு உதவி செய்தாலும் கோபம் குறையாமல் இருக்கலாம்.”

“ஆம்; அவன் அடம் அதிகம் தான். அதனால் என்ன? பிறகு நன்றி சொல்.” அலோக் மீது எரிச்சலாக வந்தது. இவன் தனக்கு ரயனைத் தெரியும் என்று சொல்லும் அருகதையை இழந்து விட்டான். என்னை விட

அவனுக்கு ஒன்றும் ரயனைப் பற்றித் தெரியாது. “ஹரி?” என்றான் அலோக். “நான் திரும்ப உங்களுடன் சேர்ந்து விடட்டுமா?” “எங்கே திரும்ப வரே?” எனக்கு குழப்பமாக இருந்தது. “அதுதான், திரும்ப நாம் மூன்ற பேரும்.” “ஏன்? வெங்கட்டுடன் சரிப்படலையா? “நான் என்ன செய்யறேன்னு தெரியாம பண்ணிட்டேன்டா. எனக்குத் திரும்பி உங்களுடன் இருக்க வேண்டும்.” என் காதுகளை என்னால் நம்ப முடியவில்லை. ஒரு வெறுக்கத்தக்க ஒன்பது புள்ளிக்காரனுடன் ஒரு வருடம் தங்கினால் அந்த கொடுமை!” நிச்சயமாவா சொல்றே?”

“ஆமாம், நிச்சயமாக”, என்றான் அலோக் மெல்லிய குரலில்.

பிறகு உணர்ச்சிவசப்பட்ட முட்டாள்களான நாங்கள் கட்டிப் பிடித்துக் கொண்டோம். அலோக் அழத் துடித்தான். எப்பொழுதும் மிச்சம் இருக்கும் சில கண்ணீர் சொட்டுக்களைச் சிந்தினான். எனக்கும் உணர்ச்சிகள் மேலோங்கின. நாங்கள் மூவரும் திரும்பச் சேருவோம் என்று நான் எண்ணவே இல்லை. ரயன் ஏதாவது நாடகம் நடத்துவான் என்று நினைத்தேன். ஆனால் கடைசியில் சேர்த்துக் கொள்வான். அலோக்கின் பாதி-அப்பாவைப் பார்த்துக் கொள்ள அவனால் பல மணி நேரம் செலவழிக்க முடியும் என்றால் அவனுக்கு அலோக்கிடம் அன்பு மிச்சம் இருக்கிறது.“நன்று. உன்னை மறுபடியும் வரவேற்கிறோம்”, என்றேன்.

“ஆமாம். இந்த தெர்மல் பாடம் முடிந்தபின் வருகிறேன்”, என்றான் அலோக். ஒரு வருடத்திற்குப் பிறகு இருவரும் சேர்ந்து சிரித்தோம்.

*Downloaded from [Ebookz.in](Ebookz.in)*

# 9

## எலிப் பாடம்

நினைத்தபடியே, அலோக் திரும்பி வந்ததற்கு கொஞ்சம் நேரம் ரயன் அலட்டிக் கொண்டான். ஆனால் வெகு நேரம் அப்படி இருப்பதில் அர்த்தமே இல்லை. அலோக் மேலும் பல லிட்டர் அழுத பின் நாங்கள் எல்லோரும் கரடிகள் போல் மேலே விழுந்து புரண்டு கட்டிப் பிடித்தோம். சட்டென்று நாங்கள் திரும்ப ஒரு குழுவாக மாறிவிட்டோம். வெங்கட் எறிந்த சாபங்களைக் கண்டு கொள்ளவில்லை. வெங்கட்டுக்கு அவன் புத்தகங்கள்; எங்களுக்கு நாங்கள்.

இந்த வரலாறு காணாத சம்பவத்தைக் கொண்டாட ரயன் ஒரு பார்ட்டி வைத்தான். அவனே அனைத்து வேலைகளையும் பார்த்தக் கொண்டான். தன் அறையைச் சுத்தம் செய்தான். இது ஒரு இமாலய சாதனை. ஏன் என்றால் யுகக்கணக்காக அறையில் படிந்திருந்த தூசியை தும்மல் மூலம் கூடக் கலைக்காமல் பாதுகாத்து வந்தான்.

“இதற்கு ஏன் எலி பார்ட்டி என்று பெயர் வைத்தான்?” என்று அலோக் குழம்பினான்.

“தெரியலே. ஒரு புதிய பாடத்திட்டம் வைத்திருக்கிறான். அதைப் பற்றிப் பேசப் போகிறான்.” என்றேன்.

ரயன், அவன் அறைக்குள்ளேயே நாங்கள் வரக் கூடாது என்று தடை விதித்திருந்தான். பார்ட்டி தொடங்கும் வரை எட்டிப் பார்க்க கூடாது என்று கண்டித்தான். அவன் திடீரென்று “டேய், குண்டா! உள்ளே வராதே! ஓடிப்போ!” என்று ஆறு முறையாவது அலோக்கைப் பார்த்துக் கத்தினான். விருந்தினர்கள் பட்டியலில்: நான், அலோக், சுக்வீந்தர், அனுராக் மற்றும் வைபவ் அடங்கினர். வைபவ் எங்கள் மாடியில் கடைசி அறையில் தங்கியிருந்தான். அவன் அறையில் வோட்காவுக்குப் பஞ்சமே இல்லை. அது போதும் ரயனுக்கு, ‘நல்ல-நண்பன்’ ஆவதற்கான தகுதி. பிறகு தான் எனக்குப் புரிந்தது. பட்டியலில் இடம் பெற்ற விருந்தினர்கள் அனைவருக்கும் ஒரு பொது விதி இருந்தது; அனைவரும் ஐந்து புள்ளிக்காரர்கள்; மதிக்கப்படாதவர்கள். நாங்கள் எல்லோரும் விடுதியில் அருகருகே தங்கியிருந்தோம். நாங்கள் எல்லோரும் ஆவலாக பத்து மணிக்காகக் காத்திருந்தோம். அப்பொழுது தான் திருவாளர் ரயன் கதவைத் திறப்பேன் என்று அறிவித்திருந்தார்.

“உள்ளே வாங்கடா”, என்றான் ரயன். நாங்கள் குறைந்தது ஒரு மணி நேரம் அவன் அறை வாசலில் காத்திருந்திருப்போம். பைத்தியமே பிடித்திருக்கும்.

உள்ளே நுழைந்தோம். இருட்டாக இருந்தது. ரயன் அறையிலிருந்து விளக்குகளை மாற்றி சிவப்பு பல்புகளைப் பொருத்தியிருந்தான். அறை முழுவதும் ஒரு அமானுஷ்ய சிவப்பு ஒளி. ஒரு ‘பார்’ போல் காட்சியளித்தது. வோட்கா, ரம் பாட்டில்கள் அடுக்கப்பட்டிருந்தன. தெருக்கடையிலிருந்து ஐஸ்ஸும் வாங்கியிருந்தான்; காண்டீனிலிருந்து கோக், எலுமிச்சை, ஐஸ் கட்டி, சர்க்கரை, முத்தாய்ப்பாக கஞ்சா சிகரெட்டுகள். ஒவ்வொரு விஷயத்தையும் பார்த்து, பார்த்து ஏற்பாடு செய்திருந்தான்.

இது மட்டும் அல்ல. அவன் சுவர்களில் நிர்வாணப் பெண்களின் படம். அமெரிக்க பலான பத்திரிகைகளிலிருந்து எடுக்கப்பட்ட போஸ்டர்கள். அமெரிக்காவில் பல்கலைகழகங்களில் படிக்கும் ஸீனியர்களிடமிருந்து குமாவோன்னுக்கு வருகை தந்துள்ள பத்திரிகைகள். விண்ணப்ப தாள்கள் அனுப்பும் பாக்கெட்டுகளில் இவையும் இந்திய மண்ணைத் தொட்டன. தங்க முடிக் கொண்ட பெண்கள், கருப்பு, சிவப்பு, ஒல்லி, தாராளம், சிறிய, பெரிய என்று அனைத்து ரகங்களிலும் பெண்கள் ரயன் அறையில் போஸ்டர்களாகத் தொங்கினர்.குறிப்பாக அனைவருமே துணியில்லாமல் இருந்தனர்! அலோக் அவற்றை வாய் பிளந்து நோக்கினான். ஏதோ சமையலறை ‘ஸிங்கில்’ யூஎஃப் ஓ (UFO)விண்வெளியிலிருந்து வேற்று கிரக வாசியின் பறக்கும் தட்டு இறங்கியது போன்ற திகைப்பில் ஆழ்ந்தான். “இந்தப் பெண்கள் பொட்டுத் துணி கூட இல்லாமல் பிறந்த மேனியாக இருக்கிறார்களே”, என்ற கடைசியாக வார்த்தைகளை மென்று விழுங்கினான்.

நன்றிடா அலோக். எங்கள் கண்களுக்குத் தெரியாத விஷயத்தை கண்டு பிடித்து விட்டாய். அவன்

வெங்கட்டுடன் ஒரு வருடத்தை வீணடித்து விட்டதால் பல விஷயங்களை இழந்து பாதிக்கப்பட்டிருக்கான்.

ரயன் அறையின் தரையில் அனைவரும் அமர்ந்தோம். ஒவ்வொரு விருந்தாளிக்கும் ஒரு குஷன் போட்டிருந்தான். முதலில் சரக்கு கொடுக்கப்பட்டதும் வழக்கமான "சீயர்ஸ்", யார் முதலில் முடிப்பார்கள் என்ற "பாட்டம்ஸ் அப்"போட்டி; பிறகு பிங்க்ஃபிளாயிடு எங்களுக்காகப் பாடத் தொடங்கினார்.

நாங்கள் முதல் கிளாஸை முடிந்தவுன் ரயன் மறுபடியும் நிரப்பினான். போதை ஏறிவிட்டது எனக்கு; நான் கஞ்சா சிகரெட்டுகளை எடுத்தேன். என்னுள் மூன்று ரவுண்டு இறங்கி விட்டால் உடம்பு கஞ்சாவைத் தேடி நச்சரிக்கும்.

சர்த் தன் சொந்த வழியில் தண்ணி அடித்தான். அன்பின் மிகுதியில் மற்றவர்களின் மீது அன்பைப் பொழியத் தொடங்குவான். அடுத்தவரின் தண்ணி அடிக்கும் இடம் பூராவும் இவன் தன் அன்பால் நிரப்புவான். அவன் அலோக் அருகே அமர்ந்திருந்தான். அலோக்கின் தோளில் கை போட்டான். அடிக்கடி தோள்களை நசுக்கினான்; தடவிக் கொடுத்தான்.

"பட்டைய கிளப்புற பார்ட்டிடா; அலோக் நீ மகிழ்ச்சியாக இருக்கியா?" என்ற ரொம்ப அக்கறையுடன் கேட்டான் சர்த்.

அலோக் ஆம் என்ற தலையசைத்தான். சர்தியின் கைகளை மெதுவாக எடுத்தான்; முன்னால் சாய்ந்து பேசினான். "ரயன், என்னடா அந்தப் புது விஷயம்? இந்தப் பார்ட்டியின்போது சொல்றேன் என்று சொன்னாயே?"

ரயன் எங்களுக்கு எதிரே அனுராக் மற்றும் வைபவுடன் உட்கார்ந்திருந்தான். "முதலில் ரகளையா பார்ட்டிய கொண்டாடலாம்", என்றான்.

"எனக்கு மிகவும் சந்தோஷமா இருக்கு. சொல்லு", என்றான் சர்த். திரும்பவும் அலோக்கின் தோளின் மீது கை போட்டான்.

"ஆமாமாம்; சொல்லு", என்று அனுராக்கும், வைபவும் சேர்ந்து சொன்னார்கள்.

"என்னுடைய திட்டத்தின் பெயர் எலித்திட்டம். ஆனால் அதைச் சொல்வதற்கு முன் நீங்கள் எல்லாம் ஒரு கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும்."

"என்ன கேள்வி?" என்றான் அனுராக்.

"உங்களுக்கு வாழ்வில் துல்லியமாக என்ன வேண்டும் என்று சொல்ல வேண்டும்."

"அதெல்லாம் சரி. உன் திட்டம் என்ன என்று சொல்லு, "ரயனின் ஹீரோத்தனம் பற்றி எனக்குத் தான் நன்றாகத் தெரியும். மேலும் என் மூளை முழுவதும் சரக்கு செய்த அலப்பறையில் ஆழமான கேள்விகளுக்கு என்னிடம் பதில் இல்லை.

'வாங்கடா! என்னுடன் ஒத்தழைத்து பதில் சொல்லுங்க', என்றான் ரயன். "உங்கள் வாழ்வைப் பற்றிய விஷயம் இது என்று புரிந்து கொண்டால் இந்தத் திட்டத்தைப் பாராட்டுவீர்கள். ஒரே ஒரு கேள்வி தான். வாழ்வில் என்ன வேண்டும்? ஒரு இரண்டு நிமிடம் யோசித்துப் பாருங்கள்."

நாங்கள் அமைதியானோம். ரயன் தன் திட்டத்திலிருந்து ஒரு விளம்பர இடைவேளை எடுத்துக் கொண்டான். எல்லோருக்கும் திரும்பவும் ஒரு ரவுண்டு ஊற்றினான். நான் நாலாவது ரவுண்டில் இருந்தேன். என் வாழ்வைப்பற்றி ஒன்றுமே புரியாமல் இருந்தேன். மற்றவர்கள் சிந்திப்பதை வேடிக்கைப் பார்த்தேன்.

"சரி, நிறைய நேரம் ஆயிடுத்து", என்றான் ரயன். "சர்த் உனக்கு என்ன வேண்டும்?"

சர்த் அலோக்கை இறுகக் கட்டிக் கொண்டு தன் பக்கம் அவனை இழுத்தான். அலோக்கின் உதட்டைமுத்தமிட்டுவிட்டு காதில் கிசுகிசுத்தான், "நான் சொல்லிடட்டுமா?"

அலோக் அந்த அன்பான ஆனால் போதையேறிய பிடியிலிருந்து தன்னை ஒருவாறு விடுவித்துக் கொண்டு ஆமாம் என்று தலையாட்டினான்.

"எனக்கு அமெரிக்கா போகணும். என் (GPA) ஜிபிஏவை வைத்துக் கொண்டு மிகவும் கஷ்டம். எப்படியாவது, எங்காவது, யாராவது, எனக்குத் தெரியலே... நான் அமெரிக்காவில் இருக்க வேண்டும் அவ்வளவு தான்" என்று சர்த் உளறினான்.

அனுராக் ஒரு புது கணிணி மொழி கண்டுபிடிப்பது பற்றி முணுமுணுத்தான். வைபவ் தன் சொந்த தொழில்/வியாபாரம் ஆரம்பிக்க ஆசைப்பட்டான்.

எனக்குப் புரிந்தது; ரயனுக்கு மற்றவர்களுடைய வாழ்க்கை இலட்சியங்களைப் பற்றி அக்கறை இல்லை. இருந்தும் மரியாதைக்குத் தலையாட்டினான். என்னிடமும், அலோக்கிடமும் மட்டுமே கேட்க

விரும்பினான்.

ரயன் அலோக்கைப் பார்த்துத் தலையாட்டினான்.

"உனக்குத் தான் தெரியுமே", என்றான் அலோக்.

"திரும்பச் சொல்வேன்."

"டெல்லியில் வேலை வேணும். என் பெற்றோர்களைப் பார்த்துக் கொள்ளணும். அவர்களின் பணப் பிரச்சனையைத் தீர்க்கணும்."

"அப்படியா?" என்றான் ரயன். அலோக்கின் இலட்சியம் அவனைப் பெரிதும் பாதித்ததாகத் தோன்றவில்லை.

"ஆமாம்" என்றான் அலோக் உரக்க.

"அப்படியா?" என்றான் சர்த். அவள் அன்பின் பேரில் கேட்டான். வேறு சந்தேகம் ஏதும் இல்லை.

"நீ ஹரி?" என்றான் ரயன்.

"எனக்குத் தெரியலே" எனக்கு நிஜமாகவே தெரியலே. என்ன வேணும் எனக்கு? இந்தக் கேள்வியைப் பற்றி நான் நிறைய சிந்தித்துப் பார்த்தேன். எனக்கு ஐந்து புள்ளி ஜிபிஏ வேண்டாம். குண்டாக, வசீகர மற்றவனாக இருக்க விருப்பம் இல்லை. வைவாவில் வாயடைத்து, நாக்கு ஒட்டிப் போக வேண்டாம். எனக்கு என்ன வேண்டாம் என்று தெளிவாகத் தெரியும்-ஏன் என்றால் நிறைய வேண்டாத விஷயம் என்னிடம் இருக்கு. ஆனால் என்ன வேண்டும் என்ற தெரிவதில் பிரச்சனை இருக்கு.

"உனக்குத் தெரியும். சொல்லுடா, சாம்பியன்!" என்று ரயன் உற்சாகப்படுத்தினான். 'சாம்பியன்!' அது ரயனின் வார்த்தை. ரயன் தான் சாம்பியன்! அவன் குண்டாக இல்லாமல், அழகானவன்; தன்னம்பிக்கை கொண்டவன்; கவலையற்றவன்; நான் ரயனை வெறுக்கிறேன்; அந்தத் தருணம் எனக்குப் புரிந்தது-எனக்கு ரயனைப் போல் ஆக வேண்டும்.

"ஒண்ணும் பெரிசா இல்லை", என்றேன். பதிலை யோசித்தேன். எல்லோரிடமும் ரயனைப் போல் ஆக வேண்டும் என்று சொல்ல முடியாது. ஏன் என்றால் ரயன் வேறு யாரைப் போலவும் மாற ஆசைப்படமாட்டான்.

"இருந்தும் ஏதாவது சொல்லுடா. அப்போ தான் திட்டத்தைப் பற்றி தெரிந்து கொள்ளலாம்", என்றான் அலோக்.

"எனக்கு என் கர்ள்ஃபிரெண்டை முத்தமிட வேண்டும். அவளைத் தோன்றிய போதெல்லாம் முத்தமிட வேண்டும். அதற்கு மேலேயும் செய்யணும். மொத்தமாக அனுபவிக்கணும்."

நான் ஏன் அப்படிச் சொன்னேன். அது உண்மைதான் என்றாலும். நேஹாவைக் கண்டிப்பாக முத்தமிடனும். மற்றவையும் பண்ணனும். ஆனால் நான் வேறு பதில் சொல்லியிருக்கலாம்.

"யார் உன்னுடைய கர்ள்ஃபிரெண்டு?" சர்த் என்னை ஆர்வமாகப் பார்த்தான்.

"உன் பிரச்சனை அது இல்லை", என்று ரயன் சர்தின் ஆவலைப் புதைத்தான்.

"சரி, உன் திட்டத்தை சொல்லு, ஸார்", என்றான் அலோக். இரண்டு ரவுண்டு இறங்கிவிட்டது. சர்தின் அன்பின் வெளிப்பாட்டைக் கண்டு கொள்ளவில்லை. சர்தின் அணைப்பை உதறாமல் "தேமே" என்ற பார்வையுடன் அமர்ந்திருந்தான். அவன் சோடாபுட்டியின் பின்னால் அவன் கண்கள் பரிதாபமாக இருந்தன.

"பெரியோர்களே", என்று ஆரம்பித்தான் ரயன். கட்டிலில் அமர்ந்திருந்தான். எங்கள் எல்லோரையும் விட நிஜமான உயரத்தில் இருந்தான். நாங்கள் தரையில் அமர்ந்து தலையை நிமிர்த்தி அவன் சொல்லப் போகிற தத்துவத்துக்காகக் காத்திருந்தோம்.

"இன்றிரவு இங்கு வந்ததற்கு நன்றி. உங்களுக்கே புரிந்திருக்கும் நாம் தான் குறைவான ஜிபிஏ பெற்றவர்கள். நாம் தான் மதிக்கப்படாத மிதிபடும் கூட்டம், சியர்ஸ்."

ரயன் எங்களை வெறுப்பேற்றினான். நாங்கள் தோல்வியில் ஒரு சிறப்பை உணர்ந்தோம். ஐஐடி மதிப்பீட்டில் ஏதோ குறை போலவும்; நாங்கள் எங்கள் தலை நிமிர்த்தி "சியர்ஸ்" என்றோம்.

"இந்த ஐஐடி முறை வெறும் எலிப் பந்தயம். இதை எலிப் பந்தயம் என்று சொல்வது கூடத் தவறு. ஏன் என்றால் எலிகள் கூட சற்று சாமர்த்தியம் கொண்ட பிறவிகள். அதனால் இது அதைப்பற்றியல்ல. ஒரு நான்கு வருடங்களுக்கு ஒன்றைப் பற்றியும் யோசிக்காமல், போகிறோமா, வருகிறோமா என்று உணராமல் ஓடும் பந்தயம். ஒவ்வொரு வகுப்பும், ஒவ்வொரு பாடமும், ஒவ்வொரு தேர்வும் ஓடுகிறோம். பேராக்கள் ஒவ்வொரு

பத்தடியையும் கணக்கிட்டு நமக்கு ஜிபிஏ தருவார்கள். ஒவ்வொரு ஸெமஸ்டரும் அது கணக்கிடப்படும். பேராக்கள் அறிவியலையும், கல்வியையும் புரிந்து கொள்ளாமல் நடக்கிறார்கள். இது தான் பேராக்கள் பற்றிய என் அபிப்பாரயம். இந்த நாட்டுக்காக ஐஐடி என்ன செய்திருக்கு? கடந்த முப்பது வருடங்களில் அவர்கள் படைத்த சாதனை என்ன?"

பார்ட்டியில் அமைதி நிலவியது; ரயனின் பேச்சு தீவிரமடைந்தது. ரயன் அதிகம் குடித்திருக்க வேண்டும். இல்லை யென்றால் ஒரு பார்ட்டியில் எதற்கு இவ்வளவு அபத்தம்?

"சரி", என்று ரயன் தொடர்ந்தான். "பேராக்களை விடுங்கள். நாம் கல்வி முறைக்கு வருவோம். இது ஒரு நியாயமற்ற பந்தயம். நீங்கள் ஒரு சிந்திக்கும் எலியாகவோ, அல்லது நண்பர்களுடன் நேரம் செலவழிக்கும் எலியாகவோ இருந்தால்; அல்லது கொஞ்சம் நிதானித்து வாழ்வில் என்ன வேண்டும் என்று யோசித்தால், அல்லது கடந்த காலத்து நினைவுகளைச் சுமந்தால்", என்று ரயன் அலோக்கைப் பார்த்தான். "உங்களைப் பின்னே தள்ளிவிடுவார்கள். வெங்கட்டைப் போன்ற பெரும் முட்டாள்கள் தள்ளியது போல்."

சர்த் ஒரு பறக்கும் முத்தத்தை ரயனுக்கு அளித்தான். அவன் ஒப்புக்கெண்டான் என்று தோன்றியது.

"ஆனால் நாம் இதை மாற்ற முடியும்", என்றான் ரயன். "எப்படி?" என்றான் அனுராக். இந்தக் குப்பையை யாரோ ஒருவன் கேட்டுக் கொண்டிருக்கான்.

நாம் நம் போக்கில் வாழ வேண்டும். நாம் சுண்டெலிகளாக இல்லாமல், எலிகளாக மாற வேண்டும் சேர்ந்து உழைத்து இந்தக் கல்வி முறையைத் தோற்கடிக்க வேண்டும். நான் இந்தக் கல்வி முறைக்காக என் நண்பர்களைவிட்டுக் கொடுக்க மாட்டேன். இந்த என் நட்பு தான் இதை, இந்த முறையை தோற்கடிக்கும் என்று நம்புகிறேன்."

"எப்படி?" என்றான் அனுராக், திரும்பவும்.

"அது எனக்கும், என் நெருங்கிய நண்பர்களுக்கும் இடையேயான இரகசியம். உங்களுக்குவெறும் திட்டத்தைப் பற்றி மட்டும் தான் சொல்ல முடியும். உங்களுக்கு செய்முறை விளக்கம் சொல்லித் தருவதாக நான் சொல்லவேயில்லை."

"நாங்கள் உன் நண்பர்கள் கிடையாதா?" சர்த் உணர்ச்சி மிகுந்த குரலில் கேட்டான்.

"நிச்சயம் நண்பன் தான். ஆனால் இதை என் மிகவும் நெருங்கிய நண்பர்களுடம் மட்டுமே செய்ய சாத்தியப்படும்." வேறு யாரும் குரல் உயர்த்தவில்லை, குறை கூறவில்லை. வேறு எதுவும் இல்லாவிட்டாலும் ரயனின் திட்டம் பார்ட்டியின் கேளிக்கையை அதிகரித்தது. ஒரு வோட்கா பாட்டில், பத்து கஞ்சா சிகரெட்டு, மூன்று பிங்க் ஃபிளாயிடு டேப்புகளுக்குப் பிறகு, ரயனின் சொற்பொழிவும் மாலை கேளிக்கையின் பகுதியாக மாறியது. இரவு 1.00 மணிக்கு மற்றவர்கள் கிளம்பினர். அலோக்கும், நானும் இறைந்திருந்த சாமான்களை நேர்படுத்த ரயனுக்கு உதவியாக இருந்தோம்.

"டேய் நல்ல பார்ட்டிடா", என்றான் அலோக்.

"தெரியும்டா குண்டா. இவையெல்லாவற்றையும் அந்தப் பொட்டை வெங்கட்டுடன் இருந்தபொழுது நீ இழந்துவிட்டாய்", என்று சொல்லியபடி ரயன் தடுமாறினான்.

"இந்தத் திட்டத்தை எப்படிச் செயல்படுத்தப் போறே? இது எப்படி வேலை செய்யும்?" என்று போகிற போக்கில் கேட்டு வைத்தேன்.

"சி2டீ" என்றான் ரயன்.

"என்ன எழவுடா இது?" ஆங்கில அறிவியல் கற்பனைப் படத்தில் வரும் புதிர் வார்த்தை போலிருந்தது.

"ஆங்கில வார்த்தை கோ-ஆபரேட் (ஒத்துழை)" என்றான் ரயன். படுக்கையில் சரிந்தான்.

"ஒத்துழை?"

"ஆமாம் கோ-ஆபரேட்டு டாமினேட் சி2டீ ஒத்துழைத்தால் ஆக்கிரமிக்கலாம்..." என்று ரயன் கண்களை மூடிக் கொண்டான். பார்ட்டிக்காக ஓடி ஆடி வேலை செய்தது, வரை முறையற்ற வோட்கா என்று எல்லாம் அதன் கைவரிசையைக் காட்டியது; அவன் மயங்கி விட்டான்!

"வாடா எலி நண்பனே. நம் அறைக்குச் செல்வோம்", என்றான் அலோக்.

பார்ட்டி முடிந்து விட்டது.

நான் ரயனுடன் மெஷினிங் ஆய்வுக் கூடத்தில் இருந்தேன். அடுத்த நாள் நேஹாவைச் சந்திக்கும் தினம். இம்முறை மேடம் என்னிடம் ஒரு பரிசு கொண்டு வருமாறு பணித்திருந்ததாள். நான் அவளுக்கு எதுவுமே தருவது இல்லை என்று பெரிதும் குறைபட்டுக் கொண்டாள். மற்றப் பெண்களின் ஃபிரெண்ட்ஸ்

அவர்களுக்குப் பரிசு கொடுக்கிறார்கள் என்றாள். இது ஒரு அபத்தமான வாதம் என்னைக் கேட்டால். அவள் தான் எனக்கு நிறைய கொடுக்கலாம், பரிசாக, பண முதலீட்டில்லாமல்; ஆனால் ஏதோ அல்ப காரணங்கள் காட்டி மறுக்கிறாள். இப்படி எனக்கு எதுவுமே கொடுக்காமல் ஏங்க வைத்துவிட்டு அவள் என்னிடமே பரிசுப் பொருள் கேட்கிறாள்; ஒரு பெண்ணால் மட்டுமே இப்படியெல்லாம் நடந்து கொள்ள முடியும்; அவர்கள் வித்தியாசமாகப் படைக்கப்பட்டிருக்கிறார்கள். நான் பரிசில்லாமல் சந்திக்க மாட்டேன் என்று உறுதி கூறியுள்ளேன். அதைப் பற்றி உடனே மறந்தும் விட்டேன்.

“நாளை காலையா?” என்றான் ரயன். “அதற்குள் எப்படி பரிசு வாங்குவே?”

“தெரியலே. மறந்துட்டேன்டா. ஐயோ! அவள் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு உயிரை வாங்குவாள்! நான் சாக்கலேட்டு தான் வாங்க வேண்டும். அதுவும் விலை உயர்ந்ததாக இருக்கே!”

“சரி, ஆனால் சாக்கலேட்டா? அது சிறப்பாக இருக்காதே. அதனால் தான் அவள் உனக்கு எதுவும் கொடுப்பதில்லை”, என்றான் ரயன்.

“ஏதோ போடா. உனக்கு ஏதேனும் நல்ல திட்டம் இருக்கா?” அவனுடைய வார்த்தைகள் எனக்குக் குத்தலாகப்பட்டன. அவள் சொல்வது சரியாகவே கூட இருக்கலாம்.

“யோசிடா, யோசி.”

நாங்கள் பல நிமிடங்கள் யோசித்தோம். நிறைய திட்டங்களை வேண்டாம் என்று தூக்கியெறிந்தோம்; உடைகள் ரொம்ப விலைபிடித்த சமாசாரம்; ஸெண்டு ரொம்ப சிறுபிள்ளைத்தனமாகப்பட்டது. புத்தகங்கள் அந்தரங்கமாக இல்லை. இப்படிப் பல; என்னிடம் நேரமும் இல்லை ரசனையும் இல்லை; மாற்றி யோசிக்க.

“நீ ஏதாவது செய்து கொடேன்”, என்ற ரயன் விரல் சொடுக்கினான்.

“என்ன செய்வது?”

“ஏதாவது ஒரு பொருள்? இந்த ஆய்வுக் கூடத்தில்? உன் கையாலேயே செய்யப்பட்ட சொந்தப் பொருள்; ஒரு இஞ்ஜினீயரிடமிருந்து; எவ்வளவு ரகளையாக இருக்கும்?”

இது சுவாரஸ்யமான திட்டமாகத் தோன்றியது. ஆனால் யதார்த்தமாகப் படவில்லை. அவள் நான் நிறைய பணம் செலவழிக்க வேண்டும் என்று எதிர்பார்த்தால்?

“என்ன செய்யலாம்?”

“தெரியலே. ஏதாவது ஒரு எளிதான பொருள்; அவள் பயன்படுத்துவது?”நான் நேஹாவின் வாழ்க்கையைப் பற்றி யோசித்துப் பார்த்தேன். அவளிடம் பெரிய கைப்பை இருக்கும். அதில் பல பொருட்களைத் திணித்து வைத்திருப்பாள். “அவளின் லிப்ஸிடிக்குகளை வைத்துக் கொள்ள ஒரு சிறிய பெட்டி? அவள் அதை எடுக்கும் போதும் லிப்ஸிடிக்குகள் பையிலிருந்து உருண்டோடும்.”

“வாடிக்கையாளரின் தேவையைப் பற்றி யோசிக்கிறாய் சரி. லிப்ஸ்டிக் டப்பா செய்யலாம். எவ்வளவு கொள்ள வேண்டும்?”

“மூன்று, நான்கு.”

“லிப்ஸ்டிக்கின் அளவு என்ன?”

“தெரியலை 3″ அங்குலம் 1″ அங்குலம் என்று வைத்துக் கொள்.”

“கூல். அவள் இரண்டிரண்டாக அடுக்குகிறாள் என்று யோசித்தால். உலோக ஷீட்டு, என்ன அகலம்…”

ரயன் மதிக்கப்படாத, மிதிபடும் ஐஐடி மாணவன் என்று மார் தட்டிக் கொண்டாலும், என் கண் எதிரே ஒரு வெறியும் வேகமும் கொண்ட விஞ்ஞானியாக மாறினான். அதுவும் ஒரு லிப்ஸ்டிக் டப்பாவுக்கு இவ்வளவு எழுச்சியா? முதல் முறையாக அவன் அந்த இஞ்ஜினியரிங் வரை படத்தைத் தீவிரமாக ஆராய்ந்தான். அவன் செய்தே முடித்துவிடுவான் என்று தோன்றியது. அவன் வேறு பல சாமர்த்தியமான விஷயங்களைப் பற்றியும் யோசித்தான். பட்டன் போட்டு மூடும் மூடி, ஒரு சின்னக் கண்ணாடி, அவள் பெயரை அந்த டப்பாவின் மேல் பொறிப்பது. இவை அனைத்தையும் முதலில் வரைந்தான். பின் ஒவ்வொரு பாகத்துக்கான வேலையையும் திட்டமிட்டான். அறுப்பது, மடக்குவது, தேய்ப்பது. வகுப்பில் போரடிக்கும் பாடங்கள் இப்பொழுது திடீரென்று சுவாரஸ்யம் பிடித்தன. அன்றைய தினத்துக்கான பாடம் மறந்து விட்டது. நாங்கள் தான் எங்கள் மதிப்பெண்களைப் பற்றி அக்கறை கொள்வதே இல்லையே!

மூன்று மணி நேரத்திற்குப் பிறகு, அவளின் பெயரை “நேஹா செரியன்”, என்று அவளின் ஐஐடியில் செய்யப்பட்ட லிப்ஸ்டிக் டப்பாவில் பொறித்தேன்.

“இது செம்மடா”, என்றேன்; அந்த மூடித்திறக்கும் விசை நன்றாக அமைந்திருந்தது.“அவளுக்கு இது கண்டிப்பாகப் பிடிக்கும். நன்றிடா ரயன்.”

“ஒரு பிரச்சனையும் இல்லே.” என்று கட்டைவிரலை உயர்த்தினான். ஆமாம் எனக்கு நிஜமாகவே ரயனைப் போலிருக்கத் தான் ஆசை. முக்கால்வாசி நேரம் எனக்கு அவனைப் பிடிக்கும். என்னைவிட அதிகம் ஒன்றும் அவனை வெறுக்கவில்லை.

எங்கள் ஐஸ்கிரீம் கடையில் வைத்து நேஹாவுக்கு அந்தப் பரிசை வழங்கினேன்.

“என்னது? இது என்னன்னு சொன்னே?” அவள் அந்த உலோக சிகரெட்டு டப்பா அளவில் இருந்ததைக் கையில் உருட்டினாள்.

“இது லிப்ஸ்டிக் டப்பா”, என்றேன்.

“அப்படியா? நான் கேள்விப்பட்டதே இல்லை.”

அவளின் லிப்ஸ்டிக்குகளைக் கொடுக்கும்படி சொன்னேன். அவளிடம் ஐந்து இருந்தது. எங்களின் டப்பா அனைத்தையும் கொள்ளாது! நான் நான்கை எடுத்தேன்-சிகப்பு, பழுப்பு, பிங்க் மற்றும் தாமிர உலோக வண்ணம் (எதற்காக வண்ண மெழுகை பெண்கள் உடலில் பூசிக் கொள்கிறார்கள் என்பது எனக்குப் புரியாத புதிர்தான்!) அவற்றை டப்பாவில் வைத்தேன். சரியாக அளவெடுத்துச் செய்யப்பட்டது போல் அடங்கின. மூடியை மூடினேன். வடிவம் சரியாக வேலை செய்தது. ஒரு பக்கம் கண்ணாடி; அதைப் பாரத்து பூசிக் கொள்ளலாம்; தவறாக மூக்கில்-கீக்கில் ஈஷிக் கொள்ளாமல் இருக்க உதவும்.

“எதற்காக லிப்ஸ்டிக் டப்பா?”

“தெரியலே. உன் உதடுகள் எனக்குப் பிடிக்கும்னு நினைக்கிறேன்”, என்றேன்.

“பெரிய ஜோக்கு!? நீயேவா பண்ணினே?” என்றாள்.

“ஆமாம்; ரயனும் உதவி செய்தான். இது உனக்காகவே செய்யப்பட்டது.” என்று டப்பாவின் அடிப்பாகத்தைக் காண்பித்தேன். “நேஹா செரியன்”, உலகின் மிகவும் அழகான பெயர். அதுவும் அழகாக எழுதப்பட்டிருந்தது.

“செம்ம”, என்றாள் நேஹா. மெலிதாக அவள் அதைக் கையில் வைத்துக் கொஞ்சியது, புதிதாகப் பிறந்த குழந்தை அதாவது ஐஐடி மெஷினிங் ஆய்வு கூடத்தில் பிறந்த குழந்தையை கொஞ்சுவது போலிருந்தது” “செம்ம”, என்றாள் திரும்பவும்.

“என்னது?” என்றேன். (“செம்ம” என்ற ஒற்றை வார்த்தைக்கு மேலான பாராட்டை எதிர்பார்த்தேன்!)

“யாருமே இது போன்ற விஷயத்தை எனக்காகச் செய்யவில்லை”, என்றாள் நேஹா.

அதே சமயம், அதிர்ஷ்ட வசமாக எனக்கு அந்த வாக்கியம் பளிச் சென்று தோன்றியது. எப்படியென்று தெரியாது, ஆனால் தோன்றியது; “என் வாழ்வில் எனக்கு யாரும், இவ்வளவு முக்கியம் இல்லை.”

அது முழுவதிலும் உண்மை இல்லைதான்; ஆனால் முற்றும் பொய்யும் இல்லை. (அது சரி; பொய்யா, உண்மையா என்பது பிரச்சனை இல்லை. பெண்களிடம் சரியான வரிகள் சொல்வது தான் முக்கியம். நான் வெறும் ஹரி தான்; ஹரிஸ்சந்திரா கிடையாது.)

“அப்படியா?” என்றாள் நேஹா.

“ஆமாம்.”

“நன்றி ஹரி. நான் இப்பொழுதே பயன்படுத்துகிறேன்” என்றாள்.

நான் நேஹாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் லிப்ஸ்டிக் போட்டுக் கொண்டாள். அலோக் குவாண்ட் கணக்குகளைப் போடும் அதே கவனத்தோடு அவள் லிப்ஸ்டிக்கைப் போட்டுக் கொண்டாள். நாம் ஒப்புக் கொள்ள வேண்டிய விஷயம்; பெண்கள் அழகானவர்கள் தான். அவர்கள் இல்லாமல் வாழ்க்கையை நடத்துவதில் ஒரு சுவையும் இல்லை.

“என்ன நேரத்திற்குள் உனக்கு வீட்டுக்குச் செல்ல வேண்டும்?” என்று கேட்டேன்.

“ஒரு ஒன்பது மணிக்குள்”, என்றாள் நேஹா. “என் தோழிகளைப் பார்க்க வந்திருப்பதாகத் தான் சொல்லியிருக்கேன்.”

“அடடா! எவ்வளவு முற்போக்கான எண்ணங்கள் கொண்டவர்கள் உன் பெற்றோர்”, என்றேன் நக்கலாக.

“அவர்களுக்குத் தெரியும் நான் திரும்பவும் வருத்தத்தில் இருந்தேன் என்று. நான் சமீர் பற்றி நினைத்தேன். அதான்.”

“நான் உன்னை ஒரு இரகசிய இடத்துக்குக் கூட்டிப் போகிறேன்”, என்றேன்.

“எங்கே?”

“இன்ஸ்டி கூரை.”

“என்ன? எவ்வளவு முட்டாள்தனம். இன்ஸ்டிக்கு மேலேயா? இதைவிட பெரிய பொது இடம் இருக்க முடியுமா என்ன?”

“அங்கே யாரும் கிடையாது. நானும் ரயனும் பலமுறை அங்கே போயிருக்கோம். அந்த மணி டவரிலிருந்து தெரியும் காட்சிகள் கொள்ளை அழகு.”

நேஹா அந்தக் கூரையை நினைத்து பரபரப்படைந்தாள். கொஞ்சம் கொஞ்சல், கொஞ்சம் கெஞ்சல், யாருக்கும் தெரியாது என்று சமாதானம் செய்தேன். அவளுடைய “ஐந்து நிமிடம்” முன்னால் நடந்து செல்லும் முறையைக் கைப்பற்றுவதாகச் சொன்னேன்.

“போகலாம்; ஆனால் இன்றில்லை. ஒன்பது மணி ஆகப் போகிறது. அடுத்த முறை? நான் சமீருக்காக நாளெல்லாம் அழுகிறேன். அப்பொழுது 11 மணி வரை வெளியே இருக்க அனுமதிப்பார்கள்.”

அவளின் அண்ணாவை ஆயுதமாக உபயோகிப்பதில் எனக்கு சம்மதம் இல்லை. அதனால் அவளின் பெற்றோர்கள் அவளை நேரம் கழித்து வரச் சம்மதிப்பார்கள் என்றால் அவர்களைவிடப் பைத்தியக்காரர்களைப் பார்க்க முடியாது. அதனால் இது போன்ற யுக்திகள் அவர்களுக்குத் தேவை தான்.

“அடுத்த முறை நேராகவே கூரையில் எட்டரை மணிக்குச் சந்திக்கலாம்.”

“நிச்சயம்”, என்றாள். “நீ தான் அது பாதுகாப்பானது என்று சொன்னாயே.”

“ஆமாம், என்னை நம்பு”, என்று கண்ணடித்தேன்.

# 10

## ஒத்துழை-ஆக்கிரமிக்க

“இந்தா. உங்களுக்கு ஆளுக்கொரு காகிதம்”. ரயன் “சீ2டீ திட்டம்” என்று எழுதிய காகிதங்களை எங்களிடம் கொடுத்தான். சீ2டீ திட்டத்தை நான் மறந்துவிட்டேன். ஆனால் ரயன் மறக்க வில்லை. அதைப் பற்றி யோசித்துக் காகிதத்தில் எழுதியிருக்கிறான். சஸி கடையில் அமர்ந்திருந்தோம். அலோக் இரண்டாவது தட்டு பராத்தாவை ஒரு கைப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்பொழுது தான் ரயன் அந்தத் திட்டத்தை விளக்கினான். அதன்படி தான் நாங்கள் ஐஐடியில் மீதி காலத்தையும் ஒட்ட வேண்டும் என்றான்.

“என்னது?”என்றான் அலோக். பராத்தாவின் வெண்ணை காகிதத்தில் ஒரு கரையாக நின்றது. அவனுக்கு ஐஐடி திட்டத்தைக் காட்டிலும் டிஷ்யூ தான் தேவைப்பட்டது. அலோக் சாப்பிடுவதைப் பார்த்தால் ஏதோ அவன் அந்தரங்கத்தில் தலையிடுவது போல் சங்கடமாக இருக்கும்.

நான் காகிதத்தில் எழுதியிருந்ததை வாசித்தேன்.

ஒத்துழைத்து ஆக்கிரமிப்பு நடத்து - ஐஐடி முறை ஏன் நியாயமற்றது:

1. ஆற்றலையும் தனிமனித நம்பிக்கையையும் ஒடுக்குகிறது.
2. நாட்டின் புத்திசாலித்தனம் கொண்ட மூளைகளிலிருந்து சிறந்த வருடங்களை உறுஞ்சி விடுகிறது.
3. அந்தப் பழசான ஜிபிஏ மதிப்பீட்டு முறையைக் கொண்டு ஒருவனை அழித்து அவன் உறவுகளையும் பாழாக்குகிறது.
4. பேராக்களுக்கு மாணவர்களின் மீது அக்கறை இல்லை.
5. ஐஐடிகள் நாட்டுக்குச் சிறந்ததாக ஒன்றும் கொடுக்கவில்லை.

“இதையெல்லாம் எழுத உனக்கு நேரம் ஏது?” என்றான் அலோக். என்ன மடத்தனமான கேள்வி. ரயனிடம் அனைத்துக்கும் நேரமும், பொழுதும் உண்டு.

நான் மேலும் படித்தேன். இந்த நியாயமற்ற கல்வி முறையை வெல்ல நியாயமற்ற நடவடிக்கைகள் தான் லாயக்கு. அது தான் சீ2டீ இந்தத் திட்டத்தை ஹரி, அலோக் மற்றும் ரயன் அவர்கள் இன்ஸ்டியில் தங்கும் நாட்கள் வரை கடைபிடிக்க ஒப்புக்கொண்டுள்ளனர். இதன் முக்கியவிதிகள்:

1. எல்லா வீட்டுப் பாடங்களையும் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்-ஒருத்தர் ஒரு பாடத்தை ஒரு சமயம் செய்வார். மற்றவர்கள் அதைப் பார்த்து ‘காப்பி’ அடித்து அப்படியே எழுதுவார்கள். நேரம் சேமிப்பு; முயற்சியும் சேமிக்கப்படுகிறது.
2. பாடத்தின் பொறுப்புகள் பங்கிடப்படும். உதாரணத்திற்கு ஸெமஸ்டரில் ஆறு பாடங்கள் இருந்தால் ஆளுக்கு இரண்டு என்று பிரித்துக் கொள்வோம். அவர்கள் பொறுப்பில் இருக்கும்

பாடங்களுக்கான வகுப்புகள் அனைத்தையும் அவர்கள் தான் சென்று குறிப்பெடுக்க வேண்டும்; ஆனால் மற்றவைகளைக் கவனிக்கத் தேவையில்லை. (குறிப்பு:ரயன் பேரா வீராவின் அனைத்து வகுப்புகளையும் எடுத்துக் கொள்வான்) நீங்கள் செல்லும் வகுப்பில் நிறைய குறிப்புகள் எடுங்கள், மற்றவர்கள் அதைப் பார்த்து எழுதிக் கொள்வார்கள்.

3. ஆய்வு கூடப் பரிசோதனைகளின் கண்டுபிடிப்புகளைப் பகிர்ந்துகொள்வோம்.
4. ஜிபிஏக்கும் மேல் நம் நட்பு போற்றப்பட வேண்டும்; கிடைக்கும் ஒழிவு நேரம் நாம் சேர்ந்து ரசிப்பதற்காக.
5. விடுதி அறைகளைச் சேர்த்து, ஒரே யூனிட்டாக மாற்றவேண்டும்- ஒரு பொது தூங்கும் அறை, ஒரு படிக்கும் அறை, ஒரு கலாட்டா அறை.
6. ஒவ்வொருத்தர் எவ்வளவு குடித்திருந்தாலும் வோட்கா செலவை மூன்றாகப் பங்கிட வேண்டும்.

ரயன் எங்களையே பார்த்தான். நாங்கள் பலமாகக் கைதட்டி ஆரவாரம் செய்வோம் என்று நினைத்தான். நாங்கள் அமைதியாக இருந்தோம்; அவன் என்ன நடக்கிறது என்று விளக்கம் அளிப்பான் என்று காத்திருந்தோம்.

“நீங்கள்ளாம் என்ன நினைக்கிறீங்க?” என்றான்.

“என்ன இது? விடலப் பசங்க கிளப்பா?”

“ஒப்புக்கொண்டால் கையெழுத்துப் போடுங்க. உங்கள் ரத்தத்தில் கையெழுத்து போடுங்கள்.”

“சரிதான்; நமக்கென்ன பனிரெண்டு வயதா?” என்று கேட்டேன்.

“நான் நிஜமாகத்தான் சொல்றேன்”, என்றான் ரயன். நாங்கள் யாரும் எதுவும் சொல்வதற்கு முன், பாக்கெட்டில் இருந்து ஒரு ரேஸர் பிளேடைப் பிரித்தான். ஒரே வெட்டில் தன் கட்டை விரலில் கோடு கிழித்தான் ரத்தம் வந்தது.

“ரயன் உனக்கென்ன பைத்தியமா?” என்று அலோக் கீச்சென்று கத்தினான் பயத்தில்; அவன் சாப்பிட்ட நாஷ்டா வெளியில் வந்துவிடும் அபாயம் இருந்தது.

“இல்லை. இதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கத்தான். உங்களுக்கு என்ன வேணுமோ, முடிவு செய்யுங்கள்”, என்றான் ரயன். ஒரு பல்குத்தும் குச்சியால் ரத்தத்தில் தோய்த்துக் கையெழுத்திட்டான்.

“முதலில் இதைப் பற்றிப் பேசலாமா?” என்று கேட்டேன்.

“இதில் பேச என்ன இருக்கு; நான் யாரையும் கட்டாயப்படுத்தவில்லை.”

“இந்த வீட்டுப்பாடம், கண்டுபிடிப்பு இதெல்லாம் பங்கு கொள்வது ஏமாற்று வேலை இல்லையா?” என்றான் அலோக்.

நான் அலோக் சொல்வது சரி என்று ஆமோதித்தேன். ஆனால் என் கவலை வோட்கா விலை தான்; ரயன் எங்களை விட அதிகம் குடிப்பான்.

“இது ஏமாற்று வேலை இல்லை. இதன் பெயர் ஒத்துழைப்பு. அவர்கள் ஜிபிஏவை வைத்து நம்மைப் பிரிக்கின்றனர். நாம் அதை மீறி ஒன்று சேர்ந்து போராடுகிறோம்.”

“என்னால் அப்படிப் பார்க்க முடியவில்லை”, என்று நானும் வலியுறுத்தினேன்.

“நீங்கள் கையெழுத்து போடுவீர்களா, மாட்டீர்களா?” ரயன் தன் இடுப்பில் கை வைத்துக் கேட்டான்.

சி2டீ யைப் பற்றிக் கடைசியாக ஒரு முறை சிந்தித்துப் பார்த்தேன் “நான் கையெழுத்திடுகிறேன். ஆனால் கையெல்லாம் அறுத்துக் கொள்ள மாட்டேன்.”

“ஒரு நொடி தான் ஆகும்”, என்று ரயன் பிளேடைத் திறந்து என் ஆள்காட்டி விரலில் கோடு போட்டான். நான் முடியாது என்று சொல்வதற்குள் ரத்தம் குபுக்கென்று வந்தது.

“போடா ஒத்த!”

ரயன் பலமாகச் சிரித்தான். “ஸாரிடா! உன் முகத்தைப் பாரேன். வாடா; சீக்கிரம் கையெழுத்தைப் போடு!”

நான் வெறுப்பாக ரயனைப் பார்த்தேன். கையெழுத்திட்டேன்.

அலோக் கசாப்புக் கடை கோழிக் குஞ்சைப் போல் பயத்தில் பம்மினான். பழைய அலோக்காக இருந்தால் ரயனுடன் கன்னா பின்னாவென்று சண்டையிட்டிருப்பான். ஆனால் புதிய, மேம்பட்ட அலோக், இப்பொழுது தான் எங்களோடு சேர்ந்தவன், திரும்பவும் சண்டையிட விரும்பவில்லை. “நானே வெட்டிக் கொள்கிறேன்”, என்றான் கடைசியில்.

அவன் தன் கண்டு விரலில் இருந்து எப்படியோ ரத்தத்தை வரவழைத்தான். நாங்கள் சி2டீயை பழங்குடியினர் போல் கையெழுத்து இட்டோம். நான் சொல்லத் தான் வேண்டும். இந்த ரத்தம் அதற்குப் பெரிய முக்கியத்துவத்தை அளித்தது. என்ன செய்தேன் என்று பெரிதாகப் புரியாவிட்டாலும் அது பரபரப்பைத் தந்தது. எங்களின் மூன்று அறைகளையும் சேர்த்து ஒரு வீடு போல் மாற்றினோம். ரயனின் அறை தான் கேளிக்கை, பார்ட்டிக்கான அறை, அலோக்கினுடையது படிக்கும் அறை; மூன்று மேசைகளையும் இணைத்துப் போட்டோம். என்னுடைய அறையில் மூன்று கட்டில்கள்.

“நீங்கள் மூவரும் சேர்ந்து தங்குகிறீர்களா?” என்றாள் நேஹா. திட்டப்படி இன்ஸ்டி கூரைக்குச் செல்லும் வழியில் இருந்தோம். என்னை எட்டு மணிக்குச் சந்தித்தாள். அவளின் பெற்றோர்கள் அவள் நிஜமாக எங்கிருக்கிறாள் என்று தெரியாமல், இல்லாத ஒரு தோழியின் பிறந்த நாள் கேக்கை வெட்டுவதாக நம்பிக் கொண்டிருந்தனர்.

“அப்படியும் வைத்துக் கொள்ளலாம். எங்கள் மூன்று அறைகளையும் சேர்த்து ஒன்றாக்கிவிட்டோம்”, பின்னாடியிலிருந்த படிக்கட்டில் மூச்சிறைக்க ஏறினோம்.

“கேட்க ஸ்வாரஸ்யமாக இருக்கு”, என்று நெற்றியில் புரண்ட முடிக்கற்றை வாயால் ஊதினாள்.

நாங்கள் கூரையை அடைந்த பொழுது மிகவும் இருட்டிவிட்டது. வழக்கம் போல் அங்கு யாரும் இல்லை.

“ஹே! செம்ம! அந்த நட்சத்திரங்களைப் பாரேன்;” என்றாள் நேஹா “ஆமாம்”, என்றேன் பெருமிதத்துடன். நானே என் கையால் அன்றைய வானத்தை வண்ணம் தீட்டி வரைந்தது போன்ற குதூகலமும், பெருமையும் பொங்கியது. “இவை எல்லாமே நம்முடையது! இந்த காம்பஸைப் பாரேன்-அங்கே தான் நீ தங்கியிருக்கிறாய்”,என்ற சுட்டிக் காட்டினேன்.

ரொம்பத் தெளிவாகத் தெரியவில்லை. வரவேற்பறை விளக்குகள் தான் கண்ணில் பட்டன.

“அட!நாம் இவ்வளவு அருகில் ஆனால் நிஜமாகவே தொலைவில் இருக்கோம்.”, என்று கனவுக் குரலில் சொல்லிவிட்டு கூரையின் கான்கிரீட் மீது உட்கார்ந்தாள். “இப்போ”

“இப்போ என்ன?” என்றேன்.

“வோட்கா எங்கே? நீங்கள் இங்கே தானே குடிப்பீர்கள்.”

“ஆமாம் ; ஆனால் நீ குடிக்க மாட்டே தானே?”

“யாரு சொன்னது? உன்னிடம் இருந்தால் நான் குடிப்பேன்.”

“மணிக்கடியில் ஒருபாட்டில் ஒளித்து வைத்திருப்போம். பார்க்கிறேன்.” எனக்கு நேஹாவின் கோரிக்கை ஆச்சரியமாக இருந்தது. அவள் நல்ல பெண் என்ற நினைத்தேன். நல்ல பெண்கள் குடிக்க மாட்டார்கள். ஆனால் எனக்கே ஒரு ரவுண்டு குடிக்க வேண்டும் போலிருந்தது. அதனால் பாட்டிலை எடுத்துக் கொண்டு திரும்பி வந்தேன்.

“நல்லது”, என்று சொல்லி டிஷ் அன்டெனாவின் மீது சாய்ந்து கொண்டாள்.”மேலே உள்ள நட்சத்திரங்களைப் பாரேன். எவ்வளவு அழகாகத் தெரிகின்றன! நான் ஒரு பறவையாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.” மக்கள் பறவையாக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டால் அவர்களுக்குப் போதை ஏறிவிட்டது என்ற தான் அர்த்தம். ஆனால் இவளோ, இன்ஸ்டி கூரையில் குடிக்கப் போகிறோம் என்று எதிர்பார்ப்பிலேயே போதையானாள்.

“ஓ! நான் எப்பொழுதும் இங்கேயே இருக்கலாம் என்று தோன்றுகிறது இன்னொரு ட்ரிங் கொடேன்”,

என்றாள்.

“ரொம்பக் குடிக்காதே!” என்று எச்சரித்தேன்.

“மாட்டேன். என் அப்பாவுக்கு வாசனை தெரிந்தால் என்னைக் கொன்றே போடுவார்.”

“நிச்சயம் வாசனை வரும்.

“அதிகம் இல்லை. நீ வேணுமானால் பாரேன்.”

“அவள் தன் பையைத் திறந்தாள். ஒரு பத்து வஸ்துக்களுக்கப் பிறகு, ஒரு பாக்கெட் ஏலக்காயை எடுத்தாள்.

“இதில் ஒன்றை மென்றால் நல்ல வாசனையுடன் வீடு திரும்புவேன்.”

“அப்படியா? இப்போ ஒண்ணு சாப்பிடேன். எனக்காக ஏலக்காய் மணக்க வாயேன்.”

“என்ன? என்னிடம் துர்மணம் உள்ளதா?” என்று நேராக எழுந்து உட்கார்ந்தாள்.

“நான் அப்படிச் சொல்லவில்லை.”

அவள் தன் கையால் என் கையைப் பற்றி என்னைத் தன் பக்கம் இழுத்தாள். “என் கண்ணை நேராகப் பார்த்து என் வாயில் நாற்றம் இருக்கா என்ற சொல்ல.”

“எனக்குத் தெரியாது. நான் அவ்வளவு கிட்ட உன் வாயைப் பார்த்ததில்லையே” என்றேன் உண்மையாக; எங்கள் வாய்களின் இடையே இருந்த இடைவெளி மில்லிமீட்டர் அளவில் குறைந்தது.

“போடா”, என்ற சிரித்துக் கொண்டே என்னைத் தள்ளி விட்டாள்.

“அட! நீ ஒரு பயந்தாங்கொள்ளி; ரொம்ப பயப்படுகிறாய்!” என்றேன்

“இல்லை. என்னைப் பார்; நான் பேராவின் மகள். இன்ஸ்டி கூரையில் ஐந்து புள்ளி பொறுக்கியுடன் தண்ணி அடிக்கிறேன்.” அவள் சிரிக்காமல் இருந்திருந்தால் அவள் சொன்னதற்கு வேதனைபட்டிருப்பேன். ஆனால் கிடைத்த வாய்ப்பை மொத்தமாக அனுபவிப்பது என்று முடிவு செய்தேன்.

“பொறுக்கி? நான் பொறுக்கியா?” என்றேன்.

“ஆமாம். ஆனால்.”

“ஆனால் என்ன?”

“ஆனால் நான் என் பொறுக்கியை நேசிக்கிறேன்”, என்று என்னை தன் பக்கம் இழுத்துக் கொண்டாள். திரும்பவும் எங்களின் உதடுகள் மில்லிமீட்டர் தொலைவில் இருந்தன. அவள் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். என்னை முத்தமிடுவாளா? அல்லது அவளும்-அவள் உள்ளே-இறங்கிய-இரண்டு கிளாஸ்-வோட்காவின்-கலவையும் என்னை முத்தமிடுமா?

“நமக்கு கல்வி தேவையில்லை.”, என்று கரகரத்த குரலில் யாரோ பாடினார்கள். எங்களின் அணைப்பிலும் அவள் திகைப்பது தெரிந்தது. யாரோ இன்ஸ்டி கூரைக்கு வந்திருக்க வேண்டும்.

“என்ன இது?” என்றாள் நேஹா. “இங்கே யாரும் இல்லை என்று சொன்னாயே”

“எனக்கும் தெரியலே. உஷ்ஷ் அமைதி?” என்று சொன்னேன். ஆண்டெனா பின்னால் இருவரும் ஒளிந்து கொள்ள முடியுமா?

கடைசியில் ரயனின் குரலை அடையாளம் கண்டு கொண்டேன் அந்தக் கேவலமான பாட்டினால்; அவன் ஒளித்து வைத்த வோட்காவைத் தேடி வந்துள்ளான் என்று புரிந்தது.

“அது ரயன்!” என் குரலில் எரிச்சல் மற்றும் சமாதானம் கலந்திருந்தது. அந்தத் தருணம் போய்விட்டதே என்ற கோபமும் மிச்சம் இருந்தது.

“ரயன்”, என்று கத்தினேன்.

“ஹரி”, அவன் பதிலுக்குக் கத்தினான். என் அருகே வந்தான்.

“டேய் பொறுக்கி! இங்கேயாடா இருக்கே? உன்னை எங்கேயெல்லாம் தேடினேன். உன்னுடன் யாராவது இருக்காங்களா?”

“ரயன், நீ வந்து…”

“பெண்ணா!?” என்றான் ரயன் ஆச்சரியமாக; ஏதோ என்னை இறந்த முயலுடன் சந்திப்பது போல்

திகைத்தான். நேஹா என் பின்னாடி மறைந்து பார்த்தாள். அவள் யார் என்று அடையாளம் தெரிய வேண்டாமே என்று கருதினாள்.

“இது நேஹா”, என்றேன். “நேஹா. இது தான் ரயன். ரயன் சமத்தாக நேஹாவுக்கு ஹெலோ சொல்லு.”

ரயனின் குரல் உடனே கம்மியது. இந்த ஆண்களுக்கு என்னாச்சு; பெண்களைப் பார்த்தால் அடியோடு மாறி விடுகிறார்கள். இது எதிர்பார்த்ததுதான்!

“ஹே நேஹா!” என்றான் ரயன்; மிகவும் அதிகம் கேள்விப்பட்ட ஒருத்தரை எப்படிப்பட்டவர் என்ற அறிய, முறைத்து பார்க்காமல் இருக்க முயன்றான்.

“ஹே!” என்றாள் நேஹா. ரயனை நம்பலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

“நான் ஒரு வீட்டுப் பாடம் செய்வதற்காக ஹரியைத் தேடிக் கொண்டிருந்தேன்”, என்றான் ரயன்.

“விடு ரயன்! நாங்கள் தண்ணி அடிக்கிறோம்”, என்றேன்.

“அப்படியா?” என்று அதிசயித்தான் ரயன். நேஹா ஏதோ தேவதை போல் இறக்கை முளைத்து தலைக்கு மேலே ஒளி வட்டத்துடன் இருப்பாள் என்ற நினைத்தான் போலும். “நேஹா அப்படிப்பட்டவள் இல்லை என்று நினைத்தேனே” என்றான்.

“எப்படிப்பட்டவள்?” என்று உடனே கேட்டாள்.

“ஒன்றும் இல்லை”, என்றான் ரயன். சூடான கான்கிரீட்டில் அமர்ந்தான்.

“என்னைப் பற்றி என்ன கேள்விப்பட்டாய்?” என்றாள் நேஹா.

“நிறைய” என்றான் ரயன். எங்களின் கடந்த கால சந்திப்பின் சிறந்த நிகழ்வுகளை நினைவூட்டினான். அவர்கள் இருவரும் பத்து மணி நேரம் பேசுவது போல் பேசினார்கள். நான் குடித்துக் கொண்டே இருந்தேன். ரயனுக்குக் கணிணி போன்ற ஞாபக சக்தி. நானே மறந்து விட்ட விஷயங்களைக் கூட அவன் நினைவில் வைத்திருந்தான்.

“அவன் அந்த குடும்பக் கட்டுப்பாட்டுக் குறும்படத்தைப் பற்றிச் சொன்னானா?” என்று சிரித்தாள்.

“நிச்சயம். அவன் எல்லாவற்றையும் என்னிடம் சொல்வான்” என்று பெருமையாகச் சொன்னான்.

நானும் நேஹாவும் முத்தமிட்டு வேறு ஏதாவதில் இறங்கியிருப்போமே என்று யோசித்தேன். இந்தச் சண்டாளன் ரயன் அங்கு வந்திராவிட்டால்! இன்ஸ்டி கூரையிலிருந்து அவனைத் தள்ளி விட்டு விடலாமா என்று யோசித்தேன். அது இந்த மூடை நிச்சயம் கெடுத்துவிடும் என்ற மனதை மாற்றிக் கொண்டேன்.

“நான் அப்படிப்பட்டப் பெண் இல்லை என்று ஏன் சொன்னே?”என்றாள் நேஹா.

“வோட்கா? நீ வந்து… சரி மறந்துவிடு”என்றான் ரயன்.

“என்ன? சொல்லேன்”, என்றாள் நேஹா. ஒரு அழகான பெண்ணின் நம்பிக்கை மற்றும் உறுதியுடன்.

“நீ நல்ல பெண், அதனால் தானே நீ அவனை எதுவுமே செய்ய விட மாட்டேன் என்கிறாய். ஒரு வருடமாகச் சந்தித்தும் முத்தம் கூட கொடுக்கவில்லை. மிகவும் நல்ல பெண்; பேராவின் மகள்”

“அவன் அதைச் சொன்னானா?” நேஹா கிறீச்சிட்டாள்.

“ஆமாம். நீ என்ன பையனைச் சந்திக்கிறயா இல்லை உணர்வற்ற ஜடத்தைச் சந்திக்கிறயா? அவனுக்குத் தேவைகள் இருக்கு என்று புரியவில்லையா?”

“ரயன், வாயை மூடு”, இம்முறை நான் பேசினேன்.

“என்னடா, எப்பவாவது கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொள். உன் நல்லதுக்காகத் தான் சொல்கிறேன்.”

“தேவைகளா?” என்று நேஹா திரும்பச் சொன்னாள், திகைத்தபடி

“ஆமாம். ஒவ்வொரு ஆணுக்கும் தேவை இருக்கும். உன்னைப் போன்ற அழகான பெண்களுக்கு இதைப் பற்றித் தெரியாது. அல்லது தெரிந்து கொண்டே அதிகாரம், கட்டுப்பாடு என்று விளையாடுகிறீர்கள்.”

“அதிகாரமா?” நேஹா திரும்பச் சொன்னாள்.

ரயனிடம் சொல்லத் துடித்தேன் டேய் நீ சீட்டியடித்தபடி வந்து கெடுப்பதற்கு முன் நானே ஏதோ

முன்னேறிக் கொண்டிருந்தேன்.

“ஆமாம், அதிகாரம்; வேறென்ன?” என்றான் ஒரு வழியாக, “நான் அதிகாரத்திற்காக ஏங்குகிறேனா? இது பெரிய ஜோக்கு. உங்களுக்குப் பெண்களைப் புரிவதில்லை. அப்படித்தானே?” என்றாள் நேஹா, வோட்கா கொடுத்த நம்பிக்கையில். ரயனாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

“ஹரி?” என்றான் ரயன். எங்களுக்கு நிஜமாகப் பெண்களைப் புரியவில்லை என்று நிரூபிப்பது போல்.

நேஹாவிற்கு வீட்டுக்குத் திரும்பும் நேரம் ஆகிவிட்டது. அதனால் அந்தப் பேச்சை அப்படியே விட்டுவிட்டோம். பின்னால் ரயனிடம் சண்டை போடலாம் என்று நினைத்தேன். ஆனால் அவன் இரண்டு கஞ்சா சிகரெட்டுகளை உருட்டி எனக்கு ஒன்று கொடுத்தான். குமாவோன்னுக்கு ஸ்கூட்டரில் ஏற்றிச் சென்றான். அதனால் நான் அப்படியே விட்டு விட்டேன். மேலும் நேஹா பெரிதும் கோபப்பட்டதாகத் தெரியவில்லை.

ஒரு வேளை அவன் எனக்கு உதவிதான் செய்திருக்கிறானோ என்று தோன்றியது!

*Downloaded from [Ebookz.in](Ebookz.in)*

# 11

## பரிசு

நான் உள்ளுக்குள் மிகவும் மோசமானவன். இதை நான் காண்பித்த விதமும் வித்தியாசமாக இருந்தது. அலோக்கை அதிகாலை வகுப்புகளுக்குத் தள்ளினேன். வெங்கட்டுடன் கழித்த நாட்களில் அவன் அதிகாலை எழுந்துகொள்ளப் பழகியிருப்பான் என்பதே காரணம் என்று சொன்னேன்; ரயனையும் என்னையும் அதிகாலை வேலைக்கு நம்ப முடியாது என்பதை வலியுறுத்தினேன்.

சி2டீ சிறப்பாக அமைந்தது. என்னைப் பொறுத்த வரை இரண்டு பாடம் மட்டுமே அந்த ஸெம்மில் என் வசம் இருந்தது. மற்றவை அலோக், ரயன் பார்த்துக் கொள்வார்கள். வீட்டுப் பாடத்தை எனக்குக் கொடுத்துவிடுவார்கள். நான் அதைப் பார்த்து 'காப்பி'யடித்து எழுதுவேன். அவர்களின் குறிப்புகளை ஜெராக்ஸ் எடுத்துக் கொள்வேன். நானும் என் பாடங்களை அவர்களுக்குக் கொடுப்பேன். அதனால் இப்பொழுது நாங்கள் பாடத்துக்காக ஒன்றோ,இரண்டோ மணி நேரங்கள் செலவழித்தால் போதுமானது. நிறைய நேரம் கிடைத்தது-திரைப்படங்கள், ஸ்கூட்டரில் தொலை தூரப்பயணம், ஹோட்டல்கள், செஸ், வார்த்தை விளையாட்டான ஸ்கிராபிள், அறைக்குள் விளையாடும் கிரிகெட்டு, தூக்கம், ஸ்குவாஷ் (ஆம்;ரயன் மறுபடியும் தொடங்கிவிட்டான்) சொல்லவே வேண்டாம் சரக்கும், கஞ்சாவும் வஞ்சனையில்லாமல்; இப்படி எங்கள் பொழுது கழிந்தது. அந்த ஸெம்மின் முதல் 'மைனர்'பாடங்கள் மிகவும் எளிதாக இருந்தன. நாங்கள் வகுப்பில் முதல் மாணவர்களாகவெல்லாம் ஆகவில்லை, ஆனால் எங்கள் எதிர்பார்ப்பும் குறைவாக இருந்தது-எங்களின் ஐந்து புள்ளி ஜிபிஏக்களைத் தக்க வைத்துக் கொள்வது. நம்மைப் பற்றியே குறைவான மதிப்பீடு இருந்தால் மகிழ்வாக இருக்கலாம். என்னுடைய பொறுப்பான வடிவம் அமைக்கும் வகுப்பில் ஒரு நாள் நான் அமர்ந்திருந்தேன். ரயனும் என்னுடன் இருந்தான். அவன் தான் ஒரு பெரிய 'டிஸைனர்' என்ற மிதப்பில் இருந்தான். பேரா வோரா நடத்திக் கொண்டிருந்தார்.

"அடுத்த பதினைந்து நிமிடங்களில் நீங்கள் செய்ய வேண்டிய விஷயத்தைச் சொல்கிறேன் எழுதிக் கொள்ளுங்கள். உங்கள் கார் டையரில் காற்று இறங்கிவிட்டாலோ, பஞ்சர் ஆகிவிட்டாலோ, உங்கள் காரைத் தூக்கிப் பிடிக்கும் ஒரு ஜாக்கியை வடிவமைக்க வேண்டும். ஒரு எளிதான படம் வரையுங்கள்."

பேரா வோரா சற்றே இரட்டை நாடி சரீரம் கொண்டவர். ஐம்பது வயது இருக்கும்; ஒரு பேராவுக்குப் பொறுத்தமே இல்லாத சாந்தமான முகம். ஆனால் அவர் குணம் அதற்கு நேர்மாறானது. அவர் ஒரு ஸெம்ஸ்டருக்கு ஆறு பாடம் எடுப்பார்; அவருடைய சிகப்புப் பேனாவை ஒரு கொலை ஆயுதம் போல் பயன்படுத்தி ஒவ்வொரு வடிவத்தையும் குத்திக் குதறுவார்; மேலும், சாந்த குணம் என்பது அவரைக் குறிப்பிடும் வார்த்தைகளே இல்லை.

அது என் பொறுப்பில் இருந்த பாடம்; அதனால் நான் தான் என் கையால் வரைய வேண்டும். அந்த கார் 'ஜாக்கை' ரயன் பார்த்து வரைய வேண்டும். பேரா வோரா எங்களுக்கு சொல்லிக் கொடுத்த பாடங்களை வைத்து என்னால் நிச்சயமாக ஒரு 'ஸ்க்ரூ வடிவ ஜாக்கை' வரைய முடியும். நான் வரைய ஆரம்பித்தேன். ரயன் சொன்னான், 'என்ன? மற்றவர்களைப் போன்ற அதே வடிவம் தான் நீயும் வரையப் போகிறாயா?"

"ஆமாம் ஸார்; நான் ஒன்றும் தாமஸ் எடிஸன் கிடையாது" என்றேன். "இது என் பாடம்; அதனால் வாயை மூடிக் கொண்டு காப்பி பண்ணு."

"எனக்கு வேற திட்டம் இருக்கு", என்றான் ரயன்.

அந்த கருத்தைக் குப்பையில் போடு என்று சொல்ல வேண்டும் போலிருந்தது. நான் அப்படி ரயனிடம் ஒரு பொழுதும் சொல்லமாட்டேன்; அவனும் யார் பேச்சையும் கேட்பவனல்ல.

ரயன் மாற்றி வரைந்தான். அவன் ஜாக்கைக் கொண்டு யாரும் சிரமப்பட்டு கையால் திருப்ப வேண்டாம். டயரில் காற்று இறங்கிவிட்டது என்றால் இஞ்ஜினில் கோளாறு இல்லையே? ஜாக்குடன் ஒரு மோட்டர் பொருத்திவிட்டால் கார் பேட்டரிக்கு இணைத்துவிடலாம். அப்பொழுது காரில் சாவியைப் போட்டு கிளப்பினால் மோட்டருக்கு சக்தி வரும்.

"நீ என்ன பண்ணறே?" என்றேன். ரயனின் படங்கள் எனக்குக் கவலையைத் தந்தன. கார் பேட்டரி

இந்தப் பாடத்துக்குச் சம்மந்தமே இல்லாதது.

“நீ பொறுத்திருந்து பார்; பேரா இதைப் பார்த்து சந்தோஷத்தில் விழுந்த விடுவார்”, என்றான் ரயன்.

நான் மற்றவர்களைப் போல் வழக்கமான ‘ஸ்க்ரூ-ஜாக்’ வரைந்தேன். இந்தப் பாடத்தின் பெயர் ‘வடிவமைப்பு’, ‘சொந்த வடிவமைப்பு’ அல்ல!

பேரா வோரா வகுப்பு வரிசைகளுக்கு நடுவில் நடந்து வந்தார்; வருடாவருடம் மாணவர்கள் வரையும் வடிவத்தைப் பார்வையிட்டார் - அவர்களின் எளிதான ஸ்க்ரூ-ஜாக்; அவரின் உலா எங்கள் டெஸ்கருகில் வந்து நின்றது.

“இது என்ன?” பேரா வோரா தன் தலையைச் சாய்த்து ரயனின் வடிவைப் புரிந்து கொள்ள முயன்றார்.

“ஸார், இது மாற்றப்பட்ட ஸ்க்ரூ-ஜாக்”, என்றான் ரயன் “இதைக் கார் பாட்டரியுடன் பொருத்தினால்…”

“இது எலெக்டிரிகல் இஞ்ஜினீயரிங் வகுப்பா?”

“இல்லை ஸார்; ஆனால் அடிப்படை தேவை அது தானே”

“இது இண்டர்னல் கம்பஸ்ஷன் இஞ்ஜின் வகுப்பா?”

“ஸார், ஆனால்”

“என் வகுப்பில் இருக்க வேண்டாம் என்று பட்டால், வெளியே போ!”

பேரா வோராவின் முகம் சாந்தமாக இல்லை. ரயன் வாயை மூடிக் கொண்டிருந்தால் அவர் நகர்ந்திருப்பார்.

“ஸார், இது புது வடிவம்”, என்றான் ரயன். ஏதோ புரியாத தத்துவத்தை விளக்குவது போல்.

“அப்படியா? யார் உனக்குச் சொன்னது?”

ரயன் பதில் சொல்லவில்லை. தன் காகிதத்தைத் தூக்கிப் பிடித்தான். ஒரே கிழியில் இரண்டு துண்டுகளாக்கினான்.

“இதோ; இனி இதற்குப் பயன் இல்லை”, என்றான்.

பேரா வோராவின் முகம் கோபத்தில் அஷ்ட கோணலாகிச் சிவந்தது. “என் வகுப்பில் கெட்டிக்காரத்தனமாக இருப்பதாகக் காட்டிக் கொள்ளாதே.”

“மன்னிக்க வேண்டும் ஸார்”, என்றேன். நான் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை.

ஆனால் அந்த இறுக்கத்தை அது தளர்த்தியது. பேராவும், ரயனும் ஒரக்கண்ணால் என்னைப் பார்த்தனர். பேரா வோரா பெரிதாக மூச்சு விட்டார், பின் நகர்ந்தார். ரயன் அமர்ந்தான்.

“அது சாமர்த்தியமான விஷயமே இல்லை. அவர் உன்னை வெறுப்பேற்றுவதற்காகவே ஃபெயிலாக்குவார்.” என்று வகுப்பு முடிந்ததும் ரயனிடம் கூறினேன்.

“எனக்கு அக்கறை இல்லை. இந்த மடத்தனமான இடத்தைவிட்டு எப்பொழுது ஓடிப் போகலாம் என்ற காத்திருக்கேண்டா”, என்று ஸ்கூட்டர் ஸ்டாண்டை உதைத்த வேகம் பேரா வோராவின் முகத்தைக் குறி பார்த்தது போன்றிருந்தது.

இது ரயனின் பாடமே இல்லை. அவன் வரும் வருடம் பாடங்களை வகுப்பில் வந்து கற்றுக் கொள்ளவே வேண்டாம். இதற்குப் பிறகு அவன் மனதை அதில் செலுத்தவில்லை. என்னுடைய குறிப்புகளை யோசிக்காமல் காப்பியடிப்பான். வினாத் தாளைப் படித்துப் பார்த்தது கூட கிடையாது. ஆம்; நம் சிறந்த டிஸைனர் தன் கனவுகளைக் கைவிட்டான்.

ஒரு நாள் நாங்கள் மூவரும் பொதுவாக ஒதுக்கப்பட்ட படிக்கும் அறையில் கூடியிருந்தோம். அலோக்கின் தெர்மல் அறிவியல் பாடத்தைக் காப்பியடித்துக் கொண்டிருந்தோம்.

“இப்போ, பேரா, வோரா உன் மேல் கோபமாக இருக்கார்”, என்றான் அலோக்.

ரயன் மௌனமாய் இருந்தான்.

“நிச்சயம் இருப்பார்; அவர் முகத்தைப் பார்த்திருக்க வேண்டும்”, என்றேன் என் பங்குக்கு

அலோக் தலையசைத்தபடி சிரித்தான்.

“என்னை ஃபெயில் செய்தாலும் கவலை இல்லை”, என்றான் ரயன்.

“அது பிரச்சனை இல்லை”, என்று ஆரம்பித்தான் அலோக்.

“குண்டா, உனக்குப் புரியாதுடா அதனால் விட்டு விடு; பேரா வீரா என்னை அந்த லூப்ரிகண்ட் பாடத்தைப் பற்றிப் பேசக் கூப்பிட்டார்.”

“அப்படியா?” என்று அலோக்கும் நானும் கோரஸாகக் கேட்டோம். பேரா வீரா நாங்கள் செய்யும் தகிடுதத்தத்தைக் கண்டு பிடித்து விட்டாரோ என்று பயந்தோம்.

“பயப்பட ஒன்றும் இல்லைடா; நான் இன்னும் ஒரு தனி ஆய்வு எழுதிக் கொடுத்திருந்தேன்.”

“தனி ஆய்வு செய்ய நேரம் இருக்கா உனக்கு?” என்றேன்.

“எனக்கு என்ன செய்ய விருப்பமோ அதற்கு எப்பொழுதும் நேரம் கிடைக்கும். நான் நிறைய பொருட்களின் கலவையைக் கொண்டு பரிசோதனை செய்து ஸ்கூட்டர் எவ்வளவு வேகம் ஓடும், இஞ்ஜினை எப்படிப் பாதுகாக்கலாம் என்று கண்டுபிடிக்க ஆசைப்படுகிறேன்.”

“எங்கே இதைச் செய்வாய்?” என்று கேட்டேன்.

“இதை ஃப்ளுயிடு மெக்கானிக்ஸ் ஆய்வு கூடத்தில் தான் பரிசோதிக்க வேண்டும். ஆனால் நமக்கு ஸ்கூட்டர் இஞ்ஜின், பணம், பொருட்கள் எல்லாம் தேவை. அது வரை என் ஸ்கூட்டரிலேயே பரிசோதனைகள் செய்யப் போகிறேன்.”

“அச்சச்சோ! நீ உன் ஸ்கூட்டரைப் பணயம் வைத்தால் நாம் எப்படி வெளியே சுற்றுவது?”

“இது அறிவியலுக்கான தியாகம். நான் கண்டுபிடிப்பின் விளிம்பில் இருக்கலாம். பலவிதமான எண்ணைகளின் கலவையை ஊற்றி மைலேஜ் எப்படி என்று பார்த்தேன். வழக்கமாகப் பயன் படுத்தவதைக் காட்டிலும் 10% கூடுதலாகக் கிடைத்தது.”

ரயன் செய்த காரியம் எனக்குப் பிரமிப்பாக இருந்தது. எல்லா கஷ்டங்களுக்கு இடையேயும் இவன் பெட்ரோல் கட்டணத்தைக் குறைக்க எண்ணுகிறான். 10% கம்மியாகப் பெட்ரோல் போட்டால் எவ்வளவு பராத்தாக்களைச் சாப்பிட முடியும் என்று கணக்குப் பார்த்தேன்.

“எதற்காகப் பேரா வீரா உன்னைக் கூப்பிட்டார்?” என்றான் அலோக்.

“அவர் இன்ஸ்டியில் அனுமதி வாங்கித் தருவதாகச் சொன்னார். இந்தப் பரிசோதனை நடத்த ஆய்வுக் கூடத்தைப் பயன்படுத்தவும் பிறகு ஏதாவது ‘கிராண்ட்’ கிடைத்தால் அதற்கான பணமும் கிடைக்கும்.”

“செம்மடா! நீ பாதி விஞ்ஞானி ஆகிவிட்டாய்” என்றான் அலோக்.

“ஆமாடா! ஏதோ ஒண்ணு!” என்று தோள் குலுக்கினான் ரயன். “இது ஒன்றும் அவ்வளவு எளிதானதல்ல. பேரா செரியனுக்கு ஒரு விளக்கவுரை கொடுக்க வேண்டும். பணத்தேவை, பயன்கள், நேர ஒதுக்கீடு இப்படிப் பல அலுப்பான விஷயங்கள். பிறகு ஒரு குழு தீர்மானிக்கும். ஒரு மாதம் பிடிக்கும் அல்லது பல மாதங்கள்.”

“ஆனால் உனக்குக் கிடைத்தால்” அலோக் வேகமாகக் கண்ணை மூடித் திறந்தான். “செம்மையா இருக்கும்டா.”

“அடுத்து வரும் வாரங்களிலில் நான் மிகவும் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும். கவலைப் படாதீர்கள். என் பாடங்களை விடாமல் கவனிப்பேன்; ஆனால் படங்கள், பார்ட்டிக்குத் தடா விதிக்கலாம்”, என்றான் ரயன்.

அலோக் இதையே சொல்லியிருந்தால் ரயன் ஆத்திரப்பட்டிருப்பான். இது ரயன் சொன்னது; நாங்கள் மறுத்துப் பேசவில்லை. அதோடு அவன் முக்கியமான விஷயத்தில் ஈடுபடுகிறான் என்பதே எனக்குச் சந்தோஷமாக இருந்தது.

“நிச்சயம்; நீ என்ன இழந்தாய் என்று சொல்கிறோம்” என்று அலோக்கைப் பார்த்துக் கண்ணடித்தேன்.

“ஆனால் இனி நீ டப்பா மன்னன் பட்டத்தைப் பெறுகிறாய்” என்றான் அலோக்.

“நான் டப்பா அடிப்பவன் கிடையாதுடா; நீ தான் மற்றும் வெங்கட்” என்று ரயன் பதிலடிக் கொடுத்தான்.

எனக்கு அலோக்கின் வீட்டிற்குப் போவதில் இஷ்டம் இல்லை. அதை நினைத்தாலே மருந்து வாசனை

மூக்கைத் துளைத்தது. உடைந்து விழும் காரை, சமையல் வாசனை, ஒரு நடுத்தர வயதுப்பெண் சதா அழுது ஓலமிடுவது. இருந்தும் ஒரு சனிக்கிழமை அலோக்குடன் சென்றேன். ரயன் தான் என்னை-தொந்தரவு-செய்யாதீர்கள், நான் விளக்கம் எழுதுவதில் பிஸி என்று கூறிவிட்டான். ரயனின் கடின உழைப்பைப் பார்க்க எங்களுக்கு அச்சமாக இருந்தது. வாரத்தில் மூன்று இரவு அவன் நூலகம், கணினி சென்டர் என்று சுற்றிக் கொண்டிருந்தான். மேலும் நாள் முழுவதும் ஃப்ளூயிட் மெக் ஆய்வு கூடத்தில் எண்ணையைக் கலக்கி ஸ்கூட்டரில் பரிசோதிப்பதிலேயே கழித்தான். நான் பிரியா திரையங்கில் ஓடும் படத்தைப் பற்றிக் கூறினேன். ஆறு ஸீன்களில் பெண் மேலுடையில்லாமல் அரை-நிர்வாணமாக வருகிறாள் என்றேன். அவன் ஒரு மாற்றமும் இல்லாமல் வெறித்தான். புது சரக்கு ரெஸிப்பிக்கள் பற்றிப் பேசினாலும், ரயன் இரவெல்லாம் ஆறு காப்பியைக் குடித்துவிட்டு வேலை பார்த்தான். குறிக்கோள், வீரியம், விஸ்தீரணம், நிதி, பயன்பாடுகள், கடந்தகால ஆய்வுகள்-ஒவ்வொரு பகுதியும் லட்சம் பக்கம் கொண்டவையோ என்று தோன்ற வைக்கும் அளவுக்கு வேலை செய்தான். பேரா வீராவிடம் கொடுத்துத் திருத்தச் சொன்னான். அவர் எப்பொழுதும் அதிகம் எதிர்பார்த்தார் ரயனிடமிருந்து.

அதனால் அலோக் என்னைச் சாப்பிட அவன் வீட்டிற்கு அழைத்த பொழுது நல்ல சாப்பாடாவது கிடைக்குமே என்ற நப்பாசையில் ஒப்புக் கொண்டேன். நான் இப்பொழுது வண்டி ஒட்டக் கற்றுக் கொண்டுவிட்டேன். ரயனின் ஸ்கூட்டர் சும்மா தானே இருந்தது. (கிலோமீட்டர் கணக்கை மட்டும் மறக்காமல் குறித்துக் கொள்ளச் சொன்னான்)

டெல்லி சாலைகளில் ஒட்டுவது ஒரு கெட்ட கனவு போல் இருக்கும். ரயன் அளவு வேகமாக என்னால் ஓட்ட முடியாது. அலோக்கும் நானும் ஐம்பதைத் தாண்டிப் போக முடியவில்லை. நான் பசுக்களையும் போலீஸ்காரர்களையும் சமாளித்து வளைந்து நெளிந்து போக வேண்டியிருந்தது; அலோக் வேறு தொண தொணவென்று பேசிக் கொண்டே வந்தான். நாங்கள் டெல்லி புறநகர் செல்ல வேண்டும்.

“ரயனுக்கு இந்த ப்ராஜெக்ட் கிடைக்குமா?” அலோக் ஸ்கூட்டர் பின்னால் அமர்ந்து கேட்டான்.

“கிடைக்கும்னு நினைக்கிறேன். அவனின் விளக்கவுரை மட்டுமே எண்பது பக்கங்கள். அதுவே, ஒரு ப்ராஜெக்ட்டுக்கு சமம். அதுவும் அவன் சொந்த முயற்சி”

“அவன் அதற்கு ஒரு கவர் ஷீட் வைக்க வேண்டி இருக்கும்.”

“ஏன்? அதனால் என்ன?”

“கவர் ஷீட்டில் மாணவனின் பெயர் மற்றும் ஜிபிஏ விவரம் இருக்கும். ஒரு ஐந்து புள்ளி சொச்சத்துக்கு நிதிஉதவி அளிப்பார்களா?”

“ஏன் மாட்டார்கள்? விளக்கவுரையைப் படித்துவிட்டுத் தீர்மானிப்பார்கள்.”

“அவர்கள் பேராக்கள்,” என்றான் அலோக். “அவர்கள் எப்படிச் சிந்திப்பார்கள் என்று உனக்குத் தெரியாதா?”

“பேரா வீரா அவனுக்கு ஆதரவாக இருப்பார்.”

“சரி, பார்க்கலாம்”

அலோக்கின் வீட்டை அடைய ஒரு மணிநேரம் பிடித்தது. மருந்து வாசனையை முகராமல் இருக்க நான் மூச்சு விடுவதையே அடக்கிக் கொண்டேன். ஆனால், ஆக்ஸிஜன் இல்லாமல் இருக்க முடியாதே - அலோக்கின் அம்மா விரைவிலேயே சாப்பாட்டை எடுத்து அடுக்கினர்.

“அலோக், உனக்கும் உன் நண்பருக்கும் பால்கட்டி (பனீர்) சமைத்திருக்கேன்,” என்றார் அம்மா.

ஒரு ஏழைக் குடும்பம் என்றாலும் அலோக்கின் வீட்டில் சாப்பாட்டுக்கு வஞ்சனை இல்லை. சாதம், சப்பாத்தி, பருப்பு, காலிஃபிளவர் - உருளை பொறியல், மாங்காய் சட்னி, தயிர் பச்சடி மற்றும் பட்டாணி - பனீர் இவர்கள் குடும்பத்தின் குண்டான சரீரத்தின் ரகசியம் இதுதான்.

“சாப்பிடு மகனே; கூச்சப்படாதே,” என்று அவனின் அம்மா என்னை உற்சாகப்படுத்தினாள்.

உணவு மிகவும் ருசியாக இருந்தது. ஆனால், உரையாடலில் தான் சுவாரஸ்யமே இல்லை. அலோக்கின் அம்மா கடந்த வாரத்தைப் பற்றிச் சொன்னாள். மிகவும் பிரச்சனையான வாரமாய்த் தோன்றியது. அவளுடைய அனைத்துப் பிரச்சனைகளுக்கும் சொல்லி வைத்தாற் போல் ஒரே தீர்வு - அதிகப் பணம். திங்களன்று ஐந்து முறை பழுது பார்க்கப்பட்ட வெந்நீர் கீய்ஸர் மறுபடியும் வேலை நிறுத்தம் செய்தது; புதிது வாங்கப் பணம் இல்லை; புதனன்று டிவி ஆண்டனா மக்கர் செய்தது; புதிது வாங்க வேண்டுமென்றால் விலை அதிகம் சொல்கிறார்கள். அதனால், குடும்பமே புள்ளி விழுந்த டெலிவிஷன் திரையை வைத்துக் கொண்டு அவதிப்படுகின்றனர். பணம் சேமிக்கும் வரை இந்த கதி தான்; வெள்ளியன்று

அலோக்கின் அப்பா கட்டிலிலிருந்து கீழே விழுந்து விட்டார். மருத்துவரை வீட்டிற்கு அழைத்ததால் நூறு ரூபாய் பழுத்துவிட்டது. இப்படிப் பல கதைகள் - ரேஷன் கடையில் சர்க்கரை இரண்டு மடங்காக விலை உயர்ந்துவிட்டது. வேலைக்காரி இந்த வாரம் இரண்டு முறை டிமிக்கிக் கொடுத்துவிட்டார்.

“அம்மா, என் நண்பனைக் கொஞ்சம் நிம்மதியாகச் சாப்பிட விடுகிறாயா?” என்றான் அலோக்.

“இல்லை, பரவாயில்லை,” என்று சொல்லி பருப்பை எடுத்துக் கொண்டேன். அலோக்கின் அம்மாவின் வீடும், வாழ்க்கையும் என்னைத் திகைப்பூட்டின. கடந்த ஒரு வருடமாக அவன் அம்மா தன் புடவைத் தலைப்பைப் பிடித்துக் கண்ணை கசக்கியது மட்டுமே என் மனதில் நின்றது. ஆனால், இப்பொழுது அந்த அம்மாவுக்கும் ஒரு தனிப்பட்ட வாழ்க்கை உள்ளது என்று புரிந்தது. அந்த அம்மாவின் போராட்டங்களும், சவாலும் ‘லியூப்’ விளக்கவுரை போல் இல்லையென்றாலும், விலை உயர்ந்த தக்காளியைப் போல் நெருடலாகத்தான் இருந்தது.

“சோபாவிலுள்ள ஸ்பிரிங் வேறு பிய்ந்து வருகிறது” என்று அவள் புலம்ப ஆரம்பித்ததை அலோக் தடுத்தான்.

“அம்மா, கொஞ்ச நேரம் அமைதியாய் இருங்கள்; ஒரு மாதம் கழித்து வீட்டுக்கு வந்திருக்கேன். இதைத்தவிர பேச வேற விஷயமே இல்லையா?”

அவள் திகைத்தாள், “நான் வேறு யாரிடம் என் பிரச்சினைகளைச் சொல்வேன்? எனக்கு ஒரு மகன் தான் இருக்கான்.”

“போதும்மா” அலோக்கின் முகம் தக்காளியாகச் சிவந்தது; அதுவும் விலை உயர்ந்த தக்காளியாய்!

“சரி நான் சும்மா இருக்கேன்” அலோக்கின் அம்மா ஒப்புக் கொண்டாள். பிறகு தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டிருந்தாள். சாப்பிட்டுக் கொண்டே மறுபடியும் ஆரம்பித்தாள், ‘சம்பாதிக்க வேண்டும், வேலைக்காரி போல் உழைத்துக் கொட்ட வேண்டும், பிறகு என் பேச்சைக் கூடக் கேட்க அவர்களுக்குப் பொறுமை இல்லை. இயற்பியல் ஆசிரியை திருமதி.சர்மா கூறுகிறார், ‘இப்பொதெல்லாம் பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் மீது அக்கறையே இல்லையென்று.’”

“கிளாங்!” அலோக்கின் தட்டு தரையில் பறந்தது. சாப்பாடு வரவேற்பறையில் தெறித்தது. அவன் எழுந்து வெளியேறினான்.

நான் என்ன செய்ய வேண்டும்? என் நண்பனைத் தொடர்ந்து செல்வதா? அவன் தானே கூட்டி வந்தான்? அலோக்கின் அம்மா தன் கண்ணீரைப் புடவைத் தலைப்பில் துடைப்பதை வேடிக்கைப் பார்ப்பதா? நான் இவை எதையும் செய்யாமல் பட்டாணி -பனீரில் கவனம் செலுத்தினேன். உணவு அருமை; இதற்குத்தான் வந்தேன்.

நான் எனக்கே சொல்லி சமதானப்படுத்திக் கொண்டு தட்டையே கவனமாகப் பார்த்தேன்.

சொல்லவே வேண்டாம்; இது சந்தோஷமான வருகை அல்ல. அலோக் கொஞ்சம் அமைதியாகி, வரவேற்பறைக்குத் திரும்பி வந்தான். சோபாவில் அமர்ந்தான். அலோக்கின் அம்மா, கையிருப்பில் இருக்கும் கண்ணீர் அனைத்தையும் கொட்டித் தீர்த்தவிட்டு, உள்ளே சென்று பாயசத்தை எடுத்து வந்தாள்.

“அலோக், என்னடா பண்ணறே?”

“நீ இதிலிருந்து விலகி இரு. உனக்குப் புரியாது.”

ஆமாம்; சரிதான் நான் இதில் சம்பந்தப்படுத்திக் கொள்ளக்கூடாது; அப்படி நினைத்தாலும் அவன் தானே என்னையும் இதில் சம்பந்தப்படுத்திவிட்டான்.

“அம்மா பாயசமெல்லாம் செஞ்சிருக்காங்க? உனக்கு என்ன பிரச்சனை?”

“அவை என் பிரச்சனைகள்; உனக்குப் புரியாது. வாயை மூடிக்கொண்டு பாயசத்துக்குக் காத்திரு.”

நாங்கள் பாயசத்துக்குக்காகக் காத்திருக்கிறோம். அது அசல் சுவை. அலோக்கின் வீட்டுப் பாதிப் பிரச்சனைகள் அவர்கள் கம்மியாகச் சாப்பிட்டாலே தீர்ந்து விடும். ஆனால், நல்ல உணவு தான் அவர்களின் அத்தியாவசிய தேவை. டிவி சரியாக இல்லையென்றால் பொறுத்துக் கொள்ளலாம். அது அவர்களின் சூழ்நிலை. அதனால் நான் திரும்ப கிளம்பும் வரை தலையிடாமல் இருந்தேன்.

“நீ என்ன நினைக்கிறேன்னு தெரியும்”, என்றான் அலோக்.

“என்ன?”

“நான் எப்படி இவ்வளவு இதயமற்றவனாகக் கொடூரமாக இருக்கேன் என்றா யோசிக்கிறே.” நான் அலோக்கின் இதயத்தைப் பற்றி யோசித்த ஒரே விஷயம் இவ்வளவு கொழுப்புச் சத்து கொண்ட உணவை

தினமும் உண்டால் அவனின் இதயம் அந்த அழுத்தத்தை எப்படித் தாங்கும் என்று மட்டும் தான்.

“இல்லை; உன்னை இப்படிப் பார்த்ததில்லை”, என்று சொல்லி முன்ரிகா ஜங்ஷனில் ஒரு வேர்கடலைக்காரரை இடிக்காமல் சட்டென்று நிறுத்தினேன்.

“இதைப் பற்றி மட்டுமே என்னுடன் பேசுவார்கள்; பிரச்சனை, பிரச்சனை மேலும் பிரச்சனை”, என்றான் அலோக். “இதைப் பற்றி நான் என்னதான் செய்ய முடியும்?”

“ம்ம்ம்ம்.அதுவும் சரிதான்”, என்றேன். இப்பொழுது அலோக் நான் தீர்க்க முடியாத ஒரு பிரச்சனையைப் பற்றி என்னிடம் சொல்கிறானோ?

வைவா-எனக்கு வெறுப்பையும், எரிச்சலையும், கலக்கத்தையும் ஒரு சேர கொடுக்கும் தருணம். என் மாணவ வாழ்க்கையில் இவற்றை என்னால் முடிந்த வரை ஒதுக்கப் பார்த்தேன். எப்படி சாலைகளில் வாலை ஆட்டும் மாடுகளைக் கண்டு மிரண்டு ஒதுங்குவேனோ அப்படி அரண்டேன்! ஆனால் டெல்லி போக்குவரத்து நெரிசலில் அவற்றிலிருந்து மீள முடியாது. அந்த புதன்கிழமை வடிமைப்பு வைவா. அது சீடீயில் என் பாடம். நான் தான் எல்லா கேள்விகளையும் சந்திக்க வேண்டும். ரயனையும், அலோக்கையும் பாடுபட்டு எனக்கு உதவச் சொல்லி கெஞ்சினேன். அந்தப் பொட்டைப் பசங்க, அன்றிரவு பத்து மணிக்கே இழுத்துப் போத்திக் கொண்டு தூங்கிவிட்டனர். இரவெல்லாம் டப்பா அடித்துத் தயார் படுத்திக்கொண்டேன். எதிர்பார்க்கும் அனைத்து கேள்விகளுக்கும் விடை தெரியும். ஆனால் இவற்றால் பயன் என்ன? கேட்கிற கேள்விகளுக்குப் பதில் தெரிந்தால் மட்டும் போதாது.

“ஹரி எதனால் C20 ஸ்டீலை விட C40 ஸ்டீல் சிறந்தது? இதையேன் கெட்டியான கட்டிடங்களுக்குப் பயன்படுத்துகிறார்கள்?”

C40ல் அதிகக் கார்பன் இருப்பதால் அது இன்னும் கெட்டித்தன்மை வாய்ந்தது என்று எண்ணினேன். மேலும் விலை மலிவானது. C20 மென்மையானது; வளைந்து விடக் கூடும். விடை தெரியும். பேரா வோரா நேராக என் கண்களைச் சந்திக்காமல் இருந்தால் உதவியாக இருக்கும்.

“ஸார், C40 ஸ்டீல் வந்து…” ரயனையும், அலோக்கையும் பரிதாபமாகப் பார்த்தேன்.

“என்னைப் பாரு ஹரி; உன்னைத்தான் கேட்கிறேன்”, என்றார் பேரா வோரா.

அவரைப் பார்க்க விருப்பம் இல்லை. விடையைச் சொல்ல முயன்றேன். ஆனால் என் உடம்பிலிருந்து குண்டு குண்டாக வேர்வைத் துளிகள் உதித்ததன-முகத்தில், கைகளில், தோள்களில்.

நான்கு முறை முயன்றும், மூன்று கேள்விகளுக்குப் பின்னர் பேரா வோரா போதும் என்று எண்ணினார். ரயன் தலையசைத்துப் புன்னகைத்தான். அவனுக்கு இப்படித் தான் நடக்கும் என்று நன்றாகத் தெரியும் போலத் தோன்றியது. அலோக் மௌனமாய் இருந்தான். நாங்கள் எவ்வளவு மதிப்பெண்களை இழந்துவிட்டோம் என்று மனக்கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான்.

“ஸாரிடா”, என்றேன் இரவு சாப்பிடும் பொழுது. “உங்களை வழக்கம் போல் ஏமாற்றம் அடைய வைத்துவிட்டேன். எனக்கு வைவாக்களைக் கண்டாலே வெறுப்பா இருக்கு.”

மெஸ்ஸில் பணியாளர்கள் தூக்கியடித்த சப்பாத்திக்களைக் கிழித்து ஜின்ஸ் தைக்கலாம்; ஒன்றைப் பலமாகக் கிழித்தேன், என் இறுக்கத்தைக் குறைப்பதற்காக.

“உனக்கு என்ன ஆகிறது?” என்றான் அலோக்.

“எனக்குத் தெரியலே. யாராவது என்னை ஒரு இறுக்கமான சூழலில் கேள்வி கேட்டால் என்னால் பதிலேதும் சொல்ல முடிவதில்லை.”

“எப்போதிலிருந்து இந்தப் பிரச்சனை?” அலோக் கேட்டான்.

“பள்ளியிலிருந்தே,” என்றேன்.

“ஏதாவது நடந்ததா?” என்றான் ரயன்.

“இல்லை அதாவது, ஒன்றும் நடக்கலையென்று சொல்ல வந்தேன்,” என்றேன்.

“என்ன?” அலோக் கேட்டான்.

“விட்டுவிடு; சோற்றை நகர்த்து. இந்தச் சப்பாத்தியை என்னால் ஜீரணிக்க முடியாது. இவை சூயிங்கம் போல் உள்ளன,” என்றேன்.

நேஹாவின் பிறந்த நாள் டிசம்பர் 1 ஆம் தேதி. வழக்கம் போல் அவளுக்கு என்ன வாங்கிக் கொடுப்பது என்ற திட்டமே இல்லாமல் இருந்தேன்.

“நீ சிறப்பாக ஏதாவது செய்ய வேண்டும்,” என்றான் ரயன்.

நாங்கள் வகுப்புக்குச் செல்லாமல் கேண்டீனில் உட்கார்ந்து வம்படித்துக் கொண்டிருந்தோம்.

“என்ன சிறப்பாகச் செய்வது? என்னிடம் பணம் இல்லை. எனக்கு பேஸ்டு வாங்கக் கூடக் காசு இல்லை,” என்றேன்.

“அதனால் பல்லே தேய்ப்பதில்லையா?” என்று அலோக் நிமிர்ந்து பார்த்தான்.

“அடப் போடா! ரயனுடையதை எடுத்துக் கொள்வேன்,” என்றேன். “விஷயத்துக்கு வா குண்டா. நான் என்ன செய்யட்டும்?”

“சிந்தித்துப்பார்,” என்றான் ரயன். அவன் ஏதோ அணு ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானி போல் தலையைத் தட்டிக் கொண்டான். அவன் மிகவும் வெறுப்பேத்துகிறான்!

“என்னால் எதுவும் யோசிக்க முடியவில்லை,” என்றேன்.

“இனி சொந்தமாக - பரிசு - செய்யும் முயற்சியெல்லாம் சரி வராது. அதுதான் ஏற்கனவே லிப்ஸ்டிக் டப்பா கொடுத்தாச்சே. அதனால் அந்த விஷயம் எடுபடாது; நான் சுத்தமாக போண்டி- அதனால் விலை உயர்ந்ததைப் பற்றி யோசிக்கக் கூட முடியாது.”

“ஏதாவது பயனுள்ள விஷயம், ஆனால் மலிவானது கர்சீப்புகள்?” என்றான் அலோக்.

“வாயை மூடு அலோக்,” என்றான் ரயன்.

எனக்காக ரயன் அதைச் சொன்னது மகிழ்வாக இருந்தது. அலோக்கின் அம்மாவுக்கு காபரே நடனம் பற்றி எவ்வளவு அறிமுகமோ, அந்த அளவுதான் அலோக்கின் காதல் ரசம் சொட்டும் பரிசைப் பற்றிய அறிவும்.

“ரயன், நான் என்ன செய்யட்டும்?” என்றேன் கலக்கமாக.

“அது விலை அதிகமானதாக இருக்க அவசியமே இல்லை அது பிரமிப்பூட்டும் விஷயமாக இருந்தாலே போதுமானது. யாருக்குத் தான் ஆச்சரியம் பிடிக்காது?”

“உதாரணத்திற்கு?” என்றேன்.

“உதாரணம் - நீ தான் அவளை முதலில் கூப்பிட்டு வாழ்த்துக்கள் சொல்வது,” என்றான் ரயன்.

ரயனின் திட்டம் சொந்த முயற்சியாக இருந்தது (அதே சமயம் மலிவானது); அவளின் அறைக்குள் அவளுக்குத் தெரியாமல் நுழைந்து விடுவது; அதாவது அவளின் ஜன்னல் வழியாகக் குதித்து இறங்குவது. நள்ளிரவில் நான் தான் முதல் ஆளாக வாழ்த்துச் சொல்வேன். அவள் வானில் மிதப்பாள். சந்தோஷத்தில் (அதனால் பரிசுப்பொருள் எதுவும் கொடுக்காமல் தப்பித்துவிடலாம்). கொஞ்சம் பைத்தியக்காரனத்தனமான திட்டமாக இருந்தாலும் பிடித்திருந்தது. நாங்கள் என் கர்ள்ஃபிரெண்டின் வீட்டினுள் அழையா விருந்தாளியாகக் குதிக்கப் போவதில்லை; அது எங்கள் பேராவின் வீடு. அதுவும் தலைமைப் பேராசிரியர். ஆனால் ரயன் சொன்னதைப் பார்த்தால் இது தெர்மோடைனமிக்ஸின் பாடத்தைக் காப்பியடிப்பதை விடவும் எளிதாகப் பட்டது. நான் சம்மதித்தேன்.

அன்று மிகவும் குளிர். அந்த டிசம்பர் இரவு பதினொன்றரை மணிக்கு ரயனும், அலோக்கும், நானும் சத்தமே இல்லாமல் குமாவோன்னை விட்டு வெளியேறினோம். ரயன் ஆசிரியர்கள் குடியிருப்புக்கு ஓட்டிச் சென்றான். நேஹா வீட்டிலிருந்து ஒரு ஐம்பது மீட்டர் தொலைவில் வண்டியை நிறுத்தினான். குமாவோன்னில் இருந்த வீட்டுப்பாடம், டப்பா அடிப்பது போன்ற அமளி துமளி ஏதும் இல்லாமல் அமைதியாக இருந்தது. பேராக்கள் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தனர். அவர்களின் அடிமைகள் இரவெல்லாம் அவர்கள் கொடுத்த வேலையை முடித்துக் கொண்டிருந்தனர்.

“ரயன், நம்மால் இதைச் சமாளிக்க முடியுமா?” என்று பேரா செரியனின் வீட்டுப் புல்தரையை அடைந்ததும் கடைசியாக ஒரு முறை கேட்டேன்.

“உஷ்ஷ் நிச்சயம் முடியும். நாம் அமைதியாக இருந்தால் தான் சாதிக்க முடியும்,” என்று ரயன் பேரா செரியனின் கேட்டைத் திறந்தான்.

அமைதி நிலவியது. கேட்டின் கிரீச்சிடும் சத்தம் மட்டுமே கேட்டது. நாங்கள் ‘வனிதையும், விலங்கும்’ தங்கிய குகைக்குள் செல்லத் தயாரானோம்.

நேஹாவின் ஜன்னலை நிமிர்ந்து பார்த்தேன். அவள் அமைதியாகத் தூங்குவதையும், அவளின் அழகு முகம் இரவில் ஒளிர்வது போலும் கற்பனை செய்து பார்த்தேன். என் இதயத்துடிப்பு அதிகரித்தது.

“அலோக், முதலில் நீ பைப்பில் ஏறு,” என்று ரயன் கிசுகிசுத்தான்.

“என்னால் முடியாது,” என்றான் அலோக்.

“நான் உன்னைத் தள்ளித் தூக்கிக் கொடுக்கிறேன்,” என்றான் ரயன்.

அவன் அந்த ஒடிசலான ஸ்டீல் பைப்பின் மீது ஏறும் காட்சி, ஒரு கொரில்லா மூங்கில் குச்சியில் ஏறுவது போல் இருந்தது. அந்தப் பைப்பே உடைந்துவிடும் அபாயம் இருந்தது. அவனுடைய உடம்பின் எடையும் அந்த ஸ்டீல் பைப்பின் வலுவையும் ஒப்பிட்டால் (அடடா நாங்கள் இன்ஜினீயரிங் படிப்பதிலும் ஒரு பயன் இருக்கு); நாங்கள் அவன் கூரையை அடையும் வரை காத்திருக்கத் தீர்மானித்தோம்.

அலோக்குக்குப் பிறகு அடுத்து ரயன். அவன் லாவகமாக சில நொடிகளில் ஏறிவிட்டான். நள்ளிரவுக்கு இன்னும் பத்து நிமிடங்கள் இருக்கும் சமயம் நாங்கள் பேரா செரியனின் மேற்கூரையில் இருந்தோம்.

கும்மிருட்டு. ரயன் ஒரு டார்ச்லைட்டை அடித்தான். நாங்கள் தண்ணீர் டாங்குகள், காயப் போட்ட துணிகளுக்கு இடையே ஜாக்கிரதையாக நடந்தோம்.

“அவள் அறை எங்கே?” என்றான் ரயன்.

நான் பேசாமல் கை காட்டினேன். நாங்கள் ஓரமாக நடந்தோம்.

“இந்தா பூக்கள்,” என்று ரயன் ஷர்ட்டின் உள்ளிருந்து சூரியகாந்தி மலர்களைக் கொடுத்தான்.

“எங்கேடா வாங்கினே?” என்றேன்.

“இப்போ தான். செரியனின் தோட்டத்திலிருந்து.”

“உனக்கென்ன பைத்தியமா?” என்றேன்.

“ஒரு அழகான விஷயத்துக்காக; சரி தயாராகு,” என்றான் ரயன்.

கூரையில் இருந்த கூழாங்கற்களை நேஹாவின் ஜன்னல் மீது எறிந்தோம். ஒன்றும் நடக்கவில்லை. ஒன்று, இரண்டு, மூன்று

“பிரயோசனம் இல்லை. அவள் அசந்து தூங்குகிறாள்,” என்றான் அலோக்.

“முயன்று கொண்டே இரு,” என்றான் ரயன்.

மூளையற்றவர்கள் திரும்பத்திரும்பச் செய்வது போல் சிவனே என்று கற்களை எறிந்து கொண்டே இருந்தோம். ஒரு லட்சம் கற்கள் எறிந்திருப்போம். பிறகு மெதுவாக அறையின் விளக்கு எறிந்தது. ஜன்னல் வெளிச்சமானது.

பைப்பின் மேல் ஏறுவது கடினம் என்று நினைத்தீர்களானால், அடுத்த படி அதையும் விட கொன்றே விடும் கஷ்டம் நிறைந்தது. நான் சுவற்றிலிருந்து தொங்க வேண்டும். அலோக்கும், ரயனும் என் கைகளை ஆதரவாகப் பிடித்துக் கொண்டிருப்பார்கள். அதற்கு முன் நேஹா ஜன்னலின் கதவைத் திறக்க வேண்டும்.

“சீக்கிரம்; அவள் பயத்தில் அலறுவதற்கு முன், அவள் பெயரைச் சொல்லிக் கூப்பிடு,” என்றான் ரயன்.

“நேஹா, நான்தான்,” இந்த அரை மணியில் முதல் முறையாககிசுகிசுக்காமல் சாதாரணமாகப் பேசினேன்.

“ஹரி,” என்றபடி நேஹா கதவைத் திறந்தாள், “இங்கே என்ன பண்றே?”

“நான் விவரமா சொல்றேன். முதலில் உள்ளே வரணும்,” என்று உள்ளே குதிக்கத் தயாரானேன்.

“உனக்கென்ன பைத்தியமா?” அவள் கண்களிலிருந்து தூக்கத்தைத் தேய்த்தாள். என் கால்கள் அவள் கண் முன் ஆடிக்கொண்டிருந்தன.

“ஜாக்கிரதை ரயன்,” என்றேன்.

“வேறு யார் இருக்கிறார்கள் உன்னுடன்?” நேஹா திகைப்பில் முழுவதும் விழித்துக் கொண்டாள்.

“யாரும் இல்லை அதாவது ரயனும், அலோக்கும்,” என்று சொல்லியபடி ஜன்னல் வழியாக உள்ளே குதித்தேன். “ஜாக்கிரதை,” என்று நேஹா எச்சரித்தாள். நான் அங்கிருந்த ஒரு விரிப்பின் மீதுள்ள குஷனில் குதித்தேன். மிகவும் அழகாக, மென்மையாக, ஒரு பெண்ணுக்கே உரித்தான அறை போல் இருந்தது.

என் நண்பர்களுக்குக் கட்டை விரலை உயர்த்தி சமிக்ஞை செய்துவிட்டு ஜன்னல் கதவை இழுத்து

மூடினேன்.

“ஹரி, நீ என்ன செய்கிறே என்று புரிந்து தான் செய்கிறாயா?” என்றாள் நேஹா. “அம்மா விழித்துக் கொண்டால் என்னவாகும்?” நான் அவளின் இரவு உடையைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் தன் தலைமுடியை நேர் செய்து கொண்டாள். அவள் கையில்லாத எளிய காட்டன் நைட்டி அணிந்திருந்தாள். அதில் நீல நிற முக்கோணங்கள் இருந்தன. வழக்கம் போல் மிகவும் அழகாக இருந்தாள்.

“பிறந்தநாள் வாழ்த்துக்கள் நேஹா,” என்றேன். என் ஷர்ட்டின் உள்ளிருந்து அந்தப் பூக்களை எடுத்தேன்.

அந்தப் பூக்கள் நசுங்கி, வாடத் தொடங்கின. ஆனால், பூக்களுக்கும், பெண்களுக்கும் ஒரு விநோத பந்தம் உண்டு. செடிகளின் பிறப்புறுப்புகளின் சாதனங்களான பூக்களைக் கண்டால் பெண்களுக்கு அலாதி சந்தோஷம்; அவர்களைக் களிப்படையச் செய்யும். நேஹாவின் கோபம் பஞ்சாய்ப் பறந்தது. பூக்கள் விஷயம் அவளிடமும் வேலை செய்தது.

“சூரியகாந்திப் பூக்கள்,” என்ற நேஹா“ எங்கே கிடைத்தது?”

“உன் தோட்டத்திலிருந்து தான்.”

“என்ன?” நேஹா ஒரு தண்டை என் மீது எறிந்தாள். “டேய் பொறுக்கி! என்ன ஒரு சீப்பான ஆளு நீ!”

“நான் ஒரு குஷனை எடுத்து அவள் மீது வீசினேன். நான், “இந்த குஷன், பூபோட்டு செம்மையாக இருக்கே,” என்று பரபரப்படைவதற்குள் அந்தக் குதூகலத்தை மொட்டிலேயே வெட்டினாள் நேஹா.

“அந்த குஷன்களை எறிந்து பாழாக்காதே; நான் அந்தக் சுவர்களின் மீது என் கையால் வரைந்து வண்ணம் தீட்டியிருக்கேன்.”

கையில் வண்ணம் தீட்டிய குஷன் கவரா? பெண்கள் தங்கள் பொழுதை எப்படி இப்படிப் பயனற்ற வேலையில் செலவிடுகிறார்கள்? எனக்கும், ரயனுக்கும் குஷன் கவரே கிடையாது. பிறகு தானே அவற்றில் வரைந்து வண்ணம் தீட்டுவது?

“என்ன யோசிக்கிறாய்?” என்று என் அருகே வந்து என் கையைப் பிடித்துக் கொண்டாள்.

“ஒன்றும் இல்லை. திடீரென்று வந்து உன்னைப் பயமுறுத்தியதற்கு மன்னித்துவிடு.”

“பரவாயில்லை. எனக்குப் பிடிச்சிருக்கு,” என்றாள் நேஹா.

“இது ரொம்ப சிறந்த விஷயம். வா, உட்கார்.”

அவளின் கட்டிலில் என்னை உட்காரச் சொன்னாள். அவளுடன் எவ்வளவு நெருக்கமாக அமர முடியுமோ அவ்வளவு நெருக்கத்தில் அமர்ந்தேன். என் கண்கள் அவள் மார்பைப் பார்த்தன. இரவில் பெண்கள் உள்ளாடைகள் அணிவதில்லை. அது அவர்களுக்கு இன்னும் எடுப்பாகவும், பொருத்தமாகவும் இருந்தது. அதேசமயம் பேரா செரியன் அவள் அறைக்குள் பிரவேசிக்கும் சாத்தியக் கூற்றையும் யோசித்துப் பார்த்தேன்.

“என்ன யோசிக்கிறே? என் கண்ணைப் பார்,” என்றாள் நேஹா.

“ஹஹ்! ஒண்ணுமில்லை. பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்,” என்றேன்.

“நீ என்னை முத்தமிடப் போவதில்லையா?”

என் கண்கள் (UFO) எனும் பறக்கும் தட்டுக்கள் போல் அகன்று விரிந்தன.

அவள் நகர்ந்து கொண்டாள். “ஒரு நிமிஷம் உனக்கு முத்தமிட விருப்பம் தானே?”

“ஆமாம் நிச்சயமாய்.”

“அப்ப இரு,” என்றான்.

“என்ன?” என்றேன்.

“என்னை முத்தமிடப் போகிறாயா, இல்லையா?”

பூக்களா, உள்ளே யாருக்கும் தெரியாமல் நுழைந்த பரபரப்பா, இல்லை அவள் கடைசியாகத் தெளிந்து பெரியவளாக முதிர்ச்சியடைந்து விட்டாளா? நான் முன்னால் சாய்ந்தேன். திரைப்படங்களில் லட்சம் முறை முத்தக் காட்சிகளைப் பார்த்திருக்கிறேன். முதல் முறை நன்றாக முத்தமிடுவது மிகவும் கஷ்டம் என்று உணர்ந்தேன்.

“ஐயோ இவ்வளவு அழுத்தமாகவா?” என்றாள்.

“மென்மையாகக் குழந்தை முத்தங்களாக ஆரம்பி!”

அவளே தொடர்ந்து முத்தமிட்டாள்; வழிகாட்டினாள்; உண்மையைச் சொன்னால் எனக்கிருந்த பயமும், பரபரப்பும் என்னைச் சரியாக முத்தமிட அனுமதிக்கவில்லை?! ஆனால், பேரா செரியனின் வீட்டில் என் முதல் முத்தம்!

“உஷ்ஷ் அப்பா தண்ணி குடிப்பதற்காக எழுந்து விட்டார்,” என்று என்னைத் தள்ளிவிட்டாள்.

“இப்போ என்ன செய்வது?”

“ஒன்றும் இல்லை. அவர் மேலே வரமாட்டார். ஆனால் நீ கிளம்பு.”

“எனக்கு உன்னுடன் இருக்கணும்.”

“கிளம்பு,” என்று என்னைக் கட்டிலிலிருந்து தள்ளினாள். சில நொடிகள் முன் இருந்த காதல் பார்வை இப்பொழுது அவள் கண்களில் மிச்சம் இல்லை.

வலியுறுத்துவதில் பிரயோசனம் இல்லை. என்னுள் ஏதோ ஒன்று இங்கிருந்து புறப்படு, மாட்டிக் கொள்வதற்கு முன் என்று அறிவுறுத்தியது.

“எப்படிடா இருந்தது?” என்றான் ரயன், என்னைக் கூரை மீது இழுத்தபடி.

“ரொம்ப நல்ல இருந்ததுடா,” என்று பெரிதாக இளித்தேன். என் முகம் முழுவதும் அந்த இளிப்பு பரவியிருந்தது. வேறு எந்த விளக்கமும் தேவையில்லை.

ஏறுவது போலவே, இறங்குவதும் ஒரு பெரிய கலைதான். ஆனால், பெரிய பிரச்சனை அந்தப் புல்தரையில் காத்திருந்தது. யாரோ வரவேற்பறை விளக்கைப் போட்டிருந்தனர்.

“யார் விளக்கைப் போட்டது?” என்றான் அலோக்.

“தெரியவில்லை. செரியன் தண்ணீர் குடிக்க எழுந்து கொண்டார்,” என்றேன்.

“மெதுவாகத் தவழ்ந்து சென்று விடலாம்,” என்றான் ரயன். ஜன்னலில் தெரியாதவாறு கீழே குனிந்தான்.

அலோக் புல் தரையில் தவழும் பொழுது ஒரு பக்கெட்டைத் தட்டிவிட்டான். அது போட்ட சத்தத்தில் நாங்கள் ரகசியம் பேசிப் பிரயோசனம் இல்லை என்றாயிற்று.

“யாரது?” என்று உள்ளிருந்து ஒரு ஆண்குரல் கேட்டது. காலடிகளின் சத்தம் அதைத் தொடர்ந்து வந்தது.

“ஐயோ! செரியன்டா ஒடு! இடத்தைக் காலி பண்ணு” என்றான் ரயன்.

நாங்கள் தவழ்வதை விட்டு எழுந்து ஓடினோம். செரியன் எங்களைப் பார்த்தால் எங்களைக் காலேஜிலிருந்து வெளியே துரத்திவிடுவார்.

நாங்கள் கேட்டுக்கு வெளியே வந்துவிட்டோம். அப்பொழுது முன் வாசல் திறந்தது. செரியன் வெளியே வந்தார். அவர் மனைவியின் இரவு உடையை அணிந்தவர் போலிருந்தார்.

“யாரது?” என்று கத்தியபடியே மூக்குக்கண்ணாடியைச் சரியாக மாட்டிக் கொண்டார்.

“ஒங்கப்பா!” ரயன் கத்திக் கொண்டே வீட்டைவிட்டு வெளியே ஓடினான்.

செரியன் எங்களைத் துரத்தினாரா அல்லது பயந்து அங்கேயே நின்றுவிட்டாரா என்று கூடச் சரியாகப் பார்க்கவில்லை.

தலைதெறிக்க ஓடினோம். ரயன் ஸ்கூட்டர் அருகே வந்தோம். மூச்சிறைக்க நின்றோம்.

“டேய்! நீ என்ன முட்டாளா? எதுக்கு அப்படிச் சொன்னே?” என்று திட்டினேன். நாங்கள் வண்டியில் விடுதி நோக்கிச் சென்றோம்.

“ஆமாடா! சரி தான்! நான் வந்து,” ஸார், உங்கள் மாப்பிள்ளையும் அவருடைய நண்பர்களும் வந்திருக்கோம்’ என்று சொல்லியிருக்க வேண்டும். அவரும் உடனே சரக்கெடுத்துக் கொண்டு வந்து நமக்கு ஊற்றிக் கொடுத்திருப்பார்.”

# 12

## நேஹா பேசுகிறாள்

சமீர் அண்ணா,

இதை நீ எப்போ, எப்படி படிப்பேன்னு தெரியாது. ஆனாலும் இந்தக் கடிதத்தை நான் எழுதியே ஆக வேண்டும். உன்னுடைய கடைசி கடிதத்திற்கு நான் பதில்கள் யோசித்து வைத்தேன். எனக்கு மட்டுமே நீ எழுதிய அந்தக் கடிதம்; என் பார்வைக்கு மட்டுமே என்று சந்தோஷப்பட ஒன்றும் இல்லை. ஆனால் அதைத் தான் உன்னிடம் முதலிலேயே சொன்னேனே.

சரி; நான் சந்தித்தப் பையனைப் பற்றி சொல்கிறேன். ஹரியை நீ என் பாய்ஃபிரெண்டு என்று அழைக்கலாம். ஆனால் நாம் அப்படிச் சொல்வதில்லை. அவன் ஒரு மாணவன். உன்னால் நம்ப முடிகிறதா? நாம் இருவரும் ஐஐடி மாணவர்ளை எப்படி வெறுத்தோம்; காம்பஸில் அவர்களைக் கண்டாலே ஆத்திரப்பட்டோம்; நினைவிருக்கிறதா? நாங்கள் சந்தித்ததே ஒரு விந்தையான சூழலில்; அவனிடம் ஏதோ ஒன்று, என்னை முதல் சந்திப்பிலேயே ஈர்த்தது.

ரொம்ப அழகன் என்றெல்லாம் சொல்ல முடியாது. செம கெட்டிக்காரன் கூடக் கிடையாது. ஆனால் அங்கே நின்று கொண்டிருந்தான். சற்றே அசட்டுக் களையில் உனக்குத் தெரிந்திருக்கும்- அம்மாவுக்கும், அப்பாவுக்கும் இதைப் பற்றி ஒன்றும் தெரியாது. நீ சென்றதிலிருந்து அவர்களிடம் மறைத்து வாழப் பழகிக் கொண்டேன். ஆனால் அப்பாவுக்குத் தெரியவந்தால் என்ன நடக்கும் என்று உனக்க நன்றாகத் தெரியும். காம்பஸ் பஸ் ஸ்டாப்பில் ஒரு ஆள் என்னைப் பார்த்து விஸிலடித்ததற்கே அப்பா போலீஸைக் கூப்பிட்டது மறக்குமா? ஒரு பையன் என் குறிப்புகளைக் கேட்டுத் தொலைபேசியில் அழைத்ததற்காக அவர் தொலைபேசி எண்ணையே மாற்றினார்; அவர் தன் மகளைச் சரியாக வளர்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். நான் தான் அவரின் வாழ்க்கை இலட்சியம். அதே தப்பை இரண்டாம் முறை செய்ய விரும்பவில்லை. நீஇப்படி எனக்குச் செய்யலாமா, அண்ணா?

நான் உனக்குச் சொல்ல வந்தது, என்னைப் பற்றிக்கவலைப்படாதே. எனக்குத் தெரியும் பெண்கள் எப்பவும் நல்ல பெண்களாக மட்டுமே இருக்க வேண்டும். சில சமயம் எனக்குத் தோன்றும், இந்தப் பையனுக்கு என் உடல் மீது தான் ஆசை; மற்ற பெண்கள், பாய்ஃபிரெண்டு இருப்பவர்கள், சொல்வது என்ன? பையன்கள் ஒரே மாதிரி தான்; அவர்கள் ஒரே விஷயத்திற்குத் தான் அலைகிறார்கள். ஆனால் நான் ஒன்று சொல்லட்டுமா? எனக்கும் அதே தான் தேவை; இன்னும் அதைப் பற்றி நான் எதுவும் செய்யவில்லை. ஆனாலும் அடிக்கடி எனக்கும் ஆவலாக இருக்கு, இதைப் பற்றித் தெரிந்து கொள்ள. ஒரு வேளை நான் ஹரியின் ஆசைக்கு இணங்கினால் அவன் என்ன செய்வான் என்று கற்பனை செய்து பார்க்கிறேன். அதைப் பற்றி யோசிப்பதே தப்பா?

அடச்சே! திரும்பவும் உன்னிடமே கேள்விகளை எறிகிறேன். ஹரியைப் பற்றி இன்னும் கொஞ்சம் சொல்ல வேண்டும். அவனுக்கு இரண்டு நண்பர்கள்-ரயன் மற்றும் அலோக். இருவரும் அபத்தமானவர்கள். எனக்கு ஐஐடி மாணவர்களைப் பிடிக்கும் என்று தவறாக எண்ணி விடாதே. இவர்கள் வித்தியாசமானவர்கள். ஒன்று நிச்சயம்; அவர்களின் ஐந்து-புள்ளி சொச்சம் ஜிபிஏவை வைத்துக் கொண்டு எப்படி மாணவர்களாகக் காலம் தள்ளுகிறார்கள் என்பதே புதிர்!

நீ என்ன நினைக்கிறாய் என்ற புரிகிறது. இவர்களைப் போன்ற மாணவர்களைத் தான் அப்பா வெறுப்பார்; அதற்காகத் தான் நான் அவர்களுடன் உறவாடுகிறேனோ என்று; அப்படி நினைத்தால் தவறு, அண்ணா. என் பிறந்தநாளன்று நம் வீட்டினுள் அத்து மீறி நுழைந்து அட்டகாசம் செய்தார்கள், நான் சொல்லும் இந்தப் பொறுக்கிகள். ஹரி என் அறைக்குள் வந்து நம் தோட்டத்திலிருந்து பறித்த மலர்களை எனக்கே அளித்தான்! அப்பா அவனைப் பற்றித் தப்பான கோணத்தில் புரிந்து கொள்ளவே கூடாது! அவனை வாழ்நாளெல்லாம் சந்தித்து கொண்டிருக்க ஆசை. ஆனாலும் ஹரியைப் பற்றிய நிறைய விஷயங்கள் எனக்குத் தெரியாது.

என் திட்டம் என்னவென்றால் ஹரிக்கு வேலை கிடைக்கும் தினம் அவனை அப்பாவுக்கு அறிமுகப்படுத்துவது. அப்பாவுக்குத் திரும்பவும் பயங்கர கோபம் வரும். ஆனாலும் ஹரிக்கு சாதகமாக

அவனுடைய வேலையிருக்கும். இப்பொழுது பார்த்தால் அவன் ஒரு தோத்தாங்குளியாகத் தான் தோன்றுவான். ஸாரி! நான் கேவலப்படுத்தவதற்காகச் சொல்லவில்லை. ஆனால் சில விஷயங்களில் அவன் அப்படித்தான். அவன் ரயனின் மீது கண்மூடித்தனமாக ஈடுபாடு கொண்டுள்ளான். "எப்பவும், ரயன் இப்படி, ரயன் அப்படி" இது எனக்கு எரிச்சலைத் தரும். இந்த ரயன் அவ்வளவு கூல் பையன் இல்லை என்பது என் அபிப்பிராயம் பிராண்டு உடை உடுத்துகிறான்; ஆனால் அவன் பெற்றோர்கள் பணக்காரர்கள். இந்தப் பையனின் அகம்பாவத்துக்குப் பின் வெறும் சூனியம் தான் உள்ளது.

இது தான் ஐஐடி பசங்களுக்கும், அவர்கள் காலேஜுக்குமான பிரச்சனை. அவர்கள் செங்கற்களிலும், சுவர்களிலும் மூழ்கி விடுகின்றனர். அசலில் அவர்கள் யார்? அவர்களின் தேவை என்ன என்பதையே உணர்வதில்லை. எனக்கு அவர்களிடம் சொல்ல வேண்டிய விஷயம். எதிர்காலத்தைப் பற்றி திட்டமிடுவதற்கு முன் உங்களின் கடந்த காலத்தையும், நிகழ் காலத்தையும் சரி செய்து கொள்ளுங்கள். அப்படி நான் சொன்னால் ஏதோ கிழவியின் அறிவுரை போல் தோன்றும். நான் மிகவும் இளமையானவள்.

இப்போதைக்கு எனக்கு எழுத இவ்வளவு விஷயங்கள் தான் உள்ளன. நான் பிறகு எழுதுவேன் என்றும், நல்ல பெண்ணாக இருப்பேன் என்றும் உறுதியாகச் சொல்கிறேன். உன்னிடம் உளறியவற்றை நீ அம்மா, அப்பாவிடம் சொல்லாதே. நீ கேட்ட கடைசி சத்தியத்தை நான் காப்பாற்றிக் கொண்டு வருகிறேன். யாரிடமும் உன் கடிதத்தைப் பற்றி மூச்சு கூட விடவில்லை. அந்தக் கடிதம் என்னைச் சுக்கு நூறாக உடைத்த பொழுதும் யாரிடமும் பகிர்ந்து கொள்ளவில்லை; ஏன் என்றால் அப்படிப் பகிர்ந்து கொள்ள வேண்டாம் என்று நீ அந்தக் கடிதத்தில் கேட்டுக் கொண்டதால். அதே போல் நீயும் என் கடிதத்தைப் பற்றி யாரிடமும் சொல்லாதே. ஆமாம். எனக்குத் தெரியும் அம்மாவால் இதைத் தாங்க முடியாது என்று. இப்பொழுதெல்லாம் அம்மா அதிகம் பேசுவதே இல்லை. எங்களை விட்டு ஏன் பிரிந்து போனே, அண்ணா? அது நியாயமே இல்லை; அது உனக்கேத் தெரியும் தானே?

உன்னைப் பிரிந்து கஷ்டப்படும்,

நேஹா

*Downloaded from [Ebookz.in](Ebookz.in)*

# 13

## இன்னொரு வருடத்திற்குப் பிறகு

நாங்கள் இன்ஸ்டி கூரையில் குடித்துக் கொண்டிருந்தோம்; மூன்றாவது வருட மாணவர்கள்; எங்களுக்குச் சரக்குப் புதிதே இல்லை. பழக்கப்பட்டு விட்டதால் அதிகமாகக் குடித்தாலும், வாந்தி எடுத்து கலாட்டா செய்யாமல் கொண்டாட முடிந்தது. எங்களின் துக்கங்களை மூழ்கடித்துக் கொண்டிருந்தோம். இரண்டு காரணங்களுக்காக; ஒரு வருடம் ரயன் உழைத்த பின்னும் மெக்கானிகல் பிரிவின் பெருந்தலைகள் ல்யூப் ப்ராஜெக்டை நிராகரித்து விட்டனர். இரண்டாவது, மற்றொரு வைவாவிலும் நான் சொதப்பி விட்டேன். வைவாவைச் சொதப்புவது எப்படி? என்னைத் தான் அணுக வேண்டும்!

“ப்ராஜெக்டைத் தூக்கியெறிடா! அதில் நிறைய நேரம் வீணடித்துவிட்டேன். ஆனால் ஹரி, உன்னைப் பாரேன்- உனக்கு இதுவே வழக்கமாகி விட்டது. நீ ஏன் அப்படி வாயடைத்துப் போறே?” கேட்டது ரயன்; அவன் ரத்த நாளங்களிலேயே தன்னம்பிக்கை அதிகமாக ஓடுகிறது.

“எனக்குத் தெரிந்தால் பரவாயில்லையே” என்று கண்களைச் சுருக்கி எரிச்சலடைந்தேன்.

“கேட்கும் கேள்விகளுக்கு உனக்கு பதில் தெரியும். தெரியும் தானே?” என்று அலோக் வினவினான். நான் தெரியும் என்று தலையாட்டினேன்; யோசித்துப் பயனில்லை. மூன்று வருடங்களாக வைவாவில் பயிற்சி பெற்றும் என் கலக்கம் குறைந்தபாடில்லை.

“ரயன், நான் வைவாவை வெறுப்பது உனக்குத் தெரியும். அதனால் அது அதிசயம் இல்லை-நான் சொதப்புவது; ஆனால் உன் கதை வேறு. உனக்கு ஆதங்கமாக இல்லையா?” என்று கேட்டேன்.

“என்னடா ஆதங்கம்? நான் பத்து இரவுகள் தான் அதற்காகச் செலவழித்தேன்; அதாவது அதைச் சரி செய்ய எடுத்துக் கொண்ட நேரத்தைச் சொன்னேன். மேலும் ஆய்வு கூடத்தில் ஒரு நூறு மணி நேரம். இருப்பினும் செரியன் யோசிக்காமல் தூக்கியெறிந்து விட்டார்.“ அதீத நம்பிக்கையும், கற்பனையும் கொண்டது”, என்று சொன்னார். அவர் கழுத்தை நெறிக்கலாமா என்று தோன்றுகிறது”, என்று ரயன் அறிவித்தான்.

“உன் எண்ணம் சரி என்று உனக்கே தெரியும்!” என்றான் அலோக் உணர்ச்சியின்றி.

“நிச்சயம் சரி தான். பேரா வீரா கூட அப்படித் தான் கருதுகிறார். ஆனால் செரியன் அப்படி ஒப்புக்கொள்ளவில்லை. அவர் தானே தலைமைப் பேராசிரியர். விடுடா!”

‘முழுவதும் முடிந்து விட்டதா? ஒண்ணும் செய்ய முடியாதா?” என்று கேட்டேன்.

“நான் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்தாயிற்று. பேரா வீரா தனியார் நிறுவனங்களை அணுகிப் பார்ப்பார். பெரிய நம்பிக்கையில்லை”, என்றான் ரயன்.

அலோக் அமைதியாகத் தன் மூக்கை நோண்டிக் கொண்டு வோட்காவைக் குடித்தான். பார்க்க அருவருப்பாக இருந்தது. ஆனால் இப்பொழுது என்னை பாதிப்பதில்லை. அவன் பழக்கம் அது.

அலோக்கை முழுவதுமாகப் பார்த்தேன், “நீயாவது சந்தோஷமாக இருக்கியே!”

“சந்தோஷமா?” என்று அலோக் எதிரொலித்தான். “நல்ல நகைச்சுவை.”

“உனக்கு என்னடா ஆச்சு?” என்றேன்.

“ஒண்ணும் இல்லே. எனக்கு வாழ்க்கையில் எதுவுமே நடப்பதில்லை. அதனால் தான் நான் சந்தோஷமாக இல்லை. அக்காவைக் கலியாணம் கட்டிக் கொடுக்கணும். அது தான் புதிய கவலை.”

அலோக் சொல்வதும் சரிதான். கேவலமான வீடு, பிரயோசனமில்லாத மதிப்பெண்கள், தோத்தாங்குளி நண்பர்கள், இவையெல்லாம் சந்தோஷம் வகுக்கும் பாதை இல்லையே! அவனுக்கு மிச்சமான ஒரே சந்தோஷம் கூச்சமின்றி நண்பர்களின் முன்னால் மூக்கை நோண்டுவது மட்டுமே.

“நேஹா, எப்படி இருக்கா?” என்று கேட்டான் அலோக்.

“அவள் நல்லா இருக்கா, ஐஐடியில் என்னை வாழ வைக்கும் ஒரே விஷயம் அவள் தான்”, என்றேன்.

“அதுவும் சரிதான்; நீங்கள் இருவரும் ஏதாவது முன்னேறியிருக்கிறீர்களா?” என்றான் ரயன்.

“என்ன முன்னேற்றம்? நான் தான் அவளை முத்தமிட்டேன்னு சொன்னேனே”, என்றேன்.

“ஆமாம்; அது கொடுத்து பத்து வருடம் ஆகிவிட்டதுடா. அதற்கு மேலும் நிறைய விஷயங்கள் இருக்கு செய்வதற்கு உனக்குத் தெரியுமா? இல்லை அவளிடமும் வாயடைத்துப் போய் விடுவாயா?”

அலோக் கெக்கே பெக்கே என்று சிரித்தான்.

“போடா ரயன்”, என்றேன், “நேஹா அதைப் போன்ற பெண் இல்லை.”

“ஆனால், நீ அப்படிப்பட்ட பையன் தானே? அவளையும் உன் வழிக்கு மாற்று” என்றான்.

“எப்படி?”

“எல்லாம் நானே சொல்ல முடியாது.”

இருட்டிவிட்டது. நாங்கள் குமாவோன்னுக்குச் செல்லக் கிளம்பினோம். மணி நகர்ந்து கொண்டே இருந்தது; அதற்கு நன்றி செலுத்த வேண்டும். அப்படியென்றால் இந்த நகரத்தில் இன்னும் கொஞ்ச காலம் தான் இருக்கவேண்டி வரும்.

“காலேஜ் முடிந்தால் நான் மகிழ்ச்சியாய் இருப்பேன்”, என்றேன்.

“நாம் சீ2டீயை (C2D) சீர்படுத்திவிட்டோம்”, என்றான் அலோக்.

“ஆமாம்” என்றான் ரயன் பெருமையாக, “அப்பாடா கடைசியாய் நாம் எல்லோரும் அவரவர்கள் வீட்டுப் பாடத்தைச் செய்தோம்?

“இப்பவும் சில சமயம் எனக்குப் பயமாக இருக்கு”, என்றேன்.

“ஏன்? நமக்குக் கொடுக்கும் பாடங்களை பேராக்கள் கவனித்துப் படிப்பதே இல்லை. அவர்கள் கண்டு பிடிக்கவே மாட்டார்கள்.”

ரயன் அகம்பாவமாய் அதை ஒதுக்கித் தள்ளினான்.

“ஆனால் செரியன் ரொம்ப கறார் என்று கேள்விப்பட்டேன்”, என்றான் அலோக்.

சீக்கிரத்தில் கண்டுபிடித்துவிடுவோம். செரியன் இந்த வருடம் இண்டஸ்ட்ரியல் இன்ஜினீயரிங் மற்றும் மேலாண்மை நடத்துவார் - இண்டெம் என்று அவர் வகுப்பை அழைப்போம்.

“கடைசியில் அந்தப் பொட்டை நமக்கு நடத்தப் போகிறான். நான் அவன் வகுப்பு எதற்கும் வரமாட்டேன்,” என்றான் ரயன்.

“நீ செல்ல வேண்டாம்டா. சி2டீ படி அது ஹரியின் வகுப்பு,”அலோக் கண்டித்தான்.“நம்மாளு அவள் அப்பாவை ஆச்சரியப்படுத்த வேண்டும் என்று நினைக்கிறான்.”

“எப்போதாவது ஒரு சமயம் நேஹா அவள் அப்பாவிடம் என்னைப் பற்றிய பேச்சை எடுப்பாள். நான் எல்லா வகுப்பையும் கட் அடிக்காமல் இருந்தால், நல்ல ஆரம்பமாக இருக்கும் தானே,” என்றேன்.

“நான் அவரை அடியோடு வெறுக்கிறேன்,” என்றான் ரயன்.

செரியனின் முதல் வகுப்பை யாரும் கட் அடிக்க மாட்டார்கள்; ரயனைத் தவிர. என் கர்ள்ஃபிரெண்டையும் உயிர் நண்பனையும் உபத்திரவம் செய்யும் சாத்தானை நேரில் காண ஆசை. மற்றவர்கள் நாட்டிலேயே சிறந்த கல்லூரியின் மெக்கானிக்கல் இன்ஜினீயரிங் பிரிவின் ‘தலை’யார் என்று காணும் ஆர்வத்தில் வந்தனர். செரியனின் கல்லூரி நாட்களில் அவர் பத்து புள்ளி கொண்ட மாணவன் என்று பேசிக் கொண்டனர். எனக்கு அவரைப் பற்றி அதிகம் தெரியாது. எனக்குத் தெரிந்ததெல்லாம் அவரின் பெண் ஒரு நேர்த்தியான பத்து புள்ளி, என்னைப் பொறுத்தவரையில்.

நான் வகுப்பைச் சீக்கிரமே அடைந்து விட்டேன். அதாவது ஐந்து நிமிடம் முன்னதாகவே. இந்த மூன்று வருடங்களில் முதல் முறையாக நான் முதல் வரிசையில் அமர்ந்தேன். ஏன் என்று தெரியவில்லை. ஆனால், இந்த வகுப்பில் நன்கு படித்து தேற வேண்டும் என்று எண்ணினேன். ‘இண்டெம்’ மில் ‘ஏ’மதிப்பெண் பெற்றால் ஒரு நல்ல அபிப்பிராயம் வரும். பிறகு நேஹா என்னைத் தைரியமாக அறிமுகப்படுத்தலாம்.“அப்பா - இது தான் ஹரி. உங்களின் இண்டெம் வகுப்பில் முதல் மாணவனாக வந்தவன்,” என்று சொல்ல முடிந்தால் அருமையாக இருக்கும். அதைவிட்டு; “அப்பா, இது ஹரி. உங்கள் வகுப்பில் “ஸீ” வாங்கிய மக்கு” என்று சொல்வதை விட.

பேரா செரியன் சரியாக ஒன்பது மணிக்கு வகுப்பில் நுழைந்தார். ஒரு நூலகத்தையே கொள்ளையடித்தது போல் அவர் ஒரு புத்தக மலையையே தன்னுடன் கொண்டு வந்திருந்தார்.

“எல்லோரும் கவனியுங்கள். நான் வகுப்பைத் தொடங்கப் போகிறேன்,” என்றார் உறுதியான குரலில்.

கர்ள்ஃபிரெண்டின் பெற்றோரை முதன் முதலில் பார்ப்பது ஒரு ஆவல். நேஹாவின் மோசமான சாயலில் இருந்தார். நேஹாவை மெழுகு பொம்மையாகச் செய்தால் அது உப்பி, பின்னால் கன்னாபின்னாவென்று உருகினால் இருப்பது போலிருந்தார். அவளின் தாவங்கட்டை, உருண்டையான முகம் என்று அதேபோல் இருந்தது. அவருடைய முகம்; ஆனால் இரண்டு மடங்கு பெரிதாக, தொளதொளவென்று தொங்கிப் போய் இருந்தது. நேஹாவின் கன்னங்கள் கெட்டியாக வழுவழுப்பாக இருக்கும். அவளுடைய நீள அழகிய முடிக்குப் பதில் செரியனின் சொட்டை, நிருலாஸில் கொடுக்கும் ஹாம்பர்கர் அளவு பெரியதாக இருந்தது. நேஹா ஒரு அச்சுறுத்தும் படத்தில் மாறுவேடத்தில் நடித்தால் இப்படித்தான் இருப்பாள்.

“இண்டெம் வகுப்பின் அடிப்படை - காலம் மற்றும் அசைவு. நீங்கள் பொறியாளர்களாக இருந்தால் மனிதச்செயல்களை அளவெடுக்கும் வேலைகளைப் பற்றி யோசிக்க வேண்டும், மேலும் மூன்றாவது வரிசையில் பேசுவதை நிறுத்துங்கள்.” செரியன் ஒரு சாக்பீஸை அவர்கள் மீது தூக்கியடித்தார். மூன்றாவது வரிசையில் மிகவும் அவசரமாக, கட்டுப்படுத்தவே முடியாமல் இருவர் அந்தரங்கநகைச்சுவை ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள், திடுக்கிட்டு நிறுத்தினார்.

“உன் மாமனாரைச் சந்திக்கும் முதல் தருணம்,” என்று அலோக்கிசுகிசுத்தான்.

“என்னை அப்படியே உயிரோடு விழுங்கிவிடுவார் போலிருக்கு,” என்றேன்.

செரியன் இந்த கிசுகிசுப்புகளைக் கேட்டிருப்பார் போலும்; பலகையில் எழுதுவதை நிறுத்தினார். திரும்பப் பார்த்து ஒரு டஸ்டரை எடுத்து மேசையின் மீது ஓங்கி அடித்தார்.

“அடுத்த அறுபது நிமிடங்களுக்கு யாரும் பேசக் கூடாது,” என்றார்.

ஸ்தாம் ஹுஸெய்னே அரளும் குரலில் எச்சரித்தார். “புரிகிறதா?”

சாக் தூசு புகை மண்டலம் போல் அவரைச் சுற்றி எழும்பியது. அவர் ஒரு நாட்டு வெடிகுண்டைப் போட்டிருப்பாரோ? அவ்வளவு புகை! அதன்பின் அவரின் கோணிய முகத்தைக் கூடச் சரியாகப் பார்க்க முடியவில்லை. தன் வாழ்நாளெல்லாம் நேஹா எப்படி இவருடன் கழித்திருப்பாள் என்று யோசித்தேன். அந்த நிமிஷமே அவளைக் காப்பாற்ற வேண்டும் என்று தோன்றியது. அவளுடன் ஓடிப் போய் விடலாமா? செரியன் தூங்கும் பொழுது கூரை மீதேறி தப்பித்துவிடலாமா? ஆனால் நான் அவளை எங்கே கூட்டிச் செல்வேன்? விடுதிக்குக் கூட்டிக் கொண்டு வர முடியாது. நாங்கள் எல்லோரும் வேறு ஒரு அறையில் தூங்குகிறோம்.

செரியனின் முதல் உதாரணம் ஒரு ஷர்ட் தொழிற்சாலை. அவர் ஆரம்பித்தார். ஐந்து தொழிலாளிகள் ஆளுக்கு ஒரு சட்டைத் தைக்கலாம். அல்லது தைக்கும் சட்டையின் வேலைகளைப் பகிர்ந்து கொள்ளலாம். அதாவது முதல் பணியாள் துணியை வெட்டுவது, இரண்டாமவர் முதல் தையலைப் போடுவது, மூன்றாமவர் பொத்தான்கள் தைப்பது - இப்படிப் போகும்.

இப்படிப் பணிகளைப் பகிர்ந்து கொள்வது தான் தொழிற்சாலைகளில் “அசெம்பிளி வரிசை” என்று கூறப்படுகிறது. ஆனால், நீங்கள் உறுதி படுத்த வேண்டிய விஷயம், அனைத்து வேலைகளின் நேரமும் ஒன்று போல் இருக்க வேண்டும். அப்பொழுது தான் நெரிசல்களைத் தவிர்க்கலாம்.”

அதனால் துணியை வெட்ட ஆறு நிமிடம் பிடித்தால், முதல் தையல் மூன்று நிமிடம். அப்பொழுது இரண்டு பணியாட்கள் முதல் வேலையைச் செய்ய வேண்டும்.“இந்த முறையில் செய்தால் அசெம்பிளி வரிசை வேகமாக நகரும். பணியாட்கள் கவனம் செலுத்தி அவர்களின் வேலைகளின் ஆற்றலை வளர்த்துக் கொள்வார்கள். இதற்கு வேறு இயந்திரங்கள் தேவையில்லை - ஐந்து கத்தரிக்கோல்களுக்கு பதில் ஒன்று போதும்,” என்றார் செரியன்.

இது எல்லாமே சரி என்பது போல் தோன்றியது; இதைத் தானே பொறியாளர்கள் செய்ய வேண்டும்? பணியாட்கள் எப்படி லாகவமாக வேலை செய்ய வேண்டும், இருக்கும் பொருட்களை வைத்து எப்படி வீணடிக்காமல் வேலை செய்வது என்று கண்டுபிடிப்பது தான் எங்கள் வேலை.

“அவர் பேசுவதில் நிறைய விஷயம் இருக்கு,” என்றேன்.

“குறிப்பெடுத்துக் கொள். குவிஸில் எது வேண்டுமானாலும் கேட்கப்படலாம்,” என்றான் அலோக்.

குண்டன் தோற்றுக் கொண்டே தான் இருப்பான்; மூக்கை நோண்டும் விஷயத்தைத் தவிர; அதில்

அவன் கில்லாடி. நான் ஒன்றும் சிந்தனையாளர் இல்லை. ஆனால் சில சமயமாவது வகுப்பில் கவனிக்க வேண்டும். எந்நேரமும் டப்பா அடித்து வாந்தியெடுப்பதே தான் அவன் இலட்சியம். ரயனுடன் இண்டெம் பற்றிப் பேச வேண்டும்.

அறுபது நிமிடங்கள் கழித்து செரியன் சாக்கை கீழே வைத்தார். இப்பொழுது சாக்கின் உதாரணத்தைச் சற்றே மாற்றினார். நேரம், வேலை எப்படி மாற்றி அமைக்க வேண்டும். என்று கணக்குப் போடச் சொன்னார். ஐஐடி வழக்கம் போல் அந்தச் சுளுவான உதாரணம் வளர்ந்து பூதாகரமான கணக்காக மாறியது. இந்தக் கணக்குகளை கொண்டு ஒரு வீட்டுப் பாடத்தைக் கொடுத்தார். அன்றிரவு நூலகத்தில் இரண்டு மணிநேரமாவது செலவழித்தாக வேண்டும்.

“உனக்கென்ன பைத்தியமாடா? இண்டெம் சுவாரஸ்யமாக இருந்தது என்கிறாய்?” என்றான் ரயன்; நான் அவனிடம் வகுப்பைப் பற்றிப்பேசினேன்.

“ஏன்? யோசித்துப் பார்; ஒவ்வொருத்தரும் தனித்தனியாக வெட்டித் தைப்பதைவிட”

“அப்போ ஒவ்வொரு தையல்காரனையும் வெறும் துணி வெட்டுபவராகவும், பொத்தான் தைப்பவராகவும் மாற்றப் போகிறாய். அவர்கள் என்ன இயந்திரமா? ரோபோவா?”

“இல்லை. இது சாமர்த்தியத்தைக் காட்டுகிறது, இந்தக் கணக்கைக் கொண்டு”

“நீயும் உன் கணக்கும். அந்தப் பணியாள் வீட்டில் போய் என்ன சொல்வான்? இன்று பத்து சட்டைகள் தைத்தேன் என்று பெருமை கொள்வானா? அல்லது இன்று நான் ஐம்பது துணி வெட்டினேன் என்று கணக்கெடுப்பானா? ஒவ்வொரு வேலையும் மரத்துப்போய் ஒரு ஆர்வமும் காட்டாமல் செய்யும்படியாகும்.”

“இது அபத்தம்,” என்றேன், “இது வேலை நேரத்தைச் சேமிப்பது பற்றிய விஷயம்.”

“ஆனால் ஒவ்வொரு பணியாளனும் நான் முழு சட்டை தைக்க ஆசைப்படுகிறேன் என்றால்? நான் சட்டையின் வடிவத்தை மாற்றி அமைக்க விருப்பப்படுகிறேன் என்றால்? இது அனைத்தும் செரியனின் அபத்தமடா. மனிதர்களை மூளையில்லாத இயந்திரங்கள் போல் மாற்றுவது.”

“நீ அவர் வகுப்பிற்கு வர வேண்டும், ரயன். எனக்குச் சொல்லத் தெரியலே; ஆனால் அவர் சொல்வதில் நிறைய விஷயம் இருக்கு.”

“உனக்கு அப்படித் தான் தோன்றும்; நீ அவரின் பெண்ணை விரும்பறே”

“வாயை மூடுடா வகுப்புக்கு வந்து பார். இந்தக் கல்வி முறைக்கு ஒரு முறையாவது மதிப்புக் கொடு.”

“இது தாறுமாறாய் கெட்டுப் போன கல்விமுறை. நான் காப்பியடிக்கணும். சட்டென்று வேலையை முடி.”

இன்ஸ்டி கேட்டின் வாசலில் நேஹாவைச் சந்தித்தேன். நாங்கள் ஒரு நடை சந்திப்பை நடத்தினோம். அப்படியென்றால் கர்ள்ஃபிரெண்டுடன் நீண்ட தூரம் நடப்பது; நல்ல காற்றை சுவாசிப்பதுடன் பேசுவதற்கும் நேரம் கிடைக்கும். அப்படி சமாதானப் படுத்திக் கொள்ள வேண்டும். உண்மையான காரணம், இந்த சந்திப்பு காசு செலவில்லாமல் நடைபெறும். ஸ்கூட்டிக்குப் பெட்ரோல் போடுவது என் முறையாக இருந்ததால் கையிருப்பு காலி, நேஹா நாங்கள் போகப் போகும் வழியைத் தேர்ந்தெடுத்தாள். ஒரு ஐந்து கிலோமீட்டர் போனால் - காம்பஸ் அருகில் உள்ள கிராமங்கள்.

“சொல்லு என் அப்பாவைப் பற்றி என்ன நினைக்கிறே?” நான் என்னவோ பரபரப்பில் குதிப்பேன் என்பது போல் என்னைப் பார்த்தாள்.

“இன்னும் சரியாகப் புரியலை. ஆனால் மிகவும் கண்டிப்பான மனிதர். எப்படி அவருடன் குப்பை கொட்டுறே?”

“அவருக்கு நல்ல மாணவர்கள் என்றால் மிகவும் இஷ்டம். அவர் பாடத்தில் நீ நன்றாகப் படிக்க வேண்டும்.”

“நானும் முயற்சிக்கிறேன். ஆனால் இதுவரை நான் ‘ஏ’ வாங்கியதில்லை. அவர் ஒரு வாரத்துக்கு டஜன் வீட்டுப் பாடங்கள் கொடுக்கிறார். இதைத் தவிர வைவா என்ற விஷயம் இருக்கு. அது என்னை அச்சுறுத்தும் சமாசாரம்.”

“நீ‘ஏ’வாங்கினால், நாம் நண்பர்கள் என்று அவரிடம் நான் சொல்வேன்”.

“நான் முயற்சி செய்கிறேன். சரி நாம் எங்கே போகிறோம்?”

“நடந்து கொண்டே இரு. என் மனதில் ஒரு இடம் இருக்கு.”

நான் மௌனமானேன். அவள் ஒரு ஒதுக்குப்புறமான இடத்தைத் தேர்ந்தெடுப்பாளா, என்று யோசித்தேன். அது மட்டும் தான் ஒரு பையன் மனதில் ஓடும் விஷயம். ஒரு காலி இடம்; யாருமற்ற ஒதுக்குப்புறமான இடம். இருந்தும் அப்படியொரு இடம் கிடைப்பதே இல்லை. ஹோட்டல்கள், துரித உணவகங்கள், திரையரங்குங்கள், ஐஸ் கிரீம் கடைகள் என்று தான் இளையவர்களை வசீகரிக்கும் இடங்களாக விளங்குகின்றன. வரிசை வரிசையாய், காலி அறைகள் கட்டி வைத்தால் என்னவாம் ?

நேஹா என்னை ஒரு மண் பாதை வழியாய் கட்வாரியா கிராமத்துக்குக் கூட்டிச் சென்றாள். சில அரை நிர்வாணமான குழந்தைகள் எங்களை ஆவலுடன் பார்த்தார்கள். நாங்கள் வேற்று கிரக வாசிகள் போல் ஆச்சரியப்பட்டனர். இரண்டு எருமை மாடுகள், ஷெட்டில் கட்டப்படாமல் உலாத்திக் கொண்டிருந்தன. ஒன்று எங்களைத் தொடர்ந்தது.

“நாம் எங்கே போகிறோம் என்று உனக்குத் தெரியுமா?” என்று சந்தேகமாகக் கேட்டேன்.

“நிச்சயம் தெரியும். இந்தப் பாதையின் கடைசியில் ஒரு கோவில் தெரிகிறதே பார்த்தாயா?”

நான் கண்களைச் சுருக்கிப் பார்த்தேன். ஒரு கோவில் கொடி தெரிந்தது. ஒரு கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். சிறிது நேரம் கழித்து எங்களைப் பின் தொடர்ந்த எருமை போதும் என்று நிறுத்திக் கொண்டது. நாங்கள் இருவரும் தனியாக விடப்பட்டோம்.

நாங்கள் அந்த கோவிலுக்கு வந்துவிட்டோம். கவனிக்கப்படாத காரை பெயர்ந்திருந்த படிகளின் சுவரில் அமர்ந்தோம். தூங்கிக் கொண்டிருந்த தெரு நாய் ஒன்று சோம்பேறித்தனமாக ஒரு கண்ணைத் திறந்து தூக்கக் கலக்கத்தில் எங்களைப் பார்த்தது. அந்தக் கோவிலின் முன்னால் ஒரு ரயில் பாதை இருந்தது. அது டெல்லி ரிங் ரயில் நிலையத்தினுடையது; இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறைதான் ரயில் வரும்.

“ஒன்றுமே இல்லாத இடத்தில் ஒரு கோவில் எங்கிருந்து முளைத்தது?” என்று கேட்டுவிட்டு யதார்த்தமாகச் செய்வதுபோல் அவளின் கையைப் பற்றிக் கொண்டேன். அந்த நாய் கண்டு கொள்ளவில்லை; வேறு யாரும் இல்லை.

“சில கிராமத்து ஆட்கள் மட்டும் சிறப்புதினங்களில் இந்த கோவிலுக்கு வருவார்கள். ஆனால் எனக்கு இங்கு வர மிகவும் பிடிக்கும்,” என்றாள் நேஹா. என் மீது சாய்ந்து கொண்டாள்.

நாங்கள் முத்தமிட்டுக் கொண்டோம். யார் ஆரம்பித்தது என்று சரியாகத் தெரியவில்லை. ஒரு ஸ்திரமான கர்ள்ஃபிரெண்டு இருப்பதின் கூலான விஷயம். ஒவ்வொரு முறை முத்தமிடும் பொழுதும் சிரமப்பட வேண்டாம். ஆனால், நேஹாவிடம் அவ்வளவு தான் முன்னேற முடிந்தது. அவளின் தோள்களை அழுத்திப் பிடித்தேன். யோசித்து, திட்டமிட்டுத் தான் செய்தேன். ஆனால், யதேச்சையாகச் செய்வது போல் அவளின் மார்பின் மீது கையை இறக்கினேன். இம்முறை அவள் அதிகம் போராடமாட்டாள் என்று நினைத்தேன்.

“வேண்டாம்!” சுவாரஸ்யமாகத் தொடங்கும் அதே சமயத்தில் நேஹா என்னைத் தடுத்தாள். என்னைத் தள்ளிவிட்டு எழுந்து கொண்டாள்.

“நீ ரொம்ப அழகாக இருக்கே,” என்று நிதானமாக இருக்க முயற்சி செய்தேன்.

“வாயை மூடு” என்று கிளுகிளுவென்று சிரித்தாள். “நீ எவ்வளவு ஜோடித்து பேசினாலும் நீ நினைப்பதைச் செய்ய முடியாது. கொஞ்சமாவது கூச்சம் வேண்டாம்? நாம் இருப்பது ஒரு கோவில் என்று நினைவிருக்கா?”

ஆமாம்; சரிதான் கோவிலருகில் முத்தமிட்டால் பரவாயில்லை. ஆனால், “கையை - லேசாக - நழுவ-விடு”, என்பது மட்டும் தவறு! நேஹா, நான் சொல்கிறேனே முரண்பாடுகளின் ராணி!

நான் திரும்பவும் அவளை நெருங்கினேன்; வாதமிடுவது வீண்.

“முத்தங்கள் மட்டும் தான்! உனக்கே தெரியும் வேறு எல்லாம் தவறு.” என்று எச்சரித்தாள்.

எங்களின் ‘கொஞ்சல்களைத்’ தொடர்ந்தேன். நான் - ஒரு- அரை மணி - அவளைத் - தொட முயற்சித்தேன். அதற்குப் பிறகு அவள் வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்றாள். எழுந்து, கடைசியாக ஒரு முறை அந்த நாயைப் பார்த்து விட்டு நடக்க ஆரம்பித்தோம்.

“என் அண்ணன் இந்த ரயில் பாதையில் தான் இறந்தான்,” என்றாள்.

அவள் அண்ணன் எப்படிச் செத்தான் என்ற விவரங்கள் எனக்குச் சரியாகத் தெரியாது. கோரமான சாவுகளைப் பற்றிக் கேட்க எனக்கு விருப்பம் இல்லை. ஆனாலும் கர்ள்ஃபிரெண்டுகள் சொல்லும் கதைகளை கேட்டுத்தானே ஆகணும்.

“நிஜமாகவா? எனக்குத் தெரியாதே. எப்படி நடந்தது?”

“எனக்கு இந்தத் தேதி இன்னமும் தெளிவாக நினைவிருக்கிறது, மே 11. அண்ணா ஜாகிங் சென்றிருந்தான். மதியம் எங்களுக்குத் தொலைபேசி அழைப்பு வந்தது. அதாவது, அப்பாவைக் கூப்பிட்டார்கள். மாலை தான் அப்பா எங்களுக்குத் தகவல் தெரிவித்தார் …….. உடலைப் பார்க்கக் கூட எனக்கு அனுமதியில்லை,” அவள் குரல் நடுங்க ஆரம்பித்தது.

“நேஹா, பரலாயில்லை, கவலைப்படாதே.” என்றேன். தெருபையன்கள் இரண்டுபேர் எங்களையே பார்த்துக் கொண்டிருந்தனர். நாங்கள் கிராமத்தினருகே வந்து விட்டோம், அதனால் அவளை என் தோள் மீது சாய்த்து அழவிடுவதா, வேண்டாமா என்று யோசித்தேன். அவளே அழுதபடியால் சமாதானம் செய்வது என் வேலையாகிவிட்டது.

இந்தப் பையன்கள் ஒரு ஆணும் பெண்ணும் கட்டிப்பிடிப்பதைத் திரைப்படத்தில் மட்டுமே பார்த்திருப்பார்கள்.

குழந்தைப் பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த படியால் அவள் என்னை விட்டு நகர்ந்தாள். எண்ணிக்கை எட்டைத் தொட்டுவிட்டது.

“இவர்கள் எல்லாம் எங்கிருந்து வந்தார்கள்?” என்று கேட்டுக் கொண்டே கண்களைத் துடைத்துக் கொண்டாள். எட்டு குழந்தைகளும் துணி கூட அணியாமல் எங்களையே படம் பார்ப்பது போல் தீவிரமாகப் பார்த்தனர்

“இங்கே பாருடா, ஹீரோயின்,” என்றேன் குழந்தைகளிடம். “ரவீண டாண்டன்,” என்றது ஒரு மூன்று வயதுக் குரல்

நேஹா சிரிக்கத் தொடங்கினாள் எனக்கு நிம்மதியாக இருந்தது. அவளின் “மூடு” மாறிக் கொண்டே, நீண்டு கொண்டே இருக்கும்.

நாங்கள் மேலும் நடக்கத் தொடகினோம். காம்பஸ் அருகே வந்து விட்டோம். நாங்கள் வேறு பாதையில் பிரிந்து நடந்தோம்.

“அவரின் பாடத்தின் முதல் மாணவன் என்று ஒரு நாள் உன்னை அறிமுகப்படுத்த ஆசைப்படுகிறேன்,” என்று கண்ணடித்துவிட்டு முன்னே நடந்தாள்.

குறிப்பட்ட ஐந்து நிமிடங்கள் காத்திருந்தேன் பிறகு காம்பஸை நோக்கி நடந்தேன். நான் அவளைக் காதலிக்கிறேனா? என் காலடியில் கிடந்த கூழாங்கல்லை உதைத்தேன், அவள் மட்டும் இவ்வளவு நல்ல பெண்ணாக இல்லாமல் இருந்தால்!

# 14

## வோட்கா

அலோக் மிகவும் கவலையுடன் வீட்டிலிருந்து திரும்பி வந்தான்.

“உன் அப்பா, அம்மா எப்படி இருக்காங்க?” என்று கேட்டேன். அவன் மிகவும் அமைதியாக இருந்தது உறுத்தியது. நாங்கள் ஸஸி கடையில் இருந்தோம். அன்றைய சிறப்பு என்ன என்று கூட அவன் சிப்பந்திகளைக் கேட்கவில்லை.

“வழக்கம் போல் கண்டறாவியாக இருக்கிறார்கள். இன்று பெரிய நாடகமே அரங்கேறியது. என் அக்காவுக்கு நல்ல வரன் வந்திருக்கு. ஆனால், எங்களால் தேவையான பணம் புரட்ட முடியவில்லை. அதனால், வேண்டாம் என்று சொல்லணும்; அல்லது பிறகு தருவதாகக் கடன் பத்திரம் கொடுக்கணும். நான் இன்ஸிடியிலிருந்து தேறி, வேலையில் சேர்ந்து, கொடுக்க வேண்டும்.”

“அது கஷ்டம்” என்றான் ரயன். தூக்கத்திலிருந்து துரை அப்பொழுது தான் கண்விழித்து எங்களுடன் வந்து அமர்ந்தார்.

“அது என் கடமைடா. நான் அவர்களை நேசிக்கிறேன். இது கஷ்டம், பிரச்சனை என்று நான் பார்க்கவில்லை,” என்று சுவாரஸ்யம் இல்லாமல் அலோக் சொன்னான்.

“என்ன வேலை எடுத்துக் கொள்ளப் போறே?” என்றேன்.

“எது நிறைய பணம் கொடுக்குமோ, வேறு எந்த அக்கறையும் கிடையாது,” என்றான் அலோக்.

“அது மோசம். உனக்குப் பிடித்தது என்று எதுவும் இல்லையா?”

“எனக்குப் பணம் பிடிக்கும்,” என்று அலோக் சாப்பிட்டு முடித்தான். பணம் கிடைக்கும் வரை பராத்தாவில் திருப்தி அடைவான்.

நாங்கள் ஸெமஸ்டர் பாதியில் இருந்தோம். ஒவ்வொரு முறையும் நான் என் இலட்சியம், இலக்கு என்று யோசித்துப் பார்த்தால் - இண்டெம்மில் நன்றாக படிப்பது மட்டுமே தோன்றும்; மூன்றாவது வருடத்திற்குள் ஒவ்வொரு ஐஐடி மாணவனுக்கும் தன் இடம் எது என்று தெளிவு பிறக்கும். நாங்கள் ஐந்து புள்ளிகாரர்கள் என்று முத்திரையிட்டு பதப்படுத்தப்பட்டு விட்டோம். எங்களின் எதிர்பார்ப்புகள் சாதாரணமானவை. எங்களின் மதிப்பெண்கள் எங்களை ஏமாற்றமடையச் செய்ததே இல்லை. ஆனாலும் இண்டெம்மில் ‘ஏ’ வாங்கத் துடித்தேன். என் மதிப்பெண் அட்டையில் அப்படியொன்று இடம் பெற்றதே இல்லை. அலோக் என் ஆகாய கோட்டையைப் பற்றி எச்சரித்தான். “செரியன் உன்னை உயிருடன் கடித்து சாப்பிட்டுவிடுவாரா! நீ தூங்குவது கூட இல்லை. அவர் மொத்தமே இரண்டோ, மூன்றோ‘ஏ’தான் கொடுப்பார் என்று தெரியாதா?”

“தெரியும். இருந்தும் நான் முடிந்த அளவு படிக்க வேண்டும். அது ஒரு மதிப்பெண்ணுக்காக மட்டும் அல்ல. நேஹாவுக்காக”

“இப்போ வரையில் நீ எவ்வளவு எடுத்திருக்கே?” “நாற்பதுக்கு முப்பத்து மூன்று; ஒரு நாயைப் போல உழைத்திருக்கேன்”.

“அது சரி. ‘ஏ’ வாங்க உனக்கு எண்பது வேண்டும்.”

“தெரியும். அதில் வைவா 10. மேஜர் 50”

“மேஜரில் முழு மதிப்பெண் எடுத்தால் தான் முடியும்; வைவாவிலும் நன்றாகத் தேற வேண்டும்.”

“தெரியும்டா, இம்முறை எப்படியாவது வைவாவை நல்லாச் செய்யனும்,”நினைக்கும் போதே கவலை வாட்டியது.

“அமைதியாய் இருடா. ‘பீ’ கூடப் பரவாயில்லை.”

“ஏ’ தான் வேணும் அலோக். ‘ஏ’ மட்டுமே வேணும்.”

“அப்ப சரி. வாழ்த்துக்கள்!” ஸ்ஸி அடுத்த டெஸ்ட் பராத்தாக்களை கொண்டு வந்ததால் அலோக்கின் கவனம் சிதறியது.

“உன் பெண் எப்படியிருக்கா?” என்றான் ரயன்.

“நேஹா நல்லா இருக்கா. அவள் அண்ணன் இறந்த இடத்துக்குக் கூட்டிச் சென்றாள். விபத்து நடந்த இடம்; கொடுமைடா!”

“நீ அவளுக்கு மிகவும் முக்கியமானவனாகிவிட்டாய். அந்த இடம் அவளுக்கு ஒரு தனி அர்த்தத்தைக் கொடுக்கும் இடமாக இருக்கலாம்,” என்றான் அலோக்.

“குண்டன் சொல்வது சரி. அவளுக்கு உன்னைப் பிடிக்கும்”, என்றான் ரயன். “அவள் அண்ணன் எப்பொழுது இறந்தான்?”

“மூன்று வருடங்களுக்கு முன்னால். மே11, சரியாகச் சொல்ல வேண்டுமானால் அவன் ஜாகிங் சென்றிருக்கிறான். சற்று நேரத்தில் அவன் ரிங் ரயிலில் அடிபட்டு இறந்ததாகச் செய்தி வந்திருக்கிறது.”

“ஐயோ! நம்பவே முடியவில்லை,” என்றான் அலோக் “அந்த ரிங் ரயிலை யாரும் உபயோகப்படுத்தவதில்லை என்று தானே நினைத்தேன்.”

“அவன் அதை உபயோகிக்கவில்லையடா, குண்டா. அது அவனை அடித்துத் தள்ளியது,” என்று ரயன் விளக்கினான்.

“ஆமாம், கோரமான விபத்து”, என்று கண்களை உருட்டினேன்.

“ஆனாலும் மே மாத காலை வெயிலில் யார் ஓடப்போவார்கள்? என்றான் ரயன்.

“வாயை மூடுடா. அவன் இறந்துவிட்டான். நீ அவனைக் கேலிபேசாதே”, என்று தடுத்தேன்.

“இல்லடா. நான் அப்படிச் சொல்லலே. டேய் குண்டா, முதல் ரிங் ரயில் எத்தனை மணிக்கு?”

“தெரியாது”, அலோக் பராத்தாக்களை விழுங்கினான். அடிக்கடி குண்டா என்ற கூப்பிடுவது அவனுக்கு ரசிக்கவில்லை.

“எனக்குத் தெரியும். பத்து மணி ஏன்?” என்றேன்.

“யோசித்தப் பார். மே மாதம், காலை 10 மணி. நாற்பது டிகிரிக்கு மேல் வெயில் கொளுத்தும். அப்பொழுது யார் ஜாகிங் ஓடுவாரகள்?”

“அவன் ஓடினானே. இல்லையென்றால் இறந்திருக்க மாட்டானே”, என்று அலோக் எரிச்சலடைந்தான். அவன் ஜாகிங் ஓடியதே இல்லை. அதனால் அவனுக்குப் புரியவில்லை.

“அவன் இறந்தான் என்று எனக்கும் தெரியும். ஆனால் நான் சொல்ல வந்தது…”, என்று ரயன் ஆரம்பித்துவிட்டு, “சரி விடுடா! எதுக்கு வம்பு?”

“என்ன? எனக்குத் தெரியணும்” என்றேன்.

“அது விபத்தே இல்லை என்பது தான் என் வாதம்.”

செரியனின் வைவா அன்று நான் தலைவலியுடன் எழுந்தேன். மேஜர் பரீட்சைக்கு இன்னும் இரண்டே வாரங்கள் இருந்தன. ஆனால் இன்று என் இண்டெம் விதியைத் தீர்மானிக்கும் நாள். “தூங்கு, தூங்கு” என்று எனக்கு நானே ஆயிரம் முறை சொல்லிக் கொண்டேன். அன்றைய இரவு ஒரு பயனும் இல்லை.

“கடவுளே! நீ பார்க்கக் கேவலமாக இருக்கே” என்று கழிப்பறையில் ரயன் என்னைப் பார்த்துச் சொன்னான். நாங்கள் இருவரும் ‘ஷவரம்’ செய்து கொண்டிருந்தோம்.

“தூக்கமே இல்லை. இந்த நரகத்திலிருந்து எப்படி வெளியே வரப்போகிறேன் என்ற கவலை. கண்டிப்பாகச் சொதப்பத்தான் போகிறேன்”, என் முகத்தில் தண்ணீரை அடித்துக் கொண்டேன்.

ரயன் தன் ஜில்லெட் ஷேவிங் ஜெல்லைப் பிதுக்கி தன் இரட்டை பிளேடால் ஷேவிங் செய்ய ஆரம்பித்தான். அவனின் பெற்றோர்கள் அவனுக்கு இது போன்ற சாதனங்களை அனுப்பி, அவனை மேலும் அழகானவனாக மாற்றினார்கள். அலோக்கைப் போல் இவனுக்கும் கொஞ்சம் முகப்பருக்கள் வந்தால் தான் என்ன?

“ஹரி, கவனி”, ரயன் பிளேடால் சீராக வழித்தான், “இந்தப் பாடத்திற்காக நீ நிறைய உழைத்திருக்கே.

இதை மட்டும் சொதப்பினே உனக்கு வேறு வழியே இல்லை. யாரையும் விட உனக்குத் தான் எல்லா விடைகளும் சரியாகத் தெரியும்.”

“எப்போதிலிருந்து விடை தெரியாதது பிரச்சனையாக இருந்திருக்கு? அதுவும் இது செரியன். சாதாரண ஆட்களே பயப்படும் ஆள்”, என்றேன்.

“நான் இந்த வைவாவுக்குக் கூடப் போகப் போவதில்லை. எனக்கு ஒரு திட்டம் இருக்கு. நீ ரொம்ப பயப்பட்டால் சொல்கிறேன்.”

“நீ வரவில்லையா? இதற்குப் பத்து சதவிகிதம்டா. செரியன் வைவாவுக்கு வராவிட்டால் கோபத்தின் உச்சிக்குப் போய் விடுவார்.”

“அந்தப் பொட்டையின் முகத்தை முடிந்த வரை தவிர்ப்பது என்று கங்கணம் கட்டிக் கொண்டுள்ளேன். அந்தப் பத்து சதவிகிதத்தைப் பற்றி யாருக்கு அக்கறை? எனக்கு ஒண்ணும் அந்த அப்பனிடம் நல்ல அபிப்பாரயம் பெற வேண்டிய கட்டாயம் இல்லை.”

“அதை நீ தான் முடிவு பண்ணனும். இருந்தாலும் நீ வரணும் என்று நினைக்கிறேன். உன் திட்டம் என்ன?”

“அது வேலை செய்யுமா, என்று தெரியாது.”

“சொல்லுடா; நான் வேதனையில் இருக்கேன்”, என்றேன். ரயன் முகத்தை துண்டால் அழுத்தத் துடைத்துக் கொண்டான். ஒரு அட்டகாசமான “ஆஃப்டர் ஷேவ்” லோஷனை எடுத்து கன்னங்களில் தாராளமாகத் தெளித்துக் கொண்டான்.

அது அதிக விலை பதித்த அமெரிக்க பிராண்டு.

"வோட்கா: அனைத்துப் பிரச்சனைகளின் தீர்வு.”

“என்னது? வோட்காவா? நான் வைவாவைப் பற்றிப் பேசுகிறேன். நான் பார்ட்டி ஏற்பாடு செய்யவில்லை."

“தெரியும். ஆனால் வோட்கா ஒருவனின் கூச்சத்தைத் தளர்த்தும் அதிகம் பேசத் தூண்டும். ஒரு இரண்டு பெக்கு அடித்தால் உன் பிரச்சனைகள் தீரலாம்.”

“நீ மடையன்டா. வைவா காலை பதினொரு மணிக்கு. அந்த சமயத்தில் யாராவது குடிப்பார்களா.”

“இந்த வைவாவில் நீ முட்டை வாங்கினால், நேஹாவால் உன்னை அவளின் அப்பாவுக்கு அறிமுகப்படுத்த முடியுமா?"

“ஜீரோ, பீ,ஸீ” எல்லாம் என் மனக்கண் முன் ஓடியது.“சரி, எவ்வளவு?”

“இரண்டே பெக்கு. என் அலமாரியில் இருக்கு வா.”நான் ரயனின் அறைக்குச் சென்றேன். அவனின் பிராண்டு துணிகளுக்கு இடையே அவன் வோட்காவை ஒளித்து வைத்திருந்தான். அந்தப் பாட்டிலருகில் அமெரிக்க தபால்தலைகள் கொண்ட கவர்கள்.

ரயன் வோட்காவை ஸ்டீல் டம்ளரில் ஊற்றினான். அதில் மூன்றில் ஒரு பங்கு இருந்தது.

“இந்த கவர்கள் என்ன?” என்றேன்.

“ஒண்ணும் இல்லை; இந்தா ஒரு பெக்கு.1,2,3 கப்பென்று அடி” என்றான் ரயன்.

அந்த கவர்கள் ஒண்ணும் இல்லை என்று என்னால் நம்ப முடியவில்லை. கிட்டத்தட்ட நூறு இருக்கும்.

“உன் பெற்றோரின் கடிதங்களா?” என்று குருட்டாம்போக்கில் கேட்டேன்.

“ஆமாம். இந்தா இன்னொன்று அடி”, என்றான் ரயன்.

“இது அதிகமாகிவிடாதா?” என்றேன்.

“இல்லை. இன்னும் மூன்றாவதாக ஒன்றை அடி. நானும் உனக்கு ஒத்தாசையாக ஒன்று அடிக்கிறேன்.” ரயனும் என்னோடு சேர்ந்து சரக்கடித்தான். வோட்கா உள்ளுக்குள்ளே அக்னி உருண்டையாகச் சென்றது. என் காலி வயிற்றினுள் இறங்கி என் ஈரல்களை ரணகளமாக்கியது.

“சரி, நான் போய் அப்பாவைச் சந்திக்கிறேன்”, என்று உற்சாகம் பீரிடச் சொன்னேன்.

“வாழ்த்துக்கள் ஹரி. அப்புறம் அலோக்கிடம் இந்தக் கவர்களைப் பற்றிப் பேச்செடுக்காதே”, என்றான் ரயன்.

“என்ன சொல்லக்கூடாது?” என்றேன். எனக்கு அவற்றைப் பற்றி எதுவும் தெரியாது. ரயன் குறிப்பிடவில்லையென்றால் நான் யோசித்திருக்க கூட மாட்டேன்.

“ஒண்ணும் இல்லை. இவற்றைப் பற்றி எதுவும் சொல்லாதே. வாரா வாரம் எழுதுவார்கள். மாதம் ஒரு முறை காசோலை அனுப்புவார்கள். நான் எதற்கும் பதிலெழுத மாட்டேன். அவ்வளவு தான்.”

“ஏன் பதிலனுப்ப மாட்டே?” உள்ளே சென்ற சரக்கு தந்த இன்பத்தில் கேள்வி கேட்டேன்.

“ஏன் என்றால் நான் அவர்களை வெறுக்கிறேன். எனக்கு அவர்களைப் பற்றிய அக்கறை இல்லை. அவர்களுக்கும் இல்லை. இதில் எதற்குப் பாசாங்கு?” என்றான் ரயன்.

“ரயன் ஏன் பெற்றோர் மீது அக்கறை இல்லை என்ற இந்த நாடகம்?” என்னுள் சென்ற வோட்கா எனக்காகப் பேசியது.

“ஆமாம். என்ன அதைப் பற்றி?”

“அது உண்மை இல்லை என்ற நினைக்கிறேன். அது எப்படி உண்மையாக முடியும்?”அவனின் விரோதப் பார்வையைத் தவிர்த்தேன். நான் சொல்வதை நம்பினேன். அவர்கள் அனுப்பும் ஜில்லெட், ஆஃப்டர் ஷேவுக்காகவாவது அவன் அவர்களை நேசிக்க வேண்டாமா?

“அது உண்மைதான். நீ வாழ்க்கைப் பாடத்தில் இன்னும் சிறுவன் தான். போய் உன் வைவாவை சந்தி”, என்றான் ரயன். ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தான். சிகரெட் ஒருவனைத் தத்துவ வாதியாக மாற்றியது.

“நான் போகிறேன். ஆனால் நீ சொல்வது உண்மையானால் எதற்காக எல்லா கடிதங்களையும் பாதுகாக்கிறாய்?” என்றேன் மெதுவாகப் பின்வாங்கிக் கொண்டே.

செரியன் ஏற்கனவே வகுப்பறைக்கு வந்துவிட்டார். என்னுடைய முறை பத்து நிமிடங்களில் வந்துவிட்டது. நான் அலோக் அருகில் அமர்ந்திருந்தேன்.

“ரயன் எங்கே?” என்று கிசுகிசுத்துக் கொண்டே குறிப்புகளைப் புரட்டிக் கொண்டிருந்தான். கடைசி நிமிடம் வரை அலோக் படித்துக் கொண்டேயிருப்பான்.

“ரயன் வைவாவுக்கு டிமிக்கி”, என்றேன்.

“என்னது? மடையன்டா அவன்”, என்றான் தலையசைத்தபடி,

“அவனுக்கு அக்கறை இல்லையாம். அவன் பெற்றோரின் மீது காட்டும் அதே அக்கறையின்மை.”இரண்டாவது வரி வோட்காவின் வேகத்தில் என் வாயிலிருந்து உதிர்ந்தது.

“ஹரி, என்னாச்சு? ஏன் முன்னுக்குப் பின் முரணா உளரரே? இந்த வாசனை என்ன? இருடா தண்ணி அடிச்சியாடா?”

“உஷ்ஷ் சும்மா இரு. லைட்டா அடிச்சேன். ரயன் என்னைத் தளர்த்துவதற்காகக் கொடுத்தான்.

“ரயன், ரயன், ரயன். உனக்காக நீயே யோசிச்சிருக்கியா?” என்றான் அலோக்

“ஹரி”, பேரா செரியன் என் பெயரை அழைத்துவிட்டார், நான் அலோக்குக்கு பதிலளிக்குமுன். என் தருணம் அது. அடுத்த ஐந்து நிமிடங்களில் என் முதல் ‘ஏ’ வைத் தீர்மானிக்கும் தருணம்.

“ஜப்பானிய முறைப்படி சாமான்களைக் கம்மிப்படுத்தி உற்பத்தி செய்யும் முறை எது?” பேரா செரியன் எந்த முகமன்னும் இல்லாமல் வழக்கம் போல் நேரே கேள்வியில் மூழ்கினார். இயந்திர கதியிலிருந்தது அவர் குரல்.

“காலை வணக்கம் ஸார்”, என்றேன்.

“காலை வணக்கம் ஹரி. இப்பொழுது என் கேள்விக்குப் பதில் சொல். நேஹாவின் கண்களைக் காட்டிலும் பெரிதாக, முட்டைக் கண்ணாக இருந்தது அவரின் கண்கள்.”

“காலை வணக்கம் ஸார்”, மூளையை வேலை செய்யும்படி கெஞ்சினேன்.

“அது எல்லாம் சரிதான் ஹரி. பதில் சொல்லு தயவு செய்து.”

“ஸார், ஜப்பானிய முறை உற்பத்தி திறனை.” என்ற ஆரம்பித்தேன்.

“ஆமாம். அது தான். விடை தெரியுமா, தெரியாதா?”பேரா செரியனின் குரல் உயரத் தொடங்கியது.

“நான் வந்து..ஸார்.”, என்றேன்.

“ஜேஐடி”- அதாவது ஐஸ்ட்-இன்-டைம். தேவைக்கு ஏற்ப அந்த வினாடி என்று பொருள்; இவ்வளவு எளிய கேள்விகளைக் கூட மாணவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லையே”அடுத்தது. அஸெம்பிளி வரிசைக்கும், பாட்ச்சு உற்பத்திக்கும் உள்ள வித்தியாசம் என்ன?”

“ஸார் மிகவும் எளிதான கேள்வி தான் ஸார் ஹிக்” என்றேன்.

“ஏன் இப்படி பேசுகிறாய்? இந்த வாசனை என்ன? நீ குடித்திருக்கியா மிஸ்டர் ஹரி? என் வகுப்பில் குடித்தாயா?”

“இல்லை ஸார். எனக்கு விடை தெரியும் ஸார்”, என்று கவலையில் அழுத்தமாகச் சொன்னேன்.

“நீ குடிச்சிருக்கே. இந்தக் காலத்துப் பசங்களின் நெஞ்சழுத்தம்!” ஒரு சாக்பீஸை என் மீது விட்டெறிந்தார். என் நெஞ்சில் பட்டு லேசாக வலித்தது. நான் குடி போதையில் இருந்தாலும் ஏதோ தவறு நடக்கிறது என்பது மட்டும் புரிந்தது. நான் இந்த வைவாவில் வாயைத் திறந்து பேசுகிறேன்! ஆனால் என்ன பேசுகிறேன் என்று தான் புரியவில்லை.

“ஸார்”, என்றேன்.

“என் வகுப்பை விட்டு வெளியே போ. இப்போ போ”, பேரா செரியனின் முகம் சிவந்தது. அவரின் கோப்புகளை மேசையின் மீதுதொப்பென்று போட்டார்.

என் நோட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு கிளம்பினேன். செரியன் என் அருகில் வந்தார். அவர் ஒரு சிவப்புப் பேனாவை எடுத்தார். என் விடைத் தாளில் வட்டமிட்டார். அதன் மேல் இன்னொரு வட்டம். “உனக்கு ஜீரோ தான். அது தான் உனக்குத் தகுதியானது. அதற்கும் கீழே மைனஸ் மதிப்பெண் கொடுக்க ஆசை”, என்றார்

“நீ உன் மேஜரில் நன்றாக எழுது. உன்னை இதிலிருந்து அவ்வளவு எளிதில் தப்ப விடமாட்டேன்.”

நான் மௌனமானேன். அவ்வளவு பெக்கு அடித்து விட்டு கடைசியில் ஜிரோ. இதை நான் வோட்கா அடிக்காமல் சொந்தமாகவே வாங்கியிருப்பேன்.

“ஒத்த!” ரயன் தன் முஷ்டியைக் கையில் குத்திக் கொண்டான். குமாவோன்னில் அவனிடம் நடந்தவற்றைக் கூறினேன்.

“என்னடா ஒத்த? யார் இப்படிப்பட்ட கேவலமான யோசனையை அவனுக்குக் கொடுத்தது?” என்றான் அலோக்.

“நான் வேலை செய்யும் என்று நினைத்தேன். ஒரு வேளை பெக்கு ஜாஸ்தியாகி விட்டதா?” என்றான் ரயன். அவன் கூடைப் பந்தை சுவற்றில் அடித்தபடி பேசினான்.

“அந்த சத்தத்தை நிறுத்து”, என்றான் அலோக். “ஹரி, இப்போ என்ன செய்யப் போறே?

“என்ன செய்வது? ‘ஏ’ நிச்சயம் கிடையாது என்றாகிவிட்டது. செரியன் நான் குடிகாரன் என்ற நம்புகிறார். அவரின் மகளின் பாய்ஃபிரெண்டைப் பற்றிப் பிரமாதமான அபிப்பிராயம்”, என்று என் முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டேன்.

தம்ப்,தம்ப், தம்ப்! ரயன் பேசவில்லை. பந்து விளையாடினான்.

“நிறுத்துடா!” என்று அலோக் ரயனின் கையிலிருந்து பந்தைப் பிடுங்கினான்.

“ஏதாவது உபயோகமாக சொல்லு.”

“அலோக்! யாரோ வெளியிலிருந்து கத்தினார்கள். கீழே இருந்த பாதுகாவலர் தான் அழைத்தார்.

“அலோக்குக்கு தொலைபேசி அழைப்பு”, என்று மீண்டும் கத்தினார்.

“வீட்டிலிருந்து தான் இருக்கும்”, என்றான் அலோக்.“வாடா, ஹரி; இனி இண்டெம் பற்றிப் பேசிப் பிரயோசனம் இல்லை.”

நான் அலோக்குடன் கீழே இறங்கி வந்தேன். வேறு எதற்காக இல்லாவிட்டாலும் இந்த இண்டெம் தோல்வியிலிருந்து கவனத்தைத் திருப்புவதற்காக.

“ஹெல்லோமா! எப்படியிருக்கீங்க? ஆமாம். தெரியும் நான் நிறைய நாளாக வீட்டுப் பக்கம் வரவில்லை. தெரியும்”, என்றான் அலோக். என்ன? அக்காவுக்கு நிச்சயம் செய்தீர்களா? ஓ! பையன் வீட்டில் ஒத்துக் கொண்டார்களா?” அலோக்கின் குரலில் பரபரப்பு தென்பட்டது. “ஆமாம். எனக்கு ரொம்ப சந்தோஷம். அப்பா எப்படி இருக்கார்?.... தெரியும். நிச்சயம் வேலை கிடைத்தவுடன் எல்லாவற்றையும் திருப்பிக் கொடுத்துவிடலாம்.அதேதான். கடனையெல்லாம் அடைக்கலாம். பரிசுக்காக வாங்கிய கடன்.”

எனக்குப் பாதி உரையாடல் தான் காதில் விழுந்தது. ஆனாலும் என்ன நடக்கிறது என்ற புரிந்தது. அலோக்கின் பெற்றோர் ஒரு வழியாக அக்காவுக்குக் கல்யாண ஏற்பாடு நடத்திவிட்டனர். அவன் பிறகு அளித்த விளக்கத்தில் புரிந்தது- அவர்களுக்கு மாருதி கார் வரதட்சணையாக வேண்டுமாம். ஆனால் அலோக் தேர்வில் வென்று வேலை தேடும் வரை காத்திருக்கிறார்களாம் அப்பொழுது தான் திருமணம் நடைபெறும். ஆனால் இப்போதைக்கு நிச்சயம் செய்தாகிவிட்டது.

"வாழ்த்துக்கள். உன் அக்காவுக்குக் கலியாணமாடா? உன் குடும்பம் குதூகலமாக இருக்கா? இல்லை அவள் போய்விடுவாளே என்று வருத்தமாக உள்ளதா?" என்று அலோக்கைக் கேட்டேன்.

"அவர்கள் நிம்மதியாக இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. எனக்குக் கிடைக்கும் வேலையும், சம்பளமும் இது எல்லாவற்றுக்கும் போதுமானதாக இருக்க வேண்டுமே. காரைத் தவிர நிறைய கொண்டாட்டங்கள் வேறு இருக்கும்."

"இந்தத் திருமணத்தைப் பிறகு வைத்துக் கொண்டால் என்ன? என்ன அவ்வளவு அவசரம்?"

"அவளுக்கு வயதாகிவிட்டால், இன்னும் கூடுதல் வரதட்சணை கேட்பார்கள். இப்பொழுது காத்திருந்தால் அது பெரிய செலவில் கொண்டு போய் விடும். இப்பொழுதே பேரம் பேசியது நல்லது."

இது எதோ தொழில் பேசுவது போலிருந்தது. கிரெடிட் கார்டில் இருக்கும் கடனை உடனே தீர்க்காவிட்டால் வட்டி வளரும் என்பது போல் பேசினான் அலோக். ஆனால் பேச்சுவார்த்தை நடந்து முடிந்த நிம்மதி அவன் குரலில் தெரிந்தது.

"மாப்பிள்ளை என்ன செய்கிறானாமாம்?" என்றேன்.

"தெரியலையே. அதைக் கேட்க மறந்தவிட்டேன்", என்றான்.

பல வாரங்கள் சென்றது. குமாவோன் மெஸ்ஸில் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அது வியாழக் கிழமை என்று நினைக்கிறேன். குமாவோன்னில் அன்று வேறு சாப்பாடு கொடுப்பார்கள் "காண்டினென்டல்" என்ற பெயரில் பணியாளர்களுக்கு வேலை கம்மியாக ஒரு உணவைப் பரிமாறுவார்கள். கேட்பதற்கு நன்றாகத் தான் இருக்கும்-நூடுல்ஸ், ஃப்ரெஞ்சு ஃப்ரைஸ், டோஸ்ட் மற்றும் சூப். ஆனால் கேவலமாக இருக்கும் ருசி. நூடுல்ஸை சூப்பர் கோந்தில் செய்வார்களோ? அந்தப் பாத்திரத்திலேயே ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொண்டு பிரியாமல் ஈஷி எடுக்கவே வராது. ஃப்ரெஞ்சு ஃப்ரைஸ் ஆறி ஜில்லென்றிருக்கும். ஒன்றும் வெந்திருக்காது; அல்லது தீய்ந்து கருகிப் போயிருக்கும். சூப்பின் பெயர் க்ரீம் ஆஃப் மஷ்ரூம் சூப்; அது மண் கசண்டு போல் கலங்கியிருக்கும். மண்ணைவிடச் சற்று வெதுவெதுப்பாக உப்பு கலந்து இருக்கும்.

"இது கேவலமா இருக்குடா", என்றான் அலோக். அவனுடைய நூடுல்ஸ் ஃபோர்க்கிலிருந்து வெளியே வருவேனா என்று அடம் பிடித்தது.

"வெளியே போகலாம்டா."

"இவ்வளவு மோசமாக இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. ஸெமஸ்டர் முடியப் போகிறது. என் கையில் பணமே இல்லை."

"அது சரி", என்றான் அலோக். "மேஜருக்குப் படிக்க வேண்டும். பத்து நாள் கூட இல்லை."

"ஆமாம். இனி படித்து என்ன? இண்டெம் சொதப்பலுக்குப் பின் மற்றவற்றில் தேர்ச்சி பெற்றால் என்ன? இல்லாவிட்டால் தான் என்ன?

"ரயன் நீ இண்டெம்மில் கவனம் செலுத்த வேண்டும். நீ வைவாவைக் கட்டடித்தது செரியனுக்குப் பிடிக்கவில்லை. உன் பெயரைப் படிக்கும் பொழுது அவர் நக்கலாகச் சிரிக்கிறார், ஜாக்கிரதை!"

"தெரியும்", என்றான் ரயன் பாதி கடித்த ஃப்ரெஞ்சு ஃப்ரையைத் தட்டில் மீண்டும் எறிந்தான். "குவிஸ்களில் நாற்பதுக்கு பதினாறு தான் வாங்கியிருக்கேன். வைவாவில் ஜீரோ மேஜரில் ஐம்பதுக்கு இருபத்தி-நாலு எடுத்தால் தான் தேற முடியும்."

"அவ்வளவு எளிதல்ல", என்று அவனுக்குத் தெரிந்ததையே சொன்னேன்.

"அதிகபட்சம் நான் ஃபெயிலாவேன். அதனாலென்ன?" என்று ரயன் சூப்பைக் குடித்துப் பார்த்தான். மரியாதையெல்லாம் பற்றி யோசிக்காமல் வாயிலிருந்த மொத்தத்தையும் திரும்பவும் கப்பிலேயே துப்பினான்.

"செரியன், உன்னைத் திரும்பவும் எழுத வைப்பார். இது மேஜர்", என்றான் அலோக். "நீ துப்பிய

சூப்பையே திரும்பவும் குடிக்க வைப்பது போல்.”

“ஒத்த”, என்றான் ரயன்! அது அவன் உணவைப் பார்த்துச் சொன்னதா அல்லது செரியனின் பாடத்தைத் திரும்பப் படிக்க வேண்டியிருக்குமோ என்ற வெறுப்பா, தெரியவில்லை.

“சே! எனக்கு மட்டும் ’ஏ’ கிடைத்திருந்தால், ஒரு வழியாக நேஹாவை சம்மதிக்க வைத்து…” என்றேன்.

“நாம் இன்னமும் ஏதாவது செய்ய வழியிருக்கு என்று நினைக்கிறேன்” என்றான் ரயன்.

“என்ன? நேஹாவை மறக்கக் குடிப்பதா?” என்றேன் கேலியாக

“இல்லை. நீ மேஜர் மொத்தமும் சரியாகச் செய்து விட்டால் நீ ‘ஏ’ வாங்கலாம் தானே?”

“எனக்கு நாற்பதுக்கு முப்பத்தி-மூன்று இருக்கு, ‘ஏ’வாங்க எண்பது வேண்டும். மேஜர் ஐம்பதுக்கு எழுத வேண்டும். அதில் நாற்பத்தி-ஏழு மதிப்பெண் வாங்க வேண்டும். எப்படி?”

“முடியவே முடியாதுடா ரயன். இனி அவனைத் தொந்தரவு செய்யாதே. எல்லாம் முடிந்து விட்டது.”

“முடியவில்லை நண்பர்களே, முடியாது. நீங்கள் மேஜரில் ஆசைப்பட்ட மதிப்பெண் எடுக்க முடியும் என்று நான் சொன்னால் நம்புவீர்களா?”

“முட்டாள்தனமாக உளராதே. ஒரு நாளைக்கு இருபது மணிநேரம் இண்டெம் படித்தால் கூட முடியாது. செரியனின் மேஜர் வினாத்தாளில் நிறைய ஆச்சரியங்கள் காத்திருக்கும். நான் காலிடா” என்று புலம்பினேன்.

“முடிந்தால், முடிந்தால். ? ரயன், கனவா?” என்றான் அலோக்.

“கனவில்லைடா குண்டா. என் நண்பனுக்கு உதவி செய்ய நினைக்கிறேன். நாம் மேஜர் பேப்பரை அடிச்சுடலாம்.”

“எப்படி?” அப்படியே திகைத்து நின்றேன்.

“செரியன் அலுவலகத்திலிருந்து சுருட்டிடலாம்”, என்றான் ரயன். அலோக்கும் நானும் அமைதியானோம். இப்படியொரு சாத்தியப்படாத பிரமிப்பூட்டும் விஷயத்தை அவன் சொல்வான் என்று நாங்கள் எதிர்பாக்கவில்லை. ஜீரணிக்க முடியாத உணவு; அதைக் காட்டிலும் ஜீரணிக்க முடியாத விஷயம். நாங்கள் அப்படியே உறைந்து போனாம்.

“திருடுவதா? ஐஐடி பேராவிடமிருந்து ஒரு மேஜர் பேப்பரைத் திருடுவதா? அப்படியா சொன்னே?” என்றான் அலோக்.

“அவ்வளவு பெரிய விஷயம் போல் ஸீனப் போடாதடா. இது அவ்வளவு பெரிய…”

“மூளை குழம்பிடுத்தா? நட்டு கழண்டுடுத்தா? சொல்லுடா?” என்று அலோக் காண்டீனைவிட்டு வெளியேறினான். நானும் வெளியேறினேன். மனம் பூரா அடுத்து நேஹாவைச் சந்திக்கப் போகும் தினத்தைச் சுற்றியே சுழன்றது. அவளின் அன்பான அப்பாவுடன் நடந்த திராபையான சந்திப்புகளைப் பற்றி என்ன விளக்கம் அளிக்கப் போகிறேன் அவளுக்கு?

*Downloaded from Ebookz.in*

# 15

## ஆபரேஷன் பெண்டுலம்

அடுத்த நாள் குமாவோன் புல்தரையில் ரயன் தன் முழு அதிகாரத்துடன் பேசினான். “டேய், நான் சொல்வதை கேளுங்க.”

“முடியவே முடியாது. இந்த உளறலை இப்பவே நிறுத்து”, என்றான் அலோக்.

“அவன் சொல்வது சரிதான்”, என்று நான் ஒத்துப் பாடினேன். ஆனால் என்ன சொல்கிறான் என்று முழுமையாகப் புரியக் கூட இல்லை.

“ஒரு நிமிடம் நான் சொல்வதைக் காது கொடுத்து கேளுங்கடா. வேற எதுவும் செய்ய வேணாம்”, என்று ரொம்ப கருத்தாகப் பேசுவது போல் சொன்னான் ரயன்.

“சரி”, என்றேன்.

“இந்த இடத்தில் நாம் மூன்று வருடங்கள் வாழ்ந்து விட்டோம். சரிதானே? நமக்கு என்ன கிடைச்சிருக்கு?” என்று ரயன் கேட்டான்.

“இந்தக் கல்வி முறை மோசம் என்பதைப் பற்றித் திரும்பவும் ஆரம்பிக்காதே ரயன். விஷயத்துக்கு வா”, என்றான் அலோக்.

“வரேன். நிச்சயம் வரேன்”, தனக்கு முன் ஒரு பொறுமையான பார்வையாளர் கூட்டம் இல்லை என்பதை ரயன் புரிந்து கொண்டான். பாக்கெட்டிலிருந்து ஒரு தாளை எடுத்தான். இரண்டு ஏ4 காகிதங்கள் ஒட்டிக் கொண்டிருந்தன. அதைப் புல் தரையில் வைத்தான். அதன் மீது இரண்டு கற்களை வைத்துப் பறக்காமல் பிடித்துக் கொண்டான். பிறகு பிரசங்கம் ஆற்றுவது போல் ஆரம்பித்தான். “இது தான் திருவாளர் நண்பர்களே, இன்ஸ்டி கட்டிடத்தின் வரைபடம். தேர்வு ஆரம்பிக்க ஒரு வாரம் இருக்கும் பொழுதே பேராக்கள் கேள்வித் தாள்களைத் தயார் செய்து விடுவார்கள். ஆனால் பேரா செரியன் இவர்களை எல்லாம் விட சிறந்தவர் என்பதால் அவர் இன்னும் முன்னரே கண்டிப்பாக முடித்திருப்பார். இங்கே பார் இதுதான் செரியனின் அலுவலகம்; ஆறாம் மாடியில் அவர்; கூரை ஒன்பதாம் மாடி.”

அலோக்கின் முகம் பரீட்சை எழுதும் பொழுது எவ்வளவு தீவிரமாக இருக்குமோ அப்படி இருந்தது. இது ஏதோ மேம்போக்கான ₹ உரையாடல் அல்ல. இதைப் பற்றி நிறைய யோசித்திருக்கிறான்.

“இந்த மொத்தத் திட்டமும் வீண்; நாங்கள் சரி என்று சொல்லி விட்டாற்போல் நீ இந்த விவரங்களை எங்கள் மீது திணிக்கிறாயே?” என்றான் அலோக்.

ஆனால் ரயன் இப்படித்தான். அவன் தீர்மானிப்பான் அவன் திட்டமிடுவான்; பிறகு அவன் என்ன வேண்டுமோ அதை மட்டுமே செய்வான்.

“ரயன், என்னடா இதெல்லாம்?” என்றேன்.

“நான் சொல்வது மொத்தமும் கேளு ஹரி. நீ ஆசைப்படும் ’ஏ’ கிரேடை வாங்கலாம். உன்னை அறிமுகப்படுத்துவதில் அந்தப் பெண்ணுக்கு எந்த ஒரு அவமானமும் ஏற்படாது. நீ வேலைக்கு விண்ணப்பம் அனுப்பும் பொழுது ஒரு ‘ஏ’ இருந்தால் கசக்குமாடா குண்டா?”

“ஆனால் இது ரொம்பப் பெரிய குற்றம்.” என்று அலோக் எதிர்த்தான். ரயனின் புதிய பைத்தியக்காரத் திட்டத்தை எதிர்க்க என் ஆதரவை அலோக் நாடினான். நான் நேஹாவுடன் இரவுகளில் நிலா வெளிச்சத்தில் கை கோர்த்துக் கொண்டு இன்ஸ்டி தோட்டங்களில் உலா வருவதாகக் கனவில் மிதந்தேன். “நான் நிஜமாகவே ‘ஏ’ வாங்க முடியுமா?”

“நீ மாட்டிக் கொண்டால் தானே அது தவறாகும்?”

ரயனுடன் தர்க்க ரீதியாக விவாதிப்பது மிகவும் கடினம். அதுவும் அழகிய கர்ள்ஃப்ரெண்டைப் பற்றிய கனவில் மிதந்து கொண்டு, எப்படி விவாதிப்பது? ஆமாம்! பிடிபட்டால் தான் குற்றம். அல்லது அது ஒரு

சிறந்த திட்டம்.

“ஆனால்’ என்று அலோக் மறுபடியும் ஆரம்பித்தான்.

“இரு, நான் முடிக்கிறேன்”, என்றான் ரயன். நான் அரை மனதுடன் சம்மதித்ததால் அலோக்கின் மாற்றுக் கருத்தைப் பேச அவன் அனுமதிக்கவில்லை.

“கூரை ஒன்பதாவது மாடி. நான் கயிறுகளிலிருந்து தொங்கினால் செரியன் ஜன்னல் அருகில் வந்து விடுவேன். பிறகு அதன் வழியாக அறைக்குள் செல்லலாம். நேஹாவின் அறைக்குள் ஹரியை எப்படி அனுப்பினோமோ, அப்படி நீங்கள் எனக்கு உதவுங்கள்.”

“நீ பேசுவது வடிகட்டின முட்டாள்தனம். நேஹாவின் அறை எளிதாக இருந்தது. கயிறெல்லாம் இல்லை. இன்ஸ்டி கட்டிடம் ஒன்பது மாடி உயரம்”, என்றேன்.

“எனக்கு பயம் இல்லை. நான் பள்ளியில் பாறையேறி பழகியிருக்கேன்”, என்றான் ரயன்.

“ஜன்னல் திறந்திருக்கவில்லை யென்றால்?” என்றான் அலோக்.

அலோக்கின் கேள்வி ரயனுக்குப் பிடித்திருந்தது என்பது பார்த்தாலே தெரிந்தது. ரயன் இதைப் பற்றி ஏற்கனவே யோசித்து வைத்திருந்தான் என்பது ஒன்று. மேலும் அலோக்கும் இந்தத் திட்டத்தை நம்புகிறான் என்ற சந்தோஷம். ஒரு நிமிஷம் பொறுங்கள். நான் இதை ஒத்துக் கொண்டதற்குக் காரணம் ரயனா? ‘ஏ’ இருந்தால் நல்லது தானே?

“ஆமாம், ஜன்னலை என்ன செய்யப் போறே?” எ

“இன்ஸ்டி ஜன்னல்களின் தாழ்பாள்கள் ரப்பர் பேண்டுகளைவிட மெலிதானவை. குமாவோன் விடுதியில் இருப்பது போன்றவை. பின்னாலிலிருந்து ஒரு தட்டு தட்டினால் வேகமாய்க் கதவு திறக்கும்.”

“இருந்தும் நீ கூரையிலிருந்து தொங்குவாயா?”என்றேன்.

“நான் தான் பயமில்லை என்று சொன்னேனே.”

“யாராவது நம்மைப் பார்த்துவிட்டால்?” என்று கேட்டேன்.

இது தான் ரயனிடம் குறிப்பிட வேண்டியது. அவன் புத்திசாலி என்பதோடு பயமற்றவன். இந்த அசட்டு தைரியம் கூடுதல் நம்பிக்கையாக மாறி மொத்த திட்டத்தையும் கூட அழித்துவிடலாம்.

“யாரும் பார்க்க மாட்டார்கள்”, என்றான் ரயன்.

“ஆமாம். மூன்று பேர் இன்ஸ்டி கூரையிலிருந்து தொங்குவது என்பது வழக்கமான விஷயம் தானே. இன்ஸ்டி காவலாளிகள் கண்டு கொள்ள மாட்டார்கள்”, என்று அலோக் நக்கலடித்தான்.

“குண்டா, கும்மிருட்டாக இருக்கும்”, என்றான் ரயன்.

“நாம் ஏதும் சத்தம் செய்யலாம், அல்லது நகரலாம்; இது சாலையில் செல்லும் ஜீப்பில் உள்ள காவலாளிகளின் கண்களில் பட்டால்? நாம் கூரையில் இல்லை. அங்கிருந்து சுவரில் தொங்கிக் கொண்டிருக்கோம். யாராவது பார்க்கலாம்.”

“டேய் என்னடா” என்று ரயன் அலுத்துக் கொண்டான்.

“மிகவும் அபாயகரமானது. மறந்துவிடு”, என்று சொல்லி அலோக் புல்லைப் பிய்த்தப் போட்டான். நானும் அலோக் சொல்வதை ஆமோதித்தேன். மேலும் ரயன் ‘பங்கி’ குதிப்பது போல் தலை கீழாகத் தொங்குவதை நினைத்து எனக்கு பயத்தில் இப்பொழுதே வேர்த்து விட்டது.

“இதைவிட சிறந்த திட்டம் இருக்கா?” என்றான் ரயன் கடுப்பாக.

“பிறகு என்ன செய்வதாக உத்தேசம்?” என்று ஒரு ஆவலில் கேட்டேன்.

“அடுத்து செய்ய வேண்டியது- எதிரே இருக்கும் வலது பக்கச் சுவற்றில் உள்ள விளக்கைப் போடுவது. இரண்டாவது அறையில் ஏதாவது பழுப்ப நிற கவர் முத்திரை போட்டது இருக்கா என்று தேடுவது. மூன்றாவது கத்தி வைத்து முத்திரையை உடைப்பது. மேஜர் பேப்பரில் ஒரு காப்பி உருவுவது. நான்காவது மெழுகு, புது அரக்கு வைத்து முத்திரை பதித்து, பையை எடுத்த இடத்தில் வைப்பது. ஐந்தாவது அங்கிருந்து ஓடித் தப்புவது.”

“பிறகு நடப்பது எல்லாமே எளிதாக இருக்கு”, என்றான் அலோக்.

“ஆனாலும் உள்ளே போக முடியாது. சரி வா; எனக்குப் பசிக்கிறது.”

“ஏதாவது வழியிருக்க வேண்டும்”, என்றேன்.

“என்ன?”

“கதவின் வழியாக அவரின் அலுவலகம் உள்ளே செல்ல சாதாரணமாகக் கதவு இருக்காதா?” என்றேன்.

“எப்படி? பூட்டை உடைப்பதா? அது கஷ்டம் என்று தெரியாதா? சத்தம் கேட்குமே. அடுத்த நாள் அவர் கண்டுபிடிக்க மாட்டாரா?” என்றான் ரயன்.

“பூட்டை எதற்கு உடைக்கணும்? அழகாகத் திறந்து கொண்டு செல்வது, சாவி வைத்து” என்றேன்.

“சாவியா?சாவி எங்கிருந்து கிடைக்கும்?”என்றான் அலோக்.

“நேஹாவின் கார் சாவியிலிருந்து; அவள் அப்பாவின் அலுவலகச்சாவி அந்தக் கொத்தில் இருக்கு”, என்றேன்.

அனைவரும் ஐந்து நிமிடத்திற்கு மௌனமானார்கள். அந்தத் திட்டத்தின் புத்திசாலிதனத்தைப் பார்த்து பாராட்டும் அமைதி.

“செம்மடா! சாவியைத் திருடினால் போதும்”, என்றான் அலோக்.

“ஒரு அரை மணி நேரம் அவற்றை வெளியில் எடுத்து வந்தால் மாற்றுசாவி செய்து விடலாம்”, என்றான் ரயன்.

“சரிதான். ரொம்ப எளிதென்று சொல்ல மாட்டேன். ஆனால் செய்ய முடியும்”, என்று புன்னகைத்தேன். என் புத்திசாலித்தனத்தைப் பார்த்து லேசாக எனக்கே கர்வமாக இருந்தது. இப்பொழுது செரியனின் அலுவலகம் ஒரு திறந்த கதவாகிவிட்டது.

“ஹரி, பின்றேடா மச்சி. இது எதிர்பார்க்காத ஆச்சரியம்”, என்றான் ரயன்.

மாற்றுதிட்டத்தை முழுவதுமாக ஒரு முறை ஓட்டிப் பார்த்தான். இப்பொழுது ரொம்ப எளிதானதாகத் தோன்றியது. நாங்கள் இதைப் பற்றி நிறைய யோசித்துவிட்டோம். நேரம் செலவழித்து விட்டோம்; அதனால் அதைவிட்டு விட முடியாது. நிறைவேற்றியே ஆக வேண்டும்.

“வோட்கா குடிக்கக் கூரைக்குப் போவது போல் இரவில் கூரைக்குப் போவோம். ஆனால் ஆறாவது மாடியிலேயே நின்று செரியன் அலுவலகத்திலிருந்து வினாத்தாளை கொள்ளை அடிக்கிறோம்”, என்றான் ரயன்.

“கொள்ளையில்லை; வெறும் சாவி போட்டுத் திறந்து உள்ளே செல்கிறோம்’ என்று கையில் சாவியிருக்கும் பாவனையில் திருப்பிக் காட்டினேன்.

நடுவிரலை மேலே உயர்த்தி செரியனை நினைத்து ஒரு அசிங்கமான சைகை செய்தான் ரயன். நாங்கள் மூவரும் சிரித்து கை குலுக்கிக் கொண்டோம்.

இதற்கு ஏதாவது பெயர் சூட்ட வேண்டும். ஏதாவது சந்தேகம் வராமல் சுளுவான, செக்ஸியான பெயர்.”

“நம்முடைய கொடுமையான அதிர்ஷ்டத்தை மாற்றி அமைக்க வல்லது”, என்றேன்.

இந்த ஆட்டத்திற்குப் பெயர் “ஆபரேஷன் பெண்டுலம்” என்றான் ரயன். அந்த வெளிச்சமான புல் தரையில் சூரியன் எங்கள் கண்களைக் குத்தும் வெயிலில் கோரஸாகக் கத்தினோம், “ஆபரேஷன் பெண்டுலம்.”

# 16

## என் வாழ்நாளின் நீண்ட நாள்-I

எந்த ஒரு நாளையும் தனியாகக் குறிப்பிட்டு அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று சொல்ல முடியாது என்று கூறுவார்கள். ஆனால் 'ஆபரேஷன் பெண்டுலம்' தீர்மானித்த நாள் என் வாழ்வில் மறக்க முடியாத நீண்ட நாள். ஐஐடி நாட்களிலும் அது தான் நீண்ட நாள். ஒவ்வொரு தருணமும் ஒவ்வொரு நிகழ்வும் என் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது. நேற்று நடந்தது போல் தெளிவாக இருக்கிறது; எங்கள் வாழ்க்கையின் போக்கை மாற்றியது; ஏன் எங்களையே மாற்றிய தினம்.

அதற்காக ஒரு தேதியும் ஒதுக்கப்படவில்லை. அந்தச் சாவியை நான் எடுத்து வரும் தினம் என்று பேசிக் கொண்டோம். மேஜர் தொடங்க ஒரு வாரமே இருந்தது. கண்டிப்பாக செரியன் வினாத்தாளைத் தயாராக வைத்திருப்பார். பிறகு, அந்த கேள்விகளுக்கு நாங்கள் விடை தேட வேண்டும். அதற்குக் கொஞ்சம் அவகாசம் வேண்டும். அதனால் சீக்கிரம் முடிப்பது நல்லது.

ஏப்ரல் 11, ஆபரேஷன் பெண்டுலம் தினம்-அன்று நேஹாவுடனான என் சந்திப்புடன் தினம் தொடங்கியது. நேஹா காலைச் சுளுக்கிக் கொண்டுவிட்டாள். அதுவே எனக்கு எச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டும்.

"என்ன?" என்று வருத்தப்பட்டேன் தொலைபேசியில். "உன்னைப் பார்க்கத் துடித்துக் கொண்டிருக்கேன். இன்றைக்கு முடியாது என்று சொல்லாதே. இதற்குப் பிறகு 'மேஜர்' ஆரம்பித்துவிடும்."

"ஆனால் ஹரி, பத்தடி கூட நடக்க முடியாது. வேறு நாள் சந்திக்கலாம்."

"ஒரு அரை மணி நேரம் உன்னைப் பார்க்க முடியாதா? நான் உன் வீட்டிற்கு வருகிறேன்."

நேஹாவின் அம்மா அன்று வீட்டில் இருக்கமாட்டார் என்று தெரியும். அன்று பதினொன்று; அந்த ரயில் பாதையின் அருகில் இருக்கும் கோவிலுக்குச் சென்றிருப்பார். தன் மகனுக்காக ஒப்பாரி வைக்கப் போயிருப்பார். அதனால் தான் நேஹா அன்று சந்திக்கவே ஒப்புக் கொண்டாள்.

"வீட்டிற்கா? அது மடத்தனம்; யாராவது பார்த்துவிட்டால்?"

"மூன்றாவது வருடம் முடியப் போகிறது. இவ்வளவு பயப்படுவதை நிறுத்தறயா?"

"ஆனால்"

"எனக்கு 'ஏ' கிடைத்துவிட்டால், என்னை அறிமுகப்படுத்தி வைப்பே தானே?"

"சரி; ஆனால் அரை மணி நேரம் தான். சரியாக 11.30 மணிக்கு வா; நான் கதவைத் திறந்து வைக்கிறேன்", என்றாள்.

"சந்தோஷம். உன்னை நேரில் சந்திக்கிறேன்", என்று ஒரு நிம்மதிப்பெருமூச்சுடன் தொலைபேசியைத் துண்டித்தேன். அன்று அவளைப் பார்த்தே ஆக வேண்டும். அவள் காரையாவது பார்த்தே ஆகவேண்டும்.

"எல்லாம் சரியாக இருக்கா?" என்றான் ரயன், நான் குமாவோன்னைவிட்டு வெளியேறும் பொழுது.

"நிச்சயமா. இரண்டு மணி நேரத்தில் மீண்டும் பார்க்கலாம்."

"உஷ்ஷ். மௌனமாய் உள்ளே வா, சீக்கிரம்", என்று நேஹா அநாவசியமாகக் கிசுகிசுத்தாள்.

"யாருமே இல்லையே", என்றேன்.

"நீ பெரிய ஆளு தான். என்ன என்னைச் சந்திக்க அவ்வளவு ஆவல்?" என்று நேஹா என்னை அவள் அறைக்குள் அழைத்துச் சென்றாள்.

"உனக்கே தெரியும், மூன்றாவது வருடம் முடிகிறது. மேஜர் இருக்கு", என் கண் அலை பாய்ந்தது;

சாவிக் கொத்து எங்காவது தொங்குகிறதா என்று தேடியது.

“அதனால்?”என்றாள் நேஹா.

“அதனால் உன்னைச் சந்திப்பது எனக்குப் பரீட்சையில் நல்ல அதிர்ஷ்டம் கொண்டு வரும் என்ற நினைத்தேன்”, என்று அவள் அருகில் அவள் கட்டிலில் அமர்ந்தேன்.

“செம்ம! ரொம்ப காதல் ரசம் சொட்டும் வரிகள்”, என்றாள் நக்கலாக.“நான் என்னவோ என் பொறுக்கி எனக்காக ₹உருகி, என்னைக் காணாமல் வாடி என்றெல்லாம்…”

“ஓ! அதுவும் தான்”, என்று அவள் பக்கம் சாய்ந்து அவளை அணைத்துக் கொண்டேன். அது உண்மை தான். அவளுக்காக எப்பவுமே நான் ஏங்கிக் கொண்டு இருந்தேன். அவள் மிகவும் அழகாக இருந்தாள். அவளின் சுளுக்கிய காலுடன் பிங்க் உடை உடுத்தி, க்ரேப் பாண்டேஜ் அணிந்தும் கூட அழகாக இருந்தாள்.

‘ஆ! ஜாக்கிரதை’, என்று என்னைப் பிடித்துத் தள்ளினாள்.

“நீ எதற்கு ஏங்குகிறே என்று எனக்குத் தெரியும்.”

“என்ன?”

“என் உடம்பு; நான் இல்லை”, என்று மூக்கைத் தூக்கி மேலே பார்த்தாள்.

என்ன வித்தியாசம் என்று யோசித்தேன். பெண்களைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

“அப்படியில்லை”, என்றேன் சன்னமாக; அது தான் சரியான பதிலாக இருக்கக்கூடும் என்று பட்டது.

“இங்கே வா”, என்ற என்னைக் கூப்பிட்டு முத்தமிட்டாள்.

“அம்மா எப்போ வருவாங்க?”

“இரண்டு மணி நேரத்தில். இன்று சமீர் அண்ணனின் தேதி, தெரியுமா?”

“எனக்குத் தெரியும், இன்று பதினொன்று. நேஹா அதைப் பற்றி உன்னிடம் கேட்கணும்.”

“என்ன?”

“நான் ரயனிடம் இதைப் பற்றி பேசிய பொழுது.”

“நீ ஸமீரைப் பற்றி ரயனிடம் பேசினாயா?”

“இல்லை. அவன் இறந்ததைப் பற்றிச் சொன்னேன். ஜாகிங் சென்றது, என்றெல்லாம்.”

“அதனால்?”

“அதனால் ரயன் ஒரு விஷயம் சொன்னான். அது நல்ல கேள்வி.”

“என்னது அது?”

“மே மாத காலை வெயிலில் யார் ஜாகிங் ஓடுவார்கள், என்றான்” அவள் அமைதியானாள். என் அணைப்பிலிருந்து விலகி நகர்ந்து உட்கார்ந்தான்.

“நேஹா?” என்று கூப்பிட்டேன்.

“ஹரி”, என்று அழத் தொடங்கினாள், “உன்னிடம் சொல்ல வேண்டாமென்று நினைத்தேன். ஆனால் சொல்ல வேண்டும்.”

“என்னது?”

‘பொறு”, என்று அவள் அலமாரியைத் திறந்தாள். அதில் நிறைய வண்ணங்களில் துணிகள் குவிந்திருந்தன. குமாவோன்னில் படிக்கும் மாணவனின் அலமாரிக்குச் சம்பந்தமே இல்லாமல் இருந்தது. நேஹா மடித்திருந்த ஒரு காகிதத்தை எடுத்தாள்.

“இதைப் படி”, என்றாள்.

அந்தக் காகிதத்தைப் பிரித்தேன். என் புருவங்களை உயர்த்தினேன். திகைப்பில் குதித்து விட்டேன். ஸமீர் கையெழுத்திட்டிருந்தான்.

டியர் நேஹா,

என் செல்லத் தங்கையே, நான் உன்னை மிகவும் நேசிக்கிறேன். நீ பிறந்தவுடன் முதலில் உன்னை என் கையால் தூக்கினேன். அன்று நான் மிகவும் கர்வத்துடன் பெருமைப் பட்டேன். இன்றளவும் அப்படித்தான் உணர்கிறேன்.

நேஹா, உன்னால் ஒரு ரகசியத்தைக் காப்பாற்ற முடியுமா? உனக்கு இந்தக் கடிதம் கிடைக்கையில், நான் இந்த உலகில் இருக்க மாட்டேன். ஆனால் இந்த உலகில் யாருக்கும் இந்தக் கடிதத்தைப் பற்றித் தெரியக் கூடாது.

நானும் ஐஐடியில் சேர மூன்று முறை முயன்றேன். ஒவ்வொரு முறையும் அப்பாவுக்கு ஏமாற்றம் தான் மிச்சம். அவருக்கு, தன் மகனால் இயற்பியல், வேதியல், கணக்கு போன்ற பாடங்களைச் சமாளிக்க முடியவில்லை என்பதில் வருத்தம். என்னால் முடியவில்லை, நேஹா. நான் எவ்வளவு கடினமாக உழைத்தாலும் பயன் இல்லை. எவ்வளவு வருடங்கள் படித்தாலும், எவ்வளவு புத்தகங்கள் படித்தாலும் என்னால் முடியாது. என்னால் ஐஐடியில் சேர முடியாது. அப்பாவின் கண்களைச் சந்திக்கத் தெம்பில்லை.

அப்பா, அவர் வாழ்க்கையில் ஆயிரக்கணக்கான ஐஐடி மாணவர்களைச் சந்தித்திருப்பார். தன் பையனால் ஏன் முடியவில்லை. என்று அவருக்குப் புரியவில்லை. நேஹா, அவர் ஐஐடியில் சேர்ந்த சிலரை மட்டுமே பார்க்கிறார். ஆனால் சேராத லட்சக் கணக்கானவர்களைப் பற்றி யோசிப்பதில்லை. இரண்டு மாதங்களாக என்னுடன் பேசுவதில்லை. அம்மாவுடன் கூட சரியாகப் பேசாததற்குக் காரணம் நான் தான். நான் என்ன செய்ய முடியும்? இறக்கும் வரை முயன்று பார்க்க வேண்டுமா? இல்லை எளிதாக இறந்து விடுவதா?

யாருக்காவது நான் தற்கொலை செய்து கொண்டேன் என்று தெரிந்தால், அம்மாவால் சகிக்க முடியாது. அவளும் இறந்து விடுவாள். ஆனால் யாரிடமாவது சொல்ல வேண்டும். உன்னைத் தவிர யார் இருக்கிறார்கள்? நேஹா, உன்னை மிகவும் நேசிக்கிறேன். அவர்களிடம் நான் ஜாகிங் சென்றேன் என்று கூறிவிடு.

எப்பவும் உன்னுடைய
சமீர்.

“என்ன இது?” என்றேன். எனக்குள் குறுகுறு என்றிருந்தது. தினமும் ஒரு தற்கொலை கடிதம் கையில் ஏந்துகிறவனா நான்?

“அது உண்மை. உன்னிடம் கூடச் சொல்லியிருக்கக் கூடாது. ஆனால் உன்னுடன் நெருக்கமாக இருக்கேன். நீ விசாரிக்க ஆரம்பித்து விட்டாய். அதனால்.”, அவள் கோவென்று அழத் தொடங்கினாள்.

“அமைதியா இரு” என்று ஆரம்பித்தேன். எனக்கே சொல்லிக் கொண்டேன். அவள் ஒரு ஐந்து நிமிடத்திற்குப் பின் சமாதானமானாள். நான்அவளுக்கு ஒரு கிளாஸில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தேன்.

“என் வைவாவில் என்ன நடந்தது என்று சொல்லட்டுமா?” ஒரு வேளை அது அவளைச் சிரிக்க வைக்கலாம். “ரயன் எனக்கு வோட்கா கொடுத்தான்”, என்றேன்.

நேஹா தலையை நிமர்த்தி, கீச்சுக் குரலில் கேட்டாள், “அது நீயா? அப்பா கூடச் சொன்னார். நீயென்று நம்ப முடியவில்லை.” அவள் என்னை ஒரு தலையணையால் அடித்தாள். மறுபடியும் சிரிக்க ஆரம்பித்தாள். அவள் மிகவும் அழகாக இருந்தாள். நான் அங்கேயே அமர்ந்து அவள் அழகை வாழ்நாள் முழுவதும் ரசித்துக் கொண்டிருக்கலாமா என்று கருதினேன். ஆனால் இன்று நான் ஒரு காரியமாக வந்துள்ளேன்; ஆபரேஷன் பெண்டுலத்துக்குச் சாவி வேண்டுமே.

“நிறுத்து, வலிக்கிறது” என்று சொல்லி கட்டிலில் அவளருகே நகர்ந்தேன்.

“என் அருகே வராதே; குடிகாரப் பொறுக்கி! அன்று அப்பா இரண்டு மணி நேரம் புலம்பினார்.” அவள் பயங்கரமாகச் சிரிக்கத் தொடங்கினாள்; வயிறு வலிக்கச் சிரித்ததால் வயிற்றைப் பிடித்துக் கொண்டாள்.

நான் அவளருகில் படுத்துக் கொண்டு அவளைக் கட்டிப் பிடித்தேன். அவள் என் பக்கம் தன் முகத்தைத் திருப்பினாள். நாங்கள் முத்தமிட்டோம்; மீண்டும் முத்தமிட்டுக் கொண்டோம்.

பிறகு அவள் என் கையைப் பிடித்து, இது வரை செய்யாத ஒன்றைச் செய்தாள். தன் மார்பின் மீது என் கையை வைத்தாள்.

எனக்குக் களிப்பில் தலை சுற்ற ஆரம்பித்தது. இவளுக்கு என்ன ஆயிற்று? மூளை கெட்டுவிட்டதா? நான் முழுவதுமாய் என்னைத் தொலைத்துவிட்டேன். ஆபரேஷன் பெண்டுலத்தைப் பற்றி மறந்தேன்.

என் கை அவள் டி-ஷர்ட்டினுள் நுழைந்தது. பரபரப்பில் கைகளால் நகரக் கூட முடியவில்லை. அவளின் ‘பிராவைத்’ தொட்டது. ஊக்குகளே இல்லாத வாழ்க்கை எவ்வளவு இனிமையானது!

“என்ன ஒரு புலியின் பாய்ச்சல்; மெதுவாக!”என்றாள். என்னைப் புலியோடு ஒப்பிட்டது எனக்குப் பிடித்தது.

அவள் எழுந்து உட்கார்ந்தாள். டி-ஷர்ட்டைக் கழட்டினாள். மற்றவற்றையும் கழட்டிவிட்டாள். நான் மெய் மறந்து போனேன். என் நாக்கை எப்படியாவது தளர்த்தி, வெளியில் துருத்தி ஒரு நாயைப் போல் மூச்சிரைக்காமல் இருக்கப் பாடுபட்டேன்.

“என்னயா, புலி? நீ எதையாவது கழற்றப் போறியா, இல்லையா? என்றாள்.

“நான் நான்.”, என்னை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டாள்.

அரைமணி நேரத்திற்குப் பிறகு நாங்கள் படுக்கையில் கிடந்தோம். அனைத்துச் சக்தியையும் இழந்தது போலிருந்தது. ஆனாலும் மிகவும் நிறைவாக இருந்தது. நேஹாவின் அறையில் இருந்த பழைய ஃபேனைப் பார்த்தேன். அது கோணாமாணாவென்று வட்டமிட்டது போலிருந்தது. எனக்கும் களிப்பில் மீண்டும் தலை சுற்றியது.

“இப்போ என்ன செய்யலாம்?” என்றாள் நேஹா.

“என்ன செய்யலாம்?” என்று சமாளித்தேன்.

“ஏதாவது சொல்லேன்.”

நான் சந்தோஷத்தின் எல்லைக்குச் சென்று விட்டேன். அந்தச் சாவியைத் திருட வேண்டிய அவசியம் இல்லையென்றால் நான் அப்படியே படுத்துக் கொண்டிருப்பேன்.

“அது வந்து ரொம்பப் பிரமாதம்”, என்ன சொல்வதென்று தெரியாமல், கிடைத்த முதல் வார்த்தையைப் பயன்படுத்தினேன்.

“நன்றி. எனக்கும் பிடித்திருந்தது. நான் இனி கெட்ட பொண்ணு”, என்றாள்.

“இல்லவே இல்லை” என்று மறுத்தேன். ஒரு வேளை அவள் இதற்காக வருந்தி இனி இதைச் செய்யவே கூடாது என்று தீர்மானித்து விட்டால்?

“ரொம்ப சரி; இங்கே நான் நிர்வாணமாகப் படுத்திருக்கேன். அதுவும் குடித்துவிட்டு வைவாவிற்கு வந்தவனுடன்; என் அப்பா ஒரு கிலோமீட்டருக்கும் குறைவான தூரத்தில் தன் அலுவலகத்தில்;” என்று கூறிச் சிரித்தாள். “தடைகள் நீங்கி மிகவும் சுதந்திரம் அடைந்ததாக உணர்கிறேன்.”

“அப்படியா?”

“ஆமாம்; சுதந்திர உணர்வு; ஆனாலும் லேசான சோகம் இழையோடுகிறது,” என்றாள்.

“நேஹா, வருத்தப் படாதே!” மறுபடியும் விவரிக்க முடியாத அழுகை தொடங்கிவிடுமோ என்று பயந்தேன். “உனக்கு வெளியே போகணுமா?”

“வேண்டாம். ஏன் உனக்கு இருக்கப் பிடிக்கலையா?”

“எனக்கு ஒரு சிகரெட் வேண்டும்,” என்றேன்.

“ஆமாம்! செக்ஸிற்குப் பிறகு ஒரு சிகரெட்டு பிடிப்பது நன்றாக இருக்கும் என்று கேள்விப்பட்டிருக்கேன். தயவு செய்து எனக்கும் ஒன்று வாங்கிவா”, என்றாள்.

“நீ புகை பிடிக்க மாட்டாயே!”

“நான் பையன்களோடு படுக்கவும் தான் மாட்டேன். சீக்கிரம் வாங்கி வா.”

எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்ததைப் புரிந்து கொண்டேன். “நான் உன் காரை எடுத்துச் செல்லவா?”

“ஏன்? ரயனின் ஸ்கூட்டரில் வரலியா?”

“இல்லை. அவன் ஸ்குவாஷ் விளையாட கொண்டு போய்விட்டான் எடுக்கட்டுமா?”

“சரி; சாவி ஃபிரிட்ஜ் மேல் இருக்கு. சீக்கிரம் வா”, எழுந்து என் சட்டையை அணிந்த கொண்டாள்.

“ஹே! நீ போட்டுக் கொண்டிருப்பது என் சட்டை”, என்றேன்.

“தெரியும், ஆனால் எனக்குப் பிடிச்சிருக்கு; இது லூஸாக, சரியாக இருக்கு. ஒரு குட்டித் தூக்கத்துக்கு ஏற்றது”, தூங்குவது போல் நடித்தாள்.”நேஹா, விளையாடதே! நான் எப்படி வெளியே போவது?”

“என்னுடைய டாப்பைப் போட்டுக்கோ.”

“அது பிங்க்; ரொம்ப இறுக்கமா இருக்கு. பைத்தியமா நீ?”

“கீழே இருக்கும் அலமாரியில் அப்பாவின் சட்டை ஒன்றை எடுத்துப் போட்டுக்கோ.”

“நேஹா, அபத்தம்.”

“போய்த் தொலை; போய் சிகரெட்டு வாங்கி வா, ஹரி. நீ என்னை மிகவும் சோர்வடைய வைத்து விட்டாய்”, என்று ஒரு தலையணையை என் மீது எறிந்தாள்.

நான் பேரா செரியனின் காரையும், மகளையும் உபயோகிக்கலாமென்றால் அவரின் சட்டையும் தான் அணியலாம்; அவரின் அலமாரியிலிருந்து ஒரு வெள்ளைச் சட்டையை எடுத்தேன். கையில் ‘டீஸி’ என்று ஆங்கிலத்தில் பதித்த சின்ன முத்திரையைத் தவிர வேறு எந்த டிஸைனும் இல்லாத சட்டை.

நான் ஃபிரிட்ஜ் மேலிருந்த சாவிக் கொத்தை எடுத்தேன் ஆறு இருந்தன; நிச்சயம் ஒன்று செரியனின் அலுவலகத்தினுடையது.

வீட்டை விட்டு வெளியேறினேன் சாவி கிடைத்த திருப்தியில்.

காலியாயிருந்த சாலையில் கார் ஒட்டிக் கொண்டு போனேன்.

மதிய வெய்யில் எல்லோரையும் வீட்டினுள் முடக்கியிருந்தது. நேரே ஜியா ஸராய் சென்று அங்குள்ள மாற்று-சாவி செய்யும் கடைக்குப் போனேன்.

“எது?” என்றார் கடைக்காரர்.

“ஆறையுமே”, என்றேன்.

அந்தக் கடைக்காரர் புது சாவி செய்யும் பொழுது நான் ஒரு பாக்கெட் சிகரெட்டை வாங்கினேன். நான் நினைத்ததை விட எளிதாக முடிந்துவிட்டது. ஒன்றைப் பற்ற வைத்தேன். திரும்பவும் நேஹாவின் அணைப்பில் இருக்கும் சுகத்தை எண்ணினேன். இது என் வாழ்க்கையின் இன்பமயமான நாள்:

சீக்கிரத்திலேயே சாவி தயாரானது. புதிதாகச் செய்தவற்றை என் பாக்கெட்டில் போட்டுக் கொண்டேன். இன்ஸ்டி கேட் வழியாகக் காம்பஸுக்குள் வண்டியை ஓட்டிச் சென்றேன்.

பேராசிரியர்கள் குடியிருப்பு அருகில் என் கார் திரும்பும் பொழுது எனக்கு முன்னே ஒரு சைக்கிள் செல்வதைக் கவனித்தேன். நான் மடையன், முட்டாள், பைத்தியம் என்று என்னையே வைது கொண்டு ஹாரணை அடித்தேன்-திரும்பி என்னை நேராகப் பார்த்தது செரியன்!

*Downloaded from Ebookz.in*

# 17

## என் வாழ்நாளின் நீண்ட நாள்-II

வாழ்க்கையில் அரண்டு போகும் தருணங்களில் நாம் அலறுவோம்; அதற்கும் மீறினால் அச்சத்தில் உறைந்து விடுவோம். ஒரு ஐஸ் பெட்டியில் உறைந்து பாதுகாக்கப்பட்டு, திரும்ப உயிர் பெறாமலே போய்விடலாம். செரியன் சைக்கிளில் இருந்து இறங்கி என்னருகே. அதாவது அவரின் கார் அருகே நடக்கையில் நான் வாழ்க்கையை உறைய வைக்கும் அளவுக்கு ஜில்லிட்டுப் போனேன்.

அவர் என் அருகில் வந்த நின்றார். நான் வெளியே இறங்கியிருக்க வேண்டும். ஆனால் இம்மியளவு கூட அசைய முடியவில்லை. செரியனின் வார்த்தைகளைவிட என் இதயத்தின் படபடப்பு அதிகமாக என் காதில் விழுந்தது.

“இது என் கார்”, என்றார்.

ஆமாம், பத்துக்குப் பத்து மதிப்பெண் என்று நினைத்துக் கொண்டேன். இதை என்னால் சமாளிக்க முடியும் என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். மூச்சு விட முயற்சித்தேன். “ஆமாம் ஸார்”, என்றேன்.

“நீ யாரு? என் காரில் உனக்கு என்ன வேலை?” என்றார் அடுத்து.

“ஸார், திரும்ப எடுத்துச் செல்கிறேன். ஸார்” என்றேன். எனக்கே அது மடத்தனமாகத் தோன்றியது.

செரியன் சைக்கிளை நிறுத்திவிட்டுத் திரும்பினார். நானும் மெழுகு பொம்மை மாதிரி அமராமல் காரைவிட்டு வெளியே வந்தேன். இந்த டைனோஸார்கள் நமக்குத் தேவை ஏற்படும் பொழுது எங்கே தான் மறைகின்றன?

“நீ என் வீட்டிற்கா வண்டி ஒட்டிப் போகிறாய்?” என்று முன் கதவைத் திறந்தபடி செரியன் கேட்டார். அவர் ஒட்டப் போகிறார். நான் கிளம்பலாமா?

“ஆமாம் ஸார்”

திடீரென்று அவருடைய பிரம்மாண்டமான நெற்றியைச் சுறுக்கினார். “உன்னைத் தெரியும். நீ ஒரு மாணவன், சரியா? உன் பெயர் என்ன?”

“ஹரி, ஸார்” என்றேன். அவர் கேட்ட கேள்விகளிலேயே துல்லியமாய் விடை தெரிந்தது, இந்த கேள்விக்கு மட்டும் தான்.

“என் வைவாவை கேலிக் கூத்தாக்கியது நீ தானே?”

சாட்டிய குற்றத்தை ஒப்புக் கொண்டு தலையாட்டினேன்.

“வண்டியில் ஏறு”, என்றார் செரியன்.

நான் சத்தம் போடாமல் முன் கதவைத் திறந்து அவர் அருகில் அமர்ந்தேன். அவர் வண்டியைக் கிளப்பினார்.

“உனக்கு யார் சாவி கொடுத்தது?”

அந்தக் கேள்வி என்னை பயமுறுத்தியது. என் பேண்ட் பாக்கெட்டைப் தடவிப் பார்த்தேன். மாற்றுச் சாவிக் கொத்து பத்திரமாக இருந்தது. ஏதாவது யோசித்தாக வேண்டும். அவருடைய பெண்ணுக்கு ஸெக்ஸ் முடிந்ததும் சிகரெட் வேண்டும். அதை வாங்கத் தான் வந்தேன் என்ற காரணத்தைத் தவிர வேறு ஏதேனும் யோசிக்க வேண்டும்.

“நேஹா, ஸார்”, என்றேன் தீர்மானமாக.

“நேஹாவைத் தெரியுமா?”அவரின் புருவங்கள் உயர்ந்தன.

“ஸார், அவளைச் சாலையில் சந்தித்தேன் டையர் பஞ்சர்…”

“அதனால்?” என்றார் செரியன்.

“நான் அந்த வழியாகப் போய் கொண்டிருந்தேன். அதனால் மெக்கானிக் கடை வரை தள்ளிச் சென்று உதவினேன். அவள் திரும்பப் போக வேண்டும் என்றதால் நான் வண்டியைக் கொண்டு விடுவதாகச் சொன்னேன்.”

செரியன் மௌனமாய் இருந்தார். நம்பிவிட்டரா? நம்பினார் போல் பட்டது. காரை மெல்ல ஒட்டினார்.

“நீ ஏன் உதவிக்கு வந்தே?”

“சும்மா தான் ஸார்”, ஏதோ தினமும் இது போன்ற உதவிகள் செய்வது சகஜம் என்ற பாவனையில் சொன்னேன்.

“உனக்கு வகுப்புகள் இல்லையா?”

“ஃப்ரீ டைம் ஸார்.”

“அசட்டுப் பெண்”, செரியன் தனக்குத் தானே உரக்கச் சொல்லிக் கொண்டார். “காரை முட்டாளிடம் கொடுத்து விடுவதா? அறிமுகம் இல்லாதவனிடம் எப்படி ஒப்படைத்தாள்? நான் இதைப் பற்றி அவளிடம் பேச வேண்டும்” என்றார்.

நான் அமைதியாக இருந்தேன்; இப்பொழுது என் மனதில் ஒரு புது எண்ணம் ஓடியது; நேஹா உடைகள் மாற்றிக்கொண்டிருப்பாளா, கதவைத் திறந்ததும் என்னை வியப்பில் ஆழ்த்த ஓடி வந்து கட்டிப்பிடிக்காமல் இருக்கணுமே! செரியனிடம் அவள் பேசும் முன் எனக்கு ஒரு பத்து நொடி கிடைத்தால் நன்றாக இருக்கும். இல்லை நான் மாயமாய் மறைந்துவிட்டால்?

செரியன் தன் வீட்டில் காரை நிறுத்தினார்.

“ஸார், நான் போகலாமா?”

“இல்லை, உள்ளே வா;இந்த அசட்டுப் பெண் உனக்கு நன்றியாவது சொல்ல வேண்டாமா? இல்லையென்றால் உன் போன்ற பிள்ளைகளை நான் என் வீட்டின் அருகில் கூட விடமாட்டேன்.”

“சரி ஸார்”. நான் அவரை மொத்தமாகப் புரிந்து கொண்டேன். செரியன் வீட்டின் மணியை அடித்தார். நேஹா வெறும் ஒரு பெட் ஷீட்டைச் சுற்றிக் கொண்டு கதவைத் திறந்தாள்.

“நீ அதற்குள்”பிறகு தன் அப்பாவைப் பார்த்தாள். “அப்பா”, என்றாள் நேஹா; கண்களைப் பலமுறை சிமிட்டினாள். ஷீட்டை முழுவதுமாகப் போர்த்திக் கொள்ள முயன்றாள்; சிகரெட்டை விட இந்தக் காட்சி போதை ஏற்றியது.

“உங்கள் சாவி மேடம்”, என்று சீக்கிரமாகப் பேசினேன். “கவலைப்படாதீர்கள். உங்களின் பஞ்சரை ஒட்டிவண்டியைப் பத்திரமாகக் கொண்டு வந்து விட்டேன்.”

“ஹஹ்?” என்று என்னைப் பார்த்தாள்.

“நேஹா, உனக்கு என்ன புத்திகித்தி கெட்டுப் போயிருந்ததா? நீ ஏன் உடைகள் அணியாமல் இருக்கே?” என்றார் செரியன். நான் இருப்பதால் குரலை உயர்த்தாமல் கஷ்டப்பட்டு, கட்டுப்படுத்திப் பேசினார்.

நேஹா விழித்துவிட்டு தன் அறைக்குச் சென்றாள்; உடைகள் அணிவதற்காகத் தான் இருக்கும்.

“என் பெண்ணுக்கு மூளை கலங்கிவிட்டது; உட்கார்”, என்றார் செரியன்.

“ஸார், நாங்கள் வண்டியை ஒரு இருபது நிமிடம் தள்ளியிருப்போம். அது தான் அவள் சோர்வடைந்திருப்பாள்”, என்றேன். ஸெக்ஸ் கூடக் காரைத் தள்ளுவது போலத் தான்-ஆனால் அது குதூகலமான விஷயம்.

நேஹா நான் அப்பாவின்-சமர்த்துப்-பெண் போன்ற ஸல்வார்-கமீஸ் அணிந்து வந்தாள். அவள் கையில் உள்ள ட்ரேயில் இரண்டு கிளாஸ் தண்ணீர்.

செரியன் தண்ணீர் குடிக்கும் பொழுது நான் மறுபடியும் சொன்னேன், “உங்கள் கார் டயரிர் பஞ்சரான விஷயத்தை அப்பாவிடம் சொன்னேன். எப்படி மெக்கானிக்கிடம் கொண்டு செல்ல உதவினேன்; எப்படி காரைத் திரும்பக் கொண்டு வந்தேன் என்று சொல்லிக்கொண்டிருந்தேன். நான் வழியில் ஸாரைப் பார்த்தேன்.”

“ஓ!” என்றாள் நேஹா. புரிந்த பாவனையைக் கொண்டு வர கஷ்டப்பட்டாள்.

“எப்படி நீ காரை ஒரு அறிமுகமில்லாகவனிடம் திணிக்கலாம்?” என்றார் செரியன்.

“ஸாரிப்பா” என்ற சொல்லி நேஹா சோபாவில் சரிந்தாள்.

“ஸார், நான் போகலாமா?” என்றேன்.

செரியன் அரைமனதாய் தலையாட்டினார். நான் ஓடாமல் எவ்வளவு வேகமாக நடக்க முடியுமோ, அவ்வளவு வேகமாக நடந்தேன்.

“ஹரி”, நான் கேட்டருகே செல்லும் பொழுது செரியன் கத்தினார்.

நான் உறைந்து போய் திரும்பினேன்” என்ன ஸார்?”

“நீ அவ்வளவு சாமர்த்தியமானவன் அல்ல, தெரியுமா?” என்றார்.

செரியன், குறைந்த மதிப்பெண் வாங்கிய மாணவர்களிடம் எவ்வளவு வெறுப்பு காண்பிப்பார் என்று எனக்கு ஏற்கனவே தெரியும். ஆனால் அதை முகத்தில் அடித்தாற் போல் சொல்வார் என்று நினைக்கவில்லை.

“ஸார், எனக்குத் தெரியும் ஸார். கஷ்டப்பட்டுப் படிக்கப் பார்க்கிறேன்.”

“நான் அதைச் சொல்லவில்லை.”

“ஸார்?”

“நானும் மாணவனாக இருந்தவன் தான். சிறந்த மாணவன், நான்கு வருடங்களும் 10 புள்ளி எடுத்தவன்.”

“எனக்குத் தெரியும் ஸார்.”

“என் பெண்ணிடம் வாலாட்டி விட்டுத் தப்பிக்கலாம் என்று மட்டும் எண்ணாதே; அது நடக்காது!”

நான் மௌனமாக நின்றேன்.

“நீ வைவாவில் குடித்துவிட்டு வருகிறாய். இப்பொழுது என் பெண்ணுடன் கசமுசவென்று இருக்கிறாய். என் காரில், என் சட்டை அணிய, என்ன தைரியம் உனக்கு?”செரியன் என் காலரைப் பிடித்தார். “ஜாக்கிரதை ஹரி, மிகவும் எச்சரிக்கையாக இரு. இது ஐஐடி, ஏதோ ஒரு சோப்ளாங்கி காலேஜ் அல்ல. முதலில் வைவா, பிறகு என் மகள்; என் மகள்!”

“ஸார், நீங்கள் நினைப்பது போல் அல்ல.”

“நான் என்ன நினைக்கணும்னு நீ சொல்லாதே. என் பெண் கவனக் குறைவாக இருக்காளே என்று யோசித்தேன். கடவுளே! உன்னைப் போன்ற சகதியினாலா! என் வீடு, என் மகள்-அனைத்திலிருந்தும் ஒதுங்கியிரு. எப்பவும் விலகியிரு, புரிந்ததா?”

“புரிந்தது ஸார்”, என்றேன். செரியன் என் காலரை விட்டால் தேவலை. நான் அப்படியே சக்தியற்ற ஜடம் போல் நின்றேன். என் “கன்னித்தன்மையை இழந்த சமயம், செரியனால் பிடிக்கப்பட்டால் என் சக்தி காணாமல் தானே போகும்?

“நல்லது. யாரும் இதைப் பற்றி வம்பு பேசக் கூடாது என்பதால் இதோடு பெரிது படுத்தாமல் விட்டு விடுகிறேன். ஆனால் நீ அவளை விட்டுவிட்டு, உன் பாடத்தில் கவனம் செலுத்து. இன்னும் இன்ஸ்டியில் ஒரு தவறு செய்தாயானால் உன்னைக் காலி பண்ணிவிடுவேன். நீ காலியாகி விடுவாய்!”செரியனின் முகம் ஒரு அசிங்கமான கோபத்தில் சிவந்தது.

“ஸார், நான் விலகியே இருக்கேன். என்னை விட்டுவிடுங்கள்”, என்று கெஞ்சினேன்.

என் காலரை விட்டார். அவரின் விரல்கள் நடுங்கின. நான் கேட்டிலிருந்து ஓடி குமாவோன்னுக்குச் சென்றேன். என் வாழ்வில் வேகமாக ஓடியது அதுவாகத் தான் இருக்கும். ஒரே ஒரு முறை செரியனின் சைக்கிளைக் கடக்கும் பொழுது நின்றேன். எனக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. யாரும் பார்க்கவில்லையே என்று சுற்றும் முற்றும் பார்வையை ஓட்டினேன். இரண்டு டயர்களிலிருந்தும் காற்றை இறக்கினேன். அட! அந்தப் பிசாசை எப்படியாவது வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டும். இதைப் பார்த்தால் அந்தப் பொட்டை நம்புவான், டயரில் காற்று இறங்கும் என்று.

“பயங்கர கஷ்ட காலம்டா!” என்று மூச்சிரைக்க ரயனின் அறைக்குள் சென்றேன்.

“என்ன ஆச்ச? சாவி கிடைத்ததா?” என்றான் ரயன்.

என் மூச்ச வாங்கியது.

“என்ன ஆச்சு?” என்றபடி அலோக்கும் ரயனின் அறைக்குள் வந்தான்.

“நரகம்டா சாமி”. என் நாடித் துடிப்பு சற்று அமைதியானதும் என் கதையைச் சொன்னேன்.

ரயன் உரக்கச் சிரித்தான். அவன் தைரியமானவன் தான் என்றாலும் அவனிடமிருந்து அதை நான் எதிர்பார்க்கவில்லை. செரியன் என் காலரைப் பிடித்து என்னைச் சாவடிப்பேன் என்று பயமுறுத்தியிருக்கிறார்.

“ஃபக் ரயன்! இதில் ஒரு வேடிக்கையும் இல்லை”, என்றேன்.

“அப்படியா?” என்றபடி இன்னும் அதிகம் சிரித்தான். “பிறகு இதை என்ன என்று சொல்வது? செரியனுடைய சட்டை, நேஹா பெட்வீட் போர்த்திக் கொண்டு வந்தது. அவர் சைகோவாகவே மாறியிருப்பார்”, ரயன் மேலும் சிரித்தான். “சே! நான் அங்கே இருந்திருக்கணும்.”

“வாயை மூடு, இது அனாவசியப் பிரச்சனை”, என்றான் அலோக்.

“இதில் என்ன பிரச்சனை? உனக்கு சாவி கிடைத்துவிட்டது தானே?” என்றான் ரயன்.

நான் கிடைத்தது என்று சாவிக் கொத்தைக் காண்பித்தேன்.

“நாம் இதைச் செய்யப் போவதில் மாற்றம் எதுவும் இல்லையா?” என்று கேட்டேன்.

“ஏன் கேட்கிறே? கண்டிப்பா செய்வோம். செரியனுக்கு இதைப் பற்றி எப்படித் தெரியும்?” என்று சாவிக் கொத்தை ஏதோ பழுத்த திராட்சைக் கொத்தைப் போல் கண்முன் ஆட்டினான்.

“எனக்குத் தெரியலே. எனக்குப் பயமாக இருக்கு ரயன். நிஜமாகவே சொல்றேன்.”

“டேய் ரிலாக்ஸ்டா ஒரே நாளில் செக்ஸ், ஹாரர், திகைப்பு, பயம் என்ற உணர்ச்சிக் கலவை உனக்கு”, என்றான் ரயன் சிரித்துக் கொண்டே.

“ஹரி சொல்வது சரிதான். நாம் ஆபரேஷன் பெண்டுலத்தைப் பற்றி மறுபரிசீலனை செய்து பார்க்கலாம்.”

“தேவையே இல்லை”, என்ற ரயன் தீவிரம் அடைந்தான். “இப்பொழுது தான் இந்த மொத்த விஷயமுமே வலுவடைந்துள்ளது. ஹரியோட ஒரே நம்பிக்கை மேஜர் பரீட்சையை நன்கு எழுதுவது தான். செரியன், இவன் மீது நல்ல அபிப்பிராயம் கொள்ள ஒரு வாய்ப்பு.

“நன்றி ரயன்”, என்றேன்.

“அட! விடுடா ஹரி! இன்று சில தடங்கல்களைச் சந்தித்தாய். இருந்தும் அவற்றை நல்லபடியாய் சமாளித்தாய். செரியன் என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும்.”

“நேஹாவை என்ன செய்வாரோ?” என்றேன்.

“அதைப் பற்றி நீ எதுவுமே செய்ய முடியாது, தெரியும் தானே? அதுவும் இன்றைக்கு நிச்சயம் முடியாது. முதலில் மேஜர் பேப்பரைச் சுட வேண்டும். பிறகு மற்ற விஷயங்களை ரூம் போட்டு யோசிப்போம்.”

“நீ இன்னும் சிறிது நாட்கள் கழித்துத்தானே நேஹாவுடன் பேச வேண்டும்? அதற்குள் செரியன் இந்த விஷயத்தை ஒன்றுமே நடக்காதது போல் புதைத்துவிடுவார். உலகம் இதைப் பற்றித் தெரிந்து கொள்வதை விரும்ப மாட்டார். மேலும் அவர் இதைப் போன்ற விஷயங்களைப் பெண்ணுடன் பகிர்ந்து கொள்ளும் தந்தையைப் போல் தெரியவில்லை”, என்று அலோக் என் தோளில் ஆதரவாகக் கையைப் போட்டான்.

“நாம் நண்பர்கள்டா. மாலை வரை பொறுத்திரு. நினைவில் கொள் ஒத்துழைக்க வேண்டும்-ஆக்கிரமிப்பதற்காக”, என்ற ரயன் எங்கள் இருவரோடும் ஹை-5 என்றான்.

இரண்டு மணி நேரத்திற்குப் பிறகுச் சரியாக ஐந்து மணிக்கு அலோக் வீட்டிலிருந்து அழைத்தார்கள். ரயனின் அறையில் சீட்டாடிக் கொண்டிருந்தோம்.

“அலோக்! அவசரம்! தொலைபேசியில் அழைப்பு!” என்று காவலாளி கீழிருந்து உச்ச குரலில் கத்தினான். அலோக் தன் மூன்று சீட்டைத் தூக்கி எறிந்தான்.

“என்ன ஆச்சு?” என்று கேட்டேன்.

“தெரியலையே. என் அக்காவின் கலியாண நிச்சய தேதி குறிக்கப்பட்டிருக்கலாம்”, என்று கத்திக் கொண்டே படி இறங்கினான்.

“நாமும் கீழே போகலாம். அவன் சொன்னது உண்மையானால் நாம் குண்டனை ட்ரீட் வைக்கச்

சொல்லலாம்” என்ற ரயனுடன் சேர்ந்து அலோக் சென்ற தொலைபேசி பூத்தை அடைந்தோம்.

“ஆமாம்மா, ஆமாம்; நான் நன்றாகத் தான் இருக்கேன். என்ன ஆச்சு? நீங்கள் ஏன் இப்படி சோகமாக இருக்கீங்க?” என்றான் அலோக்.

நானும், ரயனும் ஒருவரை ஒருவர் பார்த்துத் தோள் குலுக்கினோம்.“நிஜமாவா? அப்படியா? எப்படி செய்யலாம்?” அலோக்கின் முகம் கேள்விகள் கேட்கக் கேட்கத் தொங்கிப் போனது. நான் பூத்திலிருந்து பின் வாங்கினேன். இது ட்ரீட்டுக்கான சமயம் இல்லை.

“அப்பாவுக்கு என்ன ஆச்சு? அம்மா, உரக்கப் பேசுங்களேன்; காதில் விழவில்லை. இந்தத் தொடர்பு சரியாக இல்லை. என்ன ஆச்சு? எதுவும் சாப்பிடவில்லையா? எவ்வளவு நாளாக?” தொடர்பு துண்டிக்கப்பட்டது. தொலைபேசி இறந்தே விட்டது.

பூத்தில் தரையில் அமர்ந்தான். அந்த மெலிதான தக்கை மரத்திலான பூத்தே அவனின் எடைதாங்காமல் ஆட்டம் கண்டது. “உன்னால் நம்ப முடிகிறதா?”

“என்ன? தொலைபேசி ஒரு வாரமாகத் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கு”, என்றான் ரயன்.

“பிள்ளை வீட்டில் சம்பந்தத்தை நிறுத்தி விட்டார்களாம்”, என்றான் அலோக்.

“ஏன்?” என்றேன்.

“வரதட்சணையில் ஒரு பங்கு இப்பொழுது வேண்டுமாம். பிள்ளையை வளைத்துப் போட, முன் பணம் தேவைப்படுகிறது. அம்மா கடன் வாங்கத் திட்டமிட்டாள்; ஆனால் அது கிடைக்க சில மாதங்கள் ஆகும். அதற்குள் அவர்களுக்கு வேறு சம்பந்தம் கிடைத்துவிட்டது. அதனால் எல்லாம் முடிந்துவிட்டது. வடி கட்டின முட்டாள்கள்”, என்றான் அலோக்.

“இது என்னடா இவ்வளவு மோசமா இருக்கு? இது போன்ற கேவலமான குடும்பத்தில் உன் அக்காவைக் கட்டிக் கொடுப்பது கொடூரம்.” என்றேன்.

“எனக்குத் தெரியலை. எல்லா பிள்ளை வீட்டாரும் இப்படித் தான். இதனால் வருத்தத்தில் அப்பா எதுவுமே சாப்பிடவில்லை. எப்பொழுதிலிருந்து பட்டினி என்று சரியாகத் தெரியலை. வீட்டில் ரணகளம்; இதில் தொலைபேசி வேறு செத்துத் தொலைந்துவிட்டது.”

“தொலைபேசி வேலை செய்யாததே நல்லது தான். நீ என்ன செய்யமுடியும்? எழுந்திரு; உள்ளே போய் பேசலாம்”, என்று ரயன் ஒரு கை கொடுத்து அலோக்கைத் தூக்கினான்.

நாங்கள் மேலே சென்றபின் சிறிது நேரம் மௌமாகவே இருந்தோம். ரயன் கடைசியாக மௌனத்தை உடைத்தான்.

“ஆறு மணி”, என்றான்; ஒரு தாதா தன் அடியாட்களிடம் பேசும் குரலில். “இன்னும் நான்கு மணி நேரம் தான் இருக்கு. குமாவோனை விட்டுப் பத்து மணிக்குக் கிளம்பலாம். ஆபரேஷன் தொடங்க வேண்டும்.”நான் அவன் சொல்வதைச் சரியாகக் கூடக் காது கொடுத்து கேட்காமல் அரை மனதாகத் தலையாட்டினேன். நேஹா இப்பொழுது என்ன செய்து கொண்டிருப்பாள் என்று யோசித்தேன்.

“ரயன்” என்றான் அலோக்.“நான் இப்பொழுது சௌகரியமாக உணரவில்லை”

“எதைப் பற்றி?” என்றான் ரயன்.

“இந்த ஆபரேஷன் எனக்குக் கலக்கத்தைக் கொடுக்கிறது. முதலில் ஹரி செரியனிடம் மாட்டிக் கொண்டான். பிறகு அக்காவின் திருமணம் நின்று விட்டது. அப்பா மறுபடியும் உடம்பு சுகமில்லாமல் போகலாம். சாப்பிடாமல் பட்டினி கிடக்கிறார். நாம் இதைச் செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை.”

“ஹே! ஒரு நிமிஷம் பொறு”, என்றான் ரயன் எழுந்து கொண்டே.

“உன் அக்காவின் திருமணத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? உன் அப்பா நன்றாகத் தான் இருப்பார்.”

அலோக் அமைதி காத்தான். ஆனால் ரயன் சொன்னதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டதாகத் தோன்றவில்லை.

ரயன் என்னையும், அலோக்கையும் மாறி, மாறிப் பார்த்தான். அவன் அறையில் குட்டி போட்ட பூனை போல் இங்கும், அங்கும் நடந்தான். பிறகு, “ஆனால் இதை மட்டும் சொல்லுங்கடா; இப்பவா இதைப் பற்றி

ஆராய்வது? நாம் ஏற்கனவே முடிவு செய்தது தானே? சாவி கூட கிடைத்துவிட்டது.”

கையில் இருந்த சாவிக் கொத்தைக் குலுக்கிக் காட்டினான்.

“ஆனால் ரயன்; நமக்கு இந்த அபாயம் இப்போ தேவையில்லை”, என்றான் அலோக்.

“இதில் என்ன அபாயம்? ஒரு நான்கு மணி நேரம், வினாத்தாள் கையில் வந்துவிடும். கதை முடிந்துவிடும்.”

“ஹரி, நீ என்ன நினைக்கிறே?” என்றான் அலோக்.

“ஒரு நிமிஷம் இரு”, ரயனின் குரல் உயர்ந்தது, திரும்ப அவனை எந்தக் கட்சி என்று கேட்கப் போகிறாயா? ஹரி, இந்த குண்டன் முதல் ஸெம்மில் செய்த கூத்தை அரங்கேற்றப் பார்க்கிறானா?”

“ரிலாக்ஸ் ரயன்”, என்று தடுத்தேன். என் கடைசி நிமிடங்கள், நேஹாவுடன் இருந்ததை நினைத்துப் பார்த்தேன். “ஏன் கத்துகிறாய்?”

“அப்போ குண்டனைத் தீர்மானம் செய்யச் சொல்”, என்று ரயன் அமர்ந்தான். அவன் அவசரமாக ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்து இழுத்தான்.

“நான் தனியாகப் பிரிந்து போறேனென்று சொல்லவே இல்லியேடா”, என்றான் அலோக்.

“இல்லை, அவன் இங்கேயே தங்கிவிட்டு நம்மை வேலை செய்யச் சொல்கிறானா? வினாத் தாள் நோகாமல் கிடைக்கும் என்ற பார்க்கிறானா?” என்றான் ரயன்.

“இப்படியா என்னைப் பற்றி நினைக்கிறான்? என் மீது நம்பிக்கை இல்லையா?” என்றான் அலோக்.

“நாம் எல்லோரும் ரொம்ப டென்ஷனில் இருக்கோம். இன்னும் நான்கு மணி நேரம் ஆகும், இன்ஸ்டி காலியாவதற்கு. நம்மிடம் சாவியிருக்கு. நமக்கு வினாத்தாள் வேண்டும். நாம் செய்தால் சேர்ந்து சுருட்டுவோம், சரியா?”

“சரி” என்றான் ரயன்.

அலோக்கைப் பார்த்தோம்.

“சரி”, என்ற ரயனின் குரலோசையில் பத்தில் ஒரு பங்கு இருக்கும் குரலில் அலோக் சொன்னான்.

“நாம் எல்லாப் பிரச்சனைகளையும் சிந்தித்துப் பார்த்து விட்டோமா?” என்று ரயனைப் பார்த்தேன்.“நிச்சயம்”, என்றான்.

“அப்போ முடிக்கலாம், மேலும் அலோக். உன் அக்காவுக்கு நல்ல மாப்பிள்ளை கிடைப்பான். இப்போ இல்லை என்றால், உனக்கு வேலை கிடைத்ததும் தேடலாம்; நீயே திருமணச் செலவை மேற்கொள்ளலாம், என்ன அவசரம்?” என்றேன் அலோக்கிடம்.

“சரிதான்”இம்முறை அலோக்கின் குரலில் நம்பிக்கையும் உற்சாகமும் கலந்திருந்தது.

“நண்பர்கள் தானே?” என்று இருவரையும் பார்த்தேன்.

“ஆமாம்”, என்றனர். கோரஸாக, “நானும் சேர்ந்துக்கறேன்”, என்றான் அலோக்.

“நன்றி. நாம் அடுத்த சில மணி நேரங்களுக்குப் பொறுமையாக இருக்க வேண்டும்”, என்றேன். எனக்கு நேஹாவைப் பற்றிக் கனவு காண வேண்டும் போலிருந்தது அடுத்து மூன்று மணி நேரம் அமைதியாகக் கழிந்தது. அலோக் மட்டும் தன் அப்பாவைப் பற்றி கவலைப்பட்டு ஏதோ சொன்னான். அவனை நாங்கள் சாந்தப்படுத்தினோம். அவனின் அம்மா, இதற்கு முன்பு இது போன்ற நிலையைச் சமாளித்திருப்பதால், இப்பொழுதும் பார்த்துக் கொள்வாள் என்று தைரியம் கூறினோம். டின்னர் சாப்பிடுவதற்கு நாங்கள் மெஸ்ஸுக்குப் போகவில்லை. என்னவோ, அங்குள்ள மாணவர்கள் எங்கள் மனதில் ஓடும் எண்ணங்களைப் படித்து விடுவார்களோ என்ற கவலையில் போகவில்லை.

“பத்து மணி”, என்றான் ரயன்; கடிகாரம் பத்து முறை அடித்தது.

# 18

## என் வாழ்நாளின் நீண்ட நாள்-III

நாங்கள் வந்தோம் என்றே யாருக்கும் தெரியக் கூடாது என்பதில் ஒரு பெரும் ஜாக்கிரதை உணர்வுடன் செயல்பட்டோம். பல வருடங்களில் முதல் தடவையாக இன்ஸ்டிக்கு ஸ்கூட்டரில் செல்லாமல் நடந்தே சென்றோம். விடுதிகளைத் தாண்டி வேகமாகக் கையில் புத்தகங்களுடன் நடந்தோம். ஏதோ நூலகத்துக்குச் சென்று நள்ளிரவு வரை படிப்பதுபோன்ற காட்சியை அமைத்தோம்.

"உன் பெற்றோர்கள் உன் அக்காவுக்கு ஏன் இவ்வளவு சிறிய வயதில் மாப்பிள்ளை பார்த்தார்கள்? அவளுக்கு என்ன வயது?" என்று கிசுகிசுத்தேன். எனக்குக் கலக்கமாகவும் படபடப்பாகவும் இருந்தது.

"வெறும் இருபத்தி-மூன்று. நான் வேலை செய்ய ஆரம்பித்த பிறகு பார்த்தால் போதும். அப்போ நான் கடன் வாங்க வசதியாக இருக்கும்", என்றான் அலோக்.

நான் ஒப்புக்கொண்டேன்.

"அதற்கு எனக்கு வேலை கிடைக்கணுமே. ஒரு பரிதாபமான, ஐந்து புள்ளிக்காரனுக்கு என்ன வேலை காத்திருக்க முடியும்?" என்றான்.

"இந்த 'ஏ' ஒரு வேளை உன் மதிப்பெண்களுக்கு ஒரு ஊட்டமளிக்கும்", என்றேன்.

"உஷ்ஷ்", என்றான் ரயன்;நாங்கள் இன்ஸ்டி கட்டிடத்துக்கு வந்து விட்டோம்.

நாங்கள் மிகவும் முன் ஜாக்கிரதையாக ஒவ்வொரு மூலையிலும் யாராவது பாதுகாவலர் ஒளிந்திருக்கிறாரோ என்று கூர்ந்து தேடினோம். இந்த சமயத்தில் அவர்கள் முன் அறையில் இருப்பதில்லை நாங்கள் தான் பல முறை இவ்வழியாகத் திருட்டுத்தனமான வோட்கா குடிக்கச் சென்றிருக்கிறோமே!

இருந்தும் நாங்கள் பிரிந்து கட்டிடத்தின் ஓரங்களிலும், பக்கவாட்டிலும் தேடினோம் - யாரும் இல்லை.

செரியனின் அலுவலகம் ஆறாவது மாடியில் இருந்தது. அந்தப் படிக்கட்டுகளில் வெளிச்சம் கம்மியாக இருந்தது. அதனால் ஒவ்வொரு மாடி ஏறியதும் ஒரு கணக்கு வைத்துக் கொண்டோம்.

"அடுத்து ஆறு. அவ்வளவுதாண்டா. முடித்துவிடலாம். செரியனுடைய அலுவலகம், வலது பக்கம், ஏழாவது கதவு," என்றான் ரயன்.

நாங்கள் ஆறாம் மாடியில் காலடி வைத்தோம். முழுவதற்கும் ஒரே ஒரு சிறிய விளக்கு தான்.

"டிஸி செரியன், தலைமைப் பேராசிரியர். பன்னிடா அவன்!" என்று செரியனின் அலுவலக வாசலில் இருந்த பெயர் பலகையைப் படித்தான் ரயன். அலோக் என் பின்னே பதுங்கிக் கொண்டான். ரயன் பூட்டைப் பரிசோதித்தான்.

"சாவி," என்று ரயன் இடது கையை நீட்டினான். என் சாவிக் கொத்தை வெளியே எடுத்தேன். அது ஸ்டீரியோ இஃபெக்டில் சத்தம் செய்தது.

"சத்தம் போடாதே!" என்றான் அலோக்.

"இவ்வளவு பயப்படாதேடா குண்டா. யாருக்கும் நாம் இங்கே இருப்பது தெரியாது."அவன் என்னைப் பயங்கரமாக அச்சுறுத்தினான். "ரயன், சரியான சாவியைக் கண்டுபிடிடா," என்றேன்.

"நான் அதைத்தான் முயற்சிக்கிறேன். ஒரு லட்சம் சாவி இருக்கும் போலிருக்கு இந்தக் கொத்தில், இரு; இதுவாக இருக்குமோ? அல்லது இது, இல்ல இதுதான்."

"இதுவா?" என்று அலோக் திகைத்தான்.

ரயன் ஒரே இழுப்பில் தாழ்ப்பாளைத் திறந்தான். கதவை உதைத்துத் திறந்தான். ஐஐடி டெல்லி, மெக்கானிக்கல் துறையின் தலையின் குகை எங்கள் வசம். ரயன் சுவற்றில் தேடி விளக்கைத் தட்டினான்.

“நீ என்ன செய்யறே?” என்றான் அலோக்.

“பிறகு எப்படிடா தேடறது, குண்டா? யாரும் பார்க்கமாட்டார்கள்; ரிலாக்ஸ். உன்னால் முடிந்த இடமெல்லாம் நிதானமாகத் தேடு. எனக்கு வேறு ஒரு விஷயமும் தேட வேண்டும்.”

“என்ன?”

“என் ல்யூப் ப்ராஜெக்ட் திட்டம். செரியன் தன் அலுவலகத்தில் இதை அடைத்துவிட்டார். பிறகு அது வெளியே வரவே இல்லை. பேரா வீரா என்னிடம் சொன்னார். செரியனின் அபிப்பிராயத்தோடு இங்கு எங்கோ தான் அந்தத் திட்டம் பொதிந்திருக்கு.”

“என்ன வேணும்னாலும் செய் ரயன். நாம் முதலில் வினாத்தாளைத் தேடுவோம்.”

“எங்கிருந்து ஆரம்பிப்பது?” அலோக் செரியனின் அலமாரியில் வைத்திருந்த காகிதங்களைத் துழாவினாள். இது இரவு பூரா ஆகும் போல் தோன்றியது.

“பழுப்புக் காகித பை; அரக்கு முத்திரையிட்டது. பரீட்சையின் பொழுது தான் முத்திரையை உடைப்பார்கள்,” என்றான் ரயன்.

நாங்கள் அலமாரியைத் தேடுவதைப் பங்கு போட்டுக் கொண்டோம். நேரத்தை வீணடிக்காமல் இருப்பதற்காகப் பார்வையை ஒட்டினோம். பத்திரிகைகள், அலுவலக தஸ்தாவேஜுகள், பாடத்திட்டங்கள், டைம் - டேபிள்கள் வேறு ஒன்றும் கிடைக்கவில்லை. இருபது நிமிடங்கள் ஓடிவிட்டன.

“ஏதாவது கிடைத்ததா?” என்றேன்.

ரயனும், அலோக்கும் இல்லை என்றார்கள்.

பத்து நிமிடம் கழித்து ரயன் செரியனின் நாற்காலியில் அமர்ந்தான்.

“என்னடா இது?” என்றேன்.

“நான் எல்லா அலமாரியும் தேடிப்பார்த்தாச்சு. என் பங்குக்குக் கொடுத்த அலமாரியில் எதுவும் இல்லை. ஆனால் என் ல்யூப் ப்ராஜெக்ட் திட்டம் கிடைத்தது. அவர் வெறுமனே”வியாபாரத்துக்கோ, பாடத்திட்டத்துக்கோ உகந்ததாக இல்லை,” என்று எழுதியிருக்கார் என்ன ஒரு அடாவடித்தனம்”

“எனக்கும் கிடைக்கவில்லை. உதவி செய்வாயா?” என்றேன்.

“சிகப்பு முத்திரை, பழுப்பு பை, இண்டெம் மேஜர் - இரகசியம். இதுவா தேடுகிறீர்கள் திருவாளர்களே?”அலோக் அந்தப் பையை எங்கள் முன் ஆட்டினான்.

நாங்கள் குதித்து எழுந்தோம்.

“குண்டா, இதுதாண்டா!” என்றான் ரயன்.

“ஆமாம்”, என்று நாங்கள் ஹை-5 அடித்துக் கொண்டோம்.

“என்னால் நம்பவே முடியவில்லை,” என்றான் அலோக்.

“நீ என்னை நம்பவில்லை. இன்னும் நிறைய விஷயம் பாக்கியிருக்கு. நான் அந்த அரக்கு முத்திரையைச் சீர் செய்ய வேண்டும்,” என்று ரயன் தன் பாக்கெட்டில் இருந்தவற்றை வெளியே எடுத்தான். பிளேடு, மெழுகுவர்த்தி, லைட்டர், மெழுகு அரக்கு.

“டேய், செம்ம ஏற்பாடா வந்திருக்கியா?” என்றாள் அலோக்.

அவனால் சிரிப்பைக் கட்டுப்படுத்த முடியவில்லை. முகமெல்லாம் பூரிப்பு.

“நீ என்ன எதிர்பார்த்தாய்? எனக்குச் சில நிமிடங்கள் அவகாசம் கொடு,”ரயன் பிளேடைக் கட்டை விரலுக்கும், ஆள்காட்டி விரலுக்கும் நடுவில் பிடித்து வேலை செய்ய ஆரம்பித்தான். அந்த முத்திரையை எவ்வளவு மெதுவாகவும், சீராகவும் உடைக்க முடியுமோ, அப்படிச் செய்தான்.

“இதை எல்லாம் எங்கே கற்றுக் கொண்டாய்?” என்றேன் பிரமிப்புடன்.

“நான் பொறியாளனாவதற்குப் பயிற்சி எடுக்கிறேன். இது ஒன்றும் புரிபடாத விஷயம் இல்லை. இப்போ பேசாமல் இரு,” என்றான் ரயன்.

“எவ்வளவு நேரம்?” என்று கேட்டபடி செரியனின் நாற்காலிக்கு எதிரில் போடப்பட்ட நாற்காலியில் அலோக் அமர்ந்தான்.

“பத்து நிமிடம். அமைதியாக இருங்கள்; அல்லது நான் காகிதத்தைக் கிழித்து விடுவேன்,” என்று ரயன்

எச்சரித்தான்.

இரண்டு நிமிடம் கடந்தது. நான் அலோக்கைப் பார்த்தேன். முகத்தின் மீது கையை வைத்து அமர்ந்திருந்தான். அவன் திரும்பவும் தன் வீட்டு ஞாபகமாக இருக்கிறான் என்று தெளிவாகத் தெரிந்தது.

“அப்பாவுக்கு உடம்பு சரியாகி விட வேண்டும் என்று பிரார்த்திருக்கிறேன். அவர் சரியாகச் சாப்பிடாவிட்டால் மிகவும் தளர்ந்துவிடுவார். என்னால் ஏதாவது செய்ய முடிந்தால் தேவலை.”

அலோக்கின் குடும்பத்தின்“உணவு”மீதிருந்த ஆவலை நினைத்துப் பார்த்தேன். இரண்டு பேரில் யாராக இருந்தாலும் சாப்பாடு இல்லாவிட்டால் நோய்வாய்படுவார்கள்.

“கவலைப்படாதே. இது யாருடைய தவறும் இல்லை. மாப்பிள்ளை வீட்டார் பேராசைக்காரர்களாகத் தெரிகிறார்கள்,” என்று சமாதானப்படுத்தினேன்.

“அவர்கள் எல்லாம் ஒரே மாதிரி தான். எனக்கு அப்பா எப்படி இருக்கார் என்று தெரிய வேண்டும். குமாவோனில் தொலைபேசி வேலை செய்தால் பரவாயில்லை,” என்று நொந்து கொண்டான்.

“முடிச்சாச்சு!”ரயன் காகிதத்தைக் கிழிக்காமல் முத்திரையை உடைத்துவிட்டான். ஒரு நூறு வினாத்தாள் இருக்கும். மேஜர் வினாவின் தாள்கள்!

“செம்மடா! காமி பார்க்கலாம்,” என்றேன்.

“வேண்டாம் எனக்கு உங்களைப் பற்றித் தெரியும். இப்பொழுதே விடைகளையோசிக்க ஆரம்பித்துவிடுவீர்கள். நான் இதை என்னுடனேயே வைத்திருக்கிறேன். இங்கே எல்லாம் முடியும் வரை,” என்றான் ரயன்.

“வேறு என்ன செய்ய வேண்டும்?” என்றாள் அலோக்.

“புது முத்திரை வைக்க வேண்டும். எதற்காக மெழுகுவர்த்தி கொண்டு வந்தேன் என்று நினைக்கிறீர்கள்?” என்றான் ரயன்.

“இன்னும் ஒரு ஆயிரம் மணிநேரம் ஆகும் முடிப்பதற்கு,” என்றான் அலோக்.

“சீக்கிரம் ரயன்,” என்றேன்.

“வாயை மூடு,” என்று சொல்லி, புதிதாக மெழுகை உருக்கினான். அவன் ஒரு திறமையான தொழிலாளி போல் தென்பட்டான்.

“ஹே ஹரி, செரியனின் அலுவலகத்தில் தொலைபேசி இருக்கு,” என்றான் அலோக்.

“ஆமாம் அங்கே இருக்கு,” என்று புத்தக அலமாரியைச் சுட்டிக்காட்டினேன். அங்கே தொலைபேசி வைக்கப்பட்டிருந்தது.

“அதிவேகமாய் இங்கிருந்து தொலைபேசியில் அழைத்தால்?”

“அப்படியா? பொறுத்திருந்து வெளியிலிருந்து கூப்பிடலாமே?”

“அது மிகவும் நேரமாகிவிடும். அப்பா எப்படி இருக்கார் என்று தெரியணும். வேறு என்ன தான் செய்ய வேண்டியிருக்கு?”

“சரி,” என்றேன் அரை மனதாக.

அலோக் எழுந்து தொலைபேசியின் அருகில் சென்றான்.

“நீ வெளியே தொடர்பு கொள்ள வேண்டுமானால் ஒன்பதை அழுத்த வேண்டும்,” என்றேன்.

“நீங்கள் என்னடா செய்கிறீர்கள்? சும்மா உட்கார முடியாதா?” என்று ரயன் திட்டிக்கொண்டே புது அரக்கு முத்திரை தயாரித்தான்.

“ஒரே நிமிடம் வீட்டுக்குப் பேசுகிறேன். நீ முடிக்கும் வரை காத்திருக்க முடியாது,” என்றான் அலோக்.

“வெளியிலிருந்து கூப்பிடு; நீ பணம் செலவழிப்பதில் கருமிடா?” என்றான் ரயன்.

“ஒரே நிமிடம் தான் வேண்டும். நீ முத்திரையைக் கவனி,” என்று அலோக் எண்களைச் சுழற்றினான்.

உடனேயே கிடைத்துவிட்டது. அவன் அம்மா அலோக் மறுபடியும் கூப்பிடுவான் என்று காத்திருந்தாள் என்பது தெளிவானது அலோக் பேசவே இல்லை. அவன் அம்மா அவர்கள் வீட்டு அவலத்தைப் புலம்பினார்; அக்காவின் பரிதாபமான விதியை நொந்து கொண்டான்.

பழைய முத்திரையின் அடியில் ரயன் மெழுகைத் தடவினான். ரயனின் ல்யூப் ப்ராஜெக்ட்டைப்

புரட்டினேன். இந்த சமயத்தில் தான் தொடர்பு“வயர்கள்” எங்கள் கையை மீறின.

அப்பொழுது இது எனக்குத் தெரியாது. ஆனால் இன்ஸ்டியில் தொலைபேசிகள் இப்படித்தான் வேலை செய்தன. ஒவ்வொரு பேராவுக்கும் அவர் அலுவலகத்தில் பிரத்யேகமான தொலைபேசி உண்டு. அது ஐஐடியில் மொத்தத் தொடர்போடு இணைந்தது. காம்பஸ் உள்ளே இருக்கும் எண்களுக்குத் தான் பெரும்பாலும் உபயோகப்படுத்தப்படும். வெளியே தொடர்பு கொள்ள சில எண்களுக்கு வசதி உண்டு. ஒன்பதை அமுக்கினால் இந்த உள்தொடர்பு, வெளியே தொடர்பு கொள்ள அனுமதி கேட்கும். காம்பஸில் உள்ள மையத்தொடர்பிலிருந்து அது வழங்கப்படும். தன்னிச்சையாகவே அந்த மைய சுவிட்சு போர்டு இயங்கும். ஒவ்வொரு தொடர்பு கொண்ட எண்ணும், தொடர்பில் உள்ளது என்பதை உணர்த்த ஒரு சிகப்பு விளக்கு எரியும். வெளித் தொடர்பு கேட்டால் இன்ஸ்டியின் பாதுகாவல் அலுவலகத்தின் கீழ்தளத்தில் உள்ள அறையில் ஒரு இரவுப் பணியாளரும், பாதுகாவலரும் அமர்ந்து வேலை செய்வார்கள். வம்படித்துக் கொண்டும், சோம்பேறித்தனமாக ஒரு சின்ன தூக்கத்தைப் போட்டும் நேரத்தைப் போக்குவார்கள். ஒரு சிறிய சிகப்பு விளக்கு எரிந்து, பச்சையாக மாறியது ஆறாம் மாடியில். இந்நேரத்தில் பேரா செரியனுக்கு அலுவலகத்தில் என்ன வேலை? பாதுகாவலர் யோசித்தார். அந்தப் பணியாளர் வேண்டுமானாலும் ஒட்டுக் கேட்கலாம். அவர் ஒட்டுக் கேட்டார். இது பேரா செரியனே இல்லை. அது ஒரு அம்மா தன் சோகக் கதையை யாரோ அலோக்கிடம் புலம்பிக் கொண்டிருந்தார். பாதுகாவலர் தன் வாக்கி - டாக்கியைக் கொண்டு மற்ற பாதுகாவலரைச் செரியன் அறைக்குச் சென்று சோதிக்கச் சொன்னார். இரு பாதுகாவலர்களாகச் சேர்ந்து கொண்டு ஆறாம் மாடியை அடைந்தனர்.

துரதிர்ஷ்டவசமாக, நான் ஏற்கனவே சொன்னது போல் எங்களுக்கு இந்த விபரம் எதுவுமே அப்பொழுது தெரியாது.

“சில பக்கங்களில், சில அபிப்பிராயங்கள் எழுதப்பட்டுள்ளன,” என்றேன்.

“எல்லாம் குப்பை. இந்த பிராஜெக்டுக்குச் செரியன் எந்த மதிப்பும் தரவில்லை. நான் அதன் வேலை செய்யும் தன்மையை சாட்சியுடன் கூறியிருக்கிறேன். இது வேலைக்கு ஆகாது என்று எப்படித் தூக்கி எறியலாம், அந்தப் பொட்டை? அடடா! ஐயோ!”ஒரு சொட்டு சூடான மெழுகு அவன் கையில் விழுந்தது.

“கவலைப்படாதே. முத்திரையில் கவனம் வை. சீக்கிரம் அலோக்,” என்றேன்.

இரண்டு பாதுகாவலர்களும் அறை வாசலில் நின்றனர். கதவைத் திறப்பதற்கு முன் இரண்டு நிமிடங்கள் நிதானித்திருக்க வேண்டும். ஏற்றி வைக்கப்பட்ட மெழுகுவர்த்தி, கரைந்த மெழுகு, பேராவின் நாற்காலியில் கிடந்த மாணவன்; இறைக்கப்பட்ட காகிதங்கள்; அந்தப் பாதுகாவலன் பெரிய படிப்பு படித்திருக்க வேண்டியதில்லை - என்ன நடந்தது என்று யூகிக்க.

அலோக் தொலைபேசியைக் கீழே நழுவவிட்டு அப்படியே உறைந்து நின்றான். அவனின் சோகமான அம்மா திரும்பவும் இறந்த தொலைபேசியுடன் போராடியிருக்க வேண்டும். நாங்கள் அனைவருமே இறந்துவிட்டதாகத் தோன்றியது. நான் நாற்காலியில் உறைந்தேன். ஆனாலும் எப்படியென்று யோசிக்காமல் ரயன் தான் முதலில் பேச ஆரம்பித்தான்.

“பாதுகாவலர் ஸார்! உள்ளே வாங்க, நான் எல்லாம் விளக்கமா சொல்கிறேன்,” என்று எவ்வளவு அமைதியாகப் பேச முடியுமோ, அவ்வளவு பாடுபட்டான்.

“நீ யார்?”

“பாதுகாவலர் ஸார்,” ரயன் எழுந்து நின்றான். விட்டால் தள்ளிக்கொண்டு வெளியே ஓடிவிடுவான் போல் இருந்தது. அலோக்கும் நானும் அவன் பின்னே தயாராக நின்று கொண்டோம். ஏதாவது திடீர் யோசனை வந்தால் செயல்பட ஆயத்தமானோம்.

“எங்கள் அருகே வராதீர்கள்,” என்றார் பாதுகாவலர்.“நாங்கள் பேராவை அழைக்கப் போகிறோம்.”

“வேண்டாம்! நாங்கள் சொல்வதைக் கேளுங்கள், தலைவா!” என்று ரயன் கதவை நெருங்கி விட்டான். நாங்கள் சட்டென்று வெளியே ஓட வேண்டும் என்று தெளிவானது.

பாதுகாவலருக்கு எங்கள் எண்ணம் புரிந்து விட்டதோ என்னவோ, அல்லது அவன் மடத்தனமாக பயத்தில் இருந்தானோ தெரியவில்லை. அவன் பின்னால் இரண்டடி நடந்தான். அலுவலகக் கதவை தாழிட்டுவிட்டான். அந்த சத்தம் எங்கள் காதில் விழுந்தது. கூட இருந்தவனிடம் பேராவையும் தலைமைப் பாதுகாவலரையும் கூப்பிடுமாறு அறிவுறுத்தினான். ரயன் திரும்பவும் பாதுகாவலரைக் கூப்பிட முற்பட்டான். ஆனால் பிரயோசனப்படவில்லை. மூன்று பேரும் செரியனின் அலுவலகத்தில் ஆறாவது மாடியில், நள்ளிரவில் பூட்டப்பட்டிருந்தோம்.

ஒரு வார்த்தை கூடப் பேசிக் கொள்ளவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டோம்.

எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை. காத்திருந்தோம், காத்திருந்தோம், மேலும் காத்திருந்தோம். என் நீண்ட நாள் முடிந்தபாடில்லை. முடியவே முடியாதோ.?

*Downloaded from Ebookz.in*

# 19

## என் வாழ்நாளின் நீண்ட நாள்-IV

அந்தச்சிறிய நேரஅவகாசத்தில் நான் ஆழமாக எனக்குள்ளேயோசிக்க ஆரம்பித்தேன். செரியனின் அறைக் கதவு திறப்பதற்கு முன், எங்கள் விதி முடிவதற்கு முன் அமைதியாக, ரயனையும் அலோக்கையும் தவிர்த்து (அவர்களால் தான் பேசவே முடியவில்லையே!) யோசித்தேன். எதிர்கால காட்சிகள் என் மனக்கண்ணில் திரையிடப்பட்டன. நாளை காலைக்குள் எல்லா பேராக்களுக்கும், மாணவர்களுக்கும், குமாவோன் வாசிகளுக்கும், ஏன் விடுதிகளுக்கும் எங்களைப் பற்றி செய்தி பரவும். பேரா செரியனின் அலுவலகத்திலிருந்து மேஜர் வினாத்தாளைத் திருடும் பொழுது கையும் களவுமாகப் பிடிபட்டனர்! இன்ஸ்டியின் டைரக்டர் இந்த சிறப்பு நிகழ்வுக்காகத் தோற்றம் அளிப்பார். செரியன் முடிந்தால் எங்களை எல்லாம் உயிருடன் சுட்டுத்தள்ளப்பார்ப்பார். எங்களிடம் நல்லபடியாக நடந்து கொள்ள மாட்டார் என்பது உறுதி. அதை என்னவென்று சொல்வார்கள்? கட்டுப்பாட்டுக் கமிட்டி, அதை ஆங்கிலத்தில் டிஸ்கோ என்று அழைப்பார்கள்.

(Disciplinary Committee) (DISCO) கட்டுப்பாடு அத்து மீறல் மீது ஒழுங்கு நடவடிக்கை. சட்டென்று யோசித்துப் பார்த்தால் என் ஐந்து புள்ளி ஜிபிஏவே சொர்க்கம் போல் இருந்தது. ஐஐடீயை விட்டு ஒரு எளிய வேலையுடன் தேர்வாகி வெளியே வந்தால் போதுமானது. ஆனால், இப்பொழுது அந்த ஜிபிஏவும், தேர்வும் கூட நடக்காது என்று தோன்றியது. *(நாங்கள் கெஞ்சிக்கூத்தாடினால் செரியன் இறங்கி வருவாரா? நாங்கள் இங்கே ஏமாற்றுவதற்காக வரவில்லை என்று ஒரேயடியாக மறுத்தால்? எல்லாவற்றையும் ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கேட்டால்? ஒரு சில நிமிடங்கள் பின்னோக்கிச் சென்று அலோக்கை அந்தத் தொலைபேசி தொடர்பு கொள்ளாமல் தடுத்தால்? இந்த ஒரு நாளை நான் திரும்பவும் வாழ்ந்தால்?)*

இந்த அசட்டுத்தனமான கேள்விகள் என் மனதில் முயல் குட்டிகள் போல் அங்கும் இங்கும் தாவின. நான் ஆழமாய் மூச்சு விட்டேன்; இந்தத் தருணங்களை வாழ்ந்தே தீர வேண்டும்.

“யாரோ வந்துவிட்டார்கள்,” என்றான் ரயன். நாங்கள் எழுந்து நின்றோம். தாழ்ப்பாள் திறக்கப்பட்டது. ஒரு பத்து பேர் அறைக்குள் குழுமினர். நான் அந்தப் பாதுகாவலர்களையும், தலைமைப் பாதுகாவலரையும் அவர்களுடைய சீருடையை வைத்து அடையாளம் கண்டு கொண்டேன். அவர்களுடன் இருந்த அடுத்த நபர் அந்தத் தொலைபேசி பணியாளர். அவர் இன்ஸ்டி சீருடை அணிந்திருந்தார். இந்த மடையர்கள் செய்யும் அபத்தமான வேலையில் இன்றொரு நாள் ஹீரோ அந்தஸ்த்தைப் பெற்றுவிட்டனர். அப்புறம், நாங்கள் சூறையாடிய அலுவலகத்தின் சொந்தக்காரர் செரியன். அவர் திகைத்துப் போய் நின்றார். எப்படி அவரின் அலுவலகத்தை உடைத்துத்திறந்தனர் என்ற திகைப்பில் இருந்தார். ஐஐடியின் பெரிய தலைகள் அனைவரும் பைஜாமாவில் ஆஜர். பைஜாமா அணிந்து தூங்கும் பொழுது அவர்களைத் தொந்தரவு செய்தால் அதிகக் கடுப்பாவார்கள்.

எல்லோரையும் உள்ளே அழைத்தார், பாதுகாவலர். எங்கள் மீது ஒரு கண் இருந்தது, ஒருவேளை ஓட முற்பட்டால்?’

“நீயா?” என்றார் செரியன், நேராக என்னைப் பார்த்து; அவர் யோசித்திருப்பார். காலையில் மகள் மீது படையெடுப்பு, இரவில் அலுவலகத்தின் மீது. ஒரே நாளில் என் வாழ்க்கையை யாராவது சின்னாபின்னம் ஆக்கினால் நானும் தான் ஆத்திரம் அடைவேன்.

“நீ இங்கே என்ன செய்கிறாய்?” என்றார் பேரா வீரா. நிச்சயம் தெரிந்திருக்கும் எங்களின் கைங்கர்யம். அவன் பார்த்ததை ஒரு கோடி முறை அந்தப் பாதுகாவலன் விவரித்து விட்டான். மெழுகுவர்த்தி, அரக்கு, மேஜர் வினாத்தாள். ஒரு வேளைப் பேரா வீரா, நல்லதொரு பொய்யை ஜோடிக்க எங்களுக்கு ஒரு வாய்ப்பு தருகிறாரோ?

நாங்கள் மௌனமாய் இருந்தோம். அந்த மௌனம் எங்களை அங்கிருந்து மீட்கும் என்பது போல்.

“ஏமாற்றுக்காரர்கள் ஸார், மேஜர் கேள்விகளைத் திருட வந்தனர். என் பசங்க அவங்களைப் பிடிச்சுட்டாங்க,” என்று பெருமையாகச் சொன்னார் தலைமைப் பாதுகாவலர்; என்னவோ ஸிஐஏ

குழுவையே முறியடித்துவிட்ட மிதப்பில் இருந்தார்.

“என் அலுலகத்திலிருந்து கேள்வித் தாள்களைத் திருடினீர்களா? எப்படி உள்ளே வந்தீர்கள்?” என்று செரியன் என்னைப் பார்த்துக் கேள்வி கேட்டார்.

“உங்களுக்கு இவனைத் தெரியுமா?” என்று செரியனைப் பார்த்து ஒரு பேரா கேட்டார்.

“அப்படியேதும் இல்லை. என் வகுப்பில் பார்த்திருக்கிறேன். மோசமான மாணவன். என் வைவாவில் குடித்துவிட்டு வந்தான் டீன் சாஸ்திரி. அந்த முறைதான் நான் அவனைப் பார்த்தேன். உன் பெயர் ஹரிகுமார் தானே?”

எங்களின் காலைச் சந்திப்பைப் பற்றி மற்ற பேராக்களுடன் செரியன் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை.

“மற்றவர்கள்? உங்கள் பெயர் என்ன?” என்றார் டீன்.

“அலோக் குப்தா ஸார், குமாவோன் விடுதி, மெக்கானிக்கல் பிரிவு.”

“ரயன் ஓபராய், நானும் அதே தான்,” என்றான் ரயன்.

“நீங்கள் எல்லோரும் மிகவும் சாமர்த்தியசாலிகள் என்ற நினைப்பா?” என்றார் டீன்.

“இல்லை ஸார். அதனால் தான் எங்களுக்குக் கேள்வித் தாள் தேவைப்பட்டது.” என்றான் ரயன்.

பளார்! டீன் ரயன் கன்னத்தில் அறைந்தார். அவரைத் தப்பு சொல்ல முடியாது. ரயன் வேறொரு சமயத்தைத் தேர்ந்தெடுத்திருக்கலாம், இது போன்ற நகைச்சுவைக்கு.

பளார்! பளார்! யோசிப்பதற்குள் டீன் அலோக்கின் கன்னத்தையும், என்னுடையதையும் பதம் பார்த்தார்.

கடவுளே! மிகவும் அவமானமாகப் போய்விட்டது. பேராக்கள், பாதுகாவலர்கள், செரியன் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கையில்; இடது கன்னம் சிவந்து விட்டது. நாங்கள் மௌனமாய் இருந்தோம். நான் ரகசியமாய் வேண்டினேன். எல்லோரும் தங்கள் கோபத்தை எங்களை அறைந்து தீர்த்துக் கொண்டு எங்களை விட்டு விட்டால் நல்லது. இது ஒன்று தான் தண்டனை என்றால் மயங்கி விழும் வரை எங்களை அறையலாம். எங்களுக்கு ஒரு டிஸ்கோவை வைத்து எங்கள் வேலையையும், வாழ்வையும் ஆப்பு வைத்துத் தகர்க்காமல் இருந்தால் மகிழ்ச்சி.

“நீங்கள் குற்றவாளிகள். புரிகிறதா? நீங்கள் குற்றவாளிகள். போலீஸைக் கூப்பிடுங்கள்”, என்றார் செரியன். அவர் உடம்பு நடுங்கியது. என்னவோ அவரை எல்லோரும் தர்ம அடி கொடுத்தது போல் ஆடிப் போய் விட்டார் மனுஷர்! அவர் தொலைபேசி அருகே நகர்ந்தார். பேரா வீரா பேசத் தொடங்கினார். “செரியன் ஸார், நீங்கள் போலீஸைக் கூப்பிடுவதற்கு முன் ஒரு நிமிடம் ஸார்; இது ஒரு பெரிய விஷயமாக வெடிக்கும்.”

“இது பெரிய விஷயம் தான்”, என்று செரியன் கத்தினார். எங்களை அடித்து விடுங்கள் செரியன், என்று மனதில் கேட்டுக்கொண்டேன். அவருக்கு அடிக்க வேண்டும் என்று பரபரத்திருக்க வேண்டும், குறிப்பாக என்னை.

“டீன் சாஸ்திரி, நீங்கள் விளக்குங்கள். போலீஸ் வந்தால் விஷயம் ஊடகங்களுக்கும், தினசரிக்கும் பரவும். ஐஐடி எல்லாத் தவறான காரணங்களுக்கும் செய்திகளில் அடிபட வேணுமா?” என்று பேரா வீரா எடுத்துரைத்தார்.

“ஹம்ம்ம்”, டீன் சாஸ்திரி, கைகளைத் தேய்த்து யோசித்தார்.

“ஸார், இன்ஸ்டிக்குள்ளேயே இதைத் தீர்க்க வழிமுறைகளும், நடவடிக்கைகளும் இருக்கு தானே? போலீஸ், நிருபர்கள் இல்லாமல்வர மாட்டார்கள்”, என்றார் பேரா வீரா.

“வீரா சொல்வதும் சரி தான். ஐஐடியின் பெயரை மண்ணில் சாய்க்கக் கூடாது, அதுவும் இந்தத் தறுதலைகளுக்காக.”

இந்தச் சந்தர்ப்பத்திலும் “தறுதலை” என்ற வார்த்தை எனக்குச் சிரிப்பை வரவழைத்தது. நான் சிரிக்காமல் இருக்க முயற்சித்தேன்.

“ஸார், எனக்கும் ஐஐடியின் பேரை ரிப்பேராக்க உத்தேசம் இல்லை. ஆனால் இந்தப் பசங்க துடிக்கணும். என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்? ”செரியன் தொலைபேசியைக் கீழே வைத்துவிட்டுச் சொன்னார்.

“ஒப்புக்கொள்கிறேன். இது ஒரு பெரிய அத்துமீறல். அவர்களின் விதியை அவ்வளவு எளிதில் முடிவு செய்ய முடியாது. நம்மிடம் நடவடிக்கை முறை இருக்கு; அதிகம் பயன்படுத்துவதில்லை. டிஸ்கோவிடம் விட்டு விடலாம்.”

அந்தக் கடைசி வரியைக் கேட்டதும் நாங்கள் அரண்டோம். ஒரு வேளை எங்களின் மௌனம் எங்களுக்குச் சாதகமாக இல்லையோ? ரயன், ஏதாவது சாமர்த்தியமாக யோசிடா! சொல்ல வேண்டும் என்று தோன்றியது; ஆனால் சொல்ல முடியவில்லை. மௌனம் நிலவியது! அலோக் மட்டும் அவன் வழக்கமாகச் செய்வதைச் செய்தான். ஓவென்று அழத் தொடங்கினான்.

“ஸார், தயவு செய்து ஸார், மன்னித்து விடுங்கள் ஸார்” என்றான்.

“இனி பேச ஒன்றும் இல்லை. வருடா வருடம் மாணவர்களின் தரம் குறைந்து விட்டது. நாளை ஒரு அவசர டிஸ்கோ கூட வேண்டியது அவசியம்-நாளை!” என்றார் டீன்.

“டீன் ஸார், நுழைவுத் தேர்வில் புத்தியைத் தான் பரீட்சிக்க முடியும். தரத்தையும் ஒழுக்கத்தையும் எப்படிப் பரீட்சிப்பது?” என்று தலைமைப் பாதுகாவலர் கேட்டார். அவர் செய்த வேலைக்கான பாராட்டு அவருக்கும் போதிய அளவில் கிடைக்கவில்லை.

குமாவோன் விடுதி. அறிவிப்புப் பலகையைச் சுற்றிப் பெரிய கூட்டம் கூடியது. ஒரு சிறிய தாளில், அதாவது ஒரு காசோலை அளவில் ஒரு சிறிய அறிவிப்பு ஒட்டப்பட்டிருந்தது. அது நீளமான உரையாடல்களை ஊக்குவித்தது.

“இதனால் அறிவிக்கப்படுவது என்னவென்றால் இன்று இரவு *10* மணிக்கு மெக்கானிக்கல் இன்ஜினியரிங் பிரிவு கான்ஃப்ரன்ஸ் அறையில் டிஸ்கோ மீட்டிங் துவங்கும். ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது. கட்டுப்பாட்டு அத்துமீறல்களுக்காக ஹரிகுமார் (குமாவோன்) அலோக்குப்தா (குமாவோன்) மேலும் ரயன் ஓபராய் (குமாவோன்) மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது குற்றம் நடந்த நாள் ஏப்ரல்*11.”*

நாங்கள் மூன்று பேரும் அவமானத்தால் வெட்கி, அறிவிப்பு பலகையைப் பார்க்கக்கூட துணியவில்லை. கூட்டத்தினுள் புகுந்து வேகமாகச் சென்றோம். பலர் கேள்விகளால் எங்களைத் துளைத்தாரகள்.

“என்ன நடந்தது?” என்றான் அனுராக். “நிறைய வகுப்புகளுக்குச் செல்லாமல் விட்டு விட்டீர்களா?”

“அது டிஸ்கோவை கூட்டத்தூண்டாது. வேறு ஏதோ விஷயம் இருக்கு.”

“இது ஏதோ பெரிய குற்றம். ஒரே நாளில் டிஸ்கோவைக் கூட்டுகிறார்களே?” என்றான், இன்னொரு குமாவோன் வாசி.

“அதுவும் இரவு நேரம். ஏதோ மெக்கானிக்கல் பிரிவில் கசமுசா”

குமாவோன் சாமர்த்திய சாலிகளே என்ன விஷயம் என்று கண்டுபிடிக்கட்டும் என்று விட்டு விட்டோம். கீழே பார்த்துக் கொண்டே காம்பஸைவிட்டு வெளியேறினோம். நேஹாவுக்கு நன்றி. அவளின் மூலம் நாங்கள் யாரும் தேடாத இடத்துக்குச் சென்றோம், ஐஸ்கிரீம் கடை சரியான இடம் அலோக் நேராக கௌண்டருக்குச் சென்று மூன்று ஸ்டிராபெரி கோன்களுடன் திரும்பினான்.

“ரயன் உன்னிடம் பணம் இருக்கா?’ என்னிடம் இல்லை”, என்றபடி அலோக் கோன்களைக் கொடுத்தான்.

“குண்டா, இந்த சமயத்திலும் உன்னால் உணவு ஆசையைக் கட்டுப்படுத்த முடிய வில்லையா?” என்று கேட்டேன்.

“இது ஐஸ்கிரீம்டா. என் கவனத்தை திருப்ப முயல்கிறேன். நான் இரண்டு நொடி கூட நேற்று இரவு தூங்கவில்லை.”

“நானும் தான்”, என்றேன்.

“என்னடா செய்வார்கள்?” என்றான் அலோக்.

“இண்டெம்மில் “எஃப்”போடுவார்கள்”, என்றான் ரயன் குருட்டாம் போக்கில்.

“எஃப்! என் வாழ்க்கையில் நான் எஃப் வாங்கியதில்லை!

இந்தப் பாடத்தை நாம் திரும்ப வேறு படிக்கணும்', என்றான் அலோக்.

"அது தெரியும். இது ஒன்றும் உலகையே அழித்து விடும் விஷயம் இல்லை", என்றான் ரயன்.

"நீங்கள் என்ன கனவில் இருக்கீங்க? இரவு-நேர டிஸ்கோவில் அனைத்துப் பேராசிரியர்களும் கூடி ஒரு எஃப் மதிப்பெண்ணையா தீர்மானிப்பார்கள்?" என்றேன்.

அவர்களின் ஐஸ்கிரீம் மீதிருந்த செர்ரி பழத்தை, நான் திருடிவிட்டார் போல் அலோக்கும், ரயனும் என்னைப் பார்த்தனர்.

"ஸார், நிஜத்துக்கு வாங்க; டிஸ்கோ அபூர்வமாகத் தான் கூடும். அப்படிக் கூடினால் கருணைக்கெல்லாம் இடம் இல்லை."

"வேறு என்ன தான் செய்வார்கள்?" என்றான் அலோக்.

"நம்மை காலேஜை விட்டு வெளியேற்றலாம். மாறாக ஒரு செமஸ்டர், அல்லது ஒரு வருடம் நம்மை சஸ்பெண்ட் செய்யலாம்."

"வெளியேற்றுவார்களா?" ஐஸ்கிரீம் ஜன்னியைக் கொடுத்தது போல் அலோக் நடுங்கினான்.

"வெளியேற்ற மாட்டார்கள். அப்படி நடந்ததே இல்லை. கோக் பாட்டில்களைச் சொருகியவர்களுக்குக் கூட அப்படிப்பட்ட தண்டனை கிடைத்ததில்லை", என்றான் ரயன்.

"ஒரு வருஷம் அல்லது ஒரு செமஸ்டர் ஸஸ்பெண்ட் செய்யலாம். அதுவே நம் எதிர்காலத்தைத் தாறுமாறாக மாற்றிவிடும். அதற்குப் பிறகு வேலை தேடிப் பாருங்கள், தெரியும்", என்றேன்.

"ஒரு செமஸ்டர் முழுவதுமா? அப்போ நாம் என்ன செய்வது?" என்றான் அலோக். அப்பொழுது தான் தூக்கத்திலிருந்த விழித்துக்கொண்டவன் போல் கேட்டான்.

நான் மௌனமானேன். ரயன் கோனைச் சாப்பிட்டுவிட்டு டிஷ்யூவைச் சரியாகக் குப்பைத் தொட்டியில் குறி பார்த்து வீசினான்.

"ஏதாவது சொல்லுங்கடா, பிறகு என்ன ஆகும்?"

"நீயே யோசிடா குண்டா. உன் மதிப்பெண் அட்டையில் ஒரு செமஸ்டர் அல்லது இரண்டில் மதிப்பெண்கள் இருக்காது. அதில் "சஸ்பெண்ட்" என்று முத்திரை கூட அடிக்கப்படலாம். வேலை தேடும் நேர் காணலில் நல்ல ஒரு உரையாடலுக்குத் தொடக்கமாக அமையும்", என்றான் ரயன்

"ஒருவரும் வேலை தர மாட்டார்கள். அமெரிக்காவில் இது போன்ற ஏமாற்று வித்தையெல்லாம் மன்னிக்கவே மாட்டார்களாம். எம்பிஏ காலேஜ்களிலும் இடம் கிடைக்காது; இதே கேள்வியை அவர்களும் நேர்காணலில் கேட்பார்கள்."

"சொல்லப் போனால் நம் வாழ்வே பறிபோய்விட்டது", என்றேன். என் ஐஸ்கிரீமை நான் தொடவே இல்லை. கோன் உருகி கொழ கொழ வென்றாகிவிட்டது. ரயனிடம் கொடுத்துக் குப்பைத் தொட்டியில் எறியச்சொன்னேன்.

"நீங்கள் என்னடா இவ்வளவு அமைதியா இருக்கீங்க?

"எப்படி இப்படி இருக்க முடியுது? என் பெற்றோர்கள் என்ன நினைப்பாங்க? என் அக்காவுக்கு என்ன ஆகும்?"அலோக் முழங்கையை மேசையில் ஊன்றி தலையைப் பிய்த்துக் கொண்டான். தன் முகத்தைக் கைகளில் பொதிந்து அழுகையை மறைக்க முயன்றான்.

"யாருடா சொன்னது, நான் அமைதியாக இருக்கேன் என்று?" என்றான் ரயன். எழுந்து நின்றான். அந்தக் கௌண்டரில் தூங்கிக் கொண்டிருந்த காஷியர் எழுந்து கொள்ளும் அளவுக்கு உரக்கக் கத்தினான்.

"அமைதியாக உட்கார்; இன்ஸ்டி மக்கள் கூட இங்கு இருக்கலாம்", என்றேன்.

"ஃபக்; மக்கள், இன்ஸ்டிஎல்லாவற்றுக்கும் ஃபக்; இந்த குண்டனுக்கும் ஃபக்; என்னவோ இவன் ஒருவன் தான் தூங்காமல் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப் படுகிற மாதிரி ஸீன் போடறான்! மிஸ்டர் அலோக், விழித்துக் கொள், இது அழுது புலம்பி, தலையைப் பிய்த்துக் கொள்ளும் தருணம் இல்லை. இன்னும் பத்து மணி நேரத்தில் நாம் டிஸ்கோவைச் சந்திக்க வேண்டும். அந்தக் கொடுமையான பேராசிரியர்களுக்கு என்ன பதில் சொல்வது என்று தீர்மானிக்க வேண்டும்." இம்முறை அலோக்கும் எழுந்து கொண்டு, "ஆமாண்டா" என்றான். எழுந்து நின்றால் கத்தவது எளிதாகிறதோ என்று நினைத்தேன்."ஆமாம், மிஸ்டர் ரயன்", என்றான் அலோக்,

"உன்னிடம் இருக்கும் மூளையைக் கசக்கி என்ன யுக்தியைக் கையாள்வது என்று முடிவு செய்.

ஆனால் ஃபக்யூ, ஃபக் உன் யுக்தி; ஆபரேஷன் பெண்டுலம் கதியைப் பார்த்தாயா?”

இவர்களை அமைதிப்படுத்துவதில் ஒரு பிரயோசனமும் இல்லை. அவர்களுக்கு இந்தக் சுத்தல் தேவை என்றே பட்டது.

“ஆபரேஷன் பெண்டுலம்? அது தவறான யுக்தி என்றா கூறுகிறாய்? எந்தக் குழந்தை அம்மாவைக் கூப்பிட்டது?” என்றான் ரயன்.

“ஆமாம்டா! எந்த ஒரு ஐஐடியில் படிக்கும் மாணவனின் வரலாறில் அவன் பேராவின் அலுவலகத்தை உடைத்து உள்ளே புகுவான்? “ஒன்றுமே ஆகாது” என்றாயே? என்ன ஆச்சு பார்த்தாயா?”

ஒரு ஐந்து நிமிடம் இதே ரீதியில் விவாதித்தனர். நான் உடைந்து அழுதேன். அவர்கள் சண்டையிட்டுக் கொண்டே இருந்தனர். என்னால் இந்த டிஸ்கோவைச் சமாளிக்க முடியும் என்று தோன்றவில்லை. ஐயோ! நானும் அலோக் மாதிரி அழத் தொடங்கினேன். எனக்குப் பயங்கர தர்ம சங்கடமாகி விட்டது. ஆனால் இப்பொழுது அவர்களின் கவனம் என் பக்கம் திரும்பியது.

“இப்போ, உனக்கு என்ன ஆச்சு?” என்றான் ரயன்.

அடுத்த ஐந்து மணி நேரம் அந்த ஐஸ்கிரீம் கடையே தஞ்சம் என்றிருந்தோம். இரண்டு வாழைப்பழ-டாஃபி கோன், ஒரு புதினா சாக்லேட் சிப்ஸ், மூன்று ராஸ்ப்பெரி டிலைட் உள்ளே தள்ளிவிட்டு, என்ன விவாதம் எங்களைக் காப்பாற்றும் என்ற சிந்தித்தோம். துளிக் கூட நம்பிக்கை இல்லை; ஆனால் ஏதாவது செய்ய வேண்டுமே! எங்களின் கற்பனை பெரிதாக வேலை செய்யவில்லை. உண்மையாக இருப்பது என்று முடிவெடுத்தோம்; அமைதியாக இருந்து, கருணை காட்டும் படி கெஞ்சுவது. ஒரு ஆறு மணிக்கு குமாவோனுக்குத் திரும்பினோம். ஆறு தொலைபேசி தகவல் பேரா வீராவிடமிருந்து காத்துக் கொண்டிருந்தது. டிஸ்கோவுக்கு முன்னால் எங்களைச் சந்திக்க விரும்பினார். அவரை ஒன்பது மணிக்குச் சந்திக்க ஒப்புக் கொண்டோம்.

“என்ன? மாற்றுச் சாவியா?” என்று பேரா வீரா திகைத்து விட்டார்;எங்கள் கதையைக் கேட்ட பின்னர்.

“மாற்றுச் சாவிதான் ஸார். ஜியா ஸராயில் ஆறு ரூபாய் ரேட்டுக்குச் செய்து கொடுப்பார்கள்,” என்றேன்.

பேரா வீரா நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு, உரக்கச் சிரித்தார்.

“நம்பவே முடியவில்லை. இதைப் பற்றி நான் ஐஐடியில் கேள்விப்பட்ட தேயில்லை. என்ன ரயன், ஒரு தலைமைப் பேராவின் அலுவலகத்துக்குள் சென்று வினாத் தாளைத் திருடி, ‘ஏ’ வாங்கலாம் என்று நினைத்தாயா?”

“ஆமாம் ஸார்,” என்று பதவிக்காக, மரியாதையாகச் சொன்னான்.

“ஹரி, நீ நேஹாவிடமிருந்து சாவியைத் திருடினாய்? அவள் உன் கர்ள்ஃபிரெண்டு என்கிறாய். பிறகு அதைப் பயன்படுத்தி அவள் அப்பாவின் அலுவலகத்தில் இருந்து திருடப் பார்த்தாய்?”

“ஆமாம் ஸார்,” என்றேன்.

“அலோக், இவர்களின் அபத்தமான இந்தத் திட்டத்திற்கு நீயும் துணை போனாய்?”

“அவர்கள் என் நண்பர்கள், ஸார்,” என்றான் அலோக்.

இந்தப் பதில் என் மனதைத் தொட்டது. ஒரு நிமிடத்திற்கு என்னைச் சுற்றும் நரகம் எனக்கு மறந்துவிட்டது. அலோக்குக்கு நட்பு ஒரு நல்ல காரணமாகப்பட்டது, என்னை நெகிழ வைத்தது.

“நீங்கள் எல்லோரும் முட்டாள்கள். பெரிய முட்டாள்கள். அதுதான் நீங்கள்”, என்றார் பேரா வீரா. அவர் சொன்னது கொஞ்சம் மூர்க்கத்தனமாக இருந்தாலும் எங்களுக்குப் பிடித்திருந்தது. அவரைப் பிடிக்கும்; அவர் சொல்வது சரியாகவும் இருந்தது.

“ஸார், நாங்கள் எங்கள் வேலையில் வெற்றி கண்டிருப்போம். அலோக் அந்தத் தொலைபேசியைப் பயன்படுத்தியதால்” என்றான் ரயன்.

“முடிப்பீர்களா?” என்று பேரா வீரா குறுக்கிட்டார். “அது மட்டும்தான் உங்கள் கவலையா? நீங்கள் மாட்டிக் கொண்டதால் உங்களை முட்டாள் என்று சொல்கிறேன் என்று நினைத்தாயா?”பேரா வீராவின் குரல் உறுதி அடைந்தது. ஒரு வேளை கோபமாகிவிட்டாரோ?

“ரயன் ஓபராய்! நீ ! நீ தான் நான் பார்த்ததிலேயே மிகவும் புத்தி சாலியான மாணவன். ஒரு மாணவன் செய்த ப்ராஜெக்டில் அதிக சாமர்த்தியம் வாய்ந்தது உன் ல்யூப் ப்ராஜெக்ட். உன் மதிப்பெண்களின் மீது எனக்கு அக்கறை இல்லை. ஆனால் உன் மதிப்பெண் அட்டையில் கிடைக்கும் ஒரு எழுத்துக்காக உன் எதிர்காலத்தையே அபாயத்தில் தள்ளும் அளவுக்கு முட்டாள் தனமான வேலைகளில் ஈடுபட்டு விட்டாய்.”

ரயன் தலை குனித்தான்.

“நீங்கள் மூவரும் நெருங்கிய நண்பர்கள். ஆனால், ஒருவரும் மற்றவரின் பைத்தியக்காரத்தனத்தை நிறுத்த முயற்சிக்கவில்லை. செரியன் உங்களைச் சிறையில் அடைத்திருப்பார், தெரியுமா?”

“ஸார், நாங்கள் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறோம். அவர்கள் இரக்கம் காட்டுவார்களா?” என்றான் அலோக்.

“இரக்கமா? இது டிஸ்கோ. அன்னை தெரஸாவின் கருணை இல்லமா? செரியன் முகத்தைப் பார்த்தாயா?” என்றார் பேரா வீரா.

மூவரும் அமைதியானோம் பேரா வீராவின் அலுவலகக் கடிகாரம் ஓடும் சத்தம் காதில் விழுந்தது. மணி ஒன்பதரை.

“டிஸ்கோவில் உங்கள் வாதம் என்ன? குற்றத்தை ஒப்புக் கொள்ளப் போகிறீர்களா?, மறுக்கப் போகிறீர்களா?” என்று பேரா வீரா கேட்டார்.

“ஒப்புக் கொள்வோம். அதுதான் கையும் களவுமாகப் பிடிபட்டோமே, ஸார்,” என்றேன்.

“ஹ்ம்ம்ம். முதலில் அவர்கள் உங்களை வெளியேற்றாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்,” என்றார் பேரா வீரா.

“எங்களுக்கு ஒரு வாய்ப்பு இருக்கா?” என்றான் அலோக்.

“அதிகம் இல்லை. ஆனால் செரியன் அதிலேயே குறியாக இல்லாமல் இருந்தால் தப்பித்தீர்கள். சாவியைப் பற்றி என்ன சொல்லப் போகிறீர்கள்?” என்றார் பேரா வீரா.

“நேஹாவை இதில் இழுக்க விருப்பம் இல்லை. நாங்கள் நிறைய சாவிகளைச் சேகரித்தோம்; போட்டுப் பார்த்ததில் இது பொருந்தியது என்று சொல்வோம்,” என்றேன்.

“ஏன் உண்மையைச் சொல்லக்கூடாது? என்னிடம் தான் எல்லாவற்றையும் சொன்னீர்களே?” என்றார் பேரா வீரா.

“நேஹாவுக்குத் தெரிய வேண்டாம் என்று பார்க்கிறேன்,” என்றேன்.

“இதைத் கேளுங்க பசங்களா, நான் உங்களுக்கு உதவி செய்யத்தான் பார்க்கிறேன். நீங்கள் பெரிய ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் இதை லேசாகத் திருப்பினால், உங்கள் பிரச்சனையிலிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.”

“எப்படி?”

“ஒன்று, தண்டனைக்கான வாய்ப்புகள் ஒன்றுக்கு மேல் இருக்கு என்று அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். நானும் அங்கே இருப்பேன். நான் அந்தப் பாடத்தில் ‘எஃப்பும், ’பகிரங்க மன்னிப்பும், சமுதாயச் சேவைக்கு நூறு மணி நேரமும் பரிந்துரை செய்கிறேன்.”

“சமூக சேவை என்னது?” ரயன் கேட்டான்.

“காம்பஸில் உதவியாக இருப்பது - சைக்கிள் நிறுத்தும் இடத்திற்கு வெள்ளை அடிப்பது, செடி நடுவது - இது போன்ற வேலைகள்,” என்றார் பேரா வீரா.

“எனக்கு அதெல்லாம் பிடிக்காது,” என்றான் ரயன்.

“வாயை மூடு ரயன். இது நல்லா இருக்கு ஸார், மேலே சொல்லுங்க,” என்றேன்.

“இரண்டாவது, இந்தக் கதையைக் கொஞ்சம் திரிச்சு மரிச்சு சொல்லுங்க. எனக்குப் பொய் சொல்வது பிடிக்காது. ஆனால் உங்களுக்கு வேறு வழியில்லை. நிறைய சாவிகளை முயற்சி செய்து பார்த்தோம் என்று சொல்வதை விட, நேஹா தான் சாவியை உன்னிடம் கொடுத்தாள் என்று சொல்,” என்றார் பேரா வீரா.

“என்ன?” என்று மூவரும் ஒன்றாகச் சேர்ந்து கேட்டோம்.

“இதைக் கேளு; உனக்கு நேஹாவைத் தெரியும். அவள் தன் அப்பாவின் மீதிருந்த கோபத்தில் உனக்குச் சாவியைக் கொடுத்தாள். பழி வாங்குவதற்காக அவள் செய்தது என்று சொன்னால் இது

அந்தரங்கமாகிவிடும். டிஸ்கோவில் நீங்கள் கதவை உடைக்கவில்லை என்றும் நினைக்கலாம். அதன்மூலம் ஏதாவது சரியான தகவல் கிடைக்குமா என்றும் நினைக்கலாம். ஆனாலும் நீங்கள் இதை முயன்று பார்க்க வேண்டும் என்று தோன்றுகிறது."

"நேஹா இதைப் பற்றி கேள்விப் பட்டால் என்ன நினைப்பாள்?" என்றேன். "இல்லை; இப்படிச் செய்ய முடியாது."

"வருத்தப்படும் கர்ள்ஃபிரெண்டைச் சமாளிப்பது எளிது. கறை படிந்த பட்டம் வாங்குவது கடினம். பிறகு காலேஜ் முடிந்து ஒரு வேலையும் கிடைக்காது," என்றார் பேரா வீரா.

"பேரா வீரா சொல்வது தான் சரி, ஹரி," என்றான் ரயன்.

"செரியனின் குடும்பத்தை இதில் இழுத்தால் அவர் பின் வாங்க வேண்டி வரும். நீ தான் அவர் பெண்ணின் பாய்ஃபிரெண்டு என்று யாரும் தெரிந்து கொள்வதை அவர் விரும்பமாட்டார்."

"ஆனால், இப்படிச் சொன்னால் உலகுக்கே தெரிந்துவிடுமே," என்றேன்.

"நீ மொத்த கதையும் சொல்ல வேண்டாம். நேஹா அண்மையில் உன் தோழியாகிவிட்டாள். செரியன் அதை மறுக்க மாட்டார்," என்றான் அலோக்.

"அலோக் நீயும் இதுதான் வழி என்று நினைக்கிறாயா?" என்றேன்.

"ஆமாம்; நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயம். இது நம் கடைசி துருப்புச் சீட்டு. நம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் யுக்தி," என்றான் அலோக்.

இந்தக் கதையை என் மனம் ஏற்கவில்லை. நான் சொல்வதைக் கேட்டு நேஹா என்ன நினைப்பாள்? எனக்கு அவள் தான் சாவி கொடுத்து உதவினாள் என்று சொன்னால்? என்னை வாழ்நாள் முழுவதும் வெறுப்பாள். மணி பத்தடித்தது. நாங்கள் டிஸ்கோ அறைக்குச் செல்ல வேண்டிய நேரம்.

வாழ்க்கைக்கு முன் காதல் இரண்டாம் பட்சமானது.

# 20

## என் வாழ்நாளின் நீண்ட நாள்-V

ஐஐடி டிஸ்கோக்கும், நடனமாடும் டிஸ்கோக்கும் சம்பந்தம் இல்லை. இங்கு வெளிச்சம் மங்கலாக இருந்தது.

அறையில் மயான அமைதி. அனைவரும் வயதானவர்கள். அரை வட்ட மேசையைச் சுற்றி பத்து பேராக்கள் உட்கார்ந்திருந்தனர். குற்றம் சாட்டப்பட்ட மாணவர்கள் நடுவில் நிறுத்தப்பட்டனர். பேராக்கள் அனைத்து திசைகளிலிருந்தும் கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். நாங்கள் நின்றிருந்தது நடுவில் என்பதால் எல்லோரும் எங்களுக்கு வெகு அருகில் இருந்தது போன்ற தோற்றம் இது. ஒரு நீதிமன்ற அமைப்பைப் போல் தான் இருந்தது - ஆனால் இண்டெம் நீதிமன்றம்.

டீன் சாஸ்திரி எங்கள் இடத்தில் எங்களை நிற்கச் சொன்னார். டீன் ஸாஸ்திரி, டைரக்டர் வர்மா மற்றும் பேரா செரியன் தலைமை வகித்தார்கள். பேரா வீராவுடன் சேர்ந்து ஏழு பேராக்கள் அவ்வளவாக ஆளுமை செலுத்த முடியாத நிலைமையில் அமர்த்தப்பட்டனர். நிறைய பேர் கொட்டாவி விட்டார்கள். இந்தச் சமயத்தில் படுக்கையில் உறங்குபவர்களைப் பிடித்து உட்கார்த்தி வைத்திருந்தனர். ஆனால், மாணவர்களுக்கு அவர்கள் கொடுத்த வீட்டுப்பாடங்களின் பளுவில் அவர்களுக்கு இரவு அப்பொழுது தான் தொடங்கியிருக்கும்.

“டிஸ்கோ தொடங்கலாம், நண்பர்களே,” என்றார் டீன் சாஸ்திரி. மரியாதைக்குக் கூட நேரத்தை வீணடிக்காமல் நேரே விஷயத்தில் இறங்கினார்.

“நீங்கள் ஆரம்பிக்கலாம்,” என்று டைரக்டர் வர்மாவும், பேரா செரியனும் சொன்னார்கள். இதைச் சொல்வதில் அவர்களுக்குக் கூடுதல் ஆளுமை கிடைத்த திருப்தி.

இன்று எனக்குப் பேச முடியாமல் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டால் என்னவாகும்? இந்த எண்ணத்தினால் என் உடல் வேர்க்கத் தொடங்கியது. அனைத்துப் பேராக்களும் டிஸ்கோ கோப்புகளைத் திறந்தனர். நேற்று இரவு நடந்த கூத்து அதில் பிட்டுப்பிட்டு வைக்கப்பட்டிருந்தது.

ரயன் என் கலக்கத்தைப் புரிந்து கொண்டான். நம்மை நன்கு அறிந்தவர்கள் நம் உணர்வுகளை எப்படித் தான் சரியாகப் புரிந்து கொள்கிறார்கள் என்று ஆச்சரியப்பட்டேன். “ஹரி”, என்று ரகசியக் குரலில் கிசுகிசுத்தான்.

நான் அவனைப் பார்த்தேன்.

“நீ எதைப் பற்றிக் கவலைப்படுகிறாய் என்று எனக்குத் தெரியும் இது வைவா இல்லை என்பதை நினைவில்கொள். நீ உன் வாயைத் திறக்காவிட்டால் ஜீரோவுக்கும் அடியில் தள்ளப் படுவாய்; ஜாக்கிரதை, புரிகிறதா?”

“உம், ஆமாம்,” என்றேன்.

“மேலும், இதை உன்னிடம் சொல்ல அவ்வளவாக இஷ்டப்படவில்லை. ஆனாலும் ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும்; நீ ஒரு துணிச்சல்காரன் (Stud)”, என்றான் ரயன்

“ஏன்?”

“ஏன் என்றால் உன் எதிர்காலத்தைத் தன் கைப்பிடியில் வைத்திருக்கும் மனிதனுக்கு முன் நிற்கிறோம். ஆனாலும் ஒரு விஷயத்தை மாற்ற முடியாது.”

“என்னது?”

“நீ அவரின் ஒரே மகளுடன் பட்டப்பகலில் உல்லாசமாக ஸெக்ஸ் வைத்துக் கொண்டாய். அது ஒரு துணிச்சல்காரனால் “ஸ்டட்டால்” தான் செய்ய முடியும் நண்பா,” என்றான் ரயன்.

“நீ அப்படி நினைக்கிறாயா?” நான் உற்சாகமானேன்.

“அப்படித் தான் கண்டிப்பாக நினைக்கிறேன். உன்னை மதித்து வணங்கலாம். உன்னைப் போன்ற நண்பன் கிடைத்தது பெருமையாக இருக்கு,” என்றான் ரயன்.

எனக்குப் பெருமையும் குதூகலமும் பொங்கி வழிந்தது.

“மாணவர்களுக்குள்ளே பேசக் கூடாது,” என்றார் டீன் சாஸ்திரி. கோப்பிலிருந்து தலையை நிமிர்த்தினார்.

“மன்னிக்கவும் ஸார்,” என்றேன். நானும் ரயனும் எங்கள் கட்டை விரலை உயர்த்தி சமிக்ஞை செய்து கொண்டோம். அடச் சே! இந்தக் கும்பலை என்னால் எப்பொழுது வேண்டுமானாலும் சமாளிக்க முடியும்.

“மிஸ்டர் ஹரி குமார், இந்தக் கோப்புகளில் கண்ட தகவல்படி நீ உன் இரு நண்பர்களுடன் பேரா செரியனின் அலுவலகத்தில் நேற்று இரவு பிடிபட்டாய். சரியா?” என்றார் டீன் சாஸ்திரி.

“ஆமாம் ஸார்”, என்றேன்.

“ரயன் ஓபராய்? நாங்கள் கேள்விப்பட்ட வரையில் கையில் மெழுகுவர்த்தி, அரக்கு முத்திரை, மற்றும் மேஜர் வினாத்தாள் பாக்கெட்டுடன் பாதுகாவலர்கள் உங்களைக் கைப்பற்றினர். சரியா?”

“ஆமாம் ஸார்,” என்று ரயன் ஒப்புக் கொண்டான்.

“அலோக் குப்தா, நீதானே பேரா செரியனின் தொலைபேசியை நேற்று இரவு உபயோகித்தாய்?”

அலோக் தலையாட்டினான்.

“நீங்கள் செய்தவற்றின் தீவிரம் உங்களுக்குப் புரிகிறதா?” என்றார் டைரக்டர்.

“புரியது ஸார். ஏதோ ஒரு வேகத்தில் தவறு செய்து விட்டோம்”, என்றேன். அட! எனக்கே ஆச்சரியமாக இருக்கு? எப்படி கேள்விகளுக்கு நானாகவே பதிலளிக்க முன்வந்தேன்?

மற்றக் கேள்விகள், பதில் அவசியமற்றவை, எங்களுக்கு நற்குணம் போதிப்பவை. இப்பொழுது எனக்கு அவை ஞாபகத்தில் கூட இல்லை. நல்ல குணம், பழக்க வழக்கம், ஒழுக்கம், போன்றவை. நாங்கள் ஒரு லட்சம் முறை மன்னிப்புக் கேட்டிருப்போம். கடைசியாக நாங்கள் எதிர்பார்த்த கேள்வியைக் கேட்டார்கள்.

“எப்படி என் அலுவலகத்தில் நுழைந்தீர்கள்?” என்றார் பேரா செரியன்.

“எங்களிடம் சாவி இருந்தது ஸார்,” என்றான் ரயன்.

“எப்படிச் சாவி கிடைத்தது?” அவர் திகைப்பின் உச்சியில் இருந்தார்.

“ஸார், வந்து, நாங்க” என்று ஆரம்பித்து மௌனமானேன். இதை என்னால் செய்ய முடியாது.

“ஹரியின் தோழி நேஹா தான் எங்களிடம் கொடுத்தாள்,” என்று ரயன் பதிலளித்தான்.

“நேஹா யாரு?” என்றார் டீன் சாஸ்திரி.

“நேஹா செரியன், பேரா செரியரனின் மகள். கடந்த மூன்று மாதங்களாக எனக்கு அவளைத் தெரியும்,” என்றேன்.

அறையே அமைதியானது. டைரக்டர் வர்மாவும் டீன் சாஸ்திரியும் வாய் பிளந்தனர். பேரா செரியன் பக்கம் திரும்பினர். அவர் தான் அடுத்து சுடப்படுவாரோ, என்ற அக்கறையில் பார்த்தனர். ஆனால் டிஸ்கோவில் அப்படி எல்லாம் நடக்காதே!

“என்னது? நீ என்ன பேசுகிறாய் என்று தெரிந்து தான் பேசுகிறாயா?” என்றார் டீன் சாஸ்திரி.

“தெரிந்து தான் ஸார் பேசுகிறேன். அவள் அப்பாவின் மீதான கடுப்பில் அவரைப் பழிவாங்க அப்படிச் செய்தாள். அவள் சாவியைக் கொடுத்தாள்; நாங்களும் யோசிக்காமல் நடந்து கொண்டோம்,” என்றேன்.

அதற்குப் பிறகு அதிகக்கேள்விகள் கேட்கப்படவில்லை. ஆனாலும் ஒவ்வொரு பேராவுக்கும் இதைப் பற்றி தன் பக்கத்திலிருந்தவரிடம் வம்பு கேட்க வேண்டும் என்ற ஆவல் அதிகரித்தது. தூங்கி வழிந்த அந்த ஏழு பேராக்கள் கூட பரபரப்பானார்கள்; இது கையும் களவுமாகப் பிடிபட்ட கேஸைவிட ஸ்வாரஸ்யமாகப்பட்டது.

செரியன் டீன் சாஸ்திரியின் காதில் கிசுகிசுத்தார். பிறகு டைரக்டர் வர்மா காதோடும் பேசினார். டீன் சாஸ்திரி தலையாட்டிவிட்டு ஒரு அறிவிப்பைச் செய்தார்.

“மாணவர்களை விசாரணை செய்வது முடிந்தது; இனி இந்தக்குழு பேசி தீர்மானம் செய்ய வேண்டும்.

பிறகு முடிவெடுக்க வேண்டும். இது கொஞ்சம் நேரம் பிடிக்கும். இரண்டு மணி நேரம் கூட ஆகலாம். ஆனால் முடித்தபின் கடைசி முடிவைச் சொல்கிறோம். அதற்குப்பின் முறையீடு, கெஞ்சல் எதற்கும் வாய்ப்பில்லை. இப்பொழுது மாணவர்கள் வெளியேறலாம்.”

டீன் சாஸ்திரி எங்களைப் போகும்படி கை காட்டினார். நாங்கள் டிஸ்கோ அறையைவிட்டு காம்பஸ் புல்தரைக்கு வந்தோம்.

“எப்படிப் போச்சு?” என்றான் அலோக்.

தெரியவில்லை என்ற பாவனையில் தோள் குலுக்கினேன். நேஹாவைப் பற்றிய நினைவு என் வயிற்றைக் கலக்கியது.

“யாருக்குத் தெரியும்? இங்கேயே அருகில் காத்திருக்கலாம்”, என்ற ரயன் நள்ளிரவில் ஈரமாக இருந்த தரையில் அமர்ந்தான்.

“நிறைய நேரம் கூட ஆகலாம்”, என்றேன்.

“வேறு என்ன இருக்கு செய்வதற்கு? இங்கே அருகில் இருக்க வேண்டாம். இன்ஸ்டி கூரைக்குப் போகலாம்”, என்றான் அலோக்

இன்ஸ்டி கூரை யோசனை எனக்குப் பிடித்திருந்தது. இப்போதைக்கு அந்த இடம் ஒரு பாதுகாப்பான உணர்வைக் கொடுத்தது. குமாவோன்னில் லட்சக்கணக்கான கண்கள் எங்கள் மீது தான் இருக்கும், இப்பொழுது அங்கு சென்றால்.

“அவர்கள் முடித்து விட்டார்கள் என்று எப்படித் தெரிந்து கொள்வது?” என்றான் ரயன்.

“கீழே பார்த்துக் கொண்டிருக்கலாம். இங்குள்ள விளக்குகள் தெரியும். அவர்கள் வெளியே வந்தால் விளக்கொளியில் தெரிந்துவிடும்.”

“சரி, மேலே போகலாம்”, என்றான் ரயன்.

இன்ஸ்டி கூரையில் அமர்ந்தோம். ஐந்தடி ஒருவருக்கொருவர் இடைவெளி விட்டு உட்கார்ந்தோம். ஒரு முக்கோணத்தின் மூன்று புள்ளிகள் போலிருந்தோம். சூரிய ஒளியை வாங்கிக் கொண்டு ஒளி பரப்பியதற்கு மரியாதையாக இல்லாமல் பளீரென்று கர்வமாக ஒளி வீசியது நிலா. அன்று கூரையில் நாங்கள் வித்தியாசமாக உணர்ந்தோம். நேஹாவை இதில் இழுத்ததற்காக தொந்து கொண்டேன். என் மீதே வெறுப்பாக இருந்தது. ஏமாற்றியது தான் கஷ்டமாக இருந்தது. மற்றவற்றுக்கும் தான் - மாற்றுச் சாவி செய்ய ஒப்புக் கொண்டது, ஆபரேஷன் பெண்டுலத்துக்குத் துணை போனது. (என் வாழ்நாள் முழுவதும் பள்ளியில் முதல் மாணவன் அதனால் தானே ஐஐடிக்குள் வர முடிந்தது; அப்படித் தானே? இப்பொழுது ஏன் அடிமட்ட நிலையில் இருக்கிறேன்; ஐந்து புள்ளி சொச்சம், ஏமாற்றுக்காரன், நள்ளிரவில் இன்ஸ்டி கூரையில் நிலையில்லா எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்து கொண்டு?)

எப்படி நம் மனம் இவ்வளவு கேள்விகளை எழுப்புகிறது என்று சிரிப்பாக இருக்கிறது; அடச்சே! இந்த கேள்விகளுக்காக பதில்களைக் கண்டுப்பிடிப்பதும் இந்த மனத்தின் பொறுப்பு தானே? அதனால் தன் சந்தேகங்களைத் தன்னோடு வைத்துக் கொள்வது தானே? நான் குழப்பத்தில் இருக்கிறேன்; புரியாமல் உளறுகிறேன். இரண்டு இரவுகள் சேர்ந்தால் போல் தூக்கமில்லை. அதனால் நிறுத்தாமல் மனம் சஞ்சலம் அடைந்தது.

என் நண்பர்களைப் பார்தேன் (நண்பர்களா) அப்படி என்றால் என்ன? யார் இந்த அலோக்? அவனின் அப்பா பாதி இறந்து விட்டார்; அவனின் திருமணமாகாத அக்கா, பண கஷ்டம்-எனக்கு என்ன வந்தது? பிறகு ரயனைப் பார்த்தேன். ஆமாம், ஸ்டைலான, சாமர்த்தியம் வாய்ந்த தன்னம்பிக்கை கொண்ட ரயன் தன்னைப் பற்றி எப்பொழுதுமே ஒரு நிச்சயம் உடையவன். இந்த உலகையே எதிர்க்க முடியும் செரியனைப் பழி தீர்த்துக் கொள்கிறான். (இதனால் என்ன பயன்?) அவனின் அனைத்துத் திட்டங்களும் அவ்வளவு சாமர்த்தியமானவை இல்லையோ? நான் ஏன் அவன் பேச்சைக் கேட்கிறேன்? ஏன் அலோக் சொல்வதைக் கேட்பதில்லை? இப்பொழுது ஏன் எல்லோரும் பேசாமல் இருக்கிறோம்?

ரயனின் ஸ்விஸ் கடிகாரத்தில் என்ன மணி என்று குனிந்து நோக்கினேன். காலை மூன்று மணி.

“டீ?” என்றான் ரயன், கைகளைத் தடவிக் கொண்டு.

“வேண்டாம், ஏற்கனவே தூக்கம் வராமல் விழித்துக் கொண்டிருக்கேன்”, என்றேன்.

“எனக்கும் வேண்டாம்”, என்றான் அலோக்.

டீ, இது தான் ரயனால் யோசிக்கக் கூடியது இந்தச் சமயத்தில்? எங்கள் வாழ்வில் எங்களுக்கு முக்கியமானவற்றை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு, இப்பொழுது யாருக்கு வேண்டும் டீ, காபி?

“இங்கே குளிராக இல்லை?” என்றான் ரயன். நான் ‘ஆம்’ என்றேன். ஆமாம் ரயன், இங்கே சகிக்க முடியாத குளிர், அதாவது டெல்லி குளிர்கால இரவு; என்று சொல்ல வேண்டும் போலிருந்தது. ஆனால் என்னால் குளிரை உணர முடியவில்லை. அதைவிட சகிக்க முடியாத கேவலங்கள் நம்மைச் சுற்றி நடந்து கொண்டிருக்கின்றன. இன்னும் சற்று நேரத்தில் நம்மை ஐஐடியிலிருந்தே கூட வெளியேற்றிவிடலாம். பிறகு மரியாதையோ கல்வியோ, வேலையோ இந்த ஜன்மத்தில் கிடைக்காமல் போகலாம். இதற்கு பதில் வேறொன்றைச் சொன்னேன்”, “ஆமாம்; ஐந்து டிகிரி” என்றேன்.

அரை மணி ஓடியது. ரயன் எழுந்து நின்றான். கூரையின் ஓரத்திற்குச் சென்றான். ஒன்பது மாடி உயரம். இது இன்ஸ்டியில் உயரமான இடம். இருந்தும் ஒரு கைப்பிடிச் சுவர் கூட கிடையாது. ஏன் என்றால் கூரை மீது ஏறுவதற்கு தடை. இன்னும் ஒரு அடி எடுத்து வைத்தால் ரயன் தன் கடைசி மணித் துளிகளைக் காற்றில் மிதந்து களிக்கலாம். மிகவும் ஒரத்தில் நின்று குனிந்து கீழே பார்த்தான். ஒரு காலை வெளியே நீட்டினான்.

“என்ன பண்ணறே?” என்றான் அலோக்.

ஆமாம்; ரயன் என்னதான் செய்கிறான்? என்று நினைத்தேன். இதுவரை நாங்கள் வாழ்வின் விளிம்பில் செலவழித்தது போதாதா? ஏற்கனவே வாழ்க்கை சீரழிந்தது போதாதா? டிஸ்கோ முடிவுக்காக அமைதியாகக் காத்திருக்க முடியாதா? இது என்ன கவனத்தை ஈர்க்கும் நடத்தை? ஐயோ! போதுமே!

“உள்ளே வா, ரயன்”, என்று கத்தினேன்.

என்னைத் திரும்பிப் பார்த்தான். “இங்கே ரொம்ப உயரம்.” மெதுவாகப் பின்னே நகர்ந்தான்; நாங்கள் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்தான்.

ஆமாம்; உயரம் தான். ஆமாம் குளிர்தான். இன்னும் வேறு ஏதாவது அர்த்தம் வாய்ந்த வரிகள் உண்டா ஸார்? என்று யோசித்தேன்.

ஆண்களிடம் உள்ள குறை என்ன என்றால், இது போன்ற சிக்கலான சமயங்களில் உணர்வுகளைப் பங்கு போடத் தெரியாது. அதை வெளிப்படுத்தத் தெரியாது. அலோக்கிடமும், என்னிடமும் வார்த்தைகளே இல்லை. ரயன் என்னடா வென்றால் குளிர், உயரம் என்று பிதற்றிக் கொண்டிருக்கிறான். நேஹாவிடமிருந்து எவ்வளவு வேறுபட்டிருக்கான்? அவளுக்கு எந்த சந்தர்ப்பமானாலும், சூழ்நிலையானாலும் ஏதோ ஒரு சரியான வார்த்தை கிடைத்து விடும். ஆனால் இதற்குப்பிறகு நேஹாவை மறந்து விட வேண்டியது தான். அதுவும் அலோக் சொன்னது போல் என் வாழ்க்கையின் கடைசி துருப்புச் சீட்டாக அவளை உபயோகப்படுத்திக் கொண்டேன்; அந்த டிஸ்கோ நேர் காணலில் அவள் தான் எங்களின் யுக்தி! இனி நேஹா கிடையாது. என் வயிறு கலங்கி இந்த உண்மையைத் தெரிவித்தது. என் நெருங்கிய நண்பர்கள் இருவருடன் அமர்ந்திருக்கேன்; நான் இரண்டு வருடங்கள் உழைத்துக் கஷ்டப்பட்டு நுழைந்து, மூன்று வருடங்கள் பாடுபட்ட காலேஜிலிருந்து துரத்தப் போகிறான் ஒருவன். மற்றவன் என் காதல் வாழ்க்கையை வேரோடு அழித்துவிட்டான்.

“டிஸ்கோ கொஞ்சமாவது இரக்கப்படுவார்களா?” என்றான் அலோக்.

“அது கட்டுப்பாட்டுக் குழு. ஜோக் இல்லை; டிஸ்கோ யாரையும் விடாது”, என்றேன்.

டிஸ்கோ! என்ன பெயர் இந்த இரவிலும், இந்தச் சமயத்திலும் இந்தப் பெயரைக் கேட்டால் எனக்குச் சிரிப்பு தான் வருகிறது.

ரயன் எங்கள் இருவரையும் நிமிர்ந்து பார்த்தான், “இது ஒரு தவறான திட்டம்”, என்றான்.

நன்றி ரயன். குளிர், உயரம், அடுத்து ஆபரேஷன் பெண்டுலம் ஒரு முட்டாள் தனமான திட்டம் பரவாயில்லையே இப்படி அனைவரும் உணர்ந்தவற்றைச் சொல்லிக் கொண்டே வா, ரயன்!

நான்கரை மணிக்குக் கீழே சத்தம் கேட்டது சில ஸ்கூட்டர்கள் நகர்ந்தன. சோர்வடைந்த பேராக்கள் வீட்டை நோக்கிப் பயணித்தனர். இது தான் எங்களுக்கான சமிக்ஞை. முடிவுகள் வெளி வந்து விட்டன.

“வாங்கடா, கீழே ஓடலாம்”, என்றேன்.

“ஆமாம் போகலாம். பேரா வீரா அங்கே காத்திருப்பார்”, என்றான் ரயன்.

“நான் இங்கேயே இருக்கேன். திரும்ப வந்து என்ன நடந்தது என்று என்னிடம் சொல்லுங்கள்”, என்றான் அலோக்.

“கீழே வாடா, குண்டா”, என்றான் ரயன்.

“இல்லை; அவர்கள் விஷயத்தைச் சொல்லும் பொழுது என்னால் அந்தப் பேராக்களின் முகங்களைப்

பார்க்க முடியாது”, என்றான்.

“சரி என்னவோ செய்; வா ஹரி”, என்றான் ரயன்.

நாங்கள் மாடிப்படிகளிலே ஓடினோம். பெரும்பான்மையான பேராக்கள் கிளம்பிவிட்டனர். டீன் சாஸ்திரி, செரியன், மற்றும் வீரா இருந்தனர்.

“பேரா வீரா ஸார்”, என்று அவரைப் பின்னாலிருந்து அணுகினான் ரயன்.

“ரயன், ஒரு நிமிடம்”, என்றார் பேரா வீரா.

பேரா வீரா செரியனிடமும், டீன் சாஸ்திரியிடமும் நின்று. சில நிமிடங்கள் பேசினார். சீக்கிரத்தில் எல்லோரும் குட் நைட் என்றாரகள். செரியன் தன் காருக்குள் சென்றார்; அதே கார், இத்தனை நிகழ்வுகளுக்கும் காரணமாய் இருந்த கார்.

“ஸார்?” என்றேன்.

“ரயன் மற்றும் ஹரி, நீங்கள் வெளியேற்றப்படவில்லை”, என்றார் பேரா வீரா.

“அப்படியா, ஸார்! என்ன முடிவு?” என்றேன்.

“நாங்கள் பல மணி நேரம் விவாதித்தோம். ஒட்டு மொத்த முடிவு கிடைக்கவில்லை. கடைசியாக டிஸ்கோ தீர்மானித்த விஷயம்-நீங்கள் மூவரும் ஒரு செமஸ்டருக்கு சஸ்பெண்ட் செய்யப்படுவீர்கள்.”

“ஸார்?” என்றேன்.

“நான் முயற்சி செய்தேன் பசங்களா. ஆனாலும் டிஸ்கோவைச்சரிக் கட்டுவது எளிதல்ல. நீங்கள் ஒரு செமஸ்டரை இழப்பீர்கள். உங்களுக்கு நான்காம் வருடம் பாடத்தை முடிக்க, ஒரே ஒரு ஸெமஸ்டர் அவகாசம் தான் இருக்கும். மேலும் இண்டெம்மில் “எஃப்” தான் கிடைக்கும். அதைத் திரும்பவும் படிக்க வேண்டும். கடைசி வருடப் பிராஜெக்ட். இப்போதைக்கு இன்ஸ்டி விதிப்படி இவ்வளவு பளுவை ஒரு மாணவன் சுமக்க முடியாது”, என்றார் பேரா வீரா.

“அதனால் நாங்கள் அடுத்த வருடமும் பாடங்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமா? நாங்கள் வேலையின் நேர் காணலில் பங்கு கொள்ள முடியாதா?” என்றேன்.

“அப்படித்தான் என்று அஞ்சுகிறேன். நான் பேரா செரியனிடம் பேசிப் பார்த்தேன். இந்த சஸ்பெண்ட் செய்யப்பட்ட ஸெமஸ்டரில் ஏதாவது பிராஜெக்ட் செய்ய அனுமதிப்பார்களா, என்று? அவர் முடியாது என்று சொல்லி விட்டார். சஸ்பென்ஷன் என்றால் முழு சஸ்பென்ஷன் என்கிறார்.”

“எல்லாம் முடிந்து விட்டது. எங்கள் மதிப்பெண் அட்டை மோசம் போயிற்று. வேலை கிடைக்காது. இன்னும் ஒரு வருடம் காத்திருந்து இந்தப் பயனற்ற பட்டத்தை வாங்க வேண்டும்”, என்றேன்.

ரயன் மௌனமாய் இருந்தான்.

“இப்படியாகும் என்று எதிர்பார்க்கவில்லை”, என்றார் பேரா வீரா. எங்கள் தோள்களைத் தட்டிக் கொடுத்தார். எங்களைத் தாண்டிச் சென்று அவரின் ஸ்கூட்டரை அடைந்தார். சில நொடிகள், புகையினூடே அவர் சென்றுவிட்டார்.

நாங்கள் இன்ஸ்டி கூரைக்குச் சென்றோம். அலோக் குவிந்த கைகளுடன் எங்களுக்காகக் காத்திருந்தான்.

“என்ன?” என்றான் அலோக், மயக்கத்திலிருந்து வெளி வந்தாற் போல்.

“பேரா வீரா முயற்சித்தார். வெளியேற்றத்தை நிறுத்தி விட்டார். ஆனாலும் மோசமான நிலைமை தான்; என்ன செய்வோம் என்று தெரியாது”, என்றேன்.

நாங்கள் மறுபடியும் உட்கார்ந்தோம். காலை ஐந்து மணி. ஒரு மணி நேரம் தான் இருக்கிறது விடிவதற்கு.

அலோக் எதுவும் சொல்லாமல் எழுந்தான். அவன் முகம் இறுகியிருந்தது. அவன் ஏதாவது பேசினால் தேவலை என்று தோன்றியது. ரயன் ஒரு மணி நேரம் முன் நின்ற விளிம்பிற்குச் சென்றான்.

“நீ சொன்னது சரி தான் ரயன். இங்கே மிகவும் உயரம் தான்”, என்றான் அலோக்.

“என்ன அலோக்? ஒரு மாதிரி இருக்கே?” என்றான் ரயன்.

“ஆமாண்டா! நீ மட்டும் தான் கூரையின் விளிம்பில் நிற்க முடியுமா?” என்றான் அலோக்.

“இல்லை. பின்னாடி வா. கீழே போகலாம். எனக்கு இங்கே இருந்தது போதும்”, என்றான் ரயன்.

அலோக் கீழேயே பார்த்துக் கொண்டு பதிலளித்தான்: “ஒரே ஒரு தடவை நான் உன்னுடன் ஒத்துப் போகிறேன் ரயன். எனக்கும் போதும். நான் அப்படியே கீழே போகிறேன்.”

அலோக்கின் குரலில் ஏதோ ஒரு கலக்கம் தெரிந்தது. நான் அவனைப் பார்ப்பதற்காகத் திரும்பினேன். அவன் நேராக நின்றான். பிறகு ஒரே குதி-நேரே கீழே குதித்து விட்டான். ஒரு அரை நொடியில் எங்கள் கண் பார்வையிலிருந்து மறைந்து விட்டான்.

புவியீர்ப்பு அதன் வேலையைச் சரியாகச் செய்தது.

*Downloaded from Ebookz.in*

# 21

## என் வாழ்நாளின் நீண்டநாள்-VI

நான் ஆம்புலன்ஸுக்குள் சென்றதே இல்லை. உள்ளே பயமாக இருந்தது. ஒரு ஆஸ்பத்திரியே நகர்ந்து உள்ளே வந்து விட்டது போல் அச்சுறுத்தியது. சாதனங்கள், கதீட்டர், ட்ரிப்ஸ், மருந்து டப்பா மற்றும் இரண்டு கட்டில் போல் தெரிந்தது. எனக்கும் ரயனுக்கம் நிற்கக் கூட இடம் இல்லை. அலோக்கைக் கிடத்தினார்கள். பதின்மூன்று எலும்பு முறிவுகள் இருந்ததால் கண்டிப்பாகப் படுத்தக் கொள்ள இடம் வேண்டும். முதலில் ஷீட்டுகள் எல்லாம் வெள்ளையாகத் தான் இருந்திருக்க வேண்டும். இப்பொழுது சொல்ல முடியாது நிச்சயமாக. ஏன் என்றால் ஒவ்வொரு அங்குலமும் அலோக்கின் ரத்தத்தால் தோய்ந்திருந்தது. அலோக் அடையாளமே தெரியாமல் கிடந்தான். அவன் கண் விழிகள் மேலே குத்திட்டு நின்றன. பல்லில்லாத கிழவனின் வாயிலிருந்து மடங்கி வெளியே தொங்கிய நாக்கு போல் அனிச்சையாகத் தொங்கியது. நான்கு முன் பற்கள் உடைந்துவிட்டன என்று டாக்டர் பிறகு சொன்னார்.

அவன் கை கால்கள் அசைவற்றுக் கிடந்தன. அவனின் அப்பாவின் வலது பக்கம் போல் அசைவற்றுப் போயின. அவனின் வலது முட்டி வளைந்திருந்ததைப் பார்த்தால் அலோக்கிற்கு எலும்பே இல்லையோ என்று தோன்ற வைத்தது. அவன் அசையாமல் படுத்திருந்தான்; என்னிடம் பணம் இல்லை, இருந்திருந்தால் அவன் இறந்துவிட்டான் என்றே பந்தயம் கட்டியிருப்பேன்.

“அலோக் இதிலிருந்து பிழைத்த எழுந்தால் நான் இதைப் பற்றி ஒரு புத்தகம் எழுதுவேன்; எங்களின் அபத்தமான நாட்களைப் பற்றி. நிச்சயம் எழுதுவேன்”, என்று உறுதி எடுத்துக் கொண்டேன். இதைப் போன்ற மடத்தனமான சத்தியம் நமக்கு நாமே செய்து கொள்வது தான். தலைக்குள் மூளை கலங்கிப் போய் ஒரு ஐம்பது மணி நேரம் தூங்காமல் இருந்தால்…

ஆம்புலன்ஸ் எங்களை ஏஐஐஎம்எஸ் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றது. டெல்லியிலேயே பெரிய ஆஸ்பத்திரி. ரத்தம், இரண்டு நாள் தூக்கமின்மை என்று எல்லாமாகச் சேர்ந்து என்னை மரத்துப் போக வைத்தது. யார் ஆம்புலன்ஸைக் கூப்பிட்டது என்று எனக்குத் தெரியாது. யார் இந்த ஆஸ்பத்திரியைத் தேர்ந்தெடுத்தது? பாதுகாவலனோ? என்னைச் சுற்றியிருந்த அனைவரும் துரித கதியில் வேலை செய்தனர்.

ஏஐஐஎம்எஸ்ஸில் அவசர சிகிச்சைப் பிரிவில் இன்னும் நிறைய மருத்துவ நிபுணர்கள் சூழ்ந்தனர். இது அரசாங்க ஆஸ்பத்திரி என்பதால் நிறைய பேர் சூழ்ந்து கொண்டனர். ஆனால் சிகிச்சையை ஆரம்பிக்கவில்லை. ரயன் சிலரைப் பார்த்துக் கத்தினான். அவர்களை வேலை செய்யும்படி கதறினான்.

“ஒன்பது மாடியா?” என்றார் ஒருவர்; ஸ்ட்ரெட்சர் தள்ளிக் கொண்டு வந்தவர். இந்த குண்டனை ஐ ஸீயூக்குள் தள்ளிக் கொண்டு போவதில் ஏதேனும் பிரயோசனப்படுமா என்று கவலைப்பட்டாரோ?

டாக்டர் எங்களை ஐஸீயூவிற்கு வெளியே காத்திருக்கச் சொன்னார். அடச் சே! காத்திருந்தே சோர்வாகி விட்டேன் நான். ஒரு மர முக்காலியில் அமர்ந்தேன். உள்ளே உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த மற்றொரு நோயாளியின் உறவினர்கள் என்னைச் சுற்றி அமர்ந்திருந்தனர்; அம்மாக்கள், மகள்கள், மகன்கள், அப்பாக்கள். நான் தூக்கத்துடன் போராடிக் கொண்டிருந்தேன், முடியவில்லை.

ரயன் என்னை மதியம் எழுப்பினான். என் இடது பக்கம் பூராவும் மரத்துப் போயிருந்தது.

“அவன் பிழைத்துக் கொள்வான்! மோசமான நிலைமைதான். ஆனால் தேறிவிடுவான் என்று டாக்டர் சொல்லவிட்டார்!”

“என்ன? எப்படி? நிஜமாவா?”

“ஆமாம்; அவன் தன் பின் பகுதியில் விழுந்திருக்கான். இன்ஸ்டி கட்டிட ஃபௌண்டனில் விழுந்திருக்கான். உன்னால் நம்ப முடிகிறதா? அவனின் குண்டு பின் பகுதி, மற்றும் ஆறு அங்குலத் தண்ணீர் அவன் விழுந்த வேகத்தைத் தடை செய்து காப்பாற்றியிருக்கிறது.”

அலோக் குண்டனாக இருந்ததற்குக் கடவுளுக்கு நன்றி. பிரயோசனம் இல்லாத அந்த இன்ஸ்டி ஃபௌண்டனுக்கும் நன்றி. காலில் பதினொன்று, கையில் இரண்டு எலும்பு முறிவு. உயிர்

பிழைத்துவிட்டான். நல்ல வேளை! குண்டன் சாப்பிடும் வேகத்திலும், அளவிலும் புது எலும்புகளை ஒரே நாளில் அவன் வளர்த்துக் கொள்ளலாம்.

“இவன் இறந்து விடுவான் என்று நினைத்தேன். நிஜமாகவே அப்படித் தான் நினைத்தேன்;” என்று சொல்லி ரயனை அணைத்துக் கொண்டேன். நான் அழத் தொடங்கினேன். நான் ஏன் அலோக் போலானேன் என்று எனக்கே தெரியவில்லை. தர்ம சங்கடமாக இருந்தாலும் ஆஸ்பத்திரியில் யாரும் அலட்டிக் கொள்ளவில்லை.

“அவன் விழித்துக்கொண்டிருக்கிறானோ?”

“இல்லை. அவன் இரண்டு நாட்களாகத் தூங்கவில்லை. அவன் பின்புறத்தைக் கிள்ளலாம் வா,” என்றான் ரயன்.

நாங்கள் ஐஸீயூவினுள் சென்றோம். அலோக் தூங்கிக் கொண்டிருந்தான்.

“நோயாளிகள் ரெஸ்ட் எடுக்க வேண்டும்,” என்றாள் நர்ஸ். எங்களை மௌனமாக இருக்கும்படி சைகை செய்தாள். நாங்கள் ஐஸீயூவிலிருந்து வெளியே வந்து குமாவோனுக்குப் பஸ் பிடித்தோம்.

நாங்கள் பஸ்ஸில் திரும்பும்பொழுது ரயன் என்னிடம், “உனக்குத் தெரியுமா ஹரி, நான் குண்டனுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கேன்.”

“அப்படியா?” என்றேன்.

“அவன் இல்லை என்றால் நான் ஐந்து - புள்ளி எடுக்கும் அளவுக்குக் கூட படித்திருக்க மாட்டேன்,” என்றான் ரயன்.

அவன் சொல்வது சரிதான். அலோக் தான் எங்களின் கவனத்தை எப்பொழுதும் புத்தகத்திற்குத் திருப்புவான். அவன் அங்கே கிடக்கிறான். இனி எங்களுக்குப் புத்தகங்களைப் படிக்க வேண்டிய அவசியம் இல்லை.

“அவன் சரியாகி விடுவான் என்று நினைக்கிறாயா?” என்றான் ரயன்.

“நிச்சயமா, ரயன். அவன் சரியாகி விடுவான்”, என்று ரயனை அணைத்துக் கொண்டேன். முதல் முறையாக அவன் வலிமையாக இல்லாமல் கனமாக இருப்பது போல் உணர்ந்தேன். அவன் என்னை இறுக்கமாகக் கட்டிப்பிடித்தான்.

“ஸாரி.“

“பரவாயில்லை. நாம் இதிலிருந்து கடந்து விடுவோம்,” என்றேன்.

நாங்கள் அனைவரும் ஓய்வெடுக்க வேண்டும். எங்களுக்கு நிறைய நேரம் இருந்தது - நான்கு மாதங்கள் - உலகில் தேவையான ஓய்வை எடுத்துக் கொள்ளலாம்.

# 22

## ரயன் பேசுகிறான்

நான் தவறு செய்துவிட்டேன். குண்டன் ஐஸீயூவில் உயிருக்குப் போராடுகிறான். அது பெரும் தவறு தானே? இந்த ஆபரேஷன் பெண்டுலம் என்பது தப்பான சமாசாரம் - இப்பொழுது யோசிக்கும் பொழுது அதன் தவறு புரிகிறது. எல்லாமே வித்தியாசமாகப் போயிருக்கக்கூடும். குண்டன் ஒரு ரூபாய் சேமிக்க நினைக்காமல் அங்கிருந்து தொலைபேசியை உபயோகிக்காமல் இருந்திருந்தால்? அவன் எங்கள் கூட வராமலே இருந்திருந்தால், இன்னும் சிறப்பு! வேறு எதற்காக இல்லாவிட்டாலும் குதிக்காமல் இருந்திருப்பான். அலோக்கிடம் என்ன பிரச்சனை? ஹரியிடம் என்ன பிரச்சனை? இவர்கள் எப்பொழுது பெரியவர்கள் ஆவார்கள்?

நீங்கள் சொல்லலாம் - நான் என் தவறை ஒப்புக் கொள்ளவில்லை என்று. ரயன் யாரை வேண்டுமானாலும் குற்றம் சாட்டுவான் - அவனுடைய பெற்றோர், அவனுடைய நண்பர்கள், அவனுடைய காலேஜ், கடவுள் கூட - ஆனால் தன்னை மட்டும் சேர்த்துக் கொள்ள மாட்டான்.. அவனுள் ஒரு வன்மம் இருக்கிறது!

உங்களைத் தப்பு சொல்லவில்லை. நீங்கள் ஹரியின் தரப்பிலிருந்து இந்தப் புத்தகத்தைப் படிக்கிறீர்கள். அவன் எப்படித் தவறானவன் ஆவான்? ஹரி ஒரு அசட்டு ஐஐடி பையன். நல்ல மதிப்பெண்ணோ, சீரான வாழ்க்கையோ அமைத்துக் கொள்ளத் தெரியாதவன். அவன் கருணையுடையவன், குழப்பமானவன்- காதலில் விழுந்தவன், பார்க்க அழகாக இருக்கமாட்டான், நண்பர்களை இழுத்துப் பிடிக்க முற்படுவான், வைவாவில் சொதப்புவான் - வேறு என்னவெல்லாம் சேர்த்துக் கொள்ள வேண்டுமோ, சேர்த்துக் கொள்ளுங்கள். அவனைப் பார்த்துப் பரிதாபப்படாமல் இருக்க முடியவில்லைதானே?

உங்களுக்கு எப்பவாவது தோன்றியிருக்கா? இந்த மிஸ்டர்பரிதாபப் பையனுக்குள் நிறைய அழுத்தமான விஷயங்கள் புதைந்து கிடக்கின்றன என்று? அவன் அவற்றைத் தோலுரித்துக்காட்டமாட்டான். அதுவும் “தன்” புத்தகத்தில் சொல்ல மாட்டான்; அவன் தன் பெற்றோர் பற்றிப் பேசவே மாட்டான். அவன் தன் வைவாவில் ஏன் சொதப்புகிறான் என்ற கேவலமான கதையைச் சொல்லுவானா? மாட்டான்! - ஸாரி! உங்களுக்கு அதைத் தெரிந்து கொள்ளும் அதிர்ஷ்டம் இல்லை. அலோக்கின் குடும்பத்தை ஏன் கேலி பேசுகிறான் - அவர்கள் குடும்பம் வேடிக்கையாகத் தான் இருக்கிறது; அதற்காக உணர்ச்சியற்று கேலி பேசுவது சரியா?

அதைப் பற்றியெல்லாம் விவரிக்க மாட்டான். நான் அதைப்பற்றி கொஞ்சமாக விவரிக்கலாம். (நிறைய சொன்னால் அதை வெட்டியெடுத்து விடுவான் புத்தகத்திலிருந்து) அதற்கு முன் அலோக் பற்றி சொல்ல வேண்டும் - ஏதோ ஒரு கிழ கும்பல் டிஸ்கோ செய்ததால் ஒரு முட்டாளுக்கு தன் அக்காவைக் கட்டி வைக்க முடியாத விரக்தியில் ஒன்பதாவது மாடியிலிருந்து குதிப்பதா? அவன் என்ன அவ்வளவு மடையனா? அவ்வளவு கோபம் வந்திருந்தால் என்னைப் பிடித்துத் தள்ளியிருக்க வேண்டியது தானே?

உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ? எனக்கு அலோக்கைப் பிடிக்கும். ஆமாம், நாங்கள் சண்டை போட்டுக் கொள்வோம். விவாதம் செய்தோம் - அவனின் டப்பா அடிக்கும் புலம்பல் எனக்குப் பிடிக்காது என்றாலும், யோசித்துப் பார்த்தால் அவன் தனக்கென்று வாழ்வதில்லை. அவனுக்கு அந்த குவிஸ்ஸில் அதிக மதிப்பெண் வாங்கும் ஆசை இல்லை. அடச் சே! அவனுக்கு ஐஐடியில் இருக்க விருப்பம் இல்லை. (யாருக்குத் தான் இருக்கும்?) அவனின் குடும்பத்துக்காக அவன் செய்யும் தியாகம். ஒவ்வொரு நாளும், அடுத்த நாளும் அவன் அவர்களுக்காக வாழ்கிறான். அவன் தன் பனிரெண்டாவது வயதிலிருந்து தன் அப்பாவுக்குச் சேவை செய்து கொண்டிருக்கான். அந்தப் பரிதாபமான அறையில், புத்தகங்கள் சூழ, மருந்தும், கவலையும் புடை சூழ! அதனால் தான் அவன் வளரவே இல்லை. அதனால் தான் இருபது வயதில் அழுவது பரவாயில்லை என்று நினைக்கிறான் - ஐயே!

அதனால் தான் அவன் வாழ்க்கையில் சந்தோஷமே கண்டதில்லை. அதற்காக அவனுக்குச் சந்தோஷம் தேவையில்லை என்று ஆகிவிடுமா? எங்களுடன் ஏன் ஒட்டிக் கொண்டிருக்கிறான்? திரும்பப் ஏன் வந்தான்? அவனுக்குத் தெரியும் அவன் ‘வெங்கட்’ ஆக முடியாது என்று. அவனுக்கு வரையத் தான் ஆசை - ஆனால்

ஆக முடியவில்லை. வாழ்வில் அவனுக்கு நல்ல நண்பர்கள் கிடையாது - ஆனால் நட்புக்காக ஏங்கினான். அந்த மட்டமான ராகிங்கிலிருந்து அவனை நான் காப்பாற்றிய பொழுது, அவன் யோசித்திருப்பான் – 'அவன் வாழ்வில் இவை நடப்பது கிடையாது' அதனால் என்னுடன் பழகினான். என்னுடன் ஒட்டிக் கொண்டான், சண்டை பிடித்தான், சாபமிட்டான், தன்னைத்தானே வெறுத்தான். அவனின் நம்பிக்கைகளை ஆட்டம் காண வைத்தவன் நான் - என்னவானாலும் பெற்றோரைப் பார்த்துக் கொண்டுதான் ஆக வேண்டும் என்ற கடமை நமக்கில்லை; கல்வி முறைகளை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டாம்; வாழ்வின் மகிழ்ச்சியைத் துறக்க வேண்டாம். அவனைத் தள்ளினேன் அவனுடன் - போராடினேன்; இருந்தும் அவனுக்கும் இந்த விதி மீறல்கள் பிடித்திருந்தது. மேலும், மேலும் தள்ளினேன் - கடைசியில் ரொம்பத் தூரம் சென்று விட்டேன். கடவுளே! அவன் உயிரோடு இருக்க வேண்டும்.

ஆனால் ஹரி? அவனிடம் எனக்குச் சில கேள்விகளைக் கேட்க வேண்டும். உன் பெற்றோர் கதை என்ன ஹரி? அவர்களைப் பற்றிய பகுதிகள் இந்தப் புத்தகத்தில் வருமா? உன் அப்பா எப்படி - ராணுவத்தில் கர்னல்? உன் வீட்டு விதிகள் என்ன - டிவி கிடையாது. இசை கிடையாது. சத்தமாகச் சிரிப்பது கிடையாது? இது எல்லாம் கட்டுப்பாட்டுக்காகத்தானே?

அப்புறம் உன் அம்மா - பல நாட்கள் பேசாமலே இருந்து விடுவாள் தானே? ஓ! ஒரு நிமிடம், இதைப் பற்றியெல்லாம் நான் பேசக் கூடாதே! உன் அப்பா தன் அலமாரியில் மாட்டி வைத்திருக்கும் 'பெல்ட்டின்' கதை என்ன? இன்னமும் அதைப் பற்றிய கெட்ட கனவுகள் வருமா, ஹரி? எதிர்த்துப் பேசக் கூடாது என்று சொல்லியிருக்கிறாரா? உன்னைவிடப் பெரியவர்களிடம் நீ எதிர்த்துப் பேசினால் உனக்கு தண்டனை வழங்கப்படும். கடினமான தண்டனை. இது வைவா நேரமா? இன்னும் வலிக்கிறதா ஹரி?

ஓ, சே! நான் ரொம்ப சொல்லிவிட்டேன் என்று நினைக்கிறேன். ஹரி நல்லவன் தான்; ஆனால் அவனுக்குச் சில பிரச்சனைகள் இருக்கின்றன. அதைப் பற்றி பேச அவனுக்கு விருப்பம் இல்லை. ஒருவன் ஒரு புத்தகம் எழுதுகிறான் என்றால் அவன் ஒளிவு மறைவின்றி அனைத்தையும் கக்க வேண்டும் என்பதில்லையே. இந்தப் புத்தகம் சும்மா ஐஐடி பற்றி மட்டும் தான் - ஒருவரின் எதிர்காலத்தை முடிவு செய்யும் இடம். இங்கே கடந்த காலத்தைத் தோண்டி எடுப்பதில் என்ன லாபம்?

அதனால் நான் திரும்ப ஐஐடிக்கே வருகிறேன். ஹரி (இன்னும் கொஞ்சம் வோட்கா குடித்தால் அவனால் சமாளிக்கக் கூட முடியாது!) அந்த சமயம், நட்பைப் பற்றி ஒரு விஷயம் சொன்னான்.

அவன் சொன்னான், "நீ உன் நண்பர்களுக்காக இவ்வளவு தியாகம் செய்வது மடத்தனம். அலோக் தன் குடும்பத்துக்காகச் செய்யும் அதே மடத்தனம் தான் நீ செய்வதும். நீங்கள் இருவருமே, உங்களுக்கு என்ன வேண்டும் என்று யோசிப்பதே இல்லை."

மிகவும் தத்துவம் வாய்ந்ததாக உள்ளதா? நான் அவனிடம் கேட்டேன். 'டேய் நீ உனக்கு வேண்டியது என்ன என்று அறிந்து கொண்டாயா'. அவன் தலையாட்டினான்.

"உனக்கு என்ன வேண்டும்?" என்று நான் கேட்டேன்.

"நீயாக ஆக வேண்டும்."

"என்னது?" நான் சரியாகக் கேட்கவில்லையோ!

"எனக்கு நேஹா வேண்டும்" என்று சொல்லி காதல் பிடியில் சிக்குண்டு மயங்கிவிட்டான் அந்தப் பொட்டை.

அதனால் இங்கு என்ன நடக்கிறது? அவன் மற்றவர்களுக்காக வாழ மாட்டான், ஆனால் அவன் மற்றவர்கள் மாதிரி வாழ ஆசைப்படுவான். இது என்ன குழப்பம்?

*Downloaded from Ebookz.in*

# 23

## முந்திரி பர்ஃபி

எங்களின் சஸ்பெண்ட் செய்யப்பட்ட செமஸ்டரில் இரண்டு மாதம் ஓடிவிட்டது. அலோக் கடைசியாக குமாவோன் வந்துவிட்டான். இன்னமும் மாவுகட்டு பிரிக்கவில்லை. அதைப் பிரித்தாலும் இடது காலில் லேசாக ஒரு வளைவு இருக்கும். சற்று நொண்டித் தான் நடக்க வேண்டும். அவனின் வாழ்க்கைக்குக் கொடுக்கும் சிறிய விலை தானே? ஆனால் இதனால் அலோக் தன் வாழ்நாளில் அந்த இரவை மறக்க மாட்டான்.

அவனைத் தினமும் ஆஸ்பத்திரியில் சந்தித்தோம். எங்களுக்குத் தான் வேறு வேலை இல்லையே. வீட்டிற்குச் செல்வதைப் பற்றி யோசிக்கவே இல்லை. நாங்கள் குமாவோனில் தங்கி ஒருவரின் அருகாமையை மற்றொருவர் பங்கு கொள்ள எண்ணினோம். யாரும் எங்களுடன் அதிகமாகப் பேசுவதில்லை. அப்படியே பேசினாலும் என்ன நடந்தது என்ற வம்பு தான் கேட்டார்கள். நாங்கள் என்ன தப்பு செய்தோம்? டிஸ்கோ எப்படி இருந்தது? அலோக் ஏன் குதித்தான்? போன்ற கேள்விகள் தான் எங்களைச் சுற்றி ஓடிக் கொண்டிருந்தன. நாங்கள் எங்கள் அறையிலேயே அடைந்து கிடந்தோம். ஆஸ்பத்திரிக்காக மட்டுமே வெளியே சென்றோம்.

அலோக் இந்த ‘குதித்த கூத்தைத்’ தன் பெற்றோர்களிடம் சொல்லக் கூடாது என்ற சத்தியம் வாங்கிக் கொண்டான். அவனின் எலும்பு மெதுவாகக் குணமடையத் தொடங்கியது. ஒரு மாதம் கழித்து அவன் பாதி-நொண்டியும்-பாதி-நடந்தும் கழிப்பறை வரை சென்றான். அவனுடன் யாரும் சென்று அவனைச் சங்கடப்படுத்தாத அளவுக்கு முன்னேறியிருந்தான். அவன் குதித்ததைப் பற்றி அவனிடம் பேச வேண்டாம் என்று டாக்டர்கள் எங்களிடம் எச்சரித்திருந்தனர். ஆனால் ரயனால் கட்டுப்படுத்த முடியாமல் கேட்டான், “மடையனாடா நீ?”

அலோக் மௌனமாய் இருந்தான். ஓரிரு முறை பேரா வீரா ஆஸ்பத்திரியில் அவனைச் சந்தித்தார். அவர் எங்களை உற்சாகப்படுத்தினார். எங்களுக்கு எக்ஸ்ட்ரா (கூடுதல்) வகுப்பு எடுத்துக் கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தி எப்படியாவது மதிப்பெண்கள் வாங்க உதவுவதாகக் கூறினார். செரியனிடம் கருணை மனுவைப் பற்றிப் பேசிப் பார்த்தார்; ஆனால் செரியன் மசிவதாக இல்லை.

பேரா வீரா குமாவோன்னுக்கு வந்தார்; ஆஸ்பத்திரியிலிருந்து வரும் அலோக்கை வரவேற்றபதற்காக. ‘என்ன புலி? உன் குகைக்கே திரும்பி வந்தாயிற்றா?’ என்று வாழ்த்தினார்.

அலோக் என் படுக்கையில் உட்கார்ந்திருந்தான். முதுகு பக்கம் சாய்ந்து கொள்ள தலையணைகள் அடுக்கப்பட்டிருந்தன. “நீங்கள் சிரமப்பட்டு வந்திருக்க வேண்டாம், ஸார்”

“ஒன்றும் பெரிய விஷயம் இல்லை” என்று பேரா வீரா அதைப் பொருட்படுத்தவில்லை. அவர் தன் பையிலிருந்து ஒரு பெட்டியை வெளியே எடுத்தார். “இந்தா, இனிப்பு எடுத்துக் கொள்; அலோக் வீடு திரும்பியதற்காகவும், வேறு ஒரு நல்ல விஷயத்துக்காகவும்.”

அலோக், இனிப்புப் பெட்டியைப் பார்த்ததும் பேரா வீராவின் கையிலிருந்து பிடுங்காத குறையாக வாங்கிக் கொண்டான். உணவு என்று வந்துவிட்டால் குண்டன் எந்த மரியாதைக்காகவும் காத்திருக்க மாட்டான். டப்பாவில் முந்திரி-பர்ஃபி இருந்தது. அவனுக்கு மிகவும் இஷ்டமான இனிப்பு.

“நீங்கள் இதெல்லாம் வாங்கி வந்திருக்க வேண்டாம் ஸார்”, என்று மூன்று பர்ஃபிகளைத் திணித்துக் கொண்டே உளறினான்.

“சந்தோஷப்படுங்க பசங்களா. பதின்மூன்று எலும்புகள் உடைந்து, இரண்டே மாதங்களில் வீடு திரும்பியதற்கு; இது கொண்டாடப்பட வேண்டிய விஷயம்;” என்று பேரா வீரா அலோக்கின் தலையை வருடிக் கொடுத்தார்.

நாங்களும் அலோக் திரும்ப வந்ததில் சந்தோஷப்பட்டோம். கூடுதல் சந்தோஷம் அந்த முந்திரி டப்பா. அலோக் ஒரு நொடி கூட அந்த டப்பாவைத் தனியாக விடுவதாக இல்லை.

“ஸார், வேறு எந்த காரணத்தக்காக நீங்கள் இனிப்பு கொண்டு வந்தீர்கள்?” என்று கடைசியாக ரயன் விசாரித்தான்.

“கடைசியாக உங்களுக்க ஒரு நல்ல செய்தி கொண்டு வந்திருக்கேன்”, என்றார் பேரா வீரா.

“என்னது? செரியனுக்கு இன்னொரு டிஸ்கோ வேணுமா?” என்று ரயன் கொந்தளித்தான்.

‘ஈஸி ரயன்”, என்றார் பேரா வீரா. “எனக்குத் தெரியும் நீங்கள் பட்ட கஷ்டம். ஆனால் இம்முறை நான் டீன் மூலம் அணுகினேன்.”

“என்ன?” அலோக்கும் நானும் சேர்ந்து கேட்டோம்.

“அந்த ல்யூப் ப்ராஜெக்ட் நினைவிருக்கா? பேரா செரியன் ஆய்வை ஆதரிக்கவில்லை. ஆனால் டீனிடம் சென்று பேரா செரியன் சொன்ன விஷயங்களைச் சேர்த்து இன்னொரு ரிப்போர்ட் தயாரிப்பதாகச் சொன்னேன்.”

“நான் அந்த பொட்டை தரும் எந்த அறிவுரையும் நான் ஏற்க மாட்டேன்”, என்று ரயன் அடம்பிடித்தான்.

‘ரயன், கொஞ்சம் சும்மா இருக்கியா? ஸார் நாம் ஏன் திரும்பவும் கொடுக்க வேண்டும்?” என்றேன்.

“அங்கே தான் என் திட்டம் இருக்கு. நாம் திரும்பவும் கொடுத்தால் நாம் ஆய்வுக் கூடத்தில் மேலும் சில பரிசோதனைகளைச் செய்து நம் ல்யூப் பரிசோதனையில் விஷயம் இருக்கு என்ற நிரூபிக்கலாம்; ப்ராஜெக்ட் கொடுக்கும் பொழுதே சில ஆய்வுகளைத் தொடங்கலாம்.” என்றார் பேரா வீரா.

“பிறகு?” என்று ரயன் கண்களைச் சுருக்கினான்.

“பிறகு நீங்கள் மூவருமாகச் சேர்ந்து இந்த பரிசோதனைகளைச் செய்யலாம். ஆய்வுக் கூடத்தில் நீங்கள் மூவரும் சேர்ந்து வேலை செய்ய டீனிடம் அனுமதி வாங்கி விட்டேன். உங்கள் நேரத்தை நீங்கள் உபயோகமாகச் செலவழிக்கலாம். டீன் இதற்கு ஒத்துக் கொண்டார் என்பது நல்ல செய்தி. ஆனால் இதற்குச் கிரெடிட் தர மாட்டார்கள்.”

ரயன் அலோக்கின் கையிலிருந்து அந்த இனிப்பு டப்பாவைப் பிடுங்கி இரண்டு பர்ஃபி எடுத்துக் கொண்டான். சிகரெட்டைப் பற்ற வைத்தான். “இதனால் என்ன பயன் என்று யாராவது எனக்கு விளக்க முடியுமா? நாம் அநாவசியாக எதற்கு உழைக்க வேண்டும்?” என்றான்.

“இதில் ஒரு லாபம் இருக்கலாம்”, என்றார் பேரா வீரா. ரயன் வாயிலிருந்து சிகரெட்டைப் பிடுங்கிக் கீழே எறிந்து, காலால் அணைத்தார். “உங்கள் மதிப்பெண் அட்டையில் விழும் இடைவெளியை விளக்க இது உதவும். எனக்குத் தெரியாது, ஆனால் இம்முறை அவர்களுக்கு அந்த ப்ராஜெக்ட் பிடித்தால் அடுத்த செமஸ்டரில் இந்த ப்ராஜெக்டுக்குக் கூடுதல் கிரெடிட் கிடைக்கலாம்.”

“அப்படியா?” என்றான் அலோக். “நாங்கள் மற்றவர்களைப் போல் சரியான சமயத்தில் பட்டம் பெற்று நான்கே வருடங்களில் வெளியேறலாமா?”

“செம்ம! நீங்கள் நிறைய யோசித்திருக்கிறீர்கள் பேரா வீரா!” என்றேன்.

“செரியன் இதற்கு ஒப்புக் கொள்ளவே மாட்டார். என்னால் நம்ப முடியாது”, என்றான் ரயன்.

“அவர் ஒப்புக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் வேலை நன்றாக இருந்து டீன் ஒப்புக் கொண்டால்? யார் கண்டது? நீங்கள் உங்கள் நேரத்தை ஒழுங்காகச் செலவிட இது உதவும்.”

“எங்களுக்கு நேரத்தைச் செலவழிக்க நிறைய வழிகள் இருக்கின்றன. ” என்றான் ரயன்.

“ரயன், பேரா வீராவிடம் ஒழுங்காகப் பேசு” என்றேன். இந்த டிஸ்கோ என் மனநிலையை மாற்றிவிட்டது. நான் ரயனிடம் பேசும் முறையையும் மாறிவிட்டது. அவனுக்குப் பிடிக்காததைச் சொல்வது எனக்கு எளிதாகிவிட்டது. அவனும் என்னுடன் விவாதிப்பதில்லை.

“பரவாயில்லை ஹரி. ரயன் இப்பொழுது எதன் மீதும் நம்பிக்கை வைக்க முடியாமல் கஷ்டப்படுகிறான். இன்ஸ்டியின் மீது நம்பிக்கை இழந்துவிட்டான். ஆனால், உங்களுக்குக் கிடைத்திருக்கும் ஒரே வாய்ப்பு இதுதான். நீங்கள் ல்யூப்பில் வேலை செய்தால், யாருக்குத் தெரியும்? இம்முறை நாம் தொழிலதிபர்களிடம் நிதி உதவி கேட்கலாம்”

“ஸார் சொல்வதுதான் சரி, ரயன், நீ இல்லாமல் எங்களால் இதைச் செய்ய முடியாது. இது உன்னுடைய ப்ராஜெக்ட்.”

“உங்களுக்கு இதை நிஜமாகவே செய்ய விருப்பமா?” என்று ரயன் கேட்டான்.

“ஆமாம்,” என்றோம் அலோக்கும், நானும்.

“ஆனால் ஒரு கண்டிஷன்,” என்றான் ரயன்.

“என்ன?” என்றார் பேரா வீரா.

“எனக்கு மற்ற எல்லா முந்திரி பர்ஃபியும் வேணும்,” என்றான் ரயன்.

“நாளை காலை பத்து மணிக்கு என் ஆய்வுக் கூடத்தில் சந்திக்கலாம்,” என்றார் பேரா வீரா. நாங்கள் எல்லோரும் உரக்கச் சிரித்தோம்.

# 24

## நாங்கள் தேறுவோமா?

நேஹாவின் பெயர் என்னை இரவு நேரங்களில் தூங்க விடாமல் அலைக்கழித்தது.

நிஜம் தான். என் பொறியாளர் பட்டம் குப்பையில் கிடக்கிறது. பேரா வீராவின் ஆய்வுக் கூடத்தில் அடிமைகள் போல் உழைத்தோம்; ஒவ்வொரு கிரீஸுடனும் போராடினோம். என் மதிப்பெண் கார்டில் எழுதப்படும் கெட்ட வார்த்தைகள் எனக்கு வேலை கிடைக்காமல் செய்யலாம். ஆனாலும் இவை யாவும் என் தூக்கத்தைக் கெடுக்கவில்லை. இந்த நான்கு மாதங்களைத் தூங்குவதற்குப் பயன்படுத்திக் கொண்டேன். ஆனால் அந்த ஒரு நபர் - அவளின் குரல், வாசனை, பிம்பம், உணர்ச்சி எல்லாம் என்னைப் பாடாய்படுத்தி இரவில் தூங்க விடாமல் செய்தது. அதுதான் நேஹா.

அவளைப் பதினோராம் தேதி கூப்பிட்டுப் பார்த்தேன். இரண்டே நிமிடத்தில் துண்டித்துவிட்டாள். நான் இப்படி நடந்து கொள்வேன் என்று அவள் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை என்று சொன்னாள். பொறுக்கி என்று அழைத்த ஒருவனிடம் அதிக எதிர்பார்ப்புகள் வைத்திருந்தாள்.

நான் உடனேயே கூப்பிட்டு, எப்படி அது என்னுடைய யோசனை இல்லை என்று விளக்கப் பார்த்தேன். நான் மடத்தனமாக ஒப்புக் கொண்டேன் என்று மன்னிப்பு கேட்டேன்.

“நீ என்னை உபயோகப்படுத்திக் கொண்டாய் ஹரி. எல்லா ஆண்களையும் போல நீயும் என்னைப் பயன்படுத்திக் கொண்டாய்,” என்றாள். (எல்லா ஆண்களுமா? எவ்வளவு ஆண்களுடன் பழகியிருக்காள்? என்று நினைத்தேன். அவள் என்ன படித்துக் கொண்டிருக்கிறாள், இப்படிப் பேச? ஏதாவது ஃபெமினா, காஸ்மோ போன்ற குப்பையைப் படிக்கிறாளா என்ன?)

ஒரு மேஜர் கேள்வித்தாளை ரகசியமாக எடுக்க முயன்றேன். சரி, மாற்றுச் சாவி தயார் செய்தது தவறுதான் - ஆனால் அது சௌகரியம் என்பதால் தான் செய்தேன். இல்லாவிட்டால் ரயன் வேறு வழி கண்டுபிடித்திருப்பான். அதைச் சொல்ல நினைத்தேன்; ஆனாலும், அவள்,” உன்னைப் போன்ற ஆண்களுக்கு இது எதுவும் புரியாது.” என்றாள். அவளுக்கும் புரியவில்லையே என்று வருத்தப்பட்டேன். ஆனாலும் அவளை வெறித்தனமாகக் காதலித்தேன்.

“டிஸ்கோவில் நான்தான் சாவி கொடுத்தேன் என்று சொன்னாயா? நானா ஹரி? அப்பா இன்னமும் அதை நம்புகிறார்.”

செம்ம! செரியன் அதை நம்புகிறார் என்பது சந்தோஷம். நேஹாவுக்கு எப்படிப் புரிய வைப்பது? நாங்கள் மாற்றுச் சாவி செய்தோம் என்று தெரியவந்தால் எங்களைக் குற்றவாளிகள் ஆக்கியிருப்பார்கள். நாங்கள் ஒரு வேளை நிஜக் குற்றவாளிகள் தானோ? ஆனால் விஷயம் அது அல்ல. (அட! இந்தப் பெண்களுக்கு ஒரு விஷயத்தை விட்டுவிட்டு மேலே போகத் தெரியாதா? அவள் பிரியப்படும் வகையில் நான் ஏதாவது அசட்டுத்தனமாக சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறாளா?)

“நேஹா, எனக்குத் தெரியும். நான்தான் அவற்றை எல்லாம் செய்தேன். ஆனால் ஒரு வகையில் பார்த்தால், அது நான் அல்ல. உன் ஹரி அல்ல,” என்றேன். நான் பேசுவது எனக்கே புரியவில்லை. ஆனால் இதுதான் பெண்களிடம் வேலை செய்யும். ஏதாவது குழப்பமான அபத்தத்தைச் சொன்னால் அவர்களுக்குப் பிடிக்கும்.

“ஏன் ஹரி? ஏன்?”

“தெரியவில்லை. உன்னை ஒரு தடவை பார்க்கலாமா?” என்று கேட்டேன்.

“முடியாது. நமக்குள் எல்லாம் முடிந்துவிட்டது.”

அவள் தொலைபேசியைத் துண்டித்து அதை எடுத்துக் கீழே வைத்துவிட்டாள். நாள் பூரா என்னால் தொடர்பு கொள்ள முடியவில்லை. அடுத்த மாதம் வரை காத்திருக்க வேண்டியதாயிற்று. அல்லது 30 தூக்கமற்ற இரவுகளைக் கழிக்க வேண்டும்.

அடுத்த மாத பதினோராம் தேதி வந்தது. நான் காத்திருந்தேன்; அவசரமாகக் கூப்பிட்டுப் பேசத் துடித்தேன்.

அன்று காலை பத்து மணிக்கு எழுந்தேன். இன்று பதினொன்று என்று சொல்லிக் கொண்டேன். அறையை விட்டு வெளியேறினேன். நான் சீக்கிரம் கூப்பிட்டு சரியான வரிகளைப் பேச வேண்டும். நான் கீழே இறங்கும் பொழுது, ஒரு வயதான பெண்மணி மேலே ஏறி வருவதைப் பார்த்தேன். யாருடைய அம்மாவோ; ஆனால் தெரிந்த முகமாக இருந்தது.

பிறகு எனக்கு உதித்தது - அலோக்கின் அம்மா.

“ஹலோ ஆண்டி, நான்தான் ஹரி,” என்றேன்.

“ஓ! ஹலோ ஹரி, மகனே; நீங்கள் எல்லாம் என்ன ஆனீர்கள்? நான் விடுதிக்கு வரவேண்டியதாயிற்று. அலோக் இரண்டு மாதமாக வீட்டுக்கே வரவில்லை. அவனுக்கு என்ன?” என்று மூச்சிரைக்கக் கேட்டார்.

“ஹஹ்? அலோக்குக்கு ஒன்றும் இல்லை ஆண்டி. அவன் ப்ராஜெக்டில் பிஸியாக இருந்திருப்பான்?” அவர் அலோக்கைச் சந்திப்பதிலிருந்து எப்படித் தடுப்பது என்று யோசித்தேன்.

“அங்கிள் கீழே ஆட்டோவில் காத்திருக்கார். அவனைச் சீக்கிரம் கூப்பிடு. நாங்கள் கவலையாக உள்ளோம்,” என்றாள்.

“நிச்சயமாக ஆண்டி,” என்று மேலே ஓடினேன். அலோக் தன் கட்டிலில் உட்கார்ந்து சிப்ஸ் மென்று கொண்டே பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான்.

ரயன் அவன் அருகில் அமர்ந்து பலான பத்திரிகையைக் கையில் வைத்துக் கொண்டு சிகரெட்டு புகைத்துக் கொண்டிருந்தான். அலோக்கின் அறை முழுவதும் புகை மண்டலம்.

“உங்களுக்கென்ன பைத்தியமாடா? சிகரெட்டும் பலான பத்திரிகையும், காலங்கார்த்தாலே,” என்று கோபித்தேன்.

“உனக்கு என்னடா பிரச்சனை? நாம் ஃப்ரெஷாக இருக்கும் பொழுது பிடித்த விஷயங்களைச் செய்ய வேண்டும்,” என்றான் ரயன்.

“அலோக் உன் பெற்றோர்கள் இங்கே வந்திருக்கின்றனர்,” என்றேன்

“என்னது?” என்ற அலோக்கின் கையிலிருந்து சிப்ஸ் கீழே நழுவியது.

“ஆமாம். உன் அம்மா மாடி ஏறி வந்து கொண்டிருக்கிறார்; அவர் கோபமாகவும், வருத்தமாகவும் இருக்கார். நீ கூப்பிடவே இல்லையாம்.”

“இங்கேயே வந்து விட்டாளா?” அலோக் கையை ஆட்டி சிகரெட்டுப் புகையை விரட்டினான்.

“ஆமாம். உன் உடைந்த எலும்புகளைப் பார்த்து விடுவாள் என்று தோன்றுகிறது.”

“ஃபக்,” என்றான் அலோக்.

“படுக்கையிலேயே இரு. உன் கால்களை ஷீட்டால் மூடி விடலாம்,” என்று ரயன் பலான பத்திரிகையை அலோக்கின் படுக்கையடியில் மறைத்தான்.

“முடியாது. அவனின் அப்பா, தன் ஒரே மகனைப் பார்க்கக் கீழே காத்திருக்கிறார்,” என்று சொல்லி சிப்ஸை சாப்பிட ஆரம்பித்தேன். இப்பொழுது அவர்கள் இருவரும் பரபரப்பதைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது.

“ஃபக், ஃபக், ஃபக்,” அலோக் தலையணைகளைச் சரி செய்தான்.

“நீ இவ்வளவு கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டாம்,” என்றேன்.

அலோக்கின் அம்மா ஒரு நிமிடத்தில் கதவைத் தட்டினார். ஒரு நிமிடத்தில் எவ்வளவு வேலை செய்ய முடியும் என்று யோசித்துப் பார்த்தால் அதிசயமாக இருந்தது. ரயன் ஆஷ்ட்ரே, பலான புத்தகங்கள், வோட்கா பாட்டில்கள் என்று அனைத்தையும் தூக்கி வெளியில் எறிந்தான். படிக்கும் மேசையில் புத்தகங்களை வரிசையாக அடுக்கினான். ஏற்கனவே பிதுங்கிக் கொண்டிருந்த அலமாரியில் அழுக்குத் துணிகளை அடைத்தான்.

“ஹலோ அம்மா! என்ன ஆச்சரியம்!” என்றான் அலோக்.

“அலோக், நான் உன்னுடன் பேச வரவில்லை. எங்களை மொத்தமாக மறந்துவிட்டாய்,” மேசை மீது இனிப்பு டப்பாக்களை வைத்தார். இப்பொழுதே அதன் மீது படையெடுக்கலாமா என்று யோசித்தேன்.

“நான் பிஸியாக இருந்தேன்,” என்றான் அலோக்.

“வாயை மூடு. இரண்டு மாதம் ஓடிவிட்டது. அன்று அப்பாவின் உடல் நலன் பற்றி விசாரித்தாய். அக்காவின் திருமண நிச்சயம் நின்ற நாள். அதன் பிறகு என்ன ஆச்சு? எங்கள் பிரச்சனைகளைப் பற்றி பேச விருப்பமில்லையா?”

“இல்லை அம்மா. பேரா வீராவுக்கான வீட்டுப்பாடம், எங்களை மிகவும் பிஸியாக வைத்திருக்கு,” என்றான் அலோக்.

“என் பையன் ரொம்ப உழைக்கிறான்,” அலோக்கின் அம்மா என்னையும், ரயனையும் பார்த்துச் சொன்னார்.

“நீங்கள் அடிக்கடி ரெஸ்ட் எடுக்க வேண்டும். இன்னும் ஒரு செமஸ்டருக்குள் உங்களுக்கு வேலை கிடைத்துவிடும்,” என்றார்.

ரயனும் நானும் புன்னகைத்தோம்; உணவுப் பொட்டலங்களையே முறைத்துக் கொண்டிருந்தோம். (தயவு செய்து ஆண்டி, ஒரு முறை எடுத்துக் கொள்ளச் சொல்லுங்களேன்.)

“அடுத்த வார இறுதி நீ வீட்டுக்கு வர வேண்டும் அலோக். அப்பா கூட ஆட்டோவில் அங்கிருந்து வந்திருக்கிறார்,” என்றார்.

“ஆட்டோவா? எழுபது ரூபாய் ஆகுமே!” என்றான் அலோக்.

“அப்பாவை என்ன செய்வது? சில நாட்களில் என் பிள்ளை வேலைக்குப் போக ஆரம்பித்துவிடுவான்!” என்ற அலோக்கின் அம்மா, “ஹரி, நீ ஏன் நான் செய்த லட்டுக்களை தின்னக்கூடாது?” என்றார்.

ரயனும் நானும் அவர் முடிக்கும் முன் டப்பாக்களின் மீது பாய்ந்தோம்.

“அம்மா, ஆனாலும்,” என்றான் அலோக்.

“சும்மா இரு. அக்கா உனக்கு இந்த புது ஜீன்ஸ் அனுப்பியிருக்கா. அவளின் பணத்தைச் சேமித்து வாங்கியிருக்க தெரியுமா?” என்று ஒரு பழுப்பு கவரைக் கொடுத்தார்.

“நன்றியம்மா. நான் ஒரு நல்ல நிகழ்ச்சிக்குப் போட்டுக் கொள்கிறேன்,” என்றான் அலோக்.

“போட்டுப் பாரேன். எழுந்திரு” என்றார் அம்மா.

“இல்லேம்மா. அப்புறமா போட்டுக்கிறேன்,” என்றான் அலோக்.

“அப்புறமா என்ன அப்புறமா? சரியா இல்லையென்றால் மாற்றணும் இல்லே? சோம்பேறித்தனமா இருக்காதே. எழுந்திரு,” என்று அலோக்கின் அம்மா அவன் காலைப்பிடித்து ஆட்டினார். அது அவனுக்கு வலித்திருக்க வேண்டும்.

“இல்லலேம்மா” என்று பல்லைக் கடித்துக் கொண்டு பேசினான் அலோக்.

“எழுந்திரு.” அலோக்கின் அம்மா விடாப்பிடியாக பெட் ஷீட்டை அவன் மேலிருந்து இழுத்தார். அலோக்கின் மீது விழுந்த அடையாளச் சின்னங்கள், இன்னமும் மிச்சம் இருந்தன. மாவுக் கட்டு அவன் கால்களைத் தழுவி இருந்தது. தொடை வரை கட்டுப் போடப்பட்டிருந்தது. பாதங்களில் டாக்டர்கள் போட்ட தையல்கள் தெரிந்தன. எங்களுக்கே கூட பார்க்கக்கஷ்டமாக இருந்த விஷயம்.

“அடக் கடவுளே!” அலோக்கின் அம்மாவின் முகம், கை என்று அனைத்தும் தொங்கிப் போயிற்று.” அம்மா, தயவு செய்து.” அலோக் அவளைத் தள்ளினான். அவள் அங்கு வந்தே இருக்க வேண்டாம் என்று நினைத்தான்.

அலோக்கின் அம்மாவுக்குத் தலைச் சுற்றி வாந்தி வரும் போல் ஆகிவிட்டது. ரயன் அவரை ஆதரவாகப் பிடித்து நாற்காலியில் அமர்த்தினான். நான் அவருக்குக் குடிக்க ஒரு கிளாஸ் தண்ணீர் கொடுத்தேன்.

“என்ன நடக்கிறது? யாராவது தயவு செய்து சொல்லுங்களேன்.” என்றாள்.

ரயன் என்னைப் பார்த்தான்; நாங்கள் அறையை விட்டு நகர வேண்டிய நேரம்.

“நாங்கள் கீழே செல்கிறோம். அங்கிளுக்கு ஹலோ சொல்கிறோம். அலோக் ஆய்வுக்கூடத்தில்

இருக்கான் என்று அவரிடம் கூறுகிறோம். ஓகே ஆண்ட்டி?"

அவர் தலைசைத்தார். கண்களில் கண்ணிர் வெள்ளம். ஏதாவது ஒரு ஆண் மகனாவது அவர் குடும்பத்தில் தன் காலில் நிற்க முடியுமா?

"ஈஸிமா அன்று இரவு ஒரு ஸ்கூட்டர் விபத்து" அலோக் சொல்லிக் கொண்டிருந்தான். நாங்கள் கதவை எங்கள் பின்னால் சாத்தினோம். எனக்குத் தோன்றியது, அவன் அம்மா அவன் பொய் சொல்கிறான் என்று கண்டுபிடித்துவிடுவார். நானும், ரயனும் சரியாக இருக்கிறோம், அடியேதும் படாமல்; ஸ்கூட்டர் விபத்தா? அரை மணி நேரம் கழித்து கண்களைத் துடைத்தபடி புறப்படத் தயாரானார். நாங்கள் ஆட்டோ அருகில் நின்று அலோக்கின் அப்பாவுடன் பேச முற்பட்டோம். அவர் சந்தோஷ மனநிலையில் இருந்தார். அபூர்வமாக வெளியே வந்ததால் சந்தோஷப்பட்டாரோ?

"அலோக் பிஸியா?" என்று உதட்டை மடக்கிக் கேட்டார்.

"ஆமாம். அவர்களுக்கு ஒரு முக்கியமான பிராஜெக்ட் இருக்கு", என்றார், அலோக்கின் அம்மா. ஆட்டோவில் ஏறி அமர்ந்தார்.

"ஹை ஆண்ட்டி" என்று ரயனும், நானும் கையசைத்தோம்.

"ரோஹிணி திரும்பணுமா மேடம்?" என்று ஆட்டோக்காரர் வண்டியைக் கிளப்பினார்.

"இல்லை. என்னை மெக்கானிக்கல் பிரிவுக்குக் கூட்டிப் போ."

"ஆண்ட்டி?" கோரஸாகக் கத்தினோம்.

"என் பையன் பேச விருப்பப்படவில்லையென்றாலும் ஒரு அம்மாவால் சில விஷயங்கள் யூகிக்க முடியும். எனக்கு பேரா வீராவைப் பார்க்கணும். வீட்டுக்குச் செல்வதற்கு முன்", என்று அவள் கூற ஆட்டோ கிளம்பியது.

"அவருக்கு எல்லாம் தெரிந்துவிடும். டிஸ்கோவைப் பற்றிக் கண்டு பிடித்து விடுவார்", என்று ரயனின் தோளை உலுக்கினேன்.

"தெரிந்து கொள்ளட்டும்; அவருக்குத் தேவை தான்", என்று ரயன் தன் கைகளால் என் தோளை அணைத்தான்.

அலோக்கின் அம்மா சென்றபின் நாங்கள் ஸஸி கடைக்குச் சென்று நாஷ்தா சாப்பிட்டோம்.

"நான் இன்று அந்தத் தொலைபேசி அழைப்பைச் செய்தாக வேண்டும்", என்றேன்.

"உன் மீது நிஜமாகவே கோபமாக இருக்காளா?" என்று ரயன் கேட்டாள்.

"ஒரு மாதம் முன்பு கோபமாகத் தான் இருந்தாள். ஒரு மாதத்தில் என்னை மிஸ் பண்ணியிருப்பாள்", என்றேன்.

"தெரியவில்லை. இந்த மிஸ் பண்ணுவது, பிறகு அதைப் பற்றி ஒண்ணும் செய்யமால் இருப்பது. இது என்னவென்றே புரியலை" என்று ரயன் ஒரு கவரை ஜீன்ஸ் பாக்கெட்டிலிருந்து எடுத்தான்.

ஸஸி ஒரு பிளேட்டு பராத்தாவை எங்கள் முன் வைத்தார். ரயன் மேசையின் மீது அந்தக் கடிதத்தை வைத்தான். அந்தச் சூடான பராத்தாக்களைப் பிய்த்துத் தின்றான்.

"அலோக்கோடு வராமல் இங்கே சாப்பிட்டால் விநோதமாக இருக்கு. சாப்பிடுவதில் ஒரு அவசரமே இல்லை", என்றான் ரயன்.

"வீட்டிலிருந்து வந்த கடிதமா?" என்றேன்.

"நீ சொன்னால் சரி."

எங்கேயிருக்கிறார்கள் "அமெரிக்காவில் எல்ஏவில்" (LA) என்றான் ரயன்.

"எவ்வளவு முறை உன் பெற்றோர் கடிதம் எழுதுகின்றனர்?"

"முதலில் வாரா வாரம்; பிறகு இரண்டு வாரத்துக்கு ஒருமுறை. இப்பொழுது மாதம் ஒருமுறை", ரயன் அலட்சியமாகப் பராத்தாக்களை மஞ்சள் வெண்ணையில் முக்கித் தின்றான்.

"நீ திரும்பவும் பதில் போடுவியா?" என்று கேட்டேன்.

"இல்லை; அது கொரியராக இருந்தால் அதைக் கொடுப்பவன் ஓரிரு வரி எழுதச் சொல்லிக் கட்டாயப்படுத்தவான்."

“ஏன் ரயன்? அவர்கள் வெளிநாட்டில் பணம் சம்பாதிக்கக் கஷ்டப்படுகிறார்கள். என்ன வெறுப்பு உனக்கு?”

“அவர்கள் மீது ஒ உணர்ச்சியும் இல்லை. எனக்கு எந்த அக்கறையும் இல்லை. எனக்கு இன்னொரு பராத்தா வேணும்.”

“வாயை மூடுடா. அப்படி எப்படி இருக்க முடியும்? அவர்களின் எல்லா கடிதங்களையும் ஏன் பத்திரப்படுத்தறே? உன் வோட்கா ஒளித்திருந்த இடத்தில் பார்த்தேனே. நூற்றுக்கும் மேலான கடிதங்கள்.”

ரயன் கடித்து மெல்வதை நிறுத்தினான். “அது மிகவும் கஷ்டமான விஷயம்; விளக்க முடியாது. எனக்கு அதைப் பற்றிப் பேச வேண்டாம்.”

“என்னிடம் பேச மாட்டாயா?”

“அவர்கள் விந்தையானவர்கள். என் போர்டிங் பள்ளிக்குப் பின் சேர்ந்து இருக்கலாம் என்று பல முறை சொன்னேன். ஆனால் அயல்நாட்டு வியாபாரம் சூடு பிடிக்கத் தொடங்கியது. அதனால் அவர்கள் போகப் பிரியப்பட்டார்கள். எனக்கு என்ன வேண்டும் என்பது அவர்களின் மனதில் இல்லை. சரி; எனக்கு டாலர்களில் காசோலை வருகிறது. நன்றி! ஆனால் உன்னை-மிஸ்-பண்ணுகிறோம் போன்ற புலம்பல் எல்லாம் எனக்குத் தேவையில்லை. சரி மிஸ் செய்வதால், அதைப் பற்றி என்ன செய்யப் போகிறீர்கள்?”

“டிஸ்கோவைப் பற்றி அவர்களிடம் சொன்னாயா?” என்றேன்.

“உனக்கென்ன பைத்தியமா?” என்றான் ரயன்.

“ஐஐடிக்குப் பிறகு நீ அவர்கள் வியாபாரத்தில் இணையலாம். நம்முடைய வேலை தேடும் படலத்தின் லட்சணம் தான் தெரியுமே! நீ அதைப் பற்றிக் கவலைப் படாமல் இருக்கலாம்.”

“முடியவே முடியாது!” என்றான் ரயன். அவன் கைகளை இறுக்கி மூடித் திறந்தான். “நிச்சயம் இல்லை. நான் ஒரு பராத்தா கடைதிறப்பேன்; கூலியாக வேலை செய்வேன். கார்களைக் கழுவுவேன் ஆனால் அவர்களுடன் வேலை பார்க்க மாட்டேன்.”

“அவர்கள் உன் பெற்றோர்கள்.”

என்னைக் கேவலமாகப் பார்த்தான். “ரொம்ப நன்றிடா! நான் அலோக்கிடம் போறேன். நீ உன் பெண்ணுடன் களிப்பாக இரு.”

“ரயன், நீ உன்னுடைய ல்யூப் ப்ராஜெக்டை, அது வெற்றி பெறும் தருவாயில் விட்டுவிடு என்று சொன்னால் கைவிடுவாயா?” என்றேன்.

“என்ன“

“என் கேள்விக்குப் பதில் சொல்”, என்றேன்.

“ஐஐடியில் நான் செய்த ஒரே நல்ல விஷயம் அது தான். அது என் இலட்சியக் கனவு; என் வியர்வை என் உழைப்பு; என் நம்பிக்கை மாட்டேன்! அதை எப்படித் தூக்கி எறிய முடியும்?”

“இந்தப் பானை வியாபாரம் உன் பெற்றோரின் ல்யூப் ப்ராஜெக்ட்”, என்று சொல்லி எழுந்து நின்றேன்.

அவன் தன் கடிதத்தை எடுத்துக் கொண்டு நடந்து சென்றான்.

“அதற்குப் பதில் போடு, ரயன்”, என்று கத்திக் கொண்டே சாலையைக் கடந்தேன்.

அவன் அந்தக் கடிதத்தை மறுபடியும் பாக்கெட்டில் பத்திரப்படுத்தினான்.

“நேஹா, நீயா?” என்றேன். எனக்கு நூறு சதவிகிதம் கண்டிப்பாகத் தெரியும் அது அவள் தான் என்று.

“ஹரி!” என் அழைப்பை எதிர்பார்த்துக் காத்திருந்தாள் என்ற உணர்வை அவளால் மறைக்க முடியவில்லை.

“நீ துண்டிக்கும் முன் நான் ஒன்று சொல்லலாமா?” என்று பவ்யமாகக் கேட்டேன்.

“நான் துண்டிக்கப் போவதில்லை. என்ன சொல்லப் போகிறாய்?” என்றாள்.

“நான் உன்னை மிஸ் செய்கிறேன். உன்னைக் காதலிக்கிறேன். கடவுளே! உன்னுடன் அவ்வளவு நெருங்கி இருந்துவிட்டு எப்படிச் சொதப்பினேன்? உன் அப்பாவின் பாடத்தில் எனக்கு ஒரு ’ஏ’

தேவைப்பட்டது. அவரை எப்படியாவது அசத்த வேண்டும் என்று தான் நினைத்தேன். எங்களின் மடத்தனமான மூளைக்கு இந்த ஆபரேஷன் பெண்டுலம் தான் வழி என்று பட்டது. எங்கள் மீது டிஸ்கோ நடத்தி எங்களை அழித்து விட்டார்கள். இப்பொழுது நீயும் என்னுடன் பேசப் பிரியப்படவில்லை” என்று குரல் தழுதழுத்துக் கம்மியது.

“ஹரி?”

“என்ன?”

“நானும் உன்னை மிகவும் மிஸ் பண்ணினேன்,” என்று அழத் தொடங்கினாள்.

என்னாலும் அழ முடிந்தால் நன்றாக இருக்கும் என்று யோசித்தேன். ஆனால் அவளின் வார்த்தைகள் என்னைச் சந்தோஷத்தில் ஆழ்த்தின. என் மனதில் எனக்கே ஹை-5 கொடுத்துக் கொண்டேன். என் சந்தோஷத்தைக் கட்டுப்படுத்த முயன்றேன். தீவிரமாகப் பேசு, தீவிரமாக பேசு என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்.

“ஓ நேஹா! அழாதே!” என்று சமாதானப்படுத்தினாலும் அதுவே அவளை மேலும் அழ வைத்தது. ஒரு பெண் என்னை மிஸ் செய்வதால் அழுகிறாள் என்றால் அது எவ்வளவு பெரிய சந்தோஷம் என்று வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

“என்னால் முடியலை ஹரி. உன்னை மறக்க முடியலை. நீ ஏன் அப்படிப் பண்ணினே?” என்று கேட்டாள்.

ஒகே! இது ஒரு முன்னேற்றம் தான் என்று எண்ணினேன்.

“எப்படி நீ இப்படி செய்தாய்?” என்பதைவிட, “ஏன் செய்தாய்?” என்பது அவ்வளவு மோசம் இல்லை. அவை அர்த்தமற்றவை என்றாலும் எனக்கு என் காரணங்கள் இருந்தன. அவற்றை எல்லாம் இப்பொழுது சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

“நான் மேலும் விவரமாகக் சொல்கிறேன். நாம் சந்திக்கலாமா? ஒரு பத்துநிமிடம்?” என்றேன்.

“பார்க்கணுமா? அப்பா நான் உன்னைச் சந்திக்கவே கூடாது என்று சத்தியம் வாங்கிக் கொண்டார்,” என்றாள்.

இதற்கு என்ன பதில் சொல்வது? ஏதாவது ஒரு தர்க்க ரீதியான காரணத்தை யோசித்தேன். அப்பாவுக்குக் கொடுத்த சத்தியத்தை மீறுவதற்குப் பொருத்தமான காரணம் என்ன? எனக்கு ஒரு காரணமும் தோன்றவில்லை.

“நான் உன்னை மிஸ் பண்ணறேன் நேஹா,” என்றேன். சந்தேகமாக இருக்கும்பொழுது, உணர்ச்சிவசப்படுவது நல்லது.

“நானும் உன்னை மிஸ் செய்கிறேன். ஐஸ் கிரீம் கடையில் சந்திக்கலாமா?”

“நிச்சயமா. ஆனால் ஒரு கண்டிஷன்,” என்றேன்.

“என்ன?”

“இம்முறை ஸ்டிராபெரி சாப்பிடாமல், இருக்கலாமா? எனக்கு சாக்லெட் அதிகமாகப் பிடிக்கும்,” என்றேன்.

“வாயை மூடு ஹரி,” சிரிப்பை மறைக்க முடியாமல் சொன்னாள். அப்பாடா! அவளைச் சிரிக்க வைத்து விட்டேன். அழுகையிலிருந்து சிரிப்புக்கு மாறிவிட்டாள், ஒரே நொடியில்; மேலும் சந்திக்க ஒப்புக் கொண்டுவிட்டாள். அந்த பூத்தில் ஒரு சின்ன நடனமே ஆடிவிட்டேன், மகிழ்ச்சியில். மற்ற வாடிக்கையாளர்கள் எனக்கு லாட்டரி அடித்து விட்டதோ என்று நினைத்தார்கள்.

“சரி சந்திக்கலாம்,” என்று சொல்லி தொலைபேசியை வைத்தேன். அந்த நாணயம் உள்ளே விழும் சத்தம் கேட்டது. ஒரு ரூபாயைச் செலவழிக்க என்ன ஒரு குதூகலமான வழி!

நேஹா ஐஸ்கிரீம் கடையில் இரண்டு மணி நேரம் என்னுடன் கழித்தாள். பன்னிரெண்டு மடங்கு கூடுதல் நேரம், “பத்து நிமிடம்” என்று சொன்னதற்கு. அந்த இரண்டு மணி நேரத்தில் அவளிடம் ஒப்புதல் வாக்குமூலம் போல் மொத்தக் கதையையும் கொட்டிவிட்டேன். அவளால் வெகு நேரம் வருத்தமாக இருக்க முடியவில்லை. நான் சாக்லெட், ஸ்டிராபெரி -இரண்டும் வாங்கினதால் கூட இருக்கலாம். அல்லது அவள் மகிழ்ச்சியாக இருந்தாள்; அவ்வளவு தான்; அதுவும் என்னைச் சந்திப்பதிலான மகிழ்ச்சி. ஒரு வாரம் கழித்து

அடுத்த சந்திப்புக்கான திட்டம் தீட்டினோம். வெகு விரைவில், "அடுத்த சந்திப்பு எப்பொழுது என்று முந்தைய சந்திப்பில் தீர்மானம் செய்யும்," பழைய நிலைக்கு வந்தோம். வேலையில்லாத செமஸ்டரின் நேரத்தை ஓட்ட எனக்கு அது உதவியாக இருந்தது. பேரா வீராவின் ஆய்வுக்கூடத்தில் ஒரு நாளைக்கு எட்டு மணிநேம் உழைத்தோம். சிலசமயம் பத்து அல்லது பனிரெண்டு மணி நேரம் கூட செலவழித்தோம். ரயன் அதிக நேரம் உழைத்தான். பதினாறு மணிநேரம், தன் ஸ்கூட்டரை அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்தான், இந்தப் பரிசோதனைக்காக. அதனால், இன்ஸ்டியில் எங்கு போக வேண்டுமானலும் நடந்து தான் செல்ல வேண்டும். அலோக் ஒரு மாதத்திற்குக் கட்டை உதவியுடன் நடந்தான். பிறகு லேசான நொண்டலுடன், நடக்கத் தொடங்கினான் பேரா வீராவுக்கு எங்களின் இரண்டாவது 'ப்ரபோஸல்' பிடித்திருந்தது. டீனிடம் நாங்கள் செய்த வேலையைப் பற்றி அடிக்கடி எடுத்துரைத்தார். அவர் சீரான மதிப்பெண் அட்டைப் பற்றியோ, கூடுதல் கிரெடிட் பற்றியோ பேச்சே எடுக்கவில்லை. ஆனாலும் இந்த வேலையை முடிக்காமல் அதைப் பற்றி யோசிக்கச் சந்தர்ப்பமே இல்லை என்று எங்களுக்குத் தெளிவாகப் புரிந்தது. செமஸ்டர் முடிய ஒரு வாரம் இருந்த பொழுது பேரா வீராவிடம் "பிரபோஸலைக்" கொடுத்தோம். இருநூறு பக்கம்; இம்முறை ரயன், அலோக் மற்றும் என்னிடமிருந்து வந்தது.

"செம்ம! எவ்வளவு கனமான பிரபோஸல்," என்றார் பேரா வீரா.

"எங்களின் மொத்த ஆய்வும் இருக்கு. நாங்கள் செய்த கூடுதல் வேலையைத் தனிமைப்படுத்தி குறிப்பிட்டுள்ளோம்" என்றான் ரயன்.

"எனக்குத் தெரியும் இது 'பிரபோஸலுக்கு' மேலே!" என்று பேரா வீரா அதைப் புரட்டினார். "இந்த நான்கு மாதங்கள் முடிந்தே விட்டது என்று என்னால் நம்ப முடியவில்லை"

"எனக்கும் தான். இனி வகுப்புக்குச் செல்லும் நாள் வந்தாச்சு," என்றேன்.

"நிறைய வகுப்புகள். அதிகப்பட்ச கிரெடிட்டுகள். இம்முறை நான் எதையும் விடுவதாக இல்லை," என்றான் அலோக்.

"நானும்தான். சரிதானே ரயன்?" என்றேன்.

"ஆமாம்; நானும் கூட வருகிறேன்," என்றான் ரயன்.

"பேரா வீரா, இதை இனி என்ன செய்வது?"

பேரா வீரா அந்தப் பிரபோஸலை தன் மேசையில் வாங்கி வைத்துக் கொண்டார். "நான் கடைசியாக ஒரு முறை படிக்கிறேன். பெரிய திருத்தங்கள் இல்லையென்றால் அப்படியே கொடுத்து விடுகிறேன். நன்றாக வேலை செய்திருக்கிறீர்கள். இந்த வாரம் லீவு எடுத்து மகிழ்ச்சியாகக் கொண்டாடுங்கள். அடுத்த செமஸ்டர் பளு சீக்கிரத்தில் ஆரம்பித்து விடும்.

"கிரெடிட் மற்றும் மதிப்பெண் அட்டை, ஸார்?" என்ற அலோக் நினைவூட்டினான்.

"பிறகு சொல்கிறேன். இந்தப் பிரபோஸல் எப்படி வரவேற்கப்படுகிறது என்பதைப் பொருத்துத் தான் சொல்ல முடியும். ரொம்ப நம்பிக்கை வைக்காதீர்கள். என்னால் முடிந்ததைப் பார்க்கிறேன்" என்றார் பேரா வீரா.

அவரின் அலுவலகத்தை விட்டு வெளியே வந்தோம். மூன்று மாதங்கள் பாடுபட்ட வேலையை விட்டு வெளியே வந்தோம். எங்களுக்கு அது பயன் படுமா என்று தெரியவில்லை. ஆனால் நிறைய உழைப்பு இருக்கிறது அதில். எங்களின் சிறந்தவற்றைச் செய்திருக்கிறோம். ஜனவரி 5, கடைசிசெம் ஆரம்பித்தது. ஒரு வாரம் தான் இருந்தது. ஆறு நாள் கழித்து 11. அன்று நேஹாவுடனான என் சிறந்த சந்திப்பு. அவள் மொத்த நாளும் தனியாக இருப்பாள். இன்னொரு முறை என்னை வீட்டிற்கு அழைத்தால்? என் எண்ணம் அலை பாய்ந்தது.

*Downloaded from [Ebookz.in](Ebookz.in)*

# 25

## கடிதங்களின் தினம்

கடைசி செமஸ்டரின் முதல்நாள், இன்ஸ்டியில் அடியெடுத்து வைத்த முதல் நாளைப் போல் சிறப்பாக இருந்தது. எட்டு மணி வகுப்புக்கு ஆறு மணிக்கே எழுந்தோம். ரயன் குளித்து விட்டு இருபது நிமிடம் நிதானமாகத் தலை வாரிக் கொண்டான்.

இருந்தும் வகுப்பு ஆரம்பிப்பதற்கு முன் சென்று விட்டோம். பேரா ஸக்ஸேனாவின் "ரெஃப்பிரிட்ஜிரேஷன் மற்றும் ஏர் கன்டிஷனிங்" அதாவது (RAC) ராக் வகுப்பு; அவர் தான் ஸீனியர் பேராசிரியர் அடுத்து அந்தத் துறைக்குத் தலைமையாக வரப்போகிறவர் என்று பேச்சு அடிப்பட்டது. அதாவது செரியன் வேறு எதாவது மாற்றம் தேடினால், ஓய்வு பெற்றால், இறந்துவிட்டால் அது எதுவும் இப்போதைக்கு நடக்கப் போவதில்லை. அதனால் பேரா ஸக்ஸேனா நான்காவது வருடம் மாணவர்களுக்கு "ஜில்லென்று" பாடம் எடுத்துக் கொண்டிருக்கிறார். நாங்கள் தான் முதலில் வந்த மாணவர்கள்; அவர் ஏற்கனவே வகுப்பில் இருந்தார்.

"வாங்க, வாங்க", என்றார் பேரா ஸக்ஸேனா, "மிகவும் ஆச்சரியமாக இருக்கே! யார் நினைத்திருப்பார்கள், நான்காம் வகுப்பு மாணவர்கள் சரியான நேரத்திற்கு வருவார்கள் என்று."

அவர் சொல்வதும் சரிதான். கடைசி செமஸ்டரில் அனைவரும் வேலைக்கான நேர் காணலுக்குத் தயாராகிக் கொண்டிருந்தனர். அல்லது எம்பிஏக்காகப் படித்துக் கொண்டிருந்தனர். இம்முறை எந்தக் கம்பெனிகள் வந்துள்ளன என்று கூட நாங்கள் விசாரிக்கவில்லை. இந்த வருடம் எங்களுக்கு எங்களின் பட்டம் கிடைக்குமா என்றே தெரியாது.

"குட்மார்னிங் ஸார்," ரயன் முதல் வரிசையில் அமர்ந்தபடி கூறினான். நாங்கள் நான்கு மாதங்களுக்குப் பின் வகுப்பறையில் அமர்கிறோம். ஒரு கரும்பலகையைப் பார்த்து இவ்வளவு பிரமிப்பு ஏற்பட்டதில்லை. இவ்வளவு நாட்களில்; வகுப்பு எப்பொழுது தொடங்கும் என்ற ஆவல் எழும்பியது.

"உங்கள் பெயர் என்ன?" என்றார் பேரா ஸக்ஸேனா.

"நான் இந்தப் பெயர்களைக் கேள்விப்பட்டிருக்கேன்," என்றார்

பெயர்களைக் கேட்டதுமே. அவருடைய நெற்றி சுருங்கியது. நினைவுக்குக் கொண்டு வர முயற்சித்தார்.

"எங்களுக்கு ஒரு டிஸ்கோ நடந்தது போன செமஸ்டரில். நீங்கள் கூட கமிட்டியில் இருந்தீர்கள்?" என்றான் ரயன்.

"அட ஆமாம்! இப்பொழுது புரிகிறது," என்றார் பேரா ஸக்ஸேனா.

"செரியன் கேஸ். பல மாதங்களில் இது தானே உங்களின் முதல் வகுப்பு."

ஆமாம் என்றோம் மரியாதையாக.

"அது தான் நீங்கள் சீக்கிரம் வந்திருக்கிறீர்கள். இப்போ உங்களின் நிலை என்ன? சரியான நேரத்துக்கு உங்களால் வெளியே வரமுடியுமா?" என்று பேரா ஸக்ஸேனா கேட்டார். நிஜமான அக்கறையுடன் கேட்டாரா, அல்லது பொழுதைப் போக்கக் கேட்டாரா என்று தெரியவில்லை.

"எங்களுக்கு ஐந்து கிரெடிட் கம்மியாக இருக்கு ஸார்; நாங்கள் இந்த செமஸ்டர் பூராவும் பளு ஏற்றிக்கொண்டிருக்கிறோம்," என்றான் அலோக்.

"எவ்வளவு பாடம் இருக்கு?"

"ஆறு," என்றேன்.

"அது மிக அதிகம்! கடைசி செமஸ்டரில் மாணவர்கள் இரண்டு எடுத்துக் கொண்டாலே பெரிய

விஷயம். அப்பவும் அவர்கள் வகுப்பு வர மாட்டார்கள். நீங்கள் பூரா வகுப்பில் இருக்க வேண்டுமே!" என்றார் பேரா ஸக்ஸேனா.

"ஆமாம் ஸார், வேறு வழி இல்லை," என்றேன்.

"செரியனிடம் கிரெடிட்ஸ் பற்றிப் பேசினீர்களா?" பேரா ஸக்ஸேனா கேட்டார்.

"பேரா வீரா எங்களுக்காக முயற்சிக்கிறார்," என்றேன்

"ஹம்ம் இந்தக் கல்விமுறை கருணையற்றது. உங்களின் கம்மி ஜிபிஏவைக் கொண்டும் வேலையில் சேர்ந்திருக்கலாம். ஆனால் இந்த டிஸ்கோ உங்கள் மொத்த படிப்பையே காலி பண்ணிவிடும்," என்றார்.

அடுத்த சில நிமிடங்களில் வேறு மாணவர்கள் உள்ளே நுழைய ஆரம்பித்தனர். நாங்கள் ஒரு பத்து பேர் இருந்திருப்போம்; ஆனால் முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் இந்த வகுப்பைத் தேர்ந்தெடுத்திருந்தனர். முன்பு நடந்த 8 மணி நேர வகுப்புகளை நினைத்துப் பார்த்தேன். எங்களின் இரண்டாவது மற்றும் மூன்றாவது வருடங்களில், நாங்கள் அதைப் பொருட்படுத்தியதே இல்லை. ஆனால் இப்பொழுது படிக்கும் அக்கறை அதிகமாக இருந்தது.

"தெர்மோ டைனமிக்ஸின் மூன்றாவது வழி," என்று பேரா கரும் பலகையில் எழுதினார்.

ரயன், அலோக், நான் - மூவரும் அவர் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் அடுத்த ஒரு மணி நேரத்திற்குக் கவனமாக எழுதினோம்.

கடைசி செமஸ்டர் தொடங்கி ஒரு இரண்டு வாரம் கழித்து நான் நேஹாவைச் சந்தித்தேன். முதல் முறையாக எனக்கு நேரமில்லாமல் அவசரமாக ஓடினேன், அவளைச் சந்திப்பதற்காக. வார இறுதியில் நான் ஐந்து வீட்டுப்பாடங்களை முடிக்க வேண்டியிருந்தது. வரப்போகும் மைனர் பரிட்சைகளுக்குப் படிக்க வேண்டியிருந்தது. எந்தப் பாடத்திலும் ஃபெயில் ஆக முடியாது. என்கடைசி நாட்களில் ஐஐடியில் அனைத்தையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற பெரிய துடிப்பு ஏற்பட்டிருந்தது. ஆனாலும் நேஹாவினுடைய சந்திப்பை எதற்காகவும் விலக்க முடியாது. என் எர்கோனாமிக்ஸ் பாடத்தின் ஷீட்டுகளை ஸ்டேபிள் செய்துவிட்டு, நான் ஐஸ் கிரீம் கடையை நோக்கி ஓடினேன்.

"இருபது நிமிடம் தாமதம்! நீ இருபது நிமிடம் தாமதம் என்று உணர்கிறாயா?" என்றாள் நேஹா.

"ஸாரி, இந்தப் பாடம்"

"இன்று நான் சீக்கிரமே போக வேண்டும். அப்பாவின் அண்ணாவும், அவர் குடும்பமும் வீட்டிற்கு இரவுச் சாப்பாட்டுக்கு வருகிறார்கள். அவர்களின் வருகைக்கான ஏற்பாடு செய்வதில் அப்பா ஓய்ந்தே விட்டார். எப்பொழுதிலிருந்து நீ படிப்புக்கு இவ்வளவு மதிப்பு கொடுக்கிறே?" அவள் இடுப்பிலிருந்து கைகளை எடுத்தபாடில்லை.

"தெரியவில்லை. எந்தவொரு முயற்சியையும் செய்யாமல் விட வேண்டாம் என்ற தீர்மானம். உனக்கு ஐஸ்கிரீம் வாங்கட்டுமா?"

"வேண்டாம். உனக்காகக் காத்திருந்த சமயத்தில் ஏற்கனவே ஒன்றைத் தின்றுவிட்டேன். இன்று உறவினர்கள் வருவதால் வீட்டில் விருந்து. நான் என் எடையை குறைக்கப் பார்க்கிறேன்," என்றாள்.

"எதைக் குறைக்க?" என்றேன்.

"என் எடையை", என்றாள்.

"நிஜமாகவா? ஏன்? நீ பார்க்க ரொம்ப அழகாக இருக்காயே," என்றேன்.

"இல்லவே இல்லை. என் காலேஜில் உள்ள மற்ற பெண்களை நீ பார்க்க வேண்டும். சரி நீ வேற என்ன செய்கிறே?" என்றாள்.

"வகுப்புகள், வகுப்புகள், மேலும் வகுப்புகள். காலை எட்டிலிருந்து, ஆறு, தினமும் வகுப்புகள் தான். பிறகு நூலகத்தில் ஒரு மூன்று மணிநேரம். பிறகு இரண்டு மணிநேரம் படிக்கணும், எழுதணும். எனக்குப் பைத்தியம் பிடிக்காத குறை. வேறு என்ன செய்ய முடியும்? இவ்வளவு பாடங்கள் இதுவரை இருந்ததில்லை.

"ரயனும், அலோக்கும் எப்படிச் சமாளிக்கிறார்கள்?"

"அவர்களும் இதேபோல் தத்தளித்துக் கொண்டிருக்காங்க. இவ்வளவுக்குப் பிறகும் எங்களுக்கு கிரெடிட் கம்மியாக உள்ளன," என்றேன்.

“உங்களின் சீ2டீ என்ன ஆச்சு? ஒத்துழைத்து ஆக்கிரமிப்பு செய்யும் யுக்தி”

“அது மடத்தனம். அப்படியெல்லாம் முடியாது நேஹா. எனக்கே தெரியும் அது முடியாது. இப்பொழுது நான் பிஸியாக இருந்தாலும், நிறைய கற்றுக் கொள்கிறேன். நான் வெறும் டப்பா அடித்துப் தப்பிக்கப் பார்க்கவில்லை. அது இல்லை எங்கள் குறிக்கோள்.”

“செம்ம! என் பொறுக்கி இப்போ திருந்திட்டான்! பிறகு என்ன குறிக்கோள்?” அவள் கேலிக் குரலில் கேட்டாள். அது நல்லது.

“படிப்பது; அறிவைச் சேகரிப்பது; இந்தக் கல்வி முறை தவறாக இருந்தாலும், இதிலிருந்து எவ்வளவு கற்றுக் கொள்ள முடியுமோ, அவ்வளவையும் கற்பது. அந்த ரயன் சொல்வதைக் கேட்காமல் இருப்பது,” என்றேன்.

“நீ ரொம்பத் திருந்திட்டே! புத்திசாலித்தனமா பேசறே! என் பொறுக்கியை நான் மிஸ் பண்ணறேன்,” என்றாள்.

நான் மௌனமாகி அவள் கண்களைப் பார்த்தேன். ஒரே நொடியில் எழுந்து அவள் உதட்டில் முத்தமிட்டேன்.

“ஹரி! என்ன பைத்தியக்காரத்தனம்? மக்களுக்கு என்னைத் தெரியும் இங்கே!” என்றாள்.

“அந்தப் பொறுக்கி இன்னமும் என்னுள் இருக்கிறான் என்று நிரூபிப்பதற்காக,” என்றேன்.

“ஆமாம், சரி! நான் என்ன கொண்டு வந்தேன் என்று பார்,” என்று பையிலிருந்து ஒரு தாளை எடுத்தாள்.

“உன் அண்ணனின் கடிதமா?” என்றேன்.

“ஆமாம்; அவன் கடைசி கடிதம். நீ இதை பத்திரமாக வைத்துக் கொள்,” என்றாள்.

“ஏன்?” என்றேன். இது என்ன ஒரு அச்சுறுத்தும் பரிசு?

“தெரியலை! அப்பாவுக்கு இப்பொழுது என் மீது நம்பிக்கை இல்லை. அடிக்கடி என் அறையைச் சோதிக்கிறார். அவர் இதைக் கண்டுபிடித்து விடக்யகூடாது.”

“அப்படியா? உன்னைத் தொந்தரவு செய்கிறாரா?” என்றேன்.

“ரொம்ப இல்லை. அவரிடம் நான் அதிகம் பேசுவது கூட இல்லை. அன்றொரு நாள் உங்களைப் பற்றி அவர் பேசுவதைக் கேட்டேன்.

“என்ன? எங்கே?”

“சொல்றேன். என் கடிதத்தை வைத்துக் கொள்வாயா?”

“நான் நிச்சயம் பாதுகாக்கிறேன். என்ன சொன்னார்?”

“டீன் சாஸ்திரி வீட்டிற்கு வந்திருந்தார். உங்களின் திட்டத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.”

“ல்யூப் ப்ராஜெக்ட்”, என்றேன்.

“ஆமாம்; அது மாதிரி ஏதோ. பேரா வீரா ஆளுக்கு ஒரு காப்பி கொடுத்திருந்தார். டீன் சாஸ்திரி உங்களின் கண்டு பிடிப்புகளைப் புகழ்ந்தார்.”

“உன் அப்பா என்ன சொன்னார்?” என்றேன்.

“நீ அதைக் கேட்க விருப்பப் படமாட்டாய்”, என்றாள்.

“இல்லை சொல்லு”, என்று கத்தியே விட்டேன். ஒரு விஷயத்தைச் சொல்ல இந்தப் பெண்களுக்கு ஏன் இவ்வளவு நேரம்?

“அவர் சொன்னார், இது சுமாரான முயற்சி, ஆனாலும் இந்த மாணவர்களை நம்பாதீர்கள் என்று டீனை எச்சரித்தார். ‘யாருக்குத் தெரியும்? ஒரு முறை ஏமாற்றினார்கள். இந்த முடிவு கிடைக்க ஏமாற்றியிருக்கலாம். அவர்களுக்குக் கிரெடிட் தான் குறி.’’ என்று சொன்னார்.”

“இது என்ன அபத்தம். மொத்தமும் அபத்தம். நாங்கள் இதற்காக எவ்வளவு பாடுபட்டோம் என்று தெரியும் தானே நேஹா?”

“எனக்குத் தெரியும். ஆனால் அவர் இதைத்தான் சொன்னார். இதைப் பற்றி யோசியுங்கள் என்று அவரிடம் சொல்லி விட்டு டீன் சென்றார்.”

நான் கடிதத்தை மேசை மீது வைத்தேன். அதைப் பிரித்தேன். ஸமீரின் கடைசி வார்த்தைகள். தன் அப்பாவின் ஐஐடி தீவிரத்திற்கும், வெறிக்கும் பயந்து தன் உயிரையே மாய்த்துக் கொண்ட மகன். ஒரு ரயில் நம் மீது ஏறினால் எவ்வளவு வலிக்கும்?

“இரண்டு பெரிய ஸ்டிராபெரி ஐஸ்கிரீம், குடும்ப பாக்”, பின்னால் ஒரு குரல் கேட்டது.

“ஹலோ செரியன் ஸார். என்ன விசேஷம்? விருந்தாளி வற்றாங்களா?” என்று கௌண்டர் பையன் கேட்டான்.

“ஆமாம். கானடாவிலிருந்து என் அண்ணன் வருகிறார். அவருக்கு ஐஸ்கிரீம் ரொம்பப் பிடிக்கும்”, என்று பேரா செரியனின் குரல் கேட்டது.

நான் என் மேசையில் உறைந்தேன். ஃபிரிட்ஜிலிருந்த மற்ற ஐஸ்கிரீம்களுக்கும் எனக்கும் வித்தியாசம் இல்லை. நேஹாவும் அசை வற்று இருந்தாள். நாங்கள் அவர் எதிரேயே அமர்ந்திருந்தோம். கடையிலிருந்து வெளியே ஓட முடியாது. எங்களை அவர் பார்க்காமல் இருக்க வேண்டுமே என்று மௌனமாகப் பிரார்த்தித்தோம். ஆனால் இது செரியன். அந்த ஸ்டீல் கௌண்டரில் எங்களின் முக பிம்பம் தெரிந்தது அவருக்குப் போதுமானது.

“நேஹா!” எங்கள் பக்கம் திரும்பினார். அந்தக் குரலில் தெரிந்த ஆத்திரத்தின் சூட்டில் ஐஸ் கிரீம்கள் அனைத்தும் உருகியிருக்கும்.

நேஹா ஒன்றும் பேசவில்லை. நானும் நகரவில்லை. செரியன் டிஸ்கோவின் தலைமைப் பொறுப்பில் இருந்த பொழுது தான் அவரைக் கடைசியாகச் சந்தித்தேன். திரும்பவும் அழித்து விடுவாரோ? என் ஐஸ்கிரீமைக் கூட நான் ஆர்டர் செய்யவில்லையே.

செரியன் என் அருகில் அமர்ந்தார். என் இதயம் துடித்த வேகத்தில் அது என் உடலிலிருந்து வேற்று கிரகத்துக்குத் தப்பிச் செல்லும் அவசரத்தில் இருந்தது.

“என்ன திமிர்? ப்ளடி ராஸ்கல், உனக்கு ஆனாலும் திமிர் அதிகம்”, என்று என்ன முறைத்தார்.

நேஹா தொண்டையைச் செருமினாள். ஆனால் அவளை அமைதியாக இருக்கும்படி கைகாட்டினார்.

“ஸார், நான் வந்து. ஸார் யதேச்சையாக அவளை இங்கு சந்திக்க நேர்ந்தது”, என்றேன். யோசித்த படியே பேசினேன்.

“திரும்பவும் பொய் சொல்கிறாயா?” செரியன் மடக்கிய முஷ்டியால் மேசையை ஒங்கிக் குத்தினார். அது கடிதத்தின் மீது பட்டது; நல்லவேளை கிழியவில்லை.

“அப்பா, ஜாக்கிரதை”, என்று அவரின் கோபமான முஷ்டியைத் தள்ளப் பார்த்தாள்.

“இது என்னடா, ராஸ்கல்?” செரியன் என்னைப் பார்த்தார். அவரின் முஷ்டி அந்தக் கடிததின் மீதிருந்தது. “என் பெண்ணை வளைத்துப் பிடிக்கக் காதல் கடிதமா? அவளை விட்டு விலகியிரு என்று சொன்னேன் தானே? ஒரு டிஸ்கோ போதாதா?”

“அது ஸமீரின் கடிதம்”, என்றேன்.

“ஹரி, வாயைமூடு”, என்று நேஹா தன்னிச்சையாகச் சொன்னாள்.

நான் ஏன் அதைச் சொன்னேன் என்று புரியவில்லை. ஆனால் மறுபடியும் சொல்லப் போவதில்லை.

“அவன் என்ன சொன்னான்?” என்றார் பேரா செரியன். நேஹாவும் நானும் மௌனமாய் இருந்தோம்.

“உன் கையை எடு நேஹா”, செரியன் அவளை முறைத்தார். அவள் தன் கையை எடுத்து முகத்தின் அருகே கொண்டு சென்று கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். செரியன் எதுவும் பேசாமல் அந்தக் கடிதத்தை படித்தார்.

அவர் தன் முகத்தில் எந்த பாவமும் காட்டாமல் இருக்கப் படாதபாடு பட்டார். ஆனாலும் கண்கள் குறுகின, கைகள் நடுங்கின. அந்தக் கடிதத்தை மீண்டும், மீண்டும் படித்தார். அவர் வாங்கிய இரண்டு குடும்ப பாக் ஐஸ்கிரீம் உருகி மேசை மீது கொழ கொழ வென்றானது. ஆனாலும் அவர் மனதின் இளகிய சக்தி எங்களைக் கவலைக்குள்ளாக்கியது. அவர் தன் கண்ணாடியைக் கழட்டினார். யோசித்தே பார்க்க முடியாததைச் செய்தார். ஆம்! தலைமைப் பேராசிரியர், என் வாழ்க்கையில் பிரச்சனை பண்ணி, கொடுங்கோலாட்சி செய்பவர், அவரின் கண்கள் ஈரமாயின. கண்ணோரங்களில் இரண்டு பெரிய சொட்டு கண்ணீர் துளிகள். நான் அங்கே உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தேன். செரியனின் குடும்பமே அழுது கொண்டிருந்தது. நானும் அதில் இணைந்திருக்கலாம், ஆனால் நான் அழும் மனநிலையில் இல்லை. மேலும் ஐஸ்கிரீம் கடைகளில் கும்பலாக ஒப்பாரி வைப்பது சரியல்ல.

“அப்பா, அழாதீர்கள்”, என்று நேஹா தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அது அவரைக் கட்டுக்கடங்காமல் அழ வைத்தது. ஒரு பெரியவர் அழுவதைப் பார்க்க அதிசயமாக இருந்தது. அவர்கள் நம்மைத் தான் அழ வைப்பார்கள். ரயன் இருந்திருந்தால் எப்படியிருக்கும் என்று ஏங்கினேன்.

“வீட்டிற்குப் போகலாம்பா”, என்று நேஹா எழுந்தாள். செரியன் தன் மகளிடம் தஞ்சம் புகுந்தார். அவள் சொல்படி கேட்டார். நேஹாவிடம் அந்த ஐஸ்கிரீம் கவரைக் கொடுத்தேன். அது உருகிக் குழம்பாகிவிட்டது. அவளின் அப்பா அந்தக் கடிதத்தை முத்தமிட்டபடி இருந்தார்.

அவர்கள் கடையை விட்டு வெளியேறினர். நான் நேஹாவுடனான அடுத்த சந்திப்பை தீர்மானிக்க முடியவில்லை. ஆனாலும் செரியனைப் பார்த்து எந்த சேதாரமும் இல்லாமல் பிழைத்ததே பெரிய விஷயம். நேஹா காரை ஓட்டினாள். அவள் பக்கத்தில் செரியன் இன்னமும் அழுகையை நிறுத்தவில்லை.

“ஸார், அந்த ஐஸ்கிரீமுக்குப் பணம் கட்டுகிறீர்களா?” என்று கௌண்டர் பையன் கேட்டான்.

“டேய், செரியன் அழுதாரா? கண்ணீரா? உண்மையாகவே கண்ணால் ஜலம் விட்டு அழுதாரா?” என்று ரயன் நம்பிக்கையற்ற குரலில் கேட்டான்.

“கதறினார்டா! கையால் முகத்தைப் பொத்தி எக்கச்சக்கக் கண்ணீர் சிந்தினார். கிளம்பும் வரை அழுதார். ஐயோ! நான் அந்த இரண்டு ஐஸ்கிர்முக்கும் பணம் வேறு தண்டம் அழுதேன்.”

“கொடுத்த காசுக்கு வசூல்டா. ஒரு ரிபீட் அழுகைக் காட்சி நடந்தால் அதைக் காண நான் நான்கு ஐஸ்கிர்ம் பாக்கெட்டுக்களுக்கான காசைக் கட்டுவேன்.”

“ஆமாம்; அவரும் கஷ்டப்படுவாரா?!” ரயன் ஒரு துள்ளல் ஆட்டம் போட்டான்.

“இது ஒன்றும் வேடிக்கை இல்லை ரயன். அவர் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்?” என்றான் அலோக்.

“அதனால்? அது என் பிரச்சனை கிடையாது. ஆனால் நான் பார்க்காமல் போய்விட்டேனே! நான் மட்டும் இருந்திருந்தால்” என்றான் ரயன்.

“நாளைய வீட்டுப் பாடத்தை ஆரம்பிக்கலாமா? ராக் உண்டா?” என்றேன்.

“இருக்குடா” என்றான் அலோக். “பிரபோஸல் கதி என்ன?”

“எனக்குத் தெரியாது. நேஹா சொன்னது - செரியன் எந்த உற்சாகமும் காட்டவில்லை. அடுத்த வாரம் பேரா வீராவிடம் பேசிப் பார்ப்போம்.”

“கம்பெனிகள் வர ஆரம்பித்துவிட்டன. நான் அறிவிப்புப் பலகையில் பார்த்தேன். மென்பொருளில் நிறைய புது நிறுவனங்கள் வரப் போகின்றன” என்றான் அலோக்.

“இப்பொழுது பார்ப்பதில் பயன் இல்லை. கிரெடிட் கிடைக்க வில்லையென்றால், அடுத்த வருடம் தான் யோசிக்கணும்”, என்று புதிய ஷீட்டுகளில் எழுத ஆரம்பித்தேன்.

அன்றிரவு நான்கு மணிக்குத் தூங்கினேன். கடிதத்தைப் படித்த பின் செரியனின் முகம் போன போக்கு என் மனதில் மிதந்தது. ரயன் சொன்னது போல் வேடிக்கையாகத் தான் இருந்தது. ஆனால் வருத்தமாகவும் இருந்தது. ஒரு வலிமை நிறைந்த செரியன் எப்படி அவ்வாறு உடைந்து நொறுங்கினார்? (இந்த பயங்கரமான மக்கள் எப்படிச் செய்யப்படுகின்றனர்?) நேஹா தன் அப்பாவைப் பிடித்துக் கொண்டு சென்ற விதம்; அவள் தன் அப்பாவை மிகவும் நேசிக்கிறாள். செரியனும் தன் மகன் மீது நிறைய அன்பு கொண்டிருக்க வேண்டும்; அவனைத் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு விரட்டியிருந்தாலும் கூட எல்லா பெற்றோர்களுமே பிள்ளைகள் மீது அன்பு செலுத்துகிறார்களா? ரயன் எப்படிப்பட்டவன்? அவன் தன் பெற்றோர்கள் மீது அன்பு கொண்டவனா? அவர்களும் அவனை நேசிக்கிறார்களா?

நான் விழித்து எழுந்தேன். நான்கு மணிக்கு எனக்கு ஒரு கடிதம் எழுதும் உந்துதல். காலை ஒரு கடிதம் ஏற்படுத்திய புயலின் தாக்கமாக இருக்கலாம். நான் குமாவோனிலிருந்து கணினி மையத்திற்குச் சென்றேன். அது இருபத்தி நாலு மணி நேரம் இயங்கும் மையம். மாணவர்கள் வேலைக்கான விண்ணப்பங்கள் தயார் செய்து கொண்டிருந்தனர். நேர் காணல்கள் வரப் போகின்றன. ஆனாலும் எங்களுக்கு அல்ல!

அன்பான அம்மா, அப்பாவுக்கு,

“நான் ரயன். இதை டைப்அடிப்பதற்கு மன்னிக்கவும் இன்றிரவு உங்களுக்கு எழுதியே ஆக

வேண்டும். என் வாழ்வில் என்ன நடக்கிறது என்று சொல்ல வேண்டும். எல்லாமே நல்லவை அல்ல; ஆனால் உங்களிடம் சொல்லவில்லை என்றால் வேறு யாரிடம் பேசுவேன்.?”

நாள் ஒரு இரண்டு மணி நேரம் எழுதியிருப்பேன். எல்லா வரிகளும் அர்த்தமுள்ளவை என்று சொல்லமுடியாது. ஆனால் நிறைய விஷயங்கள் பற்றி எழுதினேன். எங்களின் ஜிபிஎ, டிஸ்கோ, கறை படிந்த மதிப்பெண் அட்டை, பேரா வீரா, மேலும் சிக்கிக் கொண்டிருக்கும் எங்களின் ல்யூப் ப்ராஜெக்ட் என்னைத் தங்களுடன் வைத்துக் கொள்ளும் அளவுக்கு நேசிக்கவில்லை என்று பலதும் எழுதினேன். நான் செய்தது பெரிய தவறு. ரயனைப் போல நடித்துக் கடிதம் எழுதுவது, அவன் வாழ்க்கைக் சரித்திரத்தைப் பகிர்ந்து கொள்வது; அவனின் ஆழ்ந்த அந்தரங்க ரகசியங்களைப் பகிரங்கப்படுத்துவது. இதைப் பற்றி அறிந்தால் ரயன் என்னைக் கொன்றுவிடுவான். ஆனால் விடியும் வரை நான் எழுதினேன். நான் எழுதியதை நானே படித்துப் பாராட்டிக் கொண்டேன். ரயனைவிட நன்றாக எழுதியுள்ளேன். நான் கடைசியாக பிரிண்டு எடுத்தபொழுது அது பத்து பக்கம் நீண்ட கடிதம். ரயனின் கையெயுழுத்தைப் போடுவது அவ்வளவு கஷ்டமாக இல்லை. அவனுடைய பெற்றோர் அடையாளம் கண்டுகொள்ள மாட்டார்கள். ரயனின் அறையிலிருந்து விலாசத்தைத் திருடிவிட்டேன். முப்பது ரூபாய்க்கான தபால் தலை ஒட்ட வேண்டியிருந்து.

“எங்கிருந்து வரே?” ரயன் காலை அறைக்குள் நான் நுழைவதைப் பார்த்து கேட்டான்.

“ஒன்றும் இல்லை. சும்மா நடக்கப் போயிருந்தேன்” என்றேன்.

பொய் சொல்வது தவறா?

# 26

## அப்பாவுடன் சந்திப்பு

பேரா ஸக்ஸேனா தன் வகுப்பு தடைபட்டதைப் பார்த்து பேசாமல் இருந்தார். அவருக்கு ஒரு தவவல் வந்தது. படித்து விட்டு வகுப்பைப் பார்த்து:

“யாரு ஹரி, ரயன் மற்றும் அலோக்?” என்று கேட்டார்; நாங்கள் முதல் வரிசையில் அமர்ந்திருப்பது தெரிந்தும்!

நாங்கள் கையை உயர்த்தினோம்.

“பேராசெரியன் அறைக்குச் செல்லுங்கள். உடனே உங்களைப் பார்க்க வேண்டுமாம்.”

நான் அமைதியாக இருக்கக் கஷ்டப்பட்டேன். என் இதயம் தன் போக்கில் படபடத்தது. (ல்யூப் ப்ராஜெக்டுக்கு மங்களம் பாடப் போகிறார்களா? செரியன் இன்னொரு டிஸ்கோ நடத்தப் போகிறறா? நேஹாவுக்கு ஐஸ்கிரீம் வாங்கிக் கொடுத்த குற்றத்திற்கு என்னைப் போலீஸில் பிடித்துக் கொடுத்து விடுவாரா? அவர் வாங்கியதற்கும் நான் தான் பணம் கொடுத்தேன் என்பது அவருக்கு தெரியுமா?) சம்பந்தமற்ற எண்ணங்கள் மனதில் அலை பாய்ந்தன. நாங்கள் செரியனின் அலுவலகம் செல்லும் வரை யோசித்துக் கொண்டே இருந்தேன். அதற்கு புது பூட்டு பொருத்தப்பட்டிருந்ததைப் பார்த்தேன்.

உள்ளே பேரா சாஸ்திரி, வீரா இருவரும் பேரா செரியனருகே அமர்ந்திருந்தனர். யாருமே எங்களை உட்காரச் சொல்லவில்லை.

“வகுப்பிலிருந்து உங்களை வெளியே கூப்பிட்டதற்கு மன்னிக்கவும். நாங்கள் எல்லோரும் கூடியிருக்கும் பொழுது உங்களுடன் பேச வேண்டும் என்று நினைத்தோம்”, என்றார் டீன் சாஸ்திரி.

பேராக்கள் சேர்ந்திருந்தாலே பெரிய பிரச்சனை தான், என்று நினைத்தேன். நாங்கள் ஆழமான மௌனம் அனுஷ்டித்தோம்.

“நீங்கள் பேரா வீராவுடன் செய்த ஆய்வைப் பார்த்தோம். உங்கள் பிரபோஸலைப் படித்தோம். நீங்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்ட செமஸ்டரில் செய்தீர்கள் தானே?” என்று டீன் கேட்டார்.

நாங்கள் பேரா வீராவைப் பார்த்தோம்.

“ஆமாம் ஸார், மூன்று மாதங்கள் என் ஆய்வுக் கூடத்தில் தான் வேலை செய்தார்கள்”, என்றார் பேரா வீரா.

“பேரா வீரா ஒரு பரிந்துரை வழங்கியிருக்கிறார். உங்களின் ஏழாவது செமஸ்டரின் ஆப்வைக் காரணம் காட்டி நீங்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை என்று கொள்ள வேண்டும்; ஒழுங்கு நடவடிக்கைக்காக அல்ல. சரியா?”

நாங்கள் அந்த அறையில் ஒரு வார்த்தை கூடப் பேசுவதில்லை என்று உறுதி எடுத்துக் கொண்டிருந்தோம். அது எளிய கேள்வி தான்; ஆனால் சிக்கலில் மாட்ட விரும்பவில்லை.

“டீன் சாஸ்திரிக்குப் பதில் சொல்லுங்கள்”, என்று பேரா வீரா எங்களுக்கு அறிவுரை வழங்கினார்.

“ஆமாம் ஸார்’, என்றான் அலோக்.

நான் செரியனின் கண்களை நேராகச் சந்திக்கவில்லை. ஆனாலும் அவரின் மௌனம் எனக்குக் கலக்கமாக இருந்தது. இதற்கெல்லாம் தலைவரான அவர் ஏன் ஏதும் பேசவில்லை?

“அப்போ, உங்களுக்குக் கறையில்லாத, சுத்தமான மதிப்பெண் அட்டை கிடைக்கும், சரியா?” என்றார் டீன்.

நான், அலோக், ரயன் தலையாட்டினோம்.

“இதன் கடைசி முடிவு உங்கள் தலைமைப் பேராசிரியரிடம் தான் இருக்கு. உங்களின் குற்றங்கள் மன்னிக்க முடியாதவை என்று உங்களுக்கே தெரியும். ஆனால் இம்முறை பேரா செரியன் உங்களின் ஏழாம் செமஸ்டரை ஆய்வாகக் காட்டச் சம்மதித்திருக்கிறார்.”

“என்ன?” என்றோம் கோரஸாக. சில சமயம் நல்ல செய்தி கூட அதிர்ச்சியைத் தரும்.

‘ஆமாம். பேரா செரியன் ஒப்புக் கொண்டார். வாழ்த்துக்கள். நன்கு வேலை செய்தீர்கள்”, என்றார் பேரா வீரா.

நான் செரியனை முதல் முறையாகப் பார்த்தேன். அவரின் முகம் இறுகியிருந்தது. இந்த அறையிலேயே அவர் மனம் இல்லை என்பது புரிந்தது. என்ன ஆச்சு? அவர் கஞ்சா அடித்து விட்டாரா? போதையா? என்ன காரணமாக வேண்டுமானாலும் இருக்கட்டும். எனக்கு அந்த அறையிலிருந்து தப்பித்தால் போதும் என்று பட்டது. அவர் மனதை மாற்றிக் கொள்வதற்குள் ஓடி விட வேண்டும்.

“நன்றி, ஸார், மிக்க நன்றி”! என்றான் அலோக்.

“ரொம்ப நன்றி ஸார்! நாங்கள் கிளம்பலாமா?” என்றேன்.

“நிச்சயம். நாங்களும் கிளம்புகிறோம்.” என்று டீன் சாஸ்திரியும், பேரா வீராவும் எழுந்தனர்.

“இந்த செமஸ்டர் எப்படி போகிறது?” எனறார் டீன்.

“ஓகே ஸார். நாங்கள் இன்னமும் ஐந்து கிரெடிட் கம்மியாக இருக்கிறோம்”, என்றேன்.

எதற்குக் கம்மி?” என்றார் டீன்.

“நாங்கள் நான்கு வருடத்தில் முடிப்பதற்கு எங்களுக்குத் தேவையான பாடங்கள் இல்லையே; அதனால் வேலைக்கோ, மேற்படிப்புக்கோ விண்ணப்பிக்க முடியாது”, என்றேன்.

“முழு பாடமும் எடுத்துக் கொண்டீர்களா?” என்று டீன் கேட்டார்.

“முழுவதும் எடுத்துக் கொண்டு, மொத்த பளுவும் சேர்ந்தும் முடிக்க முடியாது”, என்றான் ரயன்.

“இது உங்கள் துறை சார்ந்த பிரச்சனை. இதற்காகத் தான் ஒழுங்கு நடவடிக்கைகளில் மாட்டிக் கொள்ளாதீர்கள் என்று மாணவர்களை எப்பொழுதும் எச்சரிக்கிறேன்”, என்று டீன் சாஸ்திரி அறையைவிட்டு வெளியேறினார்.

பேரா வீரா என் தோளைத் தட்டி விட்டுச் சென்றார்.

“நன்றி ஸார்!” என்றேன். செரியனிடம் ஏன் சொன்னேன் என்று தெரியவில்லை, ஆனால் கிளம்பும் பொழுது சொல்ல சரியான வரி என்று மனதுக்குப் பட்டது.

“ஹரி நீ ஒரு நிமிடம் இருக்க முடியுமா?” பேரா செரியன் முதல் முறையாகப் பேசினார்.

“நிச்சயம் ஸார்”, அலோக்கும் ரயனும் என்னைக் குறுகுறு வென்று பார்த்தபடி வெளியேறினர்.

“உட்கார்” என்று தன் முன் இருந்த நாற்காலியைச் செரியன் காண்பித்தார். அவர் எழுந்து போய் கதவைப் பூட்டினார்.

என்னை எதற்கு இருக்கச் சொன்னார்? என்னைக் கொலை செய்துவிடுவாரா?

“ஐந்து கிரெடிட் கம்மியா?” என்றார் செரியன். அறையில் எல்லோரும் பேசியதை அவர் கேட்டுக் கொண்டிருந்தார் போலும்.

“ஆமாம் ஸார்”, என்றேன்.

“இந்த செமஸ்டரில் பேரா வீராவுடன் அந்தப் பிராஜெக்டைத் தொடர்ந்து ஆய்வு செய்தால் உங்களுக்கு ஆய்வுக்குக் கூட கிரெடிட் கிடைக்கும், நான் அனுமதித்தால்”

இதற்கு என்ன அர்த்தம்- ‘நான் அனுமதித்தால்?’ செரியன் என் விதியின் மீது எவ்வளவு ஆளுமை செலுத்த முடியும் என்று சுட்டிக் காட்டுகிறாரா? எனக்குத் தான் உங்களின் சக்தியைப் பற்றித் தெரியுமே ஸார்; இப்போதைக்கு சுத்தமான, கறையில்லாத மதிப்பெண் கிடைத்ததே சந்தோஷம் தான். பல வருடங்கள் கழித்து ஒரு நாள் எனக்கு வேலை கிடைக்கலாம். இப்பொழுது நான் போகலாமா?

“என்ன யோசிக்கிறாய்?” செரியன் கேட்டார்.

“ஒன்றும் இல்லை ஸார்”, என் எண்ண ஓட்டங்களிலிருந்து அவசரமாக மீண்டேன்.

“நான் உனக்கு ஆய்வு கிரெடிட் தருகிறேன் என்று சொன்னேன்; ஆனால் இந்த செமஸ்டர் இந்த பிராஜெக்டில் வேலை செய்ய உங்களுக்குச் சம்மதமா? உங்களுக்கு ஏற்கனவே எக்கச்சக்க வேலைகள் இருக்கு”, என்று செரியன் எச்சரித்தார்.

செரியனுக்கு மூளை என்ன குழம்பிவிட்டதா? என்ன சொல்கிறார்? என் பட்டத்தைப் பாதுகாக்கிறாரா? விட்டுத் தருகிறாரா? அதுவும் ஆய்வுக்கூட வேலைக்காக? அடுத்த நான்கு மாதங்களுக்கு நான் ஆய்வுக் கூடத்திலேயே குடியிருப்பேன். ஐந்து கிரெடிட் என்றால் கசக்குமா? மதிய உணவுக்குக் கிரீஸையே முழுங்குவேன்-என் டிகிரிக்காக.

“எங்களால் கூடுதல் ஆய்வு வேலையை ஏற்றுக் கொள்ள முடியும் ஸார்”, என்றேன். என் தொண்டைக் குழி உருண்டது.

“நல்லது. நான் பேரா வீராவுடன் பேசி என்ன செய்ய முடியும் என்று பார்க்கிறேன். எல்லாம் சரியாக வந்தால் இந்த செம்மில் ஐந்து கிரெடிட்டைச் சேர்த்து விடலாம்.”

“எங்கள் எல்லோருக்குமா? அதாவது அலோக், ரயன்?”

“ஆமாம்”, என்றார் பேரா செரியன்.

“ரொம்ப நன்றி ஸார்”, என்று என் நெற்றி வியர்வையைத் துடைத்தேன். இது நிஜமான தருணமா என்றே சந்தேகமாக இருந்தது.

“நன்றி ஹரி”, என்று செரியன் என்னைக் கிளம்பச் சொன்னார்.

“எதற்கு?” என்றேன்.

“ஒன்றும் இல்லை. போரா ஸக்ஸேனா வகுப்புக்குச் செல். வேலைக்கான நேர் காணலுக்குத் தயார் செய்து கொள்”, என்றார் செரியன்.

“கண்டிப்பா ஸார்”, என்று சொல்லி எழுந்தேன்.

“என் வைவாவில் நடந்து கொண்டதைப் போல் நேர் காணல்களில் சொதப்பாதே”, என்று பேரா செரியன் உரக்கச் சிரித்தார். அவரின் சிரிப்பில் ஏதேனும் கொடூரம் இருக்கா என்ற தேடிப் பார்த்தேன். அவர் நகைச்சுவையைக் கண்டு தான் சிரித்தார் என்று புரிந்தது. நானும் அவருடன் சேர்ந்து சிரித்தேன்.

“சரி ஸார்”, நான் அசடு போல் இளித்துக் கொண்டே அவர் அறையிலிருந்து வெளியேறினேன்.

டிஸ்கோவிற்குப் பின்னர் கம்மியாக குடிப்பது என்று முடிவு செய்திருந்தோம். ஆனால் செரியன் கொடுத்த செய்தி மிகவும் பெரிய விஷயம்; போதைக்கான சரியான காரணம் கிடைத்துவிட்டது.

“இரண்டாவது பாட்டிலைத் திற” என்றான் அலோக். “நான் சொல்றேன் ரயன், இரண்டாவது பாட்டிலைத் திற.”

“ஈஸி குண்டா; நமக்கு முடிக்க நிறைய பாடம், ஆய்வு பாக்கியிருக்கு. அந்த நேர் காணல்கள் வேறு”, என்றேன்.

“எப்படி? எப்படி ஹரி சாதிச்சே?” என்றான் ரயன்; போதை ஏறத் தொடங்கியது அவனுக்கு.

“நான் எதுவும் செய்யவில்லை. நான் அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று அச்சப்பட்டேன். ஆனால் அவராகத் தான் சொன்னார்”, என்றேன்.

“நீ பெரிய ஆளுடா!” என்று ரயன் என் கன்னத்தில் முத்தமிட்டான்; அவன் அப்படிச் செய்வது எனக்குப் பிடிக்காது.

ரயனைத் தள்ளிவிட்டு அலோக்கிடம் கேட்டேன்”, அடுத்த நேர் காணல் எப்போது?”

“இது தான் டீல், சரியா?” அலோக் நிறைய நிறுவனங்களின் குறிப்பேடுகளை ஒரு கோப்பிலிருந்து எடுத்தான். “நாம் ஐந்து புள்ளிக்காரர்கள்; நினைவிருக்கா? பலர் நம்மைக் கண்டு கொள்ள மாட்டார்கள்.”

“எனக்குக் கவலையில்லைடா. எவன் வேலை கொடுப்பான் என்று மட்டும் சொல்லு”, என்றான் ரயன்.

“மென்பொருள். அதுதான் இந்த வருடத்துச் சூடான, பரபரப்பான பிரிவு. அவர்கள் ஆயிரக்கணக்கில் ஆள் எடுப்பார்கள்; ஜிபிஏவை வைத்துத் தேடுவதில்லை”, என்றான் அலோக்.

“எனக்கு மென்பொருள் பிடிக்கும்” என்று ரயன் ஆமோதித்தான்.

“எப்போ நேர்காணல்?” என்று கேட்டேன்.

“இன்னும் மூன்று வாரங்களில் ஒன்று இருக்கு. நீ என்ன சொல்றே? எல்லோரும் விண்ணப்பிக்கலாமா? யாருக்குத் தெரியும்? நாம் எல்லோரும் ஒரே இடத்தில் வேலை செய்தால்?” என்று அலோக் யோசித்தான்.

“நாம் ஒன்றாய்த் தான் இருப்போம்” என்று என் கிளாஸைத் தூக்கிக் காட்டினேன்.

“சீயர்ஸ், ஐந்து கிரெடிட்டைப் பேசி முடித்ததற்காக”, என்று கோரஸாகச் சொன்னோம்.

ஆறு மணிக்கு அலாரம் அடித்தது. அந்தப் பெரிய தினம் வந்தே விட்டது. முதல் முறையாக அந்த செமஸ்டரில் நாங்கள் முதல் மூன்று வகுப்புகளுக்குச் செல்லாமல் இருந்தோம். கடந்த சில வாரங்கள் முதுகை உடைக்கும் வேலை. எங்களின் பதினான்கு மணி நேர வேலை பளுவோடு பேரா வீராவின் ஆய்வின் மூன்று மணி நேரமும் சேர்ந்து கொண்டது.

ஆனால் இன்று மென்பொருள் நேர் காணல்; எங்களைப் போன்ற குறைந்த ஜிபிஏ பெற்ற மாணவர்களின் வேலைக்கான ஒரே புகலிடம்.

“ஏழுந்திரு குண்டா. இந்த நேர்காணலுக்குத் தயாராக வேண்டும்”, என்று கத்தினேன்.

“கிடைக்குமா?” என்றான் அலோக்.

“படுக்கையில் கிடந்தால் கிடைக்காது”, ரயன் போர்வையை. உருவினான்.

நேர் காணலுக்கு ஐஐடிக்காரர்கள் நேர்த்தியாக உடை அணிவர். நான்கு வருடங்களில் முதல் முறையாக “டை” கட்டிக் கொண்டேன். அது விகாரமான ‘டை’, ஆரஞ்சு புள்ளிகள் கருப்பிலா, அல்லது கருப்பு புள்ளிகள் ஆரஞ்சிலா என்று பிரித்துப் பார்க்க முடியாத அவலம். லீனியருக்குப் போன வருடம் இதைக் கட்டியதால் அதிர்ஷ்டம் அடித்தது. அதனால் குமாவோன் வாசிகள் இது அதிர்ஷ்டம் கொடுக்கக் கூடியது என்று அபிப்ராயப்பட்டார்கள். ரயனின் பெற்றோர்கள் புத்தம் புதிய பட்டு ‘டை’ இத்தாலியிருந்து வரவழைத்திருந்தனர். தே.பையன்! என் கடிதம் அவர்களுக்குக் கிடைத்ததா என்று யோசித்தேன்.

ரயனின் ஸ்கூட்டரில் தற்பொழுது இன்ஜின் கிடையாது. அதனால் இன்ஸ்டிக்கு ஆட்டோவில் சென்றோம். நடந்து போனால் உடைகளின் இஸ்திரி மடிப்பு கலைந்து விடுமே! இது ரயனின் வாதம்.

“டெக்னோஸாஃப்ட் ஸாஃப்ட்வேர் நேர்காணல் இங்கே” என்று இன்ஸ்டி கட்டிடத்தில் ஒரு அறிவிப்புப் பலகை தொங்கியது. நாங்கள் ஒரு ஐம்பது பேர் இருப்போம். என் சக மாணவர்கள். என்னைப் போலவே திருமணத்திற்குச் செல்வது போல் உடையணிந்திருந்தனர்.

“பாதி பேருக்கு ஏற்கனவே வேலை கிடைத்திருப்பது போல் தோன்றுகிறது. நம்மைப் போல் கம்மி மதிப்பெண்காரர்களுக்கு இது நல்ல வாய்ப்பு”, என்று அலோக் பெருமூச்செறிந்தான்.

“மதிப்பெண்கள் கம்மியாக வாங்குபவன்” என்று பட்டம் கிடைத்த முதல் தினத்தை எண்ணிப் பார்த்தேன். அதை எப்படி ஏற்றுக் கொண்டேன் என்று யோசித்தேன். எங்களின் முதல் குவிஸ்ஸை சொதப்பினோமே? அதுவா? எங்களின் முதல் ஜிபிஏவா? டிஸ்கோவா? மோசமான மதிப்பெண் வாங்குவோர் சங்கத்தின் உறுப்பினராவதற்கு நாங்கள் பல விஷயங்களைச் சொதப்பியிருக்கிறோம்.

எங்கள் மூவரில் ரயனுக்குத் தான் முதல் வாய்ப்பு, பிறகு அலோக், கடைசியாக நான்; நேர் காணலுக்கு முன் ஒரு கணக்குப் பரீட்சை எழுத வேண்டும். அது புத்திசாலித்தனத்தைப் பரீட்சிக்கும் ஒரு எளிமையான தேர்வு; எந்த ஒரு ஐஐடி பையனும் ஒரு முழு வோட்கா குடித்துவிட்டுக் கூட இதை எழுதி ஜெயிக்கலாம்.

“நேர் காணல் தான் முக்கியம்; அங்கு தான் தீர்மானம் செய்வார்கள்”, என்றான் அலோக்.

நாங்கள் எங்கள் மதிப்பெண் அட்டையைக் கொடுத்தோம். ஏழாவது செமஸ்டரில் எந்த மதிப்பெண்ணும் இல்லை. “ஆய்வினால் ஆப்ஸெண்ட்” என்று கொட்டை எழுத்தில் முத்திரை குத்தப்பட்டிருந்தது. மற்றவை மிகவும் சுமார்; நிறைய ஜீ, டீ என்று போடப்பட்டிருந்தது.

“நல்ல முறையில் பேசு, வாழ்த்துக்கள்!” என்று அலோக் ரயனைக் கட்டிக் கொண்டான்.

“ஜாக்கிரதை! மடிப்பைக் கலைக்காதே” என்று ரயன் எச்சரித்தான்.

இருபது நிமிடங்களில் வெளியே வந்தான்.

“எப்படிப் போச்சு?” என்றான் அலோக்.

“தெரியலை. பிரமாதமான்னு சொல்ல முடியாது. என் கம்மி மதிப்பெண்களைப் பற்றியே கேட்டனர். எனக்கு ஏன் இந்த வேலை வேண்டும் என்ற காரணமும் கேட்டனர்”, என்றான் ரயன்.

“நீ என்ன சொன்னே?” என்றேன்.

“ஏதோ ஒரு பதில்; பொறுத்திருந்து பார்க்கலாம்”, என்றான். அலோக் இருபது நிமிடம் உள்ளே இருந்தான். அவன் வெளியே வந்ததும் என் முறை.

முப்பது வயது நபர் என்னை அறைக்குள் வரவேற்றார். “ஹை! நான் கமல் தேஸாய். நீ ஹரி தானே?” என்றார்

“ஆமாம் ஸார்”, என்றேன்.

“உட்கார், உட்கார்; என்னை ஸார்னு கூப்பிடாதே; கமல் போதும்.”

நான் சத்தம் போடாமல் அமர்ந்தேன். கமல் என் கோப்பைப் புரட்டினர் மதிப்பெண் அட்டையில் கைகள் நின்றன.

“ஹம்ம்ம்.5.48 மொத்தமாக, என்ன ஆச்சு?” என் கண்களை நேராகப் பார்த்தார்.

அப்பொழுது எனக்கு என் கலக்கமும், பதில் பேச முடியாத சங்கடமும் வந்திருக்க வேண்டும். ஆனால் இம்முறை அப்படித் தவிக்கவில்லை! ஏன் என்று சொல்லத் தெரியவில்லை. ஆனால் ரயனின் திட்டம் தோல்வியடைந்தது, அலோக் கீழே குதித்தது, செரியன் அழுதது ஆகியவற்றை நான் பார்த்த பின் இந்த உலகம் என்னை அச்சுறுத்தும் சக்தியை இழந்துவிட்டது.

“முதல் செம்மில் சொதப்பிட்டேன் ஸார். அதாவது கமல்; பிறகு ஐஐடியில் மீண்டும் எழுவது கடினம்.”

“இது ஸ்வாரஸ்யமாக இருக்கு. முதல் செம்மில் என்ன ஆச்சு?’ என்று கமல் கேட்டார்.

“தெரியவில்லை. காலேஜ் வாழ்க்கையை ரசிக்கத் தீர்மானித்தேன். ஐஐடி அதைப் போன்ற காலேஜ் இல்லை என்று புரிந்தது”, என்றேன்.

“ஆமாம், ஐஐடி மிகவும் வித்தியாசமானது. உனக்கு ஐஐடி பிடிக்குமான்னு சொல்லு?” என்றார்.

அது ஒரு அபாயகரமான கேள்வி. இது வரை என்னை யாரும் கேட்காத கேள்வி. ஒவ்வொரு நொடியும் அதை வெறுக்கிறேன் என்பது தான் என் அவசர பதிலாக இருந்திருக்கும். ஆனால் அப்படிச் சொல்ல முடியாதே? நான் என் முதல் நாளை நினைத்துப் பார்த்தேன். ரயன் என்னைப் பகுவின் கோக் பாட்டில்களிலிருந்து காப்பாற்றிய தினம். நான்கு வருடங்கள் உருண்டோடிவிட்டன. விரைவில் இங்கிருந்து கிளம்ப வேண்டிருக்கும்; எனக்கு இந்த ஐஐடி பிடிக்குமா?

“தெரியவில்லை. இங்கு நடந்த சிலவற்றை மறக்க முயல்கிறேன். ஆனால் என் நெருங்கிய நண்பர்களை இங்கு தான் சந்தித்தேன். இது எனக்கு வேலையும் வாங்கிக் கொடுக்கும் என்று நம்புகிறேன்”, என்றேன்.

கமல் சிரித்தார். அவரும் பத்து வருடம் முன்னால் என்னைப் போன்ற மாணவர் தான். அப்பொழுது அவரின் ஜிபிஏ என்னவாக இருந்திருக்கும் என்று எண்ணினேன். இது தான் ஐஐடியின் சாபக்கேடு. மக்களைப் பார்த்தால் அவர்களின் ஜிபிஏ என்னவாக இருந்திருக்கும் என்று கணக்கெடுப்பது. அவர்களைப் பற்றிய அபிப்பிராயத்திற்கு அது தான் அளவுகோல். என்ன ஒரு சோகமான நிலை!

நான் ஏன் மென்பொருள் பிரிவில் வேலை செய்ய ஆசைப்படுகிறேன் என்று கமல் கேட்டார். எனக்கு வேலை தரும் எந்த பிரிவையும் முத்தமிட்டு வணங்குவேன். இது ஒன்று தான் எனக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பு.

“உங்களுடன் பேசியது சுவரஸ்யமாக இருந்தது. இப்போதைக்கு அவ்வளவு தான்”, கமல் என்னை அறையிலிருந்து வெளியே வந்து வழியனுப்பினார்.

“சுவாரஸ்யமாக இருந்தது உங்களுடன் பேசியது”-மூன்று முறை என் மனதில் சொல்லிப் பார்த்தேன். (என்ன அர்த்தம்? மரியாதையாக, உனக்கு வேலையில்லை. நீ வித்தியாசமானவன் என்கிறரா? அல்லது என் கோப்பும் விண்ணப்பமும் அவரை மயக்கிவிட்டனவா?)

ஒரு மணி நேரம் முடிவுக்காகக் காத்திருந்தோம். அப்பொழுது தான் என் அதிர்ஷ்டம் முதல் முறையாக “யூ” டர்ன் அடித்து நல்ல முறையில் வேலை செய்கிறதோ என்று யோசித்தேன்.

“ஹரி, உனக்கும் எனக்கும் வேலை கிடைத்து விட்டது! உனக்கு பம்பாய், எனக்கு டெல்லி”, என்று அலோக் என் சட்டையைப் பிடித்து இழுத்தான்.

அடுத்து ஐந்து நிமிடத்திற்குப் பதில் பேச முடியாமல் மரத்து, உணர்ச்சியற்று இருந்தேன். ஒரு பெரிய கும்பல் என்னை நசுக்கிக் கொண்டு அறிவிப்புப் பலகையை நோக்கிப் படையெடுத்தது. நான் என் எண்ணங்களில் ஆழ்ந்திருந்தேன். சில நாட்கள் முன்னர் தான் ஒரு வருடத்தை வீணடிக்காமல் ஐந்து கூடுதல் கிரெடிட் பெறுவது எப்படி என்று பரிதவித்தேன். கறை படித்த மதிப்பெண் அட்டை கிடைக்குமோ என்று அஞ்சினேன். இப்பொழுது வழி பிறந்து விட்டது; எனக்கு வேலையும் கிடைத்துவிட்டது.

“எனக்கு கிடைக்கவில்லை”, என்றான் ரயன்.

“என்ன?”

அது தவறாக இருக்கும். எனக்கும், அலோக்குக்கும் கிடைத்து இவனுக்குக் கிடைக்காமல் போகுமா?

“என்ன நடந்தது?” என்றேன்.

“தெரியவில்லை. ஃபக்டா, ஃபக்-ஃபக்-ஃபக்”, ரயன் சொல்லிக் கொண்டே எங்களை விட்டுப் பிரிந்து நடந்தான்.

“எங்கே போகிறான்?” என்றான் அலோக்.

“தெரியலையே”, என்றேன்.

இரண்டு நொடிக்குள் என் வேலையை மறந்தேன். (ரயனுக்கு வேலை கிடைக்கவில்லையா? அவன் கற்பனை சக்தி கொண்ட, நம்பிக்கை பெற்ற, சாமர்த்தியமானவன். நான் என்னவாக வேண்டும் என்று கனவுகண்டேனோ அதன் மொத்த உருவம் அவன். இன்ஸ்டியிலேயே அவனுடையது தான் குறைந்த மதிப்பெண். ஆனால் என்ன? இது ரயன்! ஹெலோ?)

“நமக்கு வேலை கிடைத்துவிட்டது ஹரி. மாதச் சம்பளம் ஆறாயிரம்”, என்றான் அலோக்.

“ஹஹ்? அப்படியா?” ரயனைப் பற்றிய கவலையைத் தற்காலிகமாகக் கைவிட்டேன். “இனி நாம் ஐந்து புள்ளி சொச்சம் இல்லை; ஐந்து-புள்ளி மதிக்கத்தக்க ஆட்கள்.”

அலோக் இரண்டு மணி நேரம் தன் பெற்றோர்களுடன் அன்றிரவு பேசினான். வேலைக்கான உத்தரவுக் கடிதத்தை முழுவதுமாகப் பத்து முறை படித்துக் காண்பித்திருப்பானோ? அவனின் அம்மா சம்பளத்தைப் பற்றித் தான் குறிப்பாகக் கேட்டுக் கொண்டார்-அடிப்படை சம்பளம், பயணம் செல்வதற்கு கொடுக்கப்படும் “படி” -மருந்துச் செலவுக்கென்று ஒதுக்கப்பட்டது. அலோக் உச்சி குளிர்ந்து போனான்.

நான் இன்னமும் மரத்த நிலையிலேயே இருந்தேன். நல்ல விஷயங்கள் நடக்கும் பொழுது ஏதோ விநோதமாக இருப்பது போல் தோன்றுகிறது. ஒரு கனவில் மிதப்பது போல். கமல் தேசாய் டெக்னோ ஸாஃப்டிலிருந்து கூப்பிட்டு இது எல்லாம் ஒரு கெட்ட கனவு என்ற சொல்லி விடுவாரோ என்ற பீதி. அந்த வேலை பம்பாயில் இருந்தது.

“என்ன ஆச்சு உனக்கு? ஒரு பரபரப்பே தெரியவில்லை”, என்றான் அலோக் தொலைபேசி பூத்திலிருந்து இறங்கிக் கொண்டே.

“நான் ரொம்ப சந்தோஷமாகத் தான் இருக்கேன். ஆனால் அது பம்பாய். நேஹாவிடம் என்ன சொல்வேன்?” என்று கேட்டேன்.

“அவளைப் பற்றி என்ன? ஐஐடி முடிந்தபின்னும் அவளுடன் தொடர்பில் இருக்கப் போகிறாயா?” என்று குழந்தைத் தனமாகக் கேட்டான். அவள் என்னவோ என் ஐஐடி பாடத் திட்டம் போல்.

“ஏன்? நிச்சயம் தொடர்பில் இருப்பேன்”, என்றேன் பூத்தின் கம்பியைப் பிடித்துக் கொண்டு.

அலோக் கண்டு கொள்ளவில்லை. அவனிடம் பேசிப் பிரயோசனம் இல்லை. வேலையில் “பல்லுக்குக்” கொடுக்கப்படும் பண உதவியைப் பற்றிப் பேசினால் தான் உண்டு.

“ரயன் எங்கே?” என்று கேட்டேன்.

“அவன் ஆய்வுக் கூடத்துக்குச் சென்றான். அவன் பேரா வீராவுடன் பேசப் போனான்”, என்றான்.

“அவனுக்கும் ஏதாவது கிடைத்தால் சந்தோஷமாக இருக்கும். என்னை ரொம்ப

சந்தோஷப்படுத்தாததற்கு அதுவும் ஒரு காரணம்", என்றேன்.

"அவனுக்குக் கஷ்டம் தான். அவன் 5.01 தான், வகுப்பிலேயே கடைசி மாணவன். அதனால் வேலை கிடைப்பது கஷ்டம்", என்றான் அலோக்.

"ஆனால் அவன் அவ்வளவு சாமர்த்தியமானவன். ல்யூப் ப்ராஜெக்டின் மொத்த மூளையே அவன் தான்", என்றேன்.

"ஜிபிஏஸீம் முக்கியம்டா", என்று அலோக் மேலே நடந்தான்.

அடுத்த ஒரு மாதம் வரை ரயனுக்கு வேலை கிடைக்கவில்லை. எங்களின் செமஸ்டர் வேகமாக ஓடியது. நாங்கள் எங்கள் கெடுக்களை முடிப்பதில் பிஸியாக இருந்தோம். ரயன் நிறைய நிறுவனங்களுக்கு விண்ணப்பித்தான். ஆனால் இரண்டு பேர் தான் கூப்பிட்டார்கள். வகுப்பின் கடைசி மாணவனுக்கு எப்பொதும் பிரச்சனை தான். அன்று கமல் தேசாய் உண்மையைப் பாராட்டுபவராக இல்லாவிட்டால் நானும் ரயன் நிலைமையில் தான் இருந்திப்பேன்.

"நீங்கள் மனம் தளரக் கூடாது. ரயன் நீ முயற்சியைக் கைவிடாதே", என்று பேரா வீரா உற்சாகப்படுத்தினார்.

ரயனின் ஸ்கூட்டர் இன்ஜின் ஓடத் தொடங்கியது. இன்றைய கலவை மிகவும் மோசமான வாடையுடன் இருந்தது. மொத்த ஆய்வுக் கூடமே நாற்றத்தில் முங்கியது. இது எங்களின் சிறந்த கிரீஸாக இருக்கக் கூடாதே என்று நினைத்துக் கொண்டேன்.

"என்னால் முடியாது பேரா வீரா. இது வேலைக்கு ஆகாது ஸார்." என்றான் ரயன். இன்ஜின் வெளியேற்றிய புகையையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

"வேலை கிடைக்கும். ஆனால் இது போன்ற மென் பொருள் வேலையெல்லாம் சாதாரண மக்களுக்குத் தான்; உனக்கில்லை" என்றார் பேரா வீரா.

"என்ன சொல்கிறீர்கள்?" என்றான் ரயன்.

"நீ ஆய்வு செய்ய வேண்டியவன். மென்பொருள் வேலையில் என்ன இருக்கிறது? அயல் நாட்டுக்காரர்களுக்கான கூலிப்படை. ரயன், உன்னால் அங்கு சந்தோஷமாக இருக்க முடியுமா?"

"நான் இருப்பேன்", என்றான் அலோக்.

"நான் ரயனைக் கேட்கிறேன். நீங்கள் நண்பர்கள். ஆனாலும் உங்கள் எல்லோருக்கும் வித்தியாசமான தேவைகள் உள்ளன", என்றார் பேரா வீரா.

"என்ன அவை? நான் என்ன செய்ய முடியும்?" என்று ரயன் கேட்டான்.

"என்னுடைய ஆய்வு உதவியாளனாக வேலை செய். ஆர்ஏ (Research Assistant); நான் இரண்டு வருட உத்திரவாதம் வாங்கித் தருகிறேன். அதிக சம்பளம் கிடைக்காது. மாதம் இரண்டாயிரம். ஆனால் நீ காம்பஸிலேயே வசிக்கலாம். உன்னுடைய ல்யூப் ப்ராஜெக்டைத் தொடரலாம்."

ரயனின் முகத்தைப் பார்த்தேன். இரண்டாயிரம் என்ற எண் முகத்தில் பெரிதாக எழுதப் பட்டிருந்தது. எங்கள் சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கு தான் கிடைக்கும். ரயனால் ஏற்றுக் கொள்ள முடியுமா?

"இது ஒரு வாய்ப்பு", என்றான் மெதுவாக.

"இது சிறந்த வாய்ப்பு. நம்முடைய பொருளை வியாபாரமாக்க யாராவது முதலீடு செய்ய முன் வந்தால், எவ்வளவு வெற்றிகரமாக்க முடியும் என்று யார் கண்டது?" என்றார் பேரா வீரா.

ரயன் என்னைப் பார்த்தான். என்னை முடிவெடுக்கச் சொல்கிறான் என்று தோன்றியது. நான் மிகவும் குறைவான நேரமே எடுத்துக் கொண்டேன், யோசிப்பதற்கு, ஆனாலும் என் பதிலைச் சொன்னேன்.

"நீ இதைச் செய்வதில் சந்தோஷமாக இருப்பாய் என்று தோன்றுகிறது; யாராவது ஒரு முதலீட்டாளரை நிச்சயம் சந்திப்பாய", என்றேன்.

"இந்தப் பொருளுக்கான சந்தை விலை பத்து கோடி என்று கருதுகிறேன். அதற்கு ராயல்டி கொடுப்பார்கள். ஒரு பத்து சதவிகிதம் என்று வைத்துக் கொள். ஆனால் தொழிலில் முதலீடு செய்ய ஆள் தேவை', என்றார் பேரா வீரா.

"நான் செய்கிறேன்", என்று ரயன் புன்னகைத்தான். "நான் உங்களின் ஆர்ஏ ஸார்."

“நல்ல முடிவு!” என்று அவன் கையை ஹை-5 தட்டினேன்.

“நாம் எல்லோருமே வேலையில் சேர்ந்துவிட்டோம்”, என்ற அலோக், “நாம் இப்பொழுதாவது பார்ட்டி வைக்கலாமா?” என்று கேட்டான்.

“நிச்சயமா கொண்டாடணும். ஆனால் வோட்கா அடிக்கும் பொழுது உஷார்!” என்று பேரா வீரா சிரித்துக் கொண்டே எச்சரித்தார்.

*Downloaded from Ebookz.in*

# 27

## ஐந்து புள்ளிக்காரன்

அன்று பட்டமளிப்பு விழா, ஐஐடியில் எங்களின் கடைசி தினம். கடைசி வரை வேலை செய்தோம். ஆனால் முடித்து விட்டோம்! எங்களின் அனைத்துப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்றோம். கடைசி செமஸ்டரை தம் கட்டி முடித்தோம். ஆய்வு வேலையையும் முடித்தோம். ஏதோ ஒரு வேலையும் கிடைத்துவிட்டது. நான்கு வருடத்துக்குப் பிறகு ஒரு ஐஐடி பையனின் குறைந்தபட்ச எதிர்பார்ப்பு இது தான். ஆனால் எங்களுக்கு இது அபூர்வ நிகழ்வு! இந்த சில வாரங்களில் நான் நேஹாவுடன் அதிகம் பேசவில்லை. என் வேலை கிடைத்தபின் ஒரு முறை அழைத்துப் பேசினேன். அவள் அழுதாள் 1. எனக்காகச் சந்தோஷப்பட்டதில் அழுதாள். 2. அது பம்பாய் என்பதால் அழுதாள். எப்படி பெண்கள் இரு வேறு காரணங்களுக்காக ஒரே சமயத்தில் அழுவார்கள் என்று புரியவே இல்லை. ஆனால் நான் அவளைச் சமாதானப் படுத்தவில்லை. அவளே நாங்கள் அடிக்கடி சந்திக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டாள். செரியனுக்குத் தெரிந்தால் கொதித்துப் போவார். என்னைப் பொறுத்த வரையில் அது பரவாயில்லை. (நானும் அது பெரிய விஷயம் என்ற பாவனையில் பேசினேன்) ஏன் என்றால் நிறைய படிக்க வேண்டியிருந்தது. எனக்கு நேரம் போதவில்லை அவளுடன் பேச. அன்று அவர் அலுவலகத்தில் அந்த கஞ்சா போதையில் அவர் என்னை மன்னித்து விட்டபின் நான் அவரைச் சந்திக்கவே இல்லை. ஆனால் இன்று அவரை நான் பார்ப்பேன். தேர்ச்சி பெற்று விடை பெறும் மாணவர்களுக்குத் தலைமைப் பேராசிரியர் ஒரு உரை வழங்குவார். நாங்கள் விடை பெறும் மாணவர்கள் என்ற நினைப்பே கொண்டாட்டமாக இருந்தது. நாங்கள் பட்டம் வாங்குவதற்கான சிறப்பு உடை அணிந்திருந்தோம். வழக்கம் போல் ரயன் அழகாகத் தெரிந்தான். “நான் முன் வரிசையில் அமர மாட்டேன். அப்பொழுது தூங்க முடியாது”, என்று மறுத்துவிட்டேன். நாங்கள் பட்டமளிப்பு விழா நடக்கும் இடத்துக்கு வந்துவிட்டோம்.

“இது நம் கடைசி தினம். எனக்கு எல்லாவற்றையும் பார்க்க வேண்டும்.” என்று அலோக் வற்புறுத்தினான்.

“அப்போ உன் கண்ணாடியைச் சரி செய்”, என்றான் ரயன். அலோக்கின் பிடிவாதத்தினால் நாங்கள் முதல் வரிசையில் ‘போடியம்’ எதிரே அமர்ந்தோம். விருந்தினர்கள் வரிசையைப் பார்த்தோம்.

“அங்கே இருப்பது என் அம்மா, அக்கா அப்பா கூட வந்திருக்கிறாரே”, என்ற அங்கிருந்த வீல்சேர் பெரியவருக்குக் கையசைத்தான்.

“உன் பெற்றோர்களும் வந்திருக்கிறார்கள் இல்லையா?” என்று ரயனைப் பார்த்துக் கேட்டேன்.

“ஆமாம். அவர்கள் நேற்று இரவு வந்தனர். அமெரிக்காவிலிருந்து வர வேண்டாம் என்று சொல்லிப் பார்த்தேன். அங்கே மூன்றாவது வரிசையில் உள்ளனர்”, என்று பெருமையுடன் சுட்டிக் காட்டினான்.

ஆம் முன்னூறு மாணவர்களின் பெற்றோர்களுடன் அவர்களும் அமர்ந்திருந்தனர். அந்தப்பெரிய ஹால் அவர்கள் எல்லோரையும் தாங்கிக் கொண்டது அனைவரின் முகத்திலும் அநியாயத்துக்குப் பெருமை பொங்கி வழிந்தது.

நான் நேஹாவைப் பார்த்தேன். அவள் தன் அப்பாவுடன் வந்திருந்தாள். மிகவும் அடக்கமாக மற்ற பேராக்களின் குடும்பங்களுடன் அமர்ந்திருந்தாள். நான் அவளுக்குக் கை அசைத்தேன்; பத்து பேராக்கள் என்னைப பார்த்துக் கையசைத்தனர்.

“உட்காரு ஹரி. ஆரம்பிக்கப் போகிறது”, என்று அலோக் என்னை இழுத்து அமர்த்தினான்.

பேரா செரியன் மேடை ஏறினர். எல்லா அசைவுகளும், கிசுகிசுப்புகளும் நின்றது. ஒரு கல்லறையின் அமைதி நிலவியது.

“குட் மார்னிங்! மெக்கானிக்கல் பிரிவின் தலைவராக உங்கள் அனைவரையும் இந்தப் பட்டமளிப்பு விழாவுக்கு வரவேற்கிறேன். இன்று ஒரு புத்திசாலி பாட்சை விடையனுப்புவதில் பெருமை கொள்கிறோம். இந்த மெக்கானிக்கல் பொறியாளர்களை நம் நாட்டுக்கு வழங்குகிறோம். எல்லா வருடமும் நான் இந்த

உரையை வழங்குவேன். பத்து வருடங்களாகச் செய்து கொண்டிருக்கிறேன்", என்று நிறுத்தி தண்னிர் அருந்தினார் பேரா செரியன்.

"பத்து வருடமா? பயங்கர கிழவர் போலிருக்கு" என்று அலோக் கிசுகிசுத்தான்.

"வகுப்புகளைத் துன்புறுத்துவதில் அவருக்கு அலாதி சந்தோஷம்", என்றான் ரயன்.

"உஷ்ஷ்!" என்றேன்.

"வருடாவருடம் இதே உரை தான்; சிறந்த மாணவர்களை வாழ்த்துவது; எப்படி அவர்கள் எதிர்காலத்தில் சாதிக்க வேண்டும் என்று அறிவுரை வழங்குவது. கடந்த வருடத்தில் என்ன சொன்னேன் என்பதை வைத்துத் தான் உரையைத் தயாரிப்பேன். ஆனால் இம்முறை, இந்த வருடம், நான் சற்று வித்தியாசமாக உரையாற்றப் போகிறேன். நான் எதுவும் எழுதித் தயாரித்துக் கொண்டு வரவில்லை. உங்களுக்கு ஒரு கதை சொல்ல ஆசைப்படுகிறேன்."

கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. யாருமே செரியன் கதை சொல்வார் என்று எதிர்பார்க்கவில்லை. முதல் மாணவர்களின் பட்டியலை அறிவிப்பார், பிறகு எல்லோருக்கும் வாழ்த்துக்கள் கூறி அமர்வார். இப்பொழுது என்ன நடக்கிறது?

"ஒரு காலத்தில் ஒரு ஐஐடி மாணவன் இருந்தான். அவன் பெரிய புத்திசாலி. அது உண்மை என்பதற்கு அடையாளமாக அவனின் ஜிபிஏ 10.00; நான்கு வருடங்களுக்குப் பின்னர் அவனுக்கு நண்பர்கள் அதிகம் கிடையாது. வந்த ஒரு ஜிபிஏவைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டியிருந்ததால் அவனுக்கு நண்பர்களுக்கு நேரம் ஒதுக்க முடியவில்லை."

கூட்டம் கடமைக்கு சிரித்தது.

"ஆனால் அவனுடன் படித்த பல மாணவர்கள் வகுப்பில் இருந்தனர். இவனைவிட அவர்களுடைய புத்தி கம்மியாக இருந்தது என்று நினைத்தான். அவர்கள் சுயநலவாதிகள்; பணம் பண்ண ஆசைப்படுபவர்கள். எளிய முயற்சியில் அமெரிக்கா ஓடப் பார்ப்பவர்கள் என்றெல்லாம் கருதினான். வகுப்பில் உள்ளவர்களும் அப்படியே தான் நடந்து கொண்டார்கள். பன்னாட்டு நிறுவனங்களுக்கு வேலை செய்ய அயல் நாடுகளுக்குப் பயணித்தனர். சிலர் அமெரிக்காவில் சொந்த நிறுவனங்கள் திறந்தனர். கணினி அல்லது மென்பொருள் தான் எல்லோரின் கவனமும். இது இருபது வருடத்துக்கு முந்தைய கதை, அதனால் கணினியின் முதல் அத்தியாயம்."

பேரா செரியன் நிறுத்தி தண்ணீர் அருந்தினார்.

"என்ன சொல்ல வருகிறார்?" என்றான் அலோக்.

"தெரியவில்லை. முதல் வரிசையில் உட்கார வேண்டாம் என்று எச்சரித்தேன். இப்பொழுது தூங்கக் கூட முடியாது", என்றான் ரயன்.

"ஆனால் புத்திசாலி, இந்தியாவிலேயே தங்கி விட்டான். அவனுக்குக் கொள்கைகள் இருந்தன. கல்வியைச் சுயநலத்துக்காகவும், சொத்து விருப்பத்துக்காகவும், லாபத்துக்காகவும் உபயோகிக்க விரும்பவில்லை. அவன் தன் நாட்டுக்கு உழைக்க விரும்பினான். அவன் ஆய்வு செய்ய ஆசைப்பட்டான். ஐஐடியிலேயே தங்கி விட்டான். தொலைபேசி கண்டுபிடிப்பதை விடக் கடினம், ஐஐடியில் ஆய்வுக்கு அனுமதி வாங்குவது", பேரா செரியன் இதைச் சொன்னதும், பார்வையாளர்களுடன் அமர்ந்திருந்த பேராக்கள் புன்னகைத்தனர்.

"அதனால் நம் புத்திசாலிப் பையன் ஏமாற்றம் கொண்டான். அவன் முயற்சி செய்து கொண்டே இருந்தான். ஆனாலும் 'பேராவா'வதைத் தவிர அவனுக்கு வேறு எந்த வாய்ப்பும் இல்லை. பத்து வருடங்கள் உருண்டன. அவன் காலேஜ் நண்பர்கள் வீடு திரும்பினர். ஏழு புள்ளி சொச்சம் வாங்கிய நண்பன் தன் சொந்த மென்பொருள் நிறுவனம் நடத்தினான். அவனின் நிகர லாபம் இருநூறு லட்சம் டாலர்கள். மற்றொருவன் பேஸ்ட் விற்கும் பன்னாட்டு நிறுவனத்தின் தலைவன். பிஎம்டபிள்யூ காரில் வந்தான். ஆனால் இவை எதுவும் புத்திசாலிப் பையனுக்கு உறுத்தலாக அமையவில்லை. அவன் கொள்கைகள் மாறவில்லை-என்று அவன் நினைத்தான்

"நீங்கள் கண்டுபிடித்தது போல் அந்த புத்திசாலிப் பையன் நான் தான். அப்பொழுது என்னை விட பலர் அதிகம் சாதித்துவிட்டனர் என்று நான் யோசிக்க வில்லை. இன்னமும் எனக்கு சிறந்த ஜிபிஏ உள்ளது. நான் புத்திசாலி, சாமர்த்தியமானவன் என்ற இறுமாப்பு இருந்தது. அன்று நான் என் மகன் ஐஐடியில் சேர வேண்டும் என்று முடிவெடுத்தேன். என்னுடைய குடும்பத்தின் வலுவான புத்திசாலித்தனத்தைப் பரம்பரையாகக் கையாள வேண்டும் என்ற விருப்பப்பட்டேன். வலுவான புத்திகொண்ட பரம்பரை-என்று தான் நான் அதை அழைத்தேன். ஆனால் அது என் ஈகோ. என் மகன் வக்கீலாக ஆசைப்பட்டான்.

அவனுக்குக் கணக்கு வராது. அவனின் கணக்கு மீதான வெறுப்பு எனக்கு அவன் மீதான வெறுப்பாக மாறியது. என் வகுப்பில் உள்ள மாணவர்களை எவ்வளவு படுத்துவேனோ அதைக் காட்டிலும் அதிக அழுத்தத்தை அவனுக்குக் கொடுத்தேன். முதல் முறை அவனுக்கு இடம் கிடைக்கவில்லை. நான் அவன் வாழ்க்கையை நரகமாக்கினேன். அவன் இரண்டாம் முறையும் தோற்றான். அப்பொழுது வாழ்க்கை இன்னும் பெரிய நரகமானது. மூன்றாவது முயற்சியும் தோல்வி அடைந்தது. இம்முறை அவன் தற்கொலை செய்து கொண்டான்."

கூட்டம் அதிர்ந்தது; மாணவர்களும் சில பேராக்களும் கிசுகிசுக்க ஆரம்பித்தனர்.

"உங்கள் எல்லோருக்கும் தெரியும். எனக்கு ஒரு மகள் இருக்கிறாள். என் மகன் ஒரு ரயில் விபத்தில் ஐந்து வருடங்களுக்கு முன் இறந்து விட்டான். அப்பொழுது நாங்கள் அது விபத்து என்று நினைத்தோம். ஆனால் அது..." செரியன் ஸமீரின் கடிதத்தை வெளியே எடுத்தார், "இது என் பையனின் கடிதம். சில வாரங்களுக்கு முன் தான் என் பையனின் கடிதம், என் கையில் கிடைத்தது. அவன் இறந்த தினம் என் பெண்ணுக்கு எழுதியிருந்தான். அவனுக்கு ஐஐடி கிடைக்கவில்லை என்பதால் தற்கொலை செய்து கொண்டான். அவன் என்னால் தான் தற்கொலை செய்து கொண்டான்", செரியன் நிறுத்தினார். வெகு நேரம் அமைதியாக இருந்தார். தன் கண்ணாடியைக் கழற்றிக் கண்களைத் துடைத்துக் கொண்டார். கூட்டத்தின் அமைதியில் செரியன் அழும் சத்தம் கேட்டது. அவரின் கேவல்கள் காதில் ஒலித்தன.

"அவர் அழுகிறார்", என்றான் ரயன்.

"நான் தான் சொன்னேனே. இது ஒன்றுமே இல்லை; அன்று..."

நான் நிறுத்தினேன். செரியன் தொடங்கினார்.

"மன்னிக்கவும்! உங்களின் சிறந்த தினத்தன்று இந்தச் சோகமான கதையைச் சொல்லி எல்லோருடைய மனதையும் சோகத்தில் ஆழ்த்தி விட்டேன். நான் பகிரங்கமாக என் தவறை ஒப்புக் கொண்டு மன்னிப்பு கேட்டால், ஒரு வேளை என் மகன் என்னை மன்னிப்பானோ என்று எனக்குள் ஒரு சபலம். என் வகுப்பில் உள்ள ஒரு மாணவனுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கேன். அவன் மூலம் தான் எனக்கு உண்மை தெரிய வந்தது. அது என் மகளின் பாய்ஃபிரெண்டு-ஹரி. அவன் என் கண் முன் முதல் வரிசையில் அமர்ந்திருக்கிறான்."

"செம்மடா!" அலோக்கும் ரயனும் சேர்ந்து சொன்னார்கள். எல்லோர் கண்களும் என் மீது திரும்பின. எனக்கு இவ்வளவு தர்ம சங்கடம் ஏற்பட்டதில்லை. இந்தப் புகழ் யாரும் வேண்டுவதும் இல்லை. அவர் வேறு விஷயத்துக்கு செல்வார் என்று பார்த்தேன். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை.

"இந்த ஹரியைப் பற்றி நான் சில தகவல்களைச் சொல்ல வேண்டும். அவன் நண்பர்களான அலோக், ரயன் கூடத்தான்- இவர்கள் மிகவும் கம்மி மதிப்பெண் பெற்றவர்கள். "எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யாதவரகள்." அப்படித் தான் கம்மி ஜிபிஏ வாங்கியவர்களை நான் அழைப்பேன். அவர்களுக்குக் குறைந்த ஜிபிஏ தான்- ஐந்து புள்ளி சொச்சம், என்பது குறைவு தானே?" செரியன் வேடிக்கையாகக் கேட்டார்.

"என் பெண் ஹரியை நம்பி அந்தக் கடிதத்தைக் கொடுத்தாள்; என்னை எதிர்த்தாள், பொய் சொன்னாள், என்னை ஒதுக்கினாள். என் சொல்லை மீறி அவனைச் சந்தித்தாள். எங்கோ ஓரிடத்தில் இந்த நேரத்தியான பத்து-புள்ளி பேராவாக உங்கள் முன் நிற்பவன் தவறிவிட்டான்; பெரிதும் தவறு செய்து விட்டான்."

நான் பின்னால் சாய்ந்து உட்கார்ந்து செரியன் சொல்வதை கவனமாகக் கேட்டேன். எனக்கு வருத்தமாக இருந்தது. முதல் முறையாக அவருக்கு இதயம் என்று ஒன்று இருக்குமோ என்று கூடத் தோன்றியது.

"அப்பொழுது தான் எனக்குப் புரிந்தது. நல்ல ஜிபிஏ நல்ல மாணவனுக்கான சான்று, நல்ல மனிதனுக்கல்ல. இங்கு நாம் மக்களை ஜிபிஏவைக் கொண்டு எடை போடுகிறோம். நீங்கள் ஒன்பதென்றால் சிறப்பானவர்; ஐந்தென்றால் மட்டமானவர். நான் கம்மி ஜிபிஏவை வெறுத்தேன். ரயன் தன் ல்யூப் பிராஜெக்ட் கொடுத்த பொழுது அதைப் படிக்காமலே சரி வராது என்று முடிவு செய்தேன். ஆனால் இவர்களிடம் ஏதோ ஒரு அரிதான விஷயம் இருக்கு. இரண்டாவது பிரபோஸலைப் பார்த்தேன். யார் இதில் முதலீடு செய்தாலும் அட்டகாசமான லாபம் கிடைக்கும். வானவில்லின் அடியில் இருக்கும் தங்கப் புதையல் போல்!

"ஹரி கேட்டாயா?" என்றான் ரயன்.

நான் தலையாட்டினேன்.

"என்னுடைய செய்தி இது தான். உங்கள் எதிர்காலத்தை ஆவலுடன் வரவேற்கக் காத்திருக்கும்

மாணவர்களே. உங்கள் மீது நம்பிக்கை வையுங்கள். ஜிபிஏ, உங்களின் சாதனைகள், மற்றும் பதவி உயர்வு உங்களை அடையாளம் காட்டும் அளவுகோல் என்று எண்ணாதீர்கள். இதைத் தாண்டி வாழ்வில் சில விஷயங்கள் உண்டு. உங்களின் குடும்பம். நண்பர்கள், உங்களின் ஆழ் மனக் கனவு, இலக்கு - இந்தத் துறைகளில் நீங்கள் வாங்கும் மதிப்பெண்கள் தான், நீங்கள் யார் என்று தீர்மானம் செய்கின்றன.

“இரண்டாவது செய்தி, யாரையும் லேசில் புறக்கணிக்காதீர்கள்; என் பையன் ஐஐடியில் சேராததால் மட்டமானவன் என்று நினைத்து ஒதுக்கினேன். நான்தான் மட்டமான அப்பா. ஐஐடியில் சேருவது சாதனை தான். ஆனால் அதுவே உலகின் எல்லை கிடையாது; நீங்கள் எல்லோரும் ஐஐடி முத்திரையுடன் வெளியே செல்வதற்குப் பெருமை கொள்ள வேண்டும்; ஆனால் இந்தக் கல்லூரியிலிருந்து படித்து வராதவர்களைக் குறைத்து எண்ண வேண்டாம். அப்படி எண்ணாமல் இருப்பது தான் இந்த இன்ஸ்டிட்யூட்டின் சிறப்பு என்பதை உணருங்கள்.”

கூட்டம் ஆரவாரித்தது. கைத் தட்டி வரவேற்றது.

“கடைசியாக, உங்களை மிகவும் தீவிரமாக எடைபோடாதீர்கள்; யோசிக்காதீர்கள். பேராக்களைத் தான் குற்றம் சாட்ட வேண்டும். வாழ்க்கை மிகவும் சிறியது. அதை முடிந்த வரை ரசித்து அனுகுங்கள். காம்பஸ் வாழ்க்கையின் முக்கியமான மகிழ்ச்சி, உங்களுக்குக் கிடைக்கும் நண்பர்கள் தான். அவர்களை வாழ்க்கை முழுவதும் நண்பர்களாகக் கொள்ளுங்கள். ஆமாம் நான் நிறைய கதைகள் கேட்டிருக்கேன். சில சமயம் எனக்கும் நண்பன் இருந்தால் நன்றாக இருக்குமே என்று யோசித்திருக்கேன். குறைவான ஜிபிஏவை அது கொடுத்தாலும் பரவாயில்லை. இரவில் இன்ஸ்டி கூரையில் நண்பனுடன் வோட்கா அடிப்பது சுகம் தானே!”

எழுந்து நின்று செரியனுக்குக் கை தட்டல் மழை பொழிந்தது கூட்டம்.

கைதட்டல் வலுத்துக் கொண்டே வந்தது. என் காதுகளில் நேராக, என் தோள்களுக்குப் பக்கமாக.

“எழுந்திருடா, சோம்பேறி கழுதை” ரயன் சொன்னான். என் தோளடியில் உரக்கக் கைத்தட்டி எழுப்பினான். என் கனவு பழுதடைந்த வீடியோ காட்சி போல் மறைந்தது.

“என்ன?” தூக்கக் கலகத்தில் கண்களைத் துடைத்துக் கொண்டேன்.

“ஆமாண்டா, நான் தான்; சொல்லு மிஸ்டர் ஹரி, உன் பட்டமளிப்பு விழாவை மிஸ் பண்ணியது எப்படியிருக்கு? இவ்வளவு பாடுபட்டு ஐஐடிக்குள் பிரவேசித்து இப்பொழுது பட்டம் வாங்குவது பற்றி என்ன நினைக்கிறே?” இது ரயனின் அகம்பாவக் குரல் தான்.

“என்னஎன்ன மணி?” என் கழுத்தை நெளித்து கடிகாரத்தில் மணி பார்த்தேன். ஏழு மணி என்றது; வெளியில் வெயில் கொளுத்தியதற்கு முரணாக.

“உன் கடிகாரத்திற்குக் கூட இது போதும் என்று தோன்றிவிட்டது. மணி பதினொன்று தாண்டி விட்டது. நாம் இருவரும் பட்டம் வாங்காமல் தூங்கியிருக்கோம்”, என்றான் ரயன் விரக்தியாக.

கட்டிலை விட்டு எழுந்தேன். பால்கனி சென்று பார்த்தேன்; விடுதி காலியாக இருந்தது.

அடச்சே! பட்டமளிப்பு தினம் அன்று தூங்கியிருக்கேனே! கேவலம்! செரியன் அழவே இல்லை!

“ஃபக்”, ரயனின் வார்த்தையைக் கடன் வாங்கிச் சொன்னேன். “ஃபக். நமக்கு பட்டம் அளிக்க மாட்டார்களா?”

“கண்டிப்பாகக்கொடுப்பார்கள். என்ன, மொத்த வகுப்பும் ஆர்ப்பரித்து, செரியன் கை குலுக்கி, பெற்றோர்கள் வாழ்த்த கிடைக்காது!”

பல் விளக்குவதா, ஸஸி கடையில் பராத்தா சாப்பிடுவதா? எது முதலில் என்று யோசித்தேன்.

“ஸஸியா?” ரயன் என் மனதை அறிந்தவன்.

அப்பாடா! நான்கு வருடப் போராட்டம், பைத்தியக்காரத்தனம், வெறி, எல்லாம் இந்த பட்டத்திற்காக. அதை வாங்க வேண்டிய தருணத்தில் நானும், ரயனும் பைஜாமா அணிந்து எங்கள் பராத்தாவைச் சுற்றி வெண்ணை தடவிக் கொண்டிருந்தோம். இந்த பட்டத்திற்கு நான் அருகதையானவன் தானே?

“ஹரி, அப்பா ல்யூப் பிராஜெக்டில் முதலீடு செய்வதாகச் சொல்கிறார். அவர் பேரா வீராவுடன் பேசியிருக்கிறார்”, என்று ரயன் பேசினான். ஸஸி எங்களையே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்குக் கூடத் தெரிந்திருக்கிறது நாங்கள் பட்டமளிப்பு விழாவிற்கு போகாமல் இருக்கிறோம் என்று.

“நல்லது தானே?”

“அப்த்தம்டா. அவர்கள் பணம் வேண்டாமென்ற மறுத்து விட்டேன்” என்றான் ரயன்.

“நீ என்ன முட்டாளா?”

அதற்குப் பிறகு அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? அந்தக் கடிதத்தினால் நான் மனம் மாறிவிட்டேன் என்ற நினைத்ததாகச் சொன்னார்கள்”, என்றான் ரயன்.

“என்ன கடிதம்?” என்றேன். முகத்தில் எந்த பாவமும் காட்டாமல் இருக்கச் சிரமப்பட்டேன்.

“இந்தக் கடிதம்”, ரயன் ஒரு கனமான கவரை நீட்டினான்.

“அந்தக் கவரில் என்ன தெரிகிறது என்று பார்த்தாயா?” ஆமாம். அதே தான் முப்பது ரூபாய் தபால் தலை அதன் மீது அடிக்கப்பட்ட முத்திரை.

“நீ எழுதினாயா?” என்று யதார்த்தமாக இருப்பதாகக் காட்டிக் கொண்டேன்.

“ஒகே, மிஸ்டர் ஹரி, விட்டுவிடு. மொத்தக் கடிதத்தையும் சிரமப்பட்டு டைப் அடித்தாய் சரி; விலாசம் எழுதும் பொழுது கவனக்குறைவாக இருந்து விட்டாயே? இந்தக் கிறுக்கல் உன்னுடையது என்று எனக்குத் தெரியாதா?” என்றான் ரயன்.

“என்ன?” என்று அதிர்ந்தேன். சே! அதை யோசிக்காமல் விட்டு விட்டேனே!

ரயன் எழுந்து பலமுறை என்னை விளையாட்டாகக் குத்தினான் “டேய் கழுதை! எப்பொழுதிலிருந்து இவ்வளவு உணர்ச்சி வசப்பட ஆரம்பிச்சிருக்கே?” நான் அவன் குத்துக்களைத் தடுக்கப் பார்க்கும் பொழுது கேட்டான். நாங்கள் இருவரும் கொல்லென்று சிரித்தோம். அவன் கண்களைப் பார்த்தேன். அதில் கோபம் இல்லை. லேசான சந்தோஷம் கூட எட்டிப் பார்த்தது. ஆனால் சட்டென்று தீவிரமான முக பாவம் மாறியது. ரயன் என்றுமே தன் அன்பை ஒப்புக் கொள்ள மாட்டான்.

“நீ செய்திருக்கக் கூடாது” என்றான்.

“அன்று குடித்திருந்தேன். செம போதை. உன் பெற்றோர்கள் நல்லவர்கள். இது நல்ல பிராஜெக்ட். அப்பாவுக்கு நிறைய பணம் லாபமாகக் கிடைக்கலாம்.” அவன் பிராஜெக்டைப் பற்றிப் பெரிய படமாக ஓட்ட வேண்டும். மற்ற சில்லறை விஷயங்கள், உணர்ச்சிகள் பற்றிப் பேசி சிதறவிடக் கூடாது.

“அவருக்குப் பணம் கிடைக்கும் தான். பேரா வீரா அவர் கொடுப்பதாகச் சொன்ன பணத்தை ஒப்புக் கொண்டார்.”

“பேரா வீராவுக்கு, தான் என்ன செய்கிறோம் என்று தெரியும்”, என்றேன் அறிவாளி போல். “அலோக் எப்போ வருவான்? நாம் நிறைய மிஸ் செய்து விட்டோமா?”

“எல்லா பட்டமளிப்பு நிகழ்ச்சியும் ஒரே போலத் தான். செரியன் ஒன்பது புள்ளிக்காரர்களுக்கு மெடல் மாட்டுவார் ஐந்து புள்ளிக் காரர்கள் பின்னால் தங்கள் பட்டங்களை ஏதோ சினிமா எக்ஸ்ட்ராக்கள் போல் வாங்கிக் கொள்வார்கள்.”

ஒரு நிழல் எங்கள் பக்கம் நொண்டிக் கொண்டு வருவதை தூரத்திலேயே பார்த்துவிட்டேன்.

“அலோக்!” என்று கத்தினேன்.

“போடா டுபாக்கூருங்களா! நாடு பொறியாளர்களை வரவேற்கும் சமயம், பராத்தா மென்று கொண்டிருக்கிறீர்களா?” என்றான் அலோக்.

“என்னவோ போ! டேய் குண்டா உனக்கும் வேணுமா?” என்று அபூர்வச் செயலாக ரயன் தன் தட்டை அலோக் பக்கம் நீட்டினான்.

“நிச்சயமா வேணும், ஒரு மணி நேரமாக செரியன் போட்ட ரம்பத்திற்குப் பிறகு,” என்று அலோக் நாக்கை வெளியே தள்ளி சோர்வின் எல்லைக்கே போனது போல் சைகை செய்தான்.

“பெற்றோர்கள் எங்கே?” என்றான் ரயன்.

“பேராக்களின் கிளப்பில் சாப்பாடு. உங்களைத் தேடிக் கொண்டு வந்தேன்,” என்றான் அலோக்.

“செரியன் நிறையப் பேசினாரா? நான் அவரைப் பற்றிக் கனவு கண்டேன்,” என்றேன்.

“அப்படியா? அவரின் மகள் துணி இல்லாமல் இருப்பதாகத் தான் கனவு காண்பாய் என்று நினைத்தேன்,” என்று ரயன் கேலி செய்தான்.

“வாயமூடுடா!”

நான் அலோக்கைப் பார்த்து, “என்ன சொன்னார்?”

“ஒன்றும் இல்லை. அதே விஷயம் தான். ஐஐடி - ஆட்கள் - சிறந்த அறுவைக்காரர்கள், அவர் ஒரு விஷயம் சொன்னார்,” என்றான் அலோக்.

“என்ன?” என்று நானும் ரயனும் கத்தினோம்.

“நாம் நம் கல்வி முறையைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். சில சமயம் இதன் அழுத்தம் கூடுதலாக உள்ளது. கம்மி பரிட்சை, நிறைய பிராஜெக்ட் போன்ற மாற்றங்கள் வேண்டும். நான் அவ்வளவாக கவனிக்கவில்லை - நான் தூங்கிவிட்டேன்,” என்றான் அலோக். ரயன் அலோக்கை வீணாகப் போனவன் என்று அலுத்துக் கொண்டான்.

“ஆமாண்டா! நான் என் கடைசி நாள் அன்று எழுந்து பட்டமளிப்புக்காவது சென்றேன்,” என்று அலோக் பெருமைப்பட்டுக் கொண்டான்.

கடைசி தினம் - அலோக் சொன்ன வார்த்தையைச் சுற்றி வந்தது என் மனம். இந்த நாளைக்காக எவ்வளவு நாள் காத்திருந்தோம். கடைசியாக வந்தே விட்டது. நாங்கள் எதிர்பார்த்த ஸ்டைலில் அல்ல; புகழ்; மெடல் என்று அல்லாமல் பைஜாமாவில், தெருவோரக் கடையில் பராத்தா மென்று கொண்டு நாங்கள் முடித்தே விட்டோம்! ஆமாம்! நாங்கள் மூவரும் ஐஐடி பட்டதாரிகள். **“டைம்”** பத்திரிகை அட்டைப் படத்தில் இடம் பெற மாட்டோம். ஆனால் நாங்கள் எப்படியோ உயிர் தப்பி ஐஐடியிலிருந்து மீண்டு வந்துவிட்டோம்.

“முடிந்தே விட்டது!” எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். ஆனால், ஒரு வகையில் வருத்தம் இருந்தது.

“முடிந்தே விட்டதா?” என்று வழக்கம் போல் ரயன் என் மனதை எதிரொலித்தான்.

“ஆமாம். நிஜ உலகில் காலடி எடுத்து வைக்கும் நேரம் - அதைத்தான் பட்டமளிப்பில் சொன்னார்கள்,” என்று அலோக் பீற்றிக் கொண்டான்.

“நேஹாவிடம் பேசி விட்டாயா?” ரயன் மனதின் கேள்வியைக் கேட்டான்.

“பேசுவேன். இன்றிரவு சந்திக்கிறோம்,” என்றேன் போகிற போக்கில்.

“செரியனுக்குத் தெரியுமா?” என்றான் அலோக்.

“தெரியாது என்று நினைக்கிறேன்,” என்றேன். அவர் சில இடங்களில் விட்டுக் கொடுத்திருக்கலாம். ஆனாலும் நானும் நேஹாவும் இணைவதை ஒப்புக் கொள்ள மாட்டார்.

“நம்மைப் பற்றி என்ன?” என்றான் ரயன்.

நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம். இது கஷ்டமாக இருக்கப் போகிறது. ஏன் ஐஐடியிலுள்ள கெட்ட விஷயங்கள் முடியும் பொழுது நல்ல விஷயங்களும் சேர்ந்து முடிவுக்கு வருகின்றன? விடுதியை விட்டுப் பிரிய மனமில்லை. நண்பர்களை இனி தினமும் பார்க்கவே முடியாது.

“நாம் நட்பாக இருப்போம். இப்பவும், எப்பவும்,” என்று சினிமாப் பாணியில் சபதமிட்டு அனைவரையும் அணைத்துக் கொண்டேன்.

“போதும்டா! இது மதிப்பிற்குரிய நிறுவனம்,” என்றான் ரயன். நாங்கள் தர்மசங்கடத்தில் சிரித்தபடி அமர்ந்தோம்.

அதுதான் நாங்கள் ஐஐடியில் சேர்ந்திருந்த கடைசி தினம். அதற்குப் பிறகு எங்கள் வாழ்க்கை மாறியது. ஆனால் அதிலெல்லாம் தலையை நுழைத்து உங்களுக்கு விளக்கம் அளிக்கப்போவதில்லை. இது ஒரு ஐஐடி புத்தகம் தானே!

எனக்கும் நேஹாவுக்கும் இடையில் என்ன நடக்கும் என்று தெரியாது. இப்பொழுது என்ன நடந்தது என்று சொல்ல முடியும். ஆனால் அதை விவரிக்கப் போவதில்லை.

ஆமாம், அன்றிரவு சந்தித்தோம். எவ்வளவு காதலிக்கிறோம் என்று மாறி மாறி சொல்லிக் கொண்டோம். காதல் ரசம் சொட்டப் பேசினோம். எப்படி இணைந்திருப்பது போன்ற யதார்த்த விஷயங்களும் பரிமாறிக் கொண்டோம். எப்பொழுதுமே சந்திப்பது என்று சத்தியம் செய்து கொண்டோம்.

ஆனால், எப்பொழுதும் என்பது ஒரு பெரிய காலவரை. ஐஐடி நான்கு வருடங்களைக் காட்டிலும் நீண்டது. இப்பொழுதிலிருந்து எப்பொழுதும் என்பதற்கு இடையே நிறைய விஷயங்கள் நடக்கலாம்; நடக்கும் - ஆனால் அவற்றைப் பற்றிப் பேச இந்தப் புத்தகத்தில் வாய்ப்பில்லை. பட்டமளிப்பு முடிந்து

விட்டது. எங்கள் பைகளைத் திணித்து பேக்" பண்ணியாயிற்று. அதுதான் நாங்கள் மூவரும் ஐஐடியிலிருந்த கடைசி தருணம்.

அலோக் டெல்லியில் தன் வேலையைத் தொடங்கினான். நானும், ரயனும் தொந்தரவு செய்ய அவன் கூட இல்லாததால் வேலையில் மூழ்கினான். அதனால் அவன் மென்பொருள் நிறுவனம் ஆறே மாதத்தில் அவனை அமெரிக்காவுக்கு அனுப்பினர். அவனுக்கு அங்கு டாலரில் சம்பளம் கொடுத்தார்கள். அவன் தன் குடும்பக் கஷ்டங்களை எல்லாம் ஒரே தவணையில் நிவர்த்தி செய்துவிட்டான். குப்தா வீட்டு வாசலில் ஒரு பளபளக்கும் கார் வந்தது. அவன் அக்காவைத் திருமணம் செய்து கொள்ளலாமா என்று சபலப்பட்டேன். அலோக்கின் அப்பாவுக்கு முழு நேர நர்ஸ் போடப்பட்டது. அம்மா வேலையை விட்டுவிட்டு தனியாக டியூஷன் எடுப்பதைப் பற்றி யோசித்தாள். அவள் வேலையில் இருந்தால் தான் அவளுக்கும் அவள் குடும்பத்தின் மனநிலைக்கும் பாதிப்பு வராமல் இருக்கும். ஆனால் நான் சொல்வதை யார் கேட்டார்கள்?

ரயன் பேரா வீராவுடன் வேலை செய்தான். அவன் அப்பா கொடுத்த பணத்தில் ஒரு பெரிய தொழிற்சாலை கட்டினான். டெல்லியிலிருந்து இரண்டு மணிநேர தூரத்தில் அமைந்தது. அங்குள்ள அண்டை கிராம மக்கள் அந்தத் தொழிற்சாலையை கட்டப் பணிக்கப்பட்டிருந்தனர். அதில் சில பெண்களும் வேலை செய்தனர். அந்தப் பொட்டை அடிக்கடி அந்தப் பெண்களுடன் உறவாடுவதாகக் கேள்வி! யாரோ ரூப்கன்வர் என்ற பெண்ணின் மீது மையல் - மற்றவர்களை காட்டிலும் அதிகப்படியான உணர்ச்சி! அங்கு ஏதோ விபரீதம் கண்டிப்பாக நடக்கும் என்று தோன்றியது.

நான் பம்பாய் சென்றேன். எல்லா பொறுப்புக்களைப் போல் இதையும் வெறுத்தேன். என்னால் நெரிசலான நகரங்களில் வாழ முடியாது. நேஹாவைப் பிரிந்தும் இருக்க முடியவில்லை. முதல் மூன்று மாதங்கள், என் பாதி சம்பளம் வாடகைக்கே அழிந்தது. ஒரு புறாக்கூடு போன்ற வீடு. அதுவும் புறநகர் பகுதியில் மக்கள் ஆள் அரவம் தெரியாத இடத்தில் கிடைத்தது. மீதி பாதியை நேஹாவுடன் தொலைபேசியில் பேசியே செலவழித்தேன்.

கடவுளே! அவளை ரொம்ப மிஸ் செய்கிறேன் - அவள் முடி, அவள் சிரிப்பு, அவள் கண்கள், அவள் என் கையைப் பிடித்துக் கொண்டு பேசுவது - மற்றும் எல்லாமும் தான். ரயன் அலோக்கைக் கூட மிஸ் பண்ணுகிறேன். ஆனால், இது போல் இல்லை. அவளுக்காக ஏங்குகிறேன்.

அவள் தன் ஃபேஷன் படிப்பை முடித்தாள். அங்கேயே உள்ள ஒரு டிஸைனரிடம் வேலைபார்த்தாள். பம்பாயில் வேலை தேடினாள். இந்த நகரம் தான் ஃபாஷன் பித்தாயிற்றே ஏதாவது கிடைக்கும்.

அடுத்த மாதம் அலோக்கின் சகோதரி திருமணத்திற்கு டெல்லி போகப்போகிறேன். அலோக், ரயான், நேஹா நாங்கள் அனைவரும் அங்கு இருப்போம். நான் இப்பொழுதே அங்கு செல்வது போல் உணர்கிறேன். உங்களுக்கு இது புதுமையாக இருக்கலாம்.

நான் ஐஐடியிலிருந்து பாஸாகியிருக்கலாம். ஆனாலும் என் ஆன்மா அங்கு தான் உள்ளது. அந்த விடுதிப் பாதைகளில், ஸஸி கடையில், இன்ஸ்டி கூரையில்...